# மெஹர் பிரபு
## (MEHER PRABHU)

**இக்கால அவதார புருஷரின் வருகை**
**(ADVENT OF THE AVATAR)**

# மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு
## (MEHER BABA’S LIFE HISTORY)

## குறுகிய தமிழாக்கம்
**(TAMIL TRANSLATION - ABRIDGED)**

## தொகுப்பு ஆறு

## (VOLUME SIX)

**1936 - 1939**

# இறைவனின் அன்பளிப்பு

இடம், காலம், பொருள் இவற்றை இறைவனன்றி வேறு யாரறிவர்? எது, எங்கு, எப்படி, எப்போது நடக்கவேண்டுமோ அதை நடத்துபவனும் அவனே! தனிப்பட்ட மனிதனால் முடிவது கையளவாக இருந்தாலும் கடவுளின் கருணையால் நிகழ்வது கடலளவு. இருந்தும் அனைத்தையும் தனிமனிதன் செய்வதுபோலத் தோற்றமளிக்கச் செய்வது மாயையின் கைவண்ணம்; இதுவே, இந்த இறைநாடகத்திற்கு இறைவன் எழுதிய திரை, கதை, வசனம்.

மெஹர் பாபாவின் வரலாற்றுத் தொகுப்புக்கு உயிரூட்டம் அளித்தவர் மெஹர் பாபா மட்டுமே என்றாலும், உருவாக்கம் தந்த நூலாசிரியர் அவருடைய நெருங்கிய மண்டலியில் ஒருவரான,

ஸ்ரீ பாவ் கல்சூரி.

இந்தி மொழியில் கவிதை வடிவில் உருவகம் கொடுக்கப்பட்ட வரலாறு, உரைநடை பாணியில், ஆங்கிலத்தில் ஆக்கம் தந்தவர், மெஹர் பாபாவின் அரவணைப்பில் இருந்த,

ஸ்ரீ ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா.

மொத்தத்தில் ஏறக்குறைய 8000 பக்கங்கள், 20 தொகுப்புகள். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆங்கிலத்தில் வெளியிட்டவர்,

ஸ்ரீ லாறன்ஸ் ரைட்டர்.

இந்த வரலாற்றுத் தொகுப்பு, நாளடைவில், பல மொழிகளில் முழுமையாக அல்லது குறுகிய வடிவில் வெளிவந்துள்ளன. தமிழ் மக்களுக்கும் இது ஒரு பொக்கிஷமாக அமைய வேண்டும் என்ற ஆர்வத்தில் சமர்ப்பணம் செய்பவர்:

**தமிழாக்கம் & புத்தக வடிவமைப்பு:**
கு. ராதாகிருஷ்ணன்
வேலம்மாள் ராதாகிருஷ்ணன்
முகேஷ் சிவகுமார்
நித்யகலா நிர்மல்
பூனா, ஏப்ரல் 2021
✉ vela.radhakrishnan@gmail.com
✆ +91 9225631113

REV:01/27.01.2025

# முன்னுரை…

## முன்னுரை வழங்குபவர்: சுப்ரபா டிக்ஷதா, மேலாண் இயக்குனர், கிரெடிட் சுவிஸ் இந்தியா லிமிடெட், பூனே.

மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாற்றின், இந்த ஆறாம் தொகுப்பு, எனது மனதிற்கு நெருக்கமானது. பாபாவின் ஆழமான உபதேசங்கள், உலக வாழ்க்கையின் மூலப்பொருள், அவதார புருஷர் மெஹர் பாபாவின் கருணையைப் பிரதிபலிக்கும் சம்பவங்கள் அடங்கிய ஓர் அழகான தொகுப்பு.

1936 முதல் 1939 வரையிலான பாபாவின் பயணங்கள், பணிகள், மானிட சேவை, பக்தர்களுக்கு வழங்கும் விளக்கங்களும் இதில் அடங்கியுள்ளன.

இறையன்பைப் பெற, உலக விருப்பங்களைத் தவிர்த்து, அன்பை மட்டுமே உரியதாக்கிக் கொள்ள, பாபா தரும் அற்புதமான விளக்கங்கள், ஒவ்வோர் ஆன்மாவிற்குள்ளும் தெய்வம் நிலைகொண்டுள்ளது என்பதைப் புரியவைக்கும்.

பல இடங்களில் பாபா, '**அனைத்து காலகட்டத்தின் அவதார புருஷர்களும் உலக வாழ்க்கையில் உள்ள மாயையை விலக்கி, தேவையற்ற துன்பத்தைத் தவிர்க்க வேண்டும் என வலியுறுத்தினர்**' என்பதை விளக்குகிறார்.

பல காலகட்டங்களில் அவதார புருஷர்கள் இப்பூவுலகில் அவதரித்து, மனிதர்களுக்காக சிரமங்களை அனுபவித்தது போல, மெஹர் பாபா, இந்த அவதார காலகட்டத்தில், பிறந்து, பல துன்பங்களை, அன்பாக ஏற்றுக்கொண்டதை நாம் காண முடிகிறது. பாபாவின் அழகான சிறு கதைகள், தன்னை நம்பாதவர்களுக்கு அவர் அன்பாக எடுத்துரைக்கும் விதம், உலக மக்களுக்காக அவர் தன்னை அர்ப்பணித்து செய்யும் சேவை, என ஒவ்வொன்றும் நம் மனதில் இருக்கும் மாயையை விலக்கி அவர்பால் ஈர்க்கும்.

இன்றியமையாத தேவைக்கும் அளவற்ற ஆசைக்கும் இடையே உள்ள வேறுபாட்டை பாபா எடுத்துரைக்கும் விதம், நம்மை ஆழமாக சிந்திக்க வைக்கும்.

இறையன்பை அடைய கோபம், காமம், புறம்பேசுதல் போன்ற ஏழு சாத்தான்களையும் களைய வேண்டும் என பாபா எடுத்துரைக்கிறார்.

மெஹர் பாபாவின் 43ஆவது பிறந்தநாளன்று, பாபா ஏழை எளிய மக்களின் பாதங்களைத் தொட்டு வணங்குவது, நம் மனதில் இருக்கும் அகங்காரத்தை அழிக்க உதவும் ஒரு சிறந்த பாடம். "**அவர்களுக்குள் இருக்கும் தெய்வத்தை நான் பார்க்கிறேன்**" எனும் உபதேசத்தின் வழியாக, பாபா,

மனிதர்கள் தேவையற்ற சடங்கு சம்பிரதாயங்களை விட்டு, பிற உயிர்களை, எவ்வாறு நேசித்து சேவை செய்ய வேண்டும் என்பதை உணர்த்துகிறார்.

இந்தத் தொகுப்பில், பாபாவின் கடல் போன்ற அன்பும், கருணை நிறைந்த செயல்களும், நம்மை அவர்தம் திருவடி நோக்கி அழைத்துச் செல்லும்.

ஜெய் பாபா.

## முன்னுரை வழங்குபவர்:
## க. வீரமணி, பொது மேலாளர் (ஓய்வு), டாடா மோட்டர்ஸ்.

பிரியமான தமிழ் நெஞ்சங்களுக்கு, பணிவான வணக்கங்கள். நீங்கள், அவதார் மெஹர் பாபாவின் முதல் ஐந்து வாழ்க்கை வரலாற்றுத் தொகுப்புகளையும் படித்து, என்னைப் போலப் பரவசம் அடைந்திருப்பீர்கள்! கடந்த 42 ஆண்டு கால வாழ்க்கையை உள்ளடக்கிய இந்தத் தொகுப்புகளில், மெஹர் பாபாவின் இளமைப் பருவம், இறை அனுபவம், ஷிர்டி சாய் பாபாவின் 'பர்வர்திகார்' எனும் பறைசாற்றல், சத்குரு உபாஸனி மஹாராஜ், மேர்வானை 'அவதார புருஷர்' என்று உலகுக்கு அறிவித்தல், சீடர்களின் வட்ட அமைப்பு, இந்தியா மற்றும் அண்டை நாடுகளுக்கு மேற்கொண்ட பயணங்கள், மெஹர் பாபாவின் மௌனம், மெஹர் ஆஷ்ரமம், பிரேமாஷ்ரமம் நிறுவுதல், எழுத்துப்பலகை வழியாக அளித்த சொற்பொழிவுகள், போதனைகள், ஐரோப்பா அமெரிக்கா, சீனா பயணம் போன்ற, 1936 நவம்பர் இறுதிவரை நடந்த நிகழ்வுகளைக் கண்டு 'பாபாவைப் போல் ஒருவரும் இல்லை' என்ற ஐயப்பாடற்ற நிலைப்பாட்டிற்கு நாம் வந்துள்ளோம். என்ன ஆச்சரியம்!

1936 டிசம்பர் முதல் 1939 ஜூலை வரையிலான காலகட்டத்தை உள்ளடக்கிய இந்த ஆறாவது தொகுப்பில், தெளிவாக வெளிச்சமிட்டுக் காட்டும் சில அரிய நிகழ்வுகளை நான் குறிப்பிட விரும்புகிறேன். மேற்கத்திய அன்பர்களை (ஆண், பெண்) இந்தியாவில் தங்க வைத்து, பயிற்சி அளித்தது, மெஹர் பாபாவின் 43ஆவது பிறந்தநாளில், அவர், பல்லாயிரக் கணக்கான மக்களின் பாதங்களில் தலைவணங்கி, உடை, தானியம் அடங்கிய பொட்டலங்களை அன்புப் பரிசாக வழங்கியது, மேற்கத்திய அன்பர்கள், முதல் முறையாக இந்திய பக்தர்களுடன் கலந்து, சுதந்திரமாக அனைத்திலும் பங்கேற்பதுடன் ஒரே இடத்தில் தரையில் அமர்ந்து அனைவருடனும் உணவை உண்ண வைத்தது, பிராமணர்கள், தீண்டத்தகாதவர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள், பார்சிகள், ஈரானியர்கள், கிறிஸ்தவர்கள் அனைவரும் பாபாவுடன் ஒரே இடத்தில் வாழ்ந்தது, அன்பையும், சகோதரத்துவத்தையும் வெளிப்படுத்துவதாக அமைந்தது. இதுவரை உலகம் கண்டிராத இது போன்ற நிகழ்வுகள், 'எல்லோரும் ஓரினம்' என்ற அறுதியான நிலைப்பாட்டிற்கு வழிவகுத்தது.

மெஹர் பாபா அவரது ஆண், பெண் மண்டலி மற்றும் மேற்கத்திய அன்பர்களுடன், மூன்று மாதங்கள் ஃபிரான்ஸ் நாட்டின் கேன்ஸ் நகரில் தங்கி, பல உள்நாட்டு மக்களுடன் தொடர்பில் வந்து, அதேவேளையில், இறை போதையில் இருந்த ஆன்மீக மேல்நிலை மஸ்த் முஹமதை, கப்பல் வழியாக கேன்ஸ் நகருக்கு அழைத்து வந்து அவருடன் தீவிர ஆன்மீக பணியில் ஈடுபட்டது, இதுபோன்ற பல நிகழ்வுகள், மெஹர் பாபாவின் கூற்றுப்படி, இரண்டாவது உலகப்போருக்கு வித்திட்டது, ஓர் அசாதாராணமான காரியம் மட்டுமின்றி அனைவரையும் சிந்திக்கத் தூண்டும் ஒப்பற்ற செயலாகும்.

மெஹர் பாபா, அவ்வப்போது, பஞ்ச்கணியில் அமைந்த 'டைகர் வேலி' என்ற குகையில் ஏகாந்தவாசம் மேற்கொண்டு பணிபுரிந்தார். பல மேற்கத்திய அன்பர்களுக்கும் இரவுகளில் தனிமையில் அந்தக் குகையில் தங்கும் அனுபவத்தை வழங்கினார்.

மெஹராபாத் மேல்மலையின் புதிய கட்டமைப்புகளை மண்டலி மூலமாக எழுப்பி, மேற்கத்திய மற்றும் கிழக்கத்திய அன்பர்களை ஒன்றாக வாழவைத்து, ஒரே விதமான எளிய உணவை உண்டு, தாமரை இலைத் தண்ணீர் போல் இருந்து, உலகை மறந்து இறையுணர்வை அடைவது ஒன்றுதான் வாழ்வின் லட்சியம் என்பதை வலியுறுத்தினார்.

மெஹர் பாபாவின் ஆன்மீகப் பணியில் மேலுமோர் இன்றியமையா அம்சமாகத் திகழ்வது, இறை போதையில் இருக்கும் 'மஸ்துகளுடன்' ஆன்மீக உள் பணியில் ஈடுவது. இதை அவர், மஸ்துகளை நீராட்டி, உடை உடுத்தி, உணவளிப்பதன் மூலம் அவருக்கே உகந்த முறையில் அவரது பணியை முடித்துவிடுவதோடு, அவர்களுக்கு ஓர் ஆன்மீக உந்துதலையும் அளிக்கிறார். மஸ்துகளின் 'மனம்போன போக்கின்' விருப்பு வெறுப்புகளை பூர்த்தி செய்வதையே கருத்தாகக் கொண்டு செயல்படுகிறார். இதை அறிந்துகொள்ள ஒருவருக்கு வேறுவிதமான கண்களும் காதுகளும் தேவை!

இந்தத் தொகுப்பின் இன்னுமொரு முக்கிய கட்டமாக இருப்பது 'நீலப்பேருந்து' பயணம். பாபா, தமது பெண் மண்டலியுடன் நீலப்பேருந்தில் இந்தியா முழுவதும் - ஹைதராபாத், ஜபல்பூர், பெனாரஸ், ஆக்ரா, டெல்லி, அஜ்மீர், ஜெய்ப்பூர் - சுற்றுப்பயணம் செய்தார். இதர மண்டலி ரயிலில் பயணம் செய்து எல்லா இடங்களிலும் பாபாவுடன் இணைந்தனர். இந்தப் பயணத்தின் போது, பாபா, பல மஸ்துகளை சந்தித்து அவர்களுடன் ஆன்மீக உள்பணியில் ஈடுபட்டார். இந்த மஸ்துகள் பாபாவின் பெயரைக் கேட்டதும், அவரைப் பார்த்ததும், அவருடைய உண்மை நிலையை உடனடியாக அறிந்து சிலர் 'சிவன்' என்றும் சிலர் 'விஷ்ணு, இப்பூவுலகின் மன்னர்' என்றும் அடையாளம் கண்டு அவருடைய மகிமையைப் பாராட்டினர். 1939 ஜூலை மாதம் மெஹராபாத் திரும்பி வந்ததும் மீண்டும் மஸ்துகளுடன் தீவிர ஆன்மீகப் பணியில் ஈடுபட்டார்.

இப்படி, மேலும் பல சுவாரஸ்யமான நிகழ்வுகள் இந்தத் தொகுப்பில் நிரம்பியுள்ளன. படிக்கப் படிக்க இன்பமூட்டும் பாபாவின் வாழ்க்கையை நீங்களும் படித்து அலாதியான இன்பத்தை அடைய எனது வாழ்த்துகள்.

நெஞ்சம் மறவா நினைவுகளுடன்,
ஜெய் பாபா.

# அவதார புருஷர் எவ்வாறு பணிபுரிகிறார்?

உலக மக்களிடையே ஆன்மீக மேம்பாட்டைக் கொண்டு வருவதற்கான மெஹர் பாபாவின் வழிமுறைகளை எடுத்துக்காட்ட முயற்சிப்பது முக்கிய நோக்கமாக இருந்தாலும், அவருடைய பணியின் பல்வேறு அம்சங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. தொன்றுதொட்ட நடைமுறைகள்: இவை, அவதார புருஷர் அவரது படைப்பு முழுவதற்கும், ஆன்மீக உந்துதலை வழங்கும் நோக்கத்துடன் தொடர்புடைய அடையாள செயல்களாகும். உதாரணமாக, ஓர் அனாதையை நீராட்டி, புத்தாடை அணிவித்து, உணவளிப்பது என்பது, அவதார புருஷர் தனது இறை விருப்பத்தை இந்தச் செயலின் மூலமாக முத்திரை பதிப்பது போலாகும். இதனால் உலகெங்கிலும் உள்ள அனாதைகள், அனாதை இல்லங்கள் அல்லது குறிப்பிட்ட இடங்களில் சில குறிப்பிட்ட நிறுவனங்கள் பெருமளவில் பயனடைகின்றன.
2. மானிடனின் கர்ம வினையை எதிர்கொள்ளத் தேவையான சக்தி, மன உறுதி இவற்றை வழங்கி, அதைக் கடந்து செல்ல உறுதுணையாக இருப்பது; பெரும்பாலும் மிகவும் துன்பம் தருவதாக இருக்கும்.
3. சக்திகளையும் சிந்தனைகளையும் இயக்க, இறை ஆற்றலைப் பயன்படுத்துவது.
4. மஸ்துகளின் (இறை போதையில் இருக்கும் உயர்நிலை ஆன்மாக்கள்) ஆன்மீக தூய்மையைப் பயன்படுத்தி உலகிற்கு உதவுதல்.
5. கர்ம வினையின் தாக்கத்தைத் தன் மீது எடுத்துக்கொள்வது. இது கர்ம வினையைப் பெறுவதைக் குறிக்காது, ஆனால் மனிதகுலத்திற்காகத் துன்பப்படுவதன் மூலம் அதன் விளைவுகளை மாற்றியமைக்கிறது. இது மானிடனின் அல்லது உலகளாவிய கர்ம வினையாகவோ, தனிப்பட்டதாகவோ இருக்கலாம்.
6. சீடர்களை, வெளியளவில் அர்த்தமற்ற செயல்களைச் செய்யத் தூண்டுவதன் மூலம், ஒரு குறிப்பிட்ட அவசர நிலையிலிருந்து வெளிவர சில நபர்களுக்கோ அல்லது குழுவிற்கோ உதவுவது.
7. பொய்யும் போலியுமான மானிடனின் அகந்தையை, பல்வேறு வழிகளில் அதாவது ‘களைப்பு’, ‘அவமானம்’, ‘பதற்றம்’ போன்ற அனுபவங்கள் மூலமாக சிதறடிப்பது.
8. பொறுமையைக் கற்பித்தல்; கடவுளை முழுமையாக நம்பியிருப்பதன் மூலம் கவலையிலிருந்து விடுபட்டு, சுதந்திரப் பறவையாக இருக்கச் செய்வது.
9. பார்வைக்குப் புலப்படும் மற்றும் புலப்படாத முகவர்களைப் (உயர்நிலை ஆன்மாக்கள்) பயன்படுத்துவதோடு, அவதார புருஷர் அவரது பௌதீக உடலைத் தவிர, ஆழ்மன மற்றும் சூட்சும உடல்களை வேறு சில பணிகளுக்குப் பயன்படுத்துதல்.

10. அன்பு, கருணை, நம்பிக்கை, நேர்மை - இவை அனைத்தையும் மானிடனின் அடித்தளமாக மாற்றியமைத்தல்.
11. பற்றின்மை மற்றும் தன்னலமற்ற சேவையின் வளர்ச்சிக்கு ஆதாரமாக இருப்பது.
12. அற்புதங்கள் - ஆன்மீக நன்மைகளை மட்டுமே கருத்தில் கொண்டு நிகழ்த்துவது.
13. இந்த அவதார காலகட்டத்தில், அடிக்கடி திரைப்படங்களுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்ட நிகழ்வுகள், மக்களின் மனதை ஒருநிலைப்படுத்தி, உள்ளுணர்வை சீரான பாதையில் வழிநடத்தி மனப்படிவங்களை மாற்றியமைப்பது. இது ஒரு மகத்தான பணி.
14. மக்கள் கூட்டங்கூட்டமாக எங்கெங்கு இருக்கிறார்களோ அங்கு அவர்களின் உணர்வுகளை ஆதிக்கம் செய்வதன் மூலம் மிகையான நற்பயனை விளைவிப்பது.
15. அவதார புருஷர் அவரது பணியைத் தனிப்பட்ட முறையிலும், கூட்டாகவும் மேற்கொள்கிறார்; மேலும் அவரது ஒவ்வொரு வருகை காலத்திலும் இந்த முறையிலேயே எப்பொழுதும் செயல்படுகிறார்.
16. மேல்நிலையை எய்திய ஆன்மாக்கள் (ஐந்து, ஆறாவது ஆன்மீக தளங்கள்) பணிபுரியும் விதம் சத்குருக்களின் வழியிலிருந்து மாறுபட்டது; இருந்தும், அவதார புருஷரின் பல செயல் தந்திர முறைகளை, மேல்நிலை ஆன்மாக்கள் பயன்படுத்துவது வழக்கம். அவர்கள், நிச்சயமாக, ஆன்மீகத்தில் ஆர்வமுள்ள உலகின் ஒரு சிலரின் குறிப்பிட்ட பணிகளில் மட்டுமே அக்கறை கொண்டிருக்கும் வேளையில், அவதார புருஷர் அனைத்திலும், அனைவரிடத்திலும் அக்கறையுடன் பணிபுரிகிறார்.
17. முதலாவது ஆன்மீக தளத்திலிருந்து ஆறாவது ஆன்மீக தளம் வரையிலும் நிலைகொண்டிருக்கும் மஸ்துகளுடன் (சாது, சன்னியாசி, வாலி, யோகிகள்) தொடர்பு கொண்டு, அவர்களை நீராட்டி, உடை உடுத்தி, உணவூட்டி அவதார புருஷர் உலகளாவிய ஆன்மீக உட்பணியில் ஈடுபடுவதோடு, அவர்களுக்கும் ஒரு கணிசமான ஆன்மீக உந்துதலை வழங்குகிறார். சொல்லப்போனால் இது ஒரு கொடுக்கல் வாங்கல் எனும் மகத்தான பரிமாற்றம்.
18. அவதார புருஷர் பயணம் செய்யும் இடமெல்லாம் சாது, சன்னியாசி, சத்குருக்களின் சமாதி, கோவில், புனித ஸ்தலங்களுக்கு விஜயம் செய்வதன் மூலம், அவற்றை நம்பிவரும் மக்களுக்கு நற்பயன் விளைவிக்கும் விதத்தில் ஆற்றல்மிக்கதாகச் செய்கிறார்.
19. அவதார புருஷரின் சமாதி தரிசனம் என்பது மகத்தான வழிபாட்டு முறையாகும். தனிப்பட்ட நபரின் மனப்படிவங்கள் மிகையான மாற்றங்களை சந்திப்பதோடு அளவிறுதியற்ற இறை உணர்வோடு ஒரு நெருக்கத்தைக் கொண்டுவரும்.
20. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், இவை அனைத்தும் ஏக இறைவனின் சகவாசத்தில் வருவதற்கான படிக்கற்களாக விளங்கும்.

மெஹர் பாபா நம்மிடையே வாழ்ந்தபோது, இதைப் பலமுறை வலியுறுத்திக் கூறினார்: ஒரு பரிபூரண குருநாதரால் மட்டுமே ஒருவரை ஆறாவது ஆன்மீக தளத்திலிருந்து, ஆழமான பாதாளத்தைக் கடந்து, ஏழாவது நிலைக்கு எடுத்துச் செல்ல முடியும்; மேலும் இறைநிலையை எய்துவது என்பது முற்றிலும் அவரது அருளையும், ஆசீர்வாதத்தையும் பொறுத்தது. இறைநிலையை அடையும் ஆர்வம் மட்டும் இருந்தால் போதாது; அதற்கு வேண்டிய தகுதியை ஒருவர் அடையப்பெற வேண்டியது மிகவும் இன்றியமையாதது. ஒருவர் அந்தத் தகுதியை அடையப்பெற்ற அடுத்த கணமே, அவதார புருஷர், அவரது வாழ்நாளில் மட்டுமின்றி, இதர காலங்களிலும், ஏதோ ஒரு வழியில் அவரை அணுகத் தவறுவதில்லை என்பதுதான் நிதர்சனம்.

ஜெய் மெஹர் பாபா.

# நிகழ்வுகளின் காலவரிசை

**1936**
- டிசம்பர் 8, மேற்கத்தியர்கள் இந்தியா வருகை
- டிசம்பர் 22, பண்டர்தாராவிலிருந்து நாசிக் ரிட்ரீட் 'ஸர்ஸாத்' வருகை

**1936**
- டிசம்பர் 25, கிறிஸ்மஸ் விருந்தும், பரிசுகள் பரிமாற்றமும்

**1937**
- ஜனவரி 5, மேற்கத்தியர்கள் மெஹர் பாபாவுடன் 'ராஹுரி ஆசிரமம்' விஜயம்
- ஜனவரி 8, மெஹர் பாபாவின் 40 நாள் உபவாசம் ஆரம்பம்

**1937**
- ஜனவரி 11, பாண்டு லேனா குகை - சுற்றுலா
- பிப்ரவரி 3, மெஹர் பாபா ராஹுரியிலிருந்து நாசிக் வருகை.

**1937**
- பிப்ரவரி 17 & 18, மெஹர் பாபாவின் 43ஆவது விசேஷ பிறந்தநாள் விழா

**1937**
- மார்ச் 15, மேற்கத்திய அன்பர்களுடன் மெஹராபாத் பயணம்
- மார்ச் 25, கோதாவரி நதியின் பிறப்பிடமான 'திரிம்பக்' மலை விஜயம்

**1937**
- ஏப்ரல் 6, 'ஆனந்த்' பள்ளத்தாக்கு - சுற்றுலா.
- ஏப்ரல் 19 - மே 6, ராஹுரி ஆசிரமம் மெஹராபாத்திற்கு மாற்றப்பட்டது

**1937**
- ஜூன் , மேற்கத்தியர்களில் பலர் தாயகம் (ஐரோப்பா, அமெரிக்கா) திரும்பினர்
- ஜூலை 10, மௌனத்தின் 12ஆவது வருட நிறைவு நாள்

**1937**
- ஜூலை - ஆன்மீக பணி - மெஹராபாத்தில் மஸ்துகளுக்கும், மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கும் மெஹர் பாபாவின் சேவை.

**1937**
- ஜூலை 31 - ஆகஸ்ட் 13, 'ஸ்ட்ராத்நேவர்' கப்பலில் மெஹர் பாபா, பெண் மண்டலியுடன் கேன்ஸ் பயணம்

**1937**
- ஆகஸ்ட் 15, மெஹர் பாபா, பெண் மண்டலியுடன் மோன்ட்ஃப்ளூரியில் 'வில்லா கல்டானா' விலும், ஆண் மண்டலி 'கபோ டி மான்டே' வில்லாவிலும் தங்குதல்

**1937**
- செப்டம்பர் 19 - 22, மெஹர் பாபா பெண் மண்டலியுடன் பாரிஸ் பயணம்

**1937**
- செப்டம்பர் 25 -அக்டோபர் 8, 'ஸ்ட்ராதாய்ட்' கப்பலில் முஹமது மஸ்த் இரண்டு மண்டலியுடன் கேன்ஸ் வருகை

**1937**
- நவம்பர் 3, 'டி.எம்.எஸ். ஸர்காஸியா' கப்பலில் மெஹர் பாபா, மும்பை வருகை.
- நவம்பர் 29, மெஹராபாத் அறக்கட்டளை கூட்டம்

**1937**
- டிசம்பர் 21 - 26, நவ்ஸாரி - நாக்பூர் - மும்பை - தரிசன நிகழ்ச்சி

**1937**
- டிசம்பர் 28, ஸொராப்ஜி தேசாய் மறைவு.
- டிசம்பர் 28, மெஹர் பாபா மெஹராபாத் வருகை

**1938**
- ஜனவரி 12, ஹேப்பி வேலி சுற்றுலா
- பிப்ரவரி 2, பஞ்ச்கணி - டைகர் வேலி வருகை, இந்து உயர்நிலைப் பள்ளி விஜயம்

**1938**
- பிப்ரவரி 19 - 21, மெஹர் பாபாவின் மூன்று நாள் பிறந்தநாள் விழா

**1938**
- மார்ச் 14, பஞ்ச்கணி - 'தில்குஷா' பங்களா - ஏகாந்தவாசம்
- மார்ச் 28, பிராதாப்கர் கோட்டை விஜயம்

**1938**
- ஏப்ரல் 24, பெங்களூர் பயணம் - ஆன்மீக மையம் குறித்து பேச்சுவார்த்தை
- ஜூன் 10, நவல் தலாட்டி மாரடைப்பால் மரணம்.

**1938**
- ஜூன் 15, மெஹராபாத் மேல்மலை – கட்டமைப்புப் பணி ஆரம்பம், மெஹர் பாபா, முஹமது மஸ்த் மற்றும் மண்டலி பி.டபிள்யூ.டி. பங்களாவில் தங்குதல்.

**1938**
- ஜூலை 10, மௌனத்தின் 13ஆவது வருட நிறைவு நாள்
- ஜூலை 11, 'மெஹர் கெஸட்' பத்திரிகைக் குழு நியமனம்

**1938**
- ஆகஸ்ட் 25, மெஹராபாத் மேல்மலை கட்டிடங்கள் திறப்பு விழா
- செப்டம்பர் 25, 'ராஜா கோபிசந்த்' நாடகம் மஸ்துகளால் அரங்கேற்றப்பட்டது

**1938**
- டிசம்பர் 8, நீலப்பேருந்து பயணம் ஆரம்பம்
- டிசம்பர் 8 - 19, ஷோலாப்பூர், ஹைதராபாத், நாந்தேட், நாக்பூர், ஜபல்பூர்

**1938**
- டிசம்பர் 29, மெஹராவின் பிறந்த நாள் விழா

**1939**
- ஜனவரி 8-10, ஜபல்பூரில் ஆண்கள் & பெண்களுக்கு தனித்தனி தரிசன நிகழ்ச்சி
- ஜனவரி 18, பெனாரஸ் - மெஹர் பாபா கங்கை நதியில் கால்களை நனைத்தல்.

**1939**
- ஜனவரி 19, ஸாரநாத் - கௌதம புத்தரைப் பற்றி விளக்கம்
- ஜனவரி 23 - 24, கான்பூர், ஆக்ரா விஜயம்

**1939**
- ஜனவரி 26, 27, தாஜ்மஹால், ஜும்மா மஸ்ஜித், கோட்டை, ஷிஷ் மஹால், மோதி மஸ்ஜித்- எல்லாம் பூஜ்ஜியம் என்ற பாபாவின் விளக்கம், ஃபத்தேபூர் ஸிக்ரி விஜயம்

1939 • பிப்ரவரி 1, டெல்லி வருகை - ஜமா மஸ்ஜித், பழைய கோட்டை, ஹுமாயூன் சமாதி, லஷ்மி நாராயண் கோயில், நிஜாமுதீன் சமாதி, குதுப்மினார் விஜயம்

1939 • பிப்ரவரி 06 - 07, இரண்டு மஸ்துகள் - கமல் போஷ், ஹ்ஃபீஸ்ஜி நபீனா தொடர்பு; ஆல்வார் வழியாக அஜ்மீர் வருகை.

1939 • பிப்ரவரி 08 - 13, ஜெய்ப்பூர் வருகை - அரண்மனை அருகில், பிரம்மானந்தா சிங் இரண்டு மேல்நிலை மஸ்துகள் மற்றும் ‘சாச்சா’ எனும் மஜ்ஜூப் தொடர்பு.

1939 • பிப்ரவரி 15 -16, மெஹர் பாபாவின் 45ஆவது பிறந்தநாள் அஜ்மீரில் அனுஷ்டிக்கப்பட்டது; தாரகார் மலை விஜயம்

1939 • பிப்ரவரி 27 - மார்ச் 03, ஜெய்பூர், உஜ்ஜைன், போபால் -
• மார்ச் 13, மீண்டும் ஜபல்பூர் வருகை

1939 • மார்ச் 19 - 25, குறுகிய பயணம் - நாசிக், பூனா, மும்பை, ஜபல்பூர்

1939 • ஏப்ரல் 21 - மே 03, பதினொரு நாட்கள் உபவாசம், மஸ்துகளுடன் ஆன்மீக பணியில் தீவிர ஈடுபாடு.

1939 • மே 17 - 25, பத்நேரா, குல்தாபாத் வழியாக மெஹராபாத் வருகை.

1939 • ஜூன் 23, மஹாத்மா காந்தியைச் சந்திக்க மெஹர் பாபா, சாஞ்சியை மும்பைக்கு அனுப்பி வைத்தார்.

1939 • ஜூலை 22, மஹாத்மா காந்தியின் சக தோழர்கள் மெஹராபாத் விஜயம்.

1939 • ஜூலை மாதம் - மெஹராபாத்தில் மஸ்துகளுடன் தீவிர ஆன்மீக பணி - உலகெங்கும் போரின் அறிகுறி.

1939 • தொடரும். . .

# பொருளடக்கம்

நாசிக் நகரம் - மேற்கத்தியர் பயிற்சி மையம் ..................... 4

மெஹர் பாபாவின் 43ஆவது விசேஷ பிறந்தநாள் விழா ........................................................................... 45

கேன்ஸ், ஃபிரான்ஸ் ........................................................147

மெஹராபாத், நவ்ஸாரி & நாக்பூர்........................................192

பஞ்ச்கணி ‘டைகர் வேலி’.......................................................221

மெஹராபாத் மேல்மலை - கட்டமைப்புப் பணி............250

நீலப்பேருந்து பயணம் ............................................................300

மெஹராபாத் வருகை..............................................................375



மெஹர் பாபா (MEHER BABA)**- 1936**



பண்டர்தாரா (BHANDARDARA), டிசம்பர் (DECEMBER) **- 1936**



இகத்புரி (IGATPURI), டிசம்பர் (DECEMBER) **1936**

**நிற்போர்** (STANDING): மால்கம் (MALCOLM), எலிஸபெத் (ELEZABET), நான்னி (NONNY), காக்கா (KAKA) **அமர்ந்திருப்போர்** (SITTING): நோரினா (NORINA), கெனியுட் (CANUTE) **-** நாய், ஜீன் அட்ரியல் (JEAN ADRIEL), ஆதி - (ADI - ஜூனியர்), சாஞ்சி (CHANJI)

# நாசிக் நகரம் - மேற்கத்தியர் பயிற்சி மையம்

**(Nasik Retreat)**

ஐரோப்பா செல்வதற்கு முன்னர், இந்தியா வருவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நெருங்கிய மேற்கத்திய அன்பர்கள் தங்குவதற்கென, நாசிக் நகரில் நிலம் வாங்கியதாக, மெஹர் பாபா கடிதம் எழுதியிருந்தார். நோரினாவின் நிதி உதவியால் (கணவரின் வாசனைத் திரவிய நிறுவனத்தை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த பணம்) இது சாத்தியமானது. 1936 ஜூலை மாதத்தில், பாபா அவர்களுக்கு இதை அறிவித்தார்:

**பிரியமான உள்ளங்களுக்கு,**

**என்றும் இணைபிரியா, நமது நிரந்தர மாமாவான காக்கா அவரது முதல் மற்றும் கடைசி விரிவுரையை ஆங்கிலத்தில் வழங்க விரும்புகிறார். அவருக்கே உரித்தான ஆங்கிலம், ஒருவரை சிரிப்பால் சித்திரவதை செய்து, அவரது துயரங்களை தற்போதைக்கு விழுங்கிவிடும். அவர் கடந்த இரண்டு நாட்களாக இதை எழுதி, ஒத்திகை பார்த்து வருகிறார். “நீங்கள் பாபாவிற்குக் கீழ்ப்படிய வேண்டும்! நீங்கள் பாபாவிற்குக் கீழ்ப்படிய வேண்டும்!” என்ற ஒரே வரியை, ஒரே ஒலியை, அனைத்தும் அறிந்த நான் புரிந்து கொண்டதால், பின்வரும் சில சொற்களை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்:**

**நான் நாசிக் நகரில் ஏதுவான ஒரு நிலத்தை வாங்கினேன். இது அழகிய சூழல்களுக்கு மத்தியில், அற்புதமான இயற்கை காட்சிகளுடன் அமைந்துள்ளது. நாசிக் நகரில் மேற்கத்திய அன்பர்களும், மெஹராபாத்தில் கிழக்கத்திய குழுவும், மேலும் நான் ராஹுரி, மெஹராபாத், நாசிக் இவற்றின் இடையேயான பகுதியிலும் வாழும் வாழ்க்கையின் அம்சங்கள் அனைத்தும், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு எனது செயல்பாடுகளின் கருவறையாகத் திகழும்.**

**நாசிக் மையமானது, வழக்கமான ஆசிரமங்கள், ஆன்மீக மையங்கள் அல்லது பொதுவாக அவற்றை நிர்வகிக்கும் கடுமையான, உலர்ந்துபோன, கண்டிப்பான, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்க நெறிமுறைகளைப் பின்பற்றும் ஒன்றாக இருக்காது. இயேசு தன்னுடைய சீடர்களுக்கு அளித்ததைப் போலவே, எனது தனிப்பட்ட வாழ்க்கையின் வழிகாட்டுதலைக் கடைப்பிடிப்பது இதன் சிறப்பு அம்சமாகும்.**

**மேலே குறிப்பிட்டபடி, இங்கு வாழும் வாழ்க்கை, கடினமான, கண்டிப்பான ஒழுக்கத்திலிருந்து திசை திருப்பப்பட்டு, உடலின் சுகபோக சொகுசு வாழ்வில் வேண்டிய அளவு வளைந்து கொடுக்கும் நெகிழ்வுத்தன்மை இருந்தாலும், எல்லாமே என்னிடமிருந்து வரும் மறைமுக ஆன்மீக அறிவுறுத்தல்களின் கேள்விகளுக்கு இணங்கியதாக இருக்கும்;**

இதில் வெளி உலக சேவைகள் இருக்கலாம், நோயுற்றவர்களுக்கு அல்லது ஊனமுற்றோருக்கு மருத்துவ உதவி செய்வது, ஏழைகளுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் துணையாக இருப்பது போன்ற மனிதநேயமாகவும் இருக்கலாம். சுருக்கமாக, ஒவ்வொருவரின் திறமை, மனநிலை மற்றும் திறனுக்கு ஏற்ப, தனிப்பட்ட முறையில் நான் உங்களுக்கு வழிகாட்டுவேன். எனக்குப் பிரியமான அனைவரும் தேவையான சில அனுபவங்களைக் கடந்து செல்ல வழிவகுப்பேன்.

உங்கள் வீட்டு நிலைமைகள், குடும்பம், பிற பிணைப்புகள் தொடர்பான விஷயங்களைக் கருத்தில் கொண்டு, நீங்கள் ஒவ்வொருவரும், ஒன்று முதல் ஐந்து வருடங்கள் வரை இந்தியாவில் என்னுடன் வாழத் தயாராக இருங்கள். இந்தியாவில் பயணச் செலவுகளை நீங்கள் வழங்க வேண்டும், இது ஒவ்வொரு நபருக்கும் மாதத்திற்கு கிட்டத்தட்ட ஆறு பவுண்டுகள் வரும். கடைசியாக, என் உத்தரவுகளுக்குத் தவறாமல் இணங்கி வாழ வேண்டும்.

இந்தியாவில், என் அருகில் வாழும் வாழ்க்கை மிகவும் \சுவாரஸ்யமாக இருக்கும், மேலும் இது எனது பணியைக் கண்கூடாகக் காணவும், அதில் பங்கெடுக்கவும் உதவும்.

உங்களின் சாதாரண உலக வாழ்க்கையை எளிதாக்குவதற்கு சாத்தியமான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன; அது முட்களின் கிரீடமாக இல்லாமல் இருந்தாலும், ரோஜாக்களின் பஞ்சணையாக இருக்காது! நவீன - நாசிக், பழமையான - ராஹுரி, மற்றும் எளிய - மெஹராபாத் ஆகிய மூன்று வெவ்வேறு சூழ்நிலைகளில் எனது அன்றாட நடவடிக்கைகளின் மூன்று கட்டங்களை நீங்கள் அவ்வப்போது காண்பீர்கள்.

உங்களில் ஒவ்வொருவரும் எவருக்கும் அல்லது எதற்கும் அஞ்சக்கூடாது. என்ன நடந்தாலும், நீங்கள் உங்கள் நம்பிக்கையில் உறுதியாக இருக்க வேண்டும், உங்களை எதிர்ப்பவர்களின் விமர்சனங்களால் வருந்தக்கூடாது. நீங்கள் என்னிடம் சரணடைந்தால், “பாபா என் உடல்நலத்தை கவனித்துக் கொள்ள வேண்டும்... பாபா எனது குடும்பத்தை கவனிக்க வேண்டும்... நான் நோய்வாய்ப்படக் கூடாது... நான் உயிர்த்துறக்கக் கூடாது.... அல்லது எனது குடும்ப உறுப்பினர்களில் எவரும் மறைந்துவிடக் கூடாது....” இது போன்ற கூற்றுகள் நம்பிக்கையின்மையைக் குறிக்கும் - ஒரு சீடன் அவனுடைய குருநாதர் அனைத்தும் அறிந்தவர், எல்லாம் வல்லவர் என்ற நம்பிக்கையில் இருக்கவேண்டும். நீங்கள் என்னை நம்பி, அனைத்தையும் என்னிடம் விட்டுவிடலாம், ஆனால் அதை நிபந்தனைக்கு உட்படுத்த வேண்டாம்.

முக்கியமான ஒன்றே ஒன்றை வலியுறுத்தி நான் நிறைவு செய்கிறேன்: எனது அறிவுறுத்தல்களை உள்ளடக்கத்துடன் முழுமையாகக் கடைப்பிடிக்க முயற்சிக்க வேண்டும். வாக்குவாதத்தில் ஈடுபடாதீர்கள்; நான் சொல்வதையே செய்யுங்கள் - எல்லாம் சரியாகிவிடும்.

1936 ஜூலை 25ஆம் நாள், கேரெட் ஃபோர்ட் (GARRETT FORT) எழுதிய கடிதம், மேற்கத்திய அன்பர்களை பாபா, இந்தியாவிற்கு அழைக்கும் முடிவைப் பற்றி அனைவரும் எவ்வளவு மகிழ்ச்சியடைந்தனர் என்பதைப் பிரதிபலிக்கிறது:

பாபா, நோரினா வழியாக நீங்கள் எங்களுக்கு அனுப்பிய கடிதம் மிக்க மகிழ்ச்சியை அளித்தது. தகுதிவாய்ந்த, தகுதியற்ற அனைவருக்கும் தக்க நேரம் வந்துவிட்டது என்று நினைத்து, உங்களருகில் எங்கள் இடங்களைப் பிடித்து, உங்களின் மகத்தான பணியில் பங்கெடுப்பது என்பது மிகப்பெரிய மகிழ்ச்சிக்குரிய சந்தர்ப்பமாகும். இது, எங்கள் அன்றாட வாழ்க்கையில் அனைத்தையும் அற்பமாகத் தோன்றச் செய்கிறது, இந்த நேரத்திலிருந்து உங்களை வந்தடையும் நேரத்திற்கு இடையிலான நாட்களில், உங்கள் அன்பான புன்னகையால் எங்களை வரவேற்கும் அந்த நாளை எதிர்நோக்கி இருக்கிறோம்.

பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டைநோக்கி விரைந்தோடி வரும் ஒரு குழந்தையைப் போல - நிறைந்த நிம்மதியுடன் நான் உங்களிடம் வருகிறேன். நான் உங்களுடன் நீண்ட காலம் வாழ விரும்புகிறேன்; பழைய, தேய்ந்துபோன ஆடைகளைப் போல, நான் அறிந்த வாழ்க்கையைத் தள்ளி வைக்கவும், இரண்டு பிறவிகளுக்கு நடுவிலான இடைவெளியை நான் ஏற்றுக்கொள்ளும் அதே மனப்பான்மையுடன், உங்கள் போதனையின் புத்துயிர் பெறும் உத்வேகத்தைத் தேடவும் விரும்புகிறேன். இந்த நாள் வரை அறிந்து, வாழ்ந்த வாழ்க்கையைக் காட்டிலும், நான் மீண்டும் இவ்வுலகில் வர வேண்டிய நேரம் வரும்போது, உங்கள் தொண்டர்களில் ஒருவராக அறிந்து வாழ்வேன்.

நான் மாற்றப்படுவேன், எனது மனம், உடல் மற்றும் அனைத்து ஆன்மீக அம்சங்களும் முற்றிலும் மாற்றப்படும் என்று எதிர்பார்க்கிறேன். நீங்கள் என்னை அனுப்பும் வரை நான் திரும்பி வர விரும்ப மாட்டேன் என்று நினைக்கிறேன். இந்த வாழ்க்கையின் மாயக் கவர்ச்சி மறைந்துவிட்டது - எல்லாவற்றையும் நான் பார்த்திருக்கிறேன், பிரபலமான மனிதர்கள், பணம், லேசான புகழின் அனுபவம் (ஆனால் அது என்னவென்று தெரிந்து கொண்டால் மட்டுமே போதும்), சிரித்து மகிழ்ந்தது, மது போதையில் இருந்தது, காதல் வயப்பட்டது, சோகத்தை எதிர்கொண்டது, வானத்தை நோக்கிக்கொண்டு வாழ்க்கையின் வாய்க்கால் வழியாக நடந்தது. இவற்றை விட மாய உலகில் வேறு என்ன இருக்கிறது?

நான் உங்களிடம் வரும்போது எனது பிணைப்புகள் அனைத்தையும் எரித்து சாம்பலாக்க உத்தேசித்துள்ளேன்.

மால்கம் (MALCOLM), ஜீன் (JEAN), ருவானோ (RUVANO) ஆகியோர் இந்தியாவிற்குப் பயணம் செய்யப் போதுமான பணம் இல்லாத சங்கடத்தை எதிர்கொண்டனர், ஆனால் கேரெட்டின் உதவியுடன் அவர்களும் வர முடிந்தது.

இதற்கிடையில், பாபாவின் நோக்கம் குறித்த சந்தேகம் இங்கிலாந்து குழுவில் சில சிக்கல்களை ஏற்படுத்தியது. பாபா ஐரோப்பாவை விட்டு வெளியேறிய பிறகு, கிட்டி (சரோஜா), ஆங்கில குழு சார்பாக அவருக்கு ஒரு

கடிதம் எழுதினார்; இந்தியாவில் அவருடன் சிறிது காலம் தங்கிய பின்னர், இதற்கு முன்பு பாபா, ஒரு வருட காலம் தங்குவதற்காக அழைத்து, ஒரே வாரத்தில் திருப்பி அனுப்பியது போல், அவர்களை இம்முறையும் திருப்பி அனுப்பலாம் என்ற கவலையை வெளிப்படுத்தியதால், பாபா, பின்வரும் பதிலை அனுப்பினார்:

**26 நவம்பர் 1936**

**டார்லிங் சரோஜா,**

**இது எனக்கு ஏமாற்றமாக உள்ளது; அவர்களுக்கு என் மீது பெருமளவில் அன்பு இருந்தும், இவ்வளவு தெளிவாக, கிம்கோ அன்பர்களுக்கு, சில முக்கியமான விஷயங்களில் விளக்கங்களை வழங்கிய போதிலும், அவர்கள் என்னைப் புரிந்து கொள்ளவில்லை… நீங்கள் அனைவரும் இறுதியில் இந்தியா வர ஒப்புக்கொண்டது, எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது, ஆனால் பொதுவாக, கிம்கோவின் விசித்திரமான அணுகுமுறை - எல்லாவற்றையும் தீவிரமாக எடுத்துக்கொள்ளாமல் இலகுவாக பார்ப்பது; மேலும் நீங்கள் விஷயங்களை தீவிரமாக எடுத்து, புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்பும்போது கூட, நீங்கள் அதை அலட்சியமாகப் பார்த்து இலகுவாக எடுத்துக் கொள்வது - சில நேரங்களில் எனக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்துகிறது….**

**உங்கள் இதயம் மிகவும் அற்புதமானது, எப்பொழுதும் மிகவும் ஆழமாகவும் உண்மையாகவும் உணர்கிறது; மேலும் எந்த ஓர் அழைப்புக்கும் புரிதலுக்கும் பதிலளிக்கக்கூடியது, ஆனால் உங்களுடைய அந்த விசித்திரமான மனம் சில நேரங்களில் தடுமாறி உங்கள் நம்பிக்கையைத் தள்ளாடச் செய்கிறது, அதே நேரத்தில் உங்கள் அன்பு மீண்டும் மீண்டும் புத்துயிர் பெறுகிறது. ஒரு கணம் நீங்கள் முழுமையாக எதையும் செய்யத் தயாராக இருப்பதாக உணர்கிறீர்கள், அடுத்த கணம் நீங்கள் தயக்கத்துடன் 'அப்படி என்றால்…. இப்படி ஆனால்….' என்று நினைத்து மனச்சோர்வும், கவலையும் அடைகிறீர்கள்.**

**ஆனால் தலைக்கும்** (அறிவு) **இதயத்திற்கும்** (அன்பு) **இடையிலான இந்த நித்திய போராட்டத்தின் பலவீனத்தால் பாதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும், இறுதியில், தலைக்கு மேலாக இதயம் வெற்றிவாகை சூடும் நிலையை உருவாக்கி, இரண்டும் ஒன்றாகக் கலப்பதை நான் காண்பேன். ஒவ்வொரு கணமும் தவறாகப் புரிந்து கொள்ளப்படுவதன் மூலமும், மனிதகுலத்தின் உணர்வு நிலையையும், புரிந்து கொள்ளும் ஆற்றலையும் உயர் மட்டத்திற்கு எடுத்துச் செல்லும் என்னுடைய ஒவ்வோர் இரக்கமான செயலிலும், என்னை நன்கு அறிந்து, என்னோடு நெருக்கமாக இருப்பவர்களுக்கும் கூட, உண்மையில், நான் அதற்காகப் பணிபுரிகிறேன். நான் சொல்வதைப் புரிந்து, செயல்பட நீங்கள் எடுக்கும் ஒரு சிறிய தனிப்பட்ட முயற்சி எனக்கும் அனைவருக்கும் பல சிரமங்களையும் வேதனையையும் மிச்சப்படுத்தும்.**

இந்த நேரத்தில் இங்கிலாந்தில், அந்நாட்டு எட்டாவது மன்னர் எட்வர்ட் (EDWARD VIII), வாலிஸ் வார்ஃபீல்ட் சிம்ப்ஸனுடன் (WALLIS WARFIELD SIMPSON) தொடர்பு வைத்திருப்பதாகத் தெரியவந்த போது, அவர் கணவரிடம் விவாகரத்து கோரி, அவர் மீது வழக்குத் தொடர்ந்தார். 1936, டிசம்பர் 6 அன்று, மெஹர் பாபா இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில் '**அவர் திருமணம் செய்து கொள்வதாக வழங்கிய வாக்குறுதியைப் பொய்யாக நிரூபிப்பதை விட, தான் காதலிப்பதாகக் கூறும் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதற்காக, தனது அரியணையை கைவிடுவது நல்லது**' என பாபா குறிப்பிட்டார், "**இது உண்மையான வீரச் செயல்**" என்றும் பாபா கூறினார்.

டிசம்பர் 8 அன்று நோரினா (NORINA), எலிஸபெத் (ELIZABETH), ஜீன், மால்கம், ரானோ (RANO), நான்னி (NONNY) ஆகியோர் 'எலிஸியா' (ELYSIA) என்ற நீராவி கப்பலில் மும்பையை வந்தடைந்தனர்; இரண்டு நாய்களையும் அவர்களுடன் அழைத்து வந்தனர் - எலிஸபெத்தின் பாஸ்டன் வேட்டை நாய் கிப்பி (BOSTON TERRIER KIPPY), மற்றும் சுவிட்சர்லாந்தில் பாபாவிற்கு அனிதா பரிசாக வழங்கிய வெள்ளை சைபீரியன் ஹஸ்கி கெனியுட் (WHITE SIBERIAN HUSKY CANUTE).

ருஸ்தம், ஃபிரீனி மற்றும் ஏறக்குறைய 50 பாபா பக்தர்கள் அவர்களை வரவேற்று மெஜஸ்டிக் (MAJESTIC) ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றனர். குழு சோர்வாக இருந்தபோதிலும், அவர்கள் அமெரிக்க தூதரகத்தில் பதிவு செய்யவும், மும்பையைப் பார்வையிடவும், பின்னர் அன்றிரவு திரைப்படம் பார்க்கவும் பாபா அனுமதி வழங்கினார்.

நாசிக் நகரில் அமைந்த மெஹர் ரிட்ரீட்டில் (MEHER RETREAT) வசதிகள் இன்னும் தயாராகாத நிலையில், மறுநாள், ருஸ்தம் குழுவை இகத்புரிக்கு (IGATPURI) அழைத்துச் சென்றார். எலிஸபெத் கப்பலில் கொண்டு வந்த ஒரு வெள்ளை வி-8 ஃபோர்ட் (V-8 FORD) காரை (பின் இணைப்பு ஊர்தியுடன்) வேறொருவர் ஓட்டி வந்தார். 10ஆம் நாள் காலையில் அவர்களை சந்திப்பதற்காக ஆதி சீனியர், பாபாவை இகத்புரிக்கு அழைத்துச் சென்று, பின்னர் அனைவரும் நாசிக் திரும்பி வந்தனர். அன்று பிற்பகல், குழு நாசிக் ஆசிரமத்தையும், அவர்கள் தங்கும் அறைகளையும் பார்த்துவிட்டு, இகத்புரிக்குத் திரும்பினர்.

பாபா தனது அமெரிக்க அன்பர்களை சந்தித்தபோது, அவருடைய பழைய, கிழிந்துபோய் தையலிட்ட கம்பளி கோட்டை அணிந்திருந்தார். அவரது கோட் பைகள் கடிதங்கள், இதர தபால், தந்திகளால் நிரம்பி வழிந்தன; பாபா புன்னகையுடன் சிலவற்றை வெளியே இழுத்து, "**இது எனது தபால் அலுவலகம்!**" என்று கூறினார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, பண்டர்தாராவில் (BHANDARDARA) ஒரு பங்களாவில் தங்குவதற்கு அவர்களை அழைத்துச் சென்றனர், அங்கு காலநிலை குளிர்ச்சியாகவும் வசதியாகவும் இருந்தது. நாசிக் நகரிலிருந்து, பாபா டிசம்பர் 14ஆம் நாள் பகீரத்துடன் ஐந்து நாட்கள் பண்டர்தாராவில் தங்க வந்தார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, கேரெட் (GARRETT), நதீன் டால்ஸ்டாய் (NADINE TOLSTOY), கிராண்ட் டச்சஸ் மேரி பாவ்லோவ்னா (GRAND DUCHESS PAVLOVNA) ஆகியோர் அமெரிக்காவிலிருந்து 'கான்டே வெர்டே' கப்பலில் வந்தனர்.

46 வயதான கிராண்ட் டச்சஸ் மேரி, ரோமானோவ் (ROMANOV) குடும்பத்தைச் சார்ந்த ரஷ்ய உயர் குடியில் பிறந்தவர், நதீன் டால்ஸ்டாய்க்கு அறிமுகமானவர், அவரும் அமெரிக்காவிற்குக் குடிபெயர்ந்தார்.

அவர் ஒரு முன்னாள் தொழிலதிபர், பின்னர் ஒரு தன்னுரிமை தொழில் சார்ந்த புகைப்படப் பத்திரிகையாளராகப் பணிபுரிந்தார். மேரி, பாபாவுடன் தொடர்பு கொண்டிருந்த போதிலும், அவரை சந்தித்த பின்பு, நாசிக் நகரில் தங்க வேண்டாம் என்று முடிவு செய்தார், ஏனெனில் அங்கு வாழ்க்கை நிலைமைகள் என்னவாக இருக்கும் என்ற மனச்சஞ்சலத்தில், ஓர் ஆசிரமத்தில் வாழ்வது அவருடைய தனியுரிமை மற்றும் தனித்துவத்தை இழப்பதைக் குறிக்கும் என்ற அச்ச உணர்வோடு இருந்தார். அவர் ஒரு காலத்தில் செல்வந்தராக இருந்த வேளையில், அவரை சுயநலத்திற்காகப் பலர் பயன்படுத்தியதால், இந்தியாவில் பயணம் செய்வதற்கான தனது திட்டத்தைக் கைவிட்டு, அதற்கு பதிலாக நாசிக் நகருக்கு ஓய்வெடுக்க வருமாறு கூறி, அவர் விரும்பிய பத்திரிகைக்கு உதவுமாறு பாபா அறிவுறுத்தியபோது, பாபாவை 'ரஸ்புட்டினைப் போல' (RASPUTIN - ரஷ்ய ஆன்மீக குரு) இருப்பதாக டச்சஸ் சந்தேகித்தார். மேரி, பாபாவின் நோக்கத்தை சந்தேகக் கண்களால் பார்த்தார், மேலும் தனது பெயரைப் பயன்படுத்தி ஒரு திட்டத்தைத் தொடங்குவதற்கான அவரது முயற்சி என்று தவறாகக் கருதினார். அவரைத் தேடிவந்த சிறந்த வாய்ப்பை, அவ்வாறு காணத் தவறிய கிராண்ட் டச்சஸ் பண்டர்தாராவில் நான்கு நாட்கள் மட்டுமே தங்கியிருந்து, பின்னர் இந்தியாவின் பிற பகுதிகளில் பயணம் செய்தார்; ஆனால் அவர் மீண்டும் பாபாவின் தொடர்பில் வரவில்லை.

ஆன்மீகம், துறவறம், ஆன்மீக பாதை இவை அனைத்தும் என்ன என்பது பற்றிய கேள்விகள் கேரெட்டின் மனதில் அலைமோதின. 1936 டிசம்பர் 17ஆம் நாள், பாபா குழுவிடம் அவரது கருத்துகளை, கேரெட் ஃபோர்டுக்கு அனுப்பியதை எடுத்துரைத்தார்:

**தெய்வீகம், மானிடரிடமிருந்து தனியாகப் பிரிந்து இருப்பதில்லை - இது மனிதகுலத்தை இறைநிலைக்கு உயர்த்துகிறது. ஆன்மீகம் என்பது உலக நடவடிக்கைகளைக் கைவிடுவதையும் குறிக்கவில்லை. உண்மையான ஆன்மீகம் என்பது இவ்வுலக ஆசைகளை உள்ளளவில் துறப்பதைக் குறிக்கிறது. வெளியளவிலான துறவறம் - சன்யாசம் - ஆன்மீகத்திற்கு வழிவகுக்காது.**

**இயற்கையின் இரட்டைத் தன்மையிலிருந்து பின்வாங்குவதன் மூலம் சிக்கல்களிலிருந்து தப்பிக்க முயல்வது பரிபூரண நிலையைக் குறிக்காது. பரிபூரண இறைநிலையை அடைந்த ஒருவர், மாயை எவ்வளவுதான் ஈர்ப்புத்தன்மை மற்றும் சக்திவாய்ந்ததாக இருந்தாலும், அதன் மீது தனது**

**ஆதிக்கத்தை உறுதிப்படுத்த வேண்டும். ஒரு பரிபூரண குருநாதர் தீவிரமான செயல்பாட்டின் மத்தியிலும் அனைத்து ஜீவராசிகளின் வாழ்வின் தொடர்பிலிருந்து முழுமையான பற்றற்ற தன்மையுடன் இருக்கிறார்.**

மெஹர் பாபா தனிநபர்களிடம் வேடிக்கையான கதைகளை எடுத்துரைக்குமாறு கேட்கும் வேளையில், பாபாவின் நகைச்சுவை உணர்வை எண்ணி கேரெட் ஃபோர்ட் மகிழ்ச்சியுடன் ஆச்சரியமடைந்தார். பாபா புன்னகைத்து பதிலளித்தார், "**தெய்வீகமானது, அனைத்து அழகையும் கருணையையும் உள்ளடக்கியது எனும்போது, ஒரு பரிபூரண மனிதர் நகைச்சுவை உணர்வு இல்லாதவர் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?**"

திருப்தி அடைந்த கேரெட் ஃபோர்ட், அதைப் புரிந்து கொண்டதாக பதிலளித்தார்.

மேற்கத்தியர்கள் முதன்முதலில் பண்டர்தாராவிற்கு வந்தபோது, ஒவ்வொருவரும் ஐந்து முதல் பத்து நிமிடங்கள் வரை, இளைப்பாறுவது போல் அமைதியாக அமர்ந்து, மனதை முற்றிலும் வெறுமையாக இருக்கச் செய்ய முயற்சிக்குமாறு பாபா அறிவுறுத்தினார். டிசம்பர் 17 அன்று, "**எதைப் பற்றியும் நினைக்காதீர்கள் - என்னைக் கூட நினைக்க வேண்டாம்!**" அணை மேல் பாயும் தண்ணீரைச் சுட்டிக்காட்டி, பாபா, "**எண்ணங்கள், அலை பாய்வதை நிறுத்துவது உங்களுக்குக் கடினமாக இருந்தால், பாறைகள் மீது விழும் தண்ணீரின் ஒலியைக் கேளுங்கள். ஆனால் நீங்கள் முழுமையான நிதானத்தில் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்**" என்றார்.

சில நாட்களுக்குப் பிறகு, பாபா, பயிற்சி எப்படி நடக்கிறது என வினவினார். சிலருக்கு அது சிரமமாக இருந்தது. "**கடவுளை உணர்ந்து கொள்வதில் ஏற்படும் சிரமம் அதன் எல்லையற்ற எளிமையில்தான் உள்ளது. சிரமமாக உணர்வது உங்கள் தவறு அல்ல, அதைப் பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. உங்கள் மனம் ஒரே நேரத்தில் ஆயிரமாயிரம் எண்ணங்களை நினைத்து, பழகி, உங்களை அதன் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதே இதன் முக்கிய காரணம். நீங்கள் அவ்வாறு செய்ய முடியாவிட்டால், நான் உங்களுக்கு உதவுவேன். ஆனால் நீங்கள் சிரமப்படாமல் முயற்சி செய்ய வேண்டும், உங்களை நிதானமாக வைத்துக்கொள்ள வேண்டும்.**

"**முழு கவனத்தையும் அதில் செலுத்த வேண்டாம். ஒருமுக கவனம் பரவசத்தையும், தன் நினைவிழந்த சமாதி நிலை மற்றும் ஆன்மீக அனுபவத்தையும் உருவாக்குகிறது. மனதை வெறுமையாக வைத்திருப்பது அமைதியைத் தருகிறது. ஒருவர் ஆன்மீக பாதையில் நுழைவதை இது சாத்தியமாக்குகிறது.**

**இது மலை ஏறுவதைப் போன்றது. நீங்கள் மலையடிவாரத்தை அடைந்து மலையில் ஏறும் வேளையில், உங்கள் சுமையை ஒருபுறம் கீழே**

**வைத்துவிடுகிறீர்கள். மனம் நிதானமாக இருக்கும்போது, மயக்கமடையும் போக்கு உருவாகிறது. நாம் மனதை முழு உணர்வுடன், விருப்பத்துடன் வெறுமையாக மாற்ற வேண்டும்.**

**"எல்லாவற்றிற்கும் மேலாக,"** அவர் ஒரு குறும்பு கலந்த புன்னகையுடன் கூறினார், **"கண்கொள்ளா காட்சிகளைக் காண்பிப்பதற்காக நான் உங்களை இந்தியாவிற்கு அழைத்து வரவில்லை!"**

மனதைப் பற்றி மேலும் விளக்கமளித்த பாபா, **"முழுப் படைப்பும் சிந்தனையில் ஈடுபடும் மனதின் விளைவாகும். மனம் உங்களைப் பிணைப்பது மட்டுமின்றி விடுவிக்கவும் செய்கிறது - உங்களை ஆசைகளோடுப் பிணைக்கிறது, அதிலிருந்து உங்களை விடுவிக்கிறது"** என்றார்.

குருநாதரின் நெருங்கிய சகவாசத்தில் இரண்டு நாட்கள் கடந்தன, டிசம்பர் 19 அன்று பாபா பண்டர்தாராவிலிருந்து நாசிக் புறப்படுவதற்கு முன்னர், அவர் அனைவருக்கும் விளக்கினார்: **"நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் தனிப்பட்ட திறனுக்கு ஏற்ப எனது பணியில் உதவ வேண்டும்; நீங்கள் எந்த அளவிற்கு உலகோடு இணைந்திருப்பீர்கள் என்பது நீங்கள் செய்ய வேண்டிய பணிகளால் தீர்மானிக்கப்படும். உலகில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை நான் உங்களுக்குக் கற்பிப்பேன், அதேவேளையில் எல்லையற்ற என்னுடன் உள்ளார்ந்த தொடர்பில் எப்பொழுதும் இருங்கள். உங்கள் பயிற்சியின் ஓர் அங்கமாக நாசிக் நகரின் சொகுசான வாழ்க்கை, அத்துடன் ராஹுரி மற்றும் மெஹராபாத்தின் அசௌகரியங்கள் இரண்டையும் நீங்கள் அனுபவிக்க வேண்டும், பின்னர் இரண்டிலிருந்தும் விடுபட்டு, பற்றற்ற நிலையில் இருக்க வேண்டும்."**

**"கவலைப்பட வேண்டாம், அவசரப்பட வேண்டாம்"** என்று பாபா கூறி முடித்தார். பின்னர் இரவு பத்து மணிக்கு நாசிக் புறப்பட்டுச் சென்றார்.

1936, டிசம்பர் 22 அன்று மேற்கத்திய அன்பர்கள் பண்டர்தாராவிலிருந்து நாசிக் நகரில் மெஹர் ரிட்ரீட்டுக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்கள் தங்கியிருந்த கட்டிடத்திற்கு 'ஸர்ஸாத்' - SARZAT (DESTINY) என்று பெயர். இது 'மன்ஸில்' (MANZIL) என்று அழைக்கப்படும் பிரதான பங்களாவின் பின்னால் அமைந்தது. பன்னிரண்டு அறைகளைக் கொண்ட செவ்வக அமைப்பில் இருந்தது. ஒவ்வொரு அறையும் சொகுசு மெத்தையுடன் கூடிய படுக்கை, ஒப்பனை மேசை, அலமாரி, மேசை, நாற்காலி, மின்சார இணைப்புகள் மற்றும் பிற வசதிகளுடன் அமைந்திருந்தது.

மேலும், இரண்டு அறைகளுக்கும் இடையே பொதுவான குளியலறை, தானியங்கி கழிப்பறை, சூடான மற்றும் குளிர்ந்த நீரோட்ட வசதிகள் பகிர்ந்து கொள்ளும் விதத்தில் அமைந்திருந்தன. மெஹராபாத்தில் கிழக்கத்திய மண்டலி வாழும் எளிய, சிரமமான நிலைமைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில் மேற்கத்தியர்களுக்கு, சாத்தியமான அனைத்து வசதிகளும் வழங்கப்படுவதில் பாபா குறிப்பாக கவனம் செலுத்தினார்.

லண்டனில், பாபா நாசிக் ஆசிரமத்தின் சிறப்பான அம்சங்களை விவரித்து, மேற்கத்தியர்கள் எளிய வாழ்க்கையை பின்பற்ற வேண்டும் என எச்சரித்திருந்தார். ஆனால் அதற்கு மாறாக அனைத்து வசதிகளும், சின்ன சின்ன விஷயங்களிலும் நுணுக்கமான கவனத்துடன், வழங்கப்பட்டதை அவர்கள் கண்டுகொண்டனர். ரானோ இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "நாங்கள் இந்தியாவிற்கு வந்தபோது, அனைவரும் தரையில் தூங்குவோம், கடினமான சூழ்நிலைகளில் வாழ்வோம் என்ற எண்ணத்தில் இருந்தோம். அதற்காக, நாங்கள் தூங்குவதற்கான மெத்தையுடன் கூடிய படுக்கையோடு தயாராக வந்தோம். பாபா எங்களை நாசிக் ஆசிரமத்தைப் பார்க்க அழைத்துச் சென்றபோது, பாபா அளித்த அனைத்து வசதிகளையும் பார்த்து நாங்கள் திகைத்துப் போனோம்."

மேற்கத்தியர்களில் சிலர் 'சன்னியாசி' வாழ்க்கை முறையை வேறுவிதமாகக் கற்பனை செய்திருந்தனர். 1936 டிசம்பர் 23 அன்று பாபா அவர்களின் தவறான கருத்துக்களை விளக்கி உரையாற்றினார்:

**இந்தியாவில் நீங்கள் எளியதொரு வாழ்க்கையை வாழ விரும்புகிறேன். அதன் பின்பு, நீங்கள் மேற்கு நோக்கித் திரும்பும்போது, உங்கள் பழக்கமான வாழ்க்கையை மீண்டும் அங்குத் தொடரலாம், ஆனாலும் நீங்கள் எவ்வகையிலும் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும். இதைப் பார்க்கும்போது, நான் உங்களுக்காக இந்த வசதிகள் அனைத்தையும் ஏன் செய்தேன் என்று நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். உதாரணமாக, உங்களைத் தரையில் தூங்குமாறு கூறினால், உடல் குதர்க்கமாகச் செயல்பட்டு மனதில் வினைபுரியும். இத்தகைய திடீர், கடுமையான மாற்றங்களை நான் உங்களுக்கு வழங்குவதன் மூலம், உங்கள் மனம் அவற்றைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில், உண்மைகளை வழங்குவது, விளக்கிக் கூறுவது கடினம். எனவே நான் இந்த வசதிகளைப் படிப்படியாக உங்களிடமிருந்து திரும்பப் பெறுவேன், பின்னர் அவற்றை மீண்டும் உங்களிடம் திருப்பித் தருவேன்.**

**உலகம் தேவைகளுக்கு அடிமை. ஆனால் தேவைகள் உங்கள் அடிமைகளாக மாற வேண்டும். நவீன வசதிகளைப் பயன்படுத்த நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும் - அவை உங்களைப் பயன்படுத்தக்கூடாது. உங்கள் தேவைகளை நீங்கள் விட்டுவிடுவதை நான் விரும்பவில்லை, ஆனால் நீங்கள் அவற்றிலிருந்து விடுபட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எனவே முதலில், நீங்கள் குழப்பத்தில் சோர்வாக, அமைதியற்றவராக அல்லது வெறுமையாக உணரலாம்; ஆனால் கவலைப்பட வேண்டாம். விரைவில் நான் உங்களை வழிநடத்தத் தொடங்குவேன்; கடமைகளையும் பணியையும் தரும் வேளையில், இது உங்களுக்கு உள்ளடக்கத்தை உணர்த்தும். ஒருமுறை நான் தொடங்கிவிட்டால், எதுவும் என்னைத் தடுக்க முடியாது. எனவே ஜனவரி 15ஆம் நாள் வரை, உங்களால் முடிந்தவரை ஓய்வெடுக்கவும். ஜனவரி 16 முதல், பணிகள் முழு முனைப்பில் தொடங்கும். 16ஆம் தேதி முதல், நீங்கள்**

**காலை 6:30 மணிக்கு எழுந்து இரவு 9:30 மணிக்கு படுக்கைக்குச் செல்ல வேண்டும். மேலும் உங்கள், ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் கடமைகளைச் செவ்வனே செய்ய வேண்டும்.**

**அவ்வப்போது, நான் உங்களை, ரிஷிகளும், முனிகளும் தியானம் புரிந்த நாசிக் அருகே அமைந்த மலைகளின் சுவாரஸ்யமான இடங்களுக்கும், அழகான குகைகளுக்கும் அழைத்துச் செல்வேன். ஆனால் எனது பிறந்தநாள் வரை, என் அனுமதியின்றி நீங்கள் வெளியே செல்வதை நான் விரும்பவில்லை. நீங்கள் அறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாக உணரலாம், ஆனால் அது உங்கள் சொந்த நலனுக்காகவே. மெஹராபாத், ராஹுரி ஆசிரமங்களுக்கு ஜனவரி 5ஆம் நாளிலிருந்து அழைத்துச் செல்வேன்.**

**எனது பிறந்தநாளை ஒட்டி 15,000 பேருக்கு தானியமும், துணியும் வழங்க உள்ளேன். அதற்கு வேண்டிய பொட்டலங்களைத் தயார் செய்யும் பணியில் நீங்கள் அனைவரும் உங்கள் பங்கைச் செய்ய வேண்டும்.**

அடுத்த நாள், பாபா தனது பணியைப் பற்றி விளக்கினார்:

**நேரத்தைக் கடைப்பிடிப்பது இன்றியமையாதது என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆன்மீக தளங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் நேரம் இடம் என்று எதுவும் இல்லை. இருமைத்தன்மையுள்ள இவ்வுலகில் நேரம், இடம், காரணம், விளைவு ஆகியவை உள்ளன. எனவே, மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்காக நான் இவ்வுலகில் பணிபுரியும் வேளையில், நேரம் மற்றும் இடத்தால் நான் மேலோட்டமாகப் பிணைக்கப்படுகிறேன். இதன் விளைவாக, நான் சில நேரங்களில் மட்டுப்படுத்தப்பட்டவனாகத் தோன்றலாம், ஆனால் உண்மையில், நான் தொடர்ந்து ஏக இறைவனின் எல்லையற்ற நிலையை அனுபவிக்கிறேன்.**

**எனது வட்டத்திற்காக நான் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் பணிபுரிகிறேன், ஆனால் பிரபஞ்சத்திற்கு, நேரம் நிர்ணயிக்கப்படவில்லை. நான் இருமைத்தன்மையில் இருப்பவர்களுக்காகப் பணிபுரியும்போது, நேரம் கணக்கிடப்படுகிறது. ஆகவே, காலத்திற்குக் கட்டுப்படும்படி நான் உங்களிடம் கேட்கும்போது, வட்டத்திற்காக உழைப்பதன் நன்மையை அடைகிறீர்கள் என்று அர்த்தம். சில விஷயங்களைச் செய்ய நான் எப்பொழுதும் மண்டலிக்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தை நிர்ணயிக்கிறேன்.**

ராவல்பிண்டி கப்பலில் லண்டனிலிருந்து பயணம் செய்த கிட்டி (KITTY), மார்கரெட் (MARGARET), டிலியா (DELIA) டாம் (TOM), வில் & மேரி (WILL & MARY) ஆகியோர் 1936 டிசம்பர் 24 அன்று மும்பைக்கு வந்தனர். அவர்களை சாஞ்சி மற்றும் சுமார் 50 மும்பை பக்தர்கள் கப்பல்தளத்தில் சந்தித்தனர். ஓரிரவு ஓய்விற்குப் பின்னர் அடுத்த நாள் நண்பகல், கிறிஸ்துமஸ் தினத்தன்று நாசிக் நகரை வந்தடைந்தனர்.

அதே நாளில், 'ஈவினிங் நியூஸ் ஆ∴ப் இந்தியா' பத்திரிகை ஆசிரியரான டி.ஏ. ராமன் (T.A. RAMAN), நோரினா, நதீன், கேரெட் ஆகியோருடன் நேர்காணல்களை நிகழ்த்தினார். அதற்கு முந்தைய நாள் அவர் பல கேள்விகள் அடங்கிய பட்டியலுடன் பாபாவை சந்திக்க நேர்ந்தது. இந்தியாவில் 'ஆன்மீகம் என்று அழைக்கப்படுபவை' அதிக அளவில் இருப்பதாக ராமன் கருத்து தெரிவித்தார். பாபாவுடனான அவரது உரையாடல் பின்வருமாறு:

ராமன் குறைகூறும் நோக்கில் பாபாவிடம், "இந்தியாவில் நமக்கு இன்றியமையாத தேவை ஆன்மீக விஷயங்களிலிருந்து விடுமுறை!" என்றார்.

பாபா புன்னகையுடன் பதிலளித்தார், "**நான் விடுமுறை அளிக்க மாட்டேன், ஆனால் வெவ்வேறு மதங்களின் நடைமுறையுடன் கூடிய சடங்கு சம்பிரதாயங்களை நிரந்தரமாக ஓய்வு பெறச் செய்வேன்; இந்திய நாடு, பாதிப் பிரச்சினைகளுக்கு, சடங்கு சம்பிரதாயங்களே காரணம் எனக் குற்றம் சாட்டுகிறது.**"

"அப்படியானால் உங்கள் தத்துவம் என்ன?"

"**எனக்கு, தத்துவம் என்று ஒன்று இல்லை.**"

"போதிக்க உங்களிடம் புதிய தத்துவம் இல்லை என்றால், உங்கள் வேலைதான் என்ன?"

"**மனிதகுலத்தில் தெய்வீக உணர்வை எழுப்புவதே எனது வேலை.**"

ராமன், "ஆனால், நம் நாட்டின் வறுமையையும், பல்வேறு தேசங்களின் மத்தியில் நாம் மிகவும் தாழ்ந்த நிலையில் இருப்பதையும் மறந்து விடக்கூடாது" என்றார்.

அதற்கு பாபா பதிலளித்தார், "**நமது துன்பங்கள் மனிதனின் சுயநலம், பேராசை இவற்றின் விளைவாகும். நாம் கடவுளின் வாழ்க்கையை வாழ்ந்தால், இந்தப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மறைந்துவிடும். எல்லா மனிதர்களும் ஒருவருக்கொருவர் உதவ முன்வந்தால், தியாகங்கள் எளிதாகிவிடும், செல்வம் மற்றும் வாய்ப்பின் ஏற்றத்தாழ்வுகள் மறைந்துவிடும்.**"

"நீங்கள் ஏன் சுயமாகத் திணிக்கப்பட்ட மௌனத்தைக் கலைத்து, பொது இடங்களில் போதிக்கக்கூடாது?"

"**ஒவ்வொரு பெரிய மாற்றமும் கவனமாக, தக்க தருணத்தில் செய்யப்படவேண்டும். மனித மனதின் மிகப்பெரிய புரட்சியுடன் இதை வேறு எப்படிச் செய்ய முடியும்?**

"**எந்த உலகமும் இதுவரை கண்டிராத பயங்கரமான படுகொலையை எதிர்கொண்டு, பணிவு மனப்பான்மையுடன் உலகம் சுத்திகரிக்கப்பட்ட பின்னரே பொது இடங்களில் பிரச்சாரம் செய்யும் நேரம் வரும்.**

"**ஒரு போர் திட்டவட்டமானது என்று பல ஆண்டுகளாக நான் கூறிவருகிறேன், இது கடைசி யுத்தத்தை விட குறுகியதாக ஆனால் மிகவும் பயங்கரமாக இருக்கும்; மேலும் இந்தியா இதில் தீவிரமாகப் பாதிக்கப்படும்; இதன் விளைவாக நாட்டின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகள்**

**புரட்சிகரமாக மாறும். முதல் உலகப் போர், மனிதனிடம் போதுமான இதய மாற்றத்தைக் கொண்டு வரவில்லை. அகங்காரத்தைக் களைந்த உலகம், இன்னும் பயங்கரமான சுத்திகரிப்புக்குப் பிறகுதான், 'இவை அனைத்திற்கும் காரணம் என்ன?' என்று செவிகொடுத்துக் கேட்கும்.**

**"நான் மீண்டும் சொல்கிறேன்: உலகளாவிய பேரழிவுகள் உலகை சூழ்ந்துகொள்ளும்."**

"இது உங்கள் கருத்து அப்படித்தானே?" என்று பத்திரிகையாளர் கேட்டார்.

ராமனை நேரடியாகப் பார்த்து, பாபா புன்னகைத்து, "**மகனே, நான் உங்களுக்கு வழங்கியது கருத்து அல்ல! அது எனக்குத் தெரியும்!**" என்றார்.

நிருபர் மெஹர் பாபாவிடம் சவால் விடும் நோக்கத்தில் வந்திருந்தார், ஆனால் பாபா மற்றும் மண்டலி மீது மேலை நாட்டினரின் உணர்வுகள் மற்றும் உண்மையான அன்பின் ஆழத்தால் வெகுவாக ஈர்க்கப்பட்டார். அவரது பதிவு 1937 ஜனவரி 7 அன்று மாலை இதழில் வெளிவந்தது.

டிசம்பர் 25ஆம் நாள் இரவு கிறிஸ்துமஸ் விருந்து ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. பாபா முழுக் குழுவுடன் ஒரு நீண்ட மேசையின் நடுவில் அமர்ந்தார். பாபாவிற்கு மேற்கத்தியர்கள் பல்வேறு பரிசுகளை வழங்கினர். ஒவ்வொரு பரிசையும் திறந்து பார்த்து, பின்னர் அவற்றை குழுவில் இன்னொருவருக்கு வழங்கினார்; பாபாவின் மனநிலை மகிழ்ச்சியாக இருந்தது. ஃபிரீனி சிறப்பு சைவ உணவு, கேக் போன்றவற்றை தயார் செய்தார்.

இரவு உணவிற்குப் பிறகு, பாபா, காக்காவிடம் ஆங்கிலத்தில் ஒரு சிறிய சொற்பொழிவை வழங்குமாறு கூறினார். காக்காவிற்கு ஆங்கில மொழி தெரியாத போதும், சிதைந்து போன ஆங்கிலத்தில் சில குறுகிய அறிவுரைகளை வழங்கியது, அனைவரும் ரசிக்கும்படியான வேடிக்கை நிகழ்வாக அமைந்தது. காக்காவின் கருத்துக்களின் சுருக்கம்: "வேண்டாம் பரிந்துரை! வேண்டாம் விவாதம்! கீழ்ப்படிதல் மட்டும்!" மேற்கத்தியரின் பழக்கத்தை அறிந்த காக்கா கூறியதைக் கேட்டு, அனைவரும் மனம் விட்டுச் சிரித்தனர். ஆனால் பாபா, "**சில மாதங்களில் நீங்கள் உருது மொழியில் ஒரு உரையை எவ்வளவு சிறப்பாக வழங்க முடியும் என்று பார்ப்போம்!**" என்றார்.

உணவிற்குப் பிறகு, பாபா, "**என் அன்பு அனைவரிடமும் தொடர்ந்து நித்தியமாகப் பாய்ந்து ஓடுகிறது, ஆனால் இன்று நம்மிடையே இல்லாதவர்களை நாம் நினைவில் கொள்வோம்**" என்று கூறினார்.

சில கணங்கள் மௌனமாக இருந்து, பின்பு கிறிஸ்துவை நினைவுகூர்ந்த பாபா, "**நான் ஒவ்வொரு கணமும் சிலுவையில் அறையப்படுகிறேன், நான் தொடர்ந்து சிலுவையில் அறையப்படுகிறேன், தொடர்ந்து பிறக்கிறேன்**" என்று கூறினார்.

அதற்குப் பிறகு, பாபா தனிப்பட்ட முறையில் குழுவை ஸர்ஸாத் கட்டிடத்திற்கு அழைத்துச் சென்று ஒவ்வொருவருக்கும் அவரவர் அறைகளை ஒதுக்கீடு செய்தார். கிட்டி, டிலியா, மார்கரெட், டாம், மால்கம், ஜீன், வில், மேரி,

நதீன், கேரெட், ருவானோ ஆகியோருக்கு ஒவ்வொரு தனி அறை வழங்கப்பட்டது. கேரெட் மற்றும் மால்கம் ஆகியோரின் தலையங்க அலுவலகமாக (EDITORIAL OFFICE) ஓர் அறை காலியாக வைக்கப்பட்டது. நோரினா, எலிஸபெத் இருவரும் ஸர்ஸாத்திலிருந்து சற்று தொலைவில் அமைந்த பிரதான மன்ஸில் பங்களாவில் ஒரே அறையைப் பகிர்ந்து கொண்டனர், அங்கேயே ரானோ, நான்னி இருவருக்கும் அறைகள் இருந்தன. பாபா ஒரு தனி அறையிலும், மண்டலி வேறு வேறு அறைகளிலும் தங்கினர்.

1936 டிசம்பர் 26 அன்று, நாசிக் ஆசிரமத்தின் செலவுகளில் ஒவ்வொருவரும் தங்கள் பங்கைச் செலுத்துவது குறித்து, பாபா மேற்கத்திய அன்பர்களுக்குத் தெரிவித்தார். இது மாதத்திற்கு சுமார் 30 டாலராக (DOLLAR) இருந்தது, குழுவில் சிலர் மேலும் அதிக பணம் செலுத்த வேண்டுமென உணர்ந்தனர்.

தொடர்ந்து, பாபாவிற்குப் பரிசுகளை வழங்குவது குறித்தும் அவர் விளக்கினார், **“நீங்கள் குருநாதரின் பிறந்தநாளில் வழங்குவது தட்சிணை. அதே வேளையில் வட்டத்தின் உறுப்பினர்கள் வழங்கும் பரிசுகள், அவர்களுக்கு நேரடியாகப் பயனளிக்காது, ஏனெனில் வட்டத்தின் உறுப்பினர்களாக இருப்பதால் அவர்களுக்கு அது தேவையில்லை. ஆனால் பரிசுகள் வழங்கப்படும் போது, அவர்களுடன் நெருக்கமாக இணைந்தவர்களுக்கு அவை பயனளிக்கின்றன. உதாரணமாக, டிலியா எனக்கு ஒரு பரிசை வழங்கினால், ஆன்மீக நன்மை அவரது தாயைச் சென்றடையும். ஜனவரி 15ஆம் நாளுக்குப் பிறகு, நான் பல விஷயங்களை விளக்குவேன் - கிட்டி சுருக்கெழுத்தில் அதை எழுதி, நான்னியின் உதவியோடு தட்டச்சில் பதிவு செய்து, கேரெட்டுக்குக் கொடுக்க வேண்டும். கேரெட், மால்கம் இருவரும் ஒரு பத்திரிகையைத் திருத்தம் செய்ய உள்ளனர்; அது ஒரு தனித்துவமான செயலாக இருக்கும்.”**

பாபா, தனது மேற்கத்திய அன்பர்களுக்கு மெஹர் ரிட்ரீட்டில் தங்கியிருப்பது குறித்து விளக்கினார், **“வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை உங்களைப் பார்க்க நான் இங்கு வருவேன், அதற்குப் பின்னர் அடிக்கடி வருவேன். நான் மெஹராபாத், ராஹுரி இரண்டு இடங்களிலும் மிகவும் மும்முரமாக இருக்கிறேன். ராஹுரியில் வாழும் மஸ்துகள் மற்றும் மனநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்னுடைய தனிப்பட்ட கவனம் தேவைப்படுகிறது.”**

பாபா இப்படிக் கூறி முடித்தார்: **அவதார புருஷர் என்பதால், அனைத்தையும் மிக நுணுக்கமாக கவனிக்கும் ஒரு தீய பழக்கம் என்னிடம் உள்ளது!”**

இந்தியாவில் இருப்பதில் மேற்கத்திய அன்பர்கள் மகிழ்ச்சியாக இருந்தாலும், பாபா அவர்களுடன் அடிக்கடி இருக்க மாட்டார் என்பதை அறிந்து

அவர்கள் சற்று ஏமாற்றமடைந்தனர். அன்று மதியம் பாபா நாசிக் நகரிலிருந்து ராஹுரிக்குப் புறப்பட்டார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, லாஸ் ஏஞ்சலஸில் பாபா வாங்கிய வீட்டு நாய் சம்மி (CHUMMY), 1936, டிசம்பர் 28ஆம் நாள் இரவு மரணமடைந்தது. அப்போது உடனிருந்த பாபா, சம்மிக்கு, அதன் வலியைக் குறைக்க அவரது கைகளால் ஒரு கரண்டி பிராந்தியைக் கொடுத்தார். சம்மி மறுநாள் மேல் மெஹராபாத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

29 அன்று காக்கா மற்றும் ராம்ஜூவுடன் நோரினா, எலிஸபெத் இருவரும் எலிஸபெத் எடுத்து வந்த ஃபோர்டு காரில் ராஹுரிக்குச் சென்றனர். அன்று ராஹுரியில் நடைபெறவிருந்த 'மண்டலி பராமரிப்பு அறக்கட்டளை' (MANDALI MAINTENANCE TRUST) கூட்டத்தில் அவர்கள் கலந்து கொள்ளவிருந்தனர்.

எலிஸபெத், நோரினா இருவருக்கும் பாபா ஆசிரமத்தைச் சுற்றிக் காண்பித்தார். ராஹுரி அறையைப் பார்வையிட்டு, அவர் மஸ்துகள், மனநோயால் பாதிக்கப்பட்டவர்களுடனான தனது பணியைப் பற்றி விளக்கினார். தொழுநோயாளிகளாக இருந்த சில மனநிலை பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி, பாபா கருத்துத் தெரிவிக்கையில், "**இவர்கள் தொற்றுநோயால் எவ்வளவுதான் பாதிக்கப்பட்டாலும், அது என்னையோ அல்லது அவர்களை நீராட்டி, சுத்தம் செய்யும் பணியில் எனக்கு உதவும் எந்த ஒரு நபரையும் எவ்விதத்திலும் பாதிப்பது இல்லை. ராஹுரியில் இந்தப் பணியை நான் செய்வது உலகளவில் செய்வதற்கு இணையானது.**"

ராஹுரி ஆசிரமத்தில் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் (பைத்தியம்) மற்றும் ஆன்மீக ரீதியில் முன்னேறிய மஸ்துகள் (MASTS - இறை-போதையில் இருப்பவர்) யார் யார் என்பதை பாபா சுட்டிக்காட்டினார், 'சிறிதளவிலான இளந்தென்றலை வீசச் செய்வதன் மூலம் - கடவுளுக்காக ஏங்கும் காற்றின் ஸ்பரிசத்தில்' அவர்களைக் கண்டுகொள்ள முடியும். சில நேரங்களில், எலிஸபெத்தை, புகைப்படம் எடுக்க பாபா அனுமதித்தார், மேலும் பாபா மஸ்துகளை அன்பாக நடத்தும் முறையைக் கண்டு எலிஸபெத், நோரினா இருவரும் ஆச்சரியத்தால் வெகுவாக ஈர்க்கப்பட்டனர். பாபா அவர்களுடன் மரங்களுக்குக் கீழே ஒரு நீண்ட மேசையில் மதிய உணவு உண்டார். அறக்கட்டளை கூட்டத்திற்குப் பிறகு, நோரினாவும் எலிஸபெத்தும் நாசிக் திரும்பினர்.

நாசிக்கில், மேற்கத்திய அன்பர்களுக்காக ரிட்ரீட்டில் பின்வரும் கால அட்டவணை மற்றும் விதிமுறைகள் வெளியிடப்பட்டன:

**6:30 காலை - விழித்தெழல்**

**8:00 மணி - காலை சிற்றுண்டி**

**12:00 பிற்பகல் - மதிய உணவு (குழு ஒன்றிணைந்து உண்ணவும்)**

**7:00 மாலை - இரவு உணவு**

**9:30 இரவு - தூக்கம்.**

**காலை 10:00 மணியிலிருந்து மாலை 4. 00 வரை எவரும் வெயிலில் அமரக்கூடாது. (வலுவான சூரிய கதிர்கள் காரணமாக).**

**பிப்ரவரி 25 வரை, மேற்கத்திய அன்பர்கள் எவரும் ரிட்ரீட் எல்லைகளுக்கு அப்பால் செல்லக்கூடாது.**

**பாபாவின் அனுமதியின்றி மேற்கத்திய பக்தர்கள் எவரும் பார்வையாளர்களுடன் உரையாடக்கூடாது.**

**பாபாவின் அனுமதியின்றி விருந்தினர்களை அழைக்கவோ அல்லது அவர்களுக்கு உணவளிக்கவோ அல்லது இரவில் விழித்திருக்கவோ கூடாது.**

**சமையலறைக்குள் நுழைய அனுமதி இல்லை.**

**ஆசிரமத்தின் ஒட்டுமொத்த பொறுப்பை வகிக்கும் நோரினாவிடம் உங்கள் புகார் ஏதேனும் இருந்தால் முன்வைக்கலாம்.**

**நாசிக் அல்லது மும்பையில் உங்களின் தனிப்பட்ட பணிகளுக்காக அலுவலகத்தை அணுகவும்.**

**சரக்கு சேமிப்பு அறையை, பகலில் எந்த நேரத்திலும் அணுகலாம்; சாவியை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.**

**அலுவலகத்திற்குத் தகவல் தெரிவிக்காமல் எவரும் வாகனங்களைப் பயன்படுத்த அனுமதி இல்லை.**

ருஸ்தம், ஃபிரீனி, ராம்ஜூ ஆகியோருடன் ஆதி ஜூனியர், சாஞ்சி, கலிங்கட் மூவரையும் மேற்கத்திய அன்பர்களுக்கு உதவியாக, பாபா நாசிக் நகரில் தங்குமாறு கூறினார்.

முதலில், ஆசிரமத்தின் பொறுப்பு ஆதி சீனியரின் கைகளில் இருந்தது; அதைத் தொடர்ந்து, ஜனவரி 15 முதல் அனைத்தையும் நோரினா பொறுப்பேற்க வேண்டும். '**எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தச் சிறிய குழுவில் இணைந்துள்ள வேறுபட்ட ஆளுமைகள் மற்றும் தேசிய பிரிவுகளைச் சார்ந்த வலுவான தனிநபர்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும்**' என பாபா விரும்பினார். டிசம்பர் 31 அன்று தமது வருகையின் போது பாபா இதை வலியுறுத்தினார்:

**உணவு மற்றும் பொது மேலாண்மை தொடர்பான விஷயங்களை நான் நோரினாவின் பொறுப்பில் விட்டுவிட்டேன். உங்கள் அனைவர் மத்தியிலும் முழுமையான நல்லிணக்கம் நிலவ, நான்கு விஷயங்களை மனதில் கொள்ள வேண்டும்.**

முதலாவதாக: **உங்களுக்கும் நோரினாவிற்கும் இடையே முழுமையான ஒத்துழைப்பு இருக்க வேண்டும்.**

இரண்டாவது: **சில விஷயங்களில், நோரினா விட்டுக் கொடுக்க வேண்டும்; சிலவற்றில், நீங்கள் வழி விட வேண்டும். நீங்கள் அனைவரும் அனைத்தையும் விட்டுவிட்டு ஆன்மீக மெய்ப்பொருளை அறிய இங்கு வந்துள்ளீர்கள்! எனவே, நீங்கள் சிறிய சிறிய அசௌகரியங்கள் மற்றும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டும். இதன் மூலம், உங்கள் விருப்பங்களையும், உண்மையான தேவைகளையும் பொருட்படுத்தாமல்**

இருக்க வேண்டும் என்று அர்த்தமல்ல. கேரெட் பத்திரிகையின் மூலம், நாம் அன்பு மற்றும் சகோதரத்துவத்தின் செய்தியை உலகிற்கு வழங்கப் போகிறோம், நமக்குள்ளே சின்ன சின்ன சில்லறை விஷயங்களில் முரண்பாடுகளும் ஒற்றுமையின்மையும் இருந்தால், நாம் வழங்கும் செய்தி கேலிக்குரியதாகவும், பாசாங்குத்தனமாகவும் இருக்கும்.

மூன்றாவது: நான் முன்னதாகக் குறிப்பிட்ட ‘முட்கள்’ பல வடிவங்களில் இருக்கும். நீங்கள் அவற்றை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொண்டு அதிக முக்கியத்துவம் கொடுத்தால், அவை இயற்கையாகவே தேவையற்ற துன்பத்தை விளைவிக்கும். மாறாக, நீங்கள் இந்த முட்களை லேசாக எடுத்துக்கொண்டு, முக்கியத்துவம் தராவிடில், இந்த முட்களும் பூக்களாக மாறும்.

நான்காவது: நோரினா இந்தப் பொறுப்பை ஏற்றிருப்பதால், அவர் அனைத்து விஷயங்களையும் தனது சொந்த வழியில் இயக்க முயற்சிக்கிறார் என்ற எண்ணம் உங்களில் எவருக்கும் இருந்தால், அது முற்றிலும் தவறான கருத்து என்பதை உணர்ந்து, உடனடியாக உங்கள் மனதிலிருந்து அகற்றப்பட வேண்டும். நோரினா என்ன செய்தாலும், ஒருபுறம், அது அவருடைய ஆழ்ந்த அன்பு மற்றும் என்னைப் பற்றிய உணர்வினால் மட்டுமே அவ்வாறு செய்கிறார், இயன்ற வரை சிக்கனமாக இருந்து என்னுடைய பணிக்கு வேண்டிய அனைத்தையும் செய்கிறார் என்பது எனக்குத் தெரியும். மறுபுறம், நோரினா இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதில் சிலருக்கு உடன்பாடு இல்லை என்ற கருத்து இருப்பதாகத் தெரிகிறது, இது முற்றிலும் முரணானது, தவறு என்று எனக்குத் தெரியும். அவர்கள் அனைவரும் நோரினாவைப் போலவே விஷயங்களை நிர்வகிக்க விரும்புகிறார்கள். இப்படித் தவறாக புரிந்துகொள்வது விரும்பத்தகாத சூழ்நிலைகளையும், ஒற்றுமையின்மையையும், மனவருத்தத்தையும் உருவாக்குகின்றன; எனவே எவ்வளவு விரைவில் நீங்கள் அனைவரும் அவற்றை அகற்றுகிறீர்களோ, அவ்வளவிற்குச் சிறந்தது.

உங்கள் உள் நோக்கம் ஆன்மீகம் என்பதை நீங்கள் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது; இல்லையெனில், இந்த ரிட்ரீட் (RETEREAT) ஓய்வு இல்லம் அல்லது ஹோட்டல் போல மாறிவிடும். நீங்கள் எனக்காக வந்திருந்தால், நீங்களும் என்னுடன் எனக்காக, துன்பங்களைத் தாங்கிக்கொள்ள வேண்டும்.

உங்களில் எவரேனும் உடல்நலம் சரியில்லாமல் இருந்தால், சரியான நேரத்தில் நோரினாவிற்குத் தெரியப்படுத்த வேண்டும்; அவர் அதை உடனடியாக கவனித்து, கேரெட்டின் மருந்துகளைப் பயன்படுத்திக் கொள்ள உதவுவார் அல்லது ஏதேனும் தீவிரமாக இருந்தால் மருத்துவரை அழைப்பார். நான் ஒவ்வொரு வாரமும் வரும்போது நோரினா எனக்கு ஒரு விரிவான சுகாதார அறிக்கையை வழங்க வேண்டும்.

அன்று மதியம் பாபா அவர்களை நாசிக் நகரில் சுற்றுப்பயணத்திற்காக அழைத்துச் சென்று, கங்காப்பூர் நதி (GANGAPUR RIVER) மற்றும் பிற காட்சிகளைப் பார்வையிட்டனர். பாபா, நதியோடு இணைந்த நீர்வீழ்ச்சிக்கு அருகில் ஒரு பாறையில் அமர, மேற்கத்திய அன்பர்கள் அனைவரும் அமைதியாக அவரைச் சுற்றி அமர்ந்தனர்.

டாக்டர் தேஷ்முக், மனைவி இந்துமதியுடன் நாசிக் வந்து அன்றைய தினம் பாபாவை சந்தித்தார். இந்துமதி, பாபாவிடம், "கடவுள், உண்மைப்பொருள், ஆன்மீகம் போன்ற விஷயங்களைக் கற்றறிய எனக்கு விருப்பம் இருந்தாலும், அறிவுபூர்வமாகத் திருப்தி அடைந்தாலும், எனக்கு ஏன் உள்ளார்ந்த நம்பிக்கை இன்னும் வரவில்லை?" என்று கேட்டார்.

அதற்கு பாபா, "**இதற்கு உண்மையான அனுபவம் தேவை, அது இல்லாமல் நீங்கள் ஒருபோதும் உள்ளளவில் நம்ப மாட்டீர்கள்**" என்று பதிலளித்தார்.

அடுத்த நாள், 1937, ஜனவரி 1 அன்று, பாபா மீண்டும், இணக்கமாக வாழ்வது பற்றி மேற்கத்திய அன்பர்களுக்கு உரை நிகழ்த்தினார்:

**ஒரு சத்குருவின் மீதான அன்பு, எவ்வளவுதான் ஆழமாக அல்லது பக்திபூர்வமாக இருந்தாலும், ஒரு நபரின் அசலான இயற்கை தன்மையை அது எவ்விதத்திலும் பாதிக்காது, ஏனெனில் மேலோட்டமான மாற்றங்கள் இருப்பது போலத் தோன்றினாலும், தனிப்பட்ட இயல்பு ஏழாவது ஆன்மீக தளத்தை எட்டுவது வரை மாறாமல் இருக்கும். ஏழாவது ஆன்மீக தளத்தில் தனிப்பட்ட மனம் என்பது இல்லை, எனவே தனிப்பட்ட இயல்பும் இல்லை. இந்த இயல்பு மிகவும் சக்தி வாய்ந்தது, அது, தொடர்ந்து தன்னை உறுதிப்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறது, மேலும் இயல்பாகவே ஒருவரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாக இருப்பதால், தூய்மையான அன்பின் வெளிப்பாட்டைக் கூட பெரும்பாலும் எரிச்சலூட்டும், குழப்பமான வடிவங்களை எடுப்பதன் மூலம் பாதிக்கிறது.**

**ஆகவே, சீடர்கள் என் மீது கொண்டுள்ள அன்பில் எந்தவித பாதகமும் ஏற்படாமல் இருக்க, பொறாமை, பெருமை, கோபம் போன்ற சில மனித இயல்புகளின் குறை நிறைந்த குணங்களை நான் கண்டுகொள்ளாமல் இருக்க வேண்டும். இல்லையெனில், இந்த குணங்கள் அன்பின் மீது ஆதிக்கத்தை நிலைநாட்டி, அதை எதிர்ப்பின் உணர்வாக மாற்றும் ஆபத்து எந்நேரமும் உள்ளது; இதனால் எனது வேலையில் இடையூறுகள் உருவாக வாய்ப்புள்ளது. உதாரணமாக, கெ. ஜெ. தஸ்தூர் மற்றும் ஹெர்பெர்ட் டேவி.**

நாசிக் நகரில் வாழ்ந்த காலகட்டத்தில் கிட்டத்தட்ட தினமும் மேற்கத்திய அன்பர்களிடையே வேறுபாடுகளும், சச்சரவுகளும் நிலவி வந்தன, ஆனால் இந்த முரண்பாட்டுத் தன்மையில் அதன் நோக்கமும் மூடிமறைந்திருந்தது; காலம் விளக்குவது போல்: "அவதார புருஷர் உலகத்தை சுத்திகரிக்க வருகிறார் - மனித மனம், இதயம் இரண்டையும்

அப்பழுக்கற்றதாக மாற்றுகிறார். பாபா, அவருடைய சீடர்கள் மூலமாக உலகை சுத்தம் செய்து, சொல்லப்போனால், குப்பைகளை ஒரே இடத்தில் ஒன்று சேர்த்து, அதை எளிதில் அப்புறப்படுத்துகிறார். அவரது 'துடைப்பம்' அவர்களின் ஆழ்மனதைத் தொட்டு அகந்தை எனும் தூசியை அகற்றுகிறது.

"அதனால்தான், இந்த நேரத்தில் மேலை நாட்டினரிடையே பலவீனங்கள் மிகவும் வெளிப்படையாகத் தோன்றி, சூடான வாதங்களுக்கு வழிவகுத்தன. இதுவே அனைவரின் குறைபாடுகளையும் வெளியே கொணரும் பாபாவின் பணி. அவர்களிடையே நிகழும் சண்டை சச்சரவுகள் இதயத்தின் அசுத்தத்தை வெளியே கொணரும் ஊடகமாகச் செயல்பட்டு, அனைவரின் குறைபாடுகளையும் தெளிவாக உணரச் செய்தன. ஒவ்வொரு நபரிடமும் பாறை போல படிந்திருந்த உள்ளார்ந்த பலவீனங்களை அகற்றும் ஆக்கபூர்வமான வழிமுறையாக, பாபா இந்தச் சண்டை சச்சரவுகளைப் பயன்படுத்தினார். இத்தகைய போராட்டங்களும் கருத்து வேறுபாடுகளும் மனதைத் தூய்மைப்படுத்துகின்றன; அதே வேளையில், உலகில் சாதாரணமாக நிகழும் சண்டை சச்சரவுகள் அதன் தன்மையில் முற்றிலும் மாறுபட்டவை, ஏனெனில், அவற்றின் அடிப்படை காரணம் சுயநலம் மற்றும் அகந்தை. ஆனால், குருநாதரின் சகவாசத்தில் வெளிப்படும் முரண்பாடுகள் அறியாமலேயே அன்பை சார்ந்து இருப்பதால், அவை விடுவிக்கப்படுவதோடு, அனைத்து அசுத்தங்களையும் வேரோடு அழிக்கின்றன."

ஒரு நாள், பாபா அவரது ஆய்வு நேரத்தில் மால்கம் ஸ்க்லோஸின் அறைக்கு வந்து '**அவர் எப்படி இருக்கிறார்?**' என வினவினார். "மிக மோசம்" என்று மால்கம் பதிலளித்தார். "நான் தற்பெருமை நிறைந்தவன். பயனற்ற விஷயங்களில் நான் பொறுமையிழந்து எரிச்சலடையக் கூடியவன். இந்த விஷயத்தில் நான் என்ன செய்ய முடியும்?"

பாபா அவ்வாறே அவரை உற்று நோக்கிய அந்தத் தருணம் ஆழ்ந்த சிந்தனை தோய்ந்த தருணம். மால்கம் பின்னர் அதை நினைவு கூர்ந்தார்: "பாபாவின் அந்தத் தோற்றத்தை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன். அவர் பேசியிருந்தால் இவ்வளவு தெளிவாகப் பேசியிருக்க முடியாது, 'சரி, இப்போது நாம் நமது பணியை முடிப்போம்!' என்ற தோற்றம்

பாபா அவரது எழுத்துப்பலகையில் இவ்வாறு எடுத்துரைத்தார், "**சில வழிகளில் நீங்கள் மிகவும் முன்னேறியுள்ளீர்கள், வேறு சில வழிகளில் மிகவும் குறைவு. தற்பெருமை உங்களின் ஒரு குறைபாடு**."

"என்னுடைய ஒரு குறைபாடு!" மால்கம் கூச்சலிடும் தொனியில், "எனது பொறுமையின்மை, என் எரிச்சல் இவையெல்லாம் என்னாவது?" என்று கேட்டார்.

"**அவை தற்பெருமையின் விளைவாகும். தற்பெருமை விலகும்போது, அவை தானாகவே அகன்று விடும்**."

"இதற்காக நான் என்ன செய்ய வேண்டும்?"

**“நீங்களாக அதை அகற்ற முடியாது, ஆனால் நான் அதை உங்களுக்காகச் செய்வேன். ஆயினும்கூட, நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். முழு வீச்சுடன் முயற்சி செய்ய வேண்டும்.”**

“நான் என்ன செய்ய வேண்டும்?”

**“சிறிய சிறிய விஷயங்கள் உங்களைக் குழப்பமும், கவலையும் அடைய இடம் தராதீர்கள்; அவற்றையெல்லாம் தாண்டி பெருந்தன்மை மற்றும் தாராள மனப்பான்மையுடன் இருங்கள்; எஞ்சியதை என்னிடம் விட்டுவிடுங்கள்; அதைப் பற்றி கவலைப்படாதீர்கள்; நான் அதைச் செய்வேன். என்னுடைய பணிக்காக நான் அதைச் செய்ய வேண்டும்.”**

இந்தியாவிற்கு வந்த மேற்கத்திய அன்பர்களில் கடைசியாக, ருவானோ போகிஸ்லாவ் (RUVANO BOGISLAV) 1937 ஜனவரி 2 அன்று கொழும்பு வழியாக ‘ஸ்ட்ராத்ஹேர்ட்’ (STRATHAIRD) கப்பலில் மும்பை வந்தடைந்தார். சாஞ்சி அவரை சந்தித்து, அதே நாளில் நாசிக் அழைத்து வந்தார். இப்போது ஆசிரமத்தில் மொத்தம் பதினைந்து மேலை நாட்டினர் ஒன்றாகத் தங்கியிருந்தனர்.

1937, ஜனவரி 5 அன்று மெஹர் பாபா, மேற்கத்தியர்களை ராஹூரிக்கு அழைத்துச் சென்றார். அனைவரும் அதிகாலை, சிற்றுண்டியை முடித்துவிட்டு ஆறு மணிக்குப் புறப்பட்டனர்.

ராஹூரியில் டாக்டர் கனி, விஷ்ணு, பெண்டு, பாதிரி, ராவ்ஸாஹேப், பைதூல், டாக்டர் நீலு ஆகிய மண்டலியை சந்தித்தனர். அவர்கள் ஆசிரமத்தில் சுற்றுப்பயணம் செய்து, மஸ்துகள் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களைப் பார்த்த பிறகு, பாபா தன்னலமற்ற சேவையைப் பற்றி விளக்கினார்:

**மனிதகுலத்திற்கு சேவையை வழங்குவது பிறருக்கு ஒரு படிப்பினையாக அமையும் என்ற நோக்கத்தில், நானே பிறருக்கு சேவை புரிகிறேன். மெஹராபாத் ஆசிரமத்தில்** (பள்ளிக்கூடத்தில்), **எனது பிராமண பக்தர்கள், தீண்டத்தகாதவர்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று நான் விரும்பினேன். அந்த நோக்கத்திற்காக, தீண்டத்தகாத சிறுவர்களுக்கு, நான் தனிப்பட்ட முறையில் சேவை செய்தேன், அவர்களை நீராட்டினேன், துணிமணிகளை சுத்தம் செய்தேன். எனது பிராமண பக்தர்களை எனக்கு உதவும்படி நான் கேட்டபோது, அவர்கள் என்னை நேசித்ததால் அவ்வாறே செய்தனர். உண்மையான சேவையில், ஒருவர் சேவையை வழங்கவோ அல்லது மறுக்கவோ முழு உரிமையைப் பெற்றுள்ளார் என்ற எண்ணம் இருக்கக்கூடாது. ஒருவர் அவருடைய உடலின் உரிமையாளர் அல்ல, அந்த உடல் குருநாதருக்கு உரியது என்பதை அவர் உணர வேண்டும்; எனவே ஒருவரின் உடல், குருநாதருக்கு சேவையை வழங்குவதற்காக மட்டுமே உள்ளது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.**

ராஹூரியிலிருந்து அவர்கள் மெஹராபாத்திற்குச் சென்றனர். பாபா அவர்களுக்கு, கீழ் மெஹராபாத்தில் அமைந்த ஆண்கள் குவாட்டர்ஸைக் (MEN’S

QUARTERS) காட்டிய பின்பு, மேற்கத்திய பெண்மணிகள், மெஹரா மற்றும் பிற பெண் மண்டலியைப் பார்க்க, மேல்மலைக்கு அழைத்துச் சென்றார் - நாஜா, மணி, கோர்ஷெத், ஸூனாமாசி, குல்மாய், வாலு, காக்குபாய், மெமோ, தவ்லத்மாய், ஃபிரீனிமாசி ஆகியோரை குடும்ப குடியிருப்பில் சந்தித்தனர்.

மேற்கத்திய அன்பர்களின் மெஹராபாத் வருகையின் போது, அவர்கள் போதுமானதாக உணவு உண்ணவில்லை என்று குறிப்பிட்டு, பாபா, "**நான் என்னுடைய வழக்கப்படியே உங்களுக்கு உணவை வழங்கப் போகிறேன். இது எனது பழைய பழக்கம், கடந்த நான்கு ஆண்டுகளாக நான் அதை நிறுத்திவிட்டேன். உணவு என்னிடம் கொண்டுவரப்படுகிறது, நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் தட்டுகளை எடுத்து வாருங்கள், நான் உங்களுக்கு உணவை வழங்குகிறேன். இயேசு இதைச் செய்தார்.**"

அவர்கள் நாசிக் திரும்பி வந்தபோது, பாபா அவர்களிடம் '**மெஹராபாத் எப்படி இருக்கிறது**' என்று கேட்டார். அனைவரும், 'மிகவும் நன்றாக இருக்கிறது' என்றனர். பாபா, ரானோவின் கருத்தைக் கேட்டபோது அவர், "இது மிகவும் அருமையானது, பாபா, ஆனால் எனக்கு இல்லை" என்று வெளிப்படையாகக் கூறவே, பாபா புன்னகைத்தார். தொலைதூர மலையில் ஒரு சில பெண்களுடன், தனிமை வாழ்க்கை வாழ வேண்டும் என்ற எண்ணம் ரானோவை ஈர்க்கவில்லை. விதியின் விளையாட்டைப் பாருங்கள், இந்தக் குழுவிலிருந்து அவர் ஒருவர் மட்டுமே வாழ்நாள் முழுவதும், அந்த மலையில் பாபாவுடன் வாழப் போகிறார் என்ற குறைந்தபட்ச யோசனை கூட ரானோவிற்கு அந்த நேரத்தில் இல்லை.

1937, ஜனவரி 8ஆம் நாளிலிருந்து, பாபா தினமும் இரண்டு டம்ளர் பால் மற்றும் தேநீர் மட்டுமே அருந்தி உபவாசம் மேற்கொள்ளத் தொடங்கினார்; மேலும் பிப்ரவரி 18, அவரது பிறந்தநாள் வரை, 40 நாட்கள் தொடர்ந்து இதைச் செய்யப் போவதாகத் தெரிவித்தார். ஜீன், டிலியா, மார்கரெட், கேரெட், நதீன், கிட்டி, ரானோ, டாம், எலிஸபெத், நான்னி, மால்கம், மேரி, வில், ருவானோ, நோரினா இவர்களில் ஒவ்வொருவரும் ஜனவரி 8ஆம் நாளிலிருந்தும், ஜனவரி 24 முதல், மெஹராபாத்தில் ஆண் மற்றும் பெண் மண்டலி ஒரு குழுவாக, பாபாவுடன் மாறி மாறி உபவாசம் இருக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

ஜனவரி 9 அன்று பாபா நாசிக் சென்று, நான்கு நாட்கள் தங்கியிருந்தார். 11ஆம் நாள் காலையில், அவர் ஐந்து மைல் தொலைவில் அமைந்த 'பாண்டு லேனா குகை'களுக்குக் (PANDU LENA CAVES) குழுவை அழைத்துச் சென்றார். பதினைந்து மேற்கத்தியர்களைத் தவிர, பாபாவுடன் மேலும் நான்கு பேர் இருந்தனர். பாபா, அவரது தலை மற்றும் நெற்றியைச் சுற்றி மதுசிவப்பு நிறத்தில் போர்வை ஒன்றை கட்டியிருந்தார். ஃபிரினி, பாபாவிற்கு ஒரு ரோஜா மாலையை அணிவித்தார்.

பாண்டு லேனாவில் அமைந்த 22 குகைகளில், பாபா அவர்களை ஒவ்வொரு குகைக்கும் அழைத்துச் சென்றார்; சிலவற்றில் அவர் அங்கே தங்கியிருந்த ரிஷிகள், முனிவர்கள் மற்றும் யோகிகள் குறித்து சில கருத்துக்களை வழங்கினார். பாபா குறிப்பாக, குகை எண் எட்டை விரும்பி, அதில் நோரினா, டிலியா, எலிஸபெத் ஆகியோருடன் அமர்ந்து, "**நான் இங்கு வந்து என் உலகளாவிய பணிக்காக சிறிது நேரம் தங்கலாம்**" என்று கூறினார்.

மெஹர் பாபா, அப்போது கிருஷ்ணர் மற்றும் பாண்டவர் சகோதரர்களின் கதையை விவரித்தார்; தொடர்ந்து குகைகளின் கீழே அவர்களை அழைத்து வந்தார். காலையில் குகைகளுக்குச் செல்லும் பாதையில், பாபா மெதுவாக நடந்தவர்களுடன் இணைந்திருந்தார். இப்போது, கீழே வரும் வேளையில், அவர் அனைவரையும் வழிநடத்திச் சென்றார்; காரில் நுழைவதற்கு முன்னர், அனைவரும் பாதுகாப்பாகக் கீழே இறங்கும் வரை பாபா காத்திருந்தார்.

ரிட்ரீட்டிற்குத் திரும்பி வந்ததும், பாபா மேற்கத்திய அன்பர்களை அழைத்து, பயணத்தைப் பற்றி மேலும் எடுத்துரைத்தார்: "**நான் மலையில் விறுவிறுப்பாக ஏறுவதை நீங்கள் அறிவீர்கள்; என்னை இத்தாலிய மலையில் பார்த்தீர்கள். ஒருமுறை சீனாவில், ஹெர்பெர்ட், ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஏறி, யார் முதலில் அங்குச் சென்றடைவார் என்று சவால் விடுத்தார். நானும் அவ்வாறே செய்து, வெற்றி பெற்றேன். ஆனாலும் இன்று நான் மெதுவாக மலைமேல் ஏறியதை நீங்கள் கவனித்தீர்கள்; விரைவாக ஏற முடியாத பிறருடன் இருந்து அவர்களையும் வேகமாக அழைத்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களுடன் இருந்தேன். இதை அறியாத பிற நபர்கள், பாபா மெதுவாக மலையில் ஏறுபவர் என்று நினைக்கலாம். நான் முதலில் இருந்தாலும், ஆன்மீக ரீதியில் முன்னேறாதவர்களுக்கு ஓர் உதவிக்கரம் வழங்கும் நோக்கத்தில் பின்வாங்கினேன். இப்படித்தான் எனது மனித வடிவத்தில் நான் அடிக்கடி தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறேன்.**

"**மலையில் ஏறுவது உங்களுக்குக் கடினமாக இருந்ததா? ஏனெனில் அடுத்த முறை குகைகளை விட அதிக உயரத்தில் அமைந்த கோயில்களுக்கு நாம் செல்ல வேண்டும்.**"

வேறொரு தருணத்தில், மெஹர் பாபா மேற்கத்திய அன்பர்களை, கோயில்களுக்கு அழைத்துச் சென்றார். அந்தப் பயணத்தில், பாபா ஒரு கோவிலைச் சுட்டிக்காட்டி, "**உண்மையான புனிதத்தன்மை, செங்கல் மற்றும் கற்களால் எழுப்பப்பட்ட உயிரற்ற சுவர்களில் இல்லை, அல்லது புனித நதிகளின் நீரோட்டத்திலும் இல்லை; ஆனால் பக்தி, அன்பு, வழிபாடு எனும் நெருப்பின் சக்தியால், இந்த சுற்றுப்புற சூழல்களைப் புனிதப்படுத்தும் இங்கு வாழும் மக்கள், மற்றும் இக்கால குருநாதர்களின் அருளால் விளைந்த ஆன்மீக சக்திகளிலும்தான் நிரம்பி உள்ளது.**"

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் குழு மெஹராபாத்திற்கு வருகை தர வேண்டும் என்று பாபா விரும்பினார். 1937 ஜனவரி 11 அன்று நாசிக் நகரில்

அவர் மேற்கத்திய பெண்மணிகளிடம் கேட்டார், **"நீங்கள் அனைவரும் வாரத்தில் ஒரு நாள் மெஹராபாத்திற்கு வருவது சிரமமாக இருக்குமா என்பதை, நேர்மையாக என்னிடம் சொல்வதை விரும்புகிறேன். அதிகாலை 5:00 மணிக்கு இங்கிருந்து புறப்படுவது உங்களுக்கு சௌகரியமாக இருக்குமா?"** என்றதும், அனைவரும் ஒருமனதாக ஒப்புக்கொண்டனர்.

13ஆம் நாள், ஜீனின் கால்களில் கொதிக்கும் நீர் கொட்டி, கடுமையான காயம் ஏற்பட்டது. இரண்டு நாட்களுக்குப் பிறகு 15ஆம் நாள், பிற அனைவரும் மெஹராபாத் சென்றபோது ஜீன், மால்கம் இருவரும் நாசிக்கில் இருந்தனர். இந்தக் குழு அதிகாலை ஐந்து மணிக்குப் புறப்பட்டு, எட்டு மணியளவில் ராஹுரி வந்தடைந்து, பத்து மணிக்கு, பாபாவுடன் மெஹராபாத் சென்று, மாலை நான்கு வரை தங்கியிருந்தனர். இந்திய கோபிகைகளும் மேற்கத்திய அன்பர்களும் தங்கள் இறைவனை சூழ்ந்திருந்த நிகழ்வுகள் மெஹராபாத் வரலாற்றில் மிகவும் மகிழ்ச்சியான காலங்கள்.

நாசிக் நகரில் ஜீன் மிகுந்த மனச்சோர்வுடன் காணப்பட்டார். ஜனவரி 18 அன்று, மெஹர் பாபா அவரைத் தனிப்பட்ட முறையில் பார்க்க வந்தார். காலில் காயம் வலிமிகுந்ததாக இருந்தாலும், அதன் விளைவுகள் பலனளிக்கும் என்று பாபா உறுதியளித்தார்.

ஜீனுக்குத் தெரியாமல் பாபா, மால்கமுடன் ஒரு தனிப்பட்ட சந்திப்பை நிகழ்த்தி, **"ஜீன் உயிரைத் துறந்துவிடுவார் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டும். நான் உங்களிடம் சொன்னதை, ஜீனையும் சேர்த்து, யாரிடமும் சொல்ல வேண்டாம். நீங்கள் இதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்"** என்று கூறினார். மால்கம் அதை அமைதியாக எடுத்துக்கொண்டு, பாபா இதைக் கூறியதற்கு நன்றி தெரிவித்தார். எதுவாயினும், சில நாட்களுக்குப் பின்னர், **'உயிரைத் துறப்பதற்கு பதிலாக, ஜீன் உடல்நலம் குன்றி முழுமையாக நொறுங்கிப் போவார்'** என்று பாபா அவருக்கு அறிவித்தார்.

இந்தக் காலகட்டத்தில், பாபா பின்வரும் வார அட்டவணையை கண்காணிக்கத் தொடங்கினார்:

திங்கள்: காலை 8:00 மணி - ராஹுரியிலிருந்து நாசிக் வருகை.

செவ்வாய்: காலை 10:00 மணி - நாசிக்கிலிருந்து ராஹுரி வருகை.

புதன்: காலை 8:00 மணி - ராஹுரியிலிருந்து மெஹராபாத், மறுபடியும் திரும்பி ராஹுரிக்கு வருகை.

வியாழன்: ராஹுரியில் நாள் முழுவதும்.

வெள்ளி: மேற்கத்திய அன்பர்களுடன் மெஹராபாத்திற்குச் சென்று, ராஹுரிக்குத் திரும்பி வருகை.

சனி: ராஹுரி.

ஞாயிறு: மேற்கத்திய ஆண்கள் பாபாவுடன் இருக்க ராஹுரி வருகை.

சில நாட்களில் மெஹர் பாபா மேற்கத்திய அன்பர்கள் விழித்தெழும் முன்னர் அதிகாலையில் நாசிக் ரிட்ரீட் (NASIK RETREAT) வருவதுண்டு; வழக்கமாக ஆதி சீனியர் அல்லது ஸரோஷ் பாபாவைக் காரில் அழைத்து வந்தார். "பாபா வந்து விட்டார்! பாபா வந்து விட்டார்!" என்று எங்கிருந்தோ ஒரு குரல் முழங்கும். எல்லோரும் படுக்கையிலிருந்து எழுந்து, ஆடைகளை மாற்றி, பாபா ஸர்ஸாத் (SARZAT) கட்டிடத்திற்கு வரும் வரை காத்திருந்தனர். ஒவ்வொருவருக்கும் வாழ்த்துத் தெரிவித்து, பாபா அவரது அறைக்குச் சென்று, பின்பு சாப்பாட்டு அறையில் காலை உணவுக்காக அவர்களுடன் இணைவது வழக்கம். அனைவரும் ஒரு பெரிய மேசையில் ஒன்றாக அமர்ந்து சிற்றுண்டி உண்டனர்; உணவை தலைப்பாகை கட்டிய பட்லர் ஒருவர் வழங்கினார், ஆனால் சில சமயங்களில் பாபா, உணவை அவரது கைகளால் அனைவருக்கும் வழங்கினார்.

பின்னர், அனைவரும் பிரதான அறையில் பாபாவைச் சுற்றி அமர்ந்து, இரவில் கண்ட கனவுகளை விளக்கிச் சொல்வதை வழக்கமாகக் கொண்டனர். ஒரு நாள் காலையில் நோரினா, அவரது ஜன்னலுக்கு வெளியே பாபாவைக் கண்டு விழித்தார். "**உங்கள் கனவைக் கூறுங்கள்**" என்று பாபா கேட்க, நோரினா தயக்கத்துடன், வெட்கத்தில் தலை குனிந்தார். ஏனெனில் இது ஒரு தெளிவான பாலியல் கனவு. கடைசியில், நோரினா அதை விளக்கினார். அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம் என்று பாபா எடுத்துக் கூறி, "**ஆறாவது ஆன்மீக தளத்தில் கூட ஒருவருக்குக் காமம் இருக்கிறது**" என்று குறிப்பிட்டார்.

சில தருணங்களில், பாபா ஒவ்வொரு நபருடனும் தனிப்பட்ட முறையில் பதினைந்து நிமிட நேர்காணலை நடத்தினார். இதர நேரங்களில், பாபா ஒருவரின் கேள்விகளுக்கு விடை அளிக்கும் விதத்தில் ஒரு சொற்பொழிவு அல்லது விரிவுரையை வழங்கினார். சில நேரங்களில் அவர்களிடையே எழும் மோதல்களைத் தீர்த்து வைப்பதும் அல்லது அவற்றை உருவாக்குவதும் வழக்கம்.

பிற்பகல் ஓய்விற்குப் பிறகு, பாபா பிரதான வராந்தாவில் பிங்-பாங் (PING-PONG) விளையாடினார். ஒரு முறை பாபா பிரதான அறையில் படுக்கையில் சாய்ந்து அவரது ஆன்மீக உட்பணியில் தீவிரமாக ஈடுபட்டார். அதைத் தொடர்ந்து, பாபா மெதுவாக எழுந்து பிங்-பாங் விளையாடச் சென்று, குழுவில் ஒருவருடன் விளையாடத் தொடங்கினார்; இது அவரது அதி உச்ச உணர்வு நிலையிலிருந்து சாதாரண உணர்வு நிலைக்கு விரைவில் திரும்பி வர வழி வகுக்கும்.

வழக்கமாக இரவு உணவிற்குப் பிறகு, பாபா தோட்டத்தில் குழுவுடன் அமர்ந்து சொற்பொழிவுகளை வழங்குவது வழக்கம், அல்லது ஒன்பது மணிக்கு ஓய்வெடுக்கும் முன்பு சிறிது தூரம் நடக்கச் சென்றார். பாபா இரவில் நாசிக்கில் தங்கியிருந்த போதெல்லாம், காலையில், ஒரு கவச நாற்காலியில் அமர்ந்திருந்த வேளையில், டிலியா, மார்கரெட் இருவரும் சில சமயங்களில் தலைமுடியை சுத்தம் செய்தனர். மார்கரெட் க்ராஸ்க் ஒருமுறை இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

நாசிக்கில் வாழ்ந்து வந்த ஒரு சில சீடர்கள், தங்கள் கனவுகள் சிறப்பு ஆன்மீக முன்னேற்றத்தைக் குறிக்கின்றன என்ற வலுவான நம்பிக்கையைக் கொண்டிருந்தனர்; மேலும் அவற்றைப் பிறருக்கு விவரிக்க மிகவும் ஆர்வமாக இருந்தனர். இந்தக் கனவுகளைக் கேட்டு, அவற்றைப் பற்றி விவாதிக்க, பாபா அன்புடன் ஒப்புக் கொண்டு, ஒவ்வொரு நாள் காலையிலும் 5:30 மணிக்கு, அவரது அறையில் அனைவரையும் சந்திக்க ஏற்பாடு செய்தார்.

நாங்கள் நினைவில் கொள்ளும் அளவிற்கு எந்தவிதமான கனவுகளும் இல்லை என்று ஒப்புக்கொண்ட டிலியாவும் நானும், விவாதத்திற்குள் நுழைவதற்கு பதிலாக, பாபாவின் தலைமுடியை சுத்தம் செய்து, அவரது உச்சந்தலையில் மஸாஜ் (MASSAGE) செய்ய வேண்டும் என்று கூறப்பட்டது. எங்களுக்கு இது அருமையான தருணம். பாபாவின் அழகிய தலைமுடியை சீர் செய்யும் ஆர்வத்துடன், அவரது தலையை மஸாஜ் செய்வதோடு ஒப்பிடும்போது கனவுகளுக்கு என்ன முக்கியத்துவம் இருக்க முடியும்? அவரது தலை வடிவம் அற்புதமானது. இப்போது கூட எனது கைகளால் அதன் அமைப்பை நினைவில் கொள்ள முடியும்.

ஜனவரி மாத நடுவில், நாசிக்கில் தங்கியிருந்த ஒவ்வொரு மேற்கத்திய அன்பர்களுக்கும், மெஹர் பாபா தத்தமது கடமைகளை வரையறுத்துக் காட்டினார். அனைவரும் காலை 6:30 மணிக்கு எழுந்து, ஒரு மணி நேரம் தியானத்தில் அமர்ந்து, பின்னர் ஒரு மணி நேரம் ராம்ஜூவிடம் உருது மொழியைக் கற்க வேண்டும். யார் ஒருவரும், நான்னி அல்லது ருவானோ போன்ற வயதில் பெரியவர்கள் கூட, மதிய வேளையில் ஓய்வெடுக்க அனுமதிக்கப்படவில்லை. அவர்களின் தனிப்பட்ட கடமைகள் பின்வருமாறு:

டிலியா: நாடகம் மற்றும் கலை கற்பித்தல் - மார்கரெட்டுடன் ஒரு மணி நேரம் நடனம்; இரண்டு மணி நேரம் தோட்டக்கலை.

எலிஸபெத்: ஆசிரம கணக்குகளில் நோரினாவிற்கு உதவுதல்; குழுவின் உறுப்பினர்களை, தேவைக்கேற்ப பஜார் அல்லது வேறு இடங்களுக்கு (ராஹூரி அல்லது மெஹராபாத்) காரில் ஓட்டிச் செல்வது; நாய்கள், கானூட், கிப்பி ஆகியவற்றை கவனித்துக்கொள்வது.

கேரெட்: பாபா வழங்கிய கருத்துகளிலிருந்து மூன்று மணி நேரம் விரிவாக்கம் செய்து எழுதுதல் (பத்திரிகைக்கு).

ஜீன்: பத்திரிகை தொடர்பான பணிகளில் கேரெட், மால்கம் இருவருக்கும் செயலாளராகப் பணிபுரிதல்; இரண்டு மணி நேரம் ஆன்மீக கவிதை மற்றும் உரைநடை எழுதுதல்; ஒரு மணி நேரம் கைத்தறி நெசவு.

கிட்டி: ருஸ்தத்தின் மகள் மெஹருவிற்கு ஒரு மணி நேரம் பியானோ கற்பித்தல்; திரைப்படத்திற்கான நடனங்களுக்கு இசை அமைப்பதில் மார்கரெட்டுடன் இரண்டு மணி நேரம் பணியாற்றுவது; பாபாவின் வேலையைத் தட்டச்சில் பதிவு செய்யும் ஒரு மணி நேரம்; பாபா நாசிக்

வரும்போது அவருக்குக் காட்ட வேண்டிய தினசரி நாட்குறிப்பையும் எழுதவேண்டும்.

மால்கம்: மூன்று மணிநேர விரிவுரைகளைத் தயார் செய்து, பாபாவின் விருப்பத்திற்கிணங்க உரை வழங்குவது.

மார்கரெட்: ரானோ, டிலியா இருவருக்கும் ஒரு மணி நேரம் நடனம் கற்பித்தல்; திரைப்பட திட்டத்திற்காக இரண்டு மணிநேர நடன பயிற்சிகள்; நேரம் கிடைக்கும் போதெல்லாம் தோட்டக்கலையில் டிலியாவிற்கு உதவுதல்.

மேரி: ஆதரவற்றவர்களுக்கு நெசவு, நூற்பு, துணி தைத்தல்; மேலும், ஓவியம் மற்றும் வடிவமைத்தல்.

நதீன்: பாபாவின் வாழ்க்கையையும் செய்திகளையும் ரஷ்ய மொழியில் மொழிபெயர்ப்பது; நோரினா, ருவானோ, மேரி ஆகியோருக்கு, தேவைக்கேற்ப உதவுதல்.

நான்னி: பாபாவின் சொற்பொழிவுகள் மற்றும் விளக்கங்களுக்கு கிட்டியின் சுருக்கெழுத்து குறிப்புகளிலிருந்து தட்டச்சில் மொழிபெயர்ப்பது; பாபாவின் அறிவுறுத்தலின் படி ஒரு மணிநேரம் எழுதுவது; அவர் விரும்பும் போது பிறருக்கு உதவுவது.

நோரினா: மேற்கத்திய குழுவின் வீட்டு விவகாரங்களில் மேற்பார்வை; அறக்கட்டளையின் நாசிக் கணக்குகளைப் பராமரிப்பது.

ரானோ: பாபாவின் அறிவுறுத்தலின் படி ஆன்மீக கருப்பொருட்களை வரைந்து ஓவியம் தீட்டுவது; மார்கரெட்டுடன் ஒரு மணிநேர நடனம்.

ருவானோ: பஜார் சம்பந்தப்பட்ட அனைத்தையும் (பொருட்கள் வாங்க) மேற்பார்வையிடுவது, உணவு தயார் செய்தல் பரிமாறுதல் மற்றும் நோரினாவின் கீழ், முழு குழுவிற்கும் சலவை செய்தல்; மார்ஸெல்லஸில் இருந்து கொண்டுவரப்பட்ட பறவைகளை கவனித்துக்கொள்வது (இது மெஹராபாத்திலிருந்து கொண்டு வரப்பட்டு அவரது பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்டது).

டாம்: எப்பொழுது, எங்கு வேண்டுமானாலும் கைவேலைக்கான உழைப்பில் அனைவருக்கும் உதவுதல்.

வில்: ஐரோப்பிய அன்பர்கள் மற்றும் இந்திய நண்பர்கள் அனைவருடனும் நேரடித் தொடர்பில் இருப்பதற்காக, கடிதப் பரிமாற்றத்தில் மூன்று மணிநேரம் கலந்து கொள்வது.

மெஹர் பாபாவின் அறிவுறுத்தல்படி, கேரெட் ஃபோர்ட், மால்கம் ஸ்க்லோஸ் இருவரும் தொடங்கவிருந்த பத்திரிகைக்கு 'அவதார்' (AVATAR) என்று பெயரிடப்பட்டது. அதைப் பற்றி, பாபா குறிப்பிடுகையில், **"பத்திரிகை தொடங்கிய பின்னர் அது தொடர வேண்டும், நிறுத்தப்படக்கூடாது; அது மிகவும் சிறப்பாக இருக்க வேண்டும். கேரெட், மால்கம் இருவரும் இணைந்து**

**செயல்பட்டு, ஐந்து ஆண்டுகளுக்குத் தொடர்ந்து வெளியிடப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**"

பாபா, வாரம் ஒரு முறை நாசிக் வரும் வேளையில், மார்கரெட்டிடம் அவர் இயக்கிய நடனங்களை, பாபாவின் முன்னிலையில் ஒத்திகை பார்க்குமாறு கேட்டுக்கொண்டார். மார்கரெட் பின்னர் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், பாபா, எப்பொழுதும் பிழைகளைச் சுட்டிக்காட்டி, திருத்தங்களைப் பரிந்துரைத்தார்: "கலையைப் பொறுத்தவரை ஒரு பரிபூரண கலைஞானிக்கு மட்டுமே அதன் உள் நுணுக்கங்கள் தெரியும்; இவை அனைத்தும் பாபாவின் பரிபூரண தன்மையைக் காட்டுகிறது."

ரானோ, பாபாவின் அறிவுறுத்தல்படி ஓவியம் வரைவதிலும் தன்னை ஈடுபடுத்தினார், மேலும் அவர் தனது பணியைக் கண்காணிப்பதில் மிகவும் குறிப்பாக இருந்தார். பத்து வட்டங்களை (TEN CIRCLES) ஓவியமாக மாற்றி அமைக்கும் பல நுணுக்கமான கருத்துகளையும், புள்ளிவிவரங்களையும் அவருக்குக் கொடுக்க, ரானோ ஓவியங்களை உருவாக்கி, பாபாவின் ஒப்புதலுக்காக அவற்றைக் காண்பித்தார். இந்தத் தருணத்தில், ரானோவிற்கு அற்புதமான அனுபவம் ஒன்று கிடைத்தது. அவர் ஒரு நாள் காலையில் எழுந்தபோது, திகைப்பூட்டும் ஒளியில் பாபாவின் முகத்தைப் பார்த்தார்! அடுத்த நாள் ரானோ பாபாவுடன் தனியாக இருந்தபோது, பாபா அவர் பக்கம் திரும்பி, "**நேற்று இரவு என்ன கனவு கண்டீர்கள்?**" என்றதும், ரானோ அவர் பார்த்ததை விவரித்தார்.

நாசிக் வந்தபோது ரானோ 'லக்கி ஸ்ட்ரைக்' (LUCKY STRIKE) மற்றும் 'செஸ்டர்ஃபீல்ட்' (CHESTERFIELD) சிகரெட்டுகளைப் புகைத்து வந்தார்; ஆனால் பாபாவின் முன்னிலையில் ஒருபோதும் புகைப்பிடிக்காமல் கவனமாக இருந்தார். ஒரு நாள் பாபா அங்கு வந்த வேளையில், ரானோ சிகரெட்டை ஏறக்குறைய முடிக்கும் நிலையில் இருந்தவர் அதை விரைவாக அணைத்து வெளியே வைத்து, "பாபா, இது என்னுடைய கடைசி சிகரெட்" என்றார். பாபா மிகவும் மகிழ்ச்சியடைந்து அன்புடன் அரவணைத்தார். பாபா, இதைப்பற்றி எதுவும் கூறாதபோதும், புகைப்பிடிப்பதை நிறுத்தும் எண்ணம் அவருக்கு எப்படி வந்தது என்பதை எண்ணி ஆச்சரியமடைந்தார். (மண்டலியில் பாதிரி, ஆதி சீனியர், பெண்டு ஆகியோர் புகைப்பிடிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர்).

அடுத்த நாள், கேரெட், ரானோவிற்கு, சில செஸ்டர்ஃபீல்டு சிகரெட்டுகளை வழங்கினார். ரானோ கூச்சலிட்டு, "புகைப்பிடிப்பதைக் கைவிடுவதாக நான் பாபாவிடம் வாக்குறுதி அளித்துள்ளேன். இதைக்கூட என்னால் செய்ய முடியாவிடில் நான் எப்படிப்பட்ட சீடராக இருப்பேன்? ஒரு நாள் முன்னதாக நீங்கள் இங்கு வந்திருக்க வேண்டும்!" ரானோவிற்கு, அதைத் தொடர்ந்து, புகைப்பிடிக்கும் எண்ணம் வந்ததே இல்லை என்று கூறினார்.

பாபா ஒவ்வொரு நபரிடமும், காலை தியானத்தைப் பற்றி கேட்டு, அதைத் தீவிரமாக எடுத்துக் கொள்ள ஊக்குவித்தார். 1937, ஜனவரி 17 அன்று பாபா, "**நீங்கள் எப்பொழுதும் களிப்புடன், இதயத்தில் பாரம் இல்லாமல்,**

**நகைச்சுவை உணர்வோடு இருக்க வேண்டும் என்றும், அதே வேளையில், குறிப்பாக, தியானத்தில் நீங்கள் தீவிரமாக இருப்பதையும் நான் விரும்புகிறேன். உலக விஷயங்களிலிருந்து மனதின் கவனத்தைத் திருப்பி, ஆன்மீகத்தை நோக்கி அதை வழிநடத்த இன்றியமையாத இரண்டு அம்சங்கள் - ஒன்று நிலையான பிரார்த்தனை, மற்றொன்று தன்னலமற்ற சேவை.**"

ஒவ்வொரு நபரும் காலையில் எழுந்ததும் தத்தமது அறையில் தனியாக, தியானத்தில் அமர வேண்டும். ஒருமுறை பாபா, ரானோ தியானிக்கும்போது அறைக்குள் வந்து, அவர் தூங்கி விழுவதைக் கண்டு, அவருடைய புகைப்படத்தை முன்னால் வைத்து அதில் கவனம் செலுத்துமாறு ரானோவிற்கு அறிவுறுத்தினார். தியான நேரத்தில், சுற்றுப்புறம், முற்றிலும் அமைதியாக இருக்க வேண்டும் என்று பாபா எடுத்துரைத்தார். "**வெளிப்புற நிசப்தம் உள் மனத்திற்கு உதவுகிறது, மேலும் ஆழ் மனதில் மட்டுமே பாபாவைக் காண முடியும்**" என்று கூறினார்.

பாபா, தியானம் தொடர்பாக ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட அறிவுறுத்தல்களை வழங்கினார். தியானத்தின் போது தான் பார்த்த அல்லது கேட்ட எதையும் அவரைத் தவிர வேறு எவரிடமும் சொல்ல வேண்டாம் என்று பாபா, மால்கமை வழிநடத்தினார். தியானத்தில் ஈடுபடும் போது, தான் பார்த்த அல்லது கேட்ட எதையும் எழுதிக்கொள்ள, தற்காலிகமாகத் தனது தியானத்தைத் தடுத்து நிறுத்தலாமா என்று மால்கம் கேட்டதற்கு, "**இல்லை**," என்று பாபா பதிலளித்தார், "**நீங்கள் இந்த வழியில் பார்த்ததை, கேட்டதை ஒருபோதும் மறக்க மாட்டீர்கள். நீங்கள் என்ன செய்கிறீர்கள், எங்குச் செல்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் ஒரு பாறை போல் இருப்பீர்கள் - நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும்.**"

ஜனவரி 18 அன்று, கேரெட் 'அவதார்' (AVATAR) பத்திரிகைக்கு தனது அறிமுக தலையங்கத்துடன் பாபாவை சந்தித்தார். பாபா அதை மிகவும் விரும்பி, இரண்டு முறை படித்தார், மேலும் 'அவர் எழுதியிருந்த பாணி மட்டுமல்ல, படிப்படியாக, கேரெட், பாபாவின் பெயரையும் ஆன்மீக நிலையையும் அறிமுகப்படுத்திய விதத்தையும் அவர் விரும்பினார்' என்று கருத்துத் தெரிவித்தார்.

அந்த நாள், பாபா குழுவிடம், "**நீங்கள் ஏற்கனவே நேசிப்பவர்களை நேசிப்பது உங்களுக்கு மிகவும் எளிதான ஒன்று, ஆனால் நீங்கள் வெறுப்பவர்களை நேசிப்பது என்பது வித்தியாசமான ஒன்று! நேசிப்பது என்பது கருணை காட்டுவது என்று அர்த்தமாகாது. நீங்கள் விரும்பாதவர்களை நேசிக்க முடியுமா? அது நடக்கும்.**"

அப்போது பேச்சின் தலைப்பு, தூக்கத்தை நோக்கித் திரும்பியது, எலிஸபெத், பாபாவிடம், "நாம் தூங்கும் போது எங்கே போகிறோம்?" என வினவினார்.

**"எல்லா இடங்களிலும்!"** பாபா பதிலளித்தார். **"நீங்கள் எப்பொழுதும் எல்லா இடங்களிலும் இருக்கிறீர்கள். இப்போது கூட, முழு உணர்வுடன் இருந்தாலும், நீங்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் உணரவில்லை, ஏனெனில் மனம் எப்பொழுதும் அதன் அடையாளத்தை இழக்கும் இயல்பான போக்கைக் கொண்டுள்ளது. இதைப் புரிந்து கொண்டீர்களா?"**

எலிஸபெத் கேட்டார், "அப்படியானால் நம்மை தூக்கத்திலிருந்து விழிக்கச் செய்வது எது?"

**"மனப்படிவங்கள் - அவை உங்களை முள் போலக் குத்தி, தேள் போலக் கொட்டி எழுப்பி, கதறும், 'எழுந்திருங்கள், எழுந்து எங்களைச் செலவிடுங்கள்!' மனம் எப்பொழுதும் ஏதாவது வினை புரிய விரும்புவதால், தூக்கத்தில் நீங்கள் எப்பொழுதும் 'திரும்பிச் சென்று, ஓய்வெடுத்து', எழுந்ததும் புத்துணர்வு பெறுகிறீர்கள். ஆனால் மீண்டும் விழித்த பின்பு, மனம் அதன் அடையாளத்தை இழக்க விரும்புகிறது."**

"கனவுகள் என்றால் என்ன?" எலிஸபெத் தொடர்ந்து கேட்டார்.

**"கனவுகள் என்பது உங்கள் கடந்த கால பௌதீக உலகின் அனுபவத்துடன் எப்பொழுதும் இணைந்திருக்கும் ஆழ்மன அனுபவங்கள். சில நேரங்களில், உங்கள் கனவுகளில், இந்த வாழ்க்கையில் நீங்கள் பார்த்திராத நபர்களை பார்க்கிறீர்கள். இந்த இணைப்பு கடந்த காலத்திலிருந்து வந்தது. இவை அனைத்தும் மாயை மற்றும் கற்பனையை அடிப்படையாகக் கொண்டவை."**

எலிஸபெத், "அப்படியானால், நான் பன்னிரண்டு வயதில் உங்களை மூன்று வெவ்வேறு தருணங்களில் கனவில் கண்டேன்; நான் உங்களை முதன்முதலில் சந்தித்தபோது கனவில் நான் அறிந்தவராக அடையாளம் கண்டுகொண்டேன்; அது மாயையோ, கற்பனையோ அல்ல!" என்றார்.

**"நான் சொல்வது என்னவெனில், நீங்கள் எல்லையற்றவராக இருப்பதைத் தவிர எல்லாமே மாயை. நான் மிகவும் பழமையானவன். மிக மிக வயதானவன், இருப்பினும் எப்பொழுதும் இளமையாக இருப்பவன்"** என்று பாபா பதிலளித்தார்.

அப்போது நோரினா, "கற்பனை என்றால் என்ன?" என வினவினார்.

**"கற்பனை என்பது நீங்கள் என்னவாக இருக்க விரும்புகிறீர்களோ அது, ஆனால் நீங்கள் அப்படி இல்லை!"**

ஒரு கட்டத்தில், பாபா சத்குரு கபீரின் சில ஈரடிக் கவிதைகளை மொழிபெயர்த்தார்:

**"ஒருவர் முழு வேகத்தில் ஓட்டத்தைத் தொடங்க முடியாது; அவர் உந்து விசையை ஒன்று திரட்டி, படிப்படியாக வேகத்தை அதிகரிக்க வேண்டும்."**

**"ஒருவர் ஆன்மீக வண்ணத்துடன் கறைபடிய வேண்டுமாயின், அந்தக் கறை, சீராகப் படிந்திருக்க வேண்டும். வண்ணம் ஆழமாகவும்**

**நேர்த்தியாகவும் ஊடுருவ நேரம் பிடிக்கும் - அது சிறிது சிறிதாகப் படிய வேண்டும்.**"

"**காலங்காலமாக அறியாமையின் தூக்கத்தைத் தூங்கிக் கொண்டிருக்கும் மனம், படிப்படியாகத்தான் இறை அறிவிற்கு விழித்துக் கொள்ள முடியும்.**"

1937, ஜனவரி தொடக்கத்தில், மெஹர் பாபா 40 நாள் உபவாசத்தைத் தொடங்கினார். ஜனவரி 22ஆம் நாளுக்குள், அவர் தனது அட்டவணையில் சில மாற்றங்களைச் செய்தார். இப்போது அவர் உணவாக, திரவ ஆகாரங்களை, தினமும் காலை பத்திலிருந்து மதியம் இரண்டு மணிக்கு இடையே எடுத்து வந்தார். இதர நேரங்களில் தண்ணீர்கூட அருந்தாமல் கடுமையான உபவாசத்தைக் கடைப்பிடித்தார். மேற்கத்திய குழுவின் உறுப்பினர்களில் ஒருவர் ஒவ்வொரு நாளும் அவருடன் ஒரே மாதிரியான உபவாசத்தை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார், அவர்களும் ஒருவர் பின் ஒருவராக, பின்வரும் அட்டவணையைக் கடைப்பிடிக்கத் தொடங்கினர்:

காலை 10 மணி - மதிய உணவு
மதியம் 12 மணி- ஆரஞ்சு பழரசம்
மதியம் 1 மணி - தேநீர், சிற்றுண்டி மற்றும் தேன்
மதியம் 2 மணி - தண்ணீர்.

ஆதி சீனியர், சாஞ்சி இருவரும் மேற்கத்திய அன்பர்களை, அவர்களின் மூன்றாவது பயணமாக, ஜனவரி 23ஆம் நாள் அதிகாலையில் மெஹராபாத்திற்கு அழைத்துச் சென்றனர். பாபா அவர்களை எதிர்நோக்கிக் காத்திருந்தார். இந்த வருகையின் போது, பாபா அவர்களிடம், "**தூய்மையான அன்பு அனைத்திற்கும் ஆரம்பமும் முடிவும் ஆகும். இறை அன்பிற்கான ஆசை ஒன்று மட்டுமே இருக்கும்போது, அது முழு மகிமையில் வெளிப்படுகிறது - ஏனெனில் தெய்வீக அன்பிற்குரியவரிடம் மட்டுமே அன்பு அளவிறுதியற்ற தன்மையில், தூய்மையானதாக இருக்கும். அன்பரும், அன்பிற்குரியவரும் ஒன்றாகும் தருணம்தான் முடிவும் ஆரம்பமும்.**"

இந்தக் குழு மூன்று கார்களில் வந்தது. கேரெட் ஒரு காரை ஓட்டிச் சென்றார், ஆதி சீனியர், எலிஸபெத் இருவரும் இதர இரண்டு கார்களை ஓட்டினர். '**நாசிக் திரும்பிவரும் வேளையில் அனைவரும் ஒன்றாக இணைந்து பயணிக்குமாறு**' பாபா அவர்களுக்கு அறிவுறுத்தினார், மேலும் '**கேரெட், வந்த அதே பாதையில் செல்ல வேண்டும்**' என்றும் குறிப்பிட்டார். ஆனால் திரும்பி வரும் வழியில், பாதிரி கூறியதைக் கேட்டு, கேரெட் வேறு ஒரு பாதையில் செல்லவே, சிறிது தூரத்திற்குப் பிறகு தனது வழியை இழந்தார். காரில் எரிபொருள் தீர்ந்து விடும் நிலையில் அவர் பயந்து போனார். அது ஒரு வெறிச்சோடிய சாலை, எப்படி நாசிக் திரும்புவது என்று தெரியவில்லை. பொழுதும் இருண்டுவிட்டது, அவர் பாபாவை ஆழ் இதயத்திலிருந்து அழைத்தார். அப்போது எதிர் திசையிலிருந்து கார் ஒன்று வந்தது. டிரைவர்

அவருக்கு சிறிதளவு எரிபொருளைக் கொடுத்து பிரதான சாலையை எப்படிச் சென்றடைவது என்பதை விளக்கினார். இரவில் தாமதமாக நாசிக் வந்து சேர்ந்தனர். ஒருவர் குருநாதரின் விருப்பத்திற்கு எதிராகச் சென்றால் என்னவாகும் என்பதை நன்கு உணர்ந்தனர். இதர நண்பர்கள் கவலைக்குள்ளாகி, அவர்களைத் தேடி, 'அவசர மருத்துவ ஊர்தி'யை அனுப்பி வைத்தனர்.

1937, ஜனவரி 29ஆம் நாள் பிற்பகலில் பாபா ஒரு கூட்டத்தை நடத்தினார், அதில் அவர் 'மிகவும் இன்றியமையாத ஒன்றை' விவாதிக்க விரும்புவதாகக் கூறினார்:

**நான் சொல்வதையெல்லாம் தீவிரமாக எடுத்துக் கொள்ளுங்கள். இது மிகவும் இன்றியமையாதது. நான் இன்னமும் உங்களுக்காக எந்த வேலையும் செய்யத் தொடங்கவில்லை. முதல் மாதத்தில், இங்கே, எல்லாம் எப்படி நடக்கும் என்பதைப் பார்க்க விரும்பினேன். இப்போது, இன்று, சில விஷயங்களை முடிவு செய்ய வேண்டும். உங்கள் பதில்களில் நேர்மையாக இருங்கள்.**

**கடந்த ஒரு மாதம், நீங்கள் ஒன்றாக இங்கு வாழ்ந்து வருகிறீர்கள்; நான் காண விரும்பிய நல்லிணக்கம் உங்களிடையே இல்லை. தற்போதைய சூழ்நிலையில், நான் செய்ய விரும்பும் பணியை என்னால் செய்ய முடியாது. ஒன்று நீங்கள் இணக்கமாக வாழ்ந்து, எனது பணியில் எனக்கு உதவ வேண்டும், அல்லது ஆசிரமத்தைக் கலைத்து, எனது பணியை நானே தனியாகச் செய்ய வேண்டியிருக்கும்.**

**நீங்கள் அனைவரும் இங்கு ஐந்து ஆண்டுகள் இணக்கமாக வாழத் தயாரா? நீங்கள் இங்கே இருந்து எனக்கு உதவுவதை நான் நிச்சயமாக விரும்புகிறேன், ஆனால், உங்களால் இங்குத் தங்க முடியாது, அல்லது உண்மையான நல்லிணக்கத்துடன் இருக்க முடியாது என்று நீங்கள் மனதார நினைப்பதானால், இங்கிருந்து விடைபெறுவது நல்லது.**

**நான் இன்னும் எனது பணியைத் தொடங்கவில்லை. முட்கள் உங்களைத் துளைக்கக் காத்திருக்கின்றன. நான் உங்களிடம் வெளிப்படையாகப் பேசுகிறேன், எனவே சிந்திக்காமல் பதில் சொல்ல வேண்டாம். உணர்வும், தற்காலிக உற்சாகமும் உங்களைத் தூண்ட விட வேண்டாம். ஒருமுறை ஒப்புக் கொண்டு, முடிவாகக் கூறிய பின்னர், உங்கள் வாக்குறுதியைக் கட்டிக்காக்க வேண்டும்.**

**சில குடும்ப பிரச்சினைகள் காரணமாக, உங்களை - உதாரணமாக, மார்கரெட், டிலியா அல்லது கிட்டி - வீட்டிற்கு திரும்ப அழைப்பதானால், நீங்கள் செல்லக்கூடாது. மாயா தொந்தரவு செய்யலாம். நீங்கள் கவனமாக, திடமாக இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்: என்ன நடந்தாலும் போக வேண்டாம்! உங்களில் ஒருவரும் செல்லமாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன், இருந்தும் நான் உங்களை எச்சரிக்கிறேன்.**

**வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும், ஆனால் உங்களில் ஒருவர் அல்லது இன்னொருவர் விட்டுக் கொடுக்க வேண்டும். அதாவது இங்கிருக்கும் நீங்கள் அனைவரும் விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். குழப்பத்தையும், நெருக்கடிகளையும் நான் பொருட்படுத்த மாட்டேன், ஆனால் ஒற்றுமையில்லா சூழ்நிலையை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். எனது பணியில் கவனம் செலுத்தி, உங்களுக்கு ஆன்மீகத்தில் ஓர் உந்துதலை அளிப்பதற்கு பதிலாக, உங்களை ஒன்றாக இணைத்து, தற்போதைய நிலைமையை சரி செய்வதில் எனது நேரத்தைச் செலவழிக்க வேண்டியதாகிறது.**

**நான் அனைத்தையும் பொறுத்துக் கொள்கிறேன். எனவே, நீங்களும் அவ்வாறே செய்ய வேண்டும். எல்லோரிடமும் சகிப்புத்தன்மையுடன் இருங்கள்; கோபம் உங்களை ஆட்கொண்டு எதிரியுடன் வாக்குவாதம் செய்யும்போது, "நான் இங்கே பாபாவுக்காக இருக்கிறேன், அனைத்திற்கும் மேலாக, பாபா நல்லிணக்கத்தை விரும்புகிறார்" என்று கூறுங்கள்.**

**நான் சொல்வது சரி என்று நீங்கள் நினைக்கிறீர்களா?**

அனைவரும் 'ஆம்' என்று பதிலளித்தபோது, பாபா தொடர்ந்து கூறினார்:

**நீங்கள் உற்சாகம், பொறாமை, சில நேரங்களில் பெருமையும் அடைவீர்கள்; இந்த குணங்கள் அனைத்தும் உங்களில் உள்ளன. நான் சொல்வது என்னவெனில், இருந்தும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் இருங்கள்! நெருப்பின் வழியாகச் செல்வது, விட்டுக் கொடுப்பதை விட எளிதானது. ஒரு சுயநலவாதியை தன்னலமற்றவராக மாற்றுவதும், விடாபிடியாக இருப்பதிலிருந்து விட்டுக் கொடுப்பதும், உலகைப் படைப்பதை விட மிகவும் கடினமான பணியாகும். நீங்கள் 'ஆம்' என்று பதிலளிப்பது எனக்கு ஒரு புனிதமான வாக்குறுதியாகும்.**

பாபா ஒவ்வொருவரிடமும் பதில் அளிக்குமாறு கேட்டுக்கொண்ட போது அனைவரும் தயாராக இருப்பதாகவும், இணக்கத்துடன் ஒன்றாக வாழ்வதற்கும், ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் இந்தியாவில் தங்குவதற்கும் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்யத் தயாராக இருப்பதாகக் கூறினர். இது பாபாவை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்தது.

**1937** ஜனவரி **31** ஆம் நாள், பாபா அனைவரையும் சர்க்கிள் சினிமாவில் (CIRCLE CINEMA) 'ஜன்மபூமி' (JANMABOOMI) என்ற இந்தி திரைப்படத்திற்கு அழைத்துச் சென்றார். இந்திய கிராமவாசிகளுக்கும், பணம் படைத்த நில உரிமையாளர்களுக்கும் இடையிலான போராட்டத்தைப் பற்றிய ஒரு திரைப்படம்.

அந்த நாளின் பிற்பகுதியில், கேரெட், பாபாவிடம் ஒரு திரைப்படத் தொகுப்பாக அவர் எழுதிய கதையைக் காண்பித்தார். பாபா அதை விரும்பினார், மேலும் பத்திரிகைக்கு எழுதுவதோடு தொடர்ந்து அதில் பணியாற்றுமாறு பாபா அவரிடம் வலியுறுத்தினார். பின்னர் ஆதி சீனியர் பாபாவை, ராஹூரிக்கு அழைத்துச் சென்றார்.



மெஹராபாத், **22** ஜனவரி **1937**

**முன்னால் அமர்ந்திருப்போர்**: சிது (SIDHU), மைனா (MINA - மாருதி பாட்டீலின் பேத்தி) காளே மாமா (KALEMAMA), விஷ்ணு (VISHNU), மாஸாஜி (MASAJI)

**நடுவில் அமர்ந்திருப்போர்**: மேரி பேக்கட் (MARY BACKETT), ருவானோ (RUANO), சாஞ்சி (CHANJI), ரானோ (RANO), வில் பேக்கட் (WILL BACKETT), நதீன் (NADINE), ஆதி (ADI - சீனியர்), டிலியா (DELIA), டாம் ஷார்ப்லி (TOM SHARPLEY), மார்கரெட் (MARGARET), எலிஸபெத் (ELIZABETH), மால்கம் (MALCOLM),

**நிற்போர்**: அமிர் (AMIR), பெண்டு (PENDU), நான்னி (NONNY), நோரினா (NORINA), பாபா (BABA), கேரெட் ஃபோர்ட் (GARRETT FORT), கிட்டி (KITTY), ஸெயிலர் (SAILOR), பாதிரி (PADRI)

**1937**, பிப்ரவரி **1**ஆம் நாள், 'மெஹர் இலவச மருத்துவமனை' (MEHER FREE DISPENSARY) தொடக்க விழா, அன்று காலை எட்டு மணிக்கு ராஹுரியில் நடைபெற்றது. டாக்டர் நீலு (DR. NILU), உதவியாளராக ஜால்பாய் இருவரும் பொறுப்பேற்க இருந்தனர். டாக்டர் கனி, அப்போது, வெற்றிமேல் வெற்றிவாகை சூடிய ஒருவர் கூறிய கருத்தை எடுத்துரைத்தார்: "நான் வெற்றி பெற்றேன், ஏனெனில் நான் எப்பொழுதும் எனது வேலையைத் தொடங்கும் பதினைந்து நிமிடங்களுக்கு முன்னதாகவே இருந்தேன்." இந்த வார்த்தைகளை மேற்கோள் காட்டிய டாக்டர் கனியின் முரண்பாட்டுத் தன்மையை (எதையும் சாவகாசமாகச் செய்பவர்), சக மண்டலி கவனிக்காமல் இல்லை.

மருத்துவ வசதி குறித்து, பாபா கூறுகையில், "**ஓரிரு மாதங்களில், இந்த மருத்துவமனைக்கு, மக்கள் திரள் திரளாக வருவார்கள்; பலருக்கு, குறிப்பாக ஏழைகளுக்கு நல்ல பலன் கிடைக்கும்.**" மருத்துவமனை அடுத்த நாள் செயல்படத் தொடங்கியது. வித்வான்ஸ் (VIDWANS) என்ற மற்றுமொரு மருத்துவர், மேலும் ஒரு கம்பவுண்டர் (PHARMACIST) மருத்துவமனையில் பணிபுரிய நியமிக்கப்பட்டனர். இந்தக் காலகட்டத்தில், டாக்கேஃபால்கர் (DHAKPHALKAR) ராஹுரியில் அலுவலக விவகாரங்களை கவனித்து, அதன் செயல்பாடுகளின் நாட்குறிப்பை வைத்திருந்தார்.

பிப்ரவரி **4** அன்று பாபா நாசிக் வருவதாக இருந்தது; ஆனால் பிப்ரவரி **3**, நோரினாவின் பிறந்தநாளாக இருந்ததால், ஆச்சரியமளிக்கும் விதத்தில், பாபா ராஹுரியிலிருந்து **3**ஆம் நாள் மாலை வருகை தந்தார். எவ்வாறாயினும், பாபா களைப்பாக இருந்ததால் ஆதி சீனியர் குழுவிடம் இரவு உணவை முடிக்கச் சொல்லி, ஓய்விற்குப் பிறகு பாபா அவர்களை சந்திப்பதாகத் தெரிவித்தார்.

பாபா, முன் அறைக்குச் சென்று, சோஃபாவில் சாய்ந்தார்; மிகவும் இடரார்ந்த நிலையில் சில ஆன்மீக உட்பணிகளில் ஈடுபடுவது போலத் தோற்றினார். மேற்கத்தியர்கள் உள்ளே வந்து அவரைச் சுற்றி அமர்ந்தனர். முகத்தைக் கழுவ பாபா சிறிது குளிர்ந்த நீரைக் கோரினார். பின்னர், அவர் எழுத்துப்பலகை வழியாக, "**சில நேரங்களில் நான் முழுச் சுமையையும் எனது தோள்களில் தாங்க வேண்டியதாகிறது. இங்குக் காரில் வரும்போது நான் கைகளை அசைக்க முடியாமல் சிரமப்பட்டேன். இதை நான் ஆதியிடம் கூடத் தெரிவிக்கவில்லை.**

"**எல்லையற்ற பேரின்பம் மற்றும் எல்லையற்ற துன்பம், இவை அனைத்தும் நானே! - இங்கே** (அவரையே சுட்டிக்காட்டி) **சுதந்திரமாகவும், அங்கே** (குழுவைச் சுட்டிக்காட்டி) **பிணைக்கப்பட்டும் உள்ளேன். அனைத்தையும் அறிந்தவர் இங்கே, அறியாதவர் அங்கே. ஒரே ஒருவர் மட்டுமே என்னை நேசிக்கிறார்! யாரென்று சொல்லுங்கள் பார்க்கலாம்! என்னைத் தவிர வேறு எவரும் என்னை நேசிக்கவில்லை! பாபா, எல்லோர் மூலமாகவும் பாபாவை நேசிக்கிறார்!**"

அப்போது உலக நிலைமைகள் காரணமாக, மெஹராபாத்தில் ஒருமுறை, கடுமையான மாரடைப்பால் கொடூரமான துன்பத்தை அனுபவித்த, கடந்த கால சம்பவத்தை பாபா விவரித்தார். உடல் ரீதியாக அவர் நடுங்கி, வியர்வை சிந்த, துன்பங்களை அனுபவிப்பதன் காரணம் உண்மையில் அவரது ஆன்மீக உட்பணியாகத்தான் இருக்கும்.

மேற்கத்திய அன்பர்களில் ஒருவர், இதுபோன்ற துன்பங்களை, பாபா எவ்வாறு தாங்க முடியும் என்று கேட்டார். "**நான் அதையெல்லாம் தாங்க வேண்டும்**," என்று பாபா பதிலளித்தார், "**உலகம் முழுவதும் எனக்கு எதிராகத் திரும்பினாலும், இது எனது வேலை; நான் அதைத் தாங்கியாக வேண்டும்.**"

வண்ண மெழுகுவர்த்திகளுடன் நோரினாவின் பிறந்தநாள் கேக் கொண்டு வரப்பட்டது. பாபா, கேக்கை வெட்டி அனைவருக்கும் வழங்கினார். பின்னர் அவர் குழுவுடன் பல விஷயங்களைப் பற்றி விவாதித்தார், இந்தியாவில் பயணம் செய்ய கேரெட்டிற்கு அறிவுறுத்தல்களையும் வழங்கினார்.

பாபா மீண்டும் தனது பணியில் உருவாகும் 'முட்களை' மறைமுகமாகக் குறிப்பிட்டு, "**இவை எதுவும் நடக்கக்கூடாது: பிப்ரவரி 17 அல்லது 18ஆம் தேதி பிறந்தநாள் விழாவில் மழை பொழியக்கூடாது; அந்த நாட்களில் நான் நோய்வாய்ப்படக்கூடாது; என் அன்பிற்குரியவர்கள் மார்ச் மாத இறுதிக்குள் மரணத்தை சந்திக்கக் கூடாது. இவை எதுவும் நடக்கவில்லை என்றால், நாம் 'பெரிய முள்ளை' எதிர்கொள்ள முடியும், அதற்குப் பின்னர், அற்புதமான ஆன்மீக சூழ்நிலைகள் உருவாகும்!**"

'பெரிய முள்' என்னவாக இருக்கும் என்பதை பாபா விளக்கவில்லை. நாசிக்கில் ஓர் இரவிற்குப் பிறகு, மறுநாள் பிற்பகலில் ராஹுரிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

'சிறிய முள்' பாபாவின் பிறந்தநாளின் நேரமாகப் பார்க்கப்பட்டது. பாபா மேற்கிலிருந்து திரும்பியபோது, அந்த ஆண்டு அவரது உண்மையான பிறந்தநாள் பிப்ரவரி 15ஆம் தேதி (பார்சி நாட்காட்டியின் படி) வந்தாலும், பாபா குறிப்பாக 17, 18ஆம் தேதிகளை விழா நிகழ்ச்சிகளுக்காகத் தேர்ந்தெடுத்தார். அதைத் தொடர்ந்து, புதிய அரசியலமைப்பில் நாடு தழுவிய வாக்கெடுப்புக்காக பிப்ரவரி 17ஆம் தேதியை அரசாங்கம் அறிவித்தது. பாபாவின் பிறந்தநாள் நிகழ்ச்சியில் முடிந்தவரை பெரும்பாலான மக்கள் கலந்து கொள்வதை விரும்புவதாக, பாபா குறிப்பிட்டிருந்தார்:

**என்னுடைய சொந்த காரணங்களுக்காக, எனது பிறந்தநாளில் நான் ஆயிரக்கணக்கானவர்களின் பாதங்களைத் தொட விரும்புகிறேன். இந்த ஆண்டு, எனது பிறந்தநாளுக்கு அதிக முக்கியத்துவமும் உள்ளது. ஆயிரக்கணக்கான ஏழை மற்றும் ஆதரவற்றவர்களின் பாதங்களைத் தொட்டு எனது பிரசாதத்தை வழங்க விரும்புகிறேன்; ஆனால், இந்த சந்தர்ப்பத்தில், எனது பக்தர்கள் மற்றும் பிறர் அனைவரும் - ஒன்றாகத் திரண்டு என் அருகில் இருக்க வேண்டும், சிறப்பு நன்மை அனைவருக்கும் அந்த நேரத்தில் கிடைக்கும்.**

ஏறக்குறைய 20,000 நபர்கள் கலந்துகொள்வதை அவர் விரும்புவதாகவும், அதை நிறைவேற்ற முடியுமா என்றும் பாபா கேட்டார். ருஸ்தம் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார், ராம்ஜூ, விஷ்ணு, ஆதி சீனியர், சாஞ்சி ஆகியோர் அனைத்து பக்தர்களுக்கும், நண்பர்களுக்கும், கடிதம் எழுதுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். 'புதிய அரசியலமைப்பிற்கான வாக்களிப்பு காரணமாக, பாபா வழங்கும் இந்த வாய்ப்பை, பலர் பயன்படுத்திக் கொள்வார்களா?' என்ற கேள்வி எழும்பியது.

சாஞ்சி குறிப்பிட்டது போல, "பிப்ரவரி 17ஆம் தேதி தேர்தல் ஒரு பெரிய தடையாக இருந்தது. பலர் வர விரும்பினாலும் முடியாத நிலை. இது கடவுளுக்கும் மாயாவிற்கும் இடையிலான உண்மையான போராட்டமாகும்."

1937, பிப்ரவரி 7 முதல், பாபா திட ஆகாரத்தைக் கைவிட்டு, அவரது நாற்பது நாள் உபவாசத்தின் கடைசி பத்து நாட்களில் நீர் மட்டுமே அருந்தினார். மஸ்துகளையும், மனநோயால் பாதிக்கப்பட்டவர்களையும் பராமரிக்கும் பணியைப் பாராட்டிய டாக்கே, அன்றைய நாட்குறிப்பில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

ஆகா பைதூல், பிளீடர் இருவரும் 24 மணி நேரமும் மஸ்துகளை கவனித்துக் கொள்கிறார்கள்; அவர்களின் பொறுமை மற்றும் மன வலிமையை நிச்சயமாகப் பாராட்ட வேண்டும்; சில பைத்தியக்காரர்கள் ரவுடிகளைப் போலவும், சிலர் மோசமாக, கட்டுப்படுத்த முடியாத நிலையில் எப்பொழுதும் தொல்லை தருபவர்களாகவும் - ஒரு பாதணியில் அகப்பட்ட குறுங்கற்கள் போல - குறிப்பாக முஹமது மஸ்த், மற்றும் சிலர் எப்பொழுதும் கொந்தளித்துக் கொண்டே இருப்பவர்கள். இவற்றையெல்லாம், அவர்கள் புன்னகையுடனும், மேன்மையான குருநாதரின் உண்மையான சீடரின் வைராக்கியத்துடனும் ஏற்றுக்கொண்டு, அந்தப் பணியைச் செவ்வனே செய்கிறார்கள்.

மருந்தகத்தைப் பற்றி, பாபா கருத்துத் தெரிவிக்கையில், '**சிகிச்சைக்காக வருபவர்கள், சேவை செய்யும் ஒரு வாய்ப்பை மண்டலிக்கு வழங்குகிறார்கள், எனவே நோயாளிகள் உண்மையில் உபகாரிகள், மண்டலி அல்ல. அனைத்து நோயாளிகளுக்கும் அவர்களின் சமூக அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல், தயவுடனும், சரிசமமாகவும் சிகிச்சையளிக்குமாறு**' மருத்துவர் மற்றும் பணியாளர்களை அவர் கேட்டுக்கொண்டார்.

1937, பிப்ரவரி 9ஆம் நாள், மெஹர் பாபா நாசிக் சென்று, அனைவரையும் அழைத்து, 'ஆன்மீக முகவர்கள்' (SPIRITUAL AGENTS) என்ற தலைப்பிலிருந்து தொடங்கி கீழ்வரும் விளக்கங்களை அளித்தார்:

**சூஃபியிஸத்தில் (SUFISM) 'குதுப்' (QUTUB) என்றால் 'மையம்' என்று பொருள். அந்த 'மையம்' தனது முகவர்கள் மூலமாக முழுப் பிரபஞ்சத்தையும் கட்டுப்படுத்துகிறது. அவர்களிடையே 'சந்திப்புகள்' நிகழ்கின்றன, ஆனால் இதை நமது பௌதீக கண்களால் காண முடியாது. உலக (பௌதீக)**

**பொருட்களை மட்டுமே கட்டுப்படுத்தும் முகவர்கள் 'அப்தல்'கள் (**ABDALS**) என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் உடலை மாற்றும் திறன் படைத்தவர்கள். 'பதல்' (**BADAL**) என்ற உருது வார்த்தைக்கு 'மாற்றம்' (**CHANGE**) என்று பொருள். எனவே, 'அப்தல்' என்றால் மாற்றக்கூடியவர்.**

நதீன், பாபாவிடம், "நீங்கள் கடவுளாக இருப்பதை எப்படி, எந்த விதத்தில் உணர்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு பாபா பதிலளித்தார்:

**சொர்க்கம், நரகம், கடவுள், மனிதன் அனைத்தும், அனைவரும் இங்கேயே உள்ளன, உள்ளனர். நீங்கள் இப்போது கடவுள் மட்டுமல்ல, நதியாவும் கூட. நதியா காணாமல் போகும்போது, கடவுள் இருக்கிறார். எனவே, நதியா கட்டாயம் சென்றாக வேண்டும். நதியா போகும்போது, கடவுள் மட்டுமே இருக்கிறார்.**

**நதியா செல்ல வேண்டும். எப்படி? நீங்கள் என்னுள் இணைந்தால், நதியா செல்கிறார். நதியா செல்ல எளிதான வழி தன்னை மறந்துவிடுவது - 'தன்னை நதியா என்பதை' மறப்பது எப்படி? பாபாவைப் பற்றி அதிக அளவில் சிந்திப்பதன் மூலம்; நதியாவைப் பற்றி குறைவாக சிந்தியுங்கள். பாபாவில் நதியா (மூழ்கும்) ஒன்றிணையும்போது, நதியா இல்லாமலாகிறார்; பாபா இருக்கிறார்.**

**ஆனால் அதை எப்படிச் செய்வது, எவ்வாறு இணைவது என்று நீங்கள் சிந்தித்துக்கொண்டே இருந்தால், இந்த எண்ணம் உங்களைத் தடுக்கும். எப்படி? எப்பொழுது? என்று நினைக்க வேண்டாம் - பாபாவைப் பற்றி மட்டும் சிந்தியுங்கள்.**

**ஆனால் இதைவிட சிறந்ததும், பாதுகாப்பானதும், எனது கட்டளைகளைக் கடைப்பிடிப்பது - நான் சொல்வதையே செய்வது. அதாவது, அனைவரும் எனது வார்த்தைகளுக்கு உடனடியாகக் கீழ்ப்படிவது!**

குழுவில் ஒருவர், "நாங்கள் கீழ்ப்படிய விரும்புகிறோம், ஆனால் சில காரணங்களால் உடல் ரீதியாகவோ அல்லது மன ரீதியாகவோ அவ்வாறு செய்ய முடியவில்லை, அப்படியென்றால்?" என வினவினார்.

**உங்களுக்குக் கீழ்ப்படியும் விருப்பம் இருந்தால், அது கீழ்ப்படியாமை ஆகாது. உதாரணமாக, நான் 'பறந்து செல்லுங்கள்' என்று சொன்னால், உங்களால் அது முடியாது; எனவே அது கீழ்ப்படியாமை ஆகாது, ஆனால் நீங்கள் பறக்க முயற்சிக்க வேண்டும்! 'என்னால் பறக்க முடியாது' என்று சொல்லாதீர்கள். முயற்சி செய்யுங்கள்.**

**ஒரு விதத்தில் கீழ்ப்படிவது எளிது, ஆனால் இதயபூர்வமாக அதைச் செய்வது கடினம். உதாரணமாக, ஆதி சீனியரிடம், 'உங்கள் தந்தையைக் கொல்லுங்கள்' என்று சொன்னால், அவர் அவரைக் கொல்வார். அது எளிதானது; அவர் அதைச் செய்வதில் மகிழ்ச்சியாக இருக்க மாட்டார், ஆனால் அவர் செய்வார். முழுமையான கீழ்ப்படிதல், முழுமையான குருட்டுக் கீழ்ப்படிதல், மிக, மிக அரிதானது.**

'ஜீனைக் கொல்லுங்கள்' என்று நான் மால்கமிடம் சொன்னால், அவருக்கு முழு நம்பிக்கை இருந்தால் அவர் அதைச் செய்வார், ஆனால் விருப்பத்துடன் அல்ல. எனவே, அதில் ஒரு வித்தியாசம் உள்ளது. முழுமையான குருட்டுக் கீழ்ப்படிதல் என்பது முழுமையான நம்பிக்கையின் விளைவு.

ஒரு கட்டத்தில், பாபா மீண்டும் எச்சரித்தார், **அகந்தையை எவ்வாறு அகற்றுவது, அளவிறுதியற்ற முறையில் எவ்வாறு ஒன்றிணைவது என்று தொடர்ந்து சிந்திப்பதென்பது ஓர் 'உதவியாக' இல்லாமல், பாதையில் ஒரு 'தடையாக' இருக்கிறது.**

தொடர்ந்து, பாபா கீழ்ப்படிதலை வலியுறுத்தினார்:

**நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படியாத பலரைக் காண்பீர்கள். அவர்கள் வெறும் பக்தியுள்ளவர்கள். அவர்கள் வணங்குகிறார்கள், ஆனால் கீழ்ப்படிவதில்லை. இதைப் புரிந்து கொள்கிறீர்களா? விருப்பமில்லாமல் செய்தாலும், பக்தியை விட கீழ்ப்படிதல் முக்கியம். இது ஒரு பெரிய விஷயமாகக் கருதப்படுகிறது, ஏனெனில், பின்பு, செயல்பாட்டில், இருமைத்தன்மை மறைந்து, பொறுப்பு, நீங்கள் கீழ்ப்படியும் குருநாதர் மீது விழுகிறது. அவர் உங்களை எழுந்திருக்கச் சொன்னால், நீங்கள் கண்டிப்பாக எழ வேண்டும். அவர் உங்களை அழைத்தால், நீங்கள் உடனே செல்ல வேண்டும்.**

**கீழ்ப்படிதலைக் காட்டிலும் அன்பு மேன்மையானது. உண்மையான காதலில் - சாதாரண காதல் அல்ல - அன்பு, கீழ்ப்படிதல், பக்தி இவை அனைத்தும் இயல்பாக நிகழ்பவை. இத்தகைய அன்பு, வாழ்க்கை, உடல், ஆன்மா - அனைத்தையும் அன்பிற்குரியவருக்கு அர்ப்பணிக்கிறது. இந்த அன்பு, கீழ்ப்படிதல், பக்தி இரண்டையும் விட உயர்ந்தது.**

**இந்த அன்பின் அடுத்த கட்டம் ஐக்கியம். எனவே, அன்பை, அதிக அன்பைக் கொடுங்கள், மேலும் மேலும் அதிக அன்பைக் கொடுங்கள். பெரிய இதயங்கள் எப்பொழுதும் கொடுக்கின்றன, விட்டுக் கொடுத்துக்கொண்டே இருக்கின்றன; சிறிய இதயங்கள் உள்வாங்கிக்கொண்டே இருக்கின்றன.**

**ஒரு நாள் உங்கள் அனைவருக்கும் நான் அன்பைப் பற்றி மேலும் விளக்குவேன். 'அன்பு' சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. ஒவ்வோர் உணர்ச்சிபூர்வமான செயலும் அன்பிலிருந்து தொடர்கிறது என்று கருத முடியாது. அன்பின் உண்மையான அடையாளம் அனைத்தையும் கொடுப்பது - கொடுத்துக்கொண்டே இருப்பது!**

**ஒரு நாள் நான் விளக்குவேன். ஒரு தாய் தனது குழந்தையை நேசிக்கிறாள். ஆனால் இது தூய்மையான அன்பு அல்ல. இது அன்போடு இணைந்த மனநிறைவு.**

**உண்மையான அன்பில் திருப்தி அடைவதற்கான ஆர்வம் இல்லை - திருப்திப்படுத்துவதே நோக்கம்!**

**இப்போதெல்லாம், காமம் கூட காதலாகக் கருதப்படுகிறது. அவற்றின் நுட்பமான வேறுபாட்டை அறியப்படாத நிலையில் உள்ளது. அது, நுட்பமாக இருந்தாலும் மிகவும் தெளிவாக உள்ளது. அவை இரண்டும் வெவ்வேறு விஷயங்கள். நீங்கள் சாதம், கறிக்குழம்பு இரண்டையும் விரும்புகிறீர்கள்; இது காமம். நீங்கள் ஒரு சிகரெட்டை நேசிக்கிறீர்கள்; மீண்டும் காமம். நீங்கள் கறிக்குழம்பை நேசிக்கிறீர்கள், அதை உண்கிறீர்கள், ஆனால் அந்தச் செயலின் மூலம் எதையும் கொடுப்பதில்லை! உங்கள் காதலியையும் மறந்து விடுகிறீர்கள்!**

அன்று பிற்பகல் (பிப்ரவரி 9), பாபா, 'பாசாங்குத்தனம்' (HYPOCRISY), 'மாயை' (DELUSION - போலி நம்பிக்கை) பற்றி பேசினார். அவர் மேற்கத்தியர்களிடம் "**சுய மாயை என்றால் ஒருவர் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வது என்று நாம் கூறுகிறோம். இதன் பொருள் என்ன?**" என்று கேட்டார்.

குழுவில் ஒருவர், 'ஒருவர் இல்லாத ஒன்றை தன்னில் கற்பனை செய்துகொள்கிறார்' என்று கூறியதற்கு, பாபா பதிலளித்தார்:

**இந்தக் கற்பனை மிகவும் வலுவானது; தன்னைத் தானே ஏமாற்றிய மனிதன், தன்னுடைய நம்பிக்கை போலியானது என்று சந்தேகப்படுவதில்லை! அவர் உண்மையில் 'நான் இவர்' அல்லது 'அவர்' என்று உணர்கிறார். இந்த மாயை, மிகவும் உறுதிப்பாடுடையது என்றாலும், எல்லாவற்றிற்கும் மேலாக, மாயை, மாயையே!**

**இந்த மனிதர்கள் பாசாங்குத்தனமானவர்கள் அல்ல என்றாலும், அவர்கள் அந்த அளவிற்கு ஆபத்தானவர்களும் அல்ல.**

**ஒரு விதத்தில் பார்த்தால், அனைவரும் பைத்தியக்காரர்கள்; ஏமாற்றப்பட்ட நபர்கள் எப்பொழுதும் 'பைத்தியம்' பிடித்தவர்கள். உதாரணமாக, நீங்கள் உங்களை 'உடல்' என்று நினைக்கிறீர்கள். நீங்கள் உடல்-பைத்தியம், அப்படித்தானே?**

**குழுவில் ஒருவரை நோக்கி பாபா, குறும்புத்தனமான புன்னகையுடன் கூறினார், "உங்களுக்கும் பைத்தியம், ஆனால் இறை-பைத்தியம்!" என்று கூறி பாபா தொடர்ந்தார்:**

**ஒருவரின் போலி நம்பிக்கை, துரதிர்ஷ்டவசமானது, ஆனால் பாசாங்குத்தனம், மன்னிக்க முடியாதது. தானாகவே ஏமாற்றப்பட்ட ஒருவருக்கு அது தெரியாதபோதும், தனக்குத் தெரியும் என்று நினைக்கிறார். அதேவேளையில் ஒரு நயவஞ்சகரை எடுத்துக்கொள்ளுங்கள், அவருக்குத் தெரியாது என்பதை அவர் அறிவார்; இருந்தும் தெரிந்தவர் போல நடிக்கிறார்.**

**இறைவனுக்கு ஆண், பெண் என்ற பாலினம் இல்லை, ஆனால் தனிமனிதன் தன்னை ஓர் உடலாகக் கருதும்போது, பாலினத்தின் பொய்த் தோற்றம் உருவாகும்; எனவே, இருமைத்தன்மை உருவாகும். நம் ஒவ்வொருவரிலும் நிலைகொண்டிருக்கும் பரமாத்மா, ஏக இறைவன் பாலினமற்றவர்; ஆனால் ஒரு தனி நபரின் போலி நம்பிக்கை தன்னை ஒரு பெண்ணாகவும், மற்றொன்றில் தன்னை ஆணாகவும் கருதுகிறது. இது**

**மாயை. மிக மிக நுட்பமான வேறுபாடு. இது நம்மை நாம் 'உடல்' என்று நினைப்பதன் மூலம் வருகிறது.**

உதாரணம் ஒன்றை எடுத்துக் கூறி பாபா விளக்கினார்:

**சொட்டை தலையனுக்குச் செயற்கை முடி இருப்பதைப் போல், ஆன்மாவிற்கு உடல். சொட்டை தலையன், காலையில் வேலைக்குச் செல்லும்போது அவனது செயற்கை முடியை அணிந்து கொள்கிறான். வீட்டிற்குத் திரும்பி வந்து இரவில் தூங்கும்போது, அதைக் கழற்றி விடுகிறான். இப்படி, உங்கள் வேலைக்காக மட்டும் தேவைப்படும் வேளையில், உடலைப் பயன்படுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும், மேலும் உங்களுக்கு இனி தேவைப்படாதபோது, உங்களை மாயையிலிருந்து விடுவிக்க, அதை விட்டுவிட வேண்டும்.**

பிப்ரவரி 10, டிலியாவின் பிறந்தநாள். மேற்கத்திய அன்பர்களின் பிறந்தநாளில் ஐஸ்கிரீம், அனுமதிக்கப்பட்ட 'பாரம்பரிய பழக்கமாக' மாறிவிட்டது.

டிலியா, மார்கரெட் இருவரையும் மெஹர் பாபா தனது அறைக்கு அழைத்தபோது அவர்கள் பாபாவின் வாழ்த்துகளை எதிர்பார்த்துச் சென்றனர். டிலியா, பாபாவின் அன்பான பிறந்தநாள் அரவணைப்பை எதிர்பார்த்தார், ஆனால் மாறாக, பாபா அவரது வருத்தத்தை வெளிப்படுத்தினார்: "**17, 18ஆம் தேதிகளில் நான் எனது பிறந்தநாள் விழாவை, குறிப்பாக, மேற்கத்தியர்கள் மனங்களில், என்னைப் பற்றிய நல்லெண்ணத்தை உருவாக்கி, அவர்களை என்பால் 'ஈர்க்க' மட்டுமே ஏற்பாடு செய்கிறேன் என்று நீங்கள் இருவரும் நினைப்பதைக் கேட்பது எனக்கு மிகுந்த வேதனையை அளிக்கிறது. நான் எவரையும் கவர வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? குறைந்தபட்சம் இவ்வளவாவது இப்போது நீங்கள் உணர்ந்து புரிந்திருக்க வேண்டும்!**"

'கவுண்டெஸ் நதீன் டால்ஸ்டாயை', பாபா 'ஈர்க்க' விரும்புவதைப் பற்றி டிலியா மண்டலியில் ஒருவருக்குக் குறிப்பிட்ட தகவல் பாபாவின் செவிகளை எட்டியது. பாபாவின் வேதனையை நினைத்து இருவரும் அழ ஆரம்பித்தனர். சிறிது நேரத்தில் பாபா அவர்களை மன்னித்து, டிலியாவின் 'மறக்க முடியாத' பிறந்தநாளைக் கொண்டாடுவதற்காக அவர்களை உணவறைக்கு அழைத்துச் சென்றார்.

அந்த நாளின் பிற்பகுதியில், பாபா அவரது எதிர்வரும் பிறந்தநாள் குறித்து மேற்கத்தியர்களுக்கு விளக்கினார்:

**சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, எனது பிறந்தநாள் இந்த ஆண்டு கொண்டாடத் திட்டமிடப்பட்ட அதே அளவிலேயே கொண்டாடப்பட்டது. பின்பு நான் இந்தப் பெரிய அளவிலான விழாக்களை நிறுத்தினேன். குறைவான ஒரு சில நபர்களை மட்டுமே என்னை சந்திக்க நான் அனுமதித்தேன், எனது பாதங்களில் தலையை வைத்து தரிசனம் செய்வதையும் நான் நிறுத்திவிட்டேன்.**

நான் மேற்கத்திய நாடுகளில் மேற்கொண்ட பயணத்தின் போது, சில நேர்காணல்களையும் அனுமதித்தேன். என்னை சந்திக்கும் நோக்கத்தில் நீங்கள் வெளியிலிருந்து பலரை அழைத்து வந்தபோது நான் அடிக்கடி அதிருப்தியைத் தெரிவித்ததை நீங்கள் கவனித்திருக்க வேண்டும். இதுபோன்ற சந்திப்புகளைத் தவிர்ப்பதற்கான காரணம் நேரம், சரியான நேரம் இதுவல்ல என்பதால்தான்; நான் விரும்பும் போது முழு உலகத்தையும் என்னிடம் கொண்டுவருவேன்.

“இந்த ஆண்டு, (1937) பல வருடங்களுக்குப் பின்னர், எனது பிறந்தநாளை மீண்டும் பெரிய அளவில் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, ஏனெனில் இது எனது கிழக்கத்திய அன்பர்கள் பலரை சந்திக்கும் வாய்ப்பை உங்களுக்கு வழங்கும். மேலும், ஏறக்குறைய 10,000 பேருக்கு, தானியங்களும் துணிமணிகளும் வழங்கி, அவர்களின் பாதங்களை எனது கைகளால் தொட வேண்டும்.

“ஆனால் மாயாவின் பணி பெரும்பாலும் முரண்பாடான முறையில் நிகழும். இம்மாதம் 17, 18ஆம் தேதிகளில் புதிய அரசியலமைப்பிற்கான தேர்தல் நடக்க உள்ளது. இந்தியா முழுவதும் மக்கள் வாக்களிக்கக் காத்திருக்கிறார்கள். ஆகவே, ருஸ்தமும் இதர நண்பர்களும் 10,000க்கும் அதிகமான மக்களை எதிர்பார்க்கிறார்கள் என்றாலும், பலர் வராமல் கூட போகலாம்.”



மெஹர் பாபாவின் **43**ஆவது விசேஷ பிறந்தநாள் விழா, பிப்ரவரி **1937**

(MEHER BABA'S 43RD SPECIAL BIRTHDAY CELEBRATION)



நாசிக், 17 பிப்ரவரி 1937, ஏழைகளுக்கு பிரசாதம் வழங்குதல்
(NASIK, **17** FEBRUARY **1937,** DISTRIBUTING PRASAD TO THE POOR)



நாசிக், 18 பிப்ரவரி 1937, மெஹர் பாபாவின் பிறந்தநாள் விழா
(NASIK, 18 FEBRUARY 1937, MEHER BABA'S BIRTHDAY CELEBRATIION)

# மெஹர் பாபாவின் 43ஆவது விசேஷ பிறந்தநாள் விழா

**(Meher Baba's 43rd Special Birthday Celebration)**

மெஹர் பாபாவின் பிறந்தநாளை மிகப்பெரிய அளவில் கொண்டாடுவதற்கான திட்டங்கள் நடந்து வருகின்றன; மேலும் பாபா, உபவாசம் மேற்கொண்டிருக்கும் வேளையிலும், எப்பொழுதும் போலவே சுறுசுறுப்பாக இருந்தார்; மெஹராபாத், நாசிக், ராஹுரி போன்ற இடங்களுக்குச் சென்று, பல விஷயங்களை மேற்பார்வையிட்டார்.

மேலை நாட்டினர், வேளை கிடைக்கும்போதெல்லாம் தனித்தனி பொட்டலங்களை, ஐந்து கெஜம் துணிகளில் கட்டி, தயார் செய்து உதவுவதில் மும்முரமாக இருந்தனர். தானியங்களின் மூட்டைகளை, தொடர்ந்து இடைவிடாமல் கட்டியதால் ருவானோ, நதீன் இருவரின் மணிகட்டுகள் புண்ணாகி வலிக்கத் தொடங்கியது. நான்னி கைவாதத்தால் சிரமப்பட்டதால், இந்த வேலையிலிருந்து விலக்களிக்கப்பட்டார். மேலும், விழாவில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் ஒரே நாளில் விருந்து அளிப்பதற்கான திட்டங்களும் இருந்தன.

பாபா நீண்ட காலமாக ஆசிரமங்களில் இருப்பவர்கள் தவிர, வெளி நபர்களுக்கும் தரிசனம் வழங்குவதை நிறுத்தி வைத்திருந்தார்; பாபா ஏகாந்தவாசத்தில் இருப்பதாக பிற அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவரது இந்த இரண்டு நாள் விழாவின்போது, மக்களுக்கு தரிசனத்தை வழங்க பாபா ஒப்புக் கொண்டார், மேலும் மஹாத்மா காந்திக்கு பின்வரும் கடிதத்தை எழுதுமாறு சாஞ்சிக்கு அறிவுறுத்தினார்:

பிப்ரவரி 4, 1937

என் அன்பான காந்திஜி,

ஸ்ரீ மெஹர் பாபாவின் 43ஆவது பிறந்தநாள் இம்மாதம் 17, 18ஆம் தேதிகளில் நாசிக் ரிட்ரீட்டில் கொண்டாடப்பட உள்ளது.

இந்த நிகழ்வின் முக்கிய செயல்பாடுகளில், ஸ்ரீ மெஹர் பாபா, தனிப்பட்ட முறையில் 10,000க்கும் மேற்பட்ட ஏழை, எளிய, ஆதரவற்ற மக்களுக்கு, சாதி, சமய பேதமின்றி, தானியங்கள் மற்றும் துணிமணிகளைப் பிரசாதமாக வழங்க உள்ளார்.

நீண்ட காலமாக ஏகாந்தவாசத்தில் இருக்கும் ஸ்ரீ பாபா, இந்த இரண்டு நாட்களில் அனைவருக்கும் தரிசனம் வழங்குகிறார்.

இது, அவரது கிழக்கு மற்றும் மேற்கத்திய நாட்டு சீடர்களும், பக்தர்களும் சந்திக்கும் வாய்ப்பை வழங்கும், ஏனெனில் நாசிக் ரிட்ரீட்டில் சமீபத்தில்

முதல்முறையாகத் தங்கவந்த அவரது மேற்கத்திய அன்பர்கள், இந்தியருடன் ஒரு பொது விழாவில் பங்கேற்க இருக்கிறார்கள்.

இந்தக் குறிப்பிட்ட தருணத்தில், இயன்றவரை, அவரது தொடர்பில் வந்தவர்கள் அருகில் இருக்க வேண்டும் என்பது ஸ்ரீ பாபா ஸாஹேபின் விருப்பமாகும். இது ஒவ்வொருவரின் தனிப்பட்ட நன்மைக்கான சிறப்பு ஆன்மீக முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கும்; அதே நேரத்தில், அவருக்கு அருகிலுள்ள தனிநபர் ஒவ்வொருவரும் பொருள் ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் பயனடைவார்கள்.

ஸ்ரீ பாபாவின் அழைப்பை, அவரது விருப்பப்படி, உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும், உங்களுடன் வர விரும்பும் நண்பர்களுக்கும் தெரிவிக்கும் இந்த வாய்ப்பு, மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது. உங்கள் அனைவருக்கும் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைவோம்.

எப்பொழுதும் போல - ஸ்ரீ பாபாவின் அன்பு மற்றும் ஆசீர்வாதங்களுடன்.

. .

அழைப்பை மறுத்து, மஹாத்மா காந்தி இவ்வாறு எழுதியிருந்தார்:

11 பிப்ரவரி 1937,

ஸிகாவ்ம், வர்தா.

என் அன்பான தாதாசாஞ்சி,

உங்கள் கடிதத்தை நான் பெற்றுக்கொண்டேன். ஏழைகளுக்குத் தானியங்கள் மற்றும் துணி மணிகளை இலவசமாக வழங்குவதில் எனக்கு உடன்பாடு இல்லை. இதில் பாகுபாடு மிகவும் கடினம், ஏழைகளை ஏன் பிச்சைக்காரர்களாக மாற்ற வேண்டும்?

தானியங்கள் மற்றும் துணிமணிகளை இலவசமாக விநியோகிக்க ஸ்ரீ பாபா ஸாஹேப் ஒப்புக்கொள்வதை, என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை; அதே வேளையில் பணிகளுக்காக வழங்கப்படும் முழு மற்றும் கௌரவமான கட்டணத்தை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. இலவசமாக வழங்கப்படுவது வறுமையைப் பாவமாக்குகிறது, அதே வேளையில் வேலைக்கு ஊதியம் என்பது கண்ணியத்தை அளிக்கிறது.

இதற்கு பதிலளிக்கும் விதத்தில் சாஞ்சி, காந்திக்கு எழுதினார்:

உங்கள் வெளிப்படையான கருத்தை உள்ளடக்கிய கடிதத்தை நாங்கள் பாராட்டுகிறோம், ஆனால் நீங்கள் முக்கியமான விஷயத்தைத் தவறவிட்டதாகத் தெரிகிறது. ஸ்ரீ பாபாவால் ஆயிரக்கணக்கான மக்களுக்கு, தானியங்கள் மற்றும் துணிமணிகளை விநியோகிப்பதில் குறிப்பாக வகுப்புகளுக்கு இடையில் 'தானம்' அல்லது 'பாகுபாடு' என்ற பேச்சுக்கு இடமே இல்லை; இதைச் செய்வதற்கான ஒரே நோக்கம், இனம், மதம், நிறம் அல்லது வாழ்க்கையில் அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல், ஏழை, பணக்காரர் என்ற பாரபட்சம் பாராமல், தனது கைகளால், ஒவ்வொரு நபருக்கும், அவரது நீண்டகால ஏகாந்தவாசத்திற்குப்

பிறகு, ஸ்ரீ பாபாவின் தரிசனத்தின் பலனை அளிப்பது மட்டுமல்லாமல், அவரது 'ஸ்பரிசம்' இறை அருளின் சிறப்புப் பரிசாக விளங்கும் என்பதுதான்.

ஸ்ரீ பாபாவின் முன்னிலையில் அனைத்து வர்க்க மக்களும், பணக்காரர்களும், ஏழைகளும் சமமாக பாவிக்கப்படுகிறார்கள், மேலும் விழாவில் பங்கெடுக்க அழைக்கப்பட்ட அனைவருக்கும், எந்தவிதமான பாகுபாடுமின்றி தெரிவிக்கப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மராத்தி துண்டு பிரசுர நகல் ஆயிரக்கணக்கானவை விநியோகிக்கப்பட்டுள்ளன. ஆன்மீக குருநாதரிடமிருந்து பெறப்படும் பிரசாதத்தின் பொதுவான நன்மை மற்றும் முக்கியத்துவத்தைப் பற்றி, சாஸ்திரங்களைக் கற்றறிந்த உங்களுக்கு விளக்க வேண்டியதில்லை.

ஏழைகள் மற்றும் ஆதரவற்றவர்களை மட்டுமே குறிப்பிடுவதன் காரணம், இந்த வர்க்கத்தின் மீதான பாபாவின் அன்பையும் அக்கறையையும் குறிப்பாகக் கோடிட்டுக் காட்டுவதே ஆகும். மனிதகுலத்தின் பொது மேம்பாட்டிற்கான அவரது அனைத்து நடவடிக்கைகளும் ஒருபுறமிருக்க, இந்த ஏழை, ஆதரவற்றவர்கள் மீதான அதீத ஆர்வம் இதயத்தில் இருப்பதால், அவர்களின் முன்னேற்றத்திற்காக அவர் எப்பொழுதும் பணிபுரிகிறார்.

ஸ்ரீ பாபா வெறுமனே போதிப்பதில்லை, ஆனால் ஆன்மீகத்தை, தானே கடைப்பிடித்து, தனிப்பட்ட முன் உதாரணமாகப் பிறருக்கு அதை நடைமுறை படுத்துகிறார். ஆகவே, உழைப்பின் கௌரவம் குறித்து அவரது ஆசிரமங்களில் அதிகம் வலியுறுத்த முடியாது. ஒரு நடைமுறை எடுத்துக்காட்டாக, ராஹுரியில் அமைந்த அவரது புதிய ஆசிரமத்தில், ஆன்மீக ரீதியில் திகைத்துப்போய், இறை-போதைக்குள்ளான பைத்தியக்கார தோற்றத்தில் இருப்பவர்கள், அவரால் அழைத்துவரப்பட்டு, தனிப்பட்ட முறையில் நடத்தப்படுவதோடு, அவர் ஒரு பரிபூரண குருநாதர் என்ற முறையில் ஆன்மீக உந்துதலையும் அளிக்கிறார். அவர் தனது தனிப்பட்ட 'தொடுதல்' மூலமாக அனைத்து நன்மைகளையும் வழங்கும் விதத்தில் அவர்களைத் தனது கைகளால் நீராட்டி, உணவு ஊட்டுவது மட்டுமல்லாமல், அவர் தனது பல நெருக்கமான மண்டலி அனைவரையும் அவருடன் இணைந்து பணிபுரியச் செய்கிறார். உலகில் அக்கறையற்றவர்களாக, வீதிகளில் அலைந்து திரிந்து, அவர்களின் உடலையும் பொருட்படுத்தாமல், இவ்வாறு இறை-போதையில் இருக்கும் ஆத்மாக்களுக்கு உண்மையான, தன்னலமற்ற சேவையை வழங்குவதற்கான திறன்களையும் மண்டலிக்கு வழங்குகிறார்.

ஆன்மீக குருநாதராக, உலகெங்கிலும் உள்ள பணக்காரர்கள், ஏழைகள் அனைவரையும் ஒரே மாதிரியாகப் பார்ப்பதால், இனம், சாதி, மதம், நிறம் ஆகியவற்றில் பாகுபாடு காண்பது, தானம் வாங்குவதை ஊக்குவிப்பது அல்லது வறுமையை பாவமாக்குவது போன்ற எந்தவொரு கருத்திற்கும் முற்றிலும் இடமில்லை.

கேட்காவ்மில் வாழும் நாராயண் மஹாராஜுக்கு மண்டலி பின்வரும் தொலைத்தந்தியை அனுப்பினர்:

பிப்ரவரி 15, 1937

சத்குரு மெஹர் பாபாவின் பிறந்தநாள் விழாவிற்கு பிப்ரவரி 17, 18ஆம் தேதிகளில் நாசிக், திரிம்பக் சாலையில் அமைந்த மெஹர் ரிட்ரீட்டில் உங்கள் வருகையை நாங்கள் விரும்புகிறோம்.

- மெஹர் பக்தி மண்டலி.

சத்குரு நாராயண் மஹாராஜால் விழாவில் கலந்து கொள்ள முடியாததன் காரணம் எங்கும் பதிவு செய்யப்படவில்லை.

ஏறக்குறைய ஆறு வாரங்களாக இரவு பகலாக, மெஹர் பாபாவின் 43ஆவது பிறந்தநாளை மெஹர் ரிட்ரீட்டில் கொண்டாட, வேண்டிய ஏற்பாடுகள் முழு வீச்சில் நடந்து கொண்டிருந்தன. மிகப்பெரிய அளவிலான இந்த விழாவிற்காக வரும் விருந்தினர்களைத் தங்க வைக்க, பெரிய கூடாரம் ஒன்று அமைக்கப்பட்டது. ராம்ஜூ, ஆதி சீனியர், ருஸ்தம் ஆகியோர் இந்த வேலையில் மும்முரமாக இருந்தனர்; பிப்ரவரி 15 அன்று பெண்டு, பாதிரி, விஷ்ணு, சிது ஆகியோர் மெஹராபாத்திலிருந்து அவர்களுக்கு உதவ வந்தனர். ஒவ்வொரு நாளும் உற்சாகம் அதிகரித்தது; மேலும் மேற்கத்திய அன்பர்கள் குறிப்பாக, குருநாதரின் கிழக்கத்திய பக்தர்களை சந்திக்கவும், கோலாகலமான இந்த விழாவைக் கண்டுகளிக்கவும் ஆர்வமாக இருந்தனர்.

காலம் இப்படிக் கருத்துரை வழங்கியது: "உலகம் அமைதி, இன்பம் இரண்டையும் அயராது தேடிவருகிறது, ஆனால் அந்த மகிழ்ச்சியில் 'தெய்வீக மதுபானம்' இல்லை. இந்த தெய்வீக மது போதையுடன் ஒப்பிடும்போது, உலக இன்பமும் மகிழ்ச்சியும் நிழல்களைத் தவிர வேறொன்றுமில்லை. முற்பிறவியின் நற்பயனால் பெறப்பட்ட அதிர்ஷ்டம் ஒன்றுதான் இந்த தெய்வீக மதுவை அடைய வழிவகுக்கும். உலகின் மொத்த புதையலை அளித்தாலும் அதில் ஒரு துளியைக் கூட வாங்க முடியாது; ஏக்கத்தால் தவிக்கும் இதயம் மட்டுமே அதன் விலையைச் செலுத்த முடியும். ஆற்றொணா தாகத்தால் கொழுந்துவிட்டு எரியும் இதயம், மதுபான சத்திரத்தை அணுகும் தருவாயில், அதன் கதவுகள் திறக்கப்படுகின்றன!"

அந்த ஆண்டு நாசிக் நகரில் அவரது பிறந்தநாள் போன்ற நல்ல சந்தர்ப்பங்களில், மெஹர் பாபா தனது மதுபான சத்திரத்தின் கதவுகளைத் திறந்து வைத்து, தெய்வீக அன்பை அள்ளி வழங்குகிறார், மேலும் ஒவ்வொரு நபரின் பங்கும் அவரவர் ஏக்கத்தின் தீவிரத்திற்கு ஏற்ப இருந்தது. மும்பை, பூனா, அஹமதுநகர், நாக்பூர், கராச்சி மற்றும் இந்தியா முழுவதும் உள்ள தொலைதூர இடங்களிலிருந்து இதுபோன்ற தாகம் நிறைந்த ஆத்மாக்கள், நாசிக் நகரை நோக்கி திரள்திரளாக வந்தன, மேலும் அவர்களின் பக்தியின் நறுமணத்தால் நகரம் மலர்ந்தது. நாக்பூரிலிருந்து பப்பா ஜெஸவாலா (PAPPA JESSAWALA) குடும்பத்தினர், மும்பையிலிருந்து தாதாசாஞ்சி குடும்பத்தினர் நரிமனுடன் வந்தனர். பிப்ரவரி 16 அன்று பூனாவிலிருந்து மெமோ (ஷிரீன்மாய்) வந்து சேர்ந்தார்; கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான

அன்பர்கள் தனது புதல்வனின் பாதங்களைப் பக்தியுடன் தொழுவதைப் பார்த்து, தாயார் மகிழும் நாள். ஷெரியார்ஜியின் சகோதரர் கோடாதத் காக்காவும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

இரண்டு நாள் நிகழ்ச்சியில் பங்கெடுக்க வந்த ஆயிரக்கணக்கானோருக்கு தங்குமிட வசதிகளை ஏற்பாடு செய்வது சிறிய, எளிதான காரியமல்ல; தவிர, பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு உணவு தயார் செய்வது மிகப்பெரிய முயற்சியாக இருந்தது. ஆனால் பாபாவின் பார்வை அதை சாத்தியமாக்கியது.

1937 பிப்ரவரி 17 புதன்கிழமை காலை, ஆதவன் அடிவானத்தில் தோன்றி குருநாதரின் தரிசனத்தை முதன்முதலில் பெற்றுக்கொண்டது. அதன் ஒளி, இறைவனின் அன்பு பிரசாதத்தைப் பெற்றுக்கொள்ள காத்திருக்கும் மக்கள் கடலை நீராட்டியது. முதல் நாள் பொது தரிசன நாளாக இருந்தது. பாபா, உடை மற்றும் தானிய மூட்டைகளை ஏழைகளுக்கும் வறியவர்களுக்கும் இனிப்பு லட்டுக்களுடன் விநியோகிக்க விரும்பினார். விதானத்தின் கீழ், பாபாவின் இருக்கைக்கு அருகில், மூட்டைகள் பெரிய குவியல்களாக அடுக்கி வைக்கப்பட்டன.

மெஹர் பாபா, காலை எட்டு மணிக்கு, பிரதான இல்லத்திலிருந்து நடந்து சென்றார். மதுபான சத்திரத்தின் கதவுகள் திறந்த நிலையில், "சத்குரு மெஹர் பாபா மஹாராஜுக்கு ஜெய்!" என்ற மக்களின் கோஷம் அவரது ஒவ்வொரு நடையிலும் ஒலித்தது! தேவதூதர்களும், தேவதைகளும் தங்கள் பேரின்பத்தை சபித்து, பாபாவின் அன்பர்கள் அனுபவித்த மகிழ்ச்சி ஆரவாரத்தைக் கண்டு பொறாமைப்பட்டனர். இத்தகைய இடிமுழக்கம் போன்ற குரலோசைகளுடன் கூடிய வழிபாடுகளுக்கு மத்தியில், பாபாவின் அற்புதமான அழகைக் கண்டு, "இறை-மனிதன் (GOD-MAN), தனது வாழ்நாளில் இதுபோன்ற வழிபாட்டினை முந்தைய காலகட்டத்தில் எப்போதேனும் பெற்றதுண்டா?" என காலம் பிரமிப்பில் ஆழ்ந்தது.

மெஹர் பாபா மேடையில் தனது இருக்கையில் அமர்ந்து கொண்டு, பிரசாதத்தை வழங்கத் தொடங்கினார். அழைத்துவரப்பட்ட ஏழை எளிய மக்களை நீள் வரிசையில் நிற்க வைத்து, ஒவ்வொருவராக பாபாவின் முன்னால் அழைத்துச் செல்லப்பட்ட வேளையில், ஆயிரக்கணக்கான மக்கள், கூட்டம் கூட்டமாக, உற்சாகத்துடன் நடக்கும் நிகழ்வுகளைப் பார்த்துக் கொண்டிருந்தனர். பாபா, ஒரு கையால் பொட்டலத்தைப் பிரசாதமாகக் கொடுத்து, தலை தாழ்த்தி வணங்கி, மற்றொரு கையால் அந்த ஏழையின் கால்களைத் தொட்டு, பின்பு தனது நெற்றியைத் தொட்டார்; இதன் மூலமாக, பாபா அவர்கள் இதயத்தில் நிறைந்திருக்கும் இறைவனை வணங்கினார்!

இப்படி ஒவ்வொரு நபராக, பாபாவின் முன்னால் அழைத்துச் செல்லப்பட்டு, காலை எட்டு மணி முதல் மாலை ஆறு மணி வரை இந்த நிகழ்ச்சி, தொடர்ந்து நடைபெற்றது, மேலும் அந்தப் பத்து மணி நேரத்தில் 10,000க்கும் அதிகமானோர் பாபாவின் பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டனர்.

ஆண்களில் இருபத்தைந்து பேர் கூட்டத்தை வரிசையில் சீராக வைத்து, ஒவ்வோர் ஏழை ஆணும் பெண்ணும் ஒருமுறை தரிசனம் செய்த பின்பு, மீண்டும் மீண்டும் வருவதைத் தடுக்க, ஆண் அல்லது பெண்ணின் கை, சாயத்தில் நனைக்கப்பட்டு சிவப்பு நிறத்தில் இருந்தது. சில நேரங்களில் அவர்களின் உற்சாகத்தில், ஏழை மக்கள் தங்கள் வரிசையிலிருந்து வெளியேறுவதைத் தடுக்க மண்டலி மிகவும் சிரமப்பட்டனர். பெருங்கடல் மேல் நுரை உருவாகி, சில நீர்த்துளிகளைப் பொங்கி எழச் செய்தது போலத் தோன்றியது!

ஒரு கட்டத்தில், கட்டுக்கடங்காத கூட்டத்தை மண்டலியால் சமாளிக்க முடியாத நிலை ஏற்பட்டது. ஆனால் மெஹர் பாபாவின் மௌனமான எச்சரிக்கை, கூட்டத்தைத் தங்கள் உணர்வு நிலைக்குக் கொண்டு வந்து, அமைதியை மீட்டெடுத்தது. ஏழைகளுக்கு இறை-மனிதனின் பிரசாதத்தோடு அவரது தனிப்பட்ட ஸ்பரிசத்தைப் பெறுவதற்கும் இது ஓர் அரிய வாய்ப்பாகும்; மேலும் வரிசையில் காத்திருக்கும் பலர், பாபா, பொட்டலங்கள் விநியோகிப்பதை நிறுத்திவிடுவதானால் வாய்ப்பை இழக்க நேரிடும் என்றும் நினைத்திருக்க வேண்டும். ஆனால் தரிசனத்திற்காக வந்த ஒவ்வொருவருக்கும் பாபா பொட்டலங்களை மணிக்கணக்கில் அள்ளி வழங்கினார்.

தரிசனம் பிற்பகலையும் தாண்டி, தொடர்ந்து கொண்டிருந்த வேளையில், மண்டலியில் ஒருவர் பாபாவின் பின்னால் சாய்ந்து, முதுகு வலிக்கிறதா என்று கேட்டார். பாபா உடனே, "**எனது முதுகு வலிக்கும் வலியில், அது வலியற்றது போல் ஆகிவிட்டது**!" என்று பதிலளித்தார்.

சோர்வுடன் சிரித்துக்கொண்டே பாபா, "**முழுப் பரிணாம செயல்முறையும் இன்று எனது முதுகெலும்பு வழியாக இயங்குகிறது. எனக்கு மரியாதை செலுத்த வருபவர்களின் பாதங்களைத் தொடுவது இதுவே முதல் முறை. அவர்கள் என்னில் இறைவனைத் தொழும்போது, நான் அவர்களில் நிலைகொண்டிருக்கும் தெய்வீகத்தன்மைக்கு அடிபணிகிறேன்.**"

தொடர்ந்து, மெஹர் பாபா மேற்கத்திய அன்பர்களிடம், "**நான் தருகிறேன், நான் பெறுகிறேன். பாபாவாக நான் கொடுத்தேன்; துன்பப்படும் ஏழைகளைப் போலவே நான் பெற்றுக்கொண்டேன்**" என்று குறிப்பிட்டார்.

இப்படி, ஒவ்வொரு சுற்றுக்குப் பின் சுற்றாக, தெய்வீக மதுபானத்தை ஊற்றிக் கொடுக்க கொடுக்க, சத்திரம் காலியாகி கொண்டிருந்தது. இதைப் பார்த்துப் பார்த்து, தாகமற்றவர்கள் கூட வேட்கையை உணரத் தொடங்கினர்! அபூர்வமாக அழுத கண்களும் கலங்கி கண்ணீர் சிந்தின! உலகால் உறைந்துபோன இதயங்களும், கண்ணீரால் இறை மனிதனின் பாதங்களைக் கழுவ முன்னோக்கி விரைந்தன!

மெஹர் பாபாவிடமிருந்து அன்பின் ஊற்று, தொடர்ச்சியாக நீரோடை போலப் பாய்ந்தது; இறை நாட்டம் மிக்கவர்கள் அவரது சமுத்திரத்தில் மூழ்குவதற்காக ஏங்கினர்; தங்கள் இல்லங்களையும், வேலைகளையும், குடும்பங்களையும் மறந்து, இன்பப் பரவசத்தில் மூழ்கினர். பல நாட்களுக்குப்

பின்னர், அமைதியான ஓரிடத்தில் தங்களைத் தாங்களே தனிமைப்படுத்தி, அந்த ஆழ்ந்த உணர்வை அனுபவிப்பதைத் தவிர வேறொன்றையும் அவர்கள் விரும்பவில்லை.

இந்த விழாவில் கலந்துகொண்ட ஆயிரக்கணக்கான மக்கள், மகிழ்ச்சி பொங்கும் அன்பின் ஆரவார அலையை உள்ளூர உணர்ந்தனர். அந்த உணர்வை வார்த்தைகளால் விவரிக்க முடியாது; அனுபவிக்கத்தான் வேண்டும்.

இசை முழக்கத்தில், எல்லா இடங்களிலும் மக்கள் நிரம்பி வழிந்தபோதிலும், பாபாவின் கடைக்கண் பார்வையில் எதுவும் விழாமல் இல்லை. ஒரே பார்வையில் முழுப் பிரபஞ்சத்தையும் நோட்டமிடும் கண்கள், எதையாவது அல்லது அருகில் உள்ள எவரையாவது எப்படிக் காணாமல் இருக்க முடியும்? ஒரு வயதான பெண்மணி, முதல்முறை பிரசாதத்தைப் பெற்ற பிறகு, மீண்டும் வரிசையில் வந்து நின்றார். அவரது சிவப்பு நிற உள்ளங்கையைப் பார்த்து, விஷ்ணு அந்தப் பெண்மணியை வரிசையிலிருந்து அகற்ற முயன்றார்; பாபா உடனடியாக அந்த வரிசையை நிறுத்தி, விஷ்ணுவை அழைத்து, அவரை அறைந்தார்!

இதைத் தாங்க முடியாமல் அந்த பெண்மணியின் இதயம் நெகிழ்ந்தது: "தேவா! எனது தவறை மன்னியுங்கள். அது அவருடைய தவறு அல்ல, என்னுடையது. நான் உங்களிடம் இரண்டாவது முறையாக வருகிறேன்!" இந்த நேரத்தில், பாபா அந்தப் பெண்மணியைத் தழுவி, விஷ்ணுவிடம் அவரது இரண்டு குழந்தைகளுக்கும் உணவளிக்கும்படிக் கட்டளையிட்டார், மேலும் அந்தப் பெண்மணியை, குழந்தைகளுடன் மறுநாள் உணவுக்காக அழைக்கும்படியும் கூறினார்.

மாலை ஆறு மணிக்கு, பிரசாதம் வழங்கி முடிந்ததும், பாபா இருக்கையை விட்டு வெளியே வந்து, அடுத்த நாள் நடைபெறவிருக்கும் விருந்து மற்றும் இதர நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளைக் கண்டறியச் சென்றார். பாபா மேற்கத்திய அன்பர்களை, அவரிடம் அழைத்தபோது ஏறக்குறைய நள்ளிரவாகிவிட்டது. பாபா படுக்கையில் சிரமப்பட்டு, குப்புறப் படுத்திருந்தார்; முற்றிலும் களைத்துப் போயிருந்தார். மேற்கத்திய அன்பர்கள் அவரைச் சுற்றி அமர்ந்தபோது, பாபா சிரமப்பட்டு படுக்கையில் அமர்ந்தார். பாபா தொடர்ந்து பத்து மணி நேரம் அளித்த தரிசனத்தில் பக்தர்களின் இதயங்கள் நிரம்பி வழிந்தன (மதிய உணவுக்காக பாபா பதினைந்து நிமிடங்கள் மட்டுமே தரிசனத்தை நிறுத்தினார்). அனைவரும் பாபாவை ஓய்வெடுக்குமாறு கேட்டுக்கொண்டனர். ஆனால், பாபா அந்நிலையிலும் ஒவ்வொருவரையும் பார்த்து, "**இன்றைய செயல்பாட்டைப் பற்றியும், எனது உலகளாவிய பணியில் இது எதைக் குறிக்கிறது என்பதையும் நான் உங்களுக்கு விளக்க விரும்புகிறேன்**" என்று கூறினார்.

அவர் ஓய்வெடுத்து, அடுத்த நாள் வரை விளக்கத்தைத் தள்ளிப்போடுமாறு மேற்கத்திய அன்பர்கள் அவரிடம் மன்றாடினர்; ஆனால் இதுவே சரியான நேரம் என்று பாபா வலியுறுத்தி, விளக்கத் தொடங்கினார்:

உலகளாவிய மனமும் எல்லையற்ற உணர்வும் உலகளவில் பணி புரிவதற்கான எண்ணிலடங்கா வழிகளைக் கொண்டுள்ளன. உலகளாவிய மனதையும் எல்லையற்ற உணர்வையும் கொண்ட எந்த ஒரு குருநாதரின் பணியும் பிரபஞ்சத்தில் அதிர்வலைகளை எதிரொலிக்கச் செய்து, எதிர் வினைகளை உருவாக்குகின்றன. அவர் உபவாசம் இருந்தால், அதன் விளைவு பிரபஞ்சம் முழுவதும் ஆன்மீக ரீதியில் உணரப்படுகிறது. ஒரு குருநாதர் எப்பொழுதுமே ஆன்மீக விளைவைக் கருத்தில் கொண்டுதான் பணி புரிகிறார். அவர் கடைப்பிடிக்கும் மௌனமும் அதே விளைவைத்தான் கொண்டு வருகிறது.

இப்போது, உலகம் பயங்கரமான பொருளாதார குழப்பத்தில் சிக்கித் தவிக்கிறது. ஆன்மீகப் பாதையைப் பின்பற்றவும், ஆன்மீகத்தை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு மனதைப் பக்குவப்படுத்தி இயக்கவும், பொருளளவிலான தேவைகளில் ஓரளவிற்குத் திருப்தி அடைந்தால் மட்டுமே போதும். நான் எனது கைகளால் ஏழைகளுக்கு உணவு, உடைகளை வழங்கும்போது, இதன் விளைவு உலக பொருளாதாரம் மற்றும் பொருள் வளத்திலும் ஏற்படும். நான் மனநோயால் பாதிக்கப்பட்டவர்களையும், தொழுநோயாளிகளையும் நீராட்டி அல்லது கழுவி சுத்தம் செய்வது, அசாதாரண அல்லது இயல்பு நிலையை இழந்தவர்களை, சாதாரண இயல்பு நிலைக்குக் கொண்டுவரும்; மேலும் தொழுநோயாளிகள் குணமடைவார்கள் அல்லது அவர்களின் எதிர்கால பிறவிகளின் எண்ணிக்கை, கணிசமான அளவு குறைந்துவிடும்.

உங்களில் ஒருவரை நான் ஒரு தொழுநோயாளியை நீராட்ட அல்லது சுத்தம் செய்யச் சொல்லும்போது, நீங்கள் அவ்வாறு செய்வது, இரண்டு விதமான அனுகூலத்தை விளைவிக்கும். முதலில் நீங்கள் கடினமான பணியைச் சமாளிக்கும் விதத்தில் பயிற்சியளிக்கப்படுகிறீர்கள், இது இறுதியில் ஆன்மீக நிலைப்பாட்டில், உங்கள் அகந்தையைப் படிப்படியாக அகற்றும்; இரண்டாவதாக, எனது கட்டளைகளுக்கு முற்றிலும், எந்தக் கேள்விக்கும் இடம்தராமல், கீழ்ப்படியும் பழக்கம் உருவாகும்.

உதாரணமாக, மௌனத்தைக் கடைப்பிடிக்குமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்ளும் வேளையில், உங்கள் கீழ்ப்படிதல் அந்த வகையில் போதுமான உறுதிப்பாட்டுடன் இருந்தால், இதுபோன்ற பிற கடினமான பணிகளில் எனக்குக் கீழ்ப்படிய நான் உங்களை நம்பியிருக்க முடியும். மேலும், நீங்கள் எனதருகில் இணைந்திருப்பதால், உபவாசம், மௌனம், தொழுநோயாளிகளை நீராட்டுவது அல்லது சுத்தப்படுத்துவது, இதுபோன்ற எனக்கான உங்கள் முழுப் பணியிலும் மாற்றத்தை உருவாகச் செய்யும்.

இந்த விஷயத்தை, அரை மணி நேரம் விளக்கிய பிறகு, பாபா தனது 40 நாள் உபவாசத்தை, தேநீர், சிற்றுண்டியுடன் நிறைவு செய்தார். நள்ளிரவு ஒரு மணியளவில் அவர் மேற்கத்திய அன்பர்களை, படுக்கைக்குச் சென்று ஓய்வெடுக்குமாறு அறிவுறுத்தினார். அவரது அளவிறுதியற்ற நிலையின்

ஆழத்தில், பாபா துன்பப்படுபவர்களின் துன்பத்தை தானே அனுபவித்து, அதனால் விளையும் வேதனையை ஒரு புன்னகை மற்றும் அன்பான பார்வையுடன் தாங்கிக்கொண்டார். அவரது இரக்கமிக்க புன்னகை, துயரத்தில் இருப்பவர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்த அதேவேளையில், அவர் களைத்துப் போய் இருப்பதை அனைத்து அன்பர்களும் மறந்துவிட்டனர்.

1937, பிப்ரவரி 18 மெஹர் பாபாவின் உண்மையான பிறந்தநாளைக் கொண்டாடும் நாள். பாபா காலை 5 மணிக்கு எழுந்தபோது, பிரமாதமான புத்துணர்ச்சியுடன் காணப்பட்டார்; உடனடியாக விருந்திற்கு வேண்டிய அனைத்தையும் மேற்பார்வையிடவும், தனிப்பட்ட முறையில் கண்காணிப்பதிலும் ஆர்வமாக இருந்தார். மகிழ்ச்சியூட்டும் புன்னகையுடன், பாபா மேற்கத்திய அன்பர்களை வாழ்த்தி, **“ஒவ்வொரு விஷயத்தையும் நானே மேற்பார்வையிடும் ஒரு மோசமான அவதார பழக்கம் எனக்கு உள்ளது!”** என்றார்.

எட்டு மணிக்கு மெமோ பாபாவின் பாதங்களை, பால், தேன் போன்றவற்றால் அபிஷேகம் செய்தார். அவ்வாறே பெண் மண்டலியைத் தொடர்ந்து ஆண் மண்டலியும் செய்தனர். இந்த விழாவில் மேலை நாட்டினரும் பங்கேற்றனர். பின்பு, பால் பிரசாதமாக வழங்கப்பட்டது. அவ்வேளையில் ஒவ்வொருவரும் தரிசனத்திற்காக வரிசையில் நின்றனர்; பெரும்பாலான பக்தர்கள் மலர் மாலைகளைக் கொண்டு வந்தனர். பாபா, பால்-கலந்த-காஃபி நிறத்தில் ஒரு பட்டு ஜாக்கெட் அணிந்து, தனது அன்பர்களை சந்திக்கும் போது மிகவும் ஒளிரும் முகத்துடன் தோற்றமளித்தார். தரிசன வேளையில் பஜனைகள் பாடப்பட்டன. அவரது அன்பின் போதையில் இருந்தவர்களுக்கு இந்த நாள் விழாக்கோலம் மிக்க திருநாளாக இருந்தது.

முதல் நாள் பிரசாதம் பெற்றுச் சென்ற ஆயிரக்கணக்கான மக்கள் ‘தெய்வீக மதுபானத்தின்’ வாசனையை மட்டுமே நுகர்ந்து சென்றனர்; அதுவே மக்களை இந்த அளவிற்கு வெறித்தனமாக்கும்போது, உண்மையில் அதைப் பருகியவர்களின் நிலையை என்னென்பது?

மெஹர் பாபாவின் முஸ்லிம் பக்தர்களில் ஒருவர், ‘ஸெஹரா’ (SEHERA - பாரம்பரிய பழக்கமாக ஒரு முஹமதிய மணமகன் தலையில் சூடும் மலர் கிரீடத்துடன் கூடிய நீண்ட முக்காடு) ஒன்றை பாபாவின் தலையில் சூடியபோது, பாபா, மிகவும் அழகாகத் தோற்றமளித்தார்; மகிழ்ச்சி பொங்கும் புன்னகையோடு பாபா அதை ஏற்றுக்கொண்டார்.

இரண்டு நாட்களிலும் அற்புதமான அறுசுவை விருந்து வழங்கப்பட்டது, கிழக்கத்திய மற்றும் மேற்கத்தியர்கள் அனைவரும் தரையில் ஒன்றாக அமர்ந்து அதை அனுபவித்து மகிழ்ந்தனர். வாழை இலைகளில் பரிமாறப்படும் உணவை, மேற்கத்திய ஆண்களுக்கும் பெண்களுக்கும் தங்கள் கைகளால் உண்ணத் தெரியாததால், மெமோ, அவர்களுக்கு அதை விளக்க முயன்றார், அதே நேரத்தில் குல்மாய் மதிய உணவிற்காக தரையில் விரிக்கப்பட்ட பாய்களில் அமர்ந்து,

நடைமுறையில் அவர்களுக்குக் கற்றுத் தந்தார். இந்த நிகழ்வை ‘மும்பை இம்பீரியல் ஃபில்ம்’ நிறுவனம் (IMPERIAL FILM COMPANY OF BOMBAY) திரைப்படமாக எடுத்தது. நாசிக், அஹமதுநகர், துலியா (DHULIA), மும்பை, பூனா ஆகிய இடங்களிலிருந்து வந்த பாடகர்களால் நாள் முழுவதும் இசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

இந்த நிகழ்ச்சிக்காக, அரன்காவ்ம் கிராமவாசிகளின் ஒரு குழு, பல கிராமிய நடனங்களை நிகழ்த்தினர். மால்கம், வில், டாக்கே, ஸோமா தேசாய், அங்கல் பிளீடர் ஆகியோர் மெஹர் பாபாவைப் புகழ்ந்து குறுகிய உரைகளை நிகழ்த்தினர். ‘ஆன்மீக பிறப்பு’ குறித்த மெஹர் பாபாவின் செய்தியை ருஸ்தம் வழங்கினார்:

**பிறப்பு என்பது பூமியிலுள்ள எல்லா உயிரினங்களுக்கும் பொதுவானது. உலகில் வாழும் முக்கியத்துவம் அளிக்கப்படாத உயிரினங்கள், அனிச்சையான வாழ்க்கையை வாழ்ந்து, நிச்சயமற்ற இறப்பை சந்திப்பது போலல்லாமல், மானிடர்களின் பிறப்பு முக்கியமான ஒன்றைக் குறிக்கிறது என்ற மிகையான விழிப்புணர்வுடன் இருந்தால், ஒருவேளை அவற்றின் பரிணாம வளர்ச்சியின் இறுதி கட்டமாக அமையும். இங்கேயிருந்து, அவை இனி தானியங்கும் கருவிகளாக இல்லாமல், விதியின் அதிபதிகளாக இருந்து, விரும்பியபடி வாழ்வை வடிவமைத்து, வழிநடத்த முடியும். இதன் அர்த்தம் என்னவெனில், மனிதர்கள், கீழ் நிலை பரிணாம செயல்முறைகளின் அனைத்து இடர்பாடுகளையும் கடந்து, அதன் வெற்றியை, வெகுமதியை வலியுறுத்தி, இந்த வாழ்க்கையிலேயே ‘ஆன்மீகப் பிறப்பை’ வாழவேண்டும்; அடுத்த பிறவியில் பார்த்துக்கொள்ளலாம் என்ற வாக்குறுதி மற்றும் உள்ளடக்கத்தோடு திருப்தி அடையக்கூடாது.**

**ஒருவர் எவ்வளவு விரைவில் மனதிற்கு ஒவ்வாத சூழ்நிலையிலிருந்து பின்வாங்கி, ‘எங்கிருந்து வந்தோம்? எங்குச் செல்கிறோம்?’ என்ற அகநோக்குப் பார்வையுடன் கூடிய கேள்விகளுக்கு, விடைகாணும் ஆர்வம் மற்றும் ஏக்கம் நிறைந்தவராக இருக்கிறாரோ, அந்த அளவிற்கு நிச்சயமாக அவர் ஆன்மீகப் பிறப்பை அடைந்ததாகக் கூறலாம்.**

**இந்த அமைதியான மனநிலையை அடைந்த அடுத்த கணமே ஒருவர், தானாகவே, தன்னை அறியாமலே உலகப்பொருட்கள் சார்ந்த சூழல்களை மறுசீரமைத்து, தான் உலகத்துடன் இணக்கமாகவும் சமாதானமாகவும் இருப்பதைக் காண்கிறார். பழமைவாதம், சகிப்பின்மை, இறுமாப்பு, சுயநலம் ஆகியவை அடியோடு விலகிவிடும்.**

**அனைத்தும் ஒரு புதிய அர்த்தத்தோடு, புது நோக்கைக் கண்டுகொள்ளும். பாவியும், துறவியும் ஒரே கடலின் மேல் தவழும், மாறுபட்ட அளவிலான அலைகளாகத் தோன்றும். இது பிரபஞ்சத்தில் உள்ள சக்திகளின் இயற்கையான விளைவு, இடம், காலம் மற்றும் காரணத்தால் நிர்வகிக்கப்படுகிறது. துறவிக்கு இடத்தின் பெருமையோ, பாவிக்கு நித்திய**

**சீரழிவின் களங்கமோ இல்லை. எவருமே முற்றிலுமாக இழப்பதுமில்லை, எவரும் விரக்தியில் நம்பிக்கையை இழக்கவேண்டிய தேவையுமில்லை.**

**'எங்கிருந்து வந்தோம், எங்குச் செல்கிறோம்?' என்ற கேள்விகளுக்கான விடையைக் கண்டுகொள்வதற்கான முயற்சியே, கவலைப்படும் உலகிற்கு நான் வழங்கும் அருமருந்து.**

**பூமியில் அனைவருக்கும் தொடக்கமும் முடிவும் ஒன்று; மேலும் இவ்வுலக வாழ்க்கை ஒரு மகிழ்ச்சியான இடைவெளிக்காட்சி என்ற அறிவு, மனிதனின் சகோதரத்துவத்தை, பூமியில் நடைமுறையாக்குவதில் மிகுந்த வெற்றியை அடையச் செய்யும்; இது குறுகிய, ஏமாற்றி வாழும் வர்க்கத்தை வேரோடு தாக்கும். இதுவே வாழ்க்கையின் நோக்கம் என்பதை உணர நான் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிக்கிறேன்.**

பூனாவைச் சேர்ந்த பஜனைப் பாடகர் மாஸ்டர் கிருஷ்ணா, மாலையில் தொடங்கி, இரவு 1:30 மணி வரை நடத்திய இசை நிகழ்ச்சியைக் கேட்டு பாபா மகிழ்ச்சி அடைந்து, அவரைப் பாராட்டினார். இந்த நேரத்தில், மேற்கத்தியர்கள் சோர்வாக இருந்ததால், பாபா அவர்களை அவரவர் அறைக்கு அனுப்பி வைத்தார். இரவில் குளிர் அதிகமாகிக் கொண்டிருந்த வேளையில், ரானோ தனது நீலம் மற்றும் வெள்ளை நிற, குறுக்காகக் கோடிட்ட சால்வையை பாபாவிற்கு அனுப்பி வைத்தார். அது யாருடையது எனக் கேட்டறிந்து, பாபா, உடல்நிலை சரியில்லாத காரணத்தால், பாபாவின் தரிசனத்திற்காக வர முடியாத அவரது பக்தர்களில் ஒருவருக்கு அதை அனுப்பினார்.

இரண்டு நாள் கொண்டாட்டம் இன்று வரை பாபாவின் பிறந்தநாளில் மிகப் பெரியது, மேற்கத்திய அன்பர்களுக்கு இது ஒருபோதும் மறக்க முடியாத அனுபவமாக இருந்தது. பல ஆண்டுகளாக, பாபா தனது பிறந்தநாளைக் கொண்டாடுவதை நிறுத்திவிட்டார், ஆனால் அவர் தனது உலகளாவிய பணி காரணமாக, 1937இல் அதை அனுமதித்தார். அவரது இறை கீதத்தின் எதிரொலியால் உலகை ஏக இறைவன்பால் ஈர்ப்பது, அவரது அனைத்து பணிகளிலும் முக்கியமான அம்சமாகும்! இதை ஒரு விண்ணுலக நிகழ்வு, உலக வரலாற்றில் பொறிக்கப்பட்ட பொன்னான நாள் என்றே கூறவேண்டும். ஆனந்தக் கண்ணீர் அவரது அன்பர்களின் இதயங்களைத் தூய்மைப்படுத்தியது; சாதி, மதம், நிறம் போன்ற அனைத்து வேறுபாடுகளையும் அவர்களின் மனதிலிருந்து அழித்துவிட்டது; இந்தக் கண்ணீரின் ஓட்டத்தில் அனைத்து பிணைப்புகளும் வேறுபாடுகளும் தூய்மைப்படுத்தப்பட்டன, வந்தவர்கள் இறைவனின் பாதங்களில் ஒன்றிணையும் வேட்கையை உணர்ந்தனர்.

இரண்டு நாள் விழா நிறைவுற்றதும், பாபாவின் பக்தர்கள் அவரது அளவிலா அன்பை இதயங்களில் தாங்கிக்கொண்டு, தத்தமது இல்லங்களுக்குச் சென்றனர். பிறந்தநாள் நிகழ்வுகளின் போது, மேற்கத்திய அன்பர்கள், முதன்முறையாக குருநாதரின் பாதங்களைக் கழுவும் இந்திய வழக்கத்தைக் கண்டனர். இதன் நோக்கத்தை பாபா பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் விளக்கினார்:

**உடலின் மிகவும் கீழ் பாகத்தில் அமைந்த பாதங்கள் ஆன்மீக ரீதியில் மிகவும் மேன்மையானவை. உடல் ரீதியாக, பாதங்கள் எல்லாவற்றையும் கடந்து செல்கின்றன - நல்லது, தீயது, அழகு, அசிங்கம், சுத்தம், அசுத்தம் - இருந்தும் அவை எல்லாவற்றிற்கும் மேலாக உள்ளன. ஆன்மீக ரீதியில், ஒரு பரிபூரண குருநாதரின் பாதங்கள் பிரபஞ்சத்தில் தூசி போல் இருக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக உள்ளன!**

**மக்கள் ஒரு பரிபூரண குருநாதரிடம் வந்து, அவரது பாதங்களைத் தலையால் தொடும்போது, அவர்கள் தங்கள் மனப்படிவங்களின் சுமையை அவர் மீது வைத்து விடுகிறார்கள். ஒரு சாதாரண மனிதன் நடக்கும் போது, தனது கால்களில் தூசியை சேகரிப்பது போல், ஒரு சத்குருவின் பாதங்கள் பிரபஞ்சம் முழுவதிலுமிருந்தும் மனப்படிவங்களை சேகரிக்கின்றன. இந்த மனப்படிவங்களின் பாரத்தைக் குறித்து இயேசு குறிப்பிடுகையில், "உழைப்பின் சுமையைத் தாங்கும் நீங்கள் அனைவரும் என்னிடம் வாருங்கள்; நான் உங்களுக்கு ஓய்வு தருகிறேன்" என்று குறிப்பிட்டார்.**

**ஆன்மீக குருநாதரை ஆழமாக நேசிப்பவர்கள், இயன்றவரை அவரது சுமையைக் குறைக்க விரும்புகிறார்கள், அவரது பாதங்களை, தேன், பால் அல்லது நீரால் கழுவ வேண்டும். தேன், சிவப்பு நிற மனப்படிவங்களையும்** (ஆழ்மனம்), **பால், வெள்ளை நிற மனப்படிவங்களையும்** (சூட்சும அல்லது பிராணம்); **மற்றும் நீர், மஞ்சள் நிற மனப்படிவங்களையும்** (பௌதீக அல்லது திடப்பொருள்) **குறிக்கின்றன. சில பக்தர்கள் அவரது பாதங்களில் தேங்காயை அர்ப்பணிப்பது, மனதைப் பிரதிபலிப்பதோடு, முழு விருப்பத்துடன் சரணடைதலை அடையாளப்படுத்துகிறது.**

விழா முடிந்து, நாசிக் நகரிலிருந்து திரும்பும் வேளையில், வழியில் பல விபத்துக்கள் நிகழ்ந்தன - ஆர்வமூட்டும் முறையில், குருநாதரின் பணியுடன் இதுவும் ஏதோவொரு வகையில் தொடர்புடையது என்பதில் சந்தேகமில்லை - ராஹுரி பஸ் (மினூ கராஸூடன்) மற்றும் லக்கேஜ் வேன் (கலிங்கட், மாஸாஜியுடன்) இரண்டும் விபத்துக்களை சந்தித்தன; அரன்காவ்ம் கிராமத்திற்குச் செல்லும் இருபது பேருந்துகளில் ஐந்து அல்லது ஆறு பேருந்துகள் நிறைவு செய்யப்படாத வாய்க்கால் பாலத்தில் மோதியது. ஒருவேளை, அனைத்திலும் மிகக் கடுமையான விபத்து, பாதிரி ஓட்டிச்சென்ற காரிலிருந்து (தவ்லத்மாய், ஃபிரீனிமாசி, குல்மாய், பிரோஜா ஆகியோர் பயணம் செய்தனர்) குல்மாய், பிரோஜா இருவரும் வெளியே வீசப்பட்டனர், குல்மாய்க்குத் தலையில் காயம் ஏற்பட்டது.

பாதிரியிடமிருந்து பிப்ரவரி 20 அன்று விபத்து குறித்த செய்தி வந்ததும், பாபாவும் ஆதி சீனியரும் உடனடியாக அஹமதுநகருக்குப் புறப்பட்டனர்.

ஆதி, இயற்கையாகவே, தனது தாயைப் பற்றிய கவலையுடன் அமைதியின்றிக் காணப்பட்டார். அதையும், பரபரப்பான இரண்டு நாள் விழாவையும் கருத்தில் கொண்டு, ராஹுரி செல்லும் வழியில், பாபா, ஆதியிடம்,

**“தீவிரமான செயல்பாடுகளுக்கு மத்தியிலும், மனம் அமைதியாக இருந்தால், அதுவே மிக உயர்ந்த அன்பு!”** என்று குறிப்பிட்டார்.

வெவ்வேறு விபத்துக்களில் சம்பந்தப்பட்ட நபர்கள், அவரது ஆசீர்வாதத்தால் மரணத்திலிருந்து காப்பாற்றப்பட்டனர் என்பதையும் மெஹர் பாபா வெளிப்படுத்தினார்.

பாபா, குல்மாயை, குஷ்ரு குவாட்டர்ஸில், மெஹராபாத் செல்வதற்கு முன்பு சந்தித்தார்.

1937, பிப்ரவரி 20ஆம் நாள், நாசிக் புறப்படுவதற்கு முன்பு, மெஹர் பாபா கேரெட் ஃபோர்டை வட இந்தியா சுற்றுப்பயணத்திற்காக, ஒரு மாதம் அனுப்பி வைத்தார். சாஞ்சி அவருடன் ரயிலில் மும்பைக்குச் சென்ற மறுநாள் இரவு கேரெட் அங்கிருந்து புறப்பட்டார். போபால் (BOPAL), உஜ்ஜைன் (UJJAIN), குவாலியர் (GWALIOR), ஆக்ரா (AGRA), டெல்லி (DELHI), பெனாரஸ் (BENARES), அலஹாபாத் (ALLAHABAD) போன்ற இடங்களுக்கு அவர் செல்ல இருந்தார். ஒரு கவர்ச்சிமிக்க ஹாலிவுட் வாழ்க்கை முறையில் பழகியதால், நாசிக் நகரில் இருந்த இரண்டு மாதங்களுக்குப் பிறகு, கேரெட் அமைதியற்றவராகிவிட்டார், எனவே பாபா அவரை இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து, மேற்போக்காக வெவ்வேறு இடங்களைப் பார்க்கவும், திரைப்படத் திட்டத்திற்கான பின்னணிப் பொருட்களை சேகரிக்கவும் அனுமதித்தார். பாபா சில கட்டுப்பாடுகளை விதித்திருந்தாலும், ஃபோர்ட் கேரெடின் சுற்றுப்பயணம் இதர மண்டலி உறுப்பினர்கள் அனுபவித்ததைப் போலக் கடுமையானதாக இல்லை, பிளீடர் போன்றவர்களை பாபா உணவுக்காக யாசிக்குமாறு உத்தரவிட்டிருந்தார். கேரெட் புறப்படுவதற்கு முன்பு, பாபா அவருக்கு, பின்வரும் நிபந்தனைகளின் பட்டியலை வழங்கினார்:

- **முதல் வகுப்பு ஹோட்டல்களில் தங்க வேண்டாம், ஏனெனில் எளிய வாழ்க்கையை நடத்துவதன் மூலம் நீங்கள் உண்மையான இந்திய வாழ்க்கையை அறிந்து கொள்ள முடியும்.**
- **மிகக் குறைந்த தரத்திலான ஹோட்டல்களிலும் தங்க வேண்டாம்; இடைப்பட்ட வகையைத் தேர்வு செய்யவும்.**
- **மாமிசம், மீன் உண்ண வேண்டாம். முட்டை, காய்கறிகள், பால், பழ வகைகள் உணவாக இருக்கட்டும்.**
- **போதை தரும் மதுபானம், ஆல்கஹால் போன்றவற்றைத் தவிர்க்கவும்.**
- **எந்தவொரு காம செயலிலும் ஈடுபடக் கூடாது.**
- **தற்காப்பு தவிர வேறு எந்த சூழ்நிலையிலும் எவரையும் தாக்க வேண்டாம்.**
- **பாபாவைப் பற்றி எவரிடமும் விசாரிக்கவோ அல்லது தெரிவிக்கவோ கூடாது.**
- **எவருடனும் அரசியல் கலந்துரையாடல்களில் ஈடுபட வேண்டாம்.**

- **மதம், ஆன்மீகம் போன்ற விஷயங்களைக் குறித்து வினவுவதில் ஆட்சேபனை இல்லை.**
- **திரைப்படம் பற்றி விவாதிப்பதில் ஆட்சேபனை இல்லை; அதில் உதவ விரும்பும் நபர்களை நீங்கள் சந்திக்கலாம்.**
- **உள்ளூர் யோகி அல்லது துறவியை நேரடியாக சந்தித்து விசாரிப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை, ஆனால் அவர்களுக்குப் பணம் கொடுப்பதைத் தவிர்க்கவும்.**
- **உங்கள் முழுப் பயணத்தையும் இரண்டாம் வகுப்பு ரயிலில் பயணம் செய்யுங்கள்.**
- **ஒவ்வோர் இடத்திலிருந்தும் பாபாவிற்கு ஒரு கடிதத்தை அனுப்புங்கள். ஏதேனும் ஆபத்தை சந்திக்க நேர்ந்தால் தொலைத்தந்தி அனுப்பவும்.**

ஆன்மீக ரீதியான காதற்செயலின் கற்பனை நயம் மிக்க ‘இன்ட்-யா’ (IND-YA) வில் ஒரு கவர்ச்சியான சாகசத்தை மேற்கொள்வது மற்றும் அற்புதமான விஷயங்களைக் அவருக்கு வெளிப்படுத்தும் ஆன்மீக ரீதியில் முன்னேறிய ஆத்மாக்களை எதிர்கொள்வது போன்ற எண்ணங்கள் நிறைந்த மனதுடன் கேரெட் ஃபோர்ட் நாசிக் நகரிலிருந்து புறப்பட்டார். எவ்வாறாயினும், அவரது கனவுகள் நிறைவேறியதாக இல்லை. பிப்ரவரி 25 அன்று குவாலியரிலிருந்து, நாசிக் நகரில் வாழும் இதர மேற்கத்திய நண்பர்களுக்கு அவர் எழுதினார்:

இதுவரை, வேப்பமரத்தின் கீழிருந்து, இருண்ட நிற, தலைப்பாகை அணிந்த அன்னியர்கள் எவரும் சைகையால் என்னை அழைக்கவோ அல்லது மறைந்திருக்கும் கிழக்கத்திய நாட்டின் ரகசியங்களை வெளிப்படுத்த என்னை இருண்ட மூலைகளுக்கு அழைத்துச் செல்லவோ இல்லை! ஆனால் நான் நம்பிக்கையை இன்னும் கைவிடவில்லை. இந்தப் பயணம் - இந்தியாவின் சிவந்த மண் தூசியில் பாதியை என் உடல் உறிந்து கொண்டாலும் - ஏறக்குறைய ரசனை இல்லாத ஒன்றாகவே இருந்தது.

மார்ச் 2 அன்று கேரெட் ஆக்ராவிலிருந்து, பாபாவிற்கு எழுதினார்:

ஆன்மீக அனுபவத்துடன் தொடர்பு படுத்தும் வகையில் எதுவும் இந்தப் பயணத்தின் போது இதுவரை நிகழவில்லை. ஒரு விதத்தில் இது எனக்கு ஏமாற்றமாக உள்ளது, ஏனெனில் பால் பிரண்டனைப் (PAUL BRUNTON) போன்ற ஒரு மனிதர் கூறும் ஆன்மீக அனுபவங்களை நானும் எதிர்பார்க்கிறேன்…

பாபா, சாஞ்சி மூலம் கேரெட் ஃபோர்டிற்கு எழுதினார்:

**எந்தவிதமான ஆன்மீக பயிற்சியோ, நோக்கங்களோ அல்லது அனுபவங்களையோ கருத்தில் கொண்டு, பாபா உங்களை இந்தப் பயணத்தில் அனுப்பினார் என்ற எண்ணத்தை உங்கள் மனதிலிருந்து விலக்கிவிட்டு, மனதை சீராக வைத்துக் கொள்ளுங்கள்! அதையே எண்ணி மனம் சஞ்சலமடையாதீர்கள். திரைப்படம் தொடர்பான பணியை மனதில் வைத்து, பயனுள்ள குறிப்புகளைக் கண்டுபிடிக்க உங்களால் முடிந்தவரை முயற்சி செய்யுங்கள்.**

மெஹர் ரிட்ரீட்டில் வாழும் இதர மேற்கத்திய அன்பர்களைப் பொறுத்தவரையில், அவர்களின் வாழ்க்கையை நிர்வகித்த விதிமுறைகள் ஓரளவு தளர்த்தப்பட்டன. உதாரணமாக, ஆண்களும் பெண்களும் ஆசிரம வளாகத்தை விட்டு வெளியே பஜாரில் கடைகளுக்குச் சென்று வேண்டிய பொருட்களை வாங்க அனுமதிக்கப்பட்டனர், ஆனால் சில நிபந்தனைகள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டியிருந்தது:

- **எவரும் நடனம், கிளப் அல்லது வேறு எந்த பொழுதுபோக்கு இடத்திற்கும் செல்லக்கூடாது, வளாகத்திற்கு வெளியே எந்த விளையாட்டுகளிலும் பங்கேற்கக்கூடாது.**
- **அன்னியருடன் பேசக்கூடாது, அவசரமாகத் தேவைப்பட்டாலொழிய, அல்லது எந்த அறிமுகமானவரையும் பார்க்கச் செல்லக்கூடாது.**
- **காலை 10:00 மணியிலிருந்து, மாலை 4.00 மணிக்கிடையே எவரும் நடந்து அல்லது மிதிவண்டியில் வெளியே செல்லக்கூடாது.** (இது வலுவான சூரிய கதிர்களின் தாக்கம் காரணமாக நடைமுறையில் இருந்தது.)
- **எல்லோரும் உணவுக்காக சரியான நேரத்தில் ரிட்ரீட்டில் இருக்க வேண்டும்.**
- **கா஠பி தவிர, வீட்டில் தயாரிக்கப்படாத எதையும் யாரும் உண்ணவோ, அருந்தவோ கூடாது.**

**"இது இறக்கைகள் கட்டிவைக்கப்பட்ட சுதந்திரம்"** என்று பாபா குறிப்பிட்டார். மேலும் கூறுகையில்:

**மார்ச் 16ஆம் தேதி முதல் உருது பாடங்கள் மீண்டும் தொடங்க உள்ளன. பிரச்சினைகள் எதுவும் இல்லாமல் அவரவர் பணியை, மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் உருது மொழியிலிருந்து விடுமுறை அளிக்கப்படும் - மேலும் ஒவ்வொரு மாதத்திலும் மூன்று நாட்கள், நீங்கள் சுற்றுலா பயணமாக நாள் முழுவதும் (காலை எட்டிலிருந்து மாலை எட்டு மணி வரை) வெளியே செல்ல அனுமதி வழங்கப்படுகிறது.**

**பிங்-பாங் (PING-PONG), பூப்பந்து (BADMINTON) போன்ற உடற்பயிற்சிக்கான விளையாட்டுகளில் ஈடுபடுவது மிகவும் நல்லது என்று கேரெட் என்னிடம் இரண்டு முறை குறிப்பிட்டுள்ளார். நான் உங்களுக்கு ரூ 50 தருகிறேன், அதில் நீங்கள் பிங்-பாங், பூப்பந்து, டெக் டென்னிஸ் (DECK TENNIS) உபகரணங்கள் மற்றும் நீங்கள் விரும்பும் வேறு எதையும் வாங்கலாம்.**

**நீங்கள் ரிட்ரீட்டிலிருந்து வெளியே செல்வது தொடர்பாக நான் வழங்கிய கட்டுப்பாடுகளின் பட்டியலை நீங்கள் அனைவரும் நன்கு படித்துப் புரிந்துகொள்ள வேண்டும். கட்டளைகளின் ஒரு நகலை வைத்து நீங்கள் அதை சரியாகப் புரிந்து கொள்ளும் வரைப் படிக்கவும், பின்னர், எதுவும் தெளிவாக இல்லை என்று சொல்ல வேண்டாம்!**

**கோடைக்காலம் விரைவில் வருவதால், வாரத்திற்கு ஒரு முறைக்கு பதிலாக 20 நாட்களுக்கு ஒரு முறை மட்டுமே மெஹராபாத்திற்குப் பயணம் செய்வோம்.**

**கோடைக்காலத்திற்குப் பிறகு, மறுபடியும் வாரத்திற்கு ஒரு முறை அல்லது ஒவ்வொரு பத்து நாட்களில் செல்வோம். மார்ச் 15ஆம் நாள் நீங்கள் அனைவரும் என்னுடன் மெஹராபாத் செல்கிறீர்கள்.**

அவர்கள் மாதத்திற்கு ஒரு முறை சுற்றுலாவிற்குச் செல்லலாம் என்று பாபா அறிவித்திருந்தார்; இது குறித்த மேலும் பல வழிமுறைகளை அவர்களுக்கு வழங்கினார்:

**உங்கள் சுற்றுலா நாட்களில் வழக்கமான கடமைகளுக்கும் தியானத்திற்கும் விடுமுறை. நீங்கள் 8:00 மணிக்கு வெளியே சென்று இரவு 8:00 மணிக்கு முன் திரும்பி வரவேண்டும். உணவை வெளியே வாங்க முடியாது என்பதால், எல்லா உணவையும் உங்களுடன் எடுத்துச் செல்லலாம். நோரினா இதைப் பார்த்துக்கொள்வார். பகல் 10:00 மணியிலிருந்து 4:00 வரை நிழலில் அமரவேண்டும்.**

**கார்களில் சிரமமில்லாமல் பயணம் செய்ய, மூன்று குழுவாகப் பிரித்து, வேறுவேறு நாட்களில் பயணம் செய்யலாம். இதனால் சிலர் எப்பொழுதும் ரிட்ரீட்டில் இருப்பர், மேலும் சுற்றுலா செல்ல விரும்பாதவர்கள் இங்கு அமைதியாக இருக்க முடியும். எலிஸபெத் அவரது காரை அவரே ஓட்டுவதால் பலமுறை சுற்றுலா செல்லும் வாய்ப்பைப் பெறுகிறார்.**

கிட்டத்தட்ட எப்பொழுதும், எலிஸபெத், நோரினா, வில், மேரி பேக்கெட் ஆகியோர் சுற்றுலா செல்வதில் ஆர்வம் காட்டாமல் ரிட்ரீட்டில் இருக்க விரும்பினர். ஆனந்த் பள்ளத்தாக்கு (ANAND VALLEY) போன்ற இடங்களுக்குச் செல்ல, குறிப்பாக ஆர்வத்துடன் இருந்தவர்கள் ரானோ, கிட்டி, டிலியா, மார்கரெட், ஆதி ஜூனியர் மற்றும் கலிங்கட். பாபா, கிட்டி, மார்கரெட், டிலியா மூவரையும் 'மூடர் மூவர்' (FRIVILOUS THREE) என்ற செல்லப்பெயரால் அழைத்தார். உல்லாசப் பயண வேளையில் மேற்கத்திய அன்பர்கள் பலர் சாஞ்சி, ஆதி ஜூனியர், ருஸ்தம் ஆகியோரைச் சுற்றி வளைத்துக்கொண்டு 'பாபாவுடனான அவர்களின் வாழ்க்கை கதைகளைக் கேட்க ஆர்வமாக இருந்தனர்' என்று ரானோ நினைவு கூர்ந்தார். இதன் காரணமாக அவர்கள் எப்பொழுதும் சுற்றுலா செல்வதில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தனர்.

ஒரு நாள் பிற்பகல், பாபா ஸர்ஸாத் (SARZAT) பங்களாவின் வராந்தாவிற்கு வந்து கைதட்டியதும், அனைவரும் ஒன்று திரண்டனர். பாபா, அவர்களுடன் சில விஷயங்களைப் பற்றி விவாதித்தார், உரையாடலின் நடுவே கிட்டி பக்கம் திரும்பி, "**நீங்கள் என்னை எப்படி நேசிக்க வேண்டுமோ அப்படி நேசிக்கிறீர்கள்**" என்று எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைத்தார்.

பிற அனைவரையும் நோக்கி, பாபா, "**ஏக இறைவனாகிய ஒருவரில் பலரை நேசிக்காதீர்கள், ஆனால் பலரில் ஒருவரான ஏக இறைவனை**

**நேசியுங்கள். நான் உங்களை ஒருபோதும் கைவிடாத ஒரே நண்பன்"** என்று குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், புலி வேட்டைக்காக ருஸ்தத்துடன் செல்ல கிட்டி ஒப்புக் கொண்டதைக் கேள்விப்பட்டபோது பாபா சற்று சீற்றமடைந்தார். இது அவர் அளிக்கும் சுதந்திரத்தை, சாதகமாகப் பயன்படுத்துவதாக உணர்ந்தார். 1937, மார்ச் 4 அன்று பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்:

நீங்கள் அனைவரும் '**எளிதில் உடைக்க முடியாத கொட்டைகள்!**' என்றார். "**பிக்னிக் நல்லது, நடைப்பயிற்சியும் சிறந்தது. பிங்-பாங் போன்ற விளையாட்டுகளும் உடற்பயிற்சிக்கு நல்லது.**

**"அப்படியானால், தினமும் நீச்சலுக்குச் செல்லலாம் அல்லது புலிகளை வேட்டையாடிக் கொல்லலாம் என்று அர்த்தப்படுத்தக் கூடாது. ருஸ்தம் புலியைச் சுட்டுக் கொல்வது போன்ற செயல்களை நீங்களும் செய்ய விரும்புகிறீர்களா?**

**"நீண்ட அல்லது குறுகிய நடைப்பயிற்சியை மேற்கொள்ளுங்கள், ஆனால் புதிய பரிந்துரைகள் எதுவும் வேண்டாம். கட்டுப்பாடுகளை கவனமாகப் படித்து, சொன்னபடிச் செய்யுங்கள். நான் உங்களை நேசிப்பதால்தான் இதைக் கூறுகிறேன்."**

மார்கரெட் பக்கம் திரும்பி, பாபா, "**புலிகளை வேட்டையாடிக் கொல்வதற்காக, நீங்கள் உங்கள் 'நடன' பள்ளியை ஏழை மேபெலிடம் விட்டுவிட்டு வரவில்லை, அப்படித்தானே?**" என வினவி, தொடர்ந்தார்:

**மாதம் ஒரு முறை உல்லாசப்பயணம் செல்வது சரி; நான் அதை நினைத்து மகிழ்ச்சியடைகிறேன்; ஆனால் இதர சலுகைகளை என்னிடம் கேட்க வேண்டாம். இது எனக்கு அதிருப்தியைத் தருகிறது. நீங்கள் சுற்றுலாவிற்கு வெளியே செல்வது எனக்குப் பிடிக்கவில்லை என்றால், நான் எலிஸபெத்திடம், 'நீங்கள் எப்பொழுது செல்கிறீர்கள்? நீங்களும் ஏன் செல்லக்கூடாது?' என்று கேட்டிருக்க மாட்டேன். ஒவ்வொரு நாளும் நீங்கள் பல மைல் தூரம் நடக்கச் செல்வது, அல்லது வேண்டிய பொருட்களை வாங்க பஜாருக்குச் செல்வதில், எனக்கு ஒன்றுமில்லை. ஆனால் நீங்கள் நதியில் நீராடவோ, அல்லது காட்டில் வேட்டையாடவோ செல்லக்கூடாது.**

**இதில் முக்கிய அம்சம் என்னவெனில், நீங்கள் புதிய பரிந்துரைகளை முன்வைக்கக்கூடாது. நான் உங்களுக்குக் கொடுப்பதை விட அதிகமாக கேட்க வேண்டாம். நான் ஒரு விரலை உங்களுக்குக் கொடுத்தால், முழுக் கையையும் பற்றிக்கொள்ள முயற்சிக்காதீர்கள்.**

**இப்போது நான் ஒருவருக்கு ஒரு சில சுதந்திரங்களை வழங்கியிருப்பதால், அதை அனைவருக்கும் வழங்க வேண்டும் என்று அர்த்தமல்ல. ஒருவருக்கு நல்லதாக இருப்பது, இன்னொருவருக்கு நல்லதாக இருக்கவேண்டும் என்ற தேவையும் இல்லை. இதை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும்.**

**நான் கூறியது போல, சுற்றுலா நாட்களில், தியானப் பயிற்சி மற்றும் உருது பாடங்களை நிறுத்தி வைக்கலாம், ஆனால் இது, சுற்றுப்பயணம் செல்லாதவர்களுக்குப் பொருந்தாது. அவர்களைப் பொறுத்தவரை தியானம், உருது வகுப்பு இரண்டும் முன்பு போலவே தொடரும். தியானம் மற்றும் உருது மொழியைக் கற்றுக்கொள்வதில் பலருக்கு வெறுப்பு உண்டு. தியானம் - உங்களில் சிலர் இதை விரும்புகிறார்கள், சிலர் விரும்புவதில்லை. நானும் வெறுக்கிறேன், ஆனால் நீங்கள் தியானிப்பதை நான் விரும்புகிறேன், ஏனெனில் அதில் நான் நேரடியாக உங்களுக்கு உதவுகிறேன்.**

**காதல் என்பது அதன் உயர்ந்த நிலையில் தியானம், ஆனால் அத்தகைய காதல் மட்டுமே பிரியமான தனது காதலரை (பிரியமான இறைவனை) ஒரு கணம் கூட மறப்பதில்லை. அப்போது தியானம் என்பது தேவையற்ற ஒன்றாக, மிகையானதாக மாறுகிறது. மஜ்னுன் லைலாவைத் தவிர வேறு எதையும் சிந்திக்கவில்லை. அனைத்திலும் லைலாவையே பார்த்தார்.**

**உருது கற்றுக்கொள்வது ஆமணக்கு எண்ணெய் போன்றது. ஆனால், உண்மையிலேயே நீங்கள் ஐந்து ஆண்டுகள் இங்கு தங்குவதற்குத் திட்டமிட்டால், நீங்கள் அதைக் கற்றுக் கொள்ள வேண்டும், எவ்வளவு விரைவில் கற்றுக்கொள்வீர்களோ அவ்வளவு சிறந்தது.**

பாபா பின்பு, சில கட்டாயமாகத் தெரிய வேண்டிய உருது வினைச்சொற்களில், குழுவிற்கு வினா-விடை போட்டி நடத்தினார்!

அன்றையதினம், மெஹர் பாபா தனது மௌனத்தைப் பற்றி குறிப்பிட்டார்:

**ஏறக்குறைய பன்னிரண்டு வருடங்களாக ஒரு வார்த்தைக்கூட என் உதடுகளைக் கடந்துபோகவில்லை. இருப்பினும் நான் ஒருபோதும் மௌனமாக இல்லை; காலவரம்பில்லாமல் எப்பொழுதும் பேசுகிறேன். ஆழ் இதயத்தில், ஆத்மாவிற்குள் ஆழமாகக் கேட்கப்படும் குரல் எனது குரல் - உத்வேகத்தின் குரல், உள்ளுணர்வால் வழிகாட்டும் குரல். இந்தக் குரலை ஏற்றுக்கொள்பவர்கள் மூலமாக நான் பேசுகிறேன்.**

**எனது வெளியளவிலான மௌனம் ஆன்மீக பயிற்சி அல்ல. ஒருமுறை பக்தர் ஒருவர், குருநாதரிடம் அவர் உபவாசம் இருப்பது ஏன் எனக் கேட்டபோது குருநாதர், "நான் இறைவனை நாடும் பக்தனல்ல; இறை உணர்வை அடைந்து பரிபூரணமானவன். ஆகவே நான் உபவாசம் மேற்கொள்ளுவது எனக்காக அல்ல, பிறருக்காக" என்று பதிலளித்தார்.**

**ஆன்மீகத்தில் நாட்டமுள்ளவர் பரிபூரண நிலையை அடைந்தவரைப் போல செயல்பட முடியாது, ஆனால் பரிபூரணமானவர் பிறருக்காக, ஆன்மீகத்தில் ஆர்வம் உள்ளவர் போல செயல்பட முடியும். கலைப் பட்டப்படிப்பைப் பெற்ற ஒருவர் குழந்தைகளுக்குக் கற்பிப்பதற்காக ஒரு**

**கற்பலகையில் எழுத்துக்களை எழுதும்போது அவர் கலைத் தேர்ச்சி பெற்றவர் அல்ல என்று அர்த்தமாகாது!**

**எனவே எனது மௌனமும் பிறரின் நன்மைக்காக மட்டுமே மேற்கொள்ளப்பட்டுப் பராமரிக்கப்படுகிறது.**

'ஆன்மீகம்' பற்றி பாபா கூறியதாவது:

**இதைப் படித்து அறிவது, அறியாமல் இருப்பதை விடச் சிறந்தது; இதைப் படித்து அறிவதை விட உணர்வது சிறந்தது; இதை உணர்வதை விட அனுபவிப்பது சிறந்தது; எல்லாவற்றிற்கும் மேலாக இத்துடன் ஒன்றாக இணைவது சாலச்சிறந்தது.**

பாபா தொடர்ந்து 'மூன்றாவது கண்' (THIRD EYE) பற்றி விளக்கினார்:

**கண்கள் முழு உணர்வு நிலையில் உள்நோக்கித் திரும்பும்போது, 'இந்தக் கண்'** (பாபா, அவரது நெற்றியின் மையத்தை சுட்டிக்காட்டி) **திறக்கிறது, அப்போது அக நிலையை மட்டுமே காணமுடிகிறது. இதைத்தான் நுண்ணறிவுத் திறன் என்பது. இதற்குப் பிறகு தேடி அடையப்படுவதே இறைநிலை.**

**இப்போது, நீங்கள் இறைநிலையை அடைய, இறைவனோடு ஐக்கியமாக ஏங்குகிறீர்கள், ஆனால் நீங்கள் ஐக்கியமாக இருக்க விரும்பும் அவரை இன்னும் காணாமலே இருக்கிறீர்கள். கண்கள் உள்நோக்கித் திரும்பி, இந்தக் கண் திறக்கும் தருவாயில் நீங்கள் ஏங்கித் தவிக்கும் ஏக இறைவனைக் காண்கிறீர்கள், மேலும் அந்த ஏக்கம் அதன் உச்ச நிலையை அடையும்போது இறைவனோடு ஐக்கியமாகிறீர்கள்.**

**கண்களை உள்நோக்கித் திருப்புவதை, தனது சொந்த முயற்சியால் தானாகச் செய்ய முடியாது. பயிற்சி மூலமாகவும் அவ்வாறு செய்ய முடியாது. இருப்பினும், இது ஒரு வினாடிக்கும் குறைவான நேரத்தில் குருநாதரால் செய்யப்படுகிறது. அப்போது நீங்கள் உங்களை, உங்களில் ஏக இறைவனாக, பரமாத்மாவாகப் பார்க்கிறீர்கள். எல்லாம் மாறிவிடும் - முற்றிலும் வித்தியாசமான ஒன்றாக மாறிவிடும்!**

மேரி பேக்கட் பாபாவிடம் வினவினார், "ஒருவர் ஏழாவது ஆன்மீக தளத்தை அடைந்து, கடவுளுடன் ஐக்கியமாவது வரை, எல்லாம் மாயை என்று நீங்கள் ஒருமுறை கூறினீர்கள். இடைநிலை ஆன்மீக தளங்களைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?"

அதற்கு பதிலளித்த பாபா இவ்வாறு விளக்கமளித்தார்:

**"ஐக்கியம் உண்மையானது, ஆனால் ஒரு வினாடியாக இருந்தாலும் கூட ஆன்மீக தளங்களைக் கடந்து செல்ல வேண்டியது அவசியம். ஒரு சத்குரு அல்லது அவதார புருஷர், விரும்பினால், அவர் உங்களை ஒரே நொடியில் ஏழாவது ஆன்மீக தளத்திற்கு எடுத்துச் செல்ல முடியும்,**

**ஆனாலும் அந்த ஒரே நொடியில் நீங்கள் ஆறு ஆன்மீக தளங்களையும் கடந்தாக வேண்டும்.**

**“ஒவ்வொரு ஆன்மீக தளமும் மிகவும் கவர்ச்சிகரமானதாக இருப்பதால் ஒவ்வொன்றை அடையும் போதும் அதையே இறுதி இலக்கு என ஆத்மா கருதுகிறது. மேலும், தொடர்ந்து செல்ல ஆர்வம் இல்லாமல் இருக்கிறது. தாஜ்மஹால் அருகே என்றென்றும் வாழ விரும்புவதாக கேரெட் கூறுகிறார்; அது மிகவும் அழகாக இருக்கிறதாம். முதல் ஆன்மீக தளமே அவ்வளவு அற்புதம். இந்நிலையில் ஒரு குருநாதர் உங்களுக்கு உதவாவிடில், நீங்கள் மேலே தொடர்ந்து செல்ல முடியாது.”**

மேலும் பல விளக்கங்களுக்குப் பிறகு, எழுத்துப்பலகை மூலமாக பாபா நிகழ்த்திய உரை நிறைவிற்கு வந்தது; அவர் கூட்டத்தில் ஒருவரிடம், “**இது உங்களுக்குத் தெளிவாகப் புரிந்ததா?**” எனக் கேட்டார்.

அந்த நபர், “இல்லை. நீங்கள் இப்படிப் பேசும்போது எனக்கு எல்லாமே குழப்பமாக உள்ளது!” என்றார்.

பாபா, சிரித்துக் கொண்டே, “**பாபாவை நேசியுங்கள்! நீங்கள் செய்ய வேண்டியது அவ்வளவுதான். வேடிக்கை என்னவெனில் நீங்கள் ஏற்கனவே ஐக்கியமாகத்தான் இருக்கிறீர்கள்! இது வேடிக்கையானதுதான். ஆனால் நீங்கள் அதைக் கடந்து செல்ல வேண்டும் - நீங்களும், எல்லோரும் அதைக் கடந்து செல்ல வேண்டும். 'நான் ஏற்கனவே எல்லையற்ற ஏக இறைவனோடு இருக்கிறேன், நான் எப்பொழுதும் எல்லையற்றவனாகவே இருக்கிறேன்' என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்**” என்றார்.

மால்கம் உடனே, “நாம் எப்படி ஐக்கியமாவதற்கும் அப்பால் சென்று தூய்மையானவர்களாக இருக்க முடியும்?” என்று கேட்டார்.

அதற்கு பாபா பதிலளித்தார், “**நீங்கள் 'சுய உறுதிப்பாட்டை', 'நிலையான இறைவனை' எப்படி உணர வேண்டும் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறீர்கள், அப்படித்தானே? மிகவும் அழகாக இருக்கிறது. அவர் அனைத்திலும் முக்கியமான ஒரே ஒரு விஷயத்தை மட்டுமே கேட்கிறார்! இது இரகசியமானதாகக் கருதப்படும் ஒன்றைப் பற்றி அறிந்துகொள்வது அல்ல, இது ஒன்றே உருவான ஏக இறைவனை உணர்வது! ஒருவர் சிறையில் அடைக்கப்படாவிட்டால், சுதந்திரத்தைப் பாராட்ட முடியாது. தண்ணீரில் பிறந்த மீன் தண்ணீரிலே வாழ்கிறது என்பதால், அது தண்ணீரை உணர முடியாது. அது தண்ணீரிலிருந்து வெளியே வந்து மீண்டும் தண்ணீருக்குள் சென்று தண்ணீரை அறிந்து கொள்ளும்.**”

நதீன், “அப்படியானால் நாம் அனைத்தையும் ஆசீர்வாதமாக எடுத்துக்கொள்ள வேண்டும், நம்முடைய கஷ்டங்களைக்கூட, இல்லையா?”

பாபா, “**ஆமாம் அனைத்தையும், ஆமாம். இனிப்புப் பண்டங்கள் மற்றும் எலுமிச்சை உணவு வகைகளைக் கூட! எல்லாமே ஆசீர்வாதம்**” என்றார்.

மறுநாள் காலை, 1937, மார்ச் 5 அன்று, பாபாவின் பிறந்தநாள் திரைப்படம் மும்பையிலிருந்து வந்தது. ஸர்கிள் சினிமாவில் பாபா மேற்கத்திய அன்பர்களுடன் அதைப் பார்த்தார்.

அன்று பிற்பகல், ஸையத் ஸாஹேப், மெஹர் பாபாவை சந்திக்க வந்தார். அவரது பன்னிரெண்டு வயது மகள் சமீபத்தில் காலமானதால், ஸையத் மிகவும் மனச்சோர்வுடன் காணப்பட்டார்; அந்த சிறுமி உயிரை துறந்ததால் அல்ல, ஆனால் அவள் அனுபவித்த துன்பங்களை நினைத்து வருந்தினார். அவர்களின் அறியாமையில், குடும்ப உறுப்பினர்கள் சிறுமிக்கு 'ஆவி' அல்லது பேயின் தொந்தரவாக இருக்கலாம் என நம்பி, வெவ்வேறு மனநல பரிகாரங்களைக் கையாண்டனர்.

ஸையத் ஸாஹேப் குடும்பத்தினருடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார், பல ஆண்டுகளாக மெஹர் பாபாவின் தொடர்பில் இருக்கும்போது, ஆவி தனது குழந்தையை எவ்வாறு தொந்தரவு செய்திருக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவரை ஆறுதல்படுத்திய பாபா, இவ்வாறு எடுத்துரைத்தார் **"உங்கள் மகளுக்கு ஆவியின் தொந்தரவு எதுவும் இல்லை; ஆனால் காசநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். எந்த ஓர் ஆவியும், எவ்வளவு சக்திவாய்ந்ததாக இருந்தாலும், என்னுடன் இருப்பவர்களைத் தொட முடியாது. அவை எனது வட்டத்து உறுப்பினர்களிடமிருந்து மைல்கள் தொலைவிற்கு ஓடிவிடும்!"**

மார்ச் 6 அன்று ஆதி சீனியர், பாபாவை நாசிக் நகரிலிருந்து ராஹுரிக்குக் காரில் அழைத்துச் சென்ற பாதையில், கடுமையான விபத்து ஒன்றைக் காண நேர்ந்தது.

திருமண குழுவுடன் சென்றுகொண்டிருந்த பேருந்து ஒன்று கவிழ்ந்து, மணமகன் உட்பட பதினாறு பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் இருவரை பாபா தனது காரில் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார். பிற அனைவரும் ராஹுரி மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டனர். பாபா மறுநாள் காலை மெஹராபாத் திரும்பிச் சென்றார்.

அடுத்த மூன்று நாட்கள் பாபா ராஹுரிக்கு வந்து, ஒவ்வொரு மாலையிலும் மெஹராபாத் திரும்பிச் சென்றார். கலக்கமான மனநிலையில் காணப்பட்ட ஆதியின் சகோதரி டாலி பெரும்பாலும் உண்ண மறுத்து வந்தார். 9ஆம் நாள் மாலை, பாபா, பால் மற்றும் ஜிலேபியை உணவாக அளித்தார். (முந்தைய நாள், மகன் பிறந்ததைக் கொண்டாட ஸரோஷ் கொண்டு வந்த இனிப்புப் பண்டம்).

மெஹர் பாபா, தொடர்ந்து பல இடங்களுக்குப் பயணம் மேற்கொள்வதற்கான கால அட்டவணை ஒன்றை ஏன் பராமரித்தார் என்பது, தனிப்பட்ட முறையில் கவனித்தவர்களுக்குக் கூட குழப்பமாக இருந்தது. 1937,

மார்ச் 9 அன்று டாக்கே.ஃபால்கர் தனது நாட்குறிப்பில் இவ்வாறு பதிவு செய்திருந்தார்:

ஸ்ரீ பாபா இங்கு (ராஹுரி) வந்தார், சரியாகக் கடிகாரம் எட்டு மணியை எட்டியதும், பாபாவின் கார் சாலையிலிருந்து கர்ஜனை செய்வது வழக்கம். இது என்னை மீண்டும் மீண்டும் சிந்திக்கத் தூண்டுகிறது; மெஹராபாத், நாசிக் மற்றும் ராஹுரிக்கு இடையே பாபா, காரில் ஏன் இவ்வளவு அதிகமாகப் பயணம் செய்கிறார் என்று எந்த ஒரு முடிவிற்கும் ஒருபோதும் என்னால் வரமுடியவில்லை. ஒருவர் அவரது பணியின் தொடர் வரிசையைப் பின்பற்ற முடியாது. இதில் மறைந்திருக்கும் மர்மம் உலகிற்கு நன்மை செய்வதற்கான அவரது ஒரே வழி. மனிதகுலத்தின் நன்மைக்காக அவர் இரவும் பகலும் உழைக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவரது பணி வெளியளவில் எந்தவொரு நிறுவப்பட்ட அமைப்பின் முறையான வேலைக்கும் உட்பட்டது அல்ல. அவர் நிச்சயமாக தனது சொந்த நன்மைக்காக உழைக்கவில்லை. அவர் எதைச் செய்தாலும் தம்மைப் பின்பற்றுபவர்களின் மற்றும் பிற மக்களின் நன்மைக்காக மட்டுமே செய்கிறார். அதனால்தான் அவரது பணியைப் பின்பற்றுவது கடினம். ஒருவரிடம் அவரது அருள் மழை பொழியும் வரை, ஒருவர் அந்தப் பணியைப் பாராட்ட முடியாது. அவருடைய அருளால் நாம் அவரிடம் செல்லும் வரை அவருக்குக் கீழ்ப்படிய முயற்சிப்போம்.

பாபா அவருடைய தனிப்பட்ட காரணங்களுக்காக, தனது பிறந்தநாள் விழாவிற்கு மஹாத்மா காந்தி வரவில்லை என்ற ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார். ஆன்மீக நோக்கத்திற்காக மேலை நாட்டினரும், கிழக்கத்திய மக்களும் ஒன்றுகூடியதை காந்தி பார்க்க நேர்ந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்றார். பாபா கூறியபடி சாஞ்சி, காந்திக்கு கீழ்வரும் கடிதத்தை எழுதினார்:

5 மார்ச் 1937
நாசிக் ரிட்ரீட்.

அன்புள்ள காந்திஜி,

கடந்த பிப்ரவரி 11ஆம் நாள் நீங்கள் எழுதிய கடிதம் எனது கைகளுக்கு வந்தது. பல ஆண்டுகளுக்குப் பின்னர், இந்த முறை பெரிய அளவில் கொண்டாடப்பட்ட ஸ்ரீ பாபாவின் பிறந்தநாள், பல வழிகளில் ஒரு முக்கியமான சகாப்தத்தைக் குறித்தது. அதன் மிக முக்கியமான இரண்டு அம்சங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன்: ஒன்று, ஸ்ரீ பாபா ஆயிரக்கணக்கான மக்களின் பாதங்களைத் தொடுவது; இரண்டு, கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளின் மிகவும் நெருக்கமான பிணைப்பை உருவாக்குவது.

ஆன்மீக குருநாதரான ஸ்ரீ பாபா, கண்மூடித்தனமான தொண்டு நிறுவனங்களின் பாதிதூர முறைகளை நம்பவில்லை; இது பெரும்பாலான மேம்பாட்டுத் திட்டங்களின் சிறப்பு அம்சமாகும். இது போன்ற ஒரு சந்தர்ப்பம், உங்களிடமிருந்து இதன் தேவையைப் பற்றிய ஒரு கேள்வியைத் தூண்டியது,

வெகுஜன தொடர்பைக் கொண்டு வருவதற்காக, வேண்டுமென்றே உருவாக்கப்பட்டது; மேலும் வெகுஜன போஜனம் மற்றும் உடை வழங்குதல் (இந்திய வாழ்க்கையின் அம்சமாகத் திகழும் இத்தகைய தொண்டு நிறுவனங்களின் செயற்பாடுகள்) ஸ்ரீ பாபாவின் இறுதி வடிவமைப்பின் ஆர்வத்தில் செய்யப்படுகின்றன - அதாவது குருநாதரின் ஆன்மீக 'ஸ்பரிசத்தை' வழங்குதல்!

பிப்ரவரி 17 அன்று ஆயிரக்கணக்கான மக்களுக்கு, தானியங்கள், உடை மற்றும் இனிப்பு லட்டுக்களை விநியோகித்த போது, ஸ்ரீ பாபா தனது பிரசாதத்தைப் பெறும் ஒவ்வொருவரின் பாதங்களையும் அவரது கைகளால் தொட்டார், குஜராத்தியில், நாங்கள் இதை அடிபணிதல் (BOWING DOWN - பகே பட்வா) என்று அழைக்கிறோம். இந்தப் பிரசாதம், ஏழை, பணக்காரன், சாதி, மத வேறுபாடு எதுவும் இல்லாமல், அதை அடையப்பெற வந்த அனைவருக்கும் வழங்கப்பட்டது. இந்தப் பிரசாதத்தின் ஆன்மீக முக்கியத்துவத்தை இக்கடிதத்திலிருந்து நீங்கள் புரிந்து கொள்ளலாம்; இதைப் 'பிச்சைக்காரர்களுக்குச் செய்யும் உதவி' என்று நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டதை நாங்கள் காண்கிறோம்.

இந்த விழாவின் மற்றுமொரு முக்கியமான அம்சம், ஸ்ரீ பாபாவின் மேற்கத்திய அன்பர்கள், முதன்முறையாக இந்திய அன்பர்களுடனும் பிற மக்களுடனும் சுதந்திரமாகக் கலந்து, அனைத்திலும் பகிரங்கமாக பங்கேற்றதுடன், ஒரே இடத்தில் 'அமர்ந்து' அனைவருடனும் உணவை உண்டனர். அனைத்து வகுப்புகள் மற்றும் மதங்கள் - இந்துக்கள் (பிராமணர்கள் மற்றும் தீண்டத்தகாதவர்கள்), முஸ்லிம்கள், பார்சிகள், ஈரானியர்கள், கிறிஸ்தவர்கள் (மேற்கத்திய, இந்திய மக்கள்), அனைவருமே ஸ்ரீ பாபாவுடன் ஒரே இடத்தில் (மட்டத்தில்) இருந்தது, எப்பொழுதுமே இல்லாத அளவிற்கு, அன்பையும் சகோதரத்துவத்தையும் வெளிப்படுத்துவதன் ஆதாரமாகத் திகழ்ந்தது. என்றென்றும் அன்புடன்.

அதற்கு பதிலளித்த மஹாத்மா காந்தி சாஞ்சிக்கு இவ்வாறு எழுதினார்:
மார்ச் 10, 1937
ஸெகாவ்ம், வர்தா.

என் அன்பான தாதாசாஞ்சி,

17ஆம் தேதி என்ன நடந்தது என்று நீங்கள் என்னிடம் சொன்னதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இருப்பினும், இப்போதைக்கு, உங்கள் பார்வையில் நான் பார்க்க முடியவில்லை. நீங்கள் விவரித்த நிகழ்வுகளையும், நீங்கள் சொல்வது போலவே இனி என்ன நடக்கும் என்பதையும், ஒரு நாள் நான் புரிந்துகொள்வேன் என்று நம்புவோம். நிச்சயமாக, அனைத்து சாதிகள், வகுப்புகள், பணக்காரர்கள், ஏழைகள் மற்றும் அனைத்து தேசிய இனங்களும் இதற்கு முன்னர் ஒரே குழுவில் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டு, அன்பு மற்றும் சகோதரத்துவ உணர்வில் ஒன்றாக அமர்ந்து உண்டதுண்டு. இது ஒரு புதிய நிகழ்வு அல்ல.

ஆனால் பார்வையின் கோணங்கள் வேறுபடும்போது ஒரு விஷயத்தைப் பற்றி விவாதிப்பது பயனற்றது.

1937, மார்ச் 11ஆம் நாள், மெஹர் பாபா ஆண் மண்டலியை அழைத்து அவர்களுக்கு விளக்கினார்:

**வெளிப்படையாகவும், நியாயமாகவும் இருப்பது நேர்மையான நபர்களின் தரம் மற்றும் சிறப்பியல்பைக் குறிக்கும்; அவர்கள் விஷயங்களை இதயத்தில் வைத்திருப்பதை விட அல்லது மக்கள் முதுகின் பின்னால் சொல்வதைக் காட்டிலும் என்ன நினைக்கிறார்கள் என்பதை வெளிப்படையாகச் சொல்லும் தைரியம் படைத்தவர்கள்.**

**'பெருமளவில் வெளிப்படையான' அந்த குணத்தில் சிலர் பெருமிதம் அடையும் அதே வேளையில் வெளிப்படையாக விஷயங்களைப் பேசாதவர்களை வெறுக்கிறார்கள்.**

**ஆனாலும், ஒருவர் பாகுபாடு காட்ட வேண்டிய நேரங்கள் உள்ளன. சில நேரங்களில் சிறந்த நோக்கங்களுடன் பேசப்படும் விஷயங்கள் சூழ்நிலையை முற்றிலுமாகக் கெடுத்துவிடும்; அந்த இடத்தில் மௌனம் சாதித்திருந்தால் உதவியாக இருந்திருக்கும்.**

**உணர்ச்சி வசப்படும் மற்றும் வேக மனப்பான்மை உள்ள ஒரு நபர், ஒன்றை கேட்கும் மனநிலையில் இல்லாத வேளையில், சிறந்த நோக்கங்களுடன் பேசப்படும் சொற்களையும் தவறாகப் புரிந்துகொள்கிறார். அத்தகைய நபர் ஆத்திரத்தில் செயல்படலாம், ஒன்றை மிகைப்படுத்திக் கூறலாம் மற்றும் சிறந்த நண்பர்கள் அல்லது நலம் விரும்பிகளுக்கு எதிராக பாரபட்சம் காட்டலாம். இதன் மூலமாக அவர் அறிவுரைகள் மற்றும் ஞானத்தின் சொற்களின் பயனை இழக்கிறார்; அதுவே, அமைதியான தருணங்களில் நன்றாக புரிந்துகொண்டு, உண்மையைப் பாராட்டும் தருவாயில் அவருக்கு நல்ல பயனுள்ளதாக அமைந்திருக்கும். ஆகவே, எந்த விஷயமும், எப்பொழுதுமே, வெளிப்படையாகச் சொல்லப்பட்ட சொற்கள் அல்லது விஷயங்களில் அல்ல, ஆனால் சரியான நேரம் மற்றும் அவை வைக்கப்படும் முறையில் உள்ளது.**

**மௌனமாக இருப்பதை இராஜதந்திரம் அல்லது பாசாங்குத்தனம் என்று தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டாலும், இறுதியில், அதிக அளவில் வெளிப்படையாக இருப்பதை மகிமைப்படுத்தும் நோக்கத்தை விட சிறப்பாகச் இருக்கும். சில நேரங்களில் மனிதகுலம் மகிமைப்படுத்தும் குணங்களில் மிகச் சிறந்தவை, சரியான நேரத்தில் பாகுபாடின்றி பயன்படுத்தப் படாவிட்டால், மிக மோசமான குறைபாடுகள் நிறைந்ததாக இருக்கும். .**

1937, மார்ச் 13ஆம் நாள், மெஹர் பாபா நாசிக் திரும்பி வந்தார். நாசிக் நகரில் நடந்த ஒரு சமய மாநாட்டில் மால்கம் கத்தோலிக்க பாதிரியார் ஒருவரை சந்தித்த போது, அவர் பாபாவைப் பார்க்க, பாதிரியாரை வலியுறுத்தினார், ஆனால் அவர் மறுத்துவிட்டார். மால்கம், பாபாவிடம் இதைக் கூறியபோது, அவரும்

அக்கறை காட்டவில்லை. இருப்பினும், மால்கமின் தூண்டுதலின் காரணமாக ஒரு சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த சந்திப்பின்போது, பாபா அவரிடம், "**முல்லாக்கள்** (முஸ்லிம் பாதிரியார்கள்) **அனைவரும் நல்லவர்கள்; போப் (**POPE**) நல்லவர்; ஆகா கான் (**AGA KHAN**) நல்லவர்; பண்டிதர்கள்** (HINDU SCHOLARS - **இந்து அறிஞர்கள்) நல்லவர்கள். ஆனால் சங்கராச்சாரியாரால்** (தலைமை இந்து பண்டிதர்) **மட்டுமே இறுதியில் மணிக்கணக்கில் பேச முடியும்!**" என்றார்

பாபாவின் வார்த்தைகளைக் கேட்ட பாதிரியார், அதைப் பெருமையுடன் மறுத்தார், "இது சங்கராச்சாரியார் அல்ல, ஆனால் முழு மாநாட்டிலும் நான் பேசினேன். சங்கராச்சாரியாரால் உறுதியாக, நம்பும்படியாகப் பேசமுடியவில்லை. அவர் என்னிடம் ஒரு வார்த்தைகூடப் பேச முடியவில்லை; நான் அவரைக் கடுமையாகக் கண்டித்தேன்."

"**ஆம்**," என்று பதிலளித்து, பாபா, "**இந்த முல்லாக்கள், சங்கராச்சாரியார் அனைவரையும் எச்சரிக்க வேண்டும். அவர்கள் விரிவுரைக்குத் தகுதியானவர்கள், சரியான பாடம் புகட்ட வேண்டும்.**"

"அவர்கள் நல்லவர்கள் என்று நீங்கள் இப்போதுதான் சொன்னீர்கள், உடனேயே அவர்களுக்கு விரிவுரை வழங்க வேண்டும் என்றும் சொல்கிறீர்களா?" பாதிரியார் கூறினார், "நீங்கள் சொல்வதை நான் புரிந்துகொள்ள முடியவில்லை."

பாபா, மேலும் விளக்குகையில், "**சங்கராச்சாரியார் மற்றும் உயர் பண்டிதர்களுக்கு, பெரிய தலைகள் உள்ளன - அவர்கள் புத்திஜீவிகள் - ஆனால் அவர்களுக்குக் குறுகிய இதயங்கள் உள்ளன. இருப்பினும், உங்களுக்கு நல்ல இதயம் உள்ளது**" என்று எழுத்துப் பலகையில் உச்சரித்தார்.

"**உலகில் கற்பிக்கப் பலர் உள்ளனர், ஆனால் கற்றுக்கொள்பவர் மிகக் குறைவு**" என்று பாபா மேலும் கூறினார்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" பாதிரியார் கேட்டார்.

"**அவர்கள் அனைவரும் கற்பிக்கிறார்கள், ஆனால் அவர்களில் எவரும் கற்றுக்கொள்ள விரும்பவில்லை - கற்பிப்பவர்களுக்கு உண்மைப்பொருளான கடவுளைத் தெரியாது!**"

**அதற்குப் பிறகு பாபாவின் வாழ்வில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை அவர் விவரித்தார்: "பெய்லி (**BAILY**) என்ற பெயரில் எனக்கு ஒரு பள்ளி நண்பர், அவருடன் கோலி விளையாடிய என்னைப் போன்ற ஒரு சிறுவன், இவ்வளவு உயர்ந்த நிலையை எப்படி எட்ட முடியும் என்பதை அவரால் நம்ப முடியவில்லை. அவருக்கும் எனக்கும் இடையிலான வேறுபாடு மிகவும் தனித்துவமானது, அவர் என்னை நம்பும் நோக்கத்தில், சில அற்புதங்களை ஆதாரமாகக் காண விரும்பினார். ஒரு நாள், பூனாவில் நான் வாழ்ந்த எனது குடிலில், பெய்லி ஏதோ எழுதிக் கொண்டிருந்தபோது, திடீரென மை பாட்டில் மேலும் கீழும் நடனமாடத் தொடங்கியது! அதைக்கண்டு அவர் உடல் புல்லரித்துப் போனது. சிறிது நேரத்தில், அவரது கையிலிருந்த பேனாவும் குதித்து நடனமாடத்**

**தொடங்கியது. அவர், 'பாபா! பாபா!' என்று கதறி சில நாட்கள் தொடர்ந்து அழுதார். அன்றிலிருந்து இன்று வரை அவர் எனது சக்திகளை நம்பினார், என் மீது நம்பிக்கை வைத்திருந்தார்.**

**"நான் அவரிடம் கூறினேன், 'முட்டாள், இந்தச் சிறிய நிகழ்வுகள் உங்கள் மனதில் ஆன்மீகத்தை நம்பவைக்க முடிந்தால், நீங்கள் ஏன் முஹமது சேல்** (MOHAMED CHHEL - நன்கு பிரபலமான தாந்த்ரீக மந்திரவாதி) **என்பவரைப் பின்பற்றக்கூடாது?'**

**"அனைத்து அற்புதங்களும் குழந்தையின் விளையாட்டுப் போல; அதே நேரத்தில் ஆன்மீகம் அதற்கெல்லாம் அப்பாற்பட்டது, மேலானது. அற்புதங்களுக்கு தனிப்பட்ட முறையில் ஆன்மீக மதிப்பு அல்லது முக்கியத்துவம் எதுவும் இல்லை. ஆனால் அவை அவசியமானவை, சில நேரங்களில், உண்மைப்பொருளையும் ஆன்மீகத்தையும் நம்ப வைப்பதற்கான ஒரு வழியாக, இறை உணர்வை அடைந்த குருநாதரால் நிகழ்த்தப்படுகின்றன. இயேசு நிகழ்த்திய அற்புதங்கள் அவருடைய சொந்த நலனுக்காக அல்ல, மாறாக மக்கள், உண்மைப்பொருளை, சத்தியத்தை அங்கீகரிக்கவும், அதன் மீது நம்பிக்கையை உருவாக்கவும் செய்கின்றன. ஆயினும், அவர் சிலுவையில் அறையப்பட்டபோது, உயிர் இழந்தவர்களை மறுபடியும் உயிருடன் எழுப்பக்கூடியவர் அதைத் தடுக்கவில்லை!"**

பேச்சின் தலைப்பை மாற்றி பாதிரியார், "நீங்கள் ஏன் மௌனம் காக்கிறீர்கள்? ஏன் பேசக்கூடாது?" என வினவினார்.

**"நான் எப்பொழுதும் பேசுகிறேன்!"** பாபா, சிரித்தபடியே பதிலளித்தார், **"நான் தொடர்ந்து உங்கள் மூலமும், மால்கம், எல்லா பிரதான பாதிரியார்கள், மற்றும் அனைவரின் மூலமாகவும் பேசுகிறேன்."**


பாபா கூறியதன் பொருளைப் புரிந்துகொள்ள முடியாமல், பாதிரியார் வினவினார், "அப்படியானால் நீங்கள் ஏன் எழுத்துப்பலகையைப் பயன்படுத்துகிறீர்கள்?"

**"நான் உங்கள் மற்றும் அனைவரின் மூலமாகவும் பேசுகிறேன், இந்த எழுத்துப்பலகை வழியாக, கேள்விகளுக்கு பதிலளிக்கிறேன்"** என்றார்

பாதிரியார் மேலும் குழப்பமடைந்து, "அது எப்படி? எனக்கு ஒன்றும் புரியவில்லை" என்றார்.

பாபா, **"ஆமாம், நீங்கள் 'ரோம்'** (ROME) **நகருக்குச் சென்றிருந்தால் உங்களால் புரிந்துகொள்ள முடியாது, நான் இல்லத்திற்கு** (HOME - **'ஹோம்'**) **வந்ததால் எனக்குத் தெரியும்! இதுவே உங்களுக்கும் எனக்கும் உள்ள வித்தியாசம். நீங்கள் ரோமில் இருக்கிறீர்கள், நான் இல்லத்தில் (ஹோமில்) இருக்கிறேன்!"** என்று பதிலளித்தார்.

பாதிரியார் பாபாவை சந்தித்ததில் மிகவும் குழம்பிப் போனார். பாபா **'இல்லம்'** (HOME) என்றதன் பொருள் என்னவெனில், அவர் இறைவனோடு ஒன்றாக இருக்கிறார். 'ரோம்' என்பது தேவாலயம் - அதாவது சடங்கு சம்பிரதாயங்கள் மற்றும் மத மரபுவழி.





கோர்ஷெத் (KHORSHED), மார்கரெட் (MARGARET), நோரினா (NORINA),
மெஹரா (MEHERA), பாபா (BABA), மணி (MANI), டிலியா (DELIA), கிட்டி (KITTY)
**மெஹராபாத், 13 மார்ச் 1937**

இதற்கிடையில், 'உண்மையான' இந்தியாவைப் பார்க்க, நாசிக் நகரை விட்டு வெளியேற விரும்பியதற்காக, கேரெட் ஃபோர்ட் மிகவும் வருந்தமடைந்தார். தனது பயணத்தின்போது, இந்திய கிராமங்களைக் கண்டு அவர் தனிமையும், மனச்சோர்வும் அடைந்து, நடுத்தர ஹோட்டல்களில் தங்கி, ஒவ்வாத உணவையும் உண்டு வந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக அவர் இந்தியாவில் என்னதான் செய்கிறார் என்பதையும் சிந்திக்கத் தொடங்கினார். 1937, மார்ச் 5 அன்று பாபாவிற்குத் தனது உணர்வுகளை வெளிப்படுத்தி நீண்ட நெடிய கடிதம் ஒன்றை எழுதினார். நாசிக் நகரில் வாழ்ந்து வந்த ஒவ்வொரு மேலை நாட்டினரிடமும், பாபா, அவருக்கே உகந்த முறையில் பரபரப்பை ஏற்படுத்தி, உள் கொந்தளிப்புக்கு வழிவகுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக அவரது கடிதம் அமைந்தது. உண்மையில், தொடர்ந்து படிப்படியாக நடந்த நிகழ்வுகளைப் பார்த்தால், கேரெட் ஃபோர்டின் உணர்வுகள் ஆசிரமத்தில் பெரிய மாற்றங்களுக்கு வழிவகுத்தது. அவர் பாபாவிற்கு எழுதிய கடிதம் பின்வருமாறு:

இதுவரை எந்தவொரு சாதாரண சுற்றுலாப் பயணிக்கும் கிடைக்காத அனுபவம் எனக்கு இல்லை, மேலும் இக்கால இந்திய வாழ்க்கை முறையின் 'மேற்பரப்பைப்' பார்ப்பதைத் தவிர, நமது திரைப்படத்திற்கு உதவக்கூடிய வகையில் எதையும் குறித்து நான் சந்தேகம் மட்டுமின்றி, நம்பிக்கையற்ற நிலையில் இருக்கிறேன். பாபா, எனது வாழ்நாள் முழுவதும், நான் படித்த மற்றும் கேள்விப்பட்ட மிகையான கவர்ச்சியும், மனதை ஈர்க்கும் தன்மையும் கொண்ட இந்தியா, எங்கேயாவது இருக்க வேண்டும். அது எங்கே உள்ளது? இதுவரை நான் அடி எடுத்து வைத்த இடங்களில் அவை இல்லை. நான் பார்த்தது எனக்குத் தெரியாத ஓர் இந்தியா; உண்மையில் நான் அதைக் கண்டுகொள்ள என் இரு கைகளாலும் இந்திய வாழ்க்கை முறையைத் தோண்டி எடுக்க வேண்டும் என்ற எண்ணம் என்னை சற்று அதிருப்திக்கு உள்ளாக்குகிறது. அந்தத் தரக்குறைவான ஹோட்டல்களில் தங்காமல், மனதிற்கு உகந்த உணவை உண்ணாமல், கடினமான படுக்கைகளில் தூங்காமல், ஜீன் ஹார்லோவை எனக்குத் தெரியுமா என்று தெரிந்து கொள்ள விரும்பும் மூன்றாம் தர ஹோட்டல் அதிகாரியின் தந்திரமான கேள்விகளைக் கேட்காமலும் நான் இந்திய வாழ்க்கையை இழக்கிறேன் என்று நீங்கள் நினைப்பதானால், நான் நாசிக் நகருக்குத் திரும்பி வந்து உருது மொழியைக் கற்றுக் கொள்வது நல்லது.

நான் மிகவும் நன்றி உணர்வற்றவனாக ஒலிப்பதை வெறுக்கிறேன், ஆனால் நான் எப்பொழுதும் உங்களுடன் நேர்மையாக இருக்க வேண்டும், மேலும் நான் எதையும் கனிவான தன்மையுடன் காணாத போது 'அற்புதம்!' என்று இனிமையாகக் கூறுவதில் என்ன நன்மை இருக்கிறது? நான் காண விரும்பியது பழம் பெரும் கவர்ச்சியான இந்தியா. ஆனால் நான் அதைக் காணவில்லை. இந்தியா ஓர் அழுக்கடைந்த நாடு என்று நான் நினைக்கிறேன், என்னைப் பொறுத்தவரையில் இதுவரை நான் தோல்வி அடைந்துவிட்டேன்.

பாபா, எனக்கு ஏதாவது செய்யுங்கள்! இந்தக் கொடூரமான, அரையும் குறையுமான நிலையிலிருந்து என்னை விடுவிக்கவும் - நான் தெரிந்து வாழ்ந்த வாழ்க்கையிலிருந்து துண்டிக்கப்பட்டு, புது வாழ்வை ஏதோ வேறு காரணங்களுக்காக நிறுத்தி வைத்த நிலையிலிருந்து விடுவிக்க வேண்டுகிறேன். தண்ணீருக்கு வெளியே தத்தளிக்கும் மீனைப் போல சுற்றி அலைவதற்காக நீங்கள் என்னை இந்தியாவிற்கு அழைத்து வரவில்லை என்பது எனக்குத் தெரியும். நான் மிகவும் பயனற்றவனாக உணர்கிறேன், உத்வேகம் இல்லாமல், மிகவும் மந்தமானவனாகக் கருதுகிறேன். எனது மனதிற்குள் அடைபட்டிருக்கும் அனைத்தையும் நான் அறிவேன்; அழகு, உற்பத்தித்திறன் மற்றும் உருவாக்கும் திறன் என்னிடம் உள்ளது; உங்களுக்கும் உங்கள் காரணங்களுக்கும், உங்கள் சேவையில் பயன்படுவதற்கான மிகுந்த ஏக்கம் என் இதயத்தில் இருக்கிறது. இதையெல்லாம் திறக்கும் திறவுகோல் உங்களிடம் உள்ளது, மேலும் இது ஒரு பரந்த, வரம்பற்ற ஆற்றலின் ஓட்டத்தில் வெளியேறி, பெரிய அளவிலான நன்மைக்கு மாற்றப்படும். அன்பிலும் நம்பிக்கையிலும் உங்கள் பாதங்களில் நான் வைத்திருக்கும் உள் சக்திகளைப் பயன்படுத்த, அதைத் திருப்பி வழிநடத்த நீங்கள் ஏன் தயங்குகிறீர்கள்? நீங்கள் ஒரு நாள் அதைச் செய்வீர்கள் என்று எனக்குத் தெரியும், ஆனால் இதற்கிடையில் நான் படிப்படியாகப் பைத்தியம் ஆகிறேன்!

எனது வாழ்நாள் முழுவதும் நான் சுறுசுறுப்பாக இருந்தேன், ஒவ்வொரு விஷயங்களையும் செய்யப் பழகினேன், அவற்றை சாதனைகளாக மாற்றியதில் பெருமைப்படுகிறேன்; ஆனால் நான் உங்களுக்காக என்ன செய்ய முடியும் என்பதோடு ஒப்பிடும்போது, இது எவ்வளவு சிறியதாகவும் முக்கியமற்றதாகவும் இருந்திருக்கலாம்; நீங்கள் என்னை அனுமதித்தால் மட்டுமே இது சாத்தியமாகும் - எனக்கு உதவுங்கள். என்னால் வெறுமனே உட்கார்ந்து எனது கட்டைவிரலைக் சுழற்றிக்கொண்டு, எங்கள் குழுவில் உள்ள பிறரைப் பார்த்து இனிமையாக சிரித்து, உருது சொற்களைப் பற்றி பேசமுடியாது! இப்படிப்பட்ட பயணத்தை மேற்கொள்வது போதுமானதாக எனக்குத் தோன்றவில்லை, ஏனெனில் நான் எத்தனை மைல்கள் பயனுள்ள நடவடிக்கைகளைத் தேடிச் சென்றாலும், நான் உண்மையில் எங்கும் செல்லவில்லை; இது என் மனக் கதவுடன் என்னுள் இருக்கும் ஆன்மா, இன்னும் இறுக்கமாக மூடப்பட்டுள்ளது. உங்களுக்கு உதவ, நான் நாசிக் நகரில் எனது மேஜையில் அமர்ந்து சிறந்த நாடகங்கள், சிறந்த திரைப்படக் கதைகள், இறப்பில்லா உரைநடை - எதையும் - எனது நாற்காலியில் அமர்ந்துகொண்டு அங்கும் இங்கும் அசையாமல் செய்யலாம். அதெல்லாம் எனக்குத் தெரியும். நான் அதைச் செய்யவும் விரும்புகிறேன். நான் அமெரிக்காவிலிருந்து வந்து, உங்களிடமிருந்து கொஞ்சம் அறிவைப் பெற விரும்புகிறேன், என் உலகில் தேவை எனக் கருதும் பிறருக்கு வழங்கும் வகையில் ஏதாவது அறிவைப் பெற ஆவலாய் இருக்கிறேன். இந்த நேரத்தில் நான் திடீரென மேற்கு நோக்கித் திரும்ப வேண்டுமானால், நான் உங்களுடன்

இருந்த ஒரு சில ஆசீர்வதிக்கப்பட்ட மணி நேரங்களின் நினைவைத் தவிர வேறொன்றுமில்லாமல் வெற்று கைகளுடன் திரும்பிச் செல்வேன்.

கடந்த சில ஆண்டுகளாக உங்களிடம் வந்தவர்களில் பலரை நான் பார்க்கும்போது, ஆச்சரியமும் குழப்பமுமாக இருக்கிறது.

அவர்களிடமிருந்து நீங்கள் திடீரென உங்களைத் துண்டித்துக் கொண்டால், அவர்கள் எங்கே போவார்கள்? இத்தனை ஆண்டு சேவை மற்றும் தியாகங்களால், அவர்கள் பிறருக்குத் தரமுடியும் வகையில் என்ன கிடைக்கப் பெற்றுள்ளனர்? தங்களைப் பொறுத்தவரை, ஒரு குறிப்பிட்ட அளவிலான ஆன்மீக விடுதலை; ஆனால் அது ஒரு சுயநல அணுகுமுறையைக் கொண்டதாக இருக்கும். பிறருக்கு உதவும் வகையில் அவர்கள் என்ன செய்ய முடியும்? அவர்களுக்கு முன்பு தெரியாத ஏதேனும் இன்று இப்போது தெரியுமா?

நமது மேற்கத்திய சீடர்கள்: அவர்களைப் பற்றி என்ன சொல்ல? மால்கம், ஜீன் இருவரும் அமெரிக்காவிற்கு எதை எடுத்துச் செல்ல முடியும்? எலிஸபெத் உங்கள் வேலையை, அது என்னவென்று சரியாகத் தெரியாமல் எவ்வாறு முன்னெடுக்க முடியும்? டாம், லண்டனுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார், பாபாவிடமிருந்து எந்தக் கடிதமும், பாபாவுடன் எவ்வித தொடர்பும் இல்லாமல், அவர் என்ன செய்வார்? நீங்கள் சொன்ன விஷயங்கள் அனைத்தையும் அவர்கள் அனைவரும் நடைமுறையில் செயல் படுத்தும் அளவிற்கு பக்குவமடைந்து விட்டார்கள் என்று நினைக்கிறீர்களா? அந்தச் சிறிய சொற்பொழிவுகள், பேச்சுக்கள், சுருக்கெழுத்தில் மிகவும் கவனமாக குறிப்பிடப்பட்டுள்ளன, மிகவும் உன்னிப்பாகத் தட்டச்சு செய்யப்பட்டன - அவை அனைத்தும் இந்த மக்களில் ஓர் அங்கமாக ஆக்கப்பட்டதாக நீங்கள் நினைக்கிறீர்களா? எனக்கு அப்படித் தோன்றவில்லை.

முதலில், அவர்களில் பாதி பேருக்குப் புரியவில்லை. எனக்கும் புரியவில்லை. எலிஸபெத்தைக் கேளுங்கள் தூக்கத்திலிருந்து அவர் விழிப்பதற்குக் காரணமாக இருப்பது என்ன என்று கேளுங்கள். அவர், 'எனது மனப்பதிவுகள். அவற்றை நான் செலவு செய்ய வேண்டும்' என்று கூறுகிறார். இதன் அர்த்தம் என்ன என்று அவரிடம் கேளுங்கள், அவர் தடுமாறுவதை நீங்கள் காணலாம். மாயத் தோற்றத்திற்கும், போலி நம்பிக்கைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை எடுத்துக்காட்டுகளுடன் விளக்க நோரினாவிடம் கேளுங்கள். அவர் எல்லாவற்றையும் தட்டச்சு செய்து ஒரு நல்ல குறிப்புப் புத்தகத்தில் வைத்துள்ளார், ஆனால் உங்கள் விளக்கங்களைக் கேட்காத ஒருவருக்கு அவர் அதை தெளிவுபடுத்த முடியுமா? அவரால் முடியாது என்று நான் பந்தயம் கட்டுவேன்; அது என்னாலும் முடியாது.

நாங்கள் அனைவரும் உங்கள் காலடியில் அமர்ந்து நீங்கள் கூறுவதைக் கேட்டு, புத்திசாலிகள் என்று நினைத்து, 'ஆன்மீகம் பல்வகை' என்ற நினைப்பில் புருவங்களைத் தூக்கிச் செல்கிறோம்! ஆனால் அவை என்னவென்று சிறிதளவு யோசனைகூட இல்லாமல் இருக்கிறோம். அவர்கள் அனைவரும் வாழ்க்கையை விட்டுவிட்டு உங்களுடன் இந்தியாவில் இருக்கிறார்கள்; அவர்கள் செய்கின்ற

ஒவ்வொன்றையும் பற்றிய துல்லியமான விபரங்களால் நிரப்பப்பட்ட நீண்ட கடிதங்களை வீட்டிற்கு எழுதுகிறார்கள், மேலும் அவர்கள் உங்கள் பணியில் உதவுகிறார்கள் என்று உணர்கிறார்கள்; அல்லது ஒருநாள் உங்கள் பணியில் உதவ முடியும் என நம்புகிறார்கள். ஆனால் அவர்களில் ஒருவருக்கும் அது என்ன பணி அல்லது அவர்கள் அதை எவ்வாறு செய்யப் போகிறார்கள் என்ற தொலைதூர கருத்தும் இல்லை.

நாங்கள் அனைவரும் வாழ்நாள் முழுவதும் நாசிக் நகரில் உங்களுடன் இருப்பதானால் மிகவும் நன்றாக இருக்கும். மேற்கத்திய குழுவில் பலர் ஏறக்குறைய பாதி வாழ்க்கையைக் கடந்துவிட்டனர், மேலும் அவர்கள் ஓரிடத்தில் அமைதியாக வாழ்ந்து, எஞ்சிய நாட்களில் பாதுகாப்பாக கவனித்துக் கொள்ளப்பட வேண்டும் என்று நினைப்பது ஆறுதலளிக்கிறது.

அன்புள்ள வயதான வில் மற்றும் மேரி, நான் பார்த்தவர்களில் மிகவும் புனிதமானவர்கள். ருவானோ, இன்னும் வெளிப்படையாக விவரிக்க முடியாத ஆற்றலைப் பெற்றிருந்தாலும், அவருக்குப் பின்னால் வண்ணமயமான வாழ்க்கை ஒன்று இருப்பதை அறிகிறேன். நோரினா, கடந்த காலத்தில் ஒரு சிறந்த தொழில் துறையில் வாழ்க்கையை வாழ்ந்த வயதான பெண்மணி. மால்கம், ஜீன் இருவரும், பல ஆண்டுகளாக வாழ்க்கையைப் பற்றிக்கொண்டு, இப்போது ஒரு புகலிடத்தில் மகிழ்ச்சியாகக் காணப்படுகிறார்கள். எலிஸபெத், மணவாழ்வு தீங்குகளிலிருந்து ஓய்வு பெற்று உங்களுடன் ஒன்றிணைந்துள்ளார். இந்த மக்கள் அனைவரும், நல்ல மனம் படைத்தவர்கள், நேர்மையானவர்கள், நம்பிக்கையானவர்கள், ஆனால் வாழ்க்கையில் தோள்களைத் திரும்பிப் பார்க்கிறார்கள். எனது வாழ்க்கை கூட இன்னும் தொடங்கவில்லை என்று நினைக்கிறேன். என் மனதில், நான் இன்னும் பதினேழு வயது பருவத்தில் இருக்கிறேன், என் முன்னால் இருக்கும் உலகை எதிர்கொள்வது, அனுபவிப்பது, வெல்வது, பாடங்கள் கற்றுக்கொள்வது, எனக்கு இன்னும் வயதான உணர்வே இல்லை. நான் ஓரிடத்தில் அமர்ந்து வாழ்நாளுக்கு வேண்டிய அரிசி மூட்டைகளைக் கட்டி சுமக்கத் தயாராக இல்லை, இருப்பினும் நான் அதை நிச்சயமாக உங்கள் மீது கொண்டுள்ள பக்திக்காகச் செய்வேன்.

ஆனால் நான் தயாராக இருக்கிறேன் - மேலும் ஓர் ஓட்டப்பந்தய வீரரைப் போல் ஆவலுடன் - ஆன்மீக வலிமை மற்றும் அறிவின் பொக்கிஷத்தை அடையவும், உங்கள் குழந்தைகளுக்கு உதவும் வகையில் ஒரு செய்தியையும் அந்த அறிவின் நடைமுறை பயன்பாட்டையும் உலகில் பரப்புவதற்கு ஆயத்தமாக இருக்கிறேன். அந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, என்னைத் தயார் படுத்தாமல் என்னால் இருக்க முடியாது. இத்தனையும் தேவைப்படும் பலரை நான் காண்கிறேன், இப்போது நான் இந்தியாவில் இருக்கிறேன், முன்பை விட நான் இன்னும் உதவியற்றவனாக உணர்கிறேன். குறைந்த பட்சம் ஹாலிவுட்டின் வாழக்கையை விரும்பாமல் இருந்தாலும், ஒரு சிலருக்கு உயிர்வாழ உதவினேன், எனது பணம் சாதகமாகப் பயன்படுத்தப்படுவதாக உணர்ந்தேன். என்னால் அவர்களோடு பேச முடிந்தது, ஆறுதல் கூறவும், அவர்களை சிரிக்கவும்,

மனதை வாழ்க்கையின் இலகுவான பக்கமாக மாற்றவும் என்னால் உதவ முடிந்தது.

ஆனால் இப்போது நான் எதுவும் செய்யவில்லை. என்னிடம் பணமும் இல்லை, எனக்கு வேண்டியவர்கள் பசியோடு இருக்கின்றனர். கடிதத்தைத் தவிர, எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை, அதை ஒரு நல்ல பரிமாற்றமாக நான் கருதவில்லை. நான் ஒரு வசதியான ஆசிரமத்தில் தங்கி இருந்து உருது (மோசமாக) கற்றுக்கொண்டு, (எப்போதாவது) ஒரு வார அல்லது மாத பத்திரிகையை இதழைப் படித்துக்கொண்டு, திரைப்படப் பணியில் (சிலநேரங்களில்) ஈடுபட்டு, அல்லது ரயில்களில் ஏறி நாடு முழுவதும் சென்று, உங்கள் பணத்தைச் செலவழித்து வந்த போதிலும், என்னுடைய முணுமுணுப்பு நின்றபாடில்லை! நான் ஒரு நல்ல சீடர்! எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்கள் ஒருவேளை என்னை அமெரிக்காவிற்குத் திருப்பி அனுப்புவதாக இருந்தால், அங்கே நான் எடுத்துச்செல்ல என்னிடம் என்ன இருக்கிறது?

எனக்கு அறிவொளி வேண்டும் என்பது சுயநலமா? தூக்கமின்றித் தவிக்கும் ஆத்மாவை லேசாகத் தொட்டு, அதை உயிர்ப்பிக்கச் சொல்வது நியாயத்திற்குப் புறம்பானதா? சந்தேகத்திற்கு இடமின்றி, நான் முற்றிலும் தகுதியற்றவனாக இருந்தாலும், என் உள் காதில் அந்த மந்திர வார்த்தையை நீங்கள் விரைவில் கிசுகிசுப்பீர்கள், அது எனது முழு வாழ்விற்கும் உயிரோட்டமாக இருக்கும், மன மற்றும் ஆன்மீக ஆற்றலின் அறைகளைத் திறக்கும், உண்மையில் வாழவும், சேவை செய்யவும் எனக்கு உதவும் என்று நான் எடுத்துக்கொள்ளலாமா?

ஒரு திரைக்குப் பின்னால் எரியும் தீபம், புகைமூட்டத்தை உருவாக்கி, திரையை அழிப்பதாக இருந்தாலும், ‘ஆன்மீக தளங்களில் அனைத்தும் நிகழ்கின்றன’ என்ற உணர்வு மட்டும் இருந்தால் போதாது. நான் தயார் நிலையில் இருப்பதானால், ஏன் அந்த இடங்களுக்குச் செல்ல முடியாது, ஏன் அந்தத் திரையை அழிக்கும் அனுபவத்தைத் தர முடியாது? இல்லையென்றால், அதை உருவாக்க என்ன செய்ய வேண்டும்?

தயவுசெய்து, பாபா, இதைக் குறித்து நீங்கள் தீவிரமாக சிந்தித்து ஒரு முடிவிற்கு வாருங்கள். இரண்டு வருடங்களுக்கு முன்பு நான் உணர்ந்ததைவிட இதைப் பற்றி இன்னும் வலுவாக இப்போது நான் உணர்கிறேன், அதற்குத் தகுதியானவனாக இருக்க என்னால் முடிந்த அனைத்தையும் செய்தேன்.

இது ஓர் அச்சமூட்டும், பொருத்தமற்ற, முணுமுணுக்கும் கடிதமாகத் தோன்றும் என்று எனக்குத் தெரியும், ஆனால் நான் அதை எப்படி அர்த்தப்படுத்துகிறேன் என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். நான் வெறுமையாக, சும்மா இருக்க விரும்பவில்லை; செய்ய வேண்டியது ஏராளம் உள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக, சரியாக அல்லது தவறாக இருந்தாலும், நான் எப்பொழுதும் உங்களுடன் நேர்மையாக இருக்க வேண்டும், என் மனதிலும், இதயத்திலும் இருப்பதை உங்களுக்குக் கூற வேண்டும், ஏனெனில் இந்த

நேரத்தில், இந்த வாழ்க்கையில், நாம் மீண்டும் சந்தித்தோம், ஒன்றாக ஒரு நீண்ட சாலையில் பயணிக்கப் போகிறோம் என்பது எனக்குத் தெரியும்.

என் இதயத்தின் எல்லா அன்பும், என்றென்றும், -
கேரெட்.


கேரெட் ஃபோர்ட் தனிமைப்படுத்தப்பட்டதன் விளைவாக, இந்தக் கடிதம் எழுதிய ஒரு வாரத்திற்குள், அவர் வட இந்தியாவிலிருந்து 1937, மார்ச் 13 அன்று நாசிக் நகருக்குத் திரும்பி வந்தார். அவர் திட்டமிட்டதற்கு முன்னதாகவே திரும்பி வந்ததில் பாபா அதிருப்தியைத் தெரிவித்தார். அவர் பயணித்த இடமெல்லாம் வறுமை, அழுக்கு, அசுத்தம் தவிர வேறு எதுவும் இல்லை என்று கூறி, தனது பயணத்தால் அவர் ஏமாற்றமடைந்து, விரக்தியில் சோர்வடைந்து போனதாக கேரெட் விளக்கினார்.

அவரைக் கண்டித்து, பாபா எழுத்துப்பலகையில் இவ்வாறு எடுத்துரைத்தார்:

**நம்பிக்கை ஒருபோதும் வாதம் செய்வதில்லை! நீங்கள் என் மீது உறுதியான நம்பிக்கை வைத்திருந்தால், தூசு, மாசு, கொசுக்கள், காலரா, நோய் போன்றவற்றில் அக்கறை காட்டியிருக்க மாட்டீர்கள், நான் உங்களுக்காக தயாரித்த திட்டத்தையும் மாற்றியிருக்க மாட்டீர்கள். நீங்கள் திட்டப்படிச் செய்யாமல் விரைவில் திரும்பி வந்துள்ளீர்கள். நீங்கள் அதைப் பின்பற்றி இருந்தால், கடைசி நேரத்தில் கூட 'ஏதாவது' பார்த்திருக்கக் கூடும்.**

**நான் அனைத்தும் அறிந்தவன் என்றால், நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து, அதற்கேற்ப நான் அறிவுறுத்தினேன். நான் எல்லாம் வல்லவன் என்றால், இவை அனைத்தையும் நீங்கள் எவ்வாறு கடந்து செல்ல வேண்டும் என்று நான் விரும்பினேனோ, அவ்வாறே எனது திட்டங்களை வகுத்தேன். எனது திட்டங்கள் மற்றும் வேலை செய்யும் முறை உங்களுக்குத் தெரியாது, எனவே நேரத்தையும் பணத்தையும் வீணடிப்பதைப் பற்றி சிந்திக்கிறீர்கள் - எல்லாமே நல்ல நம்பிக்கையுடனும் நல்ல நோக்கங்களுடனும் என்பது எனக்குத் தெரியும்.**

**இந்தியாவில் இரண்டு பிரிவுகள் உள்ளன: ஒன்று, கிராமங்களும் நகரங்களும், இந்தியாவின் இயற்பியல் அமைப்பு. மற்றொன்று, இமயமலை, மவுண்ட் அபு போன்ற அழகிய இடங்கள், இந்தியாவின் ஆன்மீக உடல். கடவுள் அமைதியான இயற்கை சூழ்நிலைகளிலும், மலைமேடுகளிலும் மட்டுமே காணப்படுவதில்லை. அவரைக் கண்டுகொள்ள விரும்பினால், கிராமங்கள், நகரங்களின் தூசு மற்றும் மாசுகளின் ஒவ்வொரு அணுவிலும் அவரைக் காணலாம். இதையெல்லாம் நான் உங்களுக்குச் சொல்கிறேன், ஏனெனில் நான் உங்களை நேசிக்கிறேன், உள்ளார்ந்த நம்பிக்கை மட்டுமே முற்றிலுமாக அறிந்துகொள்ள உதவும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள விரும்புகிறேன்.**



கேரெட் ஃபோர்ட்டுடன்
(GARRETT FORT)
மெஹர் பாபா



நாசிக் அருகில் உல்லாசப் பயணம் 1937
பாபாவுடன் கிட்டி (KITTY), மார்கரெட் (MARGARET)

ஆயினும்கூட, கேரெட் இப்போது மேற்கு நோக்கித் திரும்பத் தயாராக இருந்தார். அவர் ஹாலிவுட்டுக்குத் திரும்பிச் செல்ல விரும்புவதாகவும், பாபாவின் ஆசிரமங்கள் மற்றும் திரைப்படத் திட்டங்களுக்கு, நிதியளிக்க பணம் சேர்க்கும் நோக்கத்தில் கடுமையாக உழைக்க விரும்புவதாகவும் கூறினார். அவரது வற்புறுத்தலின் காரணமாக, பாபா அவரை அனுப்ப ஒப்புக்கொண்டார், அவரது முயற்சிகளில் அவருக்கு உதவுவதாக உறுதியளித்தார்.

மேலும் இந்தியா வரவிருந்த மேற்கத்திய அன்பர்களைத் தங்க வைப்பதற்காக, நாசிக் நகரில் மற்றுமொரு பங்களாவைக் கட்டுவது குறித்து விவாதங்கள் தொடங்கின. 1937, மார்ச் 13 அன்று, பாபா மேற்கத்திய குழுவைக் கூட்டி இவ்வாறு கூறினார்:

**நான் எல்லோரிடமும், எல்லோருடனும், சிலருக்கு அருகாமையிலும் இருக்கிறேன். கடந்த முறை, நாம் புதிய பங்களாவைக் கட்டுவது பற்றி பேசினோம், அதற்கெல்லாம் பணம் தேவை என்ற உண்மையை மையமாக வைத்து விவாதித்தோம். உங்கள் அனைவரையும், அதை எவ்வாறு ஏற்பாடு செய்வது என்பது பற்றி சிந்திக்கச் சொன்னேன், ஆனால் உங்களில் எவரும் இதைப் பற்றி சிந்திக்கவில்லை என்று நான் நம்புகிறேன்! இதன் விளைவாக, எனது எதிர்கால பணிக்கு, பணத்தை எப்படித் திரட்டுவது என்று நானே சிந்திக்க வேண்டியிருந்தது. இன்று, கேரெட்டை மீண்டும் ஹாலிவுட்டிற்குச் (HOLYWOOD) சென்று வேலை செய்யும்படிக் கட்டளையிட்டு, அவர் சம்பாதிக்கும் பணத்தை எனக்கு அனுப்பி வைக்குமாறு கூறினேன். அவதார புருஷர் எப்பொழுதும் ஏழையாக இருப்பதால், இது மிகவும் தேவையான உதவி, ஒரே உறுதியான உதவி!**

**"ஆகா கான் (AGA KHAN), அடோல்ஃப் ஹிட்லர் (ADOLF HITLER) போன்றவர்கள் நிறைய பணம் வைத்துள்ளார்கள், ஆனால் அவதார புருஷர் எப்பொழுதுமே ஏழ்மையானவர் - எப்பொழுதும் அவருக்குப் பணம் தேவைப்படுகிறது. உள் வட்ட உறுப்பினர்கள் என்றென்றும் அவதார புருஷருக்கு உதவுவதால், நாம் கேரெட்டை மூன்று நோக்கங்களுக்காக ஹாலிவுட்டிற்கு அனுப்புகிறோம்: பணம் அனுப்புவது, எனது செய்தியைப் பரப்புவது, ஏனெனில் நான் அவர் மூலமாக ஆன்மீக ரீதியில் பணியாற்றுவேன், மேலும் திரைப்படத்திற்காகப் பணி புரிவது; திரைப்படம் கட்டாயம் வெளிவர வேண்டும். எனவே, இந்த மூன்று நோக்கங்களைக் கருத்தில் கொண்டு, கேரெட் பதினான்கு மாதங்களுக்கு ஹாலிவுட் செல்கிறார். இப்போது அவர் முதலில், ஏழு நாட்கள் பஞ்சகணிக்குச் (PANCHGANI) சென்று, நான் பல மாதங்களுக்கு முன்னர் ஏகாந்தவாசம் மேற்கொண்ட 'டைகர் வேலி' (TIGER VALLEY) குகையில் தங்குவார்.**

**"எல்லாவற்றிலும் எப்பொழுதும் 'பெறுவதை' விட 'தருவது' நல்லது. காலம் கடந்து செல்லச்செல்ல, ஒருவர் கொடுப்பதே சிறந்தது என்பதைக் கண்டுகொள்வார்"** என்று பாபா கூறி முடித்தார்.

அடுத்த நாள், மார்ச் 14, பாபா கட்டிடத் திட்டம் குறித்து மேலும் விவாதித்தார்:

**பங்களா விவகாரத்தை இன்றே முடிப்போம், ஏனெனில் நாளை நேரம் இராது. இந்தக் கட்டிடத்திற்கு ரூ 16,000 செலவாகும், தளபாடங்கள் (மரச்சாமான்கள்) ரூ 8,000: மொத்தம் ரூ 24,000.**

**நமக்கு எவ்வளவு பணம் தேவைப்படுகிறது! அதனால்தான் கேரெட் ஹாலிவுட்டிற்குச் செல்கிறார். பங்களாவிற்கு வேண்டியதை நாம் எப்படியாவது நிர்வகிக்க முயற்சிப்போம். ஆனால் பிற்காலத்தில், மிகச் சிறந்த பணிக்காக நமக்கு நிறைய பணம் தேவைப்படும். கேரெட்டால் மட்டுமே விரைவாகப் பணம் சம்பாதிக்க முடியும்; நான் அவரைப் பின் நின்று வழிநடத்துவேன். பங்களாவிற்காக அறக்கட்டளை பணத்தை நாம் தொட முடியாது, ஆனால் நாம் கட்டும் புதிய கட்டிடம் அறக்கட்டளையின் உடமையாகும். பணம் மிகவும் முக்கியமாகத் தேவைப்படும்போது உதவுவதை விட பெரிய சேவை என்ன இருக்கிறது!**

பணத்தைப் பற்றிய இந்தக் கலந்துரையாடல் பாபாவைப் பொறுத்தவரை ஒரு சூழ்ச்சியே தவிர வேறொன்றுமில்லை. பாபாவின் பணிக்கு, பணம் முக்கியமானது என்று கேரெட் ஃபோர்ட் நினைத்தார், ஆனால் அது அப்படி அல்ல. ஒரு கட்டத்தில், கேரெட் ஒவ்வொரு மாதமும் 1,000 டாலர் அனுப்புவதாகப் பரிந்துரைத்தார். அவரது மனம் மிகவும் மந்தமாகவும், உத்வேகம் இல்லாததாகவும் இருப்பதாகப் புகார் கூறிய வேளையில், பாபா அவருக்கு உறுதியளித்தார், “**என்னுடைய கையிருப்பில் ஏராளமாக உத்வேகம் உள்ளது, அதில் சிலவற்றை நான் உங்களுக்குக் கொடுப்பேன்; பதினான்கு மாதங்களுக்குப் பிறகு நீங்கள் இங்கே என்னிடம் திரும்பி வர வேண்டும்.**”

**1937 செப்டம்பர் மாதத்தில், மழைக்காலம் நின்று அதிக அளவில் நிதி வந்த பின்பு, பங்களாவைக் கட்டத் தொடங்க முடிவு செய்யப்பட்டது. எனவே, டிசம்பர் மாதத்திற்கு முன்பு புதிய நபர்கள் எவரும் இந்தியாவிற்கு வர அனுமதிக்கப்படவில்லை. பாபாவும் ஒரு துளைக்கிணறு தோண்ட விரும்பினார், இதனால் குடிநீரைக் கொதிக்க வைக்க வேண்டிய தேவை இராது.**

கட்டிடத் திட்டம் குறித்த விவாதம் நிறைவடைந்த பின்பு, பாபா குழுவிற்கு வெவ்வேறு மனநிலைகள் பற்றி விளக்கினார்:

**ஆழ்மன அனுபவங்கள், ஒரே ஆன்மீக தளத்தில் இருந்தாலும் அவை வேறுபடுகின்றன. சில அனுபவங்கள் வெறும் கனவுகளாகவும், சில காட்சிகளாகவும், சில மனப்பதிவுகள் விரயமாவதை முன்னறிவித்தாற் போலவும் இருக்கும் - ஆனால் ஆழ்மன அனுபவங்கள் கூட, பிரமை அல்லது மாயத்தோற்றமாக (HALLUCINATION) இருக்க முடியும். இது மிகவும் சுவாரஸ்யமானது.**

**இப்போது, பிரமை அல்லது மாயத்தோற்றம் என்றால் என்ன என்பதைப் பார்ப்போம்! வெறும் சொற்களோடு விளையாட வேண்டாம்.**

**நீங்கள் உண்மையிலேயே புரிந்துகொள்கிறீர்களா என்றும் பார்ப்போம். அது ஒரு கனவு அல்ல; அது மாயை போன்றது; அதாவது, இல்லாத ஒன்றை இருப்பது போலத் தோற்றுவிப்பது. இந்த வித்தியாசத்தை எடுத்துக்காட்டுகளால் புரிந்து கொள்ள முடியும். நீங்கள் நிதானமாக அமர்ந்து, உங்கள் மனதில் உங்கள் இல்லத்தை ஒரு சித்திரமாக வடிவமைத்து, உங்கள் தாய், குடும்பத்தினர் அனைவரையும் நினைவிற்குக் கொண்டு வருகிறீர்கள்; உங்கள் மனதிற்கு முன் கொண்டு வரக்கூடிய சித்திரங்களுடன் பேசுகிறீர்கள். இது கற்பனை. இப்போது நீங்கள் அமெரிக்காவில் இருப்பதாகக் கற்பனை செய்கிறீர்கள் - பேசுவது, உண்பது, இப்படிப் பல; அது கற்பனை. இப்போது, இந்தக் கற்பனையில், நீங்கள் உண்மையில் உங்கள் வீடு, உங்கள் தாய், குடும்பம் மேலும் பலவற்றைக் காண்கிறீர்கள் என்று நினைக்கிறீர்கள், அப்படி இருப்பதையும் உணர்கிறீர்கள். இது பிரமை அல்லது மாயத்தோற்றம்.**

**மற்றுமோர் எடுத்துக்காட்டு, நான் ஒரு முறை ஒரு மனிதனை, 40 நாட்கள் தண்ணீர் மட்டுமே அருந்தி, உபவாசம் இருக்கக் கூறினேன். 14ஆவது நாளில் அவர் விசித்திரமான தோற்றங்களைக் காணநேர்ந்தது. பத்து தலைகளுடன் பன்னிரண்டு கைககளைக் கொண்ட பேசும் உருவம் ஒன்றைக் கண்டார்! இது ஆன்மீக அனுபவம் என்று அவர் நினைத்தார், ஆனால் அது பிரமை, மாயத்தோற்றம் என்று நான் அவருக்கு விளக்கிக் கூறினேன்.**

இப்போது **பிரமைக்கும்** (மாயத்தோற்றத்திற்கும்) **ஆன்மீக அனுபவத்திற்கும் என்ன வித்தியாசம்?**

**மாயத்தோற்றத்தில் நீங்கள் பொருட்களைப் பார்க்கிறீர்கள் - அசாதாரணமான பொருட்கள் - ஆனால் நீங்கள் ஒருபோதும் ஆனந்தமாகவோ அமைதியாகவோ உணரமாட்டீர்கள். மாயத்தோற்றம் மற்றும் ஆன்மீக அனுபவத்தை வேறுபடுத்துவதற்கான ஒரே உறுதியான அறிகுறி இதுதான். அது பிரமையாக** (மாயத்தோற்றமாக) **இருக்கும்போது, ஆனந்தமும் அமைதியும் சாத்தியமில்லை. மாயையின் நிலையிலும்** (தவறான நம்பிக்கையிலும்) **ஆனந்தமும் சமாதானமும் சாத்தியமில்லை, ஆனால் அது மாயத்தோற்றமா அல்லது ஆன்மீக அனுபவமா என்ற குழப்பம் நீடிக்காது. மாயத்தோற்றத்தில் நீங்கள் உருவங்கள், மாபெரும் உருவங்கள் அல்லது குறுகிய உருவங்கள் போன்ற பலவற்றைக் காண்கிறீர்கள், ஆனால் அவை இருக்கிறதா இல்லையா என்று நீங்கள் சந்தேகிக்கிறீர்கள். ஆனால் மாயையில்** (அதாவது தவறான நம்பிக்கையில்) **நீங்கள் உண்மையில் இல்லாத ஒன்றை இருப்பதாக எடுத்துக் கொள்கிறீர்கள். மாயத்தோற்றம் என்பது உணர்வுள்ள கனவு போன்றது!** கேரெட் கேட்டார், "நாம் பார்த்திராத பொருட்களை எப்படி கற்பனை செய்ய முடியும்?"

அதற்கு பாபா, "**நீங்கள் அந்தப் பொருட்களை நீண்ட காலத்திற்கு முன்பே பார்த்திருக்கிறீர்கள், நீங்கள் பார்த்திராததை உங்களால் ஒருபோதும்**

**உருவாக்க முடியாது. கற்பனை எல்லையற்றது. ஆனால் சில நேரங்களில் உங்கள் கனவுகளில், பல வருடங்கள் கழித்து நிகழும் நிகழ்வுகளை நீங்கள் காண்கிறீர்கள், திடீரென நீங்கள் கனவு கண்டதை நினைவில் கொள்கிறீர்கள்; சில நேரங்களில் இதுபோன்ற வேடிக்கையான** (விசித்திரமான) **அர்த்தமில்லாத பொருட்களை அல்லது விஷயங்களை, நீங்கள் காண்கிறீர்கள்; அல்லது இந்த வாழ்க்கையில் நீங்கள் பார்த்திராத நபர்களைப் பார்க்கிறீர்கள், ஆனால் நீங்கள் அவர்களை, கடந்த காலங்களில் பார்த்திருக்கிறீர்கள் அல்லது எதிர்காலத்தில் அவர்களைப் பார்ப்பீர்கள்.**"

கேரெட் கேட்டார், "எதிர்கால நிகழ்வுகளைப் பற்றி கனவு காணும்போது, அதைப் பார்க்கமுடியுமா?"

"**நீங்கள் இதுவரைப் பார்க்காவிடிலும், அதைப் பின்பு பார்ப்பீர்கள். கற்பனை என்பது எப்பொழுதும் நீங்கள் பார்த்த அல்லது எதிர்காலத்தில் பார்க்கக்கூடிய ஒன்று**" என்று பாபா பதிலளித்தார்.

"சூட்சும (பௌதீக உலகைக் கடந்த) பயணங்களைப் பற்றி கூறுங்கள்!" கேரெட் கேட்டுக்கொண்டார்.

"**சூட்சும பயணங்கள் - சூட்சும** (அதாவது நுண்ணிய, பிராண) **ஆன்மீக தளங்களில் மேற்கொள்ளும் பயணங்கள் - ஒருவரால் உணர்வுபூர்வமாகவும், உணர்வற்ற நிலையிலும் மேற்கொள்ளப்படுகின்றன, ஆனால், உண்மையில், உணர்வுபூர்வமான பயணங்கள் முக்கியமானவை. பௌதீக உடலிலிருந்து விலகி, பிரிக்கப்பட்டு, சூட்சும உடலைக் கொண்டிருப்பதையும், சூட்சும உடலின் கண்களால் பார்ப்பதையும், சூட்சும உடலின் மூக்கினால் வாசனையை நுகர்வதையும் நீங்கள் உண்மையில் அனுபவிக்கிறீர்கள்.**"

"**நீங்கள் தூங்கும்போது தோன்றும் கனவில், இந்தப் பௌதீக உடல் பயன்படுத்தப் படுவதில்லை, இருந்தும் நீங்கள் பார்க்கிறீர்கள், வாசனையை நுகர்கிறீர்கள், கேட்கிறீர்கள், சுவையை ருசிக்கிறீர்கள், இப்படிப் பல! நீங்கள் இவற்றை எல்லாம் நுட்பமான சூட்சும உடல் மூலமாகச் செய்கிறீர்கள், ஆனால் உணர்வோடு அல்ல. நீங்கள், அதை உணர்வோடு செய்யும்போது உண்மையில் பௌதீக உடலிலிருந்து விலகி இருப்பதை அனுபவிக்கிறீர்கள். நீங்கள் வாசனையை நுகர்கிறீர்கள், நீங்கள் உண்கிறீர்கள், கேட்கிறீர்கள், உணர்கிறீர்கள், பௌதீக உடலுடன் செய்வது போலவே, தெளிவாக அனைத்தையும் செய்கிறீர்கள்; கனவுகளில் நடப்பது போலத் தெளிவற்றதாக இல்லை. நீங்கள் உண்மையிலேயே உடலை, ஓர் உடையாக உணர முடியும் - அதாவது உடைபோலக் கழற்றி அப்படியே விலக்கி வைக்க முடியும்; நிஜமாக, கற்பனையில் அல்ல.**"

கேரெட் கேட்டார், "பாபா, உங்களுடன் ஒரு நேரடி, மனதளவிலான தொடர்பை நாங்கள் ஏற்படுத்தும்போது என்னவாகும்?"

"**இப்போது, இது மிகவும் முக்கியமான ஒன்று**" என்று பாபா வலியுறுத்தினார். "**கற்பனைக்கும் தொடர்புக்கும் இடையே உள்ள வேறுபாடு மிகவும் நுட்பமானது, ஆனால் உலகளவு வித்தியாசம் உள்ளது. நீங்கள்**

**கற்பனை செய்யும் போது, உங்களுக்கு எந்த நோக்கமும் இல்லை; ஆனால் நீங்கள் தொடர்பு கொள்ளும்போது உங்களுக்கு நோக்கம் உள்ளது.”**

அப்போது மால்கம், “இது தெளிவாகப் புரிகிறது, ஆனால் தொடர்பில் கூட கற்பனையைப் பயன்படுத்தவில்லையா?” என வினவினார்.

**“ஆம், கற்பனைதான் பின்னணி”** என்று பாபா பதிலளித்தார்.

பேச்சின் தலைப்பு, அப்போது, மரணத்திற்குப் பிறகு நிகழ்வதை நோக்கித் திரும்பியது; மேலும் பாபா, சொர்க்கம் (HEAVEN) மற்றும் நரகத்தைப் (HELL) பற்றி கருத்துத் தெரிவித்தார்:

**“சொர்க்கமும், நரகமும் மனதின் நிலைகள், இடங்கள் அல்ல. இந்த நிலைகளில் மனதின் ஆசைகளும், ஒன்றை அடையும் திறனும் மிகவும் தீவிரமடைகின்றன. உதாரணமாக: நீங்கள் மரணத்தை சந்திக்கிறீர்கள் - உயிரைத் துறந்துவிட்டீர்கள். அதாவது பௌதீக உடலை விட்டுப் பிரியும் தருவாயில், ஆத்மாவாக நீங்கள் மேலும் தொடர்கிறீர்கள். உங்கள் மனமும், அகந்தையும் அத்துடன் தொடர்கின்றன, உங்கள் மனதில் அனைத்து மனப்படிவங்களும் அப்படியே இருக்கும்.**

**“இந்த மனப்படிவங்களில் ஒன்றான, உதாரணமாக, மது அருந்தும் பழக்கத்தைச் சார்ந்த சிந்தனை. இப்போது இந்த எண்ணத்தை, மது அருந்துவதன் மூலம் அழிக்க வேண்டும். ஆனால் இங்கே பௌதீக உடல் இல்லாத இந்த நிலையில், மது அருந்தும் செயல்முறை, சிந்தனை மற்றும் விருப்பத்தால் மட்டுமே பூர்த்தி அடையும். சூட்சும உடலில் மனதளவில் இன்பம் அதிகமாகி மேலும் தீவிரமாகும் தன்மை உடையது; அது நீண்ட காலம் நீடிக்கும். இந்தப் பௌதீக உடலில் மது அருந்த வேண்டும் என்ற எண்ணம் மட்டும் இருக்கிறது. இப்போது இந்த சூட்சும உடலில், நீங்கள் சிந்திப்பதன் மூலம் மது அருந்துவதை அனுபவிக்க முடியும். ஆனால் பௌதீக உடல் இப்போது இணைக்கப்படாததால், நீங்கள் மதுவை, அதன் பௌதீக உருவில் அருந்தாததால் குடிபோதையில் இருக்க முடியாது.”**

கேரெட் மற்றுமொரு கேள்வியை எழுப்பினார், ‘பேய் (ஆவி) பிடித்தல் (POSSESSION) என்றால் என்ன?”

பாபா எழுத்துப்பலகை வழியாக இவ்வாறு எடுத்துரைத்தார்: **“சில நேரங்களில், ஒரு நபரின் மனப்படிவங்கள் முழுமையாக விரயம் ஆவதற்கு முன்னர், அவர் தற்கொலை செய்து கொள்வது போன்ற சம்பவம் நிகழுமானால், அவர் பௌதீக உடலைக் கைவிட வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. பௌதீக உடல் பிரிந்து விட்டது, ஆனால் அனைத்து பௌதீக மனப்பதிவுகளின் வேகம் தொடரும் அவ்வேளையில், அவர் பௌதீக உடலற்ற பேயாக** (ஆவியாக) **மாறுகிறார்.**

**ஆத்மா** (மனப்படிவங்கள் இன்னும் இருப்பதால்) **அருந்த, உண்ண, மற்றும் இதுபோன்ற செயல்களில் ஈடுபட மிக மிகத் தீவிரமான ஆசையைக் கொண்டிருக்கும்; அவ்வேளையில் வேறொருவரின் உடலில் நுழைவதன் மூலம் இயற்கைக்கு மாறான வழிமுறைகளை உபயோகிக்கும். அது தக்க**

**வாய்ப்பை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும். நீங்கள் மது அருந்துவதைக் கண்டறிந்தால்** (குழுவில் ஒருவரைச் சுட்டிக்காட்டி), **அது உங்களை ஆட்கொண்டு, மது அருந்துவதன் மூலம் அதன் ஆசையை, விருப்பத்தைப் பூர்த்தி செய்யும். மற்றுமோர் எடுத்துக்காட்டாக, அது கோபத்தை அனுபவிக்க வேண்டியிருக்கும் போது, நீங்கள் கோபமாக இருப்பீர்களேயானால் அது உங்கள் மூலமாக அந்தக் கோபத்தை வெளிப்படுத்தி அனுபவிக்கும். இது உண்மை.**

மறுநாள் காலையில் மேற்கத்திய குழு, பாபாவுடன் மெஹராபாத் செல்ல இருந்ததால் அன்று இரவு எட்டு மணிக்கு அனைவரும் படுக்கைக்குச் சென்றனர்.

1937, மார்ச் 15 அன்று பகல் வெப்பத்தில் பயணம் செய்வதைத் தவிர்க்க, பாபா, அவர்களை அதிகாலை ஒரு மணிக்கு எழுப்பி மூன்று கார்களில் ஒவ்வொரு நபரின் இடத்தையும் முடிவு செய்து, நல்ல நகைச்சுவையுடன், இரண்டு மணிக்கு மூன்று கார்களில் புறப்பட்டனர். ஒவ்வொருவரின் புதிய செல்லப்பெயருடன் (NICKNAME) பாபா ஒரு பட்டியலை வெளியிட்டார்:

- ஃபோர்ட் (FORD) கார்: எலிஸபெத், '**தி இட்டர்னல்**' (THE ETERNAL) கார் ஓட்டுநர்; நோரினா, '**மாமா**' (THE MAMA); ரானோ, '**யுனிவர்ஸல் மைண்ட்**' (THE UNIVERSAL MIND); ருவானோ, '**தி ஹெவன்ஸ்**' (THE HEAVENS); நான்னி, '**தி பிலவட்**' (THE BELOVED); கிட்டி, '**தி லவ்**' (THE LOVE); கானுட் மற்றும் கிப்பி, '**தி நியூஸென்ஸஸ்**' (THE NUISANCES).
- ஷெவர்லே (CHEVROLET) கார்: பெண்டு, '**தி கிரேட்**' (THE GREAT), ஓட்டுநர்; டாம், '**தி லவ்வர்**' (THE LOVER); மால்கம், '**தி மேகஸீன்**' (THE MAGAZINE); ஜீன், '**தி ஜுவல்**' (THE JEWEL); மேரி, '**தி மெரி**' (THE MERRY); வில், '**தி டிவைன் வில்**' (THE DIVINE WILL); நதியா, '**தி நோவர்**' (THE KNOWER).
- ஓப்பல் (OPEL) கார்: பாபா, '**தி இன்ஃபைனட்**' (THE INFINITE); ஆதி சீனியர், '**தி ஆல்ஃபபெட்**' (THE ALPHABET), ஓட்டுநர்; மார்கரெட், '**தி ஹோலி ஸ்பிரிட்**' (THE HOLY SPIRIT); டிலியா, '**தி சம்பக்**' (THE CHAMPAK - ஒரு மலர்); மற்றும் ஒரு சிறுவன் (ஜலீல் அல்லது பஹீரத்).

இந்த நாள் மெஹராபாத் விஜயத்திற்குப் பிறகு, ராஹுரி வழியாக இரவு, தாமதமாக அனைவரும் நாசிக் நகருக்குத் திரும்பி வந்தனர், பாபா, ராஹுரியில் தங்கினார்.

ராஹுரியில் பாபா, ஏழை வழிப்பயணி, வயதான பெண்மணி ஒருவரிடம் மிகுந்த அக்கறை காட்டினார், அவர் தலையில் ஒரு பெரிய காயத்துடன் ராஹுரி மருத்துவமனைக்கு வந்திருந்தார், காலதாமதம் ஆனதால் காயம் தொற்றாகப் பரவியது. முதலுதவி அளித்து, தூக்கத்திற்கான மருந்து கொடுத்து, படுக்கையில் தூங்க வைத்து, மறுநாள் அவரை அஹமதுநகர் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லுமாறு ஆதி சீனியருக்கு அறிவுறுத்தினார்.

பாபா சில நாட்கள் ராஹுரியில் தங்கியிருந்தார், டாக்கே அவரது குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்ததற்கு இணங்க, "பாபா இங்கு

வரும்போதெல்லாம் நாங்கள் ஒவ்வொருவரும் பெரும் மகிழ்ச்சியடைகிறோம், எல்லா வேலைகளும் செவ்வனே செய்யப்படுகின்றன. பாபா இங்கு இருக்கும் வேளையில் 'ராஹுரி 'ஆசிரமங்களில்' வாழும் ஒவ்வொருவரும் ஒரு வகையான மகிழ்ச்சியை உணரத் தவறவில்லை!"

1937, மார்ச் 18 அன்று, பாபா கேரெட், ஃபோர்டை இரண்டு நாட்கள் ஏகாந்தவாசம் மேற்கொள்ள பஞ்ச்கணி 'டைகர் வேலி' (TIGER VALLEY) குகைக்கு அனுப்பி வைத்தார், சாஞ்சியும் உடன் சென்றார். ஆனால் கேரெட் குகைக்குள் சென்றபோது, உள்ளே இருந்த ஆயிரக்கணக்கான கருப்பு எறும்புகளைக் கண்டு திகிலடைந்து, அவற்றைக் கொல்ல பூச்சிக்கொல்லி மருந்தை தூவினார். இரவில் எறும்புகள் திரும்பி வருவதைக் கண்டு அவர் கலக்கம் அடைந்த நிலையில், அவருடைய முழு கவனமும் இறை நாமத்தை உச்சரிப்பதை விட கருப்பு எறும்பிலேயே இருந்தது. ஆனால் அவர் பாபாவை நினைவு கூர்ந்தபோது, பாதுகாப்பாக உணர்ந்தார்.

இந்தியாவிலிருந்து புறப்படத் தயாராக இருந்த கேரெட், மார்ச் 20 அன்று பாபாவை சந்திக்க பஞ்ச்கணியிலிருந்து மெஹராபாத் வந்தார். ஒரு கட்டத்தில், "நான் வெறுங்கையுடன் திரும்பிச் செல்கிறேன்!" என கேரெட் ஃபோர்ட் தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார்.

கேரெட் கூறியதன் அர்த்தம் என்னவெனில், அவருக்கு எந்த விதமான ஆன்மீக அனுபவங்களும் கிடைக்கவில்லை என்பதுதான். ஆனால் பாபா விளக்கினார், **"நீங்கள் வெறுங்கையுடன் திரும்பவில்லை; எனது கட்டளைகளை உங்கள் கைகளில் கொண்டு செல்கிறீர்கள். இந்தியாவில் நீங்கள் இருந்த காலம் என்னவென்று உங்களுக்குத் தெரியாது. அதையெல்லாம் நீங்கள் பின்னர் உணர்ந்து கொள்வீர்கள். இது ஒரு கர்ப்பிணி பெண்மணி குழந்தையின் சுமையுடன் சங்கடமான, அசௌகரிய உணர்வுடன், அமைதியற்ற நேரத்தைக் கடப்பது போன்றது. ஆனால் அவர் குழந்தையை ஈன்றெடுத்ததும், இலகுவாக, பூரிப்புடன் சுதந்திரமாக உணர்கிறார்.**

**"நீங்கள் இப்போது சிறப்பு அனுபவங்கள் நிறைந்த நிலையில் அவற்றைப் பற்றிய உணர்வில்லாமல் திரும்பிச் செல்கிறீர்கள். அதனால்தான் நீங்கள் மிகவும் மன அமைதி குலைந்த நிலையில், கவலையாக, வெறுங்கையுடன் செல்கிறீர்கள் என்று நினைக்கிறீர்கள். ஆனால் இடையே இருக்கும் திரை அகற்றப்பட்டதும் பிரகாசம், புரியும் தன்மை, அறிவின் ஒளியூட்டம் அனைத்தையும் அடையப் பெறுவீர்கள்."**

பாபா, கேரெட் ஃபோர்டுக்கு வழங்கிய **'அனைத்து உத்தரவுகளையும் பின்பற்றுமாறு, குறிப்பாக, காம செயல்களிலிருந்து விலகி இருக்குமாறு'** கேட்டுக்கொண்டார். பாபா அவரை எச்சரித்தார், **"உடலளவிலான தொடர்பு ஒன்று மட்டுமே, இதுகாறும் அடையப்பெற்ற அனைத்தையும் இழக்கச் செய்யும், எனவே ஜாக்கிரதை!"**

கேரெட் ஃபோர்ட் மார்ச் 24ஆம் நாள், சாஞ்சியுடன் ரயிலில் நாசிக் நகருக்குப் புறப்பட்டு, பாபாவின் உத்தரவைப் பின்பற்றி, மறுநாள் நண்பகலில் கலிபோர்னியாவிற்குச் செல்லும் ‘கோன்தே வெர்டே’ (CONTE VERDE) கப்பலில் பயணம் மேற்கொண்டார். அவர் மீண்டும் மெஹர் பாபாவை சந்திக்கவில்லை. கேரெட் ஃபோர்ட் புறப்பட்டுச் சென்றது நாசிக் ஆசிரமத்தின் இறுதி கட்டத்தின் தொடக்கமாகும். ‘அவதார்’ (AVATAR) பத்திரிகை ஒருபோதும் தொடங்கப்படாததற்கு இதுவும் ஒரு காரணம்.

கேரெட்டின் கருத்துக்கள் குற்றமற்றவை, ஆனால் அப்பாவித்தனமாக இருந்தன. ஒரு வெற்றிகரமான ஹாலிவுட் திரைக்கதை எழுத்தாளர், தனது எழுத்தின் இலாபகரமான தொழிலை அனுபவித்தவர், ‘மாய மந்திர’ இந்திய தேசத்திற்கு வந்து, இறை உணர்வை அடைந்த ஒரு குருநாதருடன் பல மாதங்கள் இணைந்திருந்தார். திரைப்படத் தொழிலில் மீண்டும் பணி புரியும் ஆர்வத்துடன் இருந்த அவர், ஆயிரக்கணக்கான டாலர்களை சம்பாதித்து, பாபாவிற்கு அனுப்பி வைக்கும் நேரத்தில், பாபா அவரை நினைத்து எவ்வளவு பெருமைப்படுவார் என்பதுதான் அவரது ஒரே எண்ணம். ஆனாலும், கேரெட் ஃபோர்ட் திட்டமிட்டபடி சூழ்நிலைகள் அமையவில்லை. உண்மையில், அவர் இந்தியாவில் தங்கி, பாபாவிற்கு, நேர்மையாக உதவும் நோக்கத்தில் தனது சொந்த திட்டங்களை வகுப்பதற்கு பதிலாக, அவரது எதிர்காலத்தை மெஹர் பாபாவே தீர்மானிக்க அனுமதித்திருந்தால், அது புத்திசாலித்தனமாக இருந்திருக்கும். ஒன்றைச் செய்யும் தீவிர ஆர்வத்தோடு ஒருவர் மெஹர் பாபாவின் ஒப்புதல் அல்லது அனுமதிக்காக அவரிடம் வருவதானால், பாபா அதை ஒருபோதும் வேண்டாம் என்று சொன்னதில்லை; தனது மனதைப் பயன்படுத்தி, விரும்பியதைச் செய்ய அந்த நபரை அனுமதித்தார், பின்னர் எல்லாவற்றையும் குருநாதரிடம் விட்டுவிடுவதற்கான ஞானத்தை, இயல்பாகவே கற்றுக்கொள்ள வைத்தார்.

கேரெட் விஷயத்தில், பல ஆண்டுகளாக, ஹாலிவுட்டில் அவர் வேலையின்றி, செயலற்ற தன்மையை எதிர்கொள்ள வேண்டி இருந்தது, அவரைப் பெருந்துயரத்திற்கு உள்ளாக்கியது. அவர் கடனில் மூழ்கி, பாபாவிற்குத் தனது அவல நிலையை விவரிக்கும் நீண்ட கடிதங்களை எழுதினார். வேலை இல்லாதது அவருக்குப் பெரும் சித்திரவதை போல் இருந்தது, மேலும் பாபாவுக்காகப் பணத்தையும் சம்பாதிக்க முடியாமல் போனது, ஆழ்ந்த வெறுப்பை அளித்தது. ஆச்சரியப்படும் விதத்தில் இந்த விஷயத்தின் முரண்பாடு என்னவெனில், இக்காலகட்டத்தில், மெஹர் பாபா, உண்மையில் அவருக்கு அவ்வப்போது பணம் அனுப்பி வைத்தார். பாபாவிற்கும் கேரெட்டிற்கும் இடையில் பல மாதங்கள் கடிதத் தொடர்பு நீடித்தது. கேரெட்டின் ‘சிணுங்கும்’ கடிதங்களில் ஒன்று (அவரே அப்படி விவரித்திருந்தார்) பாபாவிடம் ஏதேனும் உதவி புரியுமாறு கேட்டுக் கொண்ட பின்பு, மெஹர் பாபா பின்வரும் கடிதத்தை (1937 அக்டோபர் 3ஆம் நாள் கேன்ஸ் நகரிலிருந்து) அனுப்பினார்.

உங்கள் ஆன்மீக முன்னேற்றத்தை சிறந்ததாக நான் கருதும் வேளையில், உங்களின் பணம் சம்பாதிக்கும் திறன், இதர எல்லா திறமைகளையும் போலவே, என்னுடைய கருணையின் வடிவாக, கொடுக்கப்படும் அல்லது நிறுத்தி வைக்கப்படும் என்பதை இப்போது நீங்கள் அறிவீர்கள்.

உங்கள் கடிதத்தில் நீங்கள் வாழ்க்கையை எனக்காக அர்ப்பணித்துள்ளதாகவும், எனக்கு சேவை செய்வதைத் தவிர வேறு எந்த லட்சியமும் இல்லை, என் அழைப்புக்குத் தயாராக இருக்கும் ஒரு சிப்பாய் என்றும் உங்கள் கடிதத்தில் கூறியுள்ளீர்கள். ஆனால் நான் உங்களுக்கு விடுத்த அழைப்பு உங்களுக்குப் பிடிக்கவில்லை. உங்கள் கருத்துக்களின்படி போர் புரிய வேண்டும், என்னுடைய விருப்பப்படி அல்ல, என்று நீங்கள் விரும்புகிறீர்கள்.

அன்புள்ள கேரெட், நீங்கள் எனது பணியைச் செய்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ள முயற்சி செய்யுங்கள், இது என்னைப் போலவே மிகவும் பழமையானது. உங்கள் வாழ்க்கையை என்னிடம் அர்ப்பணம் செய்வதில், முடிவுகளை கவனிக்காமல், எனது கைகளில் இருக்கும் மற்றும் எனது விருப்பத்தைத் சார்ந்திருக்கும் என் வழிமுறைகளை, முற்றிலுமாகப் பின்பற்ற நீங்கள் தயாராக இருக்க வேண்டும். எனது வாக்குறுதிகள் எப்பொழுதும் நிறைவேற்றப்படும், ஆனால் என்னுடைய தனிப்பட்ட வழியில், குறிக்கப்பட்ட நேரத்தில் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

நான் ஓர் எழுத்தாளர் அல்ல, எனவே உங்களைப் போல், உங்கள் விருப்பம் போல நான் எப்பொழுதும் என்னை வெளிப்படுத்துவதில்லை. நான் ஓர் உபாத்தியாயரும் அல்ல என்பதால், நாளைக்கான பாடம் என்னவாக இருக்கும் என்பதை நான் முன்கூட்டியே உங்களுக்குச் சொல்லவும் இல்லை. நான் கடவுள், உச்ச நிலையில் இருக்கும் இரட்சகர். நீங்கள் என்னை விட்டுச் சென்ற நாளிலிருந்து நீங்கள் அனுபவிக்கும் சோதனைகளால், நீங்கள் விடுதலையை நோக்கி என்ன முன்னேற்றம் கண்டுள்ளீர்கள் என்பது உங்களுக்குத் தெரிந்திருந்தால், அதிருப்தியில் நிரம்பி இருப்பதற்கு பதிலாக நீங்கள் நன்றியுணர்வால் பெருமிதம் அடைந்திருப்பீர்கள்.

இது உண்மைதான், மாயையின் பிடியிலிருந்து எனது பக்தர்களை விடுவிக்க, அன்றாட வாழ்க்கையின் சூழ்நிலைகளை, உங்கள் புத்திக்கு எட்டாத வகையில் பயன்படுத்துகிறேன். ஆகவே, என்னுடைய தனிப்பட்ட அல்லது உலகளாவிய திட்டங்களின் விளக்க வரைபடங்களை நான் உங்களுக்கு வழங்குவேன் என்று நீங்கள் எதிர்பார்க்கக்கூடாது. என்னை நம்புங்கள், பரிபூரணமாக நம்புங்கள். நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன், உங்களை என் ஊடகமாக, என் அருமை புதல்வனாக வழிநடத்துகிறேன். நீங்கள் செய்யும் அல்லது செய்யாத எல்லாவற்றிலும் உங்கள் செயல்திறன் எப்பொழுதும் எனது விருப்பத்தைச் சார்ந்தது! நீங்கள் எனது தெய்வீக இசைக்குழுவில் ஒரு கருவி, எனக்குத் தேவையான ஒரு

**கருவி, ஆனால் அதை முழுமையடையச் செய்ய வேண்டும். நான் உங்களை ஒருபோதும் தோல்வியடைய விடமாட்டேன், நீங்களும் என்னைத் தோற்கடிக்கும் வழியில் செல்லக் கூடாது. நீங்கள் இருந்தபடியே தொடர்ந்து தைரியமாக இருக்க வேண்டும்.**

1937, மார்ச் 25 அன்று காலையில் பாபா நாசிக் நகரிலிருந்து பதினாறு மைல் தொலைவில் அமைந்த கோதாவரி நதியின் பிறப்பிடமான திரிம்பக் (TRIMBAK) மலைக்கு மேற்கத்தியர்களை அழைத்துச் சென்றார். அனைவரும் மூன்று கார்களில் மலை அடிவாரத்தில் வந்து, செதுக்கி, வடிவமைக்கப்பட்ட 700 கற்படிகளில் ஏறத் தொடங்கினர். பாபாவுடன் ஜீன், நான்னி மற்றும் உடல்நலமின்றி இருந்த சிலரை, தூக்குத்தூக்கியில் அமர வைத்து, சுமந்து சென்றனர்.

மேலே, பாபா அவர்களுக்கு கோதாவரி நதி உற்பத்தியாகும் இடத்தைக் காண்பித்தார். பின்பு, மர நிழலில் அமர்ந்து மதிய உணவை உண்ட பின்னர், எஞ்சிய உணவையும் எடுத்துக்கொண்டு பாபா அனைவரையும் நடக்க அழைத்துச் சென்றார்.

ஒரு மணிநேர நடைப்பயணத்திற்குப் பின்னர், அனைவரும் சோர்வாக இருந்த நிலையில், பாபா, டிலியாவிடம் தேநீர் தயார் செய்யக் கூறி, பசியுடன் இருப்பதாகத் தெரிவித்தார். “**நாம் அனைவரும் மறுபடியும் ஏன் உண்ணக்கூடாது**?” என்று பாபா கேட்க, இரவு உணவிற்கு எதுவும் மிஞ்சாது என்பதால் டிலியா ஆட்சேபனை தெரிவித்தார். பாபா “**பரவாயில்லை**” என்று கூற எஞ்சிய உணவை தேநீருடன் உண்டனர்.

அப்போது காலை 10 மணி, அவர்கள் ஏற்கனவே மதிய உணவு, தேநீர் மற்றும் இரவு உணவை முடித்து விட்டனர். “**வேறு எதுவும் செய்ய இல்லாததால், உணவு முடிந்ததும், திரும்பிச் செல்லலாம்**” என்று பாபா தெரிவித்தார். அதற்குள் சூரிய வெப்பம் அதிகமாக இருந்தது, ஆனாலும் அவர்கள் வேறு பாதையில் இறங்கி மதியம் ரிட்ரீட்டிற்குத் திரும்பி வந்தனர்.

மார்ச் 28 அன்று பாபாவைப் பார்க்க மெமோ தனியாக மெஹராபாத்திற்கு வந்து, குடும்ப குவாட்டர்ஸில் தவ்லத்மாயுடன் தங்கியிருந்தார். அறங்காவலர்களின் சந்திப்பு, மார்ச் 30ஆம் நாள் ராஹூரியில் நடைபெற்றது; ராம்ஜூ, ஸரோஷ், ஆதி சீனியர், பாதிரி, பெண்டு, விஷ்ணு, காக்கா, நோரினா, எலிஸபெத் ஆகியோர் கலந்து கொண்டனர். சாஞ்சியும் அன்றைய தினம் மும்பையிலிருந்து ராஹூரிக்கு வந்தார்.

ஜோதிடர் டேன் ருத்யாரின் (DANE RUDHYAR) மனைவி மல்யா ருத்யார் (MALYA RUDHYAR) இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 1937, மார்ச் 31 அன்று நாசிக் நகருக்கு வந்தார். ருத்யார் தம்பதியினர் பாபாவை 1931ஆம் ஆண்டில் பாஸ்டன் (BOSTON) நகரிலும், மீண்டும் 1932இல் ஹாலிவுட்டிலும் சந்தித்தனர். மல்யாவின் சந்திப்பின் போது, பாபா அவரிடம், “**துணிச்சலும்**

**வலிமையும் எல்லா சிரமங்களையும் சமாளிக்கும். உறுதியாக இருங்கள், நம்பிக்கையை தளரவிட வேண்டாம், இதயத்தில் வேண்டிய ஏக்கத்தைக் கொண்டிருங்கள். அது உங்களிடம் உள்ளது. நீங்கள் எல்லையற்ற பிரபஞ்சத்தின் உரிமையாளர், ஆனால் நீங்கள் அதைத் தேடி, கண்டுபிடிக்க வேண்டும். நான் எப்பொழுதும் உங்களுக்கு உதவுவேன்.**

**"ஏக்கமும், உறுதியும் ஆழமாகவும் வலுவாகவும் இருக்கும் பட்சத்தில் இடங்களும், சூழ்நிலைகளும் ஒரு பொருட்டல்ல. உதாரணத்திற்காகச் சொன்னால், இது பொறுமையோடு மேற்கொள்ளும், முடிவில்லாத நடைப்பயணம் அல்ல. நீங்கள் எப்படி, எங்கு, எந்த திசையில் பயணிக்கிறீர்கள் என்பதுதான் முக்கியம். நீங்கள் பல ஆண்டுகளாகப் பயணம் செய்து கொண்டிருக்கலாம், ஆனால் அது தவறான திசையை நோக்கி இருந்தால் ஆற்றலையும் நேரத்தையும் வீணடிக்கும். நீங்கள் மேலும் விலகிச் சென்றால், நேரம் வரும்போது நிச்சயமாக நீங்கள் திரும்பி வருவீர்கள், ஆனால் இது ஒரு நீண்ட நெடிய செயல்முறை."**

மல்யா நாசிக் ஆசிரமத்தில் தங்க அழைக்கப்பட்டார், அமெரிக்கா திரும்புவதற்கு முன்பு சில வாரங்கள் அங்கு தங்கியிருந்தார்.

1937, ஏப்ரல் 1 அன்று மெஹர் பாபா மேற்கத்திய அன்பர்களுக்கு, மிகவும் சுவாரஸ்யமான சொற்பொழிவு ஒன்றை வழங்கினார்; அவர்கள் செய்யும் ஒவ்வொன்றிலும் பாபாவைப் பற்றி எப்பொழுதும் சிந்திக்க வேண்டும் என்று விளக்கினார்:

**நான் உங்களிடமிருந்து எதையும் விரும்பலாம். தொழுநோயாளிகளை நீராட்டி, சுத்தம் செய்து அவர்களை கவனித்துக் கொள்ளவும், உங்களில் சிலருக்கு நான் அறிவுறுத்தலாம். சிலரிடம், என்னை நினைத்து தியானம் செய்யுமாறு கட்டளையிடலாம், அல்லது சாதுக்களைப் போல் அலைந்து திரியலாம், நடனமாடலாம், மகிழ்ச்சியுடன் பாடலாம், அல்லது எலும்புக்கூடுகளைப் போலாகலாம், அல்லது உண்டு, உறங்கி கொழுப்பு நிரம்பிய உடலோடு பெரியதாகவும் வளரலாம்; நான் எதையும் அறிவுறுத்தலாம். ஆனால் அது எதுவாக இருந்தாலும், அனைவரும் எனக்காகப் பணிபுரிய வேண்டும். இந்தப் புதிய பணி ஏப்ரல் மாதத்தில் தொடங்கும்.**

**தியானம் என்பது எல்லா நேரத்திலும் - மனதை அங்குமிங்கும் அலைபாய விடாமல், எப்பொழுதும் பாபாவை நினைத்துக் கொண்டிருப்பது. எனக்காக, நீங்கள் அதைச் செய்கிறீர்கள் என்பதுதான் முக்கியம்; இல்லையெனில், நம்மிடம் லட்சக்கணக்கான மருத்துவமனைகளும், கோடிக்கணக்கான செவிலியர்களும் உள்ளனர். ஆனால் நீங்கள் எனக்காகப் பணிபுரிய வேண்டும், எனக்காகப் பிறரிடம் ஒன்றைக் கேட்கவும், எழுதவும், தியானம் செய்யவும் வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்தத் தொழுநோயாளிகளை நீங்கள் 'பாபா' என்று**

**நினைக்கும் தருணத்தில், நீங்கள் அவர்களை அன்புடன் சுத்தம் செய்வீர்கள். பாபா எல்லாவற்றிலும் இருக்கிறார், எனவே நீங்கள் எனது தலைமுடியை சுத்தம் செய்யும் அதே அன்புடன் அவர்களையும் சுத்தம் செய்யுங்கள். அப்போதுதான் புனித ஃபிரான்சிஸின் (ST. FRANCIS) நிலையை நீங்களும் வெளிப்படுத்துவீர்கள்.**

மார்கரெட் க்ராஸ்க் பக்கம் திரும்பி, பாபா தொடர்ந்தார்:

**எனக்காக நீங்கள் நடனமாடினால், என்னை நினைத்து தியானிப்பவரைப் போலவே நீங்களும் சிறப்பான ஒன்றைச் செய்கிறீர்கள் என்று அர்த்தம். சிலருக்கு வேலை செய்வதிலும், சிலருக்கு விளையாடுவதிலும் பிரியம் இருக்கும். ஆனால் நீங்கள் எனக்காக அதைச் செய்யும்போது, இரண்டும் ஒன்றே. சுருக்கமாகச் சொன்னால் இது வேதாந்தம் மற்றும் கிறிஸ்தவ தத்துவம்; மிகவும் எளிதானது அதேவேளையில் மிகவும் கடினமானது!**

**நீங்கள் ஈடுபடும் அனைத்திலும் என்னை நினைவில் கொள்ளுங்கள். உண்ணுங்கள், நடனமாடுங்கள், ஆனால் செயலில் உங்களை மறந்துவிட்டு, அதற்கு பதிலாக என்னை நினைவில் கொள்ளுங்கள். இது செயல்களின் மூலம் ஏற்படும் ஐக்கியம். உங்களைப் பற்றி நீங்கள் எவ்வளவு குறைவாக நினைக்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக நீங்கள் பாபாவைப் பற்றி நினைக்கிறீர்கள், விரைவில் 'அகந்தை' அகன்று 'பாபா' உங்களுள் உறைகிறார். உங்கள் (யூ - YOU) - அகந்தை [யூ(ஈ)கோ - YOU GO] போகும்போது - முழுவதுமாகப் போகும்போது, நான் (பாபா - BABA) உங்களில் ஒருவன் ஆகிறேன். எனவே, கொஞ்சம் கொஞ்சமாக 'நீங்கள்' போக வேண்டும். இன்று உங்கள் மூக்கு, நாளை உங்கள் காதுகள், பின்னர் உங்கள் கண்கள், உங்கள் கைகள், அனைத்தும்.**

**நீங்கள் உண்ணும்போது, உறங்கும்போது (படுக்கைக்குச் செல்லும் முன்), பார்க்கும்போது, கேட்கும்போது என்னையே நினைத்துக் கொள்ளுங்கள். எல்லாவற்றையும் ரசித்து அனுபவிக்கவும், ஆனால் அவை அனைத்தும் பாபா என்று நினைத்துக் கொள்ளுங்கள். பாபா அதை ரசிக்கிறார். பாபா அதை உண்ணுகிறார். பாபாவில் நிம்மதியாக தூங்குங்கள், நீங்கள் எழுந்ததும் நினைவில் கொள்ளுங்கள் பாபா எழுந்திருக்கிறார். இந்த ஒரே எண்ணத்தை உங்களுடன் தொடர்ந்து வைத்திருங்கள். நீங்கள் தவறு செய்தால், அதை, பாபா செய்கிறார் என்றும், உங்களுக்கு வலி எடுத்தால், அந்த வலியை பாபா தாங்கிக்கொள்கிறார் என்றும் நினைத்துக் கொள்ளுங்கள். அப்படியானால் எல்லா நேரத்திலும் பாபா மட்டுமே இருக்கிறார். உங்களை மறந்து, பாபாவுக்காக அனைத்தையும் செய்ய முயற்சி செய்யுங்கள். அது எல்லா நேரத்திலும் பாபாவாக இருக்கட்டும்!**

**ஏப்ரல் 1ஆம் நாள் இந்தப் புதிய வாழ்க்கைத் தொடங்குகிறது. உங்களை மறக்க முயன்று, பாபாவை மனத்திரையில் கொணர்ந்து, அனைத்தையும் செய்யும் தருவாயில், நீங்கள் செய்வதை நீங்களே**

**அனுபவிப்பீர்கள். இதுவே உண்மையில் எல்லா பேரின்பமும் அன்பும். துன்பம், துயரம் இவற்றை நாமே உருவாக்கியுள்ளோம்; எனவே மகிழ்ச்சியாக இருப்போம். எப்படி? எதனுடனும் பிணைக்கப்படாமல் இருப்பதன் மூலம்.**

**நான் கார் ஓட்டுவதையும், நடனமாடுவதையும் நீங்கள் கற்பனை செய்ய முடியுமா? நீங்கள் நடனமாடும்போது, பாபா நடனமாடுகிறார்; நீங்கள் காரை ஓட்டும்போது, அதை பாபா ஓட்டுகிறார். பாபா எல்லாவற்றையும் செய்கிறார். நீங்கள் மூச்சுக்காற்றை விடும்போதும், அதை பாபா விடுகிறார். . . இப்படி, பாபாவை எப்பொழுதும் சிந்தியுங்கள். இது எளிதான மற்றும் இயற்கையான வழி.**

**ஒவ்வொரு காலையிலும், ஒரு மணிநேரம் தியானத்தில் அமருமாறு பாபா மேற்கத்திய அன்பர்களுக்கு அறிவுறுத்தியிருந்தார்; ஏப்ரல் 2ஆம் தேதி, தியானத்தைத் தீவிரமாக எடுத்துக் கொள்ளுமாறு பாபா வலியுறுத்தினார்: "தியானத்தில் முழு கவனத்துடன், உங்கள் ஆன்மீக வாழ்க்கை, அதையே சார்ந்துள்ளதாக நினைத்து முயற்சி செய்யுங்கள், உற்சாகமின்றி ஏதோ பயிற்சியில் ஈடுபடுவது போல், அல்லது ஆமணக்கு எண்ணெயை அருந்தி அசௌகரியமாக உணர்வது போலல்லாமல் செய்யுங்கள்."**

**பாபா அவர்களிடம், "நான் கொடுக்க விரும்புவதில் ஒரு சிறிய பகுதியை நீங்கள் அனுபவிப்பதாக இருந்தால், தியானத்தில் அமர்ந்து என் மீது கவனம் செலுத்துவது மிகவும் ஆனந்தமாக இருக்கும். அதுவரை நான் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகக் கூறியதை தவறாமல் பின்பற்ற முயற்சி செய்யுங்கள்"** எனக் கூறினார்.

பாபா மறுநாள் அதிகாலையில் சாஞ்சியுடன் மெஹராபாத் புறப்பட்டுச் சென்றார். சார்லஸ் பர்டம் (CHARLES PURDOM) எழுதிய புதிய புத்தகம் 'தி பெர்ஃபெக்ட் மாஸ்டர்' (THE PERFECT MASTER) சமீபத்தில் இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது; அதன் சில பிரதிகள் இந்தியாவிற்கு வந்தன. இந்தப் புத்தகத்தை, குஜராத்தியில் மொழிபெயர்ப்பது குறித்து சாஞ்சி விவாதித்தார். மண்டலி மற்றும் மேலை நாட்டினர் தங்கள் அனுபவங்களை எழுத வேண்டும் என்றும் சாஞ்சி பரிந்துரைத்ததை, பாபா பெரிதும் விரும்பினார்: **"நாம் நாசிக் திரும்பும்போது அதைப் பற்றி எனக்கு நினைவூட்டுங்கள்"** என்றார்.

ஷிரீன்மாய், பெஹராம், பெரின், குழந்தைகளோடு 1937, ஏப்ரல் 4 அன்று பாபாவை சந்திக்க மெஹராபாத்திற்கு வந்தனர்.

மெஹர் பாபா ஏப்ரல் 6 அன்று நாசிக் சென்ற இரண்டு நாட்களுக்குப் பிறகு மேற்கத்தியர்களை எட்டு மைல் தொலைவில் அமைந்த 'ஆனந்த்' பள்ளத்தாக்குக்கு (ANAND VALLEY) மூன்று கார்களில் அழைத்துச் சென்றார். கோதாவரி நதிக்கரையில் மா மரங்களால் நிரம்பிய சூழ்நிலை சுற்றுலாவிற்கு

உகந்த இடமாக இருந்தது. பாபா மிகவும் மகிழ்ச்சியாக, விளையாட்டுத்தனமான மனநிலையில் இருந்தார்.

மெஹர் பாபாவின் அறிவுறுத்தலின் பேரில் நான்னி 40 நாட்கள் திரவ உணவு, மூன்று டம்ளர் ஆரஞ்சு ரசம் மட்டுமே அருந்தி உபவாசம் இருந்தார். பாபா, டெக் டென்னிஸ், கிட்டிப்புள் விளையாடிய வேளையில் நான்னியை நிழலில் ஓய்வெடுக்கும்படி கேட்டுக்கொண்டார்.

சுமார் பத்தரை மணியளவில் நோரினா ரிட்ரீட்டிற்குச் சென்று சூடான மதிய உணவை எடுத்து வந்தார். பாபாவுடன் குழு ஒன்றாக அமர்ந்து இலைத்தட்டுகளில் உண்டனர்; அனைவருக்கும் உணவை அவரது கைகளால் பரிமாறினார். மதிய உணவிற்குப் பின்னர், அவர்கள் ஓய்வெடுத்து மேலும் விளையாட்டைத் தொடர்ந்தனர். நோரினா எடுத்து வந்த பானங்களை, பார்லி நீர், சோடா, ஆரஞ்சு, தர்பூசணி ரசம் ஆகியவற்றை புத்துணர்ச்சியூட்டும் கலவையாக மாற்றி, பாபா அனைவருக்கும் வழங்கினார். இனிப்புப் பண்டமாக, தர்பூசணி துண்டுகளைப் பகிர்ந்தளித்தார். பிற்பகலில் மேற்கத்திய அன்பர்கள் பாபாவைச் சுற்றி வட்டமாக அமர்ந்து வேடிக்கையான கதைகளைச் சொல்லி அவரை மகிழ்வித்தனர்.

மதிய உணவிற்குப் பிறகு மலேரியா நோயால் பாதிக்கப்பட்ட ருஸ்தத்தை அழைத்து வர பாபா, ஃபிரீனியை அனுப்பினார். ருஸ்தம் வந்ததும் பாபா அவரை நிழலில் ஓய்வெடுக்குமாறு கூறி பார்லி நீரைக் கொடுத்தார். பின்பு, மதியம் நான்கு மணியளவில் ரிட்ரீட்டுக்குத் திரும்பி வந்தனர்.

'தி பெர்ஃபெக்ட் மாஸ்டர்' (THE PERFECT MASTER) புத்தகத்தின் நகல்களை நோரினா, நதீன், கிட்டி ஆகியோருக்கு பாபா வழங்கினார். மேற்கத்திய அன்பர்கள் தங்கள் அனுபவங்களை ஒரு புத்தகமாக வடிவமைக்கும் சாஞ்சி, மால்கம் ஆகியோரின் யோசனையைப் பற்றியும் விவாதித்து, பாபா அதை ஒரு மாதத்தில் எழுதுமாறும் அறிவுறுத்தினார். மாலையில் பாபா ராஹூரிக்குப் புறப்பட்டு, பின்பு மெஹராபாத் சென்றார்.

ஏப்ரல் மாதத்தில், நதீன் டால்ஸ்டாய் தனது அனுபவங்களைப் பற்றி வங்காள கவிஞரும், நாவலாசிரியரும், நோபல் பரிசை வென்றவருமான ரவீந்திரநாத் தாகூருக்குக் (RABINDRANATH TAGORE) கடிதம் எழுதினார்; பல ஆண்டுகளுக்கு முன்பு நியூயார்க் நகரில் நதீன் அவரை சந்தித்தார். அவரது கடிதத்தின் ஒரு பகுதி பின்வருமாறு:

ரஷ்யர்களாகிய நாங்கள் எப்பொழுதும் உங்கள் கவிதைகளைப் படித்து மனம் கனிந்து பாராட்டுகிறோம். இந்தியா எப்பொழுதுமே எங்களுக்கு மிக உயர்ந்த ஆன்மீக வெளிப்பாடுகள் மற்றும் பல தன்வயப்படுத்தும் மர்மங்கள் நிறைந்த நாடாகத் தோன்றியது; அது எங்கள் கற்பனையைக் கவர்ந்து, பரிபூரண நிலையை நாடும் நம்பிக்கையை ஊக்குவித்தது; ஆனால் உண்மையான ஆன்மீகத்தின் அர்த்தத்தை அனுபவப்பூர்வமாகத் தேடி, கண்டுகொள்ள பல வருடங்கள் ஆயிற்று!

பல மேலை நாட்டினரைப் போல, நானும் சில யோகா பயிற்சிகளைச் செய்யத் தொடங்கி, எனது வாழ்வின் மிகப்பெரிய உத்வேகம் மற்றும் முழு மனதுடன் நான் அதில் ஈடுபட்டேன். ஆனால் என்னால் இயன்றவரை நான் செய்ய முயன்ற போது, எளிதில் கையாள முடியாத சிரமங்களை நான் சந்திக்க நேர்ந்தது; உண்மையான வழிகாட்டுதலின் பொறுப்புகளை ஏற்கக்கூடியவர்கள் எவரும் இல்லாததால் நான் அதை நிறுத்த வேண்டிய கட்டாயத்தில், திகைத்துப்போய், உதவியற்றவராக இருக்க வேண்டியிருந்தது.

ஒருவரிடம் அனைத்து புத்தகங்களும் கோட்பாடுகளும், ஆன்மீக பள்ளிக்கூடங்கள், வெவ்வேறு கிழக்கு மற்றும் மேற்கத்திய போதகர்களும் தலைவர்களும் இருக்க முடியும் - ஆனால் உயர்ந்த உண்மையான ஆன்மீக பயிற்சிக்கு உகந்த உதவி எதுவும் இல்லை. . .

வாழ்வில் கிடைக்கப்பெற்ற அனைத்து அனுபவங்களும் யார் ஒருவரையும் நம்புவதை மிகவும் கடினமாக்கியது. ஒன்று மட்டும் தெளிவாகப் புலப்பட்டது - எளிய வழிகள், இறை உணர்வை அடைந்த ஒரு பரிபூரண குருநாதரின் தேவை - இவற்றை ஒரு சரியான எடுத்துக்காட்டாகக் கூறுவேன். ஆகவே, நான் தொடர்பில் வந்த, உண்மையான பரிபூரண குருநாதரின் முன்னிலையில் இருந்தபோது, நான் அடைந்த மிகப் பெரிய மகிழ்ச்சியை நீங்கள் கற்பனை செய்து கொள்ளலாம். உடனடியான உள் அங்கீகாரமும், நேரடி நடைமுறை உதவியும், அற்புதமான அனுபவங்களும் எனக்கு நீண்டகால அமைதியைத் தந்தன. அந்நேரத்திலிருந்து எனது ஆன்மீக பாதை உறுதியாகவும் தெளிவாகவும் இருந்தது, உள்ளளவில் நேர்ந்த மாற்றங்கள் அனைத்தும் முன்னாள் சிரமங்களை அகற்றின; பழைய முறைகள் நிராகரிக்கப்பட்ட நிலையில், அதிகரித்து வரும் முன்னேற்றம் உறுதி செய்யப்படுகிறது. . . .

உண்மையும், தூய்மையுமான ஓர் ஆன்மீக வழிகாட்டியைக் கண்டுபிடிப்பது அரிது, அது மிகவும் அரிதான கடவுளின் கருணை, உண்மையான அந்த தெய்வீக அன்பிற்காக நாம் நம் வாழ்நாள் முழுவதும் ஏங்கிக் கொண்டிருக்கிறோம், இந்த பூமிக்கு வருகிறோம். . . ஸ்ரீ பாபாவின் தெய்வீக அன்பில் ஒரு தவிர்க்க முடியாத சக்தி உள்ளது - இது தெய்வீக அன்பை எழுச்சியுறச் செய்து, அவரது தூய ஆன்மீக வழிகாட்டுதலில் நம்பிக்கை மற்றும் தெய்வீக உறுதியைக் கொண்டு வருகிறது. இது ஆத்மாவிற்கு அதீத ஆறுதலை அளித்து, நமது ஆன்மீக இலட்சியத்தை நிறைவேற்ற உதவுகிறது.

மேற்கத்திய அன்பர்கள் 1937 ஏப்ரல் 10 அன்று அதிகாலையில் மெஹராபாத் வந்து, அதே மாலையில் ஏழு மணிக்குத் திரும்பிச் சென்றனர். மறுநாள் ஆதி சீனியர், பாபாவை ராஹுரிக்கு அழைத்துச் சென்றார், அங்கு அலி அக்பர் (ALI AKBAR – அலோபா - ALOBA), டைஃபாலி (TYEBALI) மற்றும் சில பார்வையாளர்கள் அவரை சந்திக்கக் காத்திருந்தனர். கோபமான மனநிலையில் இருந்தாலும் பாபா ஒவ்வொருவரின் தனிப்பட்ட பிரச்சினைகள் மற்றும் கவலைகளைத் தீர்த்து வைத்தார்; மேலும் ராஹுரியில் அவரது முழு

நேரத்தையும் அங்கு வாழ்ந்த மனநிலை பாதிக்கப்பட்டவர் மற்றும் மஸ்துகளுடன் செலவழித்தார். ராவ்ஸாஹேப், டாக்டர் கனி இருவரும் அன்று அவர்களுடைய வழக்கமான மனநிலையில் இல்லாதது பாபாவை மேலும் எரிச்சலூட்டியது.

1937, ஏப்ரல் 12 அன்று மெஹர் பாபா ஒரே நேரத்தில் இரண்டு நிறுவனங்களைப் பராமரிக்க விரும்பவில்லை என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டினார்: "**முழு விவகாரமும் மெஹராபாத் அல்லது ராஹூரியில் நடைபெற வேண்டும், ஆனால் இரண்டு இடத்திலும் வேண்டாம்.**" ராஹூரியில் நில உரிமையாளரான லக்ஷ்மிநாராயணனைப் பார்த்து, மேலும் வேண்டிய நிலத்தைப் பெற முயற்சிக்குமாறு, பாபா, டாக்கேக்கு அறிவுறுத்தினார்; இல்லையேல், ஆசிரமத்தை மெஹராபாத்திற்கு மாற்ற வேண்டும் என்பதைத் தெளிவுற எடுத்துரைத்தார்.

மேலும் 12ஆம் தேதி, ருஸ்தம் கேமராமேன் மற்றும் இம்பீரியல் ஃபிலிம் கம்பெனியின் இயக்குனருடன் ராஹூரிக்கு வந்தார். நாசிக் நகரில் பாபாவின் பிறந்தநாள் விழாவில் அவர்கள் எடுத்த காட்சிகளுடன் இணைக்க ராஹூரி ஆசிரமம் மற்றும் பாபா மஸ்துகளுக்கு உணவளிக்கும் காட்சியும் படமாக்கப்பட்டது.

அன்று பாபா எதிர்பாராமல் இரவு உணவிற்குப் பின்னர், எட்டு மணிக்கு நாசிக் வந்தார்; எவருமே மறுநாள் வரை அவர் வருவாரென எதிர்பார்க்கவில்லை.

அங்கு வழக்கமாக நிகழ்வது போலவே, அவர்கள் பிரதான கட்டிடத்திற்கு வெளியே நின்று, பாபா காரிலிருந்து இறங்குவதைப் பார்த்துக்கொண்டிருந்தனர். பாபா, ஆன்மீக உட்பணியில் தீவிரமாக இருந்ததால், அவர்கள் சில சமயங்களில் செய்ததைப் போலவே, முன்வந்து அவரைத் தழுவ வேண்டாம் என்று அவர்களுக்குச் சைகையால் தெரிவித்து, முற்றிலும் அமைதியாக இருக்குமாறு அறிவுறுத்தினார், ஆனால் தாழ்வாரத்தின் படிக்கட்டுகளில் தன்னைச் சுற்றி அமர பாபா அனைவரையும் அனுமதித்தார்.

எலிஸபெத்தின் நாய் கிப்பி பொதுவாக, பாபா நாசிக்கில் இருந்த வேளையில் அவரையே சுற்றி வருவது வழக்கம். நாய், பாபாவிடம் நடந்து சென்று அவரது கால்களை நாவால் வருடியது. பாபா ஒரு கணம் கிப்பியைத் தனது கைகளில் எடுத்தார்.

சிறிது நேரம் கழித்து, கிட்டி எங்கே என்று பாபா கேட்க, அவர் நடைப்பயிற்சிக்குச் சென்றதாகத் தெரிவித்தனர், ஆனால் ஏற்கனவே பொழுது மறைந்தும், அவர் இன்னும் திரும்பி வரவில்லை. பாபா அனைவரையும் தோட்டத்தில் அமர அழைத்துச் சென்று, "**கிட்டி எங்கே?**" என்று மறுபடியும் கேட்டுக்கொண்டே சிறிதுநேரத்தில் பாபா அங்கிருந்து வெளியேறி தனது அறைக்கு ஓய்வெடுக்கச் சென்றார்; அவர்களில் ஒருவரிடம் கிட்டிக்கு இந்தச் செய்தியை வழங்குமாறு கட்டளையிட்டார், "**கிட்டியிடம் சொல்லுங்கள் அவர் எல்லா வழிகளிலும் அற்புதமானவர், நல்லது, தீயது இரண்டிலும்!**"

மேற்கத்திய அன்பர்கள் இப்போது நான்கு மாதங்களாக ஒன்றாக இருந்தபோதிலும், நாசிக் ஆசிரமத்தில் கருத்து வேறுபாடுகளும், சிறு சண்டைகளும் நீடித்தன. 1937, ஏப்ரல் 13 அன்று பிற்பகலில், பாபா இந்தச் சிக்கலான சூழ்நிலையைக் குறிப்பிட்டு, இன்றியமையா தேவைகளுக்கும், சாதாரண விருப்பங்கள் அல்லது ஆசைகளுக்கும் இடையேயான வேறுபாட்டை விளக்கினார்:

**இன்று காலை நான் கூறியது போல, நாம் 'இறக்க' வேண்டிய நேரம் இது. 'இறப்பது' என்பது சாதாரண இறப்பு என்ற அர்த்தத்தில் அல்ல, ஆனால் தேவையற்ற, கீழ்த்தரமான ஆசைகளின் 'இறப்பு' என்று அர்த்தம். எங்கும் ஆனந்தம் நிரம்பி வழியும் அதே வேளையில், அறியாமையால் அனைத்துமே பரிதாபகரமாக உள்ளது; இந்த அறியாமை, தேவையற்ற ஆசைகளை நிறைவேற்ற ஒருவரைத் தூண்டுகிறது. இருப்பினும் ஒவ்வொருவரின் குறிக்கோள், ஆசையற்ற நிலையை அடைவதுதான். இது உங்களுக்குப் புரிகிறதா? நீங்கள் எதையும் அடைய ஆசை கொள்ளாதபோது எல்லாமே மகிழ்ச்சிகரமான, எல்லையற்ற, அளவிலா பேரின்பமாக இருக்கும். எனவே, ஆசைகள் இறக்கட்டும் - ஆனால் எப்படி?**

**நீங்கள் லட்சக்கணக்கான விஷயங்களை விரும்புகிறீர்கள். "எனக்கு இது வேண்டும், எனக்கு அது வேண்டும்" என்று நீங்கள் கூறுகிறீர்கள். உங்கள் ஆசைகளை நீங்கள் பட்டியலிட்டுக் கணக்கிட்டால் - கடவுளே, இன்றியமையா தேவைகள் என்பது ஆசைகளல்ல. அத்தியாவசிய தேவைகளுக்கு அப்பாற்பட்ட அனைத்தும் ஆசைகளே. இந்த ஆசைகள் இறுதியில் தவிர்க்க முடியாத இன்னல்களுக்கும், அழிவிற்கும் வழிவகுக்கின்றன.**

**ஆகவே, உங்கள் இன்றியமையா தேவைகளுக்கு அப்பாற்பட்டதை இயன்றவரை குறைவாக விரும்புவதற்கு முயற்சி செய்யுங்கள். மேலும் மேலும் அன்பை வளர்க்க முயற்சி செய்யுங்கள். தீவிரமாக முயற்சிக்கவும். நீங்கள் எதையும் விரும்பவில்லை என்றால், எல்லாமே ஆனந்தமாக இருக்கும். ஆனால் நீங்கள் முழு உணர்வுடன் முயற்சி செய்ய வேண்டும். கற்கள் எதையும் விரும்புவதில்லை, ஆனால் அது உணர்வின்றி நிகழும் ஒன்று.**

**இப்படி இறப்பதன் மூலம் இதைத் தொடங்கலாம்! நீங்கள் எவ்வளவு அதிகமாக விரும்புகிறீர்களோ, அவ்வளவு பரிதாபமாக இருக்கிறீர்கள். நீங்கள் ஐந்தே நிமிடங்கள், உங்கள் வாழ்க்கையில் விரும்பியது, அடைந்தது, அடையாதது அனைத்தையும் தீவிரமாக சிந்தித்துப் பாருங்கள்; இன்று நீங்கள் வாழ்க்கையில் திருப்தியாக உள்ளீர்களா என்று உங்களை நீங்களே கேளுங்கள்.**

கடந்த காலத்தில் நீங்கள் அனுபவித்த இன்பங்கள் அனைத்தும் இன்று இல்லை! அதுபோல நீங்கள் அனுபவித்த துன்பங்களும் இன்று இல்லை! எல்லாமே மாயையின் விளையாட்டு.

மகிழ்ச்சியாக இருப்பது நமது உரிமை எனும்போது, ஒன்றை விரும்புவதன் மூலம் மகிழ்ச்சியை இழக்க ஏன் முயற்சிக்க வேண்டும்? எனவே எதையும் விரும்பாமல் மகிழ்ச்சியாக இருங்கள். நீங்கள் விரும்பும் வேளையில், ஆசைகள் உங்களை அமைதியற்றவராக ஆக்குகிறது. நீங்கள் அதை அடையவில்லை என்றால், ஏமாற்றமடைகிறீர்கள். அடைந்த பின்னர் அதை விரும்பி அனுபவிக்காமல் இருக்கிறீர்கள்.

எனவே, மிகப்பெரிய, மகத்தான ஒன்றை அடையும் ஒரே ஏக்கத்தில் இருங்கள். அது, லட்சக்கணக்கான இதர, தேவையற்ற ஆசைகளைக் கொன்றுவிடும். இறைவனோடு ஒன்றிணையும் ஏக்கத்தில் இருங்கள். எவ்வளவு தெளிவான, எளிமையான ஒன்று. முழு மனதுடன் முயற்சிக்கவும். 'ஆம்' என்று கூறி, பின்பு செய்யாமல் இருக்காதீர்கள்; இப்போதே தீவிரமாகத் தொடங்குங்கள்.

நீங்கள் ஒருவரையொருவர் நேசிக்கத்தான் முடியவில்லை; சரி, ஆனால் குறைந்தபட்சம் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க முயற்சி செய்யுங்கள். இதைக் கூட நீங்கள் செய்யவில்லை. ஏன்? ஏனெனில் நீங்கள் நேர்மையாக இல்லை. அதனால்தான் நான் ராஹுரி ஆசிரமத்தில் பைத்தியங்களை விரும்புகிறேன். அவர்கள், பைத்தியக்காரத்தனத்தில் நேர்மையானவர்கள். நீங்கள் என்னை நேசிப்பதன் மூலம் எனது நிலையை அடையும் நோக்கத்தில் தொலைதூரத்திலிருந்து வந்துள்ளீர்கள்; ஆனால் இங்கே நீங்கள் அனைத்தையும் கோழிச்சண்டையாக மாற்றிவிட்டீர்கள்!

நான் உங்கள் அனைவரையும் விட்டுவிட்டு நேபாளத்திற்குச் செல்ல வேண்டும் அல்லது உங்கள் அனைவரையும் இமயமலைக்கு அனுப்பலாம் என்று நினைக்கிறேன். எனவே குறைந்தபட்ச ஆசைகளுடன் இப்போது தொடங்குங்கள். மேலும் ஒருவரையொருவர் நேசிக்க முயற்சி செய்யுங்கள். சகிப்புத்தன்மையை அதிகமாக வளர்க்க முயலுங்கள். எங்கும் மெச்சத்தக்க விதத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை இருந்தாலும் நீங்கள் எல்லோரும் சோக உணர்வுடன், பரிதாபமான மனநிலையில், துன்பப்படுகிறீர்கள். எனவே, நீங்கள் அனைவரும் 'இறக்கத் தயாராக' இருப்பதாக உறுதியளிக்கிறீர்களா?

குழுவில் உள்ள ஒவ்வொருவரும் பாபாவின் வார்த்தைகளை வாழ முயற்சிப்பதாக உறுதியளித்தனர். பின்பு பாபா மீண்டும் தொடர்ந்தார்:

உங்களிடையே ஒற்றுமையின்மையைக் கண்டறிந்தால், 'இறப்பதற்கு' நீங்கள் தயாராக இல்லை எனில், நீங்கள் அனைவரும் உங்கள் பெட்டி, படுக்கைகளை எடுத்துக்கொண்டு புறப்படுவது நல்லது. நீங்கள் பெயர், புகழை நாடி இங்கு வரவில்லை. மேற்கத்திய சீடர்கள் பலர் உள்ளனர். எனக்கு எவரும் தேவையில்லை. நான் எப்பொழுதும் தனியாக இருக்கிறேன், முடிவில்லா காலம் வரை அப்படியே இருப்பேன். நீங்கள், நானாக மாறும்

**வரை நான் உங்களுக்குத் தேவைப்படுகிறேன். ஆனால் நீங்கள் முயற்சி செய்யாவிடில், என்ன பயன்?**

**எனவே அனைவரும் இப்போது முயற்சிக்கத் தொடங்குங்கள், இல்லையேல், அனைவரையும் அவரவர் இல்லங்களுக்குத் திருப்பி அனுப்புவதில் நான் உறுதியாக இருக்கிறேன். உங்கள் முயற்சியில் நேர்மையாக இருங்கள். நல்லிணக்கம், அன்பு, அமைதி நிலவ வேண்டும். உண்மையான நல்லிணக்கம், அன்பு மற்றும் அமைதி - கட்டாயப்படுத்துவதால் அல்ல! நீங்கள் எனது விருப்பத்திற்கிணங்கி இருந்தாலொழிய, நான் விரும்புவதை உங்களுக்கு வழங்க முடியாது.**

(இதயத்தைச் சுட்டிக்காட்டி) **கதவுகளை மூடி வைக்க வேண்டாம். அவற்றை திறந்தே வைத்திருங்கள், அப்போது நான் விரும்பும் வேளையில் நுழைய முடியும். ஒவ்வொரு முறையும் நான் நுழைய விரும்பும்போது, கதவுகள் மூடப்பட்டிருப்பதைக் காண்கிறேன், அனைத்தும் பயனற்ற ஆசைகளால் நிரம்பியுள்ளன!**

**அன்பின் மூலம் (ஆசையின்) இறப்பைத் தழுவுங்கள். எனக்கு உறுதி கூறுங்கள். நீங்கள் ஒருவரை ஒருவர் நேசிக்க முடியாவிட்டால், உங்களைத் துன்புறுத்தி, சித்திரவதை செய்பவர்களை எப்படி நேசிக்க முடியும்? இயேசு எப்படி நேசித்தார் என்று எண்ணிப் பாருங்கள்! அவர் அனைத்திலும் தன்னையே பார்த்தார். ஆழ் இதயத்தில் பாபாவைப் பாருங்கள். நான் 'வேண்டாம்!' எனும்போது உங்களுக்குக் கோபம் வருமா? நோரினா 'வேண்டாம்' எனக் கூறும்போது, பாபா அதைக் கூறுவதாக நினைத்துக் கொள்ளுங்கள். இது அனைத்தும் விருப்பம், பெருமை, அகந்தையைத் திருப்திப்படுத்தும் முறை - அனைத்துமே ஆசைகள்.**

குழுவில் ஒருவர் பாபாவிடம் "இன்றியமையா தேவைகள், விருப்பங்கள் இரண்டையும் எவ்வாறு வேறுபடுத்துவது? சிலர், 'நான் விரும்பும் அனைத்தும் எனக்குத் தேவை' என்று கூறுகின்றனர். என்ன வேறுபாடு உள்ளது?" என வினவினார்.

பாபாவின் விளக்கம்:

**நீங்கள் பாலைவனத்தில் தாகத்தால் உயிரைத் துறந்து கொண்டிருக்கிறீர்கள் என்றால், உங்களுக்குத் தண்ணீர் தேவை - எலுமிச்சை பானம் அல்ல. நீங்கள் தண்ணீர் கேட்டால், அது உங்கள் இன்றியமையா தேவை. பார்லி நீர் கேட்டால், அது விருப்பம். இதைத் தெளிவாகப் புரிந்துகொண்டீர்களா? ஆனால் நீங்கள் நல்ல தண்ணீரைப் பெற முடிந்தால், தாகத்தைத் தணிக்க, சேற்று நீரைக் குடிக்க வேண்டிய தேவையில்லை. நல்ல நீர் அருந்தவும், எலுமிச்சைப் பழ ரசம் அல்லது சேற்று நீர் அல்ல, ஆனால் தூய்மையான, சாதாரண நீர்.**

நாசிக் நகரில் உணவு வகை பெரும்பாலும் முறுகல் நிலைக்குக் காரணமாக இருந்தது. ஜீன் ஒவ்வொரு நாளும் ஒரு சிறப்பு முறையில் சமைக்கப்பட்ட பசலை கீரையை விரும்பினார்; மற்றொரு நபருக்கு பீட்

கிழங்கு வேண்டும். குழுவில் ஒருவர் கோதுமை ரொட்டியை மட்டுமே சாப்பிட வேண்டும் என்று கூறினார். மற்றொருவர் ஒவ்வொரு காலையிலும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மோர் வேண்டுமெனக் கேட்டார். ரானோ, டிலியா இருவரும் ஒவ்வொரு நாளும் கிரீம் சாப்பிடவேண்டும் என்று பாபா அறிவுறுத்தியிருந்தார்; இதர நண்பர்களும் அதை விரும்பினர். எனவே, இந்த சந்திப்பின் போது, நோரினா உணவு பற்றிய கேள்விகளை எழுப்பினார்; பாபா தொடர்ந்து கருத்துரை வழங்கினார்:

**நீங்கள் அனைவரும் 'இறப்பதற்கு' உங்களால் முடிந்தவரை முயற்சி செய்வோம் என்று உறுதியளித்துள்ளீர்கள், எனவே இப்போது உணவுடன் ஆரம்பிக்கலாம். உணவைக் குறித்து எந்தவித கருத்து வேறுபாடும், சண்டை சச்சரவுகளும் இனி வேண்டாம். நோரினா முன்பு போலவே உணவு தயார் செய்யட்டும்.**

**நீங்கள்** (பாபா, நோரினாவைச் சுட்டிக்காட்டி) **எதையும் ஒளிவு மறைவின்றி மிகவும் அப்பட்டமாகக் கூறி விடுகிறீர்கள். ஒரு தாயின் இடத்திலிருந்து, மிகவும் மென்மையாக இருக்க வேண்டும். அனைவரிடமும் ஒன்றுபோல் இருங்கள். கனிவுடன் இருங்கள். எல்லோரும் கூறுவதைக் கேளுங்கள். அவர்கள் விருப்பத்திற்கு இணங்க முடிந்தால், நல்லது; இல்லையேல், முத்தமளித்து மென்மையாக 'இல்லை' என்று சொல்லுங்கள். இது நயமான சொல் செயல் தந்திரம். நீங்கள் சில நேரங்களில் மிகவும் வெளிப்படையாக இருந்தால் அது வேதனையை விளைவிக்கும், இதை நான் விரும்பவில்லை.**

**எனவே, நான் மீண்டும் கூறுகிறேன்: அனைவரும் இப்போது முயற்சிக்கத் தொடங்குங்கள், இல்லையேல், உங்களை உங்கள் இல்லங்களுக்குத் திருப்பி அனுப்புவதில் உறுதியாக உள்ளேன். உங்கள் முயற்சியில் நேர்மை முக்கியம். உண்மையான நல்லிணக்கம், அன்பு, அமைதி இருக்க வேண்டும் - கட்டாயத்தின் பேரில் இல்லாமல்.**

**சிறிய சிறிய விஷயங்கள் உங்கள் ஆற்றல், எண்ணம் மற்றும் நேரத்தை வீணடிக்கின்றன. அதற்கு மேல் ஒன்றும் இல்லை. ஒவ்வொருவரையும் நேசித்து, நடந்ததை மறந்து விடுங்கள். இதுதான் முக்கியம். நேசியுங்கள், எப்பொழுதும் நேசிக்க முயற்சி செய்யுங்கள்.**

**நோரினா நயமின்றி, தான் நினைப்பதை அப்படியே உரைப்பது உங்களுக்கு ரசிக்கவில்லை. அவரை இன்னும் அதிகமாக நேசிக்கவும். அது அவருக்குத் தேவை. உங்கள் ஆசைகளில் பலவீனம் இருப்பதை அவர் கண்டுகொண்டால், அவரும் உங்களை நேசிக்க வேண்டும். இது உங்களுக்குத் தேவை. ஒரு தாய் தனது குழந்தை உடல்நிலை சரியில்லாமல் அல்லது பலவீனமாக இருப்பதைக் கண்டால், அவள் அதை அதிகம் விரும்பி, நேசிப்பாள். அதுபோல், உங்களில் எவரேனும் பலவீனமாக இருந்தால், இதர நண்பர்கள் அனைவரும் அவரை இன்னும் அதிகமாக நேசிக்க வேண்டும்.**

**பலவீனம் என்று நான் குறிப்பிடுவது தேவையற்ற ஆசைகளைக் கொண்டிருப்பது. அதாவது கோபம் என்பது பலவீனம், பெருமை பலவீனம், இதுபோல மற்றும் பல. எனவே அனைவரும் முயற்சி செய்யுங்கள். காக்கா கூறுவது போல, "வேண்டாம் விவாதம்; முயற்சி மட்டுமே!"**

சற்று இடைவேளைக்குப் பிறகு, பாபா தொடர்ந்தார்:

**இன்று முதல் நீங்கள் ஒவ்வொருவரும் ஐந்து நிமிடங்கள் அமைதியாகவும் தனியாகவும் அமர்ந்து உள் நோக்கிப் பார்க்க முயற்சிக்க வேண்டும். இந்த ஐந்து நிமிடங்கள் தியானம் அல்ல, அது ஓர் 'உள் நோக்குப் பார்வை' மட்டுமே.**

**இதை எப்படிச் செய்வது? நிதானமான நிலையில் அமர்ந்து கொள்ளுங்கள் - எதைப்பற்றியும் சிந்திக்க வேண்டாம், பாபாவையும் சேர்த்து. கண்களை மூடிக்கொண்டு மனதளவில் உள் நோக்கி கவனத்தைச் செலுத்தி உங்களை எல்லையற்றவராகக் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் எல்லையற்றவர் என்ற எண்ணம் ஐந்து நிமிடங்கள் நீடிக்கட்டும். உங்களை எல்லையற்றவராகக் கற்பனை செய்வது எப்படி? எல்லையற்ற வானம், கடல் அல்லது பரந்த வெற்றிடம் என நீங்கள் கற்பனை செய்யலாம். இந்த ஒரே எண்ணம் உங்கள் மனதில் இருக்கட்டும் - அதாவது 'நீங்கள் எல்லையற்றவர்' என்ற எண்ணம்.**

**தனிப்பட்ட அறிவுறுத்தல்களின்படி ஒவ்வொரு நாளும் வழக்கம் போல் உங்கள் ஒரு மணி நேர தியானத்தைத் தொடரவும். நான் இங்கே இருக்கும் வேளையில், மாலையில் என்னுடன் அரை மணி நேரம் மௌனம் கடைப்பிடிக்க வேண்டும். இன்று முதல், மேலும் ஐந்து நிமிடங்கள் உள்நோக்கிப் பார்வையைத் திருப்ப வேண்டும். நான் உங்களுக்கு உதவி, நான் விரும்புவதை உங்களுக்கு வழங்க இது மிகவும் இன்றியமையாதது.**

அன்று மாலை, பாபா, அனைவரையும் புல்வெளியில் வெளியே மௌனமாக அமர அழைத்து, அவரது எழுத்துப் பலகையில் '**நாளை**' என்று உச்சரித்து, பின்பு விரிவாகக் கூறினார்: "**நாளை மாலையில் நாம் மௌனமாக அமர்வோம், ஆனால் ஒரு முக்கியமான நிபந்தனையின் கீழ் - நீங்கள் தலையை அங்கும் இங்கும் அசைத்து, ஒருவரை ஒருவர் பார்க்காமல், என்னை மட்டும் பார்த்து, நீங்கள் என்னுடன் தனியாக இருப்பதைப் போல் உணர வேண்டும். நீங்கள் அதை சிரமமின்றி இயற்கையாகச் செய்ய வேண்டும். உங்கள் உடல்களை நீங்கள் உணரக்கூடாது. தலை உங்கள் உடலின் மையமாக இருக்கட்டும். அப்படி இருக்கும் வேளையில், நீங்கள் உங்கள் உடலை மறந்து, என்னைப் பற்றி மட்டும் சிந்திக்கலாம்.**"

"தலையில் அழுத்தம் ஏற்பட்டால் நான் என்ன செய்ய வேண்டும்?" என்று பேக்கெட் கேட்டார்.

அதற்கு பதிலளித்த பாபா, "**நிதானமாக அமர்ந்து கண்களை மூடிக்கொண்டு தூங்குவது போல் ஓய்வெடுங்கள்… உங்கள் உடலை**

**மறந்துவிடும் விதத்தில் என்னை ஒருமுகமாகப் பார்க்க முடிந்தால், அது சிறந்தது. கண்களை மூடிக்கொள்ளாவிட்டால், என்னைப் பாருங்கள், ஆனால் உங்கள் உடலை மறந்து என்னில் ஆழ்ந்து மூழ்கி விடுங்கள்.**

**"நான் அதை உங்களிடம் விட்டு விடுகிறேன். நான் சொல்வது என்னவெனில், நான் உலகத்திற்காக உள்ளளவில் பணி புரிகிறேன்; நீங்கள் தியானத்தில் ஈடுபடும்போது, உங்கள் உடலை மறந்து என் மீது கவனம் செலுத்தினால், நீங்கள் எனது பணியில் பங்கெடுக்கிறீர்கள் என்று அர்த்தம்.**

**"எனது பணியும் நானும் ரோஜா மலரும் அதன் வாசனையும் போல; பிரிக்க முடியாதவை. ஆனால் ரோஜா மலர் அதன் வாசனையும் அல்ல, அதுபோல வாசனை, ரோஜா மலருமல்ல. முள்ளும், முள் குத்துவதும் பிரிக்க முடியாதவை, ஆனால் முள்ளும், முள் குத்துவதும் வேறு வேறு."**

பாபா படைப்பையும் அதன் இறுதி நோக்கத்தையும் விவரித்து, **"சக்தி, பேரின்பம், ஒளி, அமைதி அனைத்தும் கடவுளுக்கு உரித்தானது, ஆனால் அவர் தன்னைத்தானே வெளிப்படுத்த விரும்புவதால், உலக உணர்வை அடைய வேண்டியது அவசியம். எனவே இறை உணர்வோடு சாதாரண உலக உணர்வை அடையப்பெற, இந்த வேடிக்கை நாடகம் அனைத்தும் தொடங்கியது. நான் இந்த நாடகத்தை விரும்புகிறேன், ஆனால் இந்த வேடிக்கையில் எல்லையில்லா வேதனையை அனுபவிக்கிறேன்"** என்றார்.

குழுவில் ஒருவர், "ஏன் இந்த துன்பம்?" என வினவினார்.

பாபா கீழ்வரும் சுருக்கமான பதிலை வழங்கினார்:

**"அகந்தையை அகற்ற துன்பம் அவசியம்; எனது கோட்டிலிருந்து கறையை அகற்ற நீங்கள் அதை அழுத்தித் தேய்த்து, சுரண்டுவது அவசியமாக இருந்தது."**

மெஹர் பாபாவின் பிறந்தநாள் விழாவில் நிகழ்ந்த சிறப்புமிக்க காட்சிகள், பப்பா ஜெஸவாலாவின் இதயத்தில் வெகுவான தாக்கத்தை ஏற்படுத்தி, அவரை என்றென்றும் பாபாவின் பாதங்களில் அடிபணிய வைத்தது. அவர் நாக்பூருக்குத் திரும்பிச் சென்று, கோடையில் இரண்டு மாதங்களுக்காக தனது குடும்பத்தார் அனைவரையும் நாசிக் நகருக்கு அனுப்பி வைத்தார் - அவரது மனைவி கெய்மாய் (GAIMAI), மூத்த மகன் எரச் (ERUCH – 20) மகள்கள் மனு MANU – 19) மெஹரு (MEHERU – 17), மற்றும் இளைய மகன் மெஹர்வான் (MEHERWAN - 7) ஆகியோர். அவர்கள் 1937 ஏப்ரல் 15ஆம் நாள் நாசிக் நகருக்கு வந்து ரிட்ரீட்டுக்கு அருகிலுள்ள 'பிச்சி ஃபிப்ஸன்' ஸானட்டோரியத்தில் (PECHEY-PHIPSON SANATORIUM) வந்து தங்கினர்.

எரச் ஜெஸவாலா அப்போது கல்லூரியில் பயின்று வந்த மாணவன்; ஒருநாள் தனது தாய் தந்தையருடன் மெஹர் ரிட்ரீட்டிற்கு விஜயம் செய்தார். ஒரு சந்தர்ப்பத்தில், பாபா அவரை தனது மேற்கத்திய அன்பர்களுக்கு அறிமுகப்படுத்தி, அவரிடம், **"நீங்கள் என்னவாக விரும்புகிறீர்கள்?"** என்று

கேட்டதும், பெனாரஸில் ஒரு பொறியியல் கல்லூரியில் படிக்க விரும்புவதாக எரச் பதிலளித்தார்.

**"பொறியியலாளராக மாறி நீங்கள் என்ன செய்வீர்கள்?"** என வினவி, பாபா, காக்காவை அழைத்து, **"காக்கா, டாடா கம்பெனியில் ஒரு பெரிய பொறியியலாளர். பொறியியலாளராக அவர் என்ன செய்தார் என்று அவரிடம் கேளுங்கள்"** என்று எழுத்துப்பலகை வழியாக எரச்சிடம் கூறினார்.

மண்டலி பாபாவின் மறைமுக குறிப்புகளைக் கண்டுபிடிப்பதில் கெட்டிக்காரர்கள்; மேலும் அவரின் தந்திரத்தைப் புரிந்து, அதற்கு உகந்தாற் போல பதிலளித்தனர். காக்கா உடனே, "பொறியியல் முற்றிலும் பயனற்றது! உலகில் எந்தவொரு தொழிலையும் ஒருவர் பின்பற்றலாம், ஆனால் பொறியியலாளராக மாறுவது பாவம்! நான் எனது பணியில் எதிர்கொண்ட பல சிரமங்களால், உயிரை விட்டுவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டேன். இந்த பூமியில் பொறியியலைவிட மோசமான தொழில் வேறு ஒன்றும் இல்லை!" என்றார்.

அதற்குப் பிறகு பாபா எரச்சிடம், **"பொறியியல் பற்றி காக்கா சொல்வதை நீங்கள் கேட்டீர்களா? அதற்கு பதிலாக நீங்கள் ஏன் எனது பொறியியலாளராக மாறக்கூடாது?"** என்று வினவ, 'என்ன நடக்கிறது என்று பார்க்கலாம்' என எரச் பதிலளித்தார்.

எரச் உடல் ரீதியில் திடகாத்திரமாக இருந்தார். நாசிக் நகரில் இருந்த வேளையில் ஒரு நாள், பாபா தனது கால்களை மஸாஜ் செய்யுமாறு எரச்சிடம் கூறினார். எரச் தசைகளை மஸாஜ் செய்து கொண்டிருந்தபோது, பாபா, அவரிடம் **"உங்களுக்கு எல்லாம் தெரியுமா?"** எனக் கேட்டார்.

"நான் பல விஷயங்களைக் கற்றுக்கொண்டேன்" என்று எரச் பெருமையுடன் பதிலளித்தார்.

**"நீச்சல் தெரியுமா?"** என்றதும் எரச் 'ஆம்' என்றார்.

**"நீங்கள் எனது கடலில் நீந்துவீர்களா?"** எரச் உடனே வாய்விட்டுச் சிரித்தார்.

பாபா அப்போது எரச்சிடம், **"உங்களுக்கு அனைத்தும் தெரியுமானால், எனது பாதணியில் அறுந்து போன தோல் பட்டையை சரிசெய்து மூன்று நிமிடங்களுக்குள் கொண்டு வாருங்கள்"** என்றார்.

எரச் அந்தப் பாதணியைக் கையில் எடுத்துக் கொண்டார்: 'நான் அதை சரியான நேரத்தில் சரி செய்யாவிடில், பெருமை பேசுவதாக பாபா கூறுவார்' என்ற நினைப்பில் அவர் ஃபிரீனியை அணுகி வீட்டில் தையல் இயந்திரம் இருக்கிறதா என்று கேட்டார். அவர் அதைச் சுட்டிக்காட்டியதும், எரச் தோல் பட்டையை சரிசெய்யத் தொடங்கினார்.

எரச் தோல் பட்டையைத் தைக்கும் வேளையில் ஃப்ரீனியின் குழந்தைகள் மெஹரு, நாகு இருவரும் அருகில் சென்று கூச்சலிட்டனர்; எரச் அவர்களை அமைதியாக இருக்கக் கூறி, பாதணியை சரி செய்து ஏழு நிமிடங்களில் பாபாவிடம் அதை எடுத்துச் சென்றார். பாபா அதை ஆராய்ந்து,

**“நல்லது, ஆனால் நீங்கள் இவ்வளவு நேரம் எடுத்தீர்கள்”** என்று சைகையால் தெரிவித்தார்.

“சரியான கருவிகள் இல்லை” என்று எரச் பதிலளித்தார்.

நன்றாகச் செய்கிறீர்கள் எனக் கூறி பாபா அவரை வாழ்த்தினார்; பின்னர் **“உங்களுக்கு, தச்சுத் தொழில் தெரியுமா? தையல், செருப்புத் தைக்கக் கூடவா?”** எனக் கேட்டார்.

“ஆம், நான் அதையும் செய்வேன்; எனது பெற்றோர் எனக்குப் பல விஷயங்களைக் கற்றுத் தந்தனர்” என்றார் எரச். பாபா மகிழ்ச்சியில் எரச்சின் திறன்களைப் பாராட்டினார்.

நாசிக்கில் தங்கியிருந்தபோது, பாபா ஏப்ரல் 26 அன்று ஜெஸவாலா குடும்பத்தினரை ராஹுரிக்கு அழைத்துச் சென்று ஆசிரமத்தைக் காண்பித்து, அங்கு அவர் மேற்கொள்ளும் பணியைக் குறித்து விளக்கினார். பாபா மஸ்துகளை நீராட்டிய போது, எரச்சை தனது அருகிலேயே இருக்கச் செய்தார்.

ராஹுரியில், ஜால்பாயின் உதவியுடன் டாக்டர் நீலு நடத்தும் மெஹர் இலவச மருத்துவமனையில், ஒரு நாளுக்குக் கிட்டத்தட்ட 200 நோயாளிகள் சிகிச்சை பெற்று வந்தனர். நோயாளிகள், பெரும்பாலும் ஏழை, கல்வியறிவற்ற கிராமவாசிகள், நல்ல சிகிச்சையைப் பெற்றனர், சில நேரங்களில் பாபாவும் உதவுவது உண்டு. பாபா அவர்களின் சிகிச்சையைக் குறித்து விழிப்புடன் இருந்ததோடு, அவர்களை சந்திக்க மருத்துவமனைக்கு வந்தார். நோயாளிகள் பாபாவின் வருகைக்காகக் காத்திருந்தனர்; பாபா அவர்களுடன் இருக்கும் வேளையில் அனைவரும் மகிழ்ச்சியாகவும், துன்பத்திலிருந்து விடுபட்டது போலவும் உணர்ந்தனர்.

ஒரு நாள் ஏழைப் பெண்மணி ஒருவர், தொற்றுப் புழுக்களால் பாதிக்கப்பட்ட பலத்த தலைக் காயத்துடன் மருத்துவமனைக்கு வந்தார். காயம் ஆழமாகவும், வேதனை அளிப்பதாகவும் இருந்தது. அவர், “மெஹர் பாபா!” என்றழைத்து “எனக்கு மெஹர் பாபாவின் தரிசனம் வேண்டும்! நான் இறப்பதற்கு முன் அவரைப் பார்க்க விரும்புகிறேன்! தயவுசெய்து அவரை அழைக்கவும்” என்று கத்தினார்.

அன்று பாபா மெஹராபாத்திலிருந்து வந்ததும், அந்தப் பெண்மணியை இதமாக தனது அரவணைப்பில் அழைத்துச் சென்றார். அவர் முற்றிலும் அமைதியானார், நிம்மதியின் பிரகாசம் அவர் முகத்தில் பரவியது. அவர் பாபாவை உற்று நோக்கி, இனிமையான புன்னகையுடன் பெருமூச்சு விட்டார். அரை மணி நேரம் கழித்து, அந்தப் பெண்மணி ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பது போலத் தோற்றமளித்தார். ஆனால் அது மரணத்தின் தூக்கம். காலம் இந்த சம்பவத்தால் உருகிப்போய், பின்னர் இப்படி வர்ணித்தது: “அவருடைய இறைவனை சந்தித்த மகிழ்ச்சியைத் தொடர்ந்து என்ன ஓர் அமைதியான தூக்கம். துன்பத்திலிருந்து அவரை விடுவித்த தூக்கம், கடவுளின் கருணைமிக்க அரவணைப்பில், அந்தப் பெண்மணி விடுதலை அடைந்தார்!”

மும்பையைச் சேர்ந்த ஃபேரடூன் ஈரானி (FAREDOON IRANI) ஒரு நாள் பாபாவைப் பார்க்க ராஹூரிக்கு வந்தார். அவர் தனது வணிகக் கூட்டாளியுடன் ஏற்பட்ட மனஸ்தாபத்தால் கலக்கமடைந்த நிலையிலிருந்தார்; மேலும் இந்த விஷயத்தில் தீர்வு காண ஃபேரடூன் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கோரினார். பங்குதாரர் அவர் கோரியதை விடக் குறைவாகவே கொடுத்தார். இதைக் கேள்விப்பட்ட பாபா "**அவர் கொடுப்பதை ஏற்றுக்கொள்ளுங்கள்**" என்று அறிவுறுத்தினார். இது நியாயமற்றது என்று ஃபேரடூன் மறுப்பு தெரிவித்து, மேலும் அவர் செலுத்த வேண்டிய முழுத் தொகையை மீட்கும் நோக்கத்தில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போவதாக அறிவித்தார். "**இதுபோன்ற சிக்கலில் மாட்ட வேண்டாம்**" என்று பாபா எச்சரித்தார். "**இல்லையேல், நீங்கள் மனம் வருந்துவீர்கள்**" என்றார்.

மும்பைக்குத் திரும்பி வந்த ஃபேரடூன், அவரது வழக்கறிஞர்களின் ஆலோசனையின் பேரில் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார், இதன் விளைவாக அவர் வழக்கை இழந்தது மட்டுமல்லாமல், முதலில் வழங்கப்பட்டதையும் பெறமுடியாமல், பங்குதாதரின் செலவுகளைச் செலுத்த நீதிபதியால் அவருக்கு உத்தரவிடப்பட்டது. பாபாவின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளாததால் ஏற்படும் விளைவுகள் என்ன என்பதை உணர்ந்து, அவர் தனது முட்டாள்தனத்திற்காக மனம் வருந்தினார்.

ராஹூரி ஆசிரமத்தில் சமையல் பொறுப்பை பைதூல் ஏற்றுக்கொண்டார்; பூசணிக்காய் அதிக மலிவாகவும், சமைக்க எளிதாகவும் இருந்ததால் தினமும் அதையே தயார் செய்தார். பைதூல் மிகவும் ஒழுக்கமான, மன உறுதி படைத்த ஒரு தனிநபர். அதிகாலையில் மூன்று மணிக்கு விழித்து ஐந்து மணிக்கு அன்றைய உணவைத் தயார் செய்து விடுவது வழக்கம். அதன் பின்னர், அவர் மஸ்துகளை நீராட்டி, மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவூட்டி தனது கடமையில் கருத்தாய் இருந்தார். பூசணிக்காயை விரும்பாத இதர ஆண் மண்டலி வேறு காய்கறிகளுக்காகக் கோரிக்கை வைத்தாலும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்தது.

டாக்டர் கனிக்கு, இனி இந்த உணவு போதும் போதும் என்றாகிவிட்டது. பைதூலை வெறுப்பூட்டும் வகையில் டாக்டர் கனி 'பைதூல் ஸேட்டும் பூசணிக்காய் சமையலும்' என்ற நகைச்சுவையான கவிதைகளை இயற்றி பாபாவின் முன்னிலையில் வாசித்தார். கவிதைகளில் இது போன்ற வசனங்கள் இருந்தன:

பைதூல் ஸேட் கட்டுக்கடங்காத ஒரு முழு பூசணி!
ஒவ்வொரு நாள் சமையலிலும் பிரமாதமான பூசணியோ பூசணி!

மஸ்துகளை மகிழ்விக்கவும், இணக்கமான மனநிலையில் வைக்கவும் பாபு என்ற பாடகரை மெஹர் பாபா நியமித்திருந்தார். பாபுவின் இசையைக் கேட்டு மகிழ்வதில் மஸ்துகளுக்கு ஓர் அலாதி ஆசை; நாள் முழுவதும் அந்த இசையை முணுமுணுப்பது வழக்கம். ஒரு நாள் மாலை வேளையில் பாபு,

மெஹர் பாபாவின் முன்னிலையில் டாக்டர் கனியின் கைவண்ணமான 'பூசணிக் கவிதை'யைப் பாடியது பாபாவை சிரிக்க வைத்தது. புகழ்பெற்ற கவிஞர் யார், கவிதையின் பின்னணிக் கதை என்ன என்பதையும் பாபா விசாரித்தார். இவ்வாறு பைதூலின் தினசரி பூசணி உணவுப் பட்டியல் மற்றும் அதன் மீது டாக்டர் கனியின் நையாண்டி தாக்குதல் பற்றிய முழுக் கதையும் வெளிச்சத்திற்கு வந்தது. ஆனால் இந்த நையாண்டித்தனம் பைதூலை எந்த வகையிலும் பாதிக்கவில்லை, அவர் பூசணிக்காய் சமையலைத் தொடர்ந்தார். எவ்வாறாயினும், பாபா விரைவில் தலையிட்டு ஒவ்வொரு நாளும் வெவ்வேறு காய்கறிகளைத் தயார் செய்யுமாறு அறிவுறுத்தினார். டாக்டர் கனியின் கவிதை இதற்கிடையில் புகழ் பெற்ற ஒன்றாக மாறி, ராஹுரி கிராமத்தில் இசைக்கத் தொடங்கியது.

ராஹுரி ஆசிரமத்தில் ஒரு நாள், வழக்கத்திற்கும் மாறாக நல்ல மனநிலையில் இருந்த மெஹர் பாபா, இந்த ஈரடி கவிதையை இயற்றினார்; இதன் முதல் வரி ராவ்ஸாஹேபிற்கும், அதைத் தொடரும் வரி டாக்டர் கனிக்கும் பொருந்தும் என விவரித்தார்:

**முணுமுணுப்பைத் தவிர வேறு எதுவும் தெரியாத ஒருவர்**
**அங்கே எப்பொழுதும் வாழ்ந்து வந்தார்,**
**இவரோ தாழ்மை, பணிவு இவற்றின் இலக்கணமாக நடித்தாலும்**
**எப்பொழுதும் பெருமையுடன் செயல்பட்டார்.**

**யார் ஒருவருடைய உடல் எல்லா சொகுசுகளையும் தேடியது?**
**ஆனால் யாருடைய மனம் தடுமாறியது?**
**யார் அது, எண்ணற்ற குண்டு குழிகளைக் கடந்தும்**
**ஒன்றில்கூட தடுக்கி விழாதது?**

மக்களின் மனதை அறிவது குறித்து, டாக்டர் கனி ஒரு புத்தகத்தைப் படிக்கும் சமாச்சாரம், மார்ச் 12 அன்று பாபாவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. கேலி செய்யும் தோரணையில், பாபா அவரிடம், "**நீங்கள் இதைக் கற்றுக்கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்?**" என வினவினார்.

அதற்கு பதிலளித்த டாக்டர் கனி, "நான் ஜப்பானுக்குச் சென்று நிறைய பணம் சம்பாதிப்பேன்" என்றார்.

பாபா உடனே, "**உங்கள் யோசனை மிகவும் அற்புதமானது, ஆனால் நீங்கள் ஏன் இவ்வளவு சுயநலவாதியாக இருக்க வேண்டும்? நீங்கள் எப்போதாவது எனக்கு உதவி செய்ய நினைத்தீர்களா? நான் இப்போதும் கடுமையான நிதி நெருக்கடியில் இருக்கிறேன்**" என்று கூறினார்.

எனவே டாக்டர் கனி, "நீங்கள் எனக்கு மனதை அறிந்துகொள்ளும் சக்தியை வழங்கினால், நான் எனது சம்பாத்தியத்தில் 50 சதவீதத்தை உங்களுக்குத் தருகிறேன்!" என்றார்.

"**சரி**," என்று பாபா ஒப்புக்கொண்டார், "**ஆனால் நீங்கள் அந்த சக்தியை தன்வசப்படுத்த ஒரு வருடம் பால் மட்டுமே அருந்தி உபவாசம் கடைப்பிடிக்க**

**வேண்டும்!"**, அதற்குப் பிறகு டாக்டர் கனிக்கு 'பேராசிரியர் உகான்சி' (PROFESSOR UGHANSI) என்று பெயர் சூட்டப்பட்டது - அதாவது 'சோம்பேறி' என்று பொருள்.

டாக்டர் கனி உண்ணாவிரதத்திற்கு சம்மதம் தெரிவித்தார்; மார்ச் 16 மாலை ராஹுரியில் நடந்த மெஹர் மண்டலி பராமரிப்பு அறக்கட்டளை கூட்டத்தில் பாபாவிற்கும் டாக்டர் கனிக்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று உருவாக்கப்பட்டது. அதன் நிபந்தனைகள் கீழ் வருமாறு:

**ஒரு வருடத்திற்கு டாக்டர் கனி இரண்டு டம்ளர் பாலைத் தவிர வேறு எதையும் உணவாக எடுத்துக் கொள்ளக்கூடாது - சர்க்கரையுடன் அல்லது சர்க்கரை இல்லாமல் - ஒவ்வொரு நாளும் ஒரு டம்ளர் தேநீர் மற்றும் தேவையான அளவு தண்ணீர்.**

**மேலும், அவர் ஒரு நாளைக்கு ஐந்து சிகரெட்டுக்கு மேல் புகைக்கக்கூடாது.**

**அவர் எந்த சூழ்நிலையிலும் (ராஹுரி) வளாகத்திலிருந்து வெளியே செல்லக்கூடாது.**

**பாபாவுக்காகச் செய்யும் பணிக்குத் தேவையான பணம் தவிர அவர் அதிக பணம் கேட்கக்கூடாது.**

**இந்த ஒப்பந்தம் 1937 ஏப்ரல் 1 முதல் 1938 மார்ச் 31 வரை அதிகாரப்பூர்வமாக அமலில் இருக்கும். மார்ச் 31 அன்று, கனிக்கு அவர் விரும்பும் இரண்டு விஷயங்கள், ஞானதிருஷ்டி மற்றும் ஐம்பொறிகளுக்கு அப்பாற்பட்டவற்றை கேட்கும் ஆற்றல் ஆகியவற்றை வழங்கப்போவதாக, பாபா உறுதியளிக்கிறார்; அவரை பேராசிரியர் உகான்சியாக ஜப்பானுக்கு அனுப்பி வைப்பார், மேலும் டாக்டர் கனி இறைநிலையை அடைவது வரை, பாபாவின் பணியைச் செய்ய ஆன்மீக ரீதியிலான சக்திகளை வழங்குவார்.**

ஜால்பாய் உடனே இவ்வாறு முறையிட்டார், "சுவைமிக்க உணவுக்காக பிரியமான டாக்டர் கனியின் ஏக்கத்தை நாம் அனைவரும் நன்கு அறிவோம். இந்த ஒரு வருட காலத்திற்குள் அவர் இறந்து விடுவார் என்று வைத்துக்கொள்வோம், அவரது இறுதி யாத்திரைக்கான செலவுகளை யார் செய்வது?"

எனவே கனியிடம் ஒவ்வொருவரிடமிருந்தும் ஒரு ரூபாய் வீதம் வாங்குமாறு பாபா கேட்டுக்கொண்டார்; இவ்வாறு அவர் மொத்தமாக ரூ 40 பெற்றுக்கொண்டார். **"ஏப்ரல் 27 அன்று கனி இறந்துவிட்டால், இந்த 40 ரூபாயை அவரது இறுதி சடங்குகளுக்குப் பயன்படுத்த வேண்டும்"** என்ற அறிவுறுத்தல்களுடன் பாபா இந்தத் தொகையை டாக்கே்ஃபால்கரிடம் கொடுத்து வைத்தார். இந்த விசித்திரமான ஒப்பந்தத்தில் அடுத்த நாள் பாபா, டாக்டர் கனி இருவரும் மண்டலியின் முன்னிலையில் கையெழுத்திட்டனர்.

டாக்டர் கனி ஏப்ரல் 1 முதல் உண்ணாவிரதத்தைத் தொடங்கினார், ஆனால் இரண்டே நாட்களில் அவர், "பாபா, பால் மட்டும் அருந்த மிகவும் கடினமாக உள்ளது. எனது வியர்வையில் பால் வாசனை; எனது சுவாசம், சிறுநீர்

அனைத்திலும் பால் வாசனை; நான் பாலை சிறுநீராகக் கழிக்கிறேன்!" என முறையிட்டார்.

**"இது ஒரு வருடம் மட்டுமே!"** பாபா பதிலளித்தார். **"அதற்குப் பிறகு நீங்கள் எவ்வளவு சம்பாதிப்பீர்கள் என்று நினைத்துப் பாருங்கள் - அதுவும் எனக்கு உதவும் அளவிற்கு! சற்று பொறுமை காத்து, உபவாசத்தை நிறைவு செய்யவும்."**

இரண்டு நாட்களுக்குப் பிறகு, டாக்டர் கனி படுக்கையிலிருந்து வெளியே வரமுடியாமல் மிகவும் பலவீனமாக உணர்ந்தார். அவர் பாபாவிடம், "பாபா, இந்த ஒப்பந்தம் எனது மரணமாக இருக்கும்! என்னை மன்னித்து, உணவு உண்ண அனுமதி தாருங்கள்" என்று கெஞ்சினார்.

ஆனால் பாபா பதிலளித்தார், **"நீங்கள் என்னுடன் பேரம் பேசியதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் மண்டலியின் முன்பாக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டீர்கள். எனது முடிவில் நான் உறுதியாக இருக்கிறேன். சரியாக ஒரு வருடம் கழித்து நான் உங்களுக்குத் தேவையான அதிகாரங்களை வழங்குவேன். ஆனால் உங்கள் வாக்குறுதியை மீறி, அதற்காக என்னைப் பழிகூற வேண்டாம்!"**

"ஆனால் நான் இறந்துவிடுவேன் பாபா!" டாக்டர் கனி புலம்பினார்.

**"இதற்கு என்னிடம் ஒரு தீர்வு உள்ளது, எனவே நீங்கள் இறக்கமாட்டீர்கள்"** என்று பாபா அவரது வழியை முன்மொழிந்தார். டாக்கே ஃபால்கரை அழைத்து, பாபா, இறுதி சடங்கிற்கான சவப்பெட்டியைத் தயார் செய்து ராஹுரிக்கு கொண்டு வருமாறு கூறி அவரை அஹமதுநகருக்கு அனுப்பி வைத்தார். டாக்கே அவ்வாறே செய்து, ஒரே வாரத்தில் சவப்பெட்டியை எடுத்துவந்தார்.

ஏப்ரல் 20 பிற்பகலில், மெஹர் பாபா, டாக்டர் கனியை, பழைய கோணிப்பையாலான மேல் அங்கியை அணியச் செய்து, தலையில் வைக்கோல் தலைப்பாகையைக் கிரீடமாக வைத்தார். பின்னர் அவர் 'ஃபாத்திஹா'விலிருந்து - FATIHA (இறந்தவர்களுக்காகச் செய்யும் இஸ்லாமிய கடமை) ஸ்லோகங்களை ஓதுமாறு கேட்டுக்கொண்டார்.

வானத்தை நோக்கிக் கைகளைத் தூக்கி, டாக்டர் கனி பிரார்த்தனையை ஆர்வத்துடன் செய்தார், பாபாவும் அதில் பங்கெடுத்தார். அதற்குப் பிறகு, கனியை சவப்பெட்டியில் வைத்து, சிலர் தோள்களில் தாங்கிய வேளையில், இறுதி ஊர்வலத்தின் பாடலைப் பாடுமாறு கனியிடம் கூறினார். டாக்டர் கனி மெதுவாக, "லா இலாஹா இல்லல்லா, முஹமது-இ-ரசூல் அல்லாஹ்!" - 'LA ILAHA ILLALLAH, MUHAMMAD -E-RASOOL ALLAH!' (இரக்கமுள்ளவர் கடவுள்; அவரைத் தவிர வேறு கடவுள் இல்லை, முஹமது அவருடைய நபி!) என்று பாடினார்.

ராஹுரி ஆசிரமத்தைச் சுற்றி ஊர்வலமாக வந்த பிறகு பாபா இவ்வாறு அறிவித்தார், "இப்போது, கனி முன்பு தீர்மானித்தபடி (27ஆம் நாள்) இறக்க மாட்டார்."

பாபாவின் அறிவுறுத்தல்கள் இருந்தபோதிலும், டாக்டர் கனி ஆறு நாட்களில் தனது உபவாசத்தைக் கைவிட்டார்; பாபா, கனியிடம் , **"நான் இப்போது என்ன செய்ய வேண்டும்? நான் உங்களுக்கு அதிகாரங்களை வழங்குவதாகவும், உங்களை உயிருடன் வைத்திருப்பதாகவும் உறுதியளித்தேன்! ஆனால் இப்போது நீங்கள் உங்கள் வாக்குறுதியைக் கடைப்பிடிக்கவில்லை, எனவே என்ன செய்யப்பட வேண்டும்? நீங்கள் அதிக பணம் சம்பாதித்திருந்தால், அதில் பாதித் தொகையைப் பெற்று நான் மகிழ்ச்சியாக இருந்திருப்பேன்! அதற்காகத்தான் நான் உங்களுக்கு உதவ முன்வந்தேன்"** என்றார்.

"போதும், பாபா, போதும்!" டாக்டர் கனி கண்கலங்கி அழுதார், "நீங்கள் உண்மையிலேயே எனக்கு உதவ விரும்பியிருந்தால், இதுபோன்ற, கொடூரமான காலங்களை நான் கடந்து வந்திருக்க மாட்டேன். உண்மையில், நான் உயிரை துறக்கப் போகிறேன்."


பாபா, நம்பமுடியாமல் சைகையால் தெரிவித்தார்: **"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? நான் உங்களுக்கு உதவினேன்."**

"பாபா, நான் இப்போது உங்களைப் புரிந்துகொள்கிறேன். இதுபோன்ற ஒரு காரியத்தில் நீங்கள் ஒருபோதும் உதவ மாட்டீர்கள். நீங்கள் பரிபூரணமான கடவுள், அதி புத்திசாலி! கடவுள் உங்களைப் போன்ற கடவுளிடமிருந்து, ஒருவரைக் காப்பாற்றட்டும்!" என்றார்.

மெஹர் பாபாவின் புன்னகை அமைதியான சிரிப்பாக உருவெடுத்தது. டாக்டர் கனியைத் தழுவி, **"பேராசிரியர் உகான்சி, கவலைப்பட வேண்டாம்; நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன், நீங்கள் எனக்கு மிகவும் அன்பானவர்"** என்று சைகையால் தெரிவித்தார். இது குருநாதரின் நகைச்சுவை திருவிளையாடல். பின்பு பாபா நாசிக் புறப்பட்டுச் சென்றார்.

கலி:ஃபோர்னியாவின் ஓசியானோ (OCEANO) நகரைச் சேர்ந்த ஸாம் கோஹென் (SAM COHEN), 1937 ஏப்ரல் 20 அன்று, 'கோன்தே வெர்டே' கப்பலில் மும்பை வந்து சேர்ந்தார், அவரை, சாஞ்சி சந்தித்து அதே மாலையில் நாசிக் நகருக்கு அழைத்து வந்தார். மல்யா ருத்யார் (MALYA RUTHYAR) மறுநாள் இந்தியா சுற்றுப்பயணத்திலிருந்து திரும்பி வந்து, ஸர்ஸாத்தின் ஐந்தாவது அறையில் தங்கத் தொடங்கினார்.

ஐரோப்பாவிலிருந்து பிற நெருங்கிய அன்பர்களான குயன்டின் டாட் (QUENTIN TOD) கிறிஸ்டின் மெக்நாட்டன் (CHRISTINE MCNAUGHTON), அனிதா டி காரோ (ANITA DE CARO), மேபெல் ரியான் (MAYBEL RYAN), ஆல்:ஃபிரடோ (ALFREDO), கான்ஸுலோ சைட்ஸ் (CONSUELO SIDES), கன்னா வால்ஸ்கா (GANNA WALSKA) ஆகியோரும் நாசிக் நகரில் அமைந்த மெஹர் ரிட்ரீட்டில் குழுவுடன் இணைய இருந்தனர். அவர்களுக்காகவே பாபா மேலும் அறைகளைக் கட்டவேண்டும் எனக் கூறியிருந்தார்.



எழுத்துப்பலகை வழியாக
விளக்கம் -
டாக்டர் கனி (DR. GHANI), பாபா



பாபாவுடன் மெஹரா, மெஹராபாத், மே **1937**
WITH MEHERA, MEHERABAD, 1937

மேற்கத்தியர்கள் இரண்டு வாரங்களில் ஒருமுறை மெஹராபாத்திற்கு வருகை தந்தனர்; பகல் வெப்பத்தில் பயணிப்பதைத் தவிர்ப்பதற்காக இரவில் தாமதமாகப் புறப்பட்டனர். ஒரு சந்தர்ப்பத்தில், ரானோ, மார்கரெட், மற்றுமொரு நபர் தொண்டைப் புண்ணால் அவதிப்பட்டனர்.

பலர் நோயால் சிரமப்பட்டதால், இந்தப் பயணத்தை ரத்து செய்வது நல்லது என்று நோரினா பாபாவிற்கு தொலைத்தந்தி ஒன்றை அனுப்பினார். பாபா தெளிவான, நேரடி வார்த்தைகளால் பதிலளித்தார்: "**நீங்கள் வராவிடில், நான் உங்களை மேற்கு நோக்கித் திருப்பி அனுப்புவேன்**!"

ரானோவிற்கு தோல் அரிப்பும் காய்ச்சலும் இருந்ததால் பயணம் செய்ய வேண்டாம் என்று மருத்துவர் அறிவுறுத்தினார், ஆனால் "பாபா என்னை அழைத்தால், நான் போகிறேன்" என்றார். நான்னி 40 நாள் உபவாசம் இருந்ததால் வர வேண்டாம் என்று பாபா, முன்னதாகவே கட்டளையிட்டதால் அவர் மட்டும் குழுவோடு செல்லவில்லை.

மெஹர் பாபா படிப்படியாக, கிழக்கு மற்றும் மேற்கத்திய பெண்மணிகள் ஒருவருக்கொருவர் நன்கு தெரிந்து, புரிந்து பழக வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களை அழைத்து வந்தார். ஒரு வருகையின் போது மணி, மேற்கத்திய அன்பர்களுக்காக, குறு நாடகம் ஒன்றை நிகழ்த்தினார். மெஹராபாத்தில் பணிப்பெண்களாக இருந்த தானி (TANI), பாகு (BHAGU) ஆகியோருக்கு ஆங்கில வார்த்தைகள் கற்பிக்கப்பட்டன; மேலும் மேற்கத்தியர்கள், உரையாடலில் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளைக் கண்டு மிகவும் மகிழ்ந்தனர்.

ஆங்கிலம் கற்கும் மற்றுமோர் இந்திய பெண்மணி வாலு (WALU). அவர் சொத்து சுகங்களோடு கிராமத்தில் வாழ்ந்த உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவராயினும், பணிவுடன் அனைத்து குற்றேவல் பணிகளையும் முழு மனதுடன் செய்தார், தன்னலமற்ற சேவைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு வாலு. மெஹரா முதன்முதலில் அந்தப் பெண்மணியை சந்தித்தபோது, வாலு கழுத்து மற்றும் கைகளில் விலையுயர்ந்த தங்க ஆபரணங்களை அணிந்திருந்தார். ஆனால் வாலு, பெண் மண்டலியுடன் சேர்ந்து வாழச் சென்றபோது, பாபாவின் அருகில் இருக்கும் ஒரே நோக்கத்தில், உலக செல்வங்கள் அனைத்தையும் விட்டுவிட்டு, பாபாவிற்கு சேவை செய்வதில் அவரது முழு வாழ்வையும் அர்ப்பணித்தார்.

மெஹராபாத் மேல்மலையில் கிழக்கத்திய பெண்மணிகள் எப்படிப்பட்ட எளிதான வாழ்க்கையை வாழ்கிறார்கள் என்பதை மேற்கத்திய அன்பர்கள் பார்க்க வேண்டும் என்று பாபா விரும்பினார். ஒருமுறை பாபா, அவர்களிடம் "**நீங்கள் இங்கு நிலவும் சூழ்நிலையில் சுவாசிக்கவும், உங்களால் இயன்றவரை மனதில் உள்வாங்கவும் விரும்புகிறேன்**" என்று அவர்களிடம் வலியுறுத்தினார்.

ஏப்ரல் 23, வெள்ளிக்கிழமை அன்று, நாசிக்கில், பாபா ஏழு ஆன்மீக தளங்களைப் பற்றி விளக்கமளித்தார்:

**ஒவ்வொரு கணமும் நான் 'ஸாஹஜ் சமாதி' (SAHAJ SAMADHI) நிலையில் இருக்கிறேன். (இதன் அர்த்தம்: 'நான் எல்லா இடங்களிலும், எல்லாவற்றிலும், எல்லோரிடமும் இருக்கிறேன்.') அதனால்தான் என்னை அறிந்து கொள்ள நீங்கள் பரமாத்மா எனும் ஏக இறைவனின் நிலையை (OVERSELF) உணர வேண்டும். நீங்கள் என்னை சாதாரண பௌதீக உடலில் பார்க்கிறீர்கள் - ஆனால் நான் 'சமாதி'யில் இருக்கிறேன். நீங்கள், உங்களுக்குள் ஆழமாக உற்று நோக்கும் வேளையில், அங்கே என்னை அளவிறுதியற்றவராகக் காண்பீர்கள். அப்போது நீங்கள் எல்லோரிடமும் எல்லாவற்றிலும் என்னைப் பார்க்கிறீர்கள். அது எல்லாமே 'பாபா'. கடவுள் 'உளதாயிருக்கிறார்' என்பது மட்டுமே உண்மை; சமாதி (SAMADHI) என்பது உண்மையல்லாத ஒன்று. கடவுள் மட்டுமே உண்மையானவர், ஒவ்வொருவரும், ஒவ்வொன்றும் கடவுள்!**

**கடவுள் இது அல்லது அது என்று கூறி, கடவுளை நீங்கள் வரம்புக்கு உட்படுத்த முடியாது. கடவுள் என்பவர் கடவுள் மட்டுமே! மாயையும் கடவுள்தான்! கடவுள் ஒன்றோ அல்லது இரண்டோ அல்ல, ஆனால் கடவுள் மட்டுமே! ஒன்றுமில்லாத தன்மையுடன், அனைத்தும் ஒன்றுக்கொன்று ஒன்றிணைந்திருப்பதால், 'இது ஒன்றுமில்லாதது' அல்லது 'இதுவே எல்லாம்' என்று நீங்கள் கூற முடியாது.**

**எதுவும் இல்லாத நிலையும் (NOTHING) இருப்பதால்தான், அது மாயை என்றழைக்கப்படுகிறது.**

**இது என்ன? இது கடவுள். தெளிவாகப் புரிகிறதா? கடவுள் கடவுளே. நீங்கள் என்னை உணரும் நிலையை அடையும்போது இதை அறிவீர்கள். இந்த அறிவு நிரந்தரமானது. இறைநிலையை அடைந்ததன் ஒரே அறிகுறி என்னவெனில், ஒருவர் கடவுளோடு ஐக்கியமாகும்போது, அவர் எல்லாவற்றையும் அறிகிறார் - எல்லாவற்றையும் கடவுளாகப் பார்க்கிறார். ஒருவர் எதையும் செய்ய முடியும். ஒருவர் எல்லாவற்றையும் மனதினால் தெரிந்துகொள்ள முடியாது. ஒருவர் அதை அறிந்து கொள்ளும் தருணத்தில் முழுமையாக அறிந்து கொள்கிறார். நீங்கள் இப்போது கடவுள், ஆனால் அது உங்களுக்குத் தெரியாது. நான் கடவுள். அது எனக்குத் தெரியும்.**

ஒவ்வொருவரும் ஏழு ஆன்மீக தளங்கள் வழியாகச் செல்ல வேண்டுமா என்று ஒருவர் கேட்டதற்கு, பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**பரிபூரண குருநாதர் (PERFECT MASTER) ஒருவர் உங்களை, ஒவ்வோர் ஆன்மீக தளத்தின் வழியாக எடுத்துச் செல்வதில்லை; அவர், அவற்றை எல்லாம் கடந்து எடுத்துச் செல்கிறார்; இதில் வேடிக்கை என்னவெனில், நீங்கள் எங்கும் 'செல்லவில்லை'. நீங்கள் இருக்கும் இடத்திலேயே இருக்கிறீர்கள்; இப்போது நீங்கள் எழுந்து, வெளியே நடந்து செல்லுங்கள். நீங்கள் செல்கிறீர்கள் என்று நினைக்கிறீர்கள், ஆனால் நீங்கள் எல்லா**

**இடங்களிலும் இருக்கிறீர்கள். உங்கள் மனம் இந்த உடலை அபகரித்துக் கொள்கிறது. நீங்கள் எங்கும் இருக்கிறீர்கள்.**

**எனவே, கடவுளோடு ஒன்றிணையும் தீவிர ஏக்கத்தில் இருந்தால் மட்டும் போதுமானது. ஆன்மீக தளங்கள் அல்லது சமாதியின் சக்திகளைப் பற்றி கவலைப்பட வேண்டாம். கடவுளோடு ஒன்றிணையும் ஏக்கத்தில் பொறுமையாக இருங்கள்.**

**ஒருமுறை குருநாதர் ஒருவர் சீடரிடம் மிக உயர்ந்த, உன்னதமான நிலையை அடைய, "உங்கள் கை, கால்களை மரத்தாலான ஒரு பலகையில் கட்டிக்கொண்டு, பின்னர் உங்கள் ஆடைகளை ஈரப்படுத்தாமல் நதியில் மூழ்க வேண்டும்!" எனக் கூறியதை, இந்த அப்பாவி சீடரால் புரிந்து கொள்ள முடியவில்லை.**

**அவர் வேறொரு துறவியிடம் வந்து, இதன் அர்த்தத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ளும் வரை, அவர் அங்கும் இங்கும் அலைந்து திரிந்தார். அந்தத் துறவி, "இதன் பொருள் என்னவெனில், நீங்கள், அவனன்றி இன்னொரு கணம் வாழ முடியாது எனும், 'இறைவனுடன் ஒன்றிணையும்' தீவிரமான ஏக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும்; அதற்காக ஆயிரமாயிரம் ஆண்டுகள் பொறுமை காக்கவேண்டும்!"** என்று கூறினார்.

**எனவே நான் சொல்கிறேன்: இறைவனோடு ஒன்றிணையும் ஏக்கத்துடன் நீண்ட காலம் பொறுமையாக இருங்கள். ஏக்கம் கடவுளின் அன்பளிப்பு, அதேபோல் அருளும் அவரின் அன்பளிப்புதான். நான் சொல்வதைப் போலச் செய்யுங்கள். அதற்கான அந்த ஏக்கத்தைக் கொண்டிருங்கள், அப்போது நான் உங்களுக்கு உதவுவேன், ஏனெனில் அது நான்தான். நான் இங்கிருந்து** (அவருடைய இதயத்தை சுட்டிக்காட்டி) **தருகிறேன், அங்கிருந்து** (அவர்களின் இதயங்களை சுட்டிக்காட்டி) **பெறுகிறேன்.**

**நினைவில் கொள்ளுங்கள், அன்பு அதன் உச்சக்கட்ட நிலையில் கடவுள்.**

1937 மே 1 அன்று மேற்கத்திய அன்பர்கள் மெஹராபாத்தைப் பார்வையிட்டனர். பாபா அவர்களையும் இந்திய பெண் மண்டலியையும் ஒரு சுற்றுலாவிற்கு அரன்காவ்ம் அருகே அமைந்த தோப்பிற்கு அழைத்துச் சென்றார். சிது, பாண்டு (PANDU - ஓட்டுநர்) இருவரும் தொலைவில் இருந்தனர். ரானோவின் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், நான்னி, வில், டிலியா, மால்யா ஆகியோருடன் ரிட்ரீட்டிலே தங்கியிருந்தார்.

நாசிக் திரும்புவதற்கு முன்பு, பாபா, ஸரோஷ் சினிமாவில் 'பார்ன் டு டான்ஸ்' (BORN TO DANCE) திரைப்படத்தைப் பார்க்க மேற்கத்தியர்களை அழைத்துச் சென்றார். திரைப்படத்தின் நடுவில், மார்கரெட் திடீரென பயங்கரமான தலைவலியால் அவதியுற்றார். அவர் ஆஸ்பிரின் (ASPIRIN) மாத்திரை தேவை எனக் கேட்டபோது, பாபா, என்னவாயிற்று என்று வினவினார். மார்கரெட் அவரிடம் தனது நிலையை எடுத்துக் கூறியதும், விசித்திரமாக, தலைவலி

இடந்தெரியாமல் பறந்து, அவர் முற்றிலும் நலமாக உணர்ந்தார். அனைவரும் ஸரோஷ் சினிமாவில் சிற்றுண்டி மற்றும் தேநீருக்குப் பின்னர், இரவு ஒன்பது மணிக்குப் புறப்பட்டு, நள்ளிரவில் நாசிக் சென்றடைந்தனர்.

இருப்பினும், நதீன், மால்கம், ருவானோ, ஸாம் கோஹென், ஓட்டுநர் ஆகியோரை உள்ளடக்கிய குழு, அவர்கள் பயணம் செய்த கார் பழுதானதால், அன்றிரவு நாசிக்கிற்குத் திரும்பி வரமுடியாமல், நட்சத்திரங்களுக்குக் கீழே இரவைக் கழிக்க வேண்டியதாயிற்று.

அடுத்த நாள், நோரினா நோய்வாய்ப்பட்ட நபர்களைப் பற்றி, பாபாவிற்குத் தொலைத்தந்தி அனுப்பினார். அன்றிரவு பாபா, நாசிக்கிற்கு வருவதாக பதிலளித்தார். பாபா, குறிப்பாக ரானோவின் அருகிலிருக்க வந்திருந்தார்; அவரது உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது; இரவு 8:00 மணிக்கு வந்த பாபா நோயுற்ற அனைவரையும் சந்தித்தார். ரானோவை கபவாத ஜுரம் தாக்கியுள்ளதால் அடுத்த அறையில் தனியாக இருக்க ஏற்பாடு செய்ததாகவும் மருத்துவர் கூறினார். ரானோவிற்கு ஓய்வும் அமைதியும் தேவை என்பதால், மதிய உணவிற்குப் பிறகு நிகழும் வழக்கமான இசைத்தட்டுப் பதிவுகள் ஒலிப்பது நிறுத்தப்பட்டன. அவருக்காக ஒரு குறிப்பிட்ட வகை உணவு பரிந்துரைக்கப்பட்டது. பாபா, ரானோவைக் கண்காணிக்கும் பொறுப்பை ருவானோவிற்கு வழங்கினார். பின்பு பாபா ஸர்ஸாத் வரை நடந்து சென்று உடல்நலமின்றி படுக்கையில் இருந்த வில் பேக்கெட்டை சந்தித்தார். அவருடன் சில நிமிடங்கள் அமர்ந்த பின்பு, பாபா தனியாக வெளியே நடக்கச் சென்றார்.

மறுநாள் காலையில், பாபா, ரானோவின் தீவிரமான உடல்நிலையைப் பற்றி குழுவில் அனைவருக்கும் எடுத்துக்கூறி, அக்கறையும், கவலையும் அடைந்தது போலத் தென்பட்டார். மேலும் '**அவரை எவரும் தொந்தரவு செய்யாமல், சந்திக்காமல் அமைதியான சூழ்நிலையைப் பாதுகாக்க வேண்டும்**' என்று மீண்டும் மீண்டும் கூறினார்.

தொடர்ந்து பாபா, "**நோய் என்றால் என்ன? மரணம் என்பது என்ன? இவை அனைத்தும் மாயாவின் சிற்றனுபவங்கள். மரணத்திற்கு முன் இறந்து விடுவது, உங்களை என்றென்றும் வாழவைக்கும்!**" என்றார்.

அவர் மேலும் எடுத்துரைத்தார்: "**சுதந்திரத்தால் பிணைக்கப்பட்டு இருங்கள்; பற்றின்மையுடன் இணைந்திருங்கள். அதாவது ஆசைகளைக் கொண்டிருங்கள், ஆனால் அவற்றிற்கு அடிமையாக இல்லாமல் எஜமானராக இருங்கள்.**

"**பற்றிக் கொள்ளுங்கள், ஆனால் பிடிகொடுக்காதீர்கள்! நீங்கள் குளிர்ச்சியான காலநிலையில் ஒரு கோட்டை அணிவது போல், ஆனால் உஷ்ணமாக உணரும்போது அதை உங்கள் விருப்பப்படிக் கழற்றிவிடுவது போல!**

**“நீங்கள் செய்யும் ஒவ்வொன்றையும், உங்கள் முழு மனதோடு செய்த பின்னர், அதை மறந்து விடுங்கள். நீங்கள் செய்யும் செயல்களுடன் இணைந்திருக்க வேண்டாம்.”**

1937 மே 3 திங்கள்கிழமை அன்று, மெஹர் பாபா, ஒவ்வொரு மேற்கத்திய அன்பருக்கும் பதினைந்து நிமிட நேரடி சந்திப்பிற்கான வாய்ப்பை வழங்கினார். மால்கம் ஸ்க்லோஸின் கலந்துரையாடல் கீழ் வருமாறு:

பாபா, மால்கமிடம், “**அனைத்தும் எப்படி உள்ளது?**” என வினவினார்.

“என்னை விட உங்களுக்கு நன்றாகத் தெரியும்” என்று மால்கம் பதிலளித்தார்.

**“நீங்கள் எழுதுகிறீர்களா?”**

“ஆமாம், தயவுசெய்து நான் நிரந்தரமாகக் கடவுளுடன் ஒன்றிணைவதைத் தவிர, வேறெதிலும் ஆர்வம் காட்டுவேன் என்று எதிர்பார்க்க வேண்டாம்” என்றார் மால்கம்.

பாபா, தொடர்ந்து கூறினார், “**இல்லை, இல்லை. அது மட்டுமே உண்மையானது. இதர அனைத்தும் மாயை. ஐக்கியம் சூரியனைப் போன்றது - அது நிரந்தரமானது. இதர அனைத்தும் வந்து போகும் மேகங்கள்.**

**“உங்கள் கடிதம் வந்தடைந்த நாளிலிருந்து நான் உங்களை நினைவில் கொண்டுள்ளேன். பரவசமான அனுபவங்கள் மட்டும் போதாது என்று நீங்கள் கூறுவது முற்றிலும் சரிதான். முகத்தையும் அகத்தையும் மூடும் திரை முழுவதுமாக விலக்கப்பட வேண்டும். அதில் அங்கும் இங்கும் துளைகள் இடுவது மட்டும் போதுமானது அல்ல.**

**“நான் எல்லாவற்றையும் திட்டமிட்டேன். முதலில், ஜீனைப் பொறுத்தவரையில் அவர் இங்கே ஒரு முழுமையான மாற்றத்தைப் பெற வேண்டும். அதுவரை, உங்களின் உதவி அவருக்குத் தேவைப்படும். இந்த ‘சுத்திகரிப்பு’ பணி நிறைவடைந்ததும் - இது ஆகஸ்ட் வரைத் தொடரும் - நான் மால்கமின் அகந்தையைத் துண்டு துண்டாக வெட்டத் தொடங்குவேன்!”**

“நல்லது,” மால்கம் பதிலளித்தார்.

**“அப்போது நீங்கள் இறைவனோடு ஐக்கியமாகும் உணர்வை அடைவீர்கள்; ஆனால் அதன் விலை என்ன தெரியுமா”**

“அதைவிட அதிக விலை ஏதும் உண்டா?” மால்கம் வினவினார்.

“**இல்லை, இல்லை**” என்று பாபா பதிலளித்தார், பின்னர் அவர், ‘**மூன்று மாதங்கள் தண்ணீர் மட்டும் அருந்தி உபவாசம் இருக்க விரும்புகிறாரா**’ என்று கேட்டார். அதற்கு மால்கம் ஒப்புக்கொண்டார்.

பிற்பகல் 4:30 மணிக்கு மெஹர் பாபா, ஜெஸவாலா தங்கியிருந்த இடத்திற்குச் சென்று (ஸானட்டோரியத்தில் அமைந்த தெஹாக் பங்களா - DHAEHAK BUNGALOW AT THE SANATORIUM) அவர்களுடன் தேநீர் அருந்தினார். அன்று மாலை தென்னிந்தியாவில், மலபார் (MALABAR) எனும் இடத்திலிருந்து ஏழை

மனிதர் ஒருவர் பாபாவைப் பார்க்க வந்தபோது, பின்வரும் உரையாடல் தொடர்ந்தது:

**“உங்களுக்குக் குடும்பம் உள்ளதா?”** பாபா கேட்டார்.

“இல்லை, எனக்கு எனது தந்தை மட்டுமே இருக்கிறார், நான் தனியாக இருக்கிறேன்” என்று வந்தவர் பதிலளித்தார்.

**“நீங்கள் அனைவரிடமிருந்தும் தனியாக இருக்கிறீர்கள் என்று நினைக்கிறீர்களா?”**

“ஆம், நான் தனியாகத்தான் இருக்கிறேன்.”

**“நீங்கள் எப்பொழுதும் தனியாக இல்லை, அது உங்களுக்குத் தெரியுமா?”** என்று பாபா கேட்டார்.

சில கணங்கள் சிந்தித்துக்கொண்டே அந்த மனிதர், “நான் எப்பொழுதும் தனியாக இருக்கிறேன்” என்று பதிலளித்தார்.

**“அப்படியானால் நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி.”**

“எப்படி?”

**“கடவுள் மட்டுமே தனியாக இருக்கிறார். நீங்கள் தனியாக இருப்பதை உணர்ந்தால், நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி.”**

அந்த மனிதர் குழப்பத்தில் ஆழ்ந்ததும், பாபா விளக்கினார், **“நீங்கள் தனியாக இல்லை. மனம், ஆசைகள், எண்ணங்கள், பாலியல் தூண்டுதல்கள் போன்ற பல ‘நண்பர்கள்’ உங்களோடு உள்ளனர், அவை எப்பொழுதும் உங்களுடன் இருக்கின்றன. அவர்கள் உண்மையில் உங்கள் எதிரிகள்.**

**“நீங்கள் உண்மையிலேயே தனியாக இருந்திருந்தால், நீங்கள் கடவுளைப் போல் இருப்பீர்கள்! கடவுள் தனியாக இருக்கிறார், நான் தனியாக இருக்கிறேன். இப்போது சொல்லுங்கள், உங்களுக்கு உண்மையில் என்ன வேண்டும்?”**

அந்த நபர், “நான் எனது நாட்டுக்கு சேவை செய்ய விரும்புகிறேன், ஆனால் ஒரு சோகமான காதல் விவகாரம் எனது திட்டங்களை சீர்குலைத்துவிட்டது. நான் எனது திட்டங்களை நிறைவேற்றி சந்தோஷமாக இருக்க விரும்புகிறேன்” என்று பதிலளித்தார்.

**“திட்டங்களும், அமைதியும்! இந்த இரண்டும் ஒருபோதும் ஒன்றோடு ஒன்று கைகோர்த்துச் செல்லமுடியாது. எங்கு அமைதி நிலவுகிறதோ அங்கு, திட்டத்திற்கு இடமில்லை; எங்கு திட்டங்கள் உள்ளனவோ அங்கு, கொந்தளிப்பு மட்டுமே இருக்கும். திட்டங்களைக் கைவிட்டு அமைதியை நாடுங்கள் அல்லது ‘திட்டங்கள்’ வகுத்து, சமாதான எண்ணங்களை விட்டுவிடுங்கள். நீங்கள் இரண்டையும் கொண்டிருக்க முடியாது. அது சாத்தியமற்றது.**

**“சாத்தியமற்றதை, அடைய முடியாததை அடைய விரும்புவதால் மக்கள் துன்பப்படுகிறார்கள்! நீங்கள் நெருப்பில் நிற்க விரும்புகிறீர்கள், அதே நேரத்தில் அது உங்களை எரிப்பதை நீங்கள் விரும்பவில்லை. நீங்கள் ஒரு மயானத்தில் வீட்டைக் கட்ட விரும்புகிறீர்கள்!**

**"எனவே நீங்கள் காதலியை விட்டுவிட்டு, உங்கள் நாட்டுக்கு சேவை செய்ய முயற்சிக்க வேண்டும். அது படிப்படியாக உங்களின் இறுதி இலக்கை நோக்கி அழைத்துச் செல்லும்."**

"நம் நாட்டிற்கும் மக்களுக்கும் சேவை செய்ய முடியாவிட்டால், இறை உணர்வை அடைவதில் நன்மை என்ன?" வந்தவர் கேட்டார்.

பாபா சிரித்துக்கொண்டே, **"நீங்கள் துரதிர்ஷ்டவசமாகத் தவறான முறையில் சிந்திக்கிறீர்கள். இறை உணர்வை அடையப் பெற்றால் மட்டுமே, உங்களின் அறிவு, சக்தி, பேரின்பம் இவற்றின் மூலம் நீங்கள் நாட்டிற்கு உண்மையிலேயே சேவையும், பிறருக்கு நல்லதும் செய்ய முடியும்.**

**"உங்களுக்குத் தேவையானது ஒரு மாதத்திற்கு வேண்டிய ஆமணக்கு எண்ணெய்! அது உங்கள் வயிற்றையும் குடலையும் சுத்திகரித்து, உங்கள் மனதைத் தெளிவாக வைத்திருக்கும். அப்போது நீங்கள் எளிதாக, அமைதியாக, அடக்கமாக சிந்திக்க முடியும், சரியானதைச் செய்ய முடியும்.**

**"அகத்தை சுத்தப்படுத்தி, அமைதியாக இருங்கள், நல்ல எண்ணங்களையே நினைவில் கொள்ளுங்கள்."**

**'அசட்டைப் போக்குடைய மனோபாவம் சரியல்ல'** என்ற கருத்தை எடுத்துரைத்து, அந்த எளிய மனிதருக்கு மெஹர் பாபா அளித்த ஆலோசனை அனைவரையும் சிரிப்பில் ஆழ்த்தியது.

1937 மே 4 காலை உணவிற்கு முன்பு, பிரதான அறையில் மால்கம், பாபாவிடம், "விதி, தலைவிதி அல்லது வாய்ப்பு இவற்றிற்கு என்ன வித்தியாசம்?" என்று கேட்டதற்கு, பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**'விதி' என்பது தெய்வீக நியதி அல்லது இறை விருப்பம், இது நம்முடைய ஏராளமான, எண்ணிலடங்கா வாழ்க்கைகள் மூலம் நம்மை வழிநடத்துகிறது. ஒவ்வோர் ஆத்மாவும் அதன் பரிணாம வளர்ச்சியின் தொடக்கத்திலிருந்து 'இறை உணர்வு' என்ற இறுதி இலக்கு வரை, மகிழ்ச்சி, துன்பம், நல்லது, தீயது போன்ற அனைத்தையும் அனுபவிக்க வேண்டும்.**

**'தலைவிதி' என்பது கர்ம வினையை அடிப்படையாகக் கொண்டது; நமது நிகழ்கால வாழ்வின் நிகழ்வுகளையும், எதிர்கால வாழ்க்கையின் நிகழ்வுகளையும் நிர்வகிக்கும் காரணி மற்றும் விளைவுதான் தலைவிதி. பரிணாம வளர்ச்சியின் மூலம் ஆத்மா, மனப்படிவங்களைப் பெறுகிறது.**

**அனுபவங்களை உருவாக்கும் செயல்முறைகள், பின்னர் இந்த மனப்படிவங்களை அகற்றும் முறைதான் தலைவிதி, அதிர்ஷ்டம் அல்லது வாய்ப்பு என்று அழைக்கப்படுகிறது.**

**விதி அல்லது ஆத்மாக்களின் இறுதி இலக்கு என்பது இறை உணர்வை எய்துவதாகும்; ஆனால் உண்மையில் தலைவிதி ஒவ்வொரு நபருக்கும் வேறுவேறானது. நீங்கள் இவ்வாறு கற்பனை செய்ய முடிந்தால், விதியை 700 டன் எடையான இன்பம்-துன்பம், நல்லது-தீயது இவற்றுடன் ஒப்பிடலாம்; ஒவ்வோர் ஆத்மாவும் அதன் வாழ்நாள் வரை**

**இந்த முழுச் சுமையையும் சுமக்க வேண்டும். ஓர் ஆத்மா 700 டன் இரும்பை எடுத்துச் செல்கிறது, மற்றோர் ஆத்மா அதே எடையிலான எஃகு, இதர ஆத்மாக்கள் ஈயம் அல்லது தங்கம். எடை எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருக்கும், ஆனால் பொருளின் வகை மட்டுமே மாறுகிறது. ஒவ்வொரு மனிதனின் மனப்பதிவுகள் மாறுபடுகின்றன மற்றும் பெறப்பட்ட மனப்படிவங்கள், ஒவ்வொருவரின் எதிர்கால வாழ்க்கையின் கட்டமைப்பையும் நிலையையும் உருவாக்குகின்றன. எனவே, விதி ஒன்று, ஆனால் தலைவிதி ஒவ்வொருவருக்கும் மாறுபட்டது, வேறுபட்டது.**

அடுத்த நாள், பாபா மேற்கத்திய அன்பர்களுக்கு மனப்படிவங்களின் செயல்பாடு குறித்து மேலும் விளக்கினார்.

ஏப்ரல் இறுதியிலிருந்து ரானோ மிக அதிக ஜுரத்தால் அவதிப்பட்டார். அவர் முகம் வீக்கம் கொண்டிருந்தது, அவர் மார்பில் எரிச்சல் மற்றும் தோல் நமைச்சல் ஏற்பட்டது. அவர் உயிர் பிழைக்கும் நம்பிக்கையைக் கைவிட்ட மருத்துவர் பாபாவிடம் அதைக் கூறினார். ராஹுரியிலிருந்து டாக்டர் நீலு அழைக்கப்பட்டார்; அவருடைய பரிசோதனைப்படி இது ஒருவகை நச்சுக் காய்ச்சல் என்பது தெரியவந்தது. பாபாவின் ஆலோசனையின் படி டாக்டர் நீலு, ரானோவிற்கு சிகிச்சையளிக்கத் தொடங்கினார்.

நாசிக் நகரில் இருந்த வேளையில், பாபா ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று முறை ரானோவைப் பார்க்கச் சென்றார். பாபா, அறைக்குள் நுழையும்போது, தூங்கிக் கொண்டிருக்கும் ரானோவைத் தொந்தரவு செய்யக்கூடாது என்பதற்காக, பாதணிகளைக் கதவிற்கு வெளியே விட்டுவிடுவது பழக்கம். அன்று பாபா மூன்று முறை வந்தார். தாயார் நான்னி, பாபா வந்ததைத் தெரிவித்ததும், ரானோவின் உடனடி பதில்: "சரி, நான் இப்போது விழித்திருக்கிறேன்!"

பாபா, ரானோவிற்கு மருந்தைக் கொடுத்து, சில நேரங்களில் ஆரஞ்சு பழரசத்தை, கரண்டியால் ஊட்டினார். ஒருமுறை, ரானோ குணமடைந்த காலத்தில், ஒருவரின் பிறந்தநாளில், ஐஸ்கிரீம் வழங்கப்பட்டது. ரானோ பாபாவிடம் அவருக்கும் கொஞ்சம் கொடுக்கும்படிக் கேட்டார். '**இல்லை, இல்லை**' என்று சைகையால் தெரிவித்து "**ஐஸ்கிரீம் உங்கள் தொண்டைக்கு நல்லதல்ல**" என்றார்.

"ஆனால் தொண்டைப் புண்ணுக்கு ஐஸ்கிரீம் கொடுக்கிறார்கள் பாபா," என்று அவர் கெஞ்சினார். "மேலும் எனது தொண்டை சரியாகி விட்டது" என்றதும், பாபா மீண்டும் இல்லை என்றார். ஆனால் பின்னர், அவர் ரானோவின் அறைக்கு வந்து, அவரது சுண்டுவிரலில் அணு அளவு ஐஸ்கிரீமை எடுத்து அவருக்குக் கொடுத்தார்.

ரானோவின் உடல் வெப்பநிலையை ஒரு நாளைக்கு ஏழு முறை கண்காணிக்க டாக்டர் நீலுவிற்கு அறிவுறுத்தப்பட்டது. பாபா, நாசிக் ரிட்ரீட்டில் இல்லாத வேளையில் ரானோவின் உடல்நிலை குறித்து அவ்வப்போது

தொலைத்தந்தி அனுப்பப்பட்டது. படுக்கையிலிருந்து கீழே கால் வைக்க வேண்டாம் என்று பாபா, ரானோவிற்கு உத்தரவிட்டார்.

இறுதியாக, அவரது காய்ச்சல் குறைந்து, மே 6ஆம் நாள், ஏறக்குறைய ஆறு வாரத்திற்குப் பின்னர், அவர் குணமடைவதற்கான ஒவ்வோர் அறிகுறியும் தென்பட்டது. ரானோ ஒருமுறை இவ்வாறு நினைவு கூர்ந்தார், "நான் ஒரு செல்லப்பிள்ளை, மிகவும் ஆடம்பரமாக, விரும்பிய அனைத்தும் பெற்று எப்பொழுதும் பிறருடன் இருப்பதை நான் தவறவிட்டதில்லை. ஒருவேளை, பாபாவிற்கு 21 நாட்களுக்கு, இருந்த இடத்தைவிட்டு அசையாமல் ஒருவர் தேவைப்பட்டிருக்கலாம் - ஒரு வட்டத்தில் 40 நாட்கள் கழிப்பது போல."

ரானோ குணமடைந்த பிறகு, பாபா அவரிடம், "**நான் எனது பணிக்காக உங்களைக் காப்பாற்றினேன். நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்த போது நான் இங்கு இல்லாமல் இருந்தால், நீங்கள் உயிரைத் துறந்திருப்பீர்கள்!**" என்றார்.

1937, மே 5ஆம் நாள், மெஹர் பாபா மேற்கத்திய ஆண்கள், பெண்கள் அனைவரையும் அழைத்து, கீழ்ப்படிதலை விளக்கும் இந்த சிறுகதையை விவரித்தார்:

**ஒருமுறை குருநாதர் ஒருவர் தனது சீடரிடம் காலை 5:00 மணிக்கு, கதவைத் தட்டி அவரை எழுப்புமாறு கூறினார். சீடர், இரவெல்லாம் விழித்திருந்து சரியாகக் காலை 4:55 மணிக்குத் தூங்கிவிட்டார். பின்பு பத்து நிமிடங்கள் தூங்கி எழும்பியபோது நேரம் காலை 5:05 மணி.**

**இதற்கிடையில் ஒவ்வொரு நாளும் சரியாக ஐந்து மணிக்கு வரும் பால்காரர், தனது வழக்கமான நேரத்தில் வந்து கதவைத் தட்டினார். குருநாதர், "திறந்து வா" என்று சொன்னதும், முழுப் பிரபஞ்சமும் பால்காரருக்காகத் திறக்கப்பட்டது! ஆனால் இது பால்காரருக்காக விதிக்கப்பட்டது; தற்செயலாக நிகழ்ந்தது அல்ல!**

**இறைநிலையை எய்துவதை ஒருபோதும் வாய்ப்பாகக் கருதக்கூடாது. இது ஒரு மகத்தான விஷயம். இது அனைத்தும் முன்கூட்டியே தீர்மானித்து, திட்டமிடப்பட்டுள்ளது.**

அன்று பிற்பகல் புறப்படுவதற்கு முன்பு, பாபா மேற்கத்தியர்களை, பிரதான அறைக்கு அழைத்து டாமிடம், சில ஃபோனோகிராப் பதிவுகளை இசைக்கச் சொன்னார். ஒரு சில இசைத்தட்டுகளை ரசித்த பின்னர், ஒரு குறிப்பிட்ட பால் ரோபேஸன் (PAUL ROBESON) பாடலைக் கேட்க விரும்புவதாக, பாபா கூறினார். அதற்குப் பிறகு பாபா குழுவினருக்கு இவ்வாறு அறிவுறுத்தினார், "**நீங்கள் இசையைக் கேட்கும்போது, என்னை, சிலுவையில் அறையப்பட்ட சித்திரத்தை, உங்கள் மனத்திரையில் நினைவுகூர முயற்சி செய்யுங்கள். அதைக் கட்டாயப்படுத்தாதீர்கள்; அதை உங்கள் மனதின் பார்வையில் பார்க்க முயற்சி செய்யுங்கள்.**"

குழுவில் அனைவரும் முயற்சித்தது, அவர்களில் பெரும்பாலானோர் கண்களில் கண்ணீரை வரவழைத்தது. பின்பு, பாபா ஒவ்வொருவரிடமும்

அவர்கள் என்ன உணர்ந்தார்கள் என்று கேட்டார். எலிஸபெத், “இந்தச் சித்திரத்தை நீங்கள் மனக்கண்ணில் தியானிக்கச் சொல்வதற்கு சற்று முன்பு, நீங்கள் ஸோஃபாவில் சாய்ந்த வண்ணம் இருந்ததை நான் பார்த்துக் கொண்டிருந்தேன், உங்கள் கால்கள் ஆணிகளால் அறையப்பட்டிருப்பதாகக் கற்பனை செய்தேன்” என்றார். இசை நிகழ்ச்சி தொடரும் வேளையில், இந்தச் சித்திரத்தை அவர்கள் மனக்கண்ணில் தியானிக்க வேண்டும் என்று பாபா மீண்டும் மீண்டும் கூறினார்.

பாபா நான்கு மணிக்கு ஆதி சீனியருடன் ராஹுரிக்குப் புறப்பட்டார். ராஹுரி ஆசிரமம், மஸ்துகள் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் அனைவரையும் மெஹராபாத்திற்கு மாற்றுவது தொடர்பான பணியை மெஹர் பாபா மேற்பார்வையிடத் தொடங்கினார்.

லக்ஷ்மிநாராயண் என்ற மார்வாரியிடமிருந்து ஐந்தாண்டு குத்தகைக்கு எடுக்கப்பட்ட நிலத்தில் ராஹுரி ஆசிரமம் நிறுவப்பட்டது. பாபா அவரது பயன்பாட்டிற்கு அதிக நிலம் வேண்டும் என்று விரும்பினார்; இதை ஏற்பாடு செய்ய டாக்கே மற்றும் காளேமாமாவை அனுப்பி வைத்தார்.

ஏப்ரல் 14 அன்று அவர்கள் லக்ஷ்மிநாராயணனை சந்தித்த வேளையில், அவர் தனது சொத்துக்களை அதிக தொகைக்குக் குத்தகைக்கு வழங்கவோ அல்லது முழுச் சொத்தையும் எந்தவொரு தொகைக்கும் விற்கவோ மறுத்துவிட்டார். அவருக்குப் பணம் தேவையில்லை என்று தெரிவித்தார்; மாமரத் தோட்டங்கள் அவரது குடும்பத்தில் பல தலைமுறைகளாக இருந்தன. (உரிமையாளர் ஏற்கனவே நியாயமான வாடகை தொகையை விட குறைவாக அவருக்கு வழங்கப்படுவதாக நினைத்திருந்தார்; பொதுவாக ஆசிரமத்தின் தேவைகளுக்கு அவர் ஒத்துழைக்கவில்லை. )

லக்ஷ்மிநாராயண் ஆசிரமத்திற்கு அடுத்ததாக தனது பண்ணையில் வசித்து வந்தார். ஒரு ஜோடி காளைகளால் பெரிய தோல் பையில் இறைக்கப்பட்ட கிணற்று நீரில் அதை நீர்ப்பாசனம் செய்தார். காளைகளில், ஒன்றின் முதுகில் காயம் இருந்ததை பாபா கவனித்து, காளையை அவ்வளவு கடினமான உழைப்பில் ஈடுபடுத்த வேண்டாம் என்றும், சிகிச்சைக்காகக் கால்நடை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லவும் மார்வாரிக்கு, பல முறை பரிந்துரைத்தார். மார்வாரி இதைச் செய்வதாக உறுதியளித்தார், ஆனால் எதுவும் செய்யவில்லை.

காளேமாமா, டாக்கேஃபால்கர் இருவரும் லக்ஷ்மிநாராயணனை சந்தித்தபோது, அவரை இணங்கச் செய்யும் முறையில், ‘**கருணை என்பது இந்து தர்மத்தின் அடிப்படைக் கொள்கை**’ என்பதை அவருக்கு நினைவூட்டுமாறு பாபா அறிவுறுத்தினார். அவர் விலங்குகள் மீது கருணை காட்ட வேண்டும், அதற்கு சிகிச்சையளிக்க வேண்டும், அல்லது மற்றொரு காளையை வாங்க வேண்டும். டாக்கே, காளேமாமா இருவரும் அவரை நீண்ட நேரம் இணங்கச் செய்ய முயன்றனர், ஆனால் அந்த மனிதர் அதற்கு உடன்படத் தயாராக இல்லை, “உங்கள் மனிதாபிமான உள்ளுணர்வுகளைப் பூர்த்தி செய்வதற்காக மேலுமொரு

காளையை வாங்க ரூ 200 செலவிட என்னால் முடியாது!" அவர் தனது விவகாரங்களில் தலையிட வேண்டாம் என்று மண்டலியைக் கேட்டுக்கொண்டார்.

சில நாட்களுக்குப் பிறகு, மார்வாரி, பாபாவிடம் வந்தார். அவருக்குக் குழந்தைகள் இல்லை, ஒரு மகனை அடையப்பெறும் வரத்தை, தனக்கு வழங்குமாறு பாபாவிடம் முறையிட்டார். **"நீங்கள் நிச்சயமாக ஒரு வலிமையான, அழகான ஆண் மகனைப் பெறுவீர்கள்"** என்று பாபா ஆசீர்வதித்தார். பாபா அவரை ஆசீர்வதித்ததால், மார்வாரி, காளைக்கு ஓய்வு கொடுப்பார் என மண்டலி இப்போது நினைத்தனர், ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை.

மெஹர் பாபா, ராஹுரி ஆசிரமத்தை நீட்டிக்க விரும்பினார், அதற்காக அதிக நிலம் தேவைப்பட்டது. மார்வாரி மேலும் அதிக நிலத்தை, குத்தகைக்கு விடவோ அல்லது விற்கவோ மறுத்ததால் பாபா, ராஹுரி ஆசிரமத்தை அங்கிருந்து அகற்ற உத்தரவிட்டார். ஏப்ரல் 19 முதல் மண்டலி தற்காலிக கட்டமைப்புகளிலிருந்து அனைத்துப் பொருட்களையும் மெஹராபாத்திற்கு மாற்றும் பணியைத் தொடங்கினர், செங்கல், ராஹுரி குடில்கள் கூட, தனித்தனியாக எடுத்துச் சென்று மெஹராபாத்தில் மீண்டும் கட்டமைக்கப்பட்டன. (ஆச்சரியமூட்டும் வகையில் காலநிலைக்கு எதிர் மாறாக அன்று ராஹுரி, மெஹராபாத் இரண்டு இடங்களிலும் இடைவிடாத மழை பொழிந்தது. )

1937, மே 2 அன்று, பாபா இரண்டு பெரிய வாகனங்களில் பொருட்களை நிரப்பி, மெஹராபாத்திற்கு அனுப்பி, இந்தக் குறிப்பை, பெண்டுவிற்கு இணைத்தார்:

**இங்கு இருக்கும் இரண்டு வாகனங்களில் எனது அறையின் பொருட்கள் மற்றும் தளபாடங்கள் அடங்கியுள்ளன. எனது அறையின் பொருட்களைத் தனியாக வைக்கவும், அதை எவரும் தொடவோ, தொந்தரவு செய்யவோ வேண்டாம்.**

**மே 6ஆம் நாள், நான் மண்டலி மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களுடன் வருகிறேன். அன்று முதல் கூடுதலாக ஐந்து மண்டலிக்குத் தேவையான பால், உணவிற்கு ஏற்பாடு செய்யுங்கள். மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாவலர்களுக்கும் நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். மே 5 மாலைக்குள் அனைத்து கட்டமைப்புகளும் தயாராக இருக்க வேண்டும்.**

மனநிலை பாதிக்கப்பட்டவர்களில் சிலர் தங்கள் இல்லங்களுக்கு அல்லது உள்ளூர் கிராமங்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். பாபாவுடன் இதர மண்டலியும், பதின்மூன்று மஸ்துகளும் மே 6 அன்று மெஹராபாத்திற்குச் சென்றனர். பாபா, மெஹராபாத்தில் தனது குடிலுக்குத் தெற்குப் பகுதியில், திறந்த வெளியில் எழுப்பிய கட்டமைப்பில் அவர்களைத் தங்க வைத்தார். கட்டமைப்புகளைச் சுற்றி ஒரு தனி வேலியும் எழுப்பப்பட்டது.

ராஹுரி நிலம் ஐந்து ஆண்டுகளுக்கு, குத்தகைக்கு எடுத்து, முழுத் தொகையும் முன்கூட்டியே வழங்கப்பட்டது. ஆனால் நில உரிமையாளரின் இணக்கமற்ற அணுகுமுறை காரணமாக, பாபா ஒன்பது மாதங்களுக்குள் ஆசிரமத்தை மூடிவிட்டார், மேலும் அவர் மெஹராபாத்திற்குச் சென்றபோது அந்தத் தொகையைத் திரும்ப கேட்கவும் இல்லை. ராஹுரிவாழ் மக்களும், உள்ளூராட்சி அதிகாரிகளும், பாபா அங்கிருந்து புறப்படும் வேளையில் வருத்தத்தைத் தெரிவித்ததோடு, லக்ஷ்மிநாராயணன் மீது அழுத்தம் கொடுக்கவும் முன்வந்தனர். ஆனால் பாபா அவர்களை அவ்வாறு செய்யவிடாமல் தடுத்தார்.

லக்ஷ்மிநாராயணனுக்கு ஒரு மகன் பிறப்பான் என்று பாபா உறுதியளித்திருந்தார்; இப்போது அவரது மனைவி கர்ப்பமாக இருந்தார். அந்த மனிதர் மிக்க மகிழ்ச்சி அடைந்தார், ஆனால் அவர் ஒருபோதும் தனது குழந்தையின் முகத்தைப் பார்க்கமுடியாத சூழ்நிலை உருவாயிற்று. 1937 ஜூலை 17 அன்று, அவர் குதிரையில் அருகிலுள்ள கிராமத்திற்குச் சென்று திரும்பும் வழியில் ராஹுரியில் நதியைக் கடக்கும் வேளையில் திடீர் பருவமழை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு, நீரில் மூழ்கடிக்கப்பட்டார். அவரது உடல் இரண்டு மைல் தொலைவில் கண்டுபிடிக்கப்பட்டது. பல மாதங்கள் கழித்து, அவரது மனைவி ஒரு மகனை ஈன்றெடுத்தார்.

சம்பத் ஐயங்கரின் உறவினர், சி. வி. ராமானுஜாச்சார்லு (C.V. RAMANUJACHARLU), வயது 65, 1930ஆம் ஆண்டு பாபா, தனது பிறந்தநாள் விழாவிற்காக மதராஸுக்கு விஜயம் செய்த நாளிலிருந்து பாபாவின் தொடர்பில் இருந்தார். அவர் பாபாவின் அவையில் இணையும் தீவிர ஆர்வத்தில் ஒரு நேர்காணலைக் கோரினார். ஏப்ரல் 11 அன்று பாபா அவரை ராஹுரியில் சந்தித்த வேளையில் ராமானுஜாச்சார்லு அவரது ஆர்வத்தை வெளிப்படுத்தினார். பாபா அவரிடம், "**நீங்கள் அருமையான நேரத்தில் வந்துள்ளீர்கள். என்னுடன் உடனடியாக இணைந்து கொள்ளுங்கள்; நான் யார் என்பதை நீங்கள் கண்டு கொள்வீர்கள்**" என்று கூறினார். அவர் மதராஸுக்குத் திரும்பிச் சென்று, தனது விவகாரங்களை ஒரு முடிவிற்குக் கொண்டுவந்து, பின்பு, மே 5ஆம் நாள் மெஹராபாத்தில் தங்க வந்தார்; பாபா அவருக்கு, சுவாமிஜி (SWAMIJI) என்று புனைப்பெயர் சூட்டி, மேலும் பிளீடர், பைதூல் இருவருக்கும் பைத்தியக்காரர்கள் ஆசிரமத்தில் உதவியாக இருக்குமாறு கடமைகளை வழங்கினார். மே 9ஆம் நாள் விஜயம் செய்தபோது பாபா மனநிலை பாதிக்கப்பட்ட மற்றும் மஸ்துளை நீராட்டி, சுத்தம் செய்ய மானேக் ரஞ்சியும் (MANECK RANJI) உதவினார்.

மெஹர் பாபா, தமது இருப்பிடத்தை ராஹுரியிலிருந்து மெஹராபாத்திற்கு மாற்றிய பின்பு, மேற்கத்திய அன்பர்களை நாசிக்கிலிருந்து மாற்றுவது குறித்து விவாதங்கள் நடைபெற்றன. மே மாதத்தில் பாபா அவர்களின் எதிர்காலத் திட்டங்களைத் தீர்மானிக்க, அவர்களைப் பலமுறை சந்தித்தார். மழைக்காலம் விரைவில் நெருங்கிக் கொண்டிருந்ததால், பாபா ஒரு மாற்றத்தை

விரும்புவதாகத் தோன்றியது. 1937, மே 10 காலையில் பாபா, ஆதி சீனியர், பகீரத் ஆகியோருடன் நாசிக் வந்தார். அடுத்த நாள் நடந்த கூட்டத்தில், பாபா கூறினார்:

**ஆவிக்கும்** (SPIRIT - பௌதீக உடலைத் துறந்த ஆத்மா) **பௌதீக உடலுக்கும் இடையே எப்பொழுதும் ஒரு போராட்டம் நடந்து கொண்டிருக்கும், ஆத்மா அந்தப் போராட்டத்திற்கு சாட்சி. ஆவி, பௌதீக உடலுக்கு, எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் எளிதில் அடிபணிவதானால், அது நம்பிக்கையற்ற சூழ்நிலையை சந்திக்கும். போராடி, பின்பு வளைந்து கொடுப்பதானால் நம்பிக்கை இருப்பதாகக் கூறலாம். ஆனால் ஆவி, பௌதீக உடலை வென்றுவிடுமானால், வெற்றி நித்தியமானது. எதுவாயினும் போராட்டமே ஒருவரைப் பரிபூரணமாக்கும். எனவே இப்போது போராடுவோம்.**

**இப்போது கூறுவதில் நீங்கள் அனைவரும், முற்றிலும் நேர்மையாகவும் உண்மையாகவும் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். என்னை மகிழ்விக்க, திருப்திப்படுத்த 'ஆம்' என்று பதிலளிக்க வேண்டாம். எதிர்கொள்ள வேண்டிய சிக்கல் ஏராளம் உள்ளது - மிகப் பெரிய அளவில்! பருவமழை காலத்தில், நாசிக் - மெஹராபாத் இடையே பயணம் செய்வது என்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றது. ராஹுரியில் ஓடும் நதி நிரம்பி வழியும். ஒருமுறை ருஸ்தம் அந்த நதியில் ஏறக்குறைய அடித்துச் செல்லப்பட்டார்.**

**இந்தியர்கள் இங்கிலாந்தின் காலநிலையை தாங்கிக்கொள்ள முடியாதது போல, நீங்களும் இந்திய காலநிலையைத் தாங்கிக்கொள்வது சிரமம். டெவன்ஷயரில்** (DEVONSHIRE)**, டாக்டர் கனி ஏழு போர்வைகளை போர்த்திக்கொண்டு தூங்கியது எனது நினைவிற்கு வருகிறது; கையுறைகள் மற்றும் காலில் பூட்ஸ் அணிந்து தூங்கினார்; கிட்டத்தட்ட ஓர் எகிப்திய 'மம்மி' போலக் காட்சியளித்தார்! என்னுடைய இந்திய மண்டலி, எவ்வளவுதான் உதவ முயற்சித்தாலும், அவர்களால் எந்த வேலையையும் துல்லியமாகச் செய்ய முடியவில்லை. அதேபோலத்தான், நீங்கள் அனைவரும் அஹமதுநகரில் எனக்கு உதவ விரும்பினாலும், முடியாமல் போகலாம். மெஹராபாத்தில் ஓடும் நீர் இல்லை, தானியங்கி கழிவறைகளும் இல்லை - இது பண்டர்தாரா போன்றது. ஆனால் பண்டர்தாராவில், உங்களை கவனித்துக் கொள்ள காக்கா இருந்தார். இப்போது, மழைக்காலத்தில் மெஹராபாத் சூழ்நிலையை நீங்கள் தாங்கிக்கொள்ள முடியுமா என்பதுதான் கேள்வி.**

**கிழக்கு மற்றும் மேற்கத்திய மக்களுக்கு இணக்கமான இடம் போர்டோஃபினோ** (PORTOFINO)**. நம்மிடம் பணம் இருந்தால், ராஹுரிக்கு நிகரான ஆசிரமம் ஒன்றை அங்கு எழுப்பலாம். ஆனால், உங்களுக்கு ஆறுதல் தரும் வசதிகள் இல்லை என்றாலும் அஹமதுநகர் சிறப்பான இடம். நான் சுதந்திரமாக எனது வேலையைச் செய்ய வேண்டும், உங்கள்**

சுகங்களையும், அசௌகரியங்களையும் தொடர்ந்து பார்க்க வேண்டிய தேவையில்லை.

சிலர் ஆறு மாதங்கள், சிலர் வருடங்கள், சிலர் ஐந்து ஆண்டுகள் இங்குத் தங்கும் எண்ணத்தில் வந்துள்ளீர்கள்; எனவே உங்களில் எவரேனும் திரும்பிச்செல்ல விரும்பினால், இதுவே சிறந்த நேரம். நீங்கள் செல்ல விரும்பவில்லை என்றால், உங்களைக் கட்டாயப்படுத்த பாபா விரும்பவில்லை. நாம் மிகவும் நேர்மையாகவும், உண்மையாகவும் இருப்பதன் மூலம், நீங்கள் எனக்கும் எனது பணியிலும் உதவுவீர்கள். மிகவும் கவனமாக சிந்தித்து ஒரு முடிவிற்கு வாருங்கள். நீங்கள் அஹமதுநகரில் இருப்பதாக இருந்தால், பருவமழை தொடங்குவதற்கு முன்பு நான் விரைவாக, ஒரே மாதத்தில் அனைத்து நகர்வுகளையும் செய்ய வேண்டும். உங்களில் எவரிடமும், எந்தத் தவறும் நான் காணவில்லை. நான் சொன்னது போல, மேற்கத்தியர்களுக்கு இங்கிலாந்து மற்றும் கிழக்கத்திய மக்களுக்கு இந்தியா. அவர்கள் இங்கிலாந்தில் வாழ முடியாது. ஆனால் நீங்கள் இந்தியாவை இதுவரை, சிறப்பாகத் தாங்கிக் கொண்டீர்கள்!

எனது பணியை ஓர் இடத்தில் தொடங்குகிறேன். அது முடிந்ததும், இன்னும் ஓர் இடத்தை உருவாக்குகிறேன்; அவ்வாறு எனது பணி தொடர்கிறது. நான் எங்கிருந்தாலும் அது என்னைப் பொறுத்தவரையில் ஒன்றேதான். அதனால், எனது பணி ஒருபோதும் பாதிக்கப்படுவதில்லை அல்லது நின்றுபோவதில்லை. மெஹராபாத் ஆசிரமத்தை கீழே இழுத்து மறுபடியும் எழுப்ப, பெண்டு எப்பொழுதும் தயாராக இருக்கிறார்.

எனது பணியை நான், கிழக்கு அல்லது மேற்கு, எங்கிருந்தாலும் செய்ய முடியும்; ஆனால் எனது வட்டத்து மண்டலி என்னுடன் இருக்க வேண்டும். போர்டோஃபினோ அல்லது மெஹராபாத், எனக்கு எது வசதியானது என்பதைப் பார்க்க வேண்டும். இவர்களில் பலர் இத்தாலியை விரும்புகிறார்கள்; நான் எனது பணியைப் பற்றி மட்டுமே நினைக்கிறேன். தற்போதைய இடங்களுக்கு இடையே அதிகமான பயணம் செய்ய வேண்டியுள்ளது - கிட்டத்தட்ட ஐந்து நாட்களுக்கு ஒருமுறை.

நான் உலகளவில் பணி புரிகிறேன். நீங்கள் என்னை நினைவில் கொண்டு நேசித்தால், நீங்கள் எனது பணியைப் பகிர்ந்து கொள்கிறீர்கள். இணைப்பு ஒன்றுதான் முக்கியமானது. ஊர்தி இயந்திரத்துடன் இணைக்கப்பட்ட வாகனங்கள் அத்துடன் செல்கின்றன.

சுதந்திரம் இருந்தாலும், இல்லையென்றாலும் எனது பணியை நான் செய்கிறேன்; ஆனால் தடைகள் இல்லாதபோது பணி எளிதாக முடிகிறது. எனவே, உங்கள் பதில்களில் நேர்மையாகவும், உண்மையாகவும் இருங்கள். அஹமதுநகரில் உணவு இங்கு இருப்பதைப் போலவே இருக்கும், மேலும் உதவிக்காக ஊழியர்களும் இருப்பார்கள். தேள் அதிகமாகவும், பாம்புகள் குறைவாகவும் இருக்கும்; நீராடுவதில் உள்ள சிக்கல் என்னவெனில் பல

**கட்டுப்பாடுகளும் நிபந்தனைகளும் இருக்கும். டாக்டர் நீலு உங்கள் உடல்நிலையை கவனித்துக் கொள்வார்.**

**நல்லிணக்கம் இன்றியமையாதது; இல்லையெனில் அவரவர் இல்லத்திற்குத் திரும்புவதே நல்லது.**

**அசௌகரியங்களும், ஒற்றுமையும் ஒன்றிணைந்து செல்ல வேண்டும். நான் கேரெட்டை ஒரு விஷயத்தில் விரும்புகிறேன்: எப்பொழுதும் நேர்மையாக இருப்பதோடு அவரது பதில்கள் மிகவும் நேரடியானதாக இருக்கும்.**

**போராடுவது போல் ஒன்றும் இல்லை; இது ஒருவரை முழுமையடையச் செய்கிறது. கீழே விழுந்தாலும் மீண்டும் மீண்டும் எழுந்திருங்கள். தொடர்ந்து போராடுங்கள்.**

**இப்போது பதிலளிப்பதற்கு முன் நன்கு சிந்தியுங்கள். உணர்ச்சிகள் தலையிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.**

பெரும்பாலானோர் மெஹராபாத்திற்கு வாக்களித்தனர்; பாபா தொடர்ந்து கூறினார்:

**எனவே மெஹராபாத், போர்டோஃபினோவை விட நடைமுறைக்குரியதா என்பதைக் கண்டறியும் வரை நாம் இங்கேயே இருப்பதாக இருக்கட்டும். கேரெட் பணம் தருவதாக இருந்தால், நாம் அனைவரும் தனிக்கப்பலில் போர்டோஃபினோவிற்குச் செல்கிறோம்!**

**இப்போது, உங்களில் எவரேனும் செல்ல விரும்பினால் சென்று வாருங்கள். ஜூன் மாதத்தில் புறப்பட்டு அக்டோபரில் திரும்பவும். யார் யார் செல்ல விரும்புகிறார்கள்?** (ஒருவரும் கையை தூக்கவில்லை. )

**மெஹராபாத் எனக்கு உகந்த இடம். நீங்கள் அனைவரும் என்னருகில் இருக்கவேண்டும். ஆனால் அசௌகரியங்கள் நீங்கள் தாங்க முடியாத அளவிற்கு அதிகமாக இருக்கும் என்று நினைக்கிறேன். நம்முடன் அனைவரும் வலுவான நபர்களாக இருந்தால், அனைத்தையும் நாம் நிர்வகிக்க முடியும். நீங்கள் அனைவரும் அன்பில் வலிமையானவர்கள், மிகவும் வலிமையானவர்கள். உங்களில் ஒருவர் கூட வெளியேற விரும்பவில்லை.**

அந்த நாளின் பிற்பகுதியில், பாபா பழக்கவழக்கங்களைப் பற்றி கருத்துத் தெரிவித்தார்:

**ஒரு பழக்கவழக்கமாக உருவெடுக்கும் எதுவும் அதன் புத்துணர்வு, நேர்மை, உற்சாகம் போன்றவற்றை இழந்து விடுகிறது - மனம் வருந்துதல் கூட அப்படித்தான். நீங்கள் ஒவ்வொரு நாளும் தவறிழைத்து அதற்காக தினமும் மனம் வருந்துவதானால், இறுதியில் உங்கள் தவறே மனம் வருந்துவது போலாகிவிடும். அன்பு ஒன்றுதான் எப்பொழுதும் புதியதாக, புத்துணர்வோடு இருக்கும்.**

**கேள்விகள் எழுப்பி, சந்தேகிக்கும் பழக்கம், கடைசியில், கேள்விகளைக் கேட்பவருக்கு எதிராக வினைபுரிகிறது. விவேகானந்தர்**

**எப்பொழுதும் கேள்விகளைக் கேட்பதைப் பழக்கமாகக் கொண்டார்: "ஏன்? ஏன் இது? ஏன் அது?" ராமகிருஷ்ணர் அவரை மிகவும் நேசித்ததால் பதிலளித்தார். ஆனால் ஒரு நாள் அவர் அலுத்துப்போய் பதிலளிக்கவில்லை. விவேகானந்தர் மீண்டும் மீண்டும் கேட்டார், ஆனால் பதில் கிடைக்கவில்லை.**

**பின்னர் ஒரு நள்ளிரவில், "எனக்கு உணவை எடுத்து வாருங்கள்" என்று ராமகிருஷ்ணர் கூறி, அவர் சில வகையான உணவுகளின் பெயரைப் பட்டியலிட்டார். விவேகானந்தர் அந்த நேரத்தில், வீட்டில் உணவைக் கண்டுகொள்ள முடியவில்லை. ராமகிருஷ்ணர் உடனே அவரிடம், "ஏன்? அது ஏன் கிடைக்கவில்லை? இது ஏன் கிடைக்கவில்லை" என வினவ, விவேகானந்தர், "ஏனெனில், இப்போது இரவு பன்னிரண்டு மணி ஆகிறது! இது சாப்பிடுவதற்கான நேரம் அல்ல!" என்று கூறிய விவேகானந்தருக்கு, அவரது பதிலும் கிடைத்தது. அன்று முதல் அவர் மேலுமொரு கேள்வியை எழுப்பியதில்லை.**

**எனவே, பதிலளிக்கும் பழக்கத்தை உருவாக்கிய நான், இப்போது கேள்விகளைக் கேட்பேன், நீங்கள் அனைவரும் நேர்மையாக எனக்கு பதிலளிக்க வேண்டும். இங்கே உண்மையான நல்லிணக்கம் உள்ளதா?**

கடந்த ஆண்டு, எட்டாம் எட்வர்ட் மன்னர் (KING EDWARD VIII), வாலிஸ் சிம்ப்ஸன் (WALIS SIMPSON) என்பவரைத் திருமணம் செய்ய பிரிட்டிஷ் சிம்மாசனத்தைக் கைவிட்டார். அவரது தம்பி, ஆறாவது ஜார்ஜ் (GEORGE VI), 1937 மே 12 புதன்கிழமை 'வெஸ்ட்மின்ஸ்டர் அபே' (WESTMINSTER ABBEY) - இல் அரசராக முடிசூட்டப்பட்டார், மேற்கத்தியர்கள் முடிசூட்டு விழாவை பி.பி.சி. (BBC) வானொலியில் கேட்டனர்.

பாபாவும் சிறிது நேரம் அதைக் கேட்டு, "**இது அனைத்தும் மாயை - இடம், நேரம் இரண்டினாலும் பிணைக்கப்பட்ட மாயை**" என்று குறிப்பிட்டார். இருப்பினும், அன்பின் பொருட்டு, மன்னர் தனது அரியாசனத்தை விட்டுக்கொடுத்ததை அவர் பாராட்டினார்.

முடிசூட்டு ஒலிபரப்பை எட்வர்ட் கேட்கிறாரா என அவர்கள் கேட்டதற்கு, பாபா, "**ஆம், ஆனால் அவர் அதைப் பற்றி கவலைப்படுவதில்லை**" என்று கூறினார்.

கேன்டர்பரி பேராயரின் (CANTERBURY'S ARCHBISHOP) உரையின் போது, மெஹர் பாபா, "**அவர்கள்** (தேவாலயத்தில் உள்ளவர்கள்) **அனைவரும் நமது கர்த்தராகிய கிறிஸ்துவைப் பற்றி பேசுகிறார்கள், ஆனால் அவரை ஒருவரும் பின்பற்றுவதில்லை**" என்று கூறினார்.

விழாவிற்குப் பின்னர் அவர் அனைவருக்கும் விளக்கினார், "**எட்வர்ட் இப்போது அன்பைப் பின்தொடர்ந்து என்னை நோக்கி வரும் சுதந்திரமான நிலையில் இருக்கிறார். என்னிடம் வருவது என்பது தெய்வீக அன்பை,**

**கடவுள் மனித உருவில் இருக்கும்போதும் இல்லாதபோதும் பின்பற்றுவதற்கு சமமாகும்**.”

புதிய மன்னர் ஜார்ஜ் மற்றும் அவரது மனைவி எலிஸபெத் மஹாராணியைப் பற்றி பாபா கூறுகையில், “**குறைந்த பட்சம் அவர்கள் இருவருக்கும் நல்ல இதயங்கள் இருப்பது மக்களுக்கு ஒருவித ஆறுதலளிப்பதாக உள்ளது**” என்றார்.

ஜெஸவாலா குடும்பத்தினர் தங்கியிருந்த விருந்தினர் மாளிகையில் அன்று பாபா மதிய உணவு உண்டார், மேலும், குடும்பத்தில் ஒவ்வொருவருடனும் மனம் திறந்து பேசினார்.

1937 மே 13 அதிகாலை ஆதி சீனியருடன் பாபா நாசிக் நகரிலிருந்து புறப்பட்டு ஏழு மணிக்கு மெஹராபாத் வந்தடைந்தார். ஜெஸவாலா குடும்பத்தினர், கெய்மாய், அவரது சகோதரி ஷிரின் தமானியா ஆகியோருடன், அவர்களின் குழந்தைகளின் நிச்சயதார்த்தம் குறித்து பாபா பேசினார். மேலும் இரண்டு நாட்களுக்குப் பிறகு, திருமணம் குறித்த முடிவும் மெஹராபாத்தில் அனைவர் முன்னிலையிலும் தீர்மானிக்கப்பட்டது.

நாசிக் நகரில், பாபா 27, 28 தேதிகளில் ஜெஸவாலா குடும்பத்தினருடன் மேலும் உரையாடல்களை மேற்கொண்டார்; அவர்களிடையே இருந்த கருத்து வேறுபாடுகளையும் தீர்த்து வைத்து, உலகில் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம், அவர் அனைத்தையும் பார்த்துக்கொள்வதாக பாபா ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகக் கூறினார்; கெய்மாயிடம் பாபா, “**நான் ஒருபோதும் திட்டங்களை உருவாக்குவதில்லை, திட்டங்களை ஒருபோதும் மாற்றுவதுமில்லை. இது ஒரு திட்டமும் இல்லை என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கான ஒரு முடிவற்ற திட்டம்**” என்று குறிப்பிட்டார்

சிறிது காலத்திற்குப் பிறகு (1937 ஜூன்), நிச்சயதார்த்த விழா அஹமதுநகர், அக்பர் அச்சகத்தில் நடைபெற்றது. பாபா விழாவில் கலந்து கொண்டு கோர்ஷெத் ஜெஹாங்கிர் தமானியாவுடன் எரச்சின் திருமணத்தை நடத்தி வைத்தார், அதே நேரத்தில், அவர் எரச்சின் சகோதரி மெஹருவை கோர்ஷெத்தின் சகோதரர் ஸவக்குடன் திருமணம் செய்து வைத்தார். அன்று நடந்த சிறிய விழாவில் மேலை நாட்டினர் ஒரு சிலர் கலந்து கொண்டனர். பாபா தம்பதிகளுக்கு மாலை அணிவித்து, நெற்றியில் திலகமிட, பாபாவின் முன்னிலையில் மோதிரங்களை மாற்றிக்கொண்டனர். இரு குடும்பங்களின் விருப்பபடித் திருமணம் ஏற்பாடு செய்யப் பட்டாலும், எரச்சிற்குத் திருமணம் செய்து கொள்வதில் விருப்பம் இல்லை. எரச்சை, குடும்ப பிணைப்பிலிருந்து விடுவிப்பதற்காக, பாபா அவரை இந்தப் பிணைப்பில் நுழையச் செய்தார், ஆனால் பாபா வழிகாட்டிய முறையில் திருமணம் அவரை ஒருபோதும் ‘பிணைக்கவில்லை’. எரச் அவரது குடும்பத்தினருடன் பின்பு நாக்பூருக்குச் சென்று, அங்கு தனது கல்வியைத் தொடர்ந்தார்.

இக்காலகட்டத்தில், நாசிக் நகரில் பாபா, மேற்கத்திய அன்பர்களுடன் இருந்த போதெல்லாம், ஆசிரமத்தின் எதிர்காலம் குறித்த விவாதங்கள் தொடர்ந்தன. ஒரு நாள் காலையில் ஜீன் அட்ரியல், பாபாவிடம் சென்று, நோரினாவை மேலாளர் பொறுப்பிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக்கொண்டார். பாபா, நோரினாவை அழைத்து ஜீன் தனது கோரிக்கையை அவருக்கு முன்பாக மீண்டும் எடுத்து வைக்குமாறு கூறினார். நோரினா, மேலாளராக இருப்பதை அவர் விரும்புவதாக விளக்கிக் கூறினார், ஆனால் இந்தப் பொறுப்புக்கு ருவானோ சிறப்பாக இருப்பார் என்று ஜீன் வலியுறுத்தினார்.

நோரினா மதிய உணவிற்குப் பின்னர் அனைவரின் கருத்தையும் கேட்குமாறு பாபாவிடம் கேட்டுக்கொண்டார். எலிஸபெத்-நோரினாவின் அறையில் ஒரு சந்திப்புக்காக அனைவரும் அழைக்கப்பட்டனர். ஒவ்வொருவரும் தங்கள் கருத்தை நேர்மையாகத் தெரிவிக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டனர். வில், மேரி, எலிஸபெத் மூவரையும் தவிர, இதர அன்பர்கள் எப்பொழுதும் மாறுபட்ட கருத்துக்களுக்கு குரல் கொடுத்தனர். இவ்வாறு, அனைவரின் உணர்வுகளும் வெளிப்படுத்தப்பட்டு, தவறான எண்ணங்கள் அகன்றிட வழிவகுக்கப்பட்டது, இறுதியில் பாபா, ஜீனின் வேண்டுகோளுக்கு இணங்கி, வீட்டு விவகாரங்களை கவனிக்கும் மேலாளர் பொறுப்பை ருவானோவிற்கு வழங்கினார். நோரினா வரவு - செலவு கணக்கைத் தொடர்ந்து கையாண்டார்.

ஆனால் '**புதிய பரிந்துரைகள் வேண்டாம்**' என்று பாபா ஒரு முறை அவர்களுக்கு வலியுறுத்தியதை ஜீன் மறந்துவிட்டார். இந்த மாற்றங்கள் முழு ஆசிரமத்தையும் உடனடியாக மூடப்போவதன் முன்னறிவிப்பாகத் தோன்றியது. முந்தைய ஒரு சந்தர்ப்பத்தில், பாபா அவர்களுக்கு இவ்வாறு விளக்கினார்:

**துன்பம், பேரழிவு அல்லது துரதிர்ஷ்டங்கள் உங்கள் மீது வந்து குவியும்போது, மனம் தளரவோ, அஞ்சவோ வேண்டாம். இதன் மூலம் சகிப்புத்தன்மையையும் வலிமையையும் பெறுவதற்கான வாய்ப்பை அவர் உங்களுக்கு வழங்கியுள்ளார் என்ற உண்மையைப் புரிந்து, கடவுளுக்கு நன்றி கூறவேண்டும். துன்பங்களைத் தாங்கும் சக்தியை அடையப் பெற்ற ஒருவர் ஆன்மீக பாதையில் எளிதில் அடியெடுத்து வைக்க முடியும்.**

**கோபப்பட வேண்டாம், ஆனால் உங்களைப் புறம் கூறுபவரைக் கண்டு மகிழ்ச்சி அடையுங்கள், ஏனெனில் அவர் உங்கள் மனப்படிவங்களின் சுமையைக் குறைப்பதன் மூலம், உங்களுக்கு சேவை புரிகிறார். மேலும், அவருக்காக நீங்கள் பரிதாபப்பட வேண்டும், ஏனெனில், இதன் மூலம் அவர், தனது மனப்படிவங்களின் சுமையை அதிகமாக்குகிறார்.**

**எவரையும், எதையும் விமர்சிக்க வேண்டாம். நம் சக மனிதர்களை விமர்சிப்பது, கெட்ட பழக்கம். அதற்குப் பின்னால் பெரும்பாலும் தன்னொழுக்க வீறாப்பு, கர்வம் மற்றும் மேன்மையின் தவறான உணர்வு அடங்கி இருக்கும். சில நேரங்களில் அது பொறாமை அல்லது பழிவாங்கும் விருப்பத்தைக் குறிக்கும்.**

மேற்கத்திய அன்பர்களுடன் நடந்த ஒரு சந்திப்பின் முடிவில், அனைவரும் வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். பின்பு பாபா நகைச்சுவையாகக் குறிப்பிட்டார், "**எதிர்வினைகள் திருப்திகரமாக உள்ளன. ஆனால் எலிஸபெத் மறைந்துவிட்டார் அல்லது பரிபூரண நிலையை அடைந்துவிட்டார், ஏனெனில் அவர் எந்த வகையிலும் ஆதரவு அல்லது எதிர்ப்பைத் தெரிவித்ததாகத் தெரியவில்லை!**"

ஒரு நாள், அனைவரும் பாபாவைச் சுற்றி அமர்ந்திருந்த போது, அவர் மால்கம் பக்கம் திரும்பி, ஒவ்வொருவருக்கும் ஒரு காகிதம் மற்றும் பேனாவை வழங்கும்படிக் கட்டளையிட்டார். அப்போது பாபா, "**உங்கள் நினைவிற்கு எது வருகிறதோ அதை எழுதுங்கள்**" என்று அறிவுறுத்தினார்.

சிலர் நகைச்சுவையான விஷயங்களையும், சிலர் தீவிரமான எண்ணங்களையும் எழுதினர். ஒரு சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

"எனது முழு நேரமும் 'இதுவெல்லாம் என்ன!' என்ற ஆச்சரியத்தில் கழிந்தது. கண்ணிமைக்கும் நேரத்தில், நேர்த்தியாகக் கட்டப்பட்ட பொட்டலத்தை அனுப்ப உத்தரவிடுவது போல் உணர்கிறேன்!" - (கையொப்பமிடாதது)

"மிக முக்கியமான ஒரு விஷயம் என்னவெனில், இன்றைய நாள் மிகவும் மகிழ்ச்சியான நாள். பாபா இங்கே இருப்பதால், என் உலகம் முழுமையானது போல் உணர்கிறேன்." - நான்னி

"அன்பு, உலகை சுழலச் செய்வதாகக் கூறப்படுகிறது. அன்பான பாபாவை நேசிப்பது, அதை இன்னும் வேகமாக சுழலச் செய்கிறது!" - ரானோ

இந்தியாவில் தங்கியிருப்பதன் நன்மை, தீமைகள் பற்றி மீண்டும், விவாதிக்கப்பட்டது; மேலும் எதிர்காலத் திட்டங்கள் குறித்த இறுதி கூட்டம் 1937 மே 18 அன்று நடைபெற்றது. '**மெஹராபாத்தில் தங்கியிருப்பது மேற்கத்தியர்களுக்கு நடைமுறையில் சாத்தியமற்றது**' என்று பாபா வலியுறுத்தினார். இத்தாலி, குறிப்பாக போர்டோஃபினோ, கிழக்கு மற்றும் மேற்கத்தியர்களுக்கு மிகவும் உகந்ததாகக் கருதப்பட்டது.

அன்று மாலை, மெஹர் பாபா அனைவரையும் வெளியே புல்வெளியில் அழைத்தார். இத்தாலியில் ஆசிரமம் ஒன்றை நிறுவுவதற்கான புதிய திட்டம் குறித்த கலந்துரையாடலில், குழுவில் ஒருவர், அதை இரகசியமாக வைத்திருக்க வேண்டுமா, அல்லது அதைப் பற்றி, பிற அன்பர்களுக்கு எழுதலாமா என்று கேட்டார். அப்போது பாபா, '**ரகசியம் ஏற்கனவே வெளியாகிவிட்டது**' என்பதை எடுத்துரைத்து, பின்வரும் கதையை விவரித்தார்:

**பெண்கள் ஒருபோதும் ரகசியங்களைப் பாதுகாக்க முடியாது என்று பழமொழி ஒன்று உண்டு. பண்டைய பெர்சியாவில் ஒரு மனிதர் தனது மனைவியை மிகவும் நேசித்தார், எல்லாவற்றையும் அவரிடம் பகிர்ந்துகொள்வது வழக்கம். அனைத்தையும் மனைவியிடம் சொல்ல வேண்டாம் என அவரது நண்பர் அவருக்கு அறிவுறுத்தினார், அதற்கு அவர், "எனது மனைவி மிகவும் நம்பகமானவர்" என்று பதிலளித்தார்.**

நண்பர் உடனே, "சரி, அப்படியானால் நான் சொல்வது போல செய்து உங்கள் மனைவியை சோதித்துப் பாருங்கள்" என்றார்.

அந்த நபர் வீட்டிற்குச் சென்று, மனைவியிடம் அவர் ஏதோவொன்றைப் பற்றி மிகவும் பயப்படுவதாகப் பாசாங்கு செய்தார். அது என்ன என்று மனைவி கேட்டபோது அவர், "என்னால் அதைச் சொல்ல முடியாது, இது வாழ்விற்கும், சாவிற்கும் இடையிலான விஷயம்" என்றார். மனைவி எவ்வளவோ வற்புறுத்தியும் அவர் மீண்டும் மீண்டும் மறுக்கவே, மனைவி அதைத் தெரிந்து கொள்வதில் மிக்க ஆர்வமாக இருந்தார். கடைசியாக, "நான் உங்களுக்குச் சொல்கிறேன், ஆனால் அதை ரகசியமாக வைத்துக்கொள்ளுங்கள். மன்னனுக்குத் தெரிந்தால், அவர் எனது தலையைத் துண்டித்துவிடுவார்!" என்றார். மனைவி உறுதியளித்தார், "நான் எனது சொந்த வாழ்க்கையை விட உங்களை நேசிக்கிறேன். இதை நான் யாரிடம் சொல்ல முடியும், உங்கள் தலைதான் துண்டிக்கப்படுமே?"

"சரி, இன்று நான் மன்னனின் அரண்மனையைக் கடந்து சென்றபோது, மன்னனின் தோளிலிருந்து ஒரு காகம் வெளியே வந்ததைக் கண்டேன். இதை யாரிடமும் சொல்லாதே!" என்றதும் மனைவி "மாட்டேன்" என்று உறுதியளித்தார்.

அந்தக் கணவன் மறுநாள் வேலைக்குச் சென்று, மாலையில் திரும்பியபோது சில பெண்கள் கிசுகிசுத்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அவரைப் பார்த்ததும், "இதோ, 40 காகங்கள் மன்னனின் தோளிலிருந்து வெளியே பறந்ததைக் கண்டவர் இவர்தான்!" என்றனர்.

கணவர் வீட்டிற்கு வந்ததும் தனது மனைவியிடம், "நான் ஒரு காகம் என்றுதான் சொன்னேன், ஆனால், அது இப்போது 40 ஆனது!" என்றார்.

"எனவே நம் ஏழ்மையான 'போர்டோஃபினோ' ரகசியம் ஏற்கனவே உலகின் காதுகளை எட்டிவிட்டது" என்று பாபா கூறி முடித்தார், அதாவது சிலர் இதைப் பற்றி ஏற்கனவே எழுதியிருக்கிறார்கள்.

மே 19 அன்று நாசிக் நகரில் மதிய உணவிற்குப் பிறகு, மெஹர் பாபா குழுவில் சிலருக்கு மாம்பழங்களை வழங்கினார். சிலர், வயிற்றுக் கோளாறு என்ற சாக்குபோக்கில் மறுத்துவிட்டனர்; பாபா இதை விரும்பாமல் இவ்வாறு எழுத்துப்பலகையில் உச்சரித்தார்:

தானாக வராதது ஒருபோதும் வராது! மாம்பழங்களை நான் உங்களுக்கு வழங்கிய போது, உங்களில் எத்தனை பேர் மறுத்துவிட்டீர்கள், உங்களில் எத்தனை பேர் தயங்கினீர்கள்? உண்மையாகச் சொன்னால், அன்பையும் நம்பிக்கையையும் சோதிக்க பல வழிகள் உள்ளன. அன்பு எப்பொழுதும் அன்பிற்குரியவரின் விருப்பம், மகிழ்ச்சி, இன்பம் மற்றும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதையே அது நாடும். அன்பு ஒருபோதும் தன்னை நினைப்பதில்லை; அதுவே காதல், அதுவே கடவுள். கடவுள்

நித்தியமாகக் கொடுக்கிறார். அன்பும் அதுபோலக் கொடுக்கிறது; காதலன் ஒருபோதும் எதையும் எதிர்பார்ப்பதில்லை.

முதலில் நான் அழுகிய மாம்பழங்களை உங்களுக்கு வழங்க விரும்பினேன்! ஆனால் உங்களில் ஒருவர் கூட விருப்பத்துடன் அதை ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார் என்று எனக்குத் தெரியும். இப்பொழுதும் நீங்கள் அனைவரும் கடவுளுக்காக இறப்பதைப் பற்றி பேசுகிறீர்கள்! நேர்மையாக இருங்கள். நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள் என்று சொல்லும்போது - உண்மையாக நேசிக்கவும்.

ராம்தாஸ், கல்யாண் இவர்களைப் பற்றி நான் சொன்ன கதை உங்களுக்கு நினைவில் இல்லை; ராம்தாஸின் முழங்காலில் கட்டப்பட்ட மாம்பழத்தை, விஷம் என்று நினைத்து கல்யாண் எப்படி உறிஞ்சினார்? இது அன்பு: அன்பிற்குரியவரின் அன்பிற்காக - அன்பானவரின் மகிழ்ச்சிக்காக உயிரை விடவும் தயாராக இருக்க வேண்டும்.

பேச்சின் தலைப்பை மாற்றி, பாபா, இயேசு மற்றும் அவருடைய சீடர்களான பீட்டர் (PETER), யூதாஸ் (JUDAS) இவர்களைப் பற்றி விளக்கினார்:

இப்போது பார்ப்போம், கிறிஸ்து என்பவர் யார்? தனிப்பட்ட ஆத்மா. இயேசு என்பவர்? நாசரேத்தின் அவதார புருஷர். கிறிஸ்து என்றால் என்ன? கடவுளின் மைந்தன்; அதாவது கடவுள் மனித உருவில் வருவது!

யூதாஸ், இயேசு கிறிஸ்துவின் உலகளாவிய பணியில் அவருக்கு உதவினார். கிறிஸ்து சிலுவையில் அறையப்படாவிட்டால், பிரபஞ்சத்தின் சுமையை அவர் தன் மீது ஏற்றிருக்க முடியாது. இயேசுவே தம்மை, சிலுவையில் அறையப்படும் அந்த சூழ்நிலையை உருவாக்கினார்.

பீட்டர், இயேசுவை மிகவும் நேசித்தார். இயேசுவின் அன்பு அனைவருக்கும் ஒரே மாதிரியாக இருந்தாலும், இயேசுவும் அவரை மிகவும் நேசித்தார். இதை எப்படி விளக்க முடியும்? அனைவரையும் ஒன்றுபோல நேசிக்கிறீர்கள், இருந்தும் சிலரை சற்று அதிகமாக நேசிக்கிறீர்கள். எப்படி? இது உடலின் வெவ்வேறு உறுப்புகளைப் போன்றது: அவை அனைத்தும் உங்களுக்குச் சொந்தமானது, ஆனால் நீங்கள் சில உறுப்புகளை இதர உறுப்புகளை விட அதிகமாக விரும்புகிறீர்கள். உதாரணமாக, கண்கள் உங்கள் விரல்களை விட மிகவும் பிரியமானவை. இப்போது புரிகிறதா?

இந்த விதத்தில் இயேசு, பீட்டரை மிகவும் நேசித்தார். பீட்டர் அவரது கண்கள். "நீங்கள் என்னைக் காட்டிக்கொடுப்பீர்கள்" என்று இயேசு, பீட்டரிடம் கூறியபோது, தான் மிகவும் நேசித்த தன் குருநாதரைக் காட்டிக் கொடுக்கப் போவதாக, பீட்டர் அறிந்திருந்தார்; ஆனாலும் அவர் அதைத் தைரியமாகத் தாங்கிக்கொண்டார்.

இது மிகவும் கடினமான காரியம்: அவர் துரோகம் செய்யப்போவதை அறிந்திருந்தும், பலவீனமடையக்கூடாது என்பதை அறிவது மிகவும்

கடினமான காரியம். இயேசு, அவரது உலகளாவிய பணிக்காக, பீட்டர் துரோகம் செய்யப்போகிறார் என்பதை அறியச் செய்தார்.

இயேசு, யூதாஸையும் துரோகம் செய்ய வைத்தார். பீட்டர் விருப்பத்துடன் அந்தத் துரோகத்தைச் செய்தார். நீங்கள் காட்டிக் கொடுக்கும் ஒருவரை நீங்கள் நேசிக்கும்போது - இது மிகவும் கடினமான செயல். உதாரணமாக, நீங்கள் (பாபா ஒருவரை சுட்டிக்காட்டி) பீட்டர், என்னை மிகவும் நேசிக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் (பாபா, இன்னொருவரைக் காட்டி) யூதாஸ். நீங்கள் இருவரும் என்னைக் கொல்ல வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இப்போது நீங்கள், பீட்டர், என்னைக் கொல்லும்படி தூண்டப்படுகிறீர்கள். நீங்கள் விருப்பத்துடன் அவ்வாறு செய்ய மாட்டீர்கள். என்னை நீங்கள் கொல்லும்படி கேட்கப்படுகிறீர்கள், உங்கள் வாழ்க்கையை விட நீங்கள் என்னை அதிகமாக நேசிக்கிறீர்கள். ஆனால் எனது பணிக்காக நீங்கள் என்னை அன்புடன் கொல்வீர்கள்.

அர்ஜுனன் கூட, பீட்டரைப் போல் இருக்க முடியாது. ஏனெனில் போரில் தனது சகோதரர்களையும் உறவினர்களையும் கொல்வதற்கு முன்பு, கிருஷ்ணர் தனது உலகளாவிய உண்மை ரூபத்தைக் காட்ட வேண்டியிருந்தது.


நீங்கள் யூதாஸ், (இன்னொருவரைச் சுட்டிக்காட்டி) என்னை மிகவும் நேசிக்கிறீர்கள். இப்போது நான் எனது திறவுகோலைத் திருப்புகிறேன், எனது பணிக்காக நீங்கள் எனக்கு எதிராகச் செல்கிறீர்கள். உங்கள் சொந்த விருப்பப்படி நீங்கள் எனக்கு எதிராகச் செல்லமாட்டீர்கள். என்னைப் பற்றி மக்களுக்குச் சொல்லும் பொருட்டு நான் உங்களை, எனக்கு எதிராகச் செல்லும்படிச் செய்கிறேன். நீங்கள் கூறுவதைக் கேட்கும் மக்கள், என்னை அடித்து சிலுவையில் அறைவார்கள் என்பதை அறிந்து, நீங்கள் அதை விருப்பத்துடன் செய்கிறீர்கள்.

இவை அனைத்தும் அன்பு, நம்பிக்கை மற்றும் தியாகம் என்று பொருள்படும். நான் கேட்பதை நீங்கள் விருப்பத்துடன் செய்தால், நீங்கள் என்னை மிகவும் நேசிக்கிறீர்கள் என்று அர்த்தம். நான், நீங்கள் அதைச் செய்யுமாறு கூறியும் செய்யாவிட்டால், நீங்கள் என்னை சற்று குறைவாக நேசிக்கிறீர்கள் என்று அர்த்தம். ஆனால் நீங்கள் அதைச் செய்யாவிடில், நான் மாம்பழங்களை உங்களுக்கு வழங்கியபோது, நீங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளத் தயங்கிய நிலையில், இது இன்றைய மாம்பழ வியாபாரமாக மாறிவிடும்.

பாபா இவ்வாறு கூறி முடித்தார், **“கடவுளின் கருணை, உங்களை, என்னை நேசிக்க வைக்கிறது. என் அருள் உங்களை என்னுடன் ஒருவராக ஆக்குகிறது.”**



ஜீன் அட்ரியல் (JEAN ADRIEL), ஃபிரீனி (FREINY), கிட்டி (KITTY), டிலியா (DELIA),
பாபா (BABA), மார்கரெட் (MARGARET), நோரினா (NORINA) - நாசிக் (NASIK)



முகமது மஸ்துடன் பாபா, ராஹுரி
WITH MOHAMMED MAST AT RAHURI

மறுநாள், பாபா நாசிக் நகரிலிருந்து புறப்பட்டு, மெஹராபாத்திற்கு வந்தார். ஆறு நாட்களுக்குப் பிறகு, மே 26 அன்று மறுபடியும், அவர் எதிர்பாராத விதமாக நாசிக் வந்தார். டிலியா, ஜீன், வில், மல்யா அவர்களின் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், பாபா அவர்களைப் பார்க்க ஸர்ஸாத்திற்குச் சென்றார். நாள் முழுவதும் மிகவும் அதிகமாக இருந்த டிலியாவின் உடல் வெப்பநிலை திடீரென இயல்பு நிலைக்கு வந்தது. பாபா, எழுத்துப்பலகையில் விரல்களை விரைவாக நகர்த்தி, "**வாருங்கள், விரைவாக வாருங்கள், படைவீரர்களின் அணிவகுப்பு போல நடந்து செல்வோம்!**" என்று சுட்டிக்காட்டினார். இது அவர்கள் விரைவில் நாசிக்கை விட்டு வெளியேறி வேறு எங்காவது செல்லவிருக்கிறார்கள் என்று அர்த்தம்.

மெஹர் பாபா சில நாட்கள் நாசிக்கில் தங்கியிருந்தார், மே 28 காலை சிற்றுண்டிக்கு முன்னர், அவர் அன்பைப் பற்றிய இந்த சொற்பொழிவை வழங்கினார் (இதை நதீன் எழுதிக்கொண்டார்):

**அன்பு என்றால் என்ன? கொடுப்பதுதான் அன்பு; கேட்டு வாங்குவது அல்ல! இந்த அன்பிற்கு வழிவகுப்பது எது? கருணை. இந்தக் கருணைக்குக் காரணியாக இருப்பது எது? கருணை இலகுவாக, மலிவான விலையில் வாங்கப்படுவதல்ல. எந்நேரமும் சேவை செய்யத் தயாராக இருப்பதன் மூலமும், சேவையை ஏற்றுக்கொள்ளத் தயங்குவதன் மூலமும் இது பெறப்படுகிறது.**

**இந்த அருளைப் பல வழிகளில் அடையப் பெறலாம்:**

- **ஒருவர் தன்நலம் கருதாமல் பிறர் நலனைக் கருத்தில்கொண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பது;**
- **புறங்கூறாமை;**
- **மேம்பட்ட சகிப்புத்தன்மை;**
- **கவலைப்படாமல் இருக்க முயற்சிப்பது (இது கிட்டத்தட்ட சாத்தியமற்றது, ஆனால் எப்படியேனும் முயற்சிக்கவும்);**
- **பிறரின் நல்ல விஷயங்களை அதிகமாக நினைத்து, தீயதைக் குறைவாக நினைப்பது.**

**'உங்கள் அண்டை வீட்டாரை நேசியுங்கள்' என்று கிறிஸ்து சொன்னபோது, அவர்களோடு காதற்செயலில் ஈடுபடுவது என்று அர்த்தமல்ல. மேலே கூறிய ஏதாவது ஒன்றை நீங்கள் செய்தால், மீதமுள்ளவை, தானாகவே, சரியான முறையில் பின்தொடர்ந்து வரும். பின்னர் இறைவனின் அருள்மழைப் பொழியும். அன்புடன் இருங்கள்; அன்பு இருக்கும்போது, அன்பிற்குரியவருடன் ஒன்றிணைவது நிச்சயம். நீங்கள் நேசிக்கும்போது, கொடுக்கிறீர்கள். அது காதற்செயலாக மாறும்போது, நீங்கள் பெற விரும்புகிறீர்கள். நீங்கள் விரும்பும் எந்த விதத்திலும் என்னை நேசிக்கவும், ஆனால் என்னை நேசிக்கவும். இது எல்லாம் ஒன்றுதான். என்னை நேசியுங்கள். நான் தூய்மையானவன், தூய்மையின் ஆதாரம்,**

எனவே என் அன்பின் நெருப்பில் உங்கள் அனைத்து பலவீனங்களையும் நான் அகற்றிவிடுகிறேன்.

உங்கள் பாவங்கள், பலவீனங்கள், நல்லொழுக்கங்கள் அனைத்தையும் எனக்குக் கொடுங்கள் - ஆனால் கொடுங்கள். ஒருவர் என்னைக் காதலிப்பதையும், காதற்செயல் செய்வதையும் நான் பொருட்படுத்த மாட்டேன்; நான் அதை சுத்திகரிக்க முடியும். ஆனால் நீங்கள் வேறு யார் ஒருவரையும் காதலிக்கும்போது அல்லது காதற்செயலில் ஈடுபடும்போது அதை அன்பு என்று அழைக்க முடியாது.

அன்பு, கடவுளைப் போலத் தூய்மையானது. அது ஒருபோதும் கேட்பதில்லை; அதற்கு இறைவனின் அருள் தேவை.

இமயமலையில் உள்ள யோகிகள், நீண்ட கண் இமைகள் மற்றும் தாடியுடன் பல ஆண்டுகளாக, தியானம் செய்து சமாதியில் அமர்ந்தும், அவர்களிடம் இந்த அன்பு இருப்பதில்லை. அது மிகவும் விலைமதிப்பற்றது. தாய் தனது குழந்தைக்காக உயிரைவிடுகிறார் - உன்னதமான தியாகம் - இருந்தும் அது அன்பு அல்ல. வீரர்கள் தங்கள் நாட்டிற்காக உயிரைத் தியாகம் செய்கிறார்கள், ஆனால் அதையும் அன்பு என்று கூற முடியாது.

அன்பு என்ன என்பதை, அது உங்களிடம் உள்ள போது தான் அறிந்துகொள்ள முடியும். நீங்கள் அதை அறிவளவில், கோட்பாட்டு முறையில் புரிந்து கொள்ள முடியாது, நீங்கள் அதை அனுபவிக்க வேண்டும்.

மஜ்னுன் லைலாவை நேசித்தார். இது தூய்மையான அன்பு, உடலளவில் அல்ல, அறிவார்ந்த அன்பும் அல்ல, ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்ட அன்பு. எல்லாவற்றிலும் எல்லா இடங்களிலும் மஜ்னுன், லைலாவைப் பார்த்தார். அவரைப் பற்றி சிந்திக்காமல் உண்ணுவது, அருந்துவது, உறங்குவது என்று அவர் ஒருபோதும் நினைத்ததில்லை. எல்லா நேரத்திலும் அவர் லைலாவின் மகிழ்ச்சியையே விரும்பினார். லைலா வேறொருவரை மணந்து, மகிழ்ச்சியாக இருப்பார் என்று அவருக்குத் தெரிந்திருந்தால், அதையும் சந்தோஷமான ஒன்றாகப் பார்த்திருப்பார்.

கடைசியில், அது மஜ்னுனை என்னிடம் அழைத்து வந்தது. நீங்கள் நேசிக்கும்போது சுயத்தைக் குறித்த எந்த சிந்தனையும் இல்லாமல், ஒவ்வொரு நொடியும் தொடர்ந்து, பிரியமான இறைவனையே நினைக்க வேண்டும்.

நீங்கள் முயற்சித்தாலும் இந்த அன்பை நீங்கள் பெற முடியாது. அதற்கு அவன் அருள் தேவை. ஆனால் முயற்சி திருவினையாக்கும்!

கடவுள் என்றால் என்ன? அன்பு. அளவிறுதியற்ற அன்பு.

அந்த நாள் பிற்பகலில், பாபா குழுவை பதினைந்து நிமிடங்கள் தியானிக்க அழைத்தார். அன்று மாலை உணவிற்கு முன்னதாக, 'மாறுபட்ட சிறப்பு உடை அணிந்து விருந்திற்கு வருமாறு' அனைவரையும் அனுப்பி

வைத்தார். நோரினாவும் எலிஸபெத்தும் சியாமி இரட்டையர்களைப் (SIAMESE TWINS) போல் ஒரே உடையணிந்து வந்தனர்.

நோரினா, எலிஸபெத் இருவரும் முதல் பரிசை வென்றனர். இரண்டாவது பரிசு சூனியக்காரியாக உடையணிந்த மார்கரெட்டுக்குச் சென்றது. டிலியா, ஸ்பானிஷ் நாட்டு ஃபிளெமிங்கோ நடனக் கலைஞராக (SPANISH FLEMENCO DANCER) மூன்றாவது இடத்தைப் பிடித்தார். ஐஸ்கிரீம், கேக் அனைவருக்கும் வழங்கப்பட்டது. பின்பு, பாபா அவர்களை பிரதான அறைக்கு அழைத்து எதிர்வரும் ஐரோப்பிய பயணத்திற்கான தனது திட்டங்களைப் பற்றி விவாதித்தார்.

ஃபிரான்ஸ் (FRANCE) நாட்டின் தெற்குப் பகுதியில் அமைந்த கேன்ஸ் (CANNES) நகருக்குச் செல்ல முடிவு செய்யப்பட்டது; மேலும் கிட்டி, மார்கரெட், டிலியா, வில், மேரி, டாம் ஆகியோரிடம் ஜூன் மாதம் இங்கிலாந்திற்குத் திரும்புமாறு பாபா அறிவுறுத்தி, கிட்டியிடம் கேன்ஸ் நகரில் மூன்று வாடகை வீடுகளை ஏற்பாடு செய்யுமாறு கூறினார் - ஒன்று பாபா மற்றும் இந்திய பெண் மண்டலிக்கு, இரண்டாவது ஆண் மண்டலிக்கு, மூன்றில் ஒரு பகுதி மேற்கத்திய அன்பர்களுக்கு. இவ்வாறு, மற்றுமோர் ஐரோப்பிய பயணத்திற்குத் தேவையான அடித்தளம் அமைக்கப்பட்டது, நாசிக் ஆசிரமத்தின் நாட்கள் எண்ணப்பட்டன.

மறுநாள் காலை நான்கு மணிக்கு, மெஹர் பாபா, ஆதி சீனியர், டாக்டர் நீலு, பகீரத் மூவருடன் மெஹராபாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். மேற்கத்திய அன்பர்களின் கப்பல் பயணம் மற்றும் ஹோட்டல் அறைகளையும் முன்பதிவு செய்ய, சாஞ்சி மும்பைக்கு அனுப்பப்பட்டார். பாபா, குஷ்ரு குவாட்டர்ஸில் குல்மாய், பிரோஜா, இந்து ஸப்னிஸ், ஸரோஷ், அவரது சகோதரர் தீன்ஷா குடும்பத்தினரை சந்தித்தார். மெஹராபாத் திரும்புவதற்கு முன்பு ஸரோஷ் சினிமாவில் ('டு மேரி - வித் லவ்' - 'TO MARY – WITH LOVE') திரைப்படத்திற்குச் சென்றார்.

மெஹர் பாபா தொடர்ந்து கீழ் மெஹராபாத்தில் அமைந்த மஸ்த் ஆசிரமத்திற்கு வந்து, சுமார் 23 உள்வாசிகளை முடித்திருத்தம் அல்லது மொட்டையடித்து, நீராட்டி தனது கைகளால் உணவு ஊட்டினார். ராஹுரியில் இருந்ததை விட இங்குள்ள தண்ணீர் மற்றும் பிற ஏற்பாடுகள் மிகவும் வசதியாக இருந்தன. வெளியிலிருந்து பொருட்களை வாங்கி வழங்குவதும் எளிதாக இருந்தது. ஒருமுறை, முஹமது மஸ்தை நீராட்டி உணவளிக்கும் போது, பாபா சொல் ஜாலத்துடன் "**முஹமதின் தாய் யார்?**" என்று வினவ, "**பாபா, முஹமதின் தாயார்**" என்று அவர் சைகையால் தெரிவித்தார்.

ராமச்சந்திர காடேக்கர் மூலமாக மெஹர் பாபாவைப் பற்றி கேள்விப்பட்ட, ஷோலாபூர் நகரைச் சேர்ந்த பகவத் (BHAGAVAT) எனும் பள்ளிக்கூட ஆசிரியர் மே 31 அன்று தனது மகனுடன் பாபாவை சந்திக்க வந்தார். சிறுவன் எதுவுமே பேசாமல் நின்ற வேளையில், தந்தை அவனைப் பற்றிய சில சம்பவங்களை விவரித்தார், இது அவன் ஆன்மீக ரீதியில் முன்னேறியதாக

நம்புவதற்கு வழிவகுத்தது. பாபா, சிறுவனை விரும்பினார், சிறுவனும் பாபாவை விரும்பினான், ஆனால் அவன் மெஹராபாத்தில் தங்குவதற்கு, தந்தை இணங்கவில்லை.

மெஹராபாத்தில், மெஹர் இலவச மருத்துவமனை 1937ஆம் ஆண்டு ஜூன் 1ஆம் நாள் முதல், டாக்டர் நீலுவின் மேற்பார்வையின் கீழ், மீண்டும் இயங்கத் தொடங்கியது. இது மூங்கில் சுவர்களின் தனித்தனி கட்டமைப்பில், கீழ் மெஹராபாத்தின் முன்புறத்தில் அமைக்கப்பட்டிருந்தது. டாக்டர் கனி அன்று அவரது நோன்பை நிறுத்திவிட்டு சாதாரணமாக உணவு உண்ண ஆரம்பித்தார். மெஹராபாத்திற்குத் தேவையான பொருட்களை வாங்க ராவ்ஸாஹேப் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் அஹமதுநகர் பஜாருக்குச் சென்றார்; பைதூல், பிளீடர் இருவரும் முன்பு போலவே தொடர்ந்து ஆசிரமத்தை மேற்பார்வையிட்டனர்.

தர்மசாலை கட்டிடத்தின் மேற்கு பகுதியில் அமைந்த தற்காலிக அறைகளில் டாக்டர் நீலுவுடன் மேலும் சிலர் தங்கியிருந்தனர். பெரும்பாலான மண்டலி குவாட்டர்ஸின் நீள் வராந்தாவில் தூங்கினர். ஒவ்வொருவரின் உடைமைகளும் படுக்கைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்தன.

ஜூன் 3 அன்று மேற்கத்திய அன்பர்கள் மெஹராபாத்திற்கு விஜயம் செய்து, அன்றைய இரவை அங்கே கழித்தனர். ஸாம் கோஹெனைத் தவிர அனைவரும் மறுநாள் இரவு நாசிக் திரும்பிச் சென்றனர்; அவர் ஆசிரமத்தில் இருந்து, பத்து நாட்கள் மண்டலிக்கு உதவ அனுமதிக்கப்பட்டார். துலியாவைச் சேர்ந்த மானேக்கரும் (MANEKAR) அங்கு வந்திருந்தார்.

1937 ஜூன் 6 அன்று பாபாவின் பள்ளிப்பருவ நண்பர் பெய்லி, மெஹராபாத் வந்தபோது, அவருடைய தனிப்பட்ட காரணங்களுக்காக, பாபா பெய்லியை சற்று தூரத்தில் வைத்திருந்தார்; ஆனால், பாபா அவரை மிகவும் நேசிக்கிறார் என்பது அனைவருக்கும் தெரியும். பெய்லி வந்த வேளையில் பாபா, ஸாம் கோஹென், சுவாமிஜியின் உதவியுடன் முஹமது மஸ்தை நீராட்டிக் கொண்டிருந்தார். முஹமது தனது மேலாடையை அணிய மறுத்து, நிர்வாணமாக நின்று கொண்டிருந்தார். முஹமதைக் குறித்து பாபா கருத்துத் தெரிவிக்கையில், "**இங்கு வாழும் அனைத்து உள்வாசிகளில், நான்கு பேர் மட்டுமே ஆன்மீக பாதையில் அடியெடுத்து வைத்துள்ளனர், அவர்களில் முஹமதும் ஒருவர்**" என்றார்.

அந்த நாளின் பிற்பகுதியில், சாஞ்சி, ஸரோஷ் ஆகியோருடன் பாபா, நாசிக் புறப்பட்டுச் சென்றார். ருஸ்தம், இரண்டு மகன்களுடன் தனது காரில் பின்தொடர்ந்தார்.

ஜூன் 8 அன்று மெஹர் பாபா மேற்கத்திய குழுவிற்கு விளக்கினார்:

**நறுமணம் வீசும் எல்லா பொருட்களும் நல்லதல்ல. நீங்கள் மனதை கவனமாக வழிநடத்தும் போது எந்தக் கவலையும் இல்லை. ஆனால் இது**

**மிகவும் கடினம். எல்லாவற்றிற்கும் மேலாக, இதனால் என்னவாகிவிடும்?**

**மனம் அதன் முழு உணர்வு நிலையில், செயலிழந்து நின்றுவிடும்போது, புரிந்துகொள்ள முடியாத அளவிற்குப் பேரின்பம் நிலவும். அந்தப் பேரின்பத்தை ஒருவர் விவரிக்க முடியாது. (அந்த நிலை) இறை உணர்வை அடைந்த நிலை அல்ல, அதற்கு ஒரு படி முன்.**

**மனித மனம் வேகமாகச் செயல்படுகிறது. கட்டுப்பாடற்ற மனம், ஒருவரின் ஆன்மாவிற்குப் பேரழிவை ஏற்படுத்துகிறது. ஆனால்** (டிலியாவைக் கேலி செய்வது போல, பாபா) **உங்கள் கட்டுப்பாடற்ற மனம் எனது தலைமுடிக்கு அழிவை ஏற்படுத்துகிறது.**

**என் மனம் கடல் போன்றது, நல்லது, தீயது, பிரபஞ்சத்தின் அனைத்து அசுத்தங்களும், நற்பொருட்களும் அதில் வந்து சேருகின்றன. உங்களின் நல்ல, தீய எண்ணங்கள் அனைத்தையும் நான் உள்வாங்குகிறேன். ஒரு சிறிய குட்டை நீரில் அசுத்தம் சென்றடைந்து தண்ணீரை மாசுபடுத்துகிறது. ஆனால் இந்த நல்ல, தீய எண்ணங்கள், சமுத்திரம் மிகப் பெரியதாக இருப்பதால், அதைச் சென்றடைந்தாலும், சமுத்திரத்தை அசுத்தப்படுத்தாமல் தானே அடித்துச் செல்லப்படுகின்றன. உங்கள் மட்டுப்படுத்தப்பட்ட மனம், சில தீய எண்ணங்களுடன் தேங்கி நிற்கிறது, ஆனால் உலகளாவிய தீய எண்ணங்கள் கூட, எனது கடல் போன்ற மனதை பாதிக்காது.**

1937, ஜூன் முதல் வாரத்தில் சில நபர்களை ஐரோப்பாவிற்குத் திருப்பி அனுப்ப பாபா முடிவு செய்திருந்தார். வில், மேரி பேக்கெட் இருவரும் முதலில் மும்பைக்கு அனுப்பப்பட்டனர்.

ஆதி சீனியருடன் காரில் பாபா, கிட்டி, டிலியா மற்றும் மார்கரெட் சென்றனர். நோரினா, எலிஸபெத் இருவரும் பின்தொடர்ந்தனர். அனைவரும் காக்காவின் இல்லத்தில் தங்கினர். எதிர்வரும் பிரிவைப் பற்றி நினைப்பதைத் தடுக்க, பாபா அன்றிரவு அவர்களை ஒரு திரைப்படத்திற்கு அழைத்துச் சென்றார்.

1932, ஜூன் 10ஆம் நாள், ஹாலிவுட்டில் பாபாவை சந்தித்த எஸ்ரா மிர் (EZRA MIR) என்ற இயக்குனர் அவரைப் பார்க்க வந்தார். மிர், ஐரோப்பாவில் கேப்ரியல் பாஸ்கலை சந்தித்த வேளையில் அவர் பாபாவைத் தொடர்பு கொள்ள ஊக்குவித்தார். பாபா அவரை நாசிக்கிற்கு வரவழைத்து, அவருடன் நீண்ட நேரம் உரையாடினார்.

ஜூன் 11ஆம் நாள், பாபா, மும்பையிலிருந்து நாசிக் வழியாக மெஹராபாத்திற்குப் புறப்பட்டார்; மேலும் ஐந்து ஆங்கிலேய அன்பர்கள், 12ஆம் தேதி ராவல்பிண்டி வழியாக லண்டனை நோக்கி பயணம் செய்தனர்; ஆறு மாதங்களுக்கு முன்னர் இந்தியாவிற்கு அவர்களை அழைத்துவந்த அதே கப்பல். ஏறக்குறைய 50 மும்பை பக்தர்கள் அவர்களை அன்புடன் வழியனுப்பி

வைத்தனர். பத்திரிகை, புகைப்படக் கலைஞர்கள் மற்றும் நிருபர்களும் கூடி இருந்தனர்.

அடுத்த நாள், மேற்கத்திய அன்பர்களிடமிருந்து தொலைத்தந்தி வந்தது: “உங்கள் கட்டளைகளை ஏற்று நாங்கள் புறப்படுகிறோம், ஆனால் பிரியமான பாபா, எங்கள் இதயங்களை உங்களிடம் விட்டுச் செல்கிறோம்.”

மெஹர் பாபா, ஃபிரான்ஸ் நாட்டின் கேன்ஸ் நகருக்குச் செல்லும் விரிவான திட்டங்களை வகுத்திருந்தாலும், இந்தத் திட்டமும் பாபாவின் தந்திர செயல்களில் ஒன்றா என்று மேற்கத்திய அன்பர்கள் ஒருபோதும் உறுதியாகக் கூறமுடியவில்லை; மேலும் ‘திட்டங்கள் மாறிவிட்டன’ அல்லது (பீதியைக் கிளப்பும் வகையில்) ‘திட்டங்கள் தள்ளிவைக்கப்பட்டுள்ளன’ என்று இந்தியாவிலிருந்து தொலைத்தந்தியை எதிர்பார்த்து அச்சத்தில் ஆழ்ந்திருந்தனர். இந்தியாவிலிருந்து புறப்படும்போது இந்த எண்ணம் அவர்கள் மனதின் மேல் தளத்தில் இருந்தது.

ஜூன் மாத இறுதியில், பஞ்ச்கணி ‘டைகர் வேலி’ குகையில் தங்குமாறு பாபா, ஸாம் கோஹெனுக்கு அறிவுறுத்தினார்; ஆனால் அவர் தனியாக அங்கே இருக்க அஞ்சியதால், பாபா அவரை இலங்கை வழியாக ஐரோப்பா செல்லுமாறு அறிவுறுத்தினார். ஸாம் ஜூன் 23 அன்று புறப்பட்டுச் சென்றார். சாஞ்சி அவரை மும்பையில் சந்தித்து, வழியனுப்பி வைத்தார்.

1937, ஜூன் 26ஆம் நாள், மெஹராபாத்தில் காலை 9:00 முதல் 11:30 வரை அறக்கட்டளை கூட்டம் நடைபெற்றது. நோரினா, எலிஸபெத் இருவரும் நாசிக்கிலிருந்து ராம்ஜூ மற்றும் காக்காவுடன் அங்குச் சென்றனர்; அதே இரவில் பாபாவுடன் ஒரு திரைப்படத்திற்குச் சென்று, பின்பு நாசிக் திரும்பினர்.

மெஹர் பாபா, கிழக்கத்திய பெண் மண்டலியை தன்னுடன் ஃபிரான்ஸ் தேசத்திற்கு அழைத்துச் செல்ல விரும்பினார். ஜூலை 5ஆம் தேதி, ஆதி சீனியர், ஆதி ஜூனியர், பெண்டு, பாதிரி, விஷ்ணு ஆகியோருக்கு எதிர்வரும் பயணம் குறித்து தகவல் தெரிவித்து, ரகசியம் காக்குமாறு எச்சரித்தார்.

சில ஆன்மீக பணிகளுக்காக நதீனை இத்தாலி நாட்டின் வெனிஸ் நகரம் செல்ல பாபா அறிவுறுத்தினார்; ஜூலை 8 அன்று நதீன் மும்பையிலிருந்து ‘கான்டே ரோஸோ’ கப்பலில் பயணம் செய்தார். பாபா அவருக்கு விடையளிக்க மும்பைச் சென்றார். நதீன் புறப்பட்டுச் சென்றதோடு, நாசிக் ரிட்ரீட்டில் மொத்தம் எட்டு மேற்கத்தியர்கள் மட்டுமே எஞ்சியிருந்தனர்: ஜீன், மால்கம், நோரினா, எலிஸபெத், ருவானோ, டாம், ரானோ, நான்னி ஆகியோர்.

அதன் பின்பு, கேன்ஸ் பயணம் மேற்கொள்ளத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் தொடங்கின.

ராவல்பிண்டியிலிருந்து பயணம் செய்த ஆங்கில குழுவின் சார்பாக கிட்டி, ‘மெஹர் கெஸட்’டில் (MEHER GEZETTE) பிரியாவிடை கடிதம் ஒன்றை வெளியிட்டிருந்தார்; அதன் சாராம்சம் கீழே வருமாறு:

இந்தத் திடீர் திட்டம் (மேற்கத்திய அன்பர்களின் புறப்பாடு) வெளி உலகத்தை வியப்பில் ஆழ்த்தும்; ஆனால், மெஹர் பாபாவின் வழிமுறைகளை அறிந்த நெருங்கிய சீடர்களை அல்ல! ஒரு குறிப்பிட்ட இடத்தில் அவருடைய பணி முடிந்த அடுத்த நிமிடம், அனைத்திற்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படும். இறுதிக்கட்ட பணியும், கடைசி ஓரிரு மாத திட்டங்களையும் காற்றில் பறக்கவிட்டு, புதிய சூழலில் புதிய திட்டம் தொடங்கப்படுகிறது. இதை, பாபா நேரடி வார்த்தைகளில் வெளிப்படுத்தாமல், இடையிடையே அனைவரையும் உணரச் செய்கிறார். எப்படியாயினும் இது ஒரு மாயை, எனவே அத்துடன் ஏன் ஒன்றியிருக்க வேண்டும்? இதனால் என்ன விளைவு நிகழும்? முக்கியமான அம்சம் என்னவெனில், அது நீடித்திருக்கும் போது அதில் பங்கெடுத்த அனைவரிடமும் என்ன மாற்றம் ஏற்பட்டது என்பதுதான்.

கிழக்கத்திய வாழ்க்கை முறையில் பங்கெடுக்க மேற்கத்திய நாடுகளிலிருந்து அழைக்கப்பட்ட எங்களில் ஏற்பட்ட அந்த மாற்றம்தான் என்ன? அதைப் பற்றி கருத்துத் தெரிவிப்பது எங்களின் அனுபவத்திற்கு அருகில் இல்லாத ஒன்று. எனினும், எங்களிடையே ஒருவருக்கொருவர் சகிப்புத்தன்மை, புரிந்து, உணர்ந்து கொள்ளும் வழிமுறை, அன்பு, சேவை இவற்றின் உண்மையான உள் அர்த்தம், மேலும் புதிய மற்றும் வரையறுக்கப்பட்ட வாழ்க்கையை நாங்கள் தழுவிக்கொள்ள வேண்டியதன் அவசியம் இவை அனைத்தையும் நாங்கள் கற்றுக் கொண்டோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, இது, குருநாதர் ஸ்ரீ மெஹர் பாபாவைப் பற்றி எங்களுக்கு என்ன வெளிப்படுத்தியுள்ளது? ஒருவர், ஸ்ரீ பாபா, பணிபுரியும் வழிமுறைகளை அதிகம் புரிந்துகொள்கிறார் என்று உண்மையாகச் சொல்ல முடியுமா? இல்லை, இந்த ஆறு மாத நெருங்கிய தொடர்பு, ஒருவரை மிகுந்த மலைப்பு, பிரமிப்பு மற்றும் அவரைப் புரிந்துகொள்ள முடியாத வழியிலான திகைப்புடனும் இருக்கச் செய்கிறது என்று நான் தனிப்பட்ட முறையில் உணர்கிறேன். அவை வரையறுக்கப்பட்ட மனித அறிவிற்கு அப்பாற்பட்டவை. ஆனால் ஒருவருடைய அன்பும், அசைக்கமுடியாத நம்பிக்கையும் மிக ஆழமாக வேரூன்றியுள்ளன, மேலும் இந்த ஆழ்ந்த நம்பிக்கையுடன் இன்னும் முழுமையாக சரணடையும் மனப்பக்குவம் வந்துள்ளது. அவருடைய கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படியாமல் போகலாம், ஏனெனில் நாம் மனிதர்களாக இருப்பதால் பலவீனமாக இருக்கிறோம், இதனால் நமது அன்பு குறைந்துவிட்டது என்று அர்த்தப்படுத்தக்கூடாது. உண்மையில், பாபா ஒவ்வொரு முறையும், நமது பலவீனங்களின் மூலம்தான் நம்மை அவரோடு நெருங்கச் செய்கிறார். அவர் நம்மை மன்னிப்பது, கடினத்தன்மை அல்லது மென்மையுடன் இருக்கலாம், ஆனால் எப்பொழுதும் நீதி தவறாமல் தயவுடன் இருந்தாலும், மனதிலும் இதயத்திலும் மறக்க முடியாத படிவங்களை ஏற்படுத்துகிறது. மெஹர் பாபா

போன்ற ஒரு குருநாதருடன் நெருங்கிய தொடர்பில் வாழ்வதற்கான இந்த வாய்ப்புதான், கடந்த மாதங்களில் எங்களுக்குக் கிடைத்தப் பாக்கியம்; இது எங்களுக்காக உருவெடுத்த பயிற்சி மையம்.

பாபாவின் அன்புதான் எங்களை இந்தியாவிற்கு அழைத்து வந்தது, அதுபோல், அவருடைய அன்பு ஒன்றுதான் இப்போது மீண்டும் மேற்கு நோக்கி எங்களை அனுப்பி வைத்து, அங்கு அவரது அடுத்த கட்ட நடவடிக்கைக்குத் தயாராகச் செய்கிறது. எனவே இது தற்போது இந்தியாவிற்கு நாங்கள் அளிக்கும் 'பிரியாவிடை'. பாபாவின் பல பக்தர்கள் மற்றும் நெருங்கிய சீடர்களை சந்திக்கும் வாய்ப்பைப் பெற்று, நாங்கள் அவர்களை பெரிதும் நேசித்தோம், நேசிக்கிறோம்; பாபாவை நேசிக்கும் அனைவருடனும் மிக நெருக்கமான உறவை உணர்கிறோம், பாபா எங்களை மீண்டும் இந்தியாவிற்கு அழைத்தால், அந்த நட்பைப் புதுப்பிக்க ஒரு நாள் வரும் என நம்புகிறோம்.

கப்பல்தளத்தில் எங்களை வாழ்த்தி வழியனுப்ப வந்த அனைத்து அன்புள்ளம் படைத்த ஒவ்வொருவரும் எங்கள் இதயங்களை நெகிழச் செய்தனர்.

1937 ஜூலை 10, மெஹர் பாபாவின் மௌனத்தின் பன்னிரண்டாம் ஆண்டு, மெஹராபாத்தில் மண்டலி மற்றும் சில நெருங்கிய நபர்களால் தனிப்பட்ட முறையில் அனுசரிக்கப்பட்டது. இந்த அரிய சந்தர்ப்பத்தில், நோரினா, எலிஸபெத், நான்னி ஆகியோர் நாசிக்கிலிருந்து அழைக்கப்பட்டனர். அன்று மண்டலியின் சிறப்பு உணவுக்காக 50 ரூபாய் வரையிலான செலவை, பாபா அனுமதித்தார். ராஹுரி அறையில் அறக்கட்டளையின் உறுப்பினர்கள் மற்றும் மேற்கத்தியர்களுடன் நடந்த ஒரு குறுகிய கலந்துரையாடலுக்குப் பிறகு, மௌன தினத்தின் நிகழ்ச்சி தொடங்கியது. டாக்டர் கனி பின்வரும் உரையை நிகழ்த்தினார்:

மிகவும் பிரியமான ஸ்ரீ பாபா, இன்றைய தினம் உங்கள் மௌனத்தின் பன்னிரண்டாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் எங்கள் கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்ததற்கு, மண்டலி சார்பில் நன்றி கூறுகிறேன். மேலும், அசௌகரியம் மற்றும் வசதியற்ற சூழ்நிலையிலும் இந்த விழாவில் பங்கேற்க வந்துள்ள மேற்கத்திய மண்டலியின் பிரதிநிதிகளுக்கும் நன்றி கூறுகிறேன்.

இன்று, ஜூலை 10ஆம் நாள், என்னைப் பொறுத்தவரையில், மண்டலி அனைவரையும் மிகவும் மகிழ்ச்சியான, ஆனால் பிரதிபலிக்கும் மனநிலையில் காண்கிறேன். உங்கள் மௌனத்தின் பன்னிரண்டாம் ஆண்டு, மிகுந்த நம்பிக்கையுடன் வாக்குறுதிகள் நிறைந்ததாக உள்ளது; மேற்கத்திய அரைக்கோளத்திலிருந்து நம்பிக்கையின் அடிப்படையில் வருகை தந்துள்ள சகோதர சகோதரிகள், இந்தியாவில் இருப்பது இந்த விழாவிற்குச் சிறப்பு வண்ணங்களை வழங்குகிறது. இன்றைய சூழ்நிலைகளைப் பார்க்கும்போது, நம்பிக்கையுடன் எதிர் நோக்கிய அடுத்த ஆயிரமாண்டு காலம் தென்படவில்லை என்றாலும், என்னைப் பொறுத்தவரை எல்லாமே ஒன்றுதான், அது நம்மை, சந்தேகத்திற்கு இடமின்றி இருக்கச் செய்தது. உங்கள் தெய்வீக ஞானம், மாறாக,

அதைத் திட்டமிட்டுள்ளது என்றுதான் நான் கூறுவேன். எங்கள் ஒவ்வொருவருக்கும் எது சிறந்தது என்பதை நீங்கள் நன்கு அறிந்திருப்பதால், உங்கள் சர்வவல்லமையுள்ள தீர்வை நாங்கள் மிகவும் தாழ்மையுடன், விருப்பத்துடன் ஏற்றுக்கொள்கிறோம்.

இந்த சந்தர்ப்பம், ஓரளவிற்கு மனதில் உள்நோக்கு மனப்பான்மையைத் தூண்டியுள்ளது. ஆகவே, உங்கள் முன்னிலையில் உங்கள் மௌனத்தின் முக்கியத்துவத்தையும், எங்களை அறியாமலேயே கற்றுக்கொண்ட மற்றும் கற்றுக் களைந்த பாடங்களையும், காலப்போக்கில் தத்துவமயமாக்குவதற்கான திறனைக் கொண்டிருப்பதற்கு நான் மன்னிக்கப்பட வேண்டும். உங்கள் மௌனத்தைப் பற்றிய எனது விளக்கம், தெய்வீகப் பாதையில் பிறரால் அனுஷ்டிக்கப்பட்ட இதுபோன்ற சோதனைகளுடன் ஒப்பிடுகையில் இவ்வாறு அமைந்துள்ளது:

பிறரால் கடைப்பிடிக்கப்பட்ட இந்த இயற்கையின் சோதனைகள், வெவ்வேறு மதங்களின் புராணக் கதைகளில் பல நிகழ்வுகள், பொதுவாக சுயமாக திணிக்கப்பட்டவை மற்றும் ஒழுக்கமுறைகளைச் சார்ந்தவை. உங்கள் மௌனம் தெய்வீகத் தன்மையுடனும், ஆன்மீக ரீதியாகவும் கட்டளையிடப்பட்டுள்ளது.

பிற ஞானிகளுடன், இது வழக்கமாக இறைநிலையை அடைவதற்கு முன்னதாக நிகழ்ந்தது அல்லது தயார் நிலைக்குத் தம்மை ஆயத்தப்படுத்தும் பயிற்சியாக அனுஷ்டிக்கப்பட்டது; உங்களுடன், இது பரிபூரண இறை உணர்விற்குப் பிறகு மேற்கொள்ளப்படுகிறது.

பிறருடன், இது போன்ற சோதனையானது சுய சுத்திகரிப்பு மற்றும் சுய மகிமைப்படுத்தலுக்காக மேற்கொள்ளப்படுகிறது; உங்களுடனான இந்த மௌனம், உங்கள் சீடர்களின் ஆன்மீக சுத்திகரிப்புக்காகவும், மனிதகுலத்தைப் பாதுகாத்து, மேம்படுத்துவதற்காகவும் என்பதை நாங்கள் அறிவோம்.

பிறருடன் அது பிராயச்சித்தம்; உங்களுடன், அது சிலுவையில் அறையப்படும் சம்பவம்.

பிறருடன், இது ஒரு நிலையான சபதம்; உங்களுடன், இது ஒரு தெய்வீக கடமை.

பிறரில், அது அவர்களுக்கான வலிமையை வழங்குகிறது; உங்களுடன், இது அடுத்தவர்களுக்கு ஆன்மீக அதிகாரத்தை வழங்குவதாகும், இதன் அர்த்தம் என்னவென்று மண்டலிக்கு விளக்கப்பட்டுள்ளதாக நினைக்கிறேன்.

பிறருடன், இது முன்னேற்றத்திற்கான மனப்போராட்டம்; உங்களுடன், இது அன்பின் உழைப்பு, முற்றிலும் ஆன்மீகம் மற்றும் தெய்வீகமானது.

பிறரைப் பொறுத்தவரை, இது ஜோதிட கணிப்புடன் கூடிய, அல்லது சிறந்த மன முக்கியத்துவம் வாய்ந்த, 12, 24, 36 ஆண்டுகளுக்கான காலச்சுற்றாக அமையும்; உங்கள் மௌனத்தின் ஆன்மீக முக்கியத்துவம், இந்த நிலைப்பாட்டை நிராகரிக்கிறது. நீங்கள் முதலில் உங்கள் மௌனத்தை ஒரு வருடத்திற்கென குறிப்பிட்டீர்கள், இன்று பன்னிரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டதால், நீங்கள் திடீரெனவும் எதிர்பாராத விதமாகவும் ஆரம்பித்தது போலவே முடிக்கவும் கூடும்.

எங்கள் பிரியமான குருநாதரான உங்களுடன், மண்டலியாகிய நாங்கள் கவனித்திருக்கிறோம், எல்லாமே வரம்பற்றது, அளவிறுதியற்றது. உங்களில் உருவெடுக்கும் உணர்வின் வீரியம் குறித்த கேள்விகளை விவாதிக்க மிகவும் நிதானமான மற்றும் தீவிரமான சந்தர்ப்பத்திற்காகக் காத்திருக்கிறேன்.

நான் இப்போது உங்கள் அனைவர் முன்னிலையிலும் சற்று பலத்த சிந்தனையில் ஈடுபட்டு, நான் அறிந்ததை முன்வைத்துள்ளேன். எனது மேற்கூறிய அனுமானங்கள் ஆர்வத்தைத் தூண்டும் வேடிக்கை வார்த்தைகளாகத் தோன்றினாலும் தவறானவை அல்ல. ஆகையால், இங்குள்ள அனைத்து மண்டலியிடமிருந்தும் நேர்மையான, உறுதிப்படுத்தும், ஆரோக்கியமான விமர்சனங்களை நான் வரவழைக்கிறேன்.

ஸ்ரீ மெஹர் பாபா, உங்கள் மௌனத்தின் இந்த பன்னிரண்டாம் ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில், உங்கள் அன்பான சீடர்களுக்கும், ஊழியர்களுக்கும், சில தனித்துவமான ஆன்மீக மற்றும் தெய்வீக சொற்பொழிவுகளை, சில நாட்கள் அல்லது வருடங்களுக்கு, எங்கள் மனதிற்கு ஊக்கமளிக்கும் ஊட்டமாக வழங்குவீர்களா என்ற எங்களின் வேண்டுதல் மிகையாகுமா?

ஒரு ஸூஃபி துறவியின் அழகான, நம்பிக்கையான வார்த்தைகளுக்கு நான் உடன்பட விரும்புகிறேன்.

உதடுகள் ஊமையாக இருப்பவன் பாக்கியவான்;
வாழ்க்கையின் வார்த்தைகள் யாரால் வழங்கப்படும்?
நான் எப்பொழுதும் உங்கள் காலடியில் இருக்கிறேன்.

டாக்டர் கனியின் கோரிக்கைக்கு இணங்கி பாபா இவ்வாறு கூறினார்:

**நான் மௌனத்தை ஒரு சபதமாக, ஒரு தவத்தின் அடிப்படையில் கடைப்பிடிக்கவில்லை. அவ்வாறு இருந்திருந்தால், அதன் 13ஆவது ஆண்டின் தொடக்கமான இன்று நான் கைவிட்டிருப்பேன்.**

**இருப்பினும், இது, விரைவில் நான் பேசப் போவதில்லை என்று அர்த்தமாகாது. இந்தப் 13ஆவது வருடத்தில் நான் பேசலாம், ஏனெனில் 13ஆவது எண்ணை நான் விரும்புகிறேன்.**

**சாதகமான அறிகுறிகளும் தென்படுகின்றன. காலங்காலமாக வறண்டு, இந்த ஆண்டும் மழை பெய்யாத அஹமதுநகரில், நேற்று இரவு பன்னிரண்டு மணி முதல், நிலையான, தொடர்ச்சியான மழை பொழியத் தொடங்கியது, எனது மௌனத்தின் பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவடைவதைக் குறிக்கிறது. ஆனால் அது பெரும் மழையாக இல்லாமல் வெறும் தூறலாக மட்டுமே இருப்பதால், இது ஆபத்திற்கான அறிகுறியாகும். அதனால்தான் இன்று நான் ஒரு புதிய சிவப்பு நிற கோட்டை அணிந்துள்ளேன். உங்களில் ஒருவர் உயிரைத் துறக்கக்கூடும், ஒருவேளை ‘எக்ஸ்,’ இல்லையேல் ‘ஒய்’, ஆனால் அவர் இந்த பூவுலகைக் கைவிடுவதற்கு முன்பு கடவுள் நிலையை அடைவார்.**

**இன்று கனி வழங்கிய உரையை கவனியுங்கள், இது எனது மௌனம் மற்றும் அதன் விளக்கம் குறித்த சிறந்ததோர் உரையாகும். இந்த உரையின் ஒரு வரியை மட்டுமே கைவிட நான் விரும்புகிறேன், அது ஒரு 'சொற்பொழிவு'க்கான அவரது வேண்டுகோளைப் பற்றியது.**

அதற்குப் பிறகு பாபா, டாக்டர் கனி, சாஞ்சி இருவரையும் ஒருவரையொருவர் அரவணைக்குமாறு சைகையால் தெரிவித்தார். **"நான் சாஞ்சி மூலமாக உங்களிலிருக்கும் எனது சுயத்தை அரவணைத்தேன். சாஞ்சியிலிருக்கும் எனது சொந்த சுயத்தை உங்கள் வழியாக அரவணைத்தேன். எனது வழிகளும், முறைகளும் எனது நிலையைப் போலவே எல்லையற்றவை."** பாபா பின்பு பெண் மண்டலியைப் பார்க்க மெஹராபாத் மேல்மலைக்கு நடந்து சென்றார்.

1937 ஜூலை பிற்பகுதியில், ஃபிரான்ஸ் நாட்டிற்குப் புறப்படுவதற்கு முன்பு, மெஹர் பாபா முக்கியமாக மெஹராபாத்தில் தங்குவதற்காக அழைத்து வரப்பட்ட மஸ்துகளுக்கும், மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கும் சேவை செய்வதில் முழு வீச்சில் ஈடுபட்டார். அவர் ஒவ்வொரு நாளும் அவர்களை நீராட்டி, உணவூட்டி தொடர்ந்து அவர்களின் நலனை மேற்பார்வையிடவும் செய்தார். மனநிலை பாதிக்கப்பட்டவர்களில் சிலர் ஜூலை மாதம் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர். பைதூல், பிளீடர் இருவரும் பன்னிரண்டு மஸ்துகளைப் பராமரிக்கும் பொறுப்பேற்றனர். மேலும், பாபா வெளிநாடு செல்லும் வேளையில், எஞ்சியிருந்த மனநிலை பாதிக்கப்பட்டவர்களை கவனிக்கும் விரிவான அறிவுறுத்தல்களையும் வழங்கினார்.

மெஹர் பாபா ஒவ்வோர் ஆண்களுக்கும் கடமைகளை வழங்கினார். பெண்டு மெஹராபாத்தில் மேலாளராக நியமிக்கப்பட்டார், பாதிரி நோயுற்றவர்களுக்கு ஹோமியோபதி மற்றும் டாக்டர் நீலு ஆங்கில மருத்துவ முறையில் சிகிச்சையளித்து வந்தனர். டாக்டர் நீலு இல்லாத நிலையில் டாக்டர் கனியின் உதவியுடன் பாதிரி மருந்தகத்தை இயக்கவிருந்தார். முரளி கம்பவுண்டராகப் பணிபுரிந்தார். விஷ்ணு தேவையான அனைத்து பொருட்களுக்கும் ஏற்பாடு செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். காளேமாமா பொறியியல் பணிகளை கவனிப்பதாக இருந்தது; சிது மஸ்துகளின் கவனிப்பு மற்றும் மேற்பார்வைக்கு உதவினார்; இதேபோல பிற தனிப்பட்ட கடமைகளும் இதர மண்டலிக்கு வழங்கப்பட்டன. மும்பைக்குச் சென்ற ராவ்ஸாஹேப் அவ்வப்போது மெஹராபாத்திற்கு வருகை தந்தார்.

பாபா, ஜூலை 12 அன்று நாசிக் சென்று, மூன்று நாட்களுக்குப் பிறகு, தேவையான பயண ஆவணங்களைப் (புதிய பாஸ்போர்ட், விஸாக்கள் மற்றும் பயணச் சீட்டுகள்) பெறுவதற்காக, மும்பைக்குக் காரில் புறப்பட்டார்; ஆதி சீனியர், நோரினா, ரானோ, எலிஸபெத் மற்றும் ருஸ்தத்தின் இரண்டாவது மகன் ஃபாலு, மேற்படிப்புக்காக இங்கிலாந்து சென்று கொண்டிருந்தவரும் அவருடன் சென்றனர். இம்முறை பாபா, காக்காவின் இல்லத்தில் ஆதி மற்றும் ஃபாலுவுடன்

தங்கியிருந்தார். (அன்றிரவு பாபா வருவதாக, தந்தி அலுவலகம் தவறாக எழுதியிருந்ததால் பகல் உணவும் பாபாவின் அறையும் தயாராக வைக்கப்படவில்லை.) சாஞ்சி, ரீஜன்ட் ஹோட்டலில் எலிஸபெத், நோரினா, ரானோ ஆகியோர் தங்குவதற்கான அறைகளை முன்பதிவு செய்திருந்தார்.

1936 நவம்பர் மாதத்தில் பாபா லண்டன் சென்றபோது, ரானோவும் அவரது தாயார் நான்னியும் பாபாவிற்கு மூன்று இணைப்பிலான, குறுகிய கோடிட்ட கோட்டுச் சட்டைகளை வாங்கியிருந்தனர். அவர்கள் கடையில் பணிபுரியும் ஒருவரை கண்டுபிடித்து, பாபாவின் உயரத்தை யூகித்து அதே அளவில் வாங்கினர். இது மிகவும் சரியாகப் பொருந்தியது. மும்பையில் இம்முறை ரானோவிடம் நான்னியின் பரிசாக பாபாவிற்கு ஒரு ஜோடி காலணிகளை வாங்கச் சொன்னார். அவர் நோரினா, எலிஸபெத் இருவருடன் ஒரு கடைக்குச் சென்று பாபாவின் கால் அளவை யூகித்து வாங்கியதும் பாபாவின் கால்களில் சரியாகப் பொருந்தியது. பாபா அவற்றை ஃபிரான்ஸ் பயணத்தின்போது அணிந்திருந்தார்.

பாபாவின் மும்பை வருகை, தனிப்பட்ட முறையில் வைக்கப்பட்டிருந்தாலும், பலருக்கு அது தெரியாமல் இருந்தபோதும், ஜூலை 17, 18 தேதிகளில் காக்காவின் இல்லத்தில் தனது அன்பர்களை சந்திக்க ஒப்புக்கொண்டார். சாஞ்சி அறிவித்தபடி பலர் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டனர்.

'பேசக்கூடாது' என்ற நிபந்தனை அனைவருக்கும் அறிவுறுத்தப்பட்டாலும் அது வழக்கம் போல தொடர்ந்தது. பாபா, ஒரு தனிநபரைப் பற்றி கேட்கவோ அல்லது கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கவோ வேண்டியிருந்தது. சிலருக்கு, அவரே சில விஷயங்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

மெஹர் பாபா பல விஷயங்களில் ஒன்றன் பின் ஒன்றாக அல்லது ஒரே நேரத்தில், பல மணிநேரம் பணிபுரிவதைப் பார்ப்பது, அளவிறுதியற்ற ஆற்றல் மற்றும் விவேகத்தை ஒன்றிணைத்து, அந்தப் பணியில் ஈடுபடுவதாகும். உடனடி முக்கியத்துவம் வாய்ந்த பணி தொடர்பான இடர்பாடுகளிலிருந்து (இதற்காக அவர் விசேஷமாக மும்பைக்கு வந்தார்) கவனத்தை திசை திருப்பி, பார்வையாளர்களின் துன்பங்கள் மற்றும் இடர்பாடுகளின் அனைத்து வகையான முடிவில்லா கதைகளின் ஆயிரத்து ஒரு கேள்விகளுக்கு செவிமடுத்து, சமாதானப்படுத்தவும், பதிலளிக்கவும் கிட்டத்தட்ட ஒவ்வொரு விஷயத்தையும் சமாளிக்கவும் உண்மையில் எல்லையற்ற பொறுமையும், ஞானமும் தேவை. குருநாதர்கள் மட்டுமே அதைச் செய்ய முடியும். ஒருவர் நடக்கும் சம்பவங்களைப் பல மணிநேரம் பார்த்துப் பார்த்து சோர்ந்துப் போகிறார்! பல சேவகர்கள் அவரருகில் அவருக்கு உதவுவதற்காக, தேவைப்படும்போது வந்து போகிறார்கள் - ஆனால் பாபா மட்டுமே முழுவதுமாக அவரது பணியைச்

செய்கிறார். உண்மையாகச் சொல்லப்போனால் இதுவே ‘சேவகத்தில் லாவகம்’ **(**MASTERY IN SERVITUDE**)** **என்பது!**

மும்பையில் சில தினங்கள் இருந்த பின்பு, பாபா 18ஆம் தேதி எலிஸபெத்தின் காரில் நாசிக் புறப்பட்டார், அவருடன், நோரினா, ரானோ, ஃபாலு ஆகியோரும் உடன் சென்றனர். பாபா தனது மேற்கத்திய அன்பர்களை மெஹர் ரிட்ரீட்டில் சந்தித்தது இதுவே கடைசி முறை. இரண்டு நாட்களுக்குப் பிறகு **20**ஆம் தேதி பாபா, மெஹராபாத் புறப்பட்டுச் சென்றார்.

ஜூலை **23** அன்று ருவானோ மும்பைக்கு ரயிலில் புறப்பட்டார்; அங்கு அவரை சாஞ்சி, காக்கா இருவரும் சந்தித்து, இலங்கை வழியாக ஐரோப்பாவிற்குப் பயணம் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர். (இது ஒரு விலை குறைவான பாதை என்றாலும் அதிக நேரம் எடுக்கும்), மேலும் ருவானோ, பாபாவையும் கேன்ஸ் நகரில் இருந்த குழுவையும் சந்திக்க இருந்தார்.

அந்த நாள் பிற்பகுதியில், மெஹர் கெஸட்டின் ஆசிரியரான சம்பத் அய்யங்கார், பாபாவை சந்திக்க மதராஸிலிருந்து நாசிக் வந்த வேளையில் பாபா, ஏற்கனவே அங்கிருந்து புறப்பட்டுவிட்டார். பின்னர், அவர் மெஹராபாத் சென்றார், பாபாவின் வரவிருக்கும் ஃபிரான்ஸ் பயணம் குறித்து அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.



**முன்னால்**: ஆல்ஃப்ரெடோ ஸைட்ஸ் (ALFREDO SIDES), மெஹர் பாபா (MEHER BABA), கான்ஸுலா டி ஸைட்ஸ் (CONSUELA D SIDES). காக்கா (KAKA), நதீன் (NADINE), அடையாளம் தெரியாதவர் (UNIDENTIFIED), நோரினா (NORINA), டிலியா (DELIA), மார்கரெட் (MARGARET), அனிதா (ANITA).

**பின்னால்**: மால்கம் (MALCOLM), டாக்டர் நீலு (DR NILU), கிட்டி (KITTY), ஸாம் கோஹென் (SAM COHEN), அரன்ட் ஃபர்மென் (AREND FUHRMANN), சாஞ்சி (CHANJI), அடையாளம் தெரியாதவர் (UNIDENTIFIED), ஜீன் அட்ரியல் (JEAN ADRIEL), அனாகாத்தரினா மெர்டென்ஸ் (ANAKATHERINA MERTENS),

கேன்ஸ் (CANNES) - **1937**

# கேன்ஸ் நகரம், ஃபிரான்ஸ்

**(Cannes, France)**

மெஹறா, மணி, நாஜா, கோர்ஷெத், ஸூனாமாசி, வாலு ஆகியோருடன் மெஹர் பாபா மெஹராபாத்திலிருந்து புறப்பட்டு, 1937, ஜூலை 29ஆம் நாள், ஃபிரான்ஸ் நாட்டுக்குத் தங்கள் பயணத்தைத் தொடங்க இருந்தனர். (விஷ்ணு அவர்களுடன் மும்பைக்குச் சென்றார். ) சாஞ்சி, காக்கா, டாக்டர் நீலு ஆகியோர் பயணத்தில் பாபாவுடன் இணையவிருந்தனர். நாசிக் நகரிலிருந்து, நோரினா, எலிஸபெத், நான்னி, ரானோ, மால்கம், ஜீன், டாம் ஆகியோர் அதே நாளில் ஃபாலுவுடன் மும்பைக்குச் சென்றனர். மறுநாள் அதிகாலையில் பாபா, பெண் மண்டலியுடன் மும்பைக்கு வந்தபோது, அவர் தனது அன்பர்கள் எவரையும் ரயில் நிலையத்தில் பார்க்க விரும்பவில்லை, எனவே மும்பையில் எவருக்கும் தகவல் தெரிவிக்கப்படவில்லை.

ரீஜண்ட் ஹோட்டலில் ஒரு நாள் தங்கி, பாபாவும் குழுவும் 1937 ஜூலை 31 அன்று 'ஸ்ட்ராத்நேவர்' (STRATHNAVER) கப்பலில் மார்ஸெல்லஸை நோக்கிப் பயணத்தைத் தொடங்கினர். கிப்பி, கானூட் இரண்டு நாய்களும் அவர்களுடன் சென்றன (எலிஸபெத்தின் ஃபோர்டு காரும் கப்பலில் பயணம் செய்தது).

முதல் சில நாட்களுக்கு, கடல் அமைதியின்றி கொந்தளித்தது; அனைவரும் அவரவர் அறைகளில் இருந்தனர். ஆனால் வானிலை சீரான போதும், பெண் மண்டலி தங்கள் அறைகளில் தனிமையில் இருக்க வேண்டியிருந்தது. கப்பலில், பிற பயணிகளின் பார்வையில் வரக்கூடாது என்ற நோக்கத்தில், இதர பயணிகள் தூங்கும் அதிகாலை வேளையில் மட்டுமே, அவர்கள் வெளியே கப்பல்தளத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பாபா அவர்களை மேலே அழைத்து வந்தபோது, காக்கா, சாஞ்சி இருவரும் புறக்காவலர்களாகப் பணிபுரிந்தனர். பெரும்பாலும் 'வீதிகளில் வலம் வரும் பிச்சைக்காரர்களைப் போல்' இருண்ட பாதைகளில் வளைந்து நெளிந்து காவல் புரிய வேண்டிய நிலையை, மகிழ்ச்சியற்ற தொனியில், சாஞ்சி தனது குறிப்புப் புத்தகத்தில் எழுதியிருந்தார்.

எவ்வாறாயினும், ரானோவைத் தவிர இதர மேற்கத்திய அன்பர்கள் சுதந்திரமாக நடமாடுவதில் எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை. ரானோ இந்திய பெண் மண்டலியைப் போலத் தனிமைப்படுத்தப் பட்டார்.

ஒருமுறை பாபா, ரானோவைக் கப்பல்தளத்தில் கண்டுபிடித்து, அவர் அங்கு இருப்பதன் காரணத்தை வினவினார். அறையில் மூச்சுத்திணறலால் சிரமப்பட்டதாகவும், புத்தம் புது காற்று தேவை என்று ரானோ விளக்கியதும், பாபா, **"நான் உங்களை நானாக வழிநடத்தாத வரை, உங்கள் அறையிலிருந்து வெளியே வர வேண்டாம்"** என்று பாபா கூறினார். ஆனால் அதற்குப் பிறகு, பாபா, ஒவ்வொரு நாளும் இரண்டு மணி நேரம் நோரினாவுடன் கப்பல்தளத்தில் நடக்க அனுமதித்தார்.

மெஹர் பாபா பயணம் செய்த அதே கப்பலில், ராமச்சந்திர காடேக்கர் (RAMCHANDRA GADEKAR), ஓர் எளிய, பாதணிகள் செய்யும் தொழிலாளியின் புதல்வன், பாபாவின் நெருங்கிய தொடர்பில் இருந்த அவரும் பயணம் செய்தார். காடேக்கர் ஸ்காட்லாந்து, எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் (EDINBURGH UNIVERSITY, SCOTLAND) கல்வி கற்க அரசு உதவித்தொகைப் பெற்றிருந்தார். உண்மையில், பாபா, 'ஸ்ட்ராத்நேவர்' கப்பலில் ஃபிரான்ஸ் தேசத்திற்குப் பயணிப்பதாக முன்கூட்டியே தெரிவித்து, அதை இரகசியமாக வைக்குமாறு அறிவுறுத்தியிருந்தார். எனவே காடேக்கரின் மனைவி குணாதாய் (GUNATAI) மற்றும் அவர்களது இரண்டு குழந்தைகளும் அவரை வழியனுப்ப வந்தபோது, பாபாவையும் மண்டலியையும் கப்பலில் சந்தித்ததில் அவர்கள் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். குணாதாயிடம், பாபா, "**கவலைப்பட வேண்டாம், நான் உங்கள் கணவருடன் இருக்கிறேன்**" என்று குறிப்பிட்டார்.

மற்றுமோர் அதிர்ஷ்டசாலியான சக பயணி, இளம் நடனக் கலைஞர் ஆட்ரி வில்லியம்ஸ், மார்கரெட்டிற்கு அறிமுகமானவர், அவர் 1933க்கு பிறகு பாபாவை சந்திக்கவில்லை. ஆட்ரி 'டி பாசில் பாலேஸ் ரஸ்ஸஸ் டி மான்டே கார்லோ' (DE BASIL BALLETS RUSSES DE MONTE CARLO) என்ற நடன நிறுவனத்திற்கு பணியின் நிமித்தம், ஆஸ்திரேலியாவிலிருந்து வந்து கொண்டிருந்தார். மீண்டும் பாபாவின் முன்னிலையில் இருந்த அவர், 'இந்த நித்திய மகிழ்ச்சியின் உணர்வு இன்னும் இருந்தது' என்று நினைவு கூர்ந்தார். ஆனால் இது பாபாவுடன் ஆட்ரியின் கடைசி சந்திப்பாக அமைந்தது.

1937, ஆகஸ்ட் 4 பிற்பகலில் கப்பல் ஏதன் (ADEN) வந்தடைந்தது. ஒரு கட்டத்தில், பாபா இவ்வாறு எடுத்துரைத்தார், "**துன்பம் ஆன்மீக வாழ்க்கையின் முக்கிய அம்சமாகும். சத்குருக்களும், அவதார புருஷர்களும், அற்புதங்களை நிகழ்த்தி அவர்களின் அல்லது வட்டத்து சீடர்களின் துன்பத்தை ஒருபோதும் தவிர்ப்பதில்லை. அவர்கள் அதீத துன்பங்களைத் தாங்கிக்கொள்ளும் அதே வேளையில், வட்டத்து சீடர்களையும் தாங்கிக்கொள்ளச் செய்கிறார்கள்!**" இத்தனை நாட்களாக, கூண்டு போன்ற அறைகளில் அடைக்கப்பட்ட பெண் மண்டலியின் உதாரணத்தை அவர் எடுத்துக் கூறினார். பாபா அவர்களை, கப்பலின் ஒதுங்கிய பகுதிக்கு வெளியே அழைத்துவர ஏற்பாடு செய்து, அவர்கள் குளிர்ந்த கடல் காற்றின் சில தருணங்களை அனுபவித்துக்கொண்டிருந்த வேளையில், ஒரு மணற் புயல் கப்பலைத் தாக்கி அனைவரையும் மறுபடியும் கூண்டுக்குள் தள்ளியது.

கப்பல் பயணத்தின் போது, 1937, ஆகஸ்ட் 7 அன்று மெஹர் பாபா, தன்னலமற்ற சேவை குறித்து மேற்கத்திய அன்பர்களுக்கு விளக்கினார்:

**இறைவன், இறைவனின் உணர்வு நிலையில் மட்டும் மனித உணர்வு இல்லாமலும், மனிதன், மனிதனின் உணர்வு நிலையில் மட்டும் இறை உணர்வு இல்லாமலும் உள்ளனர். இறை-மனிதன் மட்டுமே உணர்வுபூர்வமாக இறைவனாகவும் மனிதனாகவும் நிலைகொண்டிருக்கிறார். எனவே இறை-மனிதன் பிரபஞ்சத்தின் அதிபதியும், சேவகனும் ஆவார்.**

**பிரபஞ்சத்தின் அதிபதியான இறைவன், அவருடைய நிலையில் அனைத்து ஆத்மாக்களையும் சத்தியத்தை (உண்மைப்பொருளை) நோக்கி வழிநடத்துகிறார்; சேவகனாக அவர், அனைவருடைய சுமைகளையும், உணர்வுபூர்வமாக சுமக்கிறார். அனைவருக்கும் சேவை செய்யும் அந்த இறைவனுக்கு சேவை செய்வது, பிரபஞ்சத்திற்குச் செய்யும் சேவையாகும்.**

**தன்னலமற்ற சேவையும், அன்பும் இரட்டை தெய்வீக குணங்கள். நேசிப்பவனால் மட்டுமே சேவை செய்ய முடியும். உங்கள் பிரியமான இறை-மனிதனுக்கு சேவை செய்வதன் மூலமாக, நீங்கள் அனைவரிலும் நிலைகொண்டிருக்கும் உங்கள் சுய பரமாத்மாவிற்கு சேவை செய்கிறீர்கள். குருநாதர் உங்களிடமிருந்து உரிமையோடு கேட்டுப் பெறும் இந்த சேவை, உங்கள் சொந்த ஆன்மீக நலனுக்காகவே. இருப்பினும், உங்கள் சேவை, தன்னிச்சையாக, விருப்பத்துடன், முழு மனதுடன், நிபந்தனையற்றதாக இருக்க வேண்டும்; மேலும் எந்த வெகுமதியையும் எதிர்பார்க்கக்கூடாது.**

**குருநாதருக்கு சேவை என்பது, துன்பத்தை விளைவித்து உங்கள் உடல், மனம், ஆத்மா மூன்றையும் சோதனைக்குள்ளாக்கும். உடல் பாதிக்கப்படுகிறது, மனம் வேதனை அடைகிறது, ஆனால் குருநாதரின் தன்னலமற்ற சேவகனின் ஆத்மா, உண்மையான திருப்தியுடன் பேரின்பத்தை அனுபவிக்கிறது.**

ஆகஸ்ட் 11 அன்று முஸோலினி (MUSSOLINI), சிசிலி (SICILY) நாட்டின் மெஸினா (MESSINA) நகருக்கு பதினான்கு ஆண்டுகளுக்குப் பின்னர், இராணுவ பயிற்சித் திறன்களைக் காணச் சென்று கொண்டிருந்ததாக, கப்பலின் செய்தி சேவை மையம் தெரிவித்தது. 'ஸ்ட்ராத்நேவர்' (STRATHNAVER) கப்பல், அன்று அதே நேரத்தில் மெஸினா நகரைக் கடந்து செல்லவிருந்தது; மேலும் மெஹர் பாபா இது பற்றியும், உலக நிலவரங்கள் பற்றியும் 10ஆம் தேதி கருத்துத் தெரிவித்தார். '**முஸோலினி வரும் அதே இடத்தை மெஹர் பாபா கடந்து செல்வது குறிப்பிடத்தக்கதாக அமைந்தது**' என்று அவர் சுட்டிக்காட்டினார்: "**நான் இங்கிருந்து செல்கிறேன், அவர் அங்கிருந்து வருகிறார்!**" பாபா தனது கைவிரல் முட்டிகளை ஒன்றோடு ஒன்றாகக் கொணர்ந்து, சைகையால் தெரிவித்தார்; இதன் அர்த்தம் ஒரு போரின் முறுகுநிலை காரணமாக மோதல் ஏற்படும் என்பதன் அறிகுறி.

ஸ்பெயின் நாட்டு மக்கள் ஏற்கனவே தங்களுக்குள் சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். "**ஸ்பெயின் ஒரு சுவாரஸ்யமான நாடு**" என்று பாபா தொடர்ந்தார். "**நான் அதை விரும்பினேன், ஆனால் அவர்கள் இப்போது சண்டைக்கோழிகள் போலப் போராடுகிறார்கள்! நீங்கள் எப்போதேனும் ஒரு சேவல் சண்டையைப் பார்த்திருக்கிறீர்களா? அதன் சிறப்பு அம்சம் என்னவெனில், இரண்டு சேவல்கள், இறுதி வரை போராடுகின்றன, இரண்டும் கொல்லப்படும் வரை விட்டுக் கொடுப்பதில்லை. இதர எல்லா சண்டைகளிலும், எவ்வளவு கடுமையானதாக இருந்தாலும்,**

**ஒன்று கொல்லப்பட்டு, மற்றொன்று வெற்றிவாகை சூடும். ஆனால் இந்த சேவல்களின் பொதுவான பண்பு என்னவெனில், இரண்டும் உயிரைத் துறக்கும் வரை போராடுகின்றன! ஸ்பெயின் நாட்டில் அவர்கள் அதையே செய்து வருகிறார்கள் - சண்டைக்கோழிகள் போல மோதிக் கொள்கிறார்கள்! ஒருவரையொருவர் விட்டுக்கொடுக்காமல், பல மாதங்களாக, சண்டை நடந்து கொண்டிருக்கிறது. இரு தரப்பினரும் மரணத்தை சந்திக்கும் வரை போராடுவார்கள்!"**

1937 ஜூலை மாதத்தில், ஜப்பானியர்கள் சீனாவைக் கைப்பற்ற ஒரு பிரச்சாரத்தை முன்னிறுத்தினர். பின்பு மெஹர் பாபா ஜப்பான் மற்றும் சீன நாடுகளின் நீண்டகால பரஸ்பர பகை பற்றி கூறினார்: **"அவர்கள் போராட வெளியே வரும் அணில்கள் போன்றவர்கள், போராடுகிறார்கள், எப்படி? கைகலப்புகளை உருவாக்கி, பின்பு தங்கள் கூடுகளை நோக்கிப் பாதுகாப்பிற்காகத் திரும்பி ஓடுகிறார்கள். பின்னர் இருவரும் வெளியே வந்து, மீண்டும் ஒரு கைகலப்பு, மீண்டும் திரும்பிச் செல்லுதல்! ஜப்பான் சக்தி வாய்ந்த நாடு, ஆனால் சீனாவில் அதிகமான அளவில் மக்கள் உள்ளனர், இதனால் அது ஒரு நிலைப்பாட்டை எடுக்க முடியும்."**

மெஹர் பாபா ரஷ்யா நாட்டைப் பற்றியும் குறிப்பிட்டார்: **"ரஷ்யா அதன் வாய்ப்புக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது, மேலும் ரஷ்யா அரங்கத்தில் நுழைந்தால், உலகின் பிற பெரிய நாடுகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று எதிரும் புதிருமாக நிற்கும், மீண்டும் ஒரு பெரிய போர் ஏற்படும். அதற்குப் பிறகு நான் எனது மந்திரக்கோலுடன் அரங்கில் நுழைவேன்!"**

ஒரு வாரத்திற்குப் பிறகு, ஜப்பான், சீனா இரண்டு நாடுகளுக்கும் இடையே போர் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. இதனால் பாபாவின் தற்போதைய பயணம், உலகளவில் பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாகக் கருதப்பட்டது.

1937, ஆகஸ்ட் 13 அன்று காலை ஆறு மணிக்கு பாபா குழுவுடன் மார்ஸெல்லஸை வந்தடைந்து, கிட்டி, டிலியா ஆகியோரை சந்தித்தார். பாபா பெண்மணிகளுடன் ஹோட்டல் டெர்மினஸில் (HOTEL TERMINUS) சில மணி நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது (பாபா முன்பு தங்கியிருந்த இடம்), ஆண்கள் சாமான்களைக் கையாண்டனர். பின்பு ரயிலில் கேன்ஸ் (CANNES) நகருக்கு மாலை நான்கு மணியளவில் வந்து சேர்ந்தனர். பாபாவின் வருகைக்கு முன்னர், கிட்டி ஜூன் மாத இறுதியில் கேன்ஸ் நகருக்குச் சென்று டிலியா மற்றும் நோரினாவின் சகோதரி மார்கெரிட்டா 'கிதா' கில்லி ப்ளம் (MARGHERITA 'GHITA' GILLI BLUM) ஆகியோரின் உதவியுடன் வில்லாக்களை வாடகைக்கு எடுத்திருந்தார்; கிட்டி, மெஹர் பாபாவிற்கு மிகுந்த அர்ப்பணிப்புடன் இருந்தார்.

ஏற்பாடுகள் அனைத்தும் மிகவும் இனிமையானதாக இருந்தன; ஆனால் ஒரு சில காரணங்களால் 'ஷெல்லி ஹவுஸ்' (SHELLY HOUSE), பாபா மற்றும் இந்திய பெண் மண்டலி தங்கியிருந்த வில்லா, அவரை அதிருப்தியடையச் செய்தது.

எனவே நோரினா வேறொரு வில்லாவை வாடகைக்கு எடுத்து, அதில் நோரினா, எலிஸபெத், ரானோ, கிட்டி ஆகியோரும் தங்கியிருந்தனர். ஆண் மண்டலி மற்றுமொரு வில்லாவிலும், இதர மேற்கத்திய அன்பர்கள் - டிலியா, ருவானோ, கிதா, ஜீன், மால்கம், நான்னி, ஸாம், கிறிஸ்டின் மெக்நாட்டன், அனிதா டி காரோ மற்றும் ஆண்ட்ரே அரோன் - மூன்றாவது வில்லாவில் இருந்தனர். நாசிக் ரிட்ரீட் (NASIK RETREAT) போலவே, மேற்கத்தியர்களின் வில்லாவில் ருவானோ வீட்டுத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

மெஹர் பாபா, கேன்ஸ் நகருக்கு வந்தபோது, மைசூர், கபுர்தலா, இந்தூர் மற்றும் நேபாளம் நகரங்களின் நான்கு இந்திய இளவரசர்களும் பொருத்தமான இடவசதிகளைக் கண்டுகொள்ள முயன்றனர். இங்கு வில்லாக்களைக் கண்டுகொள்வது மிகவும் கடினம், ஆனால் நோரினா தனது செல்வாக்கைப் பயன்படுத்தி (பின்னணியில் பாபாவின் உதவியுடன்), வேறொரு வில்லாவும் வாடகைக்கு எடுக்கப்பட்டது, இதை, பாபா உடனடியாக அங்கீகரித்து, ஆகஸ்ட் 15 அன்று அனைவரும் அங்குச் சென்றனர். ஒரு மலையில் அமைந்துள்ள பாபாவின் வில்லா, மோன்ட்ஃப்ளூரியில் (MONTFLEURY) ‘வில்லா கல்டானா’ (VILLA CALDANA) என்று அழைக்கப்பட்டது, மேலும் அவென்யூ டு ரோய் ஆல்பர்ட்டில் (AVENUE DU ROI ALBERT) அமைந்துள்ள ‘கேபோ டி மான்டி’ (CAPO DI MONTE) எனும் வில்லாவில் மண்டலி தங்கினர்.

இரண்டு பெண் பணியாட்களை ஏற்பாடு செய்யுமாறு பாபா, கிட்டியிடம் கேட்டிருந்தார், ஆனால் அவரால் லண்டனிலிருந்து ஒருவரை மட்டுமே அழைத்து வர முடிந்தது. பொதுவாக, அவரைப் பற்றியும் குழுவைப் பற்றியும் வீணாகக் கிசுகிசுப்பார்கள் என்ற எண்ணத்தில் உள்ளூர் பெண்களை வீட்டு வேலைகளில் பணியமர்த்த பாபா விரும்பவில்லை.

அதன் பின்பு, வில்லா கல்டானாவில் வீட்டு வேலைகளில் உதவும் வகையில் தனது ஐரோப்பிய சீடர்களில் ஒருவரின் மகள் எவரேனும் உள்ளனரா என்று கேட்டார்.

ஸூரிக் நகரில் வாழ்ந்த ஹெடி மெர்டென்ஸுக்கு தொலைத்தந்தி அனுப்பப்பட்டது. ஹெடியின் மகள் அன்னகாத்தரினா வீட்டுப் பராமரிப்பில் பழக்கமில்லை என்பதால், அதற்கு பதிலாக அவர்களது குடும்ப நண்பரான ஐரீன் ரத் பில்லோ (IRENE RUTH BILLO), இருபது வயதான இளம்பெண்ணை அனுகினார். பாபாவை சந்தித்த தனது பெற்றோர் மூலமாக ஐரீன், பாபா மீது ஆர்வம் காட்டினார். ஹெடியின் அழைப்பை ஏற்றுக்கொண்ட அவர், ஆகஸ்ட் 15 அன்று வில்லா கல்டானாவிற்கு வந்தார்.

மெஹர் பாபாவுடனான தனது முதல் சந்திப்பிற்கு வழிவகுத்த நிகழ்வுகளின் தொடரை ஐரீன் நினைவு கூர்ந்தார்:

1936ஆம் ஆண்டு ஒரு நாள் மதிய வேளையில் நான் எனது தந்தையின் அலுவலகத்தில் நுழைந்து, சாக்லேட்டுகளைத் திருட, அவரது ரகசிய அலமாரியைத் திறந்தபோது, ஃபெல்ட்மிலனில் - FELDMEILEN (மெர்டென்ஸின் இல்லத்தில்) எடுக்கப்பட்ட பாபாவின் புகைப்படத்தை முதன்முறையாகப்

பார்த்தேன். இது ஒர் அழகான படம், என்னில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. நான் பாபாவைப் பற்றி எனது தாயாரிடம் கேட்டேன், அவர் எனக்கு 'கேள்விகளும் பதில்களும்' என்ற கையேட்டைக் கொடுத்தார், ஆனால் நான் ஆன்மீக விஷயங்களில் அறிவுபூர்வமாக ஆர்வம் காட்டவில்லை.

நாசிக் ரிட்ரீட்டில் தங்கியிருந்த நோரினா எனது தந்தைக்குக் கடிதம் எழுதுவது வழக்கம்; அப்போது நானும் ஸூரிக் நகரில் கூட்டங்களில் கலந்துகொள்ளத் தொடங்கினேன். ஆனால் 1936 நவம்பரில் பாபா வந்தபோது அவரை சந்திக்க நான் செல்லவில்லை, மிகவும் வெட்கப்பட்டேன். எனது எல்லா ரகசியங்களும் பாபாவிற்குத் தெரியும், அவரால் அனைத்தையும் பார்க்க முடியும் என்பதை நான் உணர்ந்தேன்.

நான் கேன்ஸ் நகருக்கு வந்தபோது, எலிஸபெத் என்னை ரயில் நிலையத்திலிருந்து அழைத்துச் சென்றார். வில்லா கல்டானாவில் பாபாவை சந்தித்ததும், எனது இல்லத்திற்குத் திரும்பி வந்தது போல் உணர்ந்தேன். இதற்கு முன்னர் அல்லது அதற்குப் பிறகு நான் அனுபவிக்காத மிகப் பெரிய விஷயம் இது.

மறுநாள் மாலையில் பாபா என்னை அவர் அருகில் அமருமாறு கூற, மெஹரா மறுபுறம் அமர்ந்திருந்தார். பாபாவின் அருகில் அமரும் நேரமெல்லாம், உள்ளளவில் எதையோ கிளறிவிட்டு, எழுச்சியூட்டி என்னைத் தலைகீழாக மாற்றியது போல் உணர்ந்தேன். அவருடைய அன்பு, நான் அனுபவித்த எல்லாவற்றையும் விட மிகப் பெரியது.

ஐரீன், பாபாவின் அறையை அப்பழுக்கற்றதாக சுத்தம் செய்து அனைத்தையும் நேர்த்தியாக வைத்திருந்தார். இரவு கண்காணிப்பிற்காக காக்கா அமர்ந்திருக்கும் ஒரு சிறிய பாகத்தையும் ஐரீன் சுத்தம் செய்தார். ஐரீன் பாபாவின் தலையணைகளில் ஒட்டிக்கொண்டிருந்த தலைமுடியை சேகரித்து, கவனமாகப் பாதுகாத்தார்.

ஒரு வேடிக்கையான சம்பவம்; இது பாபாவின் தலைமுடியைப் பேணி பாதுகாப்பதில் ஐரீன் மிகவும் கவனமாக இருக்க முயற்சித்ததை உள்ளடக்கியது. சில நேரங்களில், காக்கா, படுக்கையிலிருந்து தலையணையை எடுத்து இரவு கண்காணிப்பின் போது நாற்காலியில் அமர்ந்திருக்கப் பயன்படுத்தினார்.

இந்தத் தலைமுடியை, பாபாவின் முடி என நினைத்து, ஐரீன் அதையும் சேகரித்து வந்தார், ஆனால் பாபா ஏன் இரண்டு இடங்களில் தூங்கியிருக்க வேண்டும் என்று ஆச்சரியப்பட்டார். இது பல நாட்கள் நீடித்தது, கடைசியில் ஒரு நாள், அவர் காக்காவின் தலைமுடியை, கவனமாக சேகரித்து வருவதைக் கண்டுபிடித்தார்.

பாபாவை சந்திக்கவும், இரண்டு அல்லது மூன்று நாட்கள் அவரது சகவாசத்தில் கழிக்கவும் பல ஐரோப்பியர்கள் கேன்ஸ் நகருக்கு வந்தனர். 1937 ஆகஸ்ட் 17 அன்று, ஆல்ஃபிரெடோ (ALFREDO), கான்ஸூலோ ஸைட்ஸ் (CONSUELO SIDES) இருவரும் பாரிஸ் நகரிலிருந்து சிறிது காலம் தங்குவதற்காக வந்தனர்.

அந்த நாளில், காக்கா மீண்டும் ஒரு சுருக்கமான ஆனால் மறக்கமுடியாத உரையை வழங்கினார் - உடைந்த ஆங்கிலத்தில், குறைந்த வார்த்தைகளில் அங்குக் கூடியிருந்தவர்களுக்கு இவ்வாறு அறிவுறுத்தினார்:

"இப்போது நான் கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளுக்கு, பொதுவாகப் பேச விரும்புகிறேன். இது அனைவருக்கும் பாடம். எங்கள் குருநாதரின் கட்டளைகளைப் பற்றி நான் பேச வேண்டும். குருநாதர் உத்தரவுகளை வழங்கும்போது அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பரவாயில்லை. எந்த விவாதமும் வேண்டாம். நீங்கள் குருநாதரைப் பின்பற்றும்போது ஒவ்வோர் ஆசையும் கைவிடப்பட வேண்டும் - ஏனெனில் ஒருவருக்கு நல்ல உணவு வேண்டும், இன்னொருவருக்கு நல்ல படுக்கை வேண்டும், மற்றொருவருக்கு நீச்சலுக்குச் செல்லும் ஆசை, யாரோ ஒருவர் ஷாப்பிங் செல்ல விரும்பினார். குருநாதருடன் வாழ்வதால் என்ன பயன்? விடுமுறைக்குச் செல்லுங்கள்!

"உங்களுக்கு குருநாதர் தேவையானால், எதையும் விவாதிக்காமல் அவர் கூறுவதைக் கேட்க வேண்டும். குருநாதரின் பணி (எப்படி) என்பது உங்களுக்குத் தெரியாது. எல்லா ஆசைகளும் விடுபட வேண்டும். குருநாதரின் கட்டளைகள் தவிர வேறு எதையும் ஒருபோதும் கோர வேண்டாம். . . அதனால்தான் நான் எப்பொழுதும் பாபாவின் வட்டத்து சீடர்களைக் கேட்டுக் கொள்கிறேன், நீங்கள் ஸ்ரீ மெஹர் பாபாவின் தொடர்பில் வரும்போது, எல்லா ஆசைகளையும் விட்டுவிட்டு மனநிறைவுடன் இருக்க வேண்டும். இது எனது கடைசி சொற்பொழிவு."

1937, ஆகஸ்ட் 19 அன்று இரவு, ஹெடி, வால்டர் மெர்டென்ஸ் இருவரும் தங்கள் மகள் அன்னகாத்தரினாவுடன் வந்தனர். பாபா அவர்களை வரவேற்று, **"மூன்று வாரங்கள் இங்கேயே இருங்கள். அனைத்து வெளியளவிலான எண்ணங்களையும் விட்டுவிட்டு, என்னுடைய சூழலில் சுவாசிக்கவும். என்னை மட்டும் நினைத்து, எல்லாவற்றையும் என்னிடம் விட்டு விடுங்கள், ஏனெனில் நான் எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருக்கிறேன்"** என்றார்.

அடுத்த நாள், 30 வயதான, பாரிஸ் நகரைச் சார்ந்த (PARISIAN) ரோஜர் வில்லார்ட் (ROGER VIEILLARD) என்பவர் பாபாவைப் பார்க்க வந்து, அவரை கடலோரப் பகுதிகளுக்குக் காரில் அழைத்துச் சென்றார். வில்லார்ட் ஒரு கலைஞராகவும், சர்வதேச டென்னிஸ் வீரராகவும் இருந்தார், மேலும் எதிர்வரும் போட்டிகளில் ஒன்றைப் பற்றி, பாபா ஆகஸ்ட் 22 அன்று அவரிடம் குறிப்பிடுகையில், **"நீங்கள் வெற்றிபெறுவதும் தோல்வியடைவதும் முக்கியமல்ல, ஏனெனில் நீங்கள் என் அன்பை வென்றீர்கள்!"** அவர் அனிதா டி காரோவை (அவரும் ஒரு கலைஞர்) திருமணம் செய்து கொள்ள விரும்பினார், மேலும் அவர்களின் நிச்சயதார்த்தத்திற்கு பாபா ஒப்புதல் அளித்தார். ரோஜர் குருநாதரிடம் மிகுந்த அர்ப்பணிப்புடன் இருந்தார், ரோஜர், அனிதா இருவரும் ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு, திருமணம் செய்து கொண்டனர்.

நாசிக் ரிட்ரீட் போலல்லாமல், பாபா, கேன்ஸ் நகரில் உடனிருந்த குழுவிற்கு, சில ஆன்மீக விளக்கங்களையும் சொற்பொழிவுகளையும் வழங்கினார். வில்லா கல்டானாவில் வசிக்கும் பெண்மணிகள் - மெஹரா, மணி, நாஜா, கோர்ஷெத், ஸூனாமாசி, வாலு, நோரினா, எலிஸபெத், ரானோ, கிட்டி ஆகியோர் - தோட்டத்தில் நடைப்பயிற்சி மற்றும் விளையாட்டுகளில் ஈடுபட்டனர். மணிக்கு, சுருக்கெழுத்து, தட்டச்சு போன்ற பாடங்களை கிட்டி கற்றுத் தந்தார்; மெஹரா பியானோ பயிற்சியை விரும்பினார்; ஆண்ட்ரே அரோன் கிழக்கத்திய பெண்களுக்கு ஆடை தயாரிக்கும் பாடங்களை அளித்தார்; எலிஸபெத், ஐரீன் இருவரும் மளிகை கடையிலிருந்து பொருட்களை வாங்கிவந்தனர்.

காலை பத்து மணி முதல் நண்பகல் வரை பாபா, பார்வையாளர்களை சந்தித்து, நேரடி பேட்டிகளை வழங்க 'கேப்போ டி மான்டே'க்குச் (CAPO DI MONTE) சென்றார்; சில நேரங்களில் நடைப்பயிற்சியில் ஈடுபடுவதும், அல்லது எலிஸபெத்துடன் காரில் செல்வதும், ஐரீனுடன் சவாரி செய்வதையும் வழக்கமாகக் கொண்டார். அவர் மதிய உணவுக்காக வில்லா கல்டானாவிற்குத் திரும்பிச் சென்று, மூன்று மணிக்கு மேல் கேப்போ டி மான்டேயில் மண்டலி அல்லது பார்வையாளர்களை சந்தித்தார்; மாலை 5:30 மணிக்கு இரவு உணவிற்காகத் திரும்பி வந்து, மாலை நேரங்களில், பிங்-பாங் அல்லது 'சைகை மொழி விளையாட்டு' விளையாடினார்; மேலும் பலமுறை அவர் கிராமப்புறங்களில் காரில் பெண் மண்டலியை வெளியே அழைத்துச் சென்றார்.

ஒரு நாள் பாபா, ரோஜர், ஆல்ஃபிரடோ இருவரையும் 'நைஸ்' (NICE) நகருக்குச் சென்று 'சைவ உணவு உண்ணும்' ஒரு குறிப்பிட்ட ஆங்கிலேயரைக் கண்டுபிடித்து, கல்டானாவிற்கு அழைத்து வருமாறு அறிவுறுத்தினார். பாபா அந்த நபரைப் பற்றிய விபரம், பெயர், விளக்கம் எதையும் வழங்கவில்லை; இருப்பினும், அவர்கள் உடனடியாக வெளியே சென்றனர்; பாபாவிற்குப் புதியவர்கள் என்பதால், அந்த உத்தரவை, பெரியதொரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாமல், விசித்திரமாக நினைத்தனர். அவர்கள் நைஸ் நகருக்கு வந்து, தற்செயலாக ஒரு சிறிய மளிகைக் கடைக்குள் நுழைந்ததும், அவர்களின் முட்டாள்தனத்தை உணர்ந்திருந்தாலும், இங்கு அருகில் வசிக்கும் ஏதேனும் சைவ ஆங்கிலேயரை அறிந்திருக்கிறீர்களா என்று உரிமையாளரிடம் கேட்டனர். அவர்களுக்கு ஆச்சரியமளிக்கும் விதத்தில், அந்தக் கடைக்காரர் இங்கிலாந்திலிருந்து ஒரு மனிதர் அக்கம் பக்கத்தில் இருப்பதாகவும், அத்திப்பழங்களை மட்டுமே உண்பதாகவும் கூறினார்! உடனே, இருவரும் அந்த முகவரிக்குச் சென்று பாபாவைப் பற்றி அந்த மனிதரிடம் கூறியபோது, அவர் பாபாவை சந்திக்க அவர்களுடன் கல்டானாவிற்குச் செல்ல ஒப்புக்கொண்டார். இந்த சந்திப்பில், பாபா பெருமகிழ்ச்சி அடைந்தார், இந்த அசாதாரண ஆத்மாவுடன் மெஹர் பாபா செய்ய விரும்பிய சில பணிகளை நினைத்து ரோஜர், ஆல்ஃபிரடோ இருவரும் மனமகிழ்ந்தது மட்டுமின்றி,

அவருடைய பணிகளைச் செய்வதில் ஒரு மறக்கமுடியாத பாடத்தையும் கற்றுக்கொண்டனர்.

ஒரு நாள் அனிதா, பாபாவைப் பற்றி எடுத்துக் கூறிய ஒரு சுவிஸ் மனிதர் அவரை சந்திக்க வந்தார். பாபாவை சந்திப்பதற்கு முன்பு தன்னைத் தயார் படுத்திக் கொள்ளும் நோக்கத்தில் அவர் உண்ணாவிரதம் மேற்கொண்டு, மூன்று நாட்களாக எதுவும் உண்ணவில்லை என்று பாபாவிடம் கூறினார். "**நீங்கள் பசியுடன் இருப்பீர்கள்**" என்று அப்பாவித்தனமாக சைகையால் காட்டி பாபா அவரை உற்று நோக்கினார். வந்தவர் அதிர்ச்சியடைந்த அவ்வேளையில் பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்: "**நீங்கள் அமர்ந்திருக்கும் அந்த நாற்காலியைப் போலவே ஆன்மீகம் இயல்பானது, இயற்கையானது. நீங்கள் உண்ணாவிரதம் இருக்கத் தேவையில்லை. அன்பு ஒன்றுதான் முக்கியம். என்னை நேசிக்கவும்.**"

அனிதா திறமையான ஒரு கலைஞர்; அவர் கேன்ஸ் நகரில் இருந்த வேளையில் ஒரு சித்திரம் வரைந்து அதை, பாபாவிடம் காட்டினார்; அது மிகவும் சிறப்பாக உள்ளது என்று பாபா கருத்துத் தெரிவித்தார். அதற்குப் பிறகு பாபா, ரானோவின் கருத்தைக் கேட்டபோது, அவர், உண்மையில் நான் அதைப் பொருட்படுத்தவில்லை என்று கூறினார். பாபா, ரானோவைக் கண்டித்து, "**நீங்கள் இப்படி எவ்வாறு சொல்ல முடியும்? இது மிகவும் அழகாக உள்ளது! உங்களால் இது போல் ஒருபோதும் வரைய முடியாது!**" என்று ரானோவை எரிச்சலூட்டும் விதத்தில் அனிதாவின் திறமைகளைத் தொடர்ந்து புகழ்ந்து பேசினார்.

சில மாதங்களாக, ரானோ ஒரு பெரிய ஓவியத்தில் பாபாவின் அறிவுறுத்தல்படி ரகசியமாகப் பணி புரிந்து வந்தார். இது, பின்பு 'பத்து வட்டங்கள்' (TEN CIRCLES) என்று அழைக்கப்பட்டது. இந்த ஓவியத்தின் வேலைகளைத் தொடர, கேன்ஸ் நகருக்குத் தனது ஓவியப் பொருட்கள் அனைத்தையும் எடுத்து வருமாறு பாபா, ரானோவிற்கு அறிவுறுத்தியிருந்தார். ஒரு நாள், ரானோ அந்த ஓவியத்தில் ஒரு பாகத்தை வரைந்து கொண்டிருந்தபோது, பாபா அதைப் பற்றிய சில விமர்சனங்களை முன்வைத்தார். "அனிதாவின் வரைபடத்தை நீங்கள் மிகவும் விரும்பினால், ஏன் இந்த வேலையைச் செய்யும்படி அவளிடம் கேட்கக்கூடாது?" என்று ரானோ வினவினார்.

ரானோவின் வார்த்தைகளை விரும்பாமல் பாபா "**நீங்கள் ஓர் உதவாக்கரை! உங்களுக்கு அறிவே இல்லை! எனது கட்டளைகளை நிறைவேற்றுவதே உங்கள் கடமை!**" என்று கூறி, உதடுகளை மூடிய வண்ணம், அவருடைய ஒவ்வொரு மெட்டுக்கும் நடனமாடக் கற்றுத் தந்தார். சில நேரங்களில், பாபா அவரைக் கிண்டல் செய்தார், "**நீங்கள் ஏன் உங்கள் தாயைப் போல் ஒரு நல்ல பெண்மணியாக இல்லை? நான்னி மிகவும் இனிமையானவர், நீங்கள் ஏன் அவரைப் போல் இருக்க முடியாது?**" - இது ரானோவின் அகந்தையை நசுக்குவதற்கான அவரது பணியின் ஒரு பகுதியாகும்.

1937, ஆகஸ்ட் 21 அன்று பிரபல அமெரிக்க நாவலாசிரியரான வில்லியம் ஹென்றி வார்னர் (WILLIAM HENRY WARNER) பாபாவை சந்திக்க வந்தார். அவர், “உங்களை சந்திப்பது ஒரு மரியாதை மற்றும் மகிழ்ச்சி தரும் சிறப்புமிக்க வாய்ப்பு” என்றார். பாபாவும் அவரை சந்தித்ததில் மகிழ்ச்சியடைவதாகக் கூறினார். வார்னர் பாபாவிடம், “நீண்ட காலமாக, நான் அன்பின் உண்மையான வரையறையைக் கண்டுகொள்ள முயற்சிக்கிறேன். அது என்னவென்று நீங்கள் சொல்ல முடியுமா?” என வினவினார்.

அதற்கு பதிலளித்த பாபா, “**அன்பு என்றால் எந்த வெகுமதியையும் எதிர்பாராமல், அள்ளி வழங்கும் வாழ்க்கை**” என்றார்.

வார்னர், பாபாவின் இந்த மணிச்செறிவான ஓரடிச் சொற்களால் வெகுவாக ஈர்க்கப்பட்டார், மேலும் பாபா தொடர்ந்தார், “**மக்கள் தர வேண்டும், பின்பு பெற வேண்டும். முதலில் தருவதாயின், பின்னர் உங்களிடம் அனைத்தும் இருக்கும். ஆனால் அதற்கு பதிலாக, மக்கள் முதலில் அனைத்தையும் தம்முடன் வைத்திருக்க விரும்புகிறார்கள், பின்பு கொடுக்க நினைக்கிறார்கள். இது சரியான வழி அல்ல.**”

கல்டானாவில் இருந்தபோது, பாபாவுடன் ஒரு சந்திப்பை நிகழ்த்த, குறிப்பாக, நோரினா ஆர்வம் காட்டிய ஒரு ரஷ்ய பாலே நடனக் கலைஞர் வாஸ்லாவ் நிஜின்ஸ்கி (VASLAV NIJINSKY) ஆவார். நிஜின்ஸ்கி ரஷ்ய பாலே ‘இம்ப்ரஸாரியோ ஸெர்கி டையாகிலே’வின் (IMPRESARIO SERGEI DIAGHILEV) முன்னணி நடனக் கலைஞராக இருந்தார் (அவருடன் மார்கரெட் க்ராஸ்கேயும் பணியாற்றினார்). 20ஆம் நூற்றாண்டின் மிகச்சிறந்த ஐரோப்பிய ஆண் நடனக் கலைஞராகக் கருதப்பட்டாலும், நிஜின்ஸ்கியின் வாழ்க்கை அதன் உச்சக்கட்டத்தில இடர்பாடுகளால் நிறைந்திருந்தது. 29 வயதில், மனநோயால் கடுமையாகப் பதற்றமடைந்த நிஜின்ஸ்கி ஓய்வு பெற்றார், அடுத்த 31 ஆண்டுகள் மனநிலை புகலிடத்திற்கு உள்ளேயும் வெளியேயும் வாழ்க்கையைக் கழித்தார். ஃபிரான்ஸ் பயணத்தின் போது நிஜின்ஸ்கியைப் பற்றி நோரினா பாபாவிற்குத் தெரிவித்தார். அவருடன் சில மாதங்கள் தங்க முடிந்தால், நிஜின்ஸ்கியை அவரது மனநிலை பாதிப்பிலிருந்து குணப்படுத்த முடியும் என்று பாபா சுட்டிக்காட்டினார். ஆனால், அவரை விரைவில் விடுவித்து பாபாவிடம் அழைத்து வர முடியுமா என்று நோரினா கேட்டபோது, பாபா, “**என்னைச் செய்யவிடுங்கள்**” என்று பதிலளித்தார்.

1937 ஆகஸ்ட் 21 அன்று நிஜின்ஸ்கியின் மனைவி அவரை புகலிடத்திலிருந்து வெளியேற்றத் திட்டமிட்டுள்ளதாக நோரினா செய்தித்தாளில் படித்தார். இருப்பினும், நிஜின்ஸ்கி ஒருபோதும் மெஹர் பாபாவை சந்திக்கவில்லை.



காான்ஸுலோ ஸைட்ஸுடன் காலை சிற்றுண்டி - கேன்ஸ் **1937**

(BREAKFASTING WITH CONSUELO SIDES – CANNES 1937)



பாரிஸ் செல்லும் பாதையில் சுற்றுலா, செப்டம்பர் **1937**

**மணி** (MANI)**, பாபா** (BABA)**, மெஹரா** (MEHERA)**, கிட்டி** (KITTY)**, கோர்ஷெத்** (KHORSHED)**, நாஜா** (NAJA)

(PICNICKING EN ROUTE TO PARIS - SEPTEMBER 1937)

ஆகஸ்ட் 21 அன்று பிற்பகல், கிறிஸ்டின் லண்டனுக்குப் புறப்பட்டார். அவரும் மெஹர் பாபாவைக் கடைசியாக சந்தித்த வாய்ப்பு இது. (1941ஆம் ஆண்டு லண்டனில் ஜெர்மன் வான்வழித் தாக்குதலின் போது அவர் கொல்லப்பட்டார்.)

அன்று இரவு, பாபா, மண்டலி, நோரினா, எலிஸபெத் ஆகியோருடன் 'மான்டி கார்லோ'விற்கு (MONTE CARLO) 'கேசினோ'க்களைப் (CASINOS) பார்க்கச் சென்றார். மாற்று உடை அணிந்த பாபா அதிர்ச்சியூட்டும் அற்புதமான தோற்றத்தில் இருந்தார்; நோரினாவின் தொப்பி மற்றும் மெர்சிடிஸின் மென்மையான ஃபிரஞ்சு தட்டைத்தொப்பியும் அணிந்திருந்தார்.

ஆகஸ்ட் 22, ஞாயிற்றுக்கிழமை, பாபா விளக்கிய ஆன்மீக கருப்பொருட்களை மையமாக வைத்து, குறும் திரைபடங்களைத் தயாரிக்கும் தனது யோசனையை, ஆல்ஃபிரடோ, பாபாவுடன் விவாதித்தார். பாபா அவரை ஊக்குவிக்கும் விதத்தில், **"ஒரு பாவி, துறவியாக மாறுவதற்கான தனித்துவமான அனுபவங்களையும் முயற்சிகளையும் குறுகிய ஆனால் சுவாரஸ்யமான கதை வடிவங்களில் வியக்கத்தக்க முறையில் நிரூபிக்கலாம், இது ஆடம்பரத்தை விரும்பும் மக்களை உற்சாகப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், விறுவிறுப்பான விதத்தில் 'மனிதன் கடவுள் ஆகலாம்' என்ற ஒரே உண்மையை கற்பிக்கும்!"**

ரோஜர் மறுநாள் மாலை பாரிஸ் நகருக்குப் புறப்பட்டார், புறப்படுவதற்கு முன்பு பாபாவிடம், "முதலில் நான் அனிதாவின் காரணமாக உங்களை நேசித்தேன், ஆனால் இப்போது நான் உங்களால் அனிதாவை நேசிக்கிறேன்" என்று கூறினார்.

ரானோ, பாபாவின் வில்லாவில், நோரினாவும் எலிஸபெத்தும் இருந்த மூன்றாவது மாடியில் தங்கியிருந்தார். பாபாவின் அறை, தாழ்வாரத்தின் முடிவில் இருந்தது. அந்த நேரத்தில் ரானோ அதை உணரவில்லை என்றாலும், பாபா, இந்தியாவில் அவருடன் நிரந்தரமாக வாழும் நோக்கத்தில் கேன்ஸில் அவருக்குப் பயிற்சி அளிக்கத் தொடங்கினார். இரவில், பாபா அடிக்கடி காக்காவை ரானோவின் அறைக்கு அனுப்பி வைத்தார். காக்கா கதவைத் தட்டும் வேளையில், ரானோ வெளியே வரவும், "பாபா உங்களை அழைக்கிறார்" என்று காக்கா கூறினார். . . எனவே ரானோ அவருடன் பாபாவின் அறைக்குச் சென்றதும், பாபா, இயல்பாக ரானோவிடம் **"சோடா நீர் வாங்குவது குறித்து நீங்கள் நாளை எனக்கு நினைவூட்ட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவ்வளவுதான். இப்போது நீங்கள் போய் ஓய்வெடுங்கள்"** என்றார்.

தனது அறைக்குத் திரும்பிய ரானோ, 'பூமியில், பாபா ஏன் இந்த நள்ளிரவில், இப்படி ஒரு சாதாரண காரியத்திற்காக அவரை அழைத்தார்' என்று யோசித்தார். மீண்டும் சிறிது நேரத்திற்குப் பிறகு, கதவைத் தட்டும் சத்தம் கேட்டது, ரானோ மறுபடியும் அழைக்கப்பட்டார். **"சோடா நீரைப் பற்றி எனக்கு நினைவூட்ட மறந்துவிடாதீர்கள். இப்போது தூங்கச் செல்லுங்கள்; நீங்கள்**

**சோர்வாக இருக்கிறீர்கள்**" என்று பாபா எழுத்துப்பலகை வழியாக எடுத்துக் கூறினார். ரானோவிற்கு 'ஏன்' என்று புரியவில்லை; இதுபோன்ற ஒரு சாதாரண விஷயத்திற்காக, பாபா மீண்டும் தூக்கத்திலிருந்து தொந்தரவு செய்தார். ஆயினும்கூட, இரவு முழுவதும், முக்கியமற்ற சோடா நீரின் நினைவால் தூக்கமின்றித் தவித்தார். பாபா, ரானோவையும் தூங்க அனுமதிக்கவில்லை அவரும் தூங்கவில்லை. பல வருடங்களுக்குப் பிறகுதான், ஒரு குருநாதரின் உத்தரவுகள் மற்றும் இனம்புரியாத ஆசைகளை நிறைவேற்றுவதற்கும், எந்த நேரத்திலும் எப்பொழுது வேண்டுமானாலும் எச்சரிக்கையுடன், விருப்பங்களுக்கு இணங்கவும் ஒருவர் தயாராக இருக்க வேண்டும் என்பதை ரானோ உணர்ந்தார்.

மற்றுமோர் இரவு, காக்கா மீண்டும் ரானோவின் கதவைத் தட்டி, அவர் வெளியே வந்ததும், "எங்கிருந்தோ புகை வருகிறது, ஏதோ எரிவதை நீங்கள் கண்டுபிடிக்க பாபா விரும்புகிறார்" என்று கூறினார்.

ரானோ சமையலறைக்குக் கீழே சென்று, ஐரீனின் உதவியுடன், (மரத்துண்டு மற்றும் நிலக்கரியைப் பயன்படுத்தும்) அடுப்பு சரியாக அணைக்கப்படாமல் அலட்சியமாக விட்டுவைக்கப் பட்டதைக் கண்டார். பாபாவும் காக்காவுடன் சமையலறைக்குச் சென்றார், ஜன்னல்கள் அனைத்தையும் திறந்து சரிசெய்த பின்பு, பாபா தனது அறைக்குத் திரும்பினார்.

ரானோ தூங்கச் சென்றதும் காக்கா மறுபடியும் கதவைத் தட்டியதால் விரைவில் மீண்டும் விழித்தெழுந்தார். கதவைத் திறந்தபோது, "நீங்கள், வீடு முழுவதையும் ஒருமுறை கூட நோட்டமிட்டு அனைத்தும் பாதுகாப்பாகவும் பத்திரமாகவும் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும் என்று பாபா விரும்புகிறார்" என்றார். ரானோவும் அவ்வாறே செய்து, எல்லாம் நன்றாக உள்ளது என்று காக்கா வழியாக, பாபாவிற்குத் தெரியப்படுத்தினார்.

விரைவில், காக்கா மீண்டும் அதே செய்தியுடன் ரானோவின் அறை கதவைத் தட்டினார். இவ்வாறு இரவு முழுவதும் நடந்தது; 'ஏன்' அல்லது 'எதற்கு' என்ற கேள்வி எதுவுமின்றி, பாபாவின் கட்டளைப்படி ரானோ எதையும் செய்யக் கற்றுக்கொண்டார்; இப்படி அவரது மன எதிர்வினைகளைப் புறக்கணித்து, பாபாவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து, எந்நேரமும் குருநாதரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்து, அவரை மகிழ்விப்பதே அனைத்திலும் தலையாய கடமை என்பதை ரானோ கற்றுக்கொண்டார்.

பாபாவின் இரவு கண்காணிப்பாளராகப் பணிபுரிவது உண்மையிலேயே கடினமான பணியாகும். சிறிதளவிலான அசைவும், அரவமும் கூட தடைசெய்யப்பட்டது. ஒருவர் இருமுவது, தும்முவது அல்லது கழிவறைக்குச் செல்வதும் முடியாத காரியம். இந்தியாவில் கொசுக்கள் அதிகம், ஆனால் பாபாவைத் தொந்தரவு செய்யும் சத்தம் எழுமோ என்ற அச்சத்தில் கைகால்களை அசைக்க முடியாத நிலை. காக்கா போன்ற வயதான ஒருவருக்கு இரவு கண்காணிப்பு மிகவும் கடினமாக இருந்ததால் அவர் இரவில் தன்னை விடுவித்துக் கொள்ள முடியாத நிலை. பாபாவின் தொடர் பயிற்சியால் சில ஆண்கள் அதைச் செய்ய முடிந்தாலும், அது மிகப்பெரிய சோதனையாக

இருந்தது. ஒருவர் முயற்சிக்கும் வரை குருநாதருக்கு சேவை செய்வதில் உள்ள கஷ்டங்களை, கற்பனை செய்வது கடினம்.

மார்கரெட், மேபெல் இருவரும் 1937 ஆகஸ்ட் 26 அன்று லண்டனிலிருந்து வந்தனர். மேபெல், கல்டானாவில் பாபாவுடன் தங்கியிருந்தார், ஆனால் மார்கரெட் சில நாட்களில் திரும்பிச்செல்ல வேண்டியிருந்தது.

குருநாதர் தனது நெருங்கிய அல்லது சோதனைக்குள்ளாக்கப்பட்டு நிரூபிக்கப்பட்ட சீடர்களிடமிருந்து மட்டுமே அவ்வப்போது பணத்தைப் பரிசாகப் பெற்றுக்கொள்வது வழக்கம். புதிய நபர்கள் அவருக்கு பணத்தை வழங்கினாலும், அவர் சாதாரணமாக அதை மறுத்தார். யாரோ ஒருவர் 'மெஹர் பாபா' பெயரில் வில்லா கல்டானா முகவரிக்கு ஒரு காசோலையை அனுப்பினார். அதில் பாபா எம். எஸ். ஈரானி என்று கையெழுத்திட்டதால், 'பாங்க் ஆஃப் மார்ஸெல்லஸ்' கிளை அதை 'மெஹர் பாபா' ஒப்புதல் அளிக்கும் வரை பணமாக மாற்ற மறுத்துவிட்டது. ஆகையால், ஆகஸ்ட் 26 அன்று, கேபோ டி மான்டேயில், பாபா, சாஞ்சி வைத்திருந்த (நீல நிற மை) பேனாவால், அவரது கையைப் பிடித்து, 'மெஹர் பாபா' என்று கையொப்பமிட்டார். நோரினா, சாஞ்சி ஆகியோருடன், ஹெடி மெர்டென்ஸ், பாபாவை, தாமஸ் குக் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று காசோலை, பணமாக்கப்பட்டது.

பாபா தனது பெயரை 'மெஹர் பாபா' என்று கையெழுத்திட்டது இதுவே முதல் முறை.

சாஞ்சி அதன் முக்கியத்துவத்தை நினைத்து ஆச்சரியப்பட்டார்:

ஆகஸ்ட் 1931இல் (1927இல் பாபா எழுதுவதை கைவிட்ட நாளிலிருந்து) கராச்சியில் (தனது பாஸ்போர்ட்டிற்காக) முதல் முறையாக பாபா 'எம். எஸ். ஈரானி' என்று கையெழுத்திட்ட அவ்வேளையில், புகழ்பெற்ற காந்தி - இர்வின் ஒப்பந்தம் உருவானது; மேலும் பாபா, காந்தியை அவருடன் மேற்கு நோக்கி அதே கப்பலில் அழைத்துச் சென்றார் (அந்த நேரத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் காந்தி இயக்கத்திற்கும் இடையிலான பதற்றம் காரணமாக அது சாத்தியமற்றது என்று கருதப்பட்டது).

ஃபிரான்ஸ் நாட்டில் இந்நேரத்தில் இந்தப் புதிய நடவடிக்கை மற்றும் கருத்தை வெளிப்படுத்தும் செயற்குறிப்பு என்னவெனில், உலகெங்கிலும் உள்ள குழப்பமான சூழ்நிலையிலிருந்து சீனாவும் ஜப்பானும் ஷாங்காயைச் சுற்றி ஒருவருக்கொருவர் குரல்வளையை நெருக்குகின்றனர். (ஸ்பெயின் நாட்டில் ஃபிராங்கோ தனது வெற்றிக்காக அனைத்து தைரியமான முயற்சியை மேற்கொள்கிறார். ஐரோப்பிய அரசியல் நிலைமை மிகப் பெரிய குழப்பத்தில் உள்ளது. என்ன நடக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.)

1937, ஆகஸ்ட் 27 அன்று, சுவிட்சர்லாந்து நாட்டின் ஓவியர் ஹெலன் டாம் (HELEN DAHM) அவரது நண்பர் ஆலிஸ் (ALICE) என்பருடன் வந்தார். அன்று மாலையும், தொடர்ந்து அடுத்த நாளும் பாபாவை அவர்கள் சந்தித்தனர்.

அந்த நாளில், பாபா, டிலியா மற்றும் சிலரிடம், "**நான் மாட்ரிட் நகரில்** (MADRID) **செய்ததைப் போல, சிறிது நேரம் மக்கள் மத்தியில் இருக்க விரும்புகிறேன். இதுபோன்ற இடங்களையும், மக்கள் ஒன்று திரளும் நேரத்தையும் கண்டுபிடியுங்கள்**" என்று குறிப்பிட்டார்.

"நீங்கள் மாட்ரிட் நகரில் ஒரு மக்கள் கூட்டத்துடன் கலந்தீர்கள், இதன் விளைவாக ஒரு பெரிய புரட்சியே ஏற்பட்டது" என்று டிலியா நகைச்சுவையாகக் கூறினார்.

ஸ்பெயின் தேசத்தைப் பற்றி பாபா குறிப்பிடுகையில், "**நான் ஒன்றை மீண்டும் கட்டியெழுப்பும் எண்ணத்தில் அதை அழிக்கிறேன். நான் மக்களிடையே மணிக்கணக்கில் சுதந்திரமாக நகர்ந்து, மனிதர்களுக்கும் பொருட்களுக்கும் ஒரு புதிய ஜீவிதம் மற்றும் மறுசீரமைப்பை உருவாக்கும் நோக்கத்தில் பணிபுரிந்தேன். இதற்காக நான், நீங்கள் இப்போது பார்க்கும் எல்லா பொருட்களையும் அழித்து சின்னாபின்னமாக்க வேண்டியது அவசியம்.**"

1931இல் ஹார்மன் ரிட்ரீட்டில் பாபாவை முதன்முதலில் சந்தித்த டோரதி நோரிஸ் (DOROTHY NORRIS) ஆகஸ்ட் 28 அன்று கேன்ஸ் வந்து சில நாட்கள் தங்கியிருந்தார்.

கேன்ஸ் வில்லாவில் ஒரு நாள் பாபா இவ்வாறு தெரிவித்தார், "**எனது பணிக்கு ஆரோக்கியமான, அழகான, புத்திசாலியும், கள்ளங்கபடமற்ற சிறுவன் ஒருவன் தேவை. காமத்தை அடியோடு குறைக்க, குறிப்பாக ஓரினச் சேர்க்கையாளர்கள் சம்பந்தப்பட்ட உலகிற்காக நான் செய்ய விரும்பும் பணிக்கு, இத்தகைய குணங்கள் மிகவும் அவசியம். இது இப்போது உலகம் முழுவதும் ஆபத்தான அளவிற்கு நடைமுறையில் உள்ளது. சிறுவன் அப்பாவியாக இல்லை என்றால், அவன் எனது நோக்கத்தை உடனடியாக, தவறாகப் புரிந்துகொள்வான், இது எனது பணிக்கு உதவுவதற்கு பதிலாக, தடையாக இருக்கும்.**"

மற்றுமொரு தருணத்தில், பாபா, சிறுவர்களுடன் மேற்கொள்ளும் பணியைப் பற்றி கிட்டி கேள்வி எழுப்பிய போது, "**நான் எதிர்கால இளைஞர்களுடன் இணைந்து பணியாற்றுகிறேன்**" என்று குறிப்பிட்டார்.

கேன்ஸ் வில்லாவில் குழுவுடன் தங்கியிருந்த வில்லியம் டான்கின், ஒரு சிறுவனைக் கண்டுபிடிப்பதற்கான பாபாவின் விருப்பத்தைப் பற்றி கேள்விப்பட்டதும், அத்தகைய இளைஞனைத் தேடி அவர் இங்கிலாந்திற்குச் சென்றார். டான்கின் ஆகஸ்ட் 28 அன்று காலையில் 'ஜோஸ் லூயிஸ்' (JOSE LUIS) என்ற இளம் ஸ்பெயின் நாட்டு அகதியுடன் கேன்ஸ் நகருக்குத் திரும்பி வந்தார்.

பாபா அந்த சிறுவனை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், வில்லாவில் தங்க வைத்தார்.

அதைத் தொடர்ந்து உடனடியாக, கிட்டி வேறொரு சிறுவனைத் தேடுவதற்காக, பாரிஸ் நகருக்குச் செல்லும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டார்; தேவைப்பட்டால், அதற்காக பாபா, டான்கினுடன் அங்கே விமானத்தில் செல்லவும் தயாராக இருப்பதாகச் சுட்டிக்காட்டினார். கிட்டி மறுநாள் மாலை மார்கரெட்டுடன் புறப்பட்டார். அவர்கள் பாரிஸ் நகரில் அமைந்த ஸ்பெயின் நாட்டின் அகதிகள் முகாமுக்குச் சென்றனர், அங்கு, பாபா ஒரு சிறுவன் இருப்பதாகப் பலமுறை சுட்டிக்காட்டினார்.

ஆகஸ்ட் 30ஆம் நாள் கிட்டி தொலைபேசி மற்றும் தொலைத்தந்தி மூலமாக, சிறுவனைக் கண்டுகொண்ட செய்தியைத் தெரிவித்த போது, பாபா உடனே, '**அழைத்து வாருங்கள்**' என்ற பதில் தந்தியை அனுப்பினார். ஆகஸ்ட் 31 அன்று, கிட்டி, 'பெல்லர்மினோ' (BELLARMINO) என்ற ஸ்பெயின் நாட்டு சிறுவனை பாபாவிடம் அழைத்து வந்தார். ஆனால், பாபா இந்த சிறுவனையும் ஏற்றுக்கொள்ளாமல், பதிலாக, ஜோஸ் லூயிஸ் தங்க வேண்டும் என்று முடிவு செய்தார். "**ஒருவேளை, லூயிஸ் என்னை நேசிக்க ஆரம்பித்தால், நான் அவனை என்னுடன் இந்தியாவிற்கு அழைத்துச் செல்லலாம்**" என்று பாபா குறிப்பிட்டார்.

இதற்கிடையில், வில்லாவில் நிலவிய சூழ்நிலை மாற்றங்கள், நாளுக்கு நாள், அந்த சிறுவனிடம் விரும்பத்தக்க விளைவை ஏற்படுத்தியதாகத் தோன்றியது, ஏனெனில், அவன் ஆரோக்கியத்துடன் கலகலப்பான அணுகுமுறையைக் கையாண்டான்; பாபாவைப் பற்றி மேலும் அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றான். சிறுவன் தினமும் காலையில் பாபாவின் வருகைக்காகக் காத்திருந்து, அவரை 'மன்னர்களுக்கெல்லாம் மன்னர்!' (KING OF KINGS - கிங் ஆஃப் கிங்ஸ்!) என்று அழைத்தான். '**பாபா, லூயிஸை நேசிக்கிறார்**' (பாபா, லூயிஸ் அமோர் - BABA LOVES LUIS) என்று பாபாவின் எழுத்துப் பலகையில் உச்சரித்து மிக்க மகிழ்ச்சி அடைந்தான்.

பாபா, வில்லாவிலிருந்து ரானோவுடன் காலையில் ஆண் மண்டலியின் வில்லாவிற்கு நடந்து சென்று, அங்கு அவர் பார்வையாளர்களை சந்திப்பது வழக்கம். லூயிஸ் எப்பொழுதும் பாபாவின் அருகில் அமர விரும்பினான், ஆனால், சிறிது நேரம் பாபா அதை அனுமதித்து பின்பு வேறு அறைக்கு அனுப்பி வைத்தார், ஏனெனில் வந்தவர்களில் பலர் பாபாவுடன் தனிப்பட்ட முறையில் பேச விரும்பினர். ஒரு நாள் லூயிஸ், ஆல்ஃபிரடோவிடம், "நீளமான தலைமுடியுடன் கூடிய இந்த மனிதரை நான் விரும்புகிறேன். அவர் மிக்க அன்பும், கனிவும் நிறைந்தவர்; ஆனால் என்ன பரிதாபமான நிலை, அவரால் பேச முடியாது" என்று கூறினான்.

சில நாட்களுக்குப் பிறகு, பாபா, டான்கினை தனிப்பட்ட முறையில் சந்தித்து இவ்வாறு வெளிப்படுத்தினார், "**இன்னும் சில நாட்கள் இங்கு நீங்கள் எனது நெருங்கிய தொடர்பில் இருக்க விரும்புகிறேன். நான் உங்களை**

**மிகவும் நேசிக்கிறேன். நான் உங்களுக்கு, சிறப்பான ஒன்றை வழங்க விரும்புகிறேன். ஆனால் இங்கு நிலவும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, இந்த நேரத்தில் நான் விரும்பும் நெருக்கமான சகவாசத்தை என்னால் வழங்க முடியாது, ஏனெனில் பலர் வந்து போகிறார்கள்.**"

ஆகவே, 1937 ஆகஸ்ட் 31 அன்று பாபா, டான்கினை லண்டனுக்கு அனுப்பி வைத்து, தனது மருத்துவ படிப்பைத் தொடரவும், 25 நாட்களுக்குப் பிறகு கேன்ஸ் நகருக்கு வருமாறும் கூறினார். பெல்லர்மினோவை பாரிஸ் நகருக்கும், (கிட்டி அழைத்து வந்த சிறுவன்) ஆங்கில பணிப்பெண்ணை மீண்டும் இங்கிலாந்திற்கு அழைத்துச் செல்லவும் பாபா, டான்கினுக்கு அறிவுறுத்தினார். வில்லியம் டான்கின், குருநாதருடன் இருந்த அனுபவங்கள் அவரை இரண்டு ஆண்டுகளுக்குள் இந்தியாவில் மெஹர் பாபாவுடன் வாழ வழி வகுத்தது.

அமெரிக்க வெளிநாட்டவர் நவீன நடனக் கலைஞரான பீட்ரைஸ் வேங்கர் - BEATRICE WANGER (பிரபல ஹாலிவுட் தயாரிப்பாளரான வால்டர் வேங்கரின் - WALTER WANGER - மூத்த சகோதரி) 29ஆம் தேதி பாபாவை சந்திக்க வந்தார். அந்த நாளில் மற்றுமொரு பார்வையாளர், அமெரிக்க சிற்பி ஹென்றி க்ளூஸின் - HENRY CLEWS (கடந்த மாதம் காலமானார்) மனைவி மேரி க்ளூஸ் (MARY CLEWS) என்பவரும் பாபாவை சந்தித்தார். மேரி, பாபாவை நன்கு புரிந்து பதிலளிக்கும் தன்மையைக் கொண்டிருந்தார். உலகில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டும் 'தீமையின் மிகப்பெரிய சக்திகள்' பற்றிய அவரது கவலையை வெளிப்படுத்தினார். பாபா அவருக்கு நம்பிக்கையூட்டும் விதத்தில், "**இது வரவிருக்கும் நன்மைக்கான அறிகுறியாகும். நல்ல ஆத்மாக்கள்** (இறை உணர்வை அடைந்த மனிதர்கள்) **மிகக் குறைவாக இருந்தாலும், அவர்கள் எப்பொழுதும் பணி புரிகிறார்கள்; அவர்களின் நல்ல சிந்தனைகள், வார்த்தைகள் மற்றும் செயல்கள் மூலம் மனிதகுலத்திற்கு உதவ மிகப் பெரிய பங்காற்றி வருகிறார்கள். அவர்கள் எதிர்நோக்கும் வெற்றியின் நேரம் வேகமாக நெருங்கி வருகிறது.**"

பின்பு மேரி, சாஞ்சியிடம், "புத்தரின் புன்னகை என்னவென்று நான் எப்பொழுதும் ஆச்சரியப்பட்டேன். மெஹர் பாபாவின் வெளிப்பாட்டைக் கண்டபோது, அதன் அர்த்தம் என்னவென்று எனக்குப் புரிந்தது" எனக் கூறினார்.

மேரி, மெஹர் பாபாவை கேன்ஸ் நகருக்கு அருகில் அமைந்த 'சேட்டோ டி லா நேபூல்' (CHATEAU DE LA NAPOULE) இல்லத்திற்கு விஜயம் செய்யுமாறு அழைத்தார்; ஒரு வாரத்திற்கு பிறகு, செப்டம்பர் 6 பிற்பகலில், பாபாவை அங்கு அழைத்துச் சென்றார்; சாஞ்சி, ஜீன், நோரினா ஆகியோரும் உடன் சென்றனர். மேரியும் அவரது கணவரும் பதினெட்டு ஆண்டுகள் அந்த மகத்தான, கம்பீரமான, இடைப்பட்ட வரலாற்றுக் காலத்தில் கட்டப்பட்டக் கோட்டையை புதுப்பித்து வாழ்ந்தனர். கோட்டையின் ஒரு பகுதி அவரது கணவரின் ஸ்டுடியோவாக (STUDIO) மாற்றப்பட்டது. இந்த இடத்தின் அழகையும், க்ளூஸின் கைவண்ணத்தையும் அனைவரும் மிகவும் பாராட்டினர். பிற மனித

குணாதிசயங்களுக்கிடையில் தீமை, பேராசை, தந்திரம் போன்றவற்றைச் சித்தரிக்கும் க்ளூஸின் கலை நுணுக்கங்களைக் கண்டு, பாபா சுருக்கமாக, "**தத்துவமயமான கலை**" என்று குறிப்பிட்டார்.

கேன்ஸ் நகரில் இருந்தபோது பாபா, குழுவுடன் பல திரைப்படங்களைப் பார்க்கச் சென்றார். 1937, ஆகஸ்ட் 30 அன்று மாலை, அவர்கள் மிரமார் (MIRAMAR) உணவகத்தில் இரவு உணவிற்காகச் சென்றனர், பின்னர் இரட்டை அம்சமாக அமைந்த ('பிங் கிராஸ்பி இன் கோயிங் ஹாலிவுட்' - BING CROSBY IN GOING HOLLYWOOD மற்றும் 'கிளார்க் கேபிள் இன் மென் இன் வைட்' - CLARK GABLE IN MEN IN WHITE) திரைப்படத்திற்குச் சென்றனர். ஆனால் தாமதமாகிவிட்டதால், முதல் படத்தின் இடைவேளையின் போது அனைவரும் வில்லாவிற்குத் திரும்பி வந்தனர்.

திரைக்கதை எழுத்தாளர் அலெக்ஸாண்டர் மார்க்கி (ALEXANDER MARKEY) 1937, செப்டம்பர் 2 அன்று கேன்ஸ் நகருக்கு வந்தார். திரைப்படம் குறித்து, மார்க்கி, பாபாவுடன் நிகழ்த்திய நீண்ட உரையாடலுக்குப் பிறகு, 'பிரபஞ்சத்தைத் திரைப்படமாகப் படைத்தவர்' (THE UNIVERSAL FILMMAKER), இது அவரது நோக்கங்களுக்கு இன்றியமையாதது என்று பாசாங்கு செய்தார். ஒரு திரைப்படத்தைத் தயாரிப்பதில் பாபா இவ்வளவு ஆர்வம் காட்டியதற்கு உண்மையான காரணம் மார்க்கி, கேப்ரியல் பாஸ்கல், கேரெட் ஃபோர்ட் போன்றவர்களை அவரிடம் ஈர்த்து, அவர்களோடு ஓர் இணைப்பை ஏற்படுத்துவதே ஆகும் என்பதைக் காலம் அறிந்திருந்தது. நிஜத்தில் உருவாக்கப்படும் திரைப்படம் குருநாதரின் பணிக்குத் தேவையற்றது.

1936 நவம்பர் மாதம் லண்டனில் நடந்த முதல் சந்திப்பிற்குப் பிறகு மார்க்கி, பாபா அல்லது அவரது அன்பர்களுடன் தொடர்பில் இல்லை. அவர் ஒரு நாடகத்திற்குக் கதை வசனம் எழுதி, மேலும் கேன்ஸ் நகருக்குச் சென்று அதன் பணிகளைத் தொடர முடிவு செய்தார். அவர் கேன்ஸ் வந்தபோது, எதிர்பாராமல், லண்டனிலிருந்து அனுப்பப்பட்ட ஒரு தொலைத்தந்தி அவரது கைகளுக்கு வந்தது, 'மெஹர் பாபா கேன்ஸ் நகருக்கு வரப்போவதாகவும், அங்கு அவர் மார்க்கியை சந்திக்க விரும்புவதாகவும்' குறிப்பிடப்பட்டிருந்தது. இத்தகைய ஆச்சரியமான 'தற்செயல்' நிகழ்வு, பாபா மீதான மார்க்கியின் அன்பையும் நம்பிக்கையையும் மேலும் வலுப்படுத்தியது.

ஒரு வாரத்திற்குப் பிறகு மார்க்கி, பாபாவை மீண்டும் சந்தித்தார். ஒரு தருணத்தில், பாபா, மார்க்கியிடம் இவ்வாறு வெளிப்படுத்தினார், "**ஒருநாள், நாம் இப்போது விவாதித்து வரும் கருப்பொருட்கள், திரைப்படங்களில் முற்றிலும் ஒரு புதிய போக்கின் அடிப்படையாக அமையும்**."

வில், மேரி பேக்கெட் இருவரும் செப்டம்பர் 2ஆம் நாள் இரவு கேன்ஸ் வந்தனர். மறுநாள் வால்டர், ஹெடி மெர்டென்ஸ் அவர்களின் மகள் மற்றும் மகனுடன் ஸூரிக் சென்றனர். வால்டர், ஹெடி, எலிஸபெத், ரானோ

ஆகியோரை கேன்ஸில் இருந்த வேளையில் பாபா, பல்வேறு சந்தர்ப்பங்களில் புகைப்படம் எடுக்க அனுமதித்தார்.

செப்டம்பர் 3 அன்று, பாபா, மேற்கத்திய அன்பர்களுக்கு வலியுறுத்திக் கூறினார், "**நல்லிணக்கம் என்பது வாழ்க்கையின் அடிப்படை, ஒரு குழுவுடன் வாழ்ந்து, என்னுடன் பணியாற்றி, எனது சகவாசத்தில் இருப்பது என்பது, எனது பணியில் உதவுவதாகும். உங்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை அடிப்படையாகக் கொண்ட உணர்வுகளைப் பின்பற்றுவது, நான் விரும்பும் சூழ்நிலையில் எனது ஆன்மீகப் பணிக்கு இடையூறாக இருக்கும்.**"

மெஹர் பாபா ஒரு சில மேற்கத்திய பெண்மணிகளை அவருடனும் இந்திய பெண் மண்டலியுடனும் வில்லா கல்டானாவில் இணைந்து பல விளையாட்டுகளில் பங்கெடுக்க அனுமதித்தார். பல அன்பர்களின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது, அனைவரும் மீண்டும் குருநாதரின் கலகலப்பான சகவாசத்தில் மகிழ்ச்சியாக இருந்தனர்.

பாபா, மண்டலி, லூயிஸ், டிலியா, எலிஸபெத், அனிதா ஆகியோர் கிராஸ் (GRASSE) நகரத்திற்கு 1937 செப்டம்பர் 5 அன்று எலிஸபெத்தின் காரில் சென்றனர். அவர்கள் அங்கு ஒரு ஃபிரெஞ்ச் (FRENCH) திரைப்படத்திற்குச் சென்றனர், ஆனால் தியேட்டரில் வெப்பம் மிகையாக இருந்ததால் பாதியிலேயே திரும்பி வந்தனர். அடுத்த நாள், ஆங்கில குழுவோடு தொடர்புடைய ஜோஃப்ரே (JOFFRE) என்ற இளைஞர் பாபாவைப் பார்க்க வந்தார். ஒருவர் மகிழ்ச்சியாக எப்படி இருக்க முடியும் என்று கேட்டபோது பாபா, "**எதையும் விரும்பாமல் அமைதி, மனநிறைவு மற்றும் பேரின்பம் நிறைந்த வாழ்க்கையை வாழ்வதன் மூலம்**" என்று பதிலளித்தார்.

செப்டம்பர் 7ஆம் நாள், மெஹர் பாபா மேற்கத்திய குழுவிற்கு, தனிப்பட்ட இயல்புகளைப் பற்றி விளக்கினார்:

**எனக்கு எல்லோரும் சமம். உலகளாவிய அளவில், நான் அனைவரையும் சமமாக நேசிக்கிறேன். இருப்பினும், தனித்தனியாக ஒவ்வொருவருடனும் இது ஒரு வித்தியாசமான கதை. நான் உங்கள் அனைவரையும் நேசிப்பதைப் போல, சமையல்காரரை அவ்வளவு ஆழமாக நேசிக்கவில்லை. ஏன்? அந்தப் பெண்மணி ஒரு சமையல்காரராக இருப்பதாலும், நீங்கள் அவரைவிட சமூகத்தில் சிறந்த நிலையில் இருப்பதாலும் அல்ல, ஆனால் பிறரை விட நீங்கள் என்னை அதிகமாக நேசிப்பதால். எனக்காக எதையும் செய்ய நீங்கள் தயாராக இருக்கிறீர்கள். டிலியா எனக்காக எல்லாவற்றையும் விட்டுவிட்டார்! இந்தியாவிற்குச் செல்வதற்கான அவரது திட்டத்தை அவருடைய சகோதரர்களும் பெற்றோர்களும் விரும்பவில்லை அல்லது ஏற்றுக்கொள்ளவில்லை, ஆனாலும் அவர் எனக்காக அதைச் செய்தார்.**

**இவை எல்லாம் மிகவும் நல்லது, ஆனால் தனிப்பட்ட இயல்புகளுக்கு வரும்போது பெரிய வேறுபாடுகள் உள்ளன. தனிமை, மௌனம், தியானம்**

**ஆகியவற்றின் அமைதியான ஆசிரம வாழ்க்கையை விரும்பும் சிலர் இருக்கிறார்கள், மேலும் சிலர் பரபரப்பும், மகிழ்ச்சியும் மிக்க வாழ்க்கையை விரும்புகிறார்கள். தனிப்பட்ட முறையில், நான் இரண்டாவது வகையை விரும்புகிறேன் - ஆனால் எனது வேலைக்கு, முதல் வகை முக்கியம்! எனவே, நான் இரண்டு வகைகளையும் பொறுத்துக்கொள்ள வேண்டும். உங்களிடமிருந்து ஒத்துழைப்பையும் உதவியையும் நான் எதிர்பார்க்கிறேன், ஆனால் எல்லா நேரங்களிலும் உங்களில் ஒவ்வொருவரும் இவ்வளவு பிடிவாதமாக இருப்பதால் அது எனது வேலையைக் கெடுத்துவிடும்!**

**எல்லா சூழ்நிலைகளிலும் ஒவ்வொருவரின் மனநிலைக்கு ஏற்றாற்போல் இணங்கிச் செல்ல முயற்சி செய்யுங்கள். இயற்கையாக இருங்கள்! உங்கள் களிப்புணர்வின் தன்மையை மாற்ற வேண்டாம், ஆனால் அதிருப்தியைக் காட்டாதீர்கள் அல்லது இயல்பில் வேறுபட்ட பிறரை விமர்சிக்க வேண்டாம். உங்கள் மனதில் பலரை நீங்கள் வைத்திருக்க முடிந்தாலும், இதயத்தில் ஒரே ஒரு பிரியமானவரை மட்டுமே நீங்கள் வைத்திருக்க முடியும்.**

**ஆகவே** (பாபா, தன்னைத்தானே சுட்டிக்காட்டி), **இந்த அன்பானவரை உங்கள் இதயங்களில் வைத்து, இதர ஒவ்வோர் இதயத்திலும் என்னைக் கண்டுகொள்ளுங்கள்! ஒவ்வோர் இதயத்திலும் நீங்கள் என்னைப் பார்க்க முயற்சித்தால் இந்த ஒரு நபரை அல்லது அந்த நபரை வெறுக்க முடியாது. பின்னர் ஒற்றுமையும், நல்லிணக்கமும் தானாகவே உருவாகும்.**

பாபாவின் உத்தரவின் பேரில், நியமிக்கப்பட்ட ஆங்கிலப் பணிப்பெண், டான்கினுடன் அனுப்பி வைக்கப்பட்டார்; எனவே செப்டம்பர் 10 அன்று மெர்டென்ஸ் குடும்பத்தாரின் மற்றொரு நண்பர், செக்கோஸ்லோவாக்கியாவைச் (CZECHOSLOVAKIA) சேர்ந்த இல்ஸா (ILSA) என்ற பதினெட்டு வயது சிறுமி, கேன்ஸ் வந்து ஐரீன் பில்லோவிற்கு உதவியாக இருந்தார்.

செப்டம்பர் 11 அன்று புகழ்பெற்ற ஃபிரெஞ்சு சிற்பி விக்டர் டபியும் (VICTOR TUBY) அவரது மனைவியும் பாபாவை சந்திக்க வில்லா கல்டானாவிற்கு வந்தனர். 49 வயதான டபி, கேன்ஸ் நகரில் வாழ்ந்து வந்த நீண்ட வெள்ளை தாடியுடன் கூடிய நல்ல மனிதர். பாபா அவரை மிகவும் விரும்பினார். டபியும் அவரது மனைவியும் நான்கு நாட்களுக்குப் பிறகு, பிரபல ஃபிரெஞ்சு கவிஞர் ஃப்ரெடெரிக் மிஸ்ட்ரால் (FREDERIC MISTRAL) என்பவரின் மருமகளுடன், மறுபடியும் வந்தனர்.

இத்தாலியில் பணிபுரிந்த நோரினாவின் சகோதரி கிதா, 1937 செப்டம்பர் 12 அன்று திரும்பிச் சென்று, சில வாரங்களுக்குப் பிறகு கேன்ஸ் நகருக்குத் திரும்பி வந்தார். இத்தாலியில் புதிய தொடர்புகளை ஏற்படுத்தவும் பழைய இணைப்புகளைப் புதுப்பிக்கவும் பாபா அவருக்கு அறிவுறுத்தினார். "**பிரபலமான செய்தித்தாள்களில் வரும் கட்டுரைகள் மூலம் அவர்கள் ஆன்மீக வாசனையை நுகர்ந்து, கடவுளைத் தேடுவதற்கான ஆர்வத்தைத்**

**தூண்டுவதற்கும் - இவ்வாறு அவர்களை என்னிடம் கொண்டு வருவதற்கும் முயற்சி செய்யுங்கள்"** என்று பாபா கூறினார். இது ஓர் அசாதாரண உத்தரவு, "பாபா எப்பொழுதும் தனிமை மற்றும் அந்தரங்கத்தை விரும்புவதால், அவர் இத்தாலியில் ஏதேனும் பணிபுரிய விரும்புவதாக இருக்கலாம்" என்று சாஞ்சி குறிப்பிட்டார்.

அன்று காலை, ஆதி ஜூனியர் ஜெனோவாவிலிருந்து வந்து சேர்ந்தார். ஆதிக்கு ஐரோப்பா வருவதில் எந்த ஆர்வமும் இல்லை; தனது முந்தைய பயணங்களிலிருந்து பாபாவுடன் வருவதால் விளையும் மன அழுத்தங்களையும் சிரமங்களையும் அவர் நன்கு அறிந்திருந்தார், ஆனால் பாபா அவருக்குத் தொலைத்தந்தி அனுப்பி ஃபிரான்ஸிற்கு வருமாறு உத்தரவிட்டார்.

செப்டம்பர் 15ஆம் தேதி, வியன்னாவின் (VIENNA) ஆலிஸ் ட்ராவ்-ஃபிஷர் (ALICE TRAUFISHER), அவரது கணவர் விக்டர் (VICTOR) மற்றும் தாய் தந்தையருடன் பாபாவைப் பார்க்க கேன்ஸ் நகருக்கு வந்தார். அவர்கள் 'மான்டே கார்லோ'வில் (MONTE CARLO) தங்கியிருந்து, பன்னிரண்டு நாட்களுக்குப் பிறகு மீண்டும் வந்தனர். ஆலிஸ் ஒரு ஓபரா நிறுவனத்தில் பாடகராக இருந்தார், பாபாவை ஆழமாக நேசித்தார். போர்டோஃபினோவில் பாபாவை சந்திக்க முடியாத போதிலும், அவர் பாபாவைப் பற்றி வியன்னாவில் பலரிடம் கூறியிருந்தார். ஆலிஸ், பாபாவை வியன்னாவிற்கு வருமாறு அழைப்பு விடுத்தார், ஆச்சரியப்படும் விதமாக, 1938 ஜனவரி 7 முதல் 17 வரை, பதினொரு பேர் கொண்ட குழுவுடன் பத்து நாட்கள் தங்குவதாக பாபா கூறினார். இதைக் கேட்டு ட்ராவ்-ஃபிஷர் குடும்பத்தினர் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர். ஆலிஸின் பெற்றோர் மொழி தெரியாமல், ஒரு வார்த்தை கூட பேசவில்லை, இருந்தும் அவர்கள் பாபாவை சந்தித்தபோது கண்கலங்கி அழுதனர்.

செப்டம்பர் 16ஆம் நாள், பாபா 'கபோ டி மான்டே'க்கு வந்த வேளையில், அவர் மால்கமிடம் அவரது அறையில் ஆறு மாதங்கள், குளியலறையை மட்டுமே பயன்படுத்தி, தனிமையில் இருக்குமாறு அறிவுறுத்தினார். மால்கம் மௌனமாக இருந்ததோடு, பத்து நாட்களுக்குப் பின்னர் உபவாசம் கடைப்பிடிக்குமாறும் கூறினார்.

17ஆம் தேதி, மேற்கத்திய பெண்மணிகள் இரவு உணவு மற்றும் பொழுதுபோக்கிற்காக வில்லா கல்டானாவிற்கு அழைக்கப்பட்டனர்.

செப்டம்பர் 18 அன்று, ருவானோ போகிஸ்லாவ், ஆதி ஜூனியர் இருவரின் பிறந்தநாளைச் சிறப்பிப்பதற்காக, பாபா, நாள் முழுவதும் காலை எட்டு மணி முதல் மாலை எட்டு மணி வரை, 'கபோ டி மான்டே'யில் இருந்தார். இது கிரெட்டா கார்போவின் (GRETA GARBO) பிறந்தநாள் என்றும் ஒருவர் சுட்டிக்காட்டினார்.

ஒரு பெரிய பிறந்தநாள் கேக் உட்பட இரவு சிறப்பு உணவிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கேக் வெட்ட தயாராகும் வேளையில் தொலைபேசி மணி

ஒலித்தது. ஸூரிக் நகரிலிருந்து ஹெடி மெர்டென்ஸ் தொலைபேசியில் அழைத்தார். பாபா, நோரினா வழியாக அவருடன் பேசச் சென்றார்; பாபா திரும்பி வருவதற்கு முன்பு சிலர் தங்கள் பங்கிலான கேக் துண்டுகளை உண்ணத் தொடங்கினர். 'இங்கிதத்தில் அவர்கள் இழைத்த தவறு' குறித்து பாபா தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார்; குருநாதர் உண்ண அனுமதி வழங்கும் வரை அவர்கள் காத்திருக்க வேண்டும். மனச்சோர்வடைந்த அன்பர்களின் உணர்வை சீர்ச்செய்ய, பாபா, அனைவரையும் தனது அறைக்கு அழைத்து, கண்களை மூடிக்கொண்டு அவருடன் ஐந்து நிமிடங்கள் மௌனம் காக்குமாறு அறிவுறுத்தினார். ருவானோ மற்றும் ஆதி ஜூனியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன, முதலாவதாக, பாபா இருவருக்கும் அன்பின் அரவணைப்பை அளித்தார். ஹிட்லராக உடையணிந்து வெளியே வந்து உரை நிகழ்த்தியபோது, கிட்டி ஒரு வேடிக்கை நிகழ்ச்சியை நடத்தினார்.

இதற்கிடையில் கான்ஸுலோ, ஆல்ஃபிரடோ ஸைட்ஸ் இருவரும் பாபாவை, பெண் மண்டலியுடன் பாரிஸ் நகருக்கு வர அழைப்பு விடுத்தனர். 1937 செப்டம்பர் 19ஆம் நாள் காலை, மெஹரா, மணி, கோர்ஷெத், நாஜா, கிட்டி, எலிஸபெத் ஆகியோருடன் பாபா காரில் புறப்பட்டார். பாரிஸில் அவர்களை சந்திப்பதற்கான வழிமுறைகளுடன், ரானோ, அனிதா, ஸூனாமாசி, வாலு ஆகியோர் ரயிலில் பயணம் செய்தனர். பாபா, பெண் மண்டலியுடன் ஓர் இரவு லியான்ஸ் (LYONS) குறுநகரில் தங்கி, பின்பு பாரிஸுக்குச் சென்றார்.

மெஹரா, மணி, கோர்ஷெத், நாஜா ஆகியோர் எந்த ஓர் ஆண்மகனையும் பார்க்க நேர்ந்தால், அவர்கள் உடனடியாகக் கீழே பார்க்க வேண்டும் என்பது மெஹர் பாபாவின் உத்தரவு. பாரிஸ் நகரில் அவர்கள் இருந்த இரண்டு நாட்களில், பாபா, மணியை, ரானோவின் கண்காணிப்பில் வைத்தார், மேலும் மணியின் ஆடை கூட எந்தவோர் ஆண்மகனையும் இலேசாகக் கூட தொடக் கூடாது என்பதில் கவனமாக இருக்குமாறு பாபா அவருக்கு அறிவுறுத்தினார். மணியின் வயது 19. இயற்கையில் கலகலப்பாக இருப்பதால், அவர்கள் வெளியே செல்லும் வேளையில் விரைவாக நகர்ந்தார். ரானோவிற்கு இது ஒரு கடினமான கடமையாக இருந்தது, மணி எந்த ஆண்மகனையும் கவனக்குறைவாகக் கூட தொடாமல் இருப்பதைக் கண்காணிப்பதில் அவருடைய முழு கவனமும் இருந்தது.

செப்டம்பர் 21 அன்று பிற்பகலில், கேப்ரியல் பாஸ்கல், அவரது தோழர்கள் பவுலின் (PAULINE), ரோஜர் வைலார்ட் (ROGER VIEILLARD) ஆகியோருடன் பாபாவை சந்திக்க வந்தார், பாபாவும் பெண்மணிகளும் 1 - ரியூ கிட்-லெ-கர் (1 - RUE GIT-LE-COEUR) என்ற இடத்தில் அமைந்த ஸைட்ஸின் இல்லத்தில் தங்கியிருந்தனர்.

பாரிஸ் நகரில் இருந்தபோது, பாபா பெண்மணிகளை அருங்காட்சியங்களைப் பார்வையிட அழைத்துச் சென்றார். அழகான 'ஸென்'

(SEINE) நதியில் படகு சவாரி செய்து, அந்த நேரத்தில் நடைபெற்ற கலை, தொழில்நுட்ப கண்காட்சி மற்றும் 'நோட்ர தாம்' (NOTRE DAME) தேவாலயத்தை அனைவரும் பார்வையிட்டனர். அவர்கள் சென்ற இடமெல்லாம் எப்பொழுதும் பல ஆண்கள் இருந்ததால், கிழக்கத்திய பெண்மணிகள் தலையைத் தாழ்த்திய வண்ணம் இந்த இடங்களைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது; அருமையான காட்சிகள் எதையும் பார்க்க முடியாமலாயிற்று!

ஆசிரமத்தில் பெண்களின் வாழ்க்கை எப்பொழுதும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது, குறிப்பாக, மெஹராவின் வாழ்க்கை. பாபாவின் கட்டளைகளின் கீழ், மெஹராவின் வாழ்நாளில் அவர் எந்த ஆண்மகனுடன் பேசியதுமில்லை, பார்த்ததுமில்லை (சில மிக அரிதான, தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களைத் தவிர). அவர் எப்பொழுதுமே ஒதுங்கியிருந்ததோடு, பல ஆண்டுகளாக, படிக்கவோ எழுதவோ கூடாது என்றும் கட்டளையிடப்பட்டார்.

பெண் மண்டலியைப் பொறுத்தவரை, ஓரிடம் கிட்டத்தட்ட இன்னுமோர் இடத்தைப் போலவே இருந்தது, ஏனெனில் அவர்களால் சுதந்திரமாகப் பார்க்கவோ நகரவோ முடியவில்லை. செப்டம்பர் 21 அன்று இரவு ஒன்பது மணிக்கு, பாபா அவர்களை ஈஃபிள் கோபுரத்திற்கு (EIFFEL TOWER) அழைத்துச் சென்றார், ஆனால் பெண்கள் மீண்டும் தங்கள் பார்வையை கீழ்நோக்கி வைத்திருந்தனர், மேலும் பரந்த காட்சியை அவர்களால் அனுபவிக்க முடியவில்லை. காலம் இதை இப்படிப் பார்த்தது: "எதுவாயினும், அன்பிற்குரியவரைத் தவிர வேறு எவரையும் அவர்கள் காண விரும்பவில்லை, அனைத்தும், அனைவரும் அவரிலே அடங்கியுள்ளன! அவர்களைப் பொறுத்தவரை, அவருக்கு வெளியே எதுவும் இல்லை. அவர் மட்டுமே அவர்களுக்கு உண்மையானவர்; அவரின்றி, வாழ்வில் வேறொன்றுமில்லை."

பாபா இவ்வாறு வெளிப்படுத்தினார்: '**மலைமேல் இருந்தபோது, அஸிஸி மற்றும் ஃபாலன்ஃப்ளூவில் நடத்திய கூட்டங்களைப் போலவே, அவர் தனது முகவர்கள் மற்றும் இதர ஆன்மீக குருநாதர்களுடன் ஒரு சந்திப்பை நடத்தினார்**.'

செப்டம்பர் 22ஆம் நாள், இரண்டு நாட்களுக்குப் பிறகு, பாபாவும் பெண்மணிகளும் பாரிஸ் நகரிலிருந்து புறப்பட்டு, மறுநாள் இரவு பதினொரு மணிக்கு கேன்ஸ் வந்து சேர்ந்தனர்.

பாபா, பெண் மண்டலியுடன் பாரிஸில் இருந்த வேளையில், காக்கா, டாக்டர் நீலு, சாஞ்சி ஆகியோரை டிலியா 23ஆம் நாள் 'நைஸ்' மற்றும் 'மான்டே கார்லோ'விற்கு ஒரு சுற்றுலா பயணமாக அழைத்துச் சென்றார்.

1937 செப்டம்பர் 24, வெள்ளிக்கிழமை, பாபா திரும்பிய மறுநாளே, வில்லியம் டான்கின் லண்டனிலிருந்து கேன்ஸ் நகருக்கு, மற்றுமோர் ஆங்கிலேயரான டாம் ஷார்ப்லியுடன் (TOM SHARPLEY) திரும்பி வந்தார். பாரிஸ் நகரில் பாபா ஆற்றிய ஆன்மீக பணி, அவரது பௌதீக உடலில் பாதிப்பை ஏற்படுத்தியது. ஆண், பெண் மண்டலியைப் பார்க்க காலையில் 'கபோ டி

மான்டே'க்கு வரவிருந்த பாபா, மதியம் வரை வரமாட்டார் என்ற செய்தியை, காக்கா வழங்கினார். பாபா அவர்களைப் பார்க்க வந்தபோது, அவர் சோர்வாகவும் பலவீனமாகவும் தோற்றமளித்தார், ஆனால் இவ்வாறு விளக்கினார், **"நான் சோர்வடையவில்லை. ஆனால் கடந்த ஐந்து நாட்களில் நான் செய்த ஆன்மீக உட்பணியின் காரணமாக, கீழே வருவது மிகவும் கடினம்."** பின்னர் அவர் பாரிஸ் பயணத்தைப் பற்றி விவரித்தார், இரவு உணவிற்குப் பிறகு மீண்டும் தனது அறைக்குச் சென்றார்.

வால்டர் மெர்டென்ஸ் மூலமாக ஸைபர் (SEIBER) என்ற ஜெர்மன் நபர் ஒருவர் பாபாவுடன் தொடர்பு கொண்டிருந்தார். அவர் ஜெர்மனிக்குச் செல்லக்கூடும் என்பதையும் பாபா சுட்டிக்காட்டினார். செப்டம்பர் 26ஆம் நாள் நோரினாவுடன் வந்த ஸைபருக்கு, பாபா ஒரு நீண்ட நேரடி சந்திப்பை வழங்கினார்; அவர் தனது நாட்டிற்கும் மக்களுக்கும் பணி புரியும் ஆர்வத்தில் இருந்தார்.

அடோல்ஃப் ஹிட்லரின் கீழ், நாஸிகள் (NAZIS) ஆட்சிக்கு வருகிறார்கள், ஐரோப்பாவில் போர் தவிர்க்க முடியாததாகத் தோன்றியது. ஜெர்மனியின் தற்போதைய நிலைமைகள் குறித்து பாபா ஸைபரிடம் கேட்டபோது, அவர் பாபாவிடம் தனது நாட்டில் நிலைமைகள் ஏன் மிகவும் பயங்கரமாக உள்ளன என வினவினார்.

பாபா புன்னகைத்து விளக்கமளித்தார்:

**மறுசீரமைப்புக்கு, பெருங்குழப்பமும் பேரழிவும் அவசியம். உருவாக்குவதும், அழிப்பதும் - குழப்பம், சீர்குலைவு மற்றும் துயரங்களை உருவாக்கி, பின்னர் அதை மீண்டும் புதிதாகக் கட்டியெழுப்பும் நோக்கத்தில் அழிப்பது - இது ஆன்மீக விதிமுறை. ஒரு பழைய வீடு இடிக்கப்படாவிட்டால், அதை எவ்வாறு மறுபடியும் கட்டியெழுப்ப முடியும்?**

**இன்று நீங்கள் என்னிடம் வருவது தற்செயல் நிகழ்வு அல்ல, ஆனால் ஏற்கனவே திட்டமிடப்பட்டது. குறிப்பிட்ட நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, ஹிட்லரை சந்திக்க முஸோலினி இன்று ஜெர்மனிக்குச் சென்றுள்ளார், அவர்களுக்கிடையில் மிக முக்கியமான பேச்சுவார்த்தைகள் இந்த நேரத்தில் ஒரு கூட்டத்தில் நடத்தப்படுகின்றன! நீங்கள் இங்கே இருப்பதும், ஜெர்மனியைப் பற்றி பேசும்படி நான் உங்களிடம் கேட்பதும் ஒரு குறிப்பிடத்தக்க நோக்கத்தைக் கொண்டுள்ளது. இந்தக் காரணத்திற்காகத்தான் இன்று உங்களை நானாக இங்கு அழைத்து வந்தேன்.**

**ஹிட்லரும் முஸோலினியும் அவர்களை சூழ்ந்துள்ள குழப்பமான நிலைமைகளுக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது. அவை, துயரத்தைத்தான் அதிகரிக்கும். ஒரு கிறிஸ்துவால், அவதார புருஷரால் மட்டுமே இதைச் செய்ய முடியும் - அதற்கான நேரம் நெருங்கிவிட்டது.**

**எனது அறிவுறுத்தல்களைக் கடைப்பிடித்து, நான் சொல்வதைச் செய்வதால், நீங்கள் ஜெர்மனியில் எனது பணியைக் கையாளும் ஒரே முகவராக இருக்கலாம்.**

ஸைபர் மிகவும் அறிவார்ந்த மனிதர். மேலும், அவர், பாபா எவ்வாறு பணியாற்றினார் என்பது பற்றிய கேள்விகளைத் தொடர்ந்தார், அதற்கு, பாபா பதிலளிக்க விரும்பவில்லை. உதாரணமாக, சில வாரங்கள் கேன்ஸ் நகரில் தங்கிய பின்னர், அக்டோபர் 7ஆம் நாள், ஸைபர், அவர் கண்ட கனவுகளைப் பற்றி, பாபாவிடம் பலமுறை கேள்விகள் எழுப்பினார். பாபா சோர்வடைந்து அவரிடம் உறுதியாகக் கூறினார்:

**நீங்கள் எல்லாவற்றையும் நினைத்து கவலைப்படுகிறீர்கள், உங்கள் கனவுகளைப் பற்றி என்னிடம் கேட்கிறீர்கள்; அதையெல்லாம் என்னிடம் விட்டுவிடச் சொல்லி, சில காரணங்களுக்காக நான் அவற்றை விளக்கவில்லை. ஆனால் இப்போது நீங்கள் பொறுமையிழந்து மிகவும் கவலைப்படுகிறீர்கள், அனைத்தும் எனக்கு தெரியும் என்பதை நான் உங்களுக்குத் தெளிவாகச் சொல்ல வேண்டும்! நான் என்னுடைய தனிப்பட்ட வழிகளில் இதை எல்லாம் செய்து கொண்டிருந்தேன். நான் மேற்பரப்பில் 'மேலோட்டமாக' பணிபுரியவில்லை. நான் ஒவ்வொரு விஷயங்களின் அடிமட்டத்திலிருந்து ஆழமாகப் பணிபுரிகிறேன், விரும்பத்தகாத விஷயங்களை வேரோடு அகற்றி, விரும்பத்தக்க ஒவ்வொன்றையும் நிலைநாட்டுகிறேன்.**

**உங்கள் எல்லா கவலைகளுக்கும், கனவுகளுக்கும் உங்கள் கடந்தகால மனப்படிவங்களே காரணம்; இதற்கு முந்தைய வாழ்க்கை மட்டுமல்ல, பல நூறு வாழ்க்கைகளில் உருவான மனப்படிவங்கள்! அவை அனைத்தும் முழு பலத்துடன் செயல்படுகின்றன. அவை, வெளியே மேற்பரப்பின் உயரத்திற்கு வர வேண்டும், முடிந்தவரை அவற்றை இயற்கையாகவே செலவிட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**

**பின்பு, சரியான நேரத்தில், நான் அவற்றையெல்லாம் வேரோடு அகற்றிவிடுகிறேன், உங்கள் எல்லா கேள்விகளுக்கும் காரணமான விதைகள் அழிந்து விடுவதால் அது முற்றிலும் நின்றுவிடும்!**

பாபா, தனது குழுவுடன் இருப்பதற்கான வாய்ப்பை ஸைபருக்கு வழங்க முயன்றார், (இது, சாஞ்சி குறிப்பிட்டது போல, 'தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலருக்கு மட்டுமே வழங்கப்பட்ட சிறப்பு பாக்கியம்'), ஆனால் ஸைபர் ஒருபோதும் அந்தத் தகுதியைத் தக்கவைக்கவில்லை. பாபா அவருடன் நீண்ட நேரம் உரையாடினார், ஆனால் இவை அனைத்தும் ஸைபரின் மனதில், சிறிதளவு தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. பாபா அவரைப் பற்றி குறிப்பிடுகையில், "**அவர் ஒரு வெற்றுக் கொள்கலனைப் போன்றவர், அதில் வைக்கப்படுவதை வெளியே எறிந்து விடுகிறார்!**" கேன்ஸ் நகரைவிட்டுச் சென்ற பிறகும், கடிதத்திற்குப் பின் கடிதம் எழுதி பாபாவின் வழிகளைக் குறித்து ஸைபர் தொடர்ந்து கேள்விகள் எழுப்பினார்.

1937, அக்டோபர் 3 அன்று, ஜெர்மனியின் மியூனிக் (MUNICH) நகரைச் சேர்ந்த ஜோஸஃப் ஸமரர் (JOSEPH SOMMERER) என்பவர் எதிர்பாராத விதமாக வந்தார். தத்துவத்தில் முனைவர் பட்டம் பெற்றவர், மூன்று அல்லது நான்கு வாரங்களுக்கு முன்பு பாபாவைப் பற்றி கேள்விப்பட்டு, ஸூரிக் நகரில் வாழும் வால்டர் மெர்டென்ஸைத் தொடர்பு கொண்டு, பாபா கேன்ஸ் நகரில் இருப்பதை அறிந்து, உடனடியாக அங்குச் சென்றார். பாபா அவரை அன்புடன் வரவேற்று, இதர அன்பர்களுடன் மூன்று நாட்கள் தங்க அனுமதித்தார். பாபா அவரின் இதயத்தை ஆழமாகத் தொட்டு, அவரை கல்டானாவிற்கு அழைத்ததாக ஜோஸஃப் ஸமரர் உணர்ந்தார்.

பாதிரியின் தாயார் ஃபிரீனிமாசி, முன்பு பூனாவில் வாழ்ந்த வேளையில், பாபாஜானுடன் நெருங்கிய தொடர்பில் இருந்து, தினமும் அவரை சந்தித்து வந்தார். 1931இல் பாபாஜான் உயிரைத் துறந்த பின்னர், ஃபிரீனிமாசி மெஹராபாத்திற்குக் குடிபெயர்ந்து, அவரது சகோதரி தவ்லத்மாயுடன் ஒரு தனிமை வாழ்க்கையை வாழ்ந்தார். இருவரும் குடும்பக் குவாட்டர்ஸில் ஒன்றாக வாழ்ந்து வந்தனர். 1937 செப்டம்பர் 28 அன்று, பாதிரியிடமிருந்து ஒரு தொலைத்தந்தி வந்தது: “தாயாரின் நிலைமை நம்பிக்கையற்ற முறையில், கவலைக்கிடமாக உள்ளது. அவரை விடுவித்து அருளுங்கள்.”

மெஹர் பாபாவின் தொலைத்தந்தி விரைந்து சென்றது: “**ஃபிரீனிமாசி சிரமங்களை அனுபவிக்காமல் என்னிடம் வருகிறார் என்று தவ்லத்மாயிடம் கூறுங்கள்**.” அடுத்த நாள், பாதிரியிடமிருந்து வந்த மற்றொரு தொலைத்தந்தியில் ‘ஃபிரீனிமாசி காலமாகிவிட்டார்’ என்பதைத் தெரிவித்திருந்தார். பாபா, “**அவர் விடுவிக்கப்பட்டார்**!” என்று கூறினார். ஸொராஸ்ட்ரிய மரபுக்கு இணங்க, அவரது உடல் அஹமதுநகரில் அமைதி கோபுரத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அவருக்கு 62 வயது.

1937 செப்டம்பர் 29ஆம் நாள், நோரினா, எலிஸபெத், நான்னி, ருவானோ, கிட்டி ஆகியோருடன் கேன்ஸ் நகரில் தங்கியிருப்பது, இதுவரையான செலவு மற்றும் பொது கணக்குகளை மறு ஆய்வு செய்வது குறித்து பாபா விவாதித்தார். இதைக் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், பாபா, “**நான் இங்குத் தங்கியிருப்பது தற்போதைய நிதி நிலைமையைப் பொறுத்தது**; **இல்லையெனில்**, **நான் இந்தியாவிற்குத் திரும்புவது நல்லது**. **நான் நீண்ட காலம் தங்க விரும்புகிறேன்**, **ஆனால் நமது நிதி நிலைமை அதை அனுமதிக்காவிட்டால் அது நல்லதல்ல**” என்றார். கேரெட் ஃபோர்டிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட பணம் வரவில்லை, நிதி பற்றாக்குறை காரணமாக ஃபோர்ட், கேன்ஸ் நகருக்கு வரவும் முடியாத நிலை.

1937 ஆகஸ்ட் இறுதியிலிருந்து முஹமது மஸ்தை, கேன்ஸ் நகருக்கு அழைத்து வருவது குறித்து, இந்தியாவில் சில மண்டலியுடன் கடிதப் பரிமாற்றம் நடந்தது. ஆதி சீனியர், பைதூல் இருவரும் அவரை அழைத்து வருமாறு

தொலைத்தந்தி அனுப்பப்பட்டது. அவர்களின் உடனடி வருகை பாபாவின் மேற்கத்திய அன்பர்களுக்கு, பாபா நிச்சயமாக கேன்ஸ் நகரில் நீண்ட காலம் தங்கியிருப்பார் என்ற எண்ணத்தை உருவாக்கியது. மெஹர் பாபா மஸ்த் முஹமதின் வருகைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து, "**முஹமது வரவில்லை என்றால், அனைவரையும் திருப்பி அனுப்பிவிட்டு, நான் இந்தியாவிற்குத் திரும்புவேன்**" என்று குறிப்பிட்டார்.

செப்டம்பர் 30 அன்று பாபாவைப் பார்க்க, கேப்ரியல் பாஸ்கல் கேன்ஸ் நகருக்கு வந்தார். பாஸ்கல், பாபாவிடம், "நான் எல்லா பக்கங்களிலும் சிரமங்களால் சூழப்பட்டிருந்தேன், ஆனால் உங்களை சந்தித்த நாளிலிருந்து, உங்களின் உள்ளளவிலான உதவியை அனுபவித்தேன், எனது சிரமங்கள் படிப்படியாக மறைந்து கொண்டிருப்பதைக் கண்டேன். உங்கள் உதவியால், நிலைமைகள் சீராகி, மறுபடியும் நான் திரைப்படங்களை எடுக்க முடிந்தது" என்று கூறினார். பாஸ்கல், அலெக்சாண்டர் மார்க்கி (அவரும் அதே நாளில் வந்திருந்தார்) இருவரும் பாபாவை மிகவும் நேசித்தனர்; அவர்கள் திட்டமிட்டபடி பாபாவின் திரைப்படங்கள் எதுவும் தயாரிக்கப்படவில்லை என்றாலும், அவர்கள் பாபாவை நேசிப்பதில் உறுதியுடன் இருந்தனர்.

1937, அக்டோபர் 7ஆம் நாள், மெஹர் பாபாவுடனான டான்கினின் நேரடி சந்திப்பின்போது, பாபா அவரிடம், "**எல்லா சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியாக இருக்க முயற்சி செய்யுங்கள். ஆனந்தத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. அன்பின் தெய்வீக மகிமை அனைத்து இடங்களிலும் உள்ளது. சொர்க்கம், நரகம் இவற்றை போதிக்கும் பாதிரியார்களின் மனங்களில் துன்பமும், துயரமும் உள்ளன. உண்மையில், நரகம் என்று ஒன்றும் இல்லை. எந்தக் கடவுளும் நரகத்தை ஒருபோதும் படைக்கவில்லை. நரகத்தை உருவாக்கும் அந்தக் கடவுளைக் கண்டுகொள்ளாதீர்கள்!**"

பாபா மேலும் கூறுகையில், "**நான் அனைவரையும் நேசிக்கிறேன். இதயத்தை நேசியுங்கள், ஆனால் மனம் மோசமானது! இந்த மனமே சொர்க்கத்தையும் நரகத்தையும் உருவாக்குகிறது.**"

அக்டோபர் 7ஆம் நாள் நோரினாவின் தங்கை கிதாவும், கிட்டியின் தங்கை ஏஞ்சலா லாம்பெர்ட் (1931ஆம் ஆண்டில் ஹார்மன் ரிட்ரீட்டில் பாபாவை முதன்முதலில் சந்தித்தவர்) என்பவரும் மறுநாள் லண்டனிலிருந்து கேன்ஸ் நகருக்கு வந்தனர். கிதா, பாபாவுடன் இத்தாலியில் அவருக்காகச் செய்த பணிகள் குறித்து நீண்ட நேரம் உரையாடினார். பாபாவின் பெயரை அங்கு அறிமுகப்படுத்த அவர் எவ்வளவு முயன்றும், கடவுள், மதம் அல்லது ஆன்மீகம் பற்றி எதையும் வெளியிடுவதற்கு எதிராக ஒரு தடை அமலில் இருந்தது. கிதா இதை நினைத்து அமைதியின்றி காணப்பட்டார்; ஆனால் பாபா விளக்கினார், "**நான் இத்தாலியை விரும்புகிறேன், இது எப்பொழுதும் ஆன்மீகத்தின் உறைவிடமாகவும், ஆன்மீகம் நிறைந்தும் காணப்படும் நாடு. தற்போதைய சூழலும்**

**தேவையானது, இது வரவிருக்கும் ஒரு பெரிய ஆன்மீக எழுச்சியைக் குறிக்கிறது. மக்களிடையே உண்மைப்பொருளைத் தேடும் ஏக்கம் தற்போது தடைபட்டு, கட்டுக்குள் வைக்கப்பட்டாலும், அது தீவிரமடையும் தருவாயில் தடைகள் உடைக்கப்பட்டு, எதிர்வினை மிகப்பெரியதாக இருக்கும்! அடக்கிவைக்கப்பட்ட ஆவேசம் முழு சக்தியுடன் வெளிவரும்!"**

பாபாவின் திட்டங்கள் ஒருபோதும் திடமானதாக இருக்காது. அவரது பணி முடிந்ததும், அவர் ஏதேனும் காரணத்தை எடுத்துக்கூறி, அந்த இடத்தை விட்டு உடனடியாக வெளியேறுவது வழக்கம். பாபா முதலில் ஒரு வருடம் தங்குவதற்கான திட்டங்களுடன் கேன்ஸ் நகருக்குச் சென்றார், ஆனால் 1937, அக்டோபர் 7 அன்று பாபா மூன்று வாரங்களுக்குள் இந்தியாவிற்குத் திரும்புவதாக அறிவித்து அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கினார். அவர் இவ்வளவு விரைவில் புறப்படுவார் என எவரும் எதிர்பார்க்கவில்லை, முஹமது மஸ்த் இன்னும் வரவில்லை, அவர் ஏற்கனவே கப்பலில் இந்தியாவிலிருந்து பயணம் செய்து கொண்டிருந்தார்.

இந்தியாவிலிருந்து ஃபிரான்ஸ் நாட்டிற்கு, ஒரு சர்வதேச பயணத்தில் இறை-போதையில் இருக்கும் மஸ்தை அழைத்து வருவது எளிதான காரியமல்ல. ஆனால் அது பாபாவின் விருப்பம், அவர் மீண்டும் சாத்தியமற்றதாகத் தோன்றும் ஒன்றை சாத்தியமாக்கினார்.

முதலாவதாக, முஹமது போன்ற ஒரு நபருக்கு, பாஸ்போர்ட் மற்றும் ஆவணங்களைப் பெறுவதே பெரிய அதிசயம், ஏனெனில், அவரது கையொப்பமின்றி அதைப் பெற முடியாது. சாதாரண உலக மக்கள், பைத்தியம் என்று கருதும் ஒரு மனிதருக்கு, அதிகாரிகள் எவ்வாறு பாஸ்போர்ட் வழங்குவார்கள்? அஹமதுநகர் நகர நீதிபதி, முஹமதை நேரில் பார்க்க தனது அலுவலகத்திற்கு அழைத்து வருமாறு வலியுறுத்தினார். அதற்கு முன்பு, ஸரோஷ் ஒரு தையல்காரரை மெஹராபாத்திற்கு அழைத்துச் சென்று, முஹமது மஸ்திற்கு ஒரு கோட்டு-காலுறையைத் தயார் செய்தார். செப்டம்பர் 14ஆம் நாள், முஹமது தனது புதிய உடை, ஒரு ஜோடி காலணிகள் மற்றும் ஸாக்ஸ் அணிந்து, ஸரோஷ், ஆதி சீனியர், பெண்டு, பைதூல் ஆகியோருடன் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் நீதிபதிக்கு முன்னர் ஆஜரானார். நீதிபதி திருப்தி அடையாத மனநிலையில், "நீங்கள் என்ன ஒரு பைத்தியக்காரனை அழைத்து வந்துள்ளீர்கள்" என்று கேட்டதும், 'முஹமது பைத்தியம் அல்ல, ஆனால் இறை போதையில் இருக்கிறார்' என்று ஸரோஷ் விளக்க முயன்றார். நீதிபதி, முஹமதிடம் "உங்கள் பெயர் என்ன?. . . நீங்கள் எங்குச் செல்ல விரும்புகிறீர்கள்?" போன்ற தொடர் கேள்விகளை எழுப்பினார். முஹமது சிறிது நேரம் பதிலளித்தார், ஆனால், "நான் ஏன் இங்கு வந்தேன்?" என்று கேட்கத் தொடங்கினார்.

முஹமது மஸ்தால் எவருக்கும் எந்த ஆபத்தும் இல்லை என்ற உத்தரவாதமின்றி ஆவணங்களில் நீதிபதி கையெழுத்திட மறுத்துவிட்டார். ஸரோஷ் வேண்டிய உத்தரவாதத்தை வழங்கினார் மற்றும் முஹமதின்

பாஸ்போர்ட்டுக்குத் தேவையான ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டுப் பாஸ்போர்ட் வழங்கப்பட்டது.

பதினொரு நாட்களுக்குப் பிறகு, ஆதி சீனியர், பைதூல், முஹமது மூவரையும் ஸரோஷ் மும்பைக்கு அழைத்துச் சென்றார், அங்கு அவர்கள் மேலும் தடங்கல்களை எதிர்கொண்டனர். முஹமது அன்று விதண்டாவாதமாக, மோதல்போக்கை கடைப்பிடிக்கும் மனநிலையில் காணப்பட்டார். அவர்கள் கப்பலில் ஏறச் சென்றபோது, சுங்க அதிகாரி முஹமதை அனுமதிக்க மறுத்துவிட்டார். முஹமது 'சிகிச்சைக்காக, ஃபிரான்ஸ் நாட்டிற்குச் செல்லும் ஒரு மன நோயாளி' என்று ஆதியும் ஸரோஷும் அதிகாரியிடம் கெஞ்சினர். இறுதியாக, முன்னும் பின்னுமாக நீடித்த வாதங்களுக்குப் பின்னர், அதிகாரி இணக்கம் தெரிவித்தார். நிலைமை சீரானதும் மூவரும் கப்பலில் ஏறினர்.

இரண்டு மண்டலி (ஆதி சீனியர், பைதூல்), முஹமது மஸ்த் மூவரும் ஒரே அறையில் பதிவு செய்யப்பட்டனர். கப்பல் புறப்படும் முன்னர், ஆதி, கப்பலில் ஏற்றப்பட்ட அவர்களின் சாமான்களை சரிபார்க்கும் எண்ணத்தில், பைதூலிடம் முஹமது மஸ்தைப் பார்த்துக் கொள்ளும்படிக் கூறிச் சென்றார். பைதூல், கப்பலில் பயணம் செய்யும் உற்சாகத்தில், ஒரு கணம் கப்பல் தளத்திற்குச் செல்வதால் எந்தத் தீங்கும் ஏற்படாது என்று நினைத்து வெளியே சென்றார். ஆனால் அவர் திரும்பி வந்தபோது, முஹமது மஸ்த் அறையில் இல்லை. அவர் எங்கே போயிருக்கக் கூடும்? முஹமது, சிறுநீர் கழிக்க விரும்பி, மேற்கத்திய கழிப்பறைக்குச் செல்ல, பைதூலின் உதவியை நாடி அவரைத் தேடிச் சென்றார்.

கவலையுடன் வெறித்தனமாக, ஆதி சீனியர், பைதூல் இருவரும் மஸ்தைத் தேடி ஓடினர். இருவரும் அவரை மேல் பிரதான தளத்தில் கண்டுகொள்ள முடிந்தது. முஹமது மஸ்தைச் சுற்றி ஒரு பெரிய கூட்டம் நின்றுகொண்டிருந்தது; அவர் கப்பல் தளத்தில், திறந்த வெளியில் சிறுநீர் கழித்து ஒரு குழப்பத்தை உருவாக்கினார்! பெண்கள், குழந்தைகள் அனைவரும் இணைந்து கொண்டனர்; கேப்டன் வரவழைக்கப்பட்டார். "இந்த மனிதனை கப்பலில் இருந்து அகற்றுங்கள்," என்று அவர் ஆதி சீனியரிடம் அலறினார். "இல்லையெனில், நான் காவல்துறையை அழைத்து அவர் அகற்றப்படுவதை உறுதி செய்வேன்!" என்றார்.

பைதூல், முஹமதை மீண்டும் தமது அறைக்கு அழைத்துச் சென்றபோது, ஆதி கேப்டனுடன் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடி, மன்னிப்புக் கோரி மீண்டும் முஹமது மஸ்தைப் பயணிக்க அனுமதிக்குமாறு கெஞ்சினார். எல்லா நேரங்களிலும் மஸ்தை உன்னிப்பாகக் கண்காணிப்பதாக, ஆதி உறுதியளித்த பின்னரே கேப்டன் ஒப்புக்கொண்டார்.

எனவே, கப்பல் 'ஸ்ட்ராதாய்ட்' (STRATHAIRD) - முஹமது மஸ்துடன் - மும்பையிலிருந்து 1937, செப்டம்பர் 25 அன்று ஃபிரான்ஸ் நாட்டை நோக்கிச் சென்றது.

முதல் சில நாட்கள், முஹமது மஸ்த் அமைதியாக, நன்றாக நடந்துகொண்டார்; ஆனால் இரண்டு வார பயணத்தின் எஞ்சிய நாட்களில், அவர் கடும் வெறுப்பூட்டும் விதத்தில் இருந்தார். அவர் இதர பயணிகளிடம் தகாத முறையில் கடுமையாக நடந்து, சாபமிட்டுப் பேசுவது மட்டுமன்றி, சில நேரங்களில் ஒளிரும் சிகரெட் துண்டுகளை அவர்கள் மீது வீசினார், மேலும் கப்பல் தளத்திலிருந்து குப்பைகளை அள்ளி சேகரிப்பதில் அதிக நேரத்தைச் செலவிட்டார். சக பயணிகள் அஞ்சவில்லை என்றாலும் அதிர்ச்சியில் கேப்டனிடம் புகார் செய்தனர். ஆதியும் பைதூலும் முஹமது மஸ்தின் நடத்தை காரணமாக மிகவும் துன்பத்திற்குள்ளாகி சிரமப்பட்டனர். இறுதியாக, ஆதி, முஹமதைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர போலீஸை அழைத்து வருவதாகக் கூறியது மட்டுமே அவருக்கு அச்சத்தை விளைவித்தது; ஒரு குழந்தையைப் போல நடந்து கொண்ட முஹமது, போலீஸ் என்ற யோசனைக்கு மட்டுமே பயந்ததாகத் தோன்றியது.

பிற சில நேரங்களில், முஹமது தன்னை அறைக்குள் பூட்டிக் கொள்ளும் வேளையில், ஆதி வெளியே வராவிட்டால் போலீஸை அழைப்பதாக மிரட்டி மீண்டும், அவரை இணங்கச் செய்தார்.

அக்டோபர் 8 அன்று நோரினா, எலிஸபெத் இருவரும் ஆதி சீனியர், பைதூல், முஹமது மஸ்த் ஆகியோரை மார்ஸெல்லஸில் சந்தித்து, நேரடியாக கேன்ஸ் நகருக்கு அழைத்துச் சென்றனர். நோரினா, எலிஸபெத் இருவரும் காத்திருப்பதைக் கண்ட மஸ்த் கண்கலங்கி அழுதார். முஹமது வந்து சேர்ந்ததும் பாபா மிக்க மகிழ்ச்சியடைந்தார். அவர் ஆதி சீனியரிடம், **“முஹமதை கேன்ஸ் நகருக்கு அழைத்து வருவதன் மூலம் என்னுடைய ஒரு பெரிய வேலையை நீங்கள் செய்துள்ளீர்கள்”** என்று கூறினார்.

ஆதி சீனியர் மண்டலி வில்லாவின் பின்புறத்தில், தனியாக அமைந்த குடிசையில் டாக்டர் நீலு, ஜோஸ் லூயிஸ் ஆகியோருடன் தங்கினார்; முஹமது மஸ்த், பைதூல் இருவரும் வில்லாவின் கேரேஜின் மேல் அறையை ஆக்கிரமித்தனர். அடுத்த நாள் முதல், பாபா அவருடன் தனியாக அமர்ந்து அவரது பணியைத் தொடங்கினார் - காலை 8:00 மணியிலிருந்து மதியம் 1:00 வரை, மேலும் பிற்பகல் 4:00 மணியிலிருந்து இரவு 8:00 வரை. ஒவ்வொரு நாளும் பாபா, முஹமது மஸ்தை நீராட்டினார், சமையலறையிலிருந்து உணவை எடுத்து வந்து ஊட்டினார், அவருடன் தனது ‘ஆன்மீக உள் பணிகளைத்’ தொடர்ந்தார். முஹமது வந்த பின்பு, மெஹர் பாபா, பெரும்பாலான சந்திப்புகளை நிறுத்திவிட்டு, முழு நேரமும் தனது ஆன்மீகப் பணிக்காக மஸ்துடன் இருந்தார்.

முஹமது மஸ்திற்கு இரவும் பகலும் சேவை செய்வதே பைதூலின் தலையாய கடமையாக இருந்தது. சிறிதளவு கவனக்குறைவும் பாபாவின் கடுமையான கண்டனத்தை வரவழைத்தது. ஒருமுறை, பைதூலுடன் பாபாவின் கடுமையான நடத்தைக்கு சாட்சியாக இருந்த மேற்கத்திய அன்பர்கள், பேரதிர்ச்சிக்குள்ளாயினர். பாபா இதை இவ்வாறு விளக்கினார், **“எனது பணி அனைத்திலும் மிக உயர்ந்தது. முஹமது, ஜெர்மனி நாட்டின் ஆன்மீக**

**பிரதிநிதி ஆவார். எனவே அவரை இங்கு ஃபிரான்ஸுக்கு அழைத்து வந்து, இந்த நேரத்தில் அவருடன் நான் செய்த பணியின் முக்கியத்துவத்தை நீங்கள் கற்பனை செய்து கொள்ளலாம்.**

**"இரக்கத் தன்மையை வெளிப்படுத்த நான் கொடூரமாக இருக்க வேண்டும்"** என்று பாபா மேலும் கூறினார். **"ஹிட்லரின் தலைமையில் ஜெர்மனி 'வெகுஜன மனநோயை' அனுபவித்து வருவதாகவும்"** பாபா கருத்துத் தெரிவித்தார். இத்தாலியில் அவரது நண்பரான பெனிட்டோ முஸோலினி போலவே, அடோல்ப் ஹிட்லரும் முழு அதிகாரத்திற்கு வந்து கொண்டிருந்தார். மெஹர் பாபா இவ்வேளையில் ஃபிரான்ஸ் நாட்டில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

1937, அக்டோபர் 21ஆம் நாள், ஹாலிவுட்டைச் சேர்ந்த மெர்சிடிஸ் டி அகோஸ்டா கேன்ஸ் நகருக்கு வந்தார்; விதிவிலக்களித்து பாபா அவரை இதர மேற்கத்திய அன்பர்களுடன் தங்க அனுமதித்தார். ஒரு நாள் பிற்பகல் பாபா அவருடன் ஒரு குறுகிய பயணம் மேற்கொண்டபோது, பாபா, முஹமது மஸ்தையும் உடன் அழைத்துச் செல்ல முடிவு செய்தார். மெர்சிடிஸ், நைஸ் நகர போக்குவரத்து நெரிசலில் காரை மெதுவாக ஓட்டிச் சென்ற வேளையில், முஹமது அவரது உச்சக் குரலில் கத்த ஆரம்பித்தார். ஒரு போலீஸ்காரர் காரை நிறுத்தி பாபாவைப் பார்த்து, என்ன பிரச்சினை என்று கேட்க, அவர் பேசுவதில்லை என்பதை, பாபா கை சைகையால் தெரிவித்தார்.

முஹமது மறுபடியும் முன்பை விட அதிகமான உரத்த குரலில் கத்துவதோடு, பாடவும் செய்தார்.

இந்தக் கட்டத்தில், மெர்சிடிஸ் காவல்துறையினரிடம் நிலைமையை விளக்கிக் கூறினார், "இவர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள். இந்த மனிதர் (பாபா) மௌனம் கடைப்பிடிக்கும் சபதம் எடுத்துள்ளார், இரண்டாமவர் மனநலம் பாதிக்கப்பட்ட இந்து, இங்கு சிகிச்சை பெற்று வருகிறார், ஆனால் அவரால் எவருக்கும் எந்த தீங்கும் இல்லை." போலீஸ்காரர் இந்த 'விசித்திரமான' மனிதர்களைக் கண்டு வியப்படைந்தார். தோள்களைக் கவ்விக் கொண்டு, கையை அசைத்து, தொடர்ந்து அவர்கள் வழியில் செல்லுமாறு கூறினார்.

மெர்சிடிஸ் கேன்ஸில் இருந்த அந்த நாட்களில், மெஹர் பாபாவை மகிழ்ச்சியூட்டும் விளையாட்டு மனநிலையில் கண்டார். ஒரு நாள் பாபா, அவருடைய அறைக்குள் வந்து, அங்குத் தொங்கவிடப்பட்டிருந்த கருப்பு ஸ்பானிஷ் கையில்லாத தோளில் அணியும் ஆடையை கவனித்தார். பாபா அதை அணிந்துகொண்டு, தன்னைத் தானே மூடிய தோற்றத்தில் ஒரு ஸ்பானிஷ் நடனத்திற்கு, தாளத்துடன் அடியெடுத்து வைக்கத் தொடங்கினார். அவர் ஒரு புறத்திலிருந்து மறுபுறம் அறையைச் சுற்றி, விரல்களால் தாளமிட்டு, நடனமாடினார்; மெர்சிடிஸ் தனது கைகளை அதே தாளத்துடன் தட்டிச் சிரித்தார். அவருடன் நடனமாட பாபா மெர்சிடிஸை அழைத்தார். "பாபாவை மிக்க களிப்புடனும், வேடிக்கையாகவும் பார்த்ததில் நான் மகிழ்ச்சியடைந்தேன்," மெர்சிடிஸ் நினைவு கூர்ந்தார், "ஆனால் பெண்களில் எவரும் உள்ளே வந்து

எங்களைக் கண்டுகொள்ள மாட்டார்கள் என்று நான் நம்பினேன். பாபாவிடம் இந்த விளையாட்டுத்தனமான குணத்தை நான் நேசித்தேன், அவரை ஒருபோதும் எடைபோடவோ, என்ன செய்வார் என்று முன்கூட்டியே கணிக்கவோ முடியாது."

இந்தியாவை விட்டுச்சென்ற நாளிலிருந்து, ஜீன் அட்ரியல், பாபாவுடனான நெருக்கம், பாசம் இரண்டையும் இழந்து விட்டதாக உணர்ந்தார். இந்தியாவில் அவர் உடல்நிலை சரியில்லாமல் மன அழுத்தத்தில் இருந்ததைத் தொடர்ந்து, ஃபிரான்ஸ் நகருக்குப் பயணம் செய்த கப்பலிலும், உடல்நலக்குறைவால், பிறரிடம் கனிவான முறையில் நடந்துகொள்ள முடியாமல் சிரமப்பட்டார். அவர், கப்பலில் தனது கணவர் மால்கமுடன் பகிர்ந்து கொண்ட அறை, பாபா மற்றும் இதர பெண்களிடமிருந்து வெகு தொலைவில் இருந்தது; மேலும் பயண வேளையில் அவர் எவரையும் பார்க்கவில்லை. இருந்தும், மெஹர் பாபா, ஜீனின் அறைக்கு, அதிகாலை மூன்று மணிக்குச் சென்று அவர் தூங்குவதையும், எப்படி இருக்கிறார் என்றும் பார்த்து வந்தார்.

கேன்ஸ் நகரில் இருந்தபோது, ஜீன் மேலும் மனச்சோர்வடைந்தார்; 1937, அக்டோபர் 9 இரவு, அவர் வில்லாவை விட்டு வெளியேறி, உயிரைத் துறப்பதில் உறுதியாக இருந்தார். பாபா, தனது 'அன்பான பறவைகள்' குறித்து எப்பொழுதும் விழிப்புடன் இருந்ததால், அவர் அறையில் இல்லாததை கவனித்து, அவரைத் தேடி அழைத்து வர சிலரை அனுப்பி வைத்தார். அடுத்த நாள் பாபா, ஜீனின் தலையைக் கைகளில் ஏந்தி, கண்களை உற்று நோக்கி, "**நான் கொடூரமானவன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?**" என வினவினார்.

"நீங்கள் கொடூரமானவர்" என அவர் உள்ளூர உணர்ந்ததை அவரால் கூறாமல் தடுக்க முடியவில்லை.

பாபா முன்பு கூறியதை மீண்டும் எடுத்துரைத்தார்: "**எப்பொழுதும் இரக்கத்துடன் இருக்க, தற்காலிகமாகக் கொடூரமாக இருக்க வேண்டியது அவசியம்.**"

இரக்கமாக அவரைப் பார்த்து, "**அனைத்தையும் ஆட்கொள்ளும் ஆனந்தம் உங்கள் ஆத்மாவை நிரப்பி, இந்த வலியின் நினைவை அழிக்கும் நாள் வரும்**" என்று மேலும் கூறினார்.

ஜீன் அழுதுகொண்டே, "ஆனால் பாபா, இரவு இன்னும் வெகு தூரத்தில் இருக்கிறது!" என்றார்.

பாபா புன்னகைத்து, "**ஆனால் அதிகாலை விடியும் வேளையில், நீங்கள் இப்போது தாங்கிக்கொள்ளும் துயரங்கள் அனைத்தும் ஆயிரம் மடங்காக இருந்திருந்தாலும் தகும் என்பதைக் காண்பீர்கள்!**" என்று ஆறுதல் படுத்தினார்.

பாபா விளக்கினார், "**நான் உங்களைத் தள்ளிவிட்டு, பின்னர் என்னை நோக்கி இழுக்கிறேன். மீண்டும் நான் உங்களைத் தள்ளிவிட்டு இன்னும் நெருக்கமாக இழுக்கிறேன். இப்போது, நான் உங்களை வெகுதூரம் தள்ளி,**

**என்னை நோக்கி இழுக்கும் தருவாயில் என் உலகளாவிய பரமாத்மாவுடன் என்றென்றும் ஒன்றியிருப்பீர்கள்!"**

இரண்டு நாட்களுக்கு முன்பு, மெஹர் பாபா, கிதாவிடம் இது போன்ற ஒன்றைக் கூறினார். ஒரு சில மேலை நாட்டினர் பாபாவுடன் இந்தியா திரும்புவதாக இருந்தது, ஆனால் கிதா அவர்களில் ஒருவராக இல்லை. அவரைப் பிரிந்திருக்கும் அன்பர்களுக்கு, அதனால் விளையும் வெளிப்படையான வலியின் 'கொடுமை' பற்றி, பாபா விளக்கினார், **"உங்களின் அன்பைத் தீவிரப்படுத்தி என்னருகில் கொண்டுவர, பிரிவின் அனுபவத்தையும், அதன் வலியையும் நான் உங்களுக்கு வழங்க வேண்டும். (என்) அன்பின் முதல் அனுபவத்தை அடையப்பெற்ற பின்னர், என்னைப் பிரிந்து, தனியாக இருந்து கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியது அவசியம்."**

ஃபிரான்ஸ் நாட்டிலிருந்து பாபா புறப்படுவதற்கான நேரம் வேகமாக நெருங்கி வருவதால், 1937, அக்டோபர் 15 அன்று, அவர் காக்கா, டாக்டர் நீலு, ஆதி சீனியர், ஆதி ஜூனியர் ஆகியோரை, பாரிஸ் நகரில், பாபா, பெண் மண்டலியை அழைத்துச் சென்ற இடங்களைப் பார்வையிட, சில நாட்களுக்காக அனுப்பிவைத்தார்.

இந்தக் காலகட்டத்தில், சாஞ்சியின் மருமகன் நரிமன் தாதாசாஞ்சி இங்கிலாந்தின் மான்செஸ்டரில் (MANCHESTER) வேதியியல் படித்துக் கொண்டிருந்தார், மேலும் அவர் 17ஆம் தேதி பிற்பகலில் பாபாவை சந்திக்க கேன்ஸ் நகருக்கு வந்தார். 24 வயதான நரிமன் அதிகம் பேசாமல், கேள்விகள் எதையும் எழுப்பாமல் அமைதியாக இருக்கும் குணம் படைத்தவர். குருநாதருடனான முதல் தொடர்பிலிருந்து, அவர் மௌனமாக ஸ்ரீ பாபாவின் மௌனத்தின் அமிர்தத்தைப் பருகிக் கொண்டிருந்தார். பாபா அவரது படிப்பைப் பற்றி விசாரித்தார், நான்கு நாட்கள் பாபாவுடன் தங்கிய பிறகு, நரிமன் பாரிஸ் வழியாக இங்கிலாந்து சென்றார். சாஞ்சி அவருடன் பாரிஸ் சென்று 25ஆம் நாள் கேன்ஸுக்குத் திரும்பி வந்தார்.

அக்டோபர் 17ஆம் நாள், பாபா, வில்லியம் டான்கினுடன் ஜோஸ் லூயிஸை பாரிஸ் நகருக்கு அனுப்பி வைத்தார் (லூயிஸ் அங்குள்ள ஸ்பானிஷ் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட்டார்). ஜோஸ் லூயிஸை, பாபா அனுப்பிய பின்பு, ஸ்பெயின் நாட்டின் அரசியல் நிலைமை சீராகி, இறுதியில் அகதியாக அடைக்கப்பட்ட குழந்தைகளில் பெரும்பாலானோர் வீடு திரும்பினர்.

கேன்ஸ் நகரில் மேபெல் ரியான் புற்றுநோயால் மிகவும் உடல்நிலை சரியில்லாமல் தனது பெரும்பாலான நேரத்தைப் படுக்கையில் கழித்த வேளையில், மேரி பேக்கெட் அவரை கவனித்துக் கொண்டார். இது அவர்களின் இறுதி சந்திப்பு என்பதை அறிந்த பாபா, தினமும் அவரைப் பார்க்க வந்தார். மார்கரெட், கேன்ஸ் நகருக்குத் திரும்பி வந்து, மேபெல் மற்றும் டாம் ஷார்ப்லியுடன் 17ஆம் நாள் லண்டனுக்குப் புறப்பட்டார்.

வில்லியம் டான்கினையும் அவர்களுடன் லண்டனுக்குத் திரும்புமாறு பாபா அறிவுறுத்தினார். மேபெல் ஐந்து மாதங்களுக்குப் பிறகு காலமானார்.

அக்டோபர் 25 அன்று ஸாம் கோஹெனை, பாபா மெக்ஸிக்கோவிற்கு அனுப்பி வைத்தார், மேலும், நதீன் ஸூரிக் நகருக்குச் சென்றார். மூன்று நாட்களுக்குப் பிறகு, ஜீன், மால்கம் ஸ்க்லோஸ் இருவரும் பாரிஸுக்குப் புறப்பட்டனர். பாபாவிடம் விடைபெற அதற்கு முந்தைய நாள் வந்திருந்த ஆல்ஃபிரடோ, கான்ஸூலோ சைட்ஸ் இருவரும் அன்று பிற்பகலில் புறப்பட்டுச் சென்றனர்.

ஜீன் ஸ்க்லோஸ், புறப்படும் வேளையில் அழுதுகொண்டே பாபாவிடம், "உங்களுடன் எனது வாழ்க்கையில் நான் அனுபவித்த சந்தோஷம், வேதனை அனைத்திற்கும் நன்றி" என்று கூறினார்.

"**வேதனைக்கு மட்டுமே எனக்கு நன்றி கூறுங்கள்**" என்று பாபா பதிலளித்தார். பாபா கூறியதன் உட்பொருளை ஜீன் புரிந்து கொண்டார். துன்பத்தின் போது மட்டுமே நாம் அன்பில் வளர்கிறோம், வலியின் மூலம் நமது பலவீனங்கள், இறுமாப்பு அனைத்தையும் கட்டுக்குள் கொண்டுவருகிறோம்.

பாரிஸிலிருந்து திரும்பி வந்த ஆதி சீனியர், ஆதி ஜூனியர், டாக்டர் நீலு ஆகியோர் அக்டோபர் 28 அன்று மார்செல்லஸுக்குச் சென்று இந்தியாவிற்குப் புறப்படத் தயாராக இருந்த ஸ்ட்ராத்நேவரில் ஏறினர்.

அடுத்த நாள், மெர்சிடிஸ் டி அகோஸ்டா அமெரிக்கா புறப்படும் முன்பு பாபாவிடம் விடைபெற்றுச் சென்றார். சிலருக்கு, கேன்ஸ் நகரில் பாபா அளித்த இந்தப் பிரியாவிடை அவர்களின் கடைசி நெருங்கிய தொடர்பாக அமைந்தது. 1952 வரை, அடுத்த பதினைந்து ஆண்டுகளில் பாபா மற்றுமொரு மேற்கத்திய பயணத்தை மேற்கொள்ளவில்லை. சில மேற்கத்திய அன்பர்கள் பாபாவை மீண்டும் ஒருபோதும் பார்க்கவுமில்லை.

மெஹர் பாபா இந்தியாவிற்குத் திரும்புவதாக அறிவித்த அடுத்த கணமே, ரானோ அவரை மீண்டும் சந்திப்பாரா என்று சிந்திக்கத் தொடங்கினார். நோரினா, கிட்டி இருவரும் அவருடன் திரும்பிச் செல்வது ரானோவிற்குத் தெரியும், ஆனால் வேறு எவரையும் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. கடைசி நாட்களில், பாபா, ரானோவைத் தனது அறைக்கு அழைத்து, "**நீங்கள் என்னுடன் இந்தியாவிற்குத் திரும்பி வர விரும்புகிறீர்களா?**" என்று கேட்டார்.

"நான்!" என்று ரானோ கூக்குரலிட்டார். "ஆனால், நான்னி என்ன சொல்வார்?"

"இம்முறை நான்னி எதுவும் சொல்லமாட்டார்!" ரானோ தெரிவித்தார்.

"**அவர் உங்கள் பயணத்திற்கு வேண்டிய பணத்தைக் கொடுப்பாரா?**"

"அவர் மறுக்க மாட்டார் என்று எனக்குத் தெரியும்."

**“கவலைப்படாதீர்கள்,”** பாபா உறுதியளித்தார், **“நான்னி பணம் தரவில்லை என்றால், நான் உங்கள் கட்டணத்தைச் செலுத்துவேன்.”**

நாசிக் நகரில் இருந்த வேளையில் ரானோவிடம் பாபா, மெஹராபாத்தை அவர் எப்படி விரும்புகிறார் என்று கேட்டதற்கு ரானோ, ”மிகவும் அருமை, ஆனால் எனக்கு இல்லை” என்று நேர்மையாக பதிலளித்திருந்தார். இப்போது, அவர் தனது பிரியமான பாபாவுடன் இந்தியா வருவதற்கு மட்டுமே தயாராக இருந்தார்!

கேன்ஸ் நகரில் குளிர்ந்த, ஈரமான, இலையுதிர் காலநிலை தொடங்கிய அவ்வேளையில், பாபாவின் உடல்நிலை குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்கப்பட்டது. 1937, அக்டோபர் 31 அன்று மேற்கத்தியர்களில் ஒருவர் பாபாவிடம், “ஒரு குருநாதர் நோயால் பாதிக்கப்பட்டு மருந்து மாத்திரைகளைப் பயன்படுத்துவதன் காரணம் என்ன?” என வினவினார்.

பாபா அளித்த விளக்கம்:

**ஆன்மீக பரிபூரண நிலையைக் குறித்த இலட்சியத்தில், மேற்கத்திய பாகம் கிழக்கிலிருந்து வேறுபடுகிறது. இறைநிலை என்பது மனதின் சக்திகளை அடையப் பெறுவதையும், பயன்படுத்துவதையும் குறிப்பதாக மேற்கத்திய நாடுகள் நம்புகின்றன.**

**ஒரு யோகி மனதின் சக்திகளைப் பயன்படுத்தி அனைத்து கண்கட்டு, ஏமாற்று வித்தைகளையும் செய்ய முடியும். அவர் உணவைத் தவிர்க்கலாம், தூக்கமின்றி இருக்கலாம், உடலை விருப்பப்படி கைவிடவும் செய்யலாம், அல்லது சுவாசிப்பதை நிறுத்தலாம் இதுபோன்ற இன்னும் பல. ஆன்மீக ரீதியில் பார்த்தால் ஒரு சாதாரண, எளிய, நல்ல மனிதர் உலகில் தன்னலமின்றி பிறருக்காகப் பணியாற்றும் ஒருவர், இத்தகைய அற்புதங்களைச் செய்யும் யோகியைவிட மிகவும் உயர்ந்தவர். ஒரு யோகியின் மாயாஜால வித்தைகளில் எந்த ஆன்மீக முக்கியத்துவமும் இல்லை; மேலும் அவர் எதைச் செய்தாலும் அது அவரது தனிப்பட்ட சுயத்திற்கானது, எனவே ஒரு யோகி தன்னலமற்றவர் அல்ல. அவர் ஒரு மாயையை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து, மற்றொன்றை உருவாக்குவதன் மூலம் அவர் வெற்றியை நிலைநாட்டுகிறார்; இது ஒரு பரிபூரண குருநாதரின் போதனை மற்றும் பணியிலிருந்து அடிப்படையில் வேறுபடுகிறது.**

**ஒரு பரிபூரண குருநாதர், உலகின் சுமைகளை உள்வாங்கி முழுவதையும் அவர் மீது எடுத்துக் கொள்வதால், உடல் ரீதியான எதிர்வினைகளைத் தாங்கிக் கொள்ள வேண்டும், இதன் விளைவாக, ஒரு சாதாரண மனிதனைப் போல் உடல் ரீதியாக அவதிப்பட்டாக வேண்டும்.**

**கிருஷ்ணா, முஹமது, இயேசு போன்ற அவதார புருஷர்கள் அனைவரும் பரிபூரணமானவர்கள். வினை மற்றும் எதிர்வினை விதிகளுக்குத் தம்மை சமர்ப்பிப்பதன் மூலம் அவர்கள் அந்தக் கர்ம**

**வினையின் விதிகளை நிறுவி, மேலும் தன்னலமின்றி, விருப்பத்துடன் அதற்கு உட்பட்டவர்கள் ஆகிறார்கள். ஆனால், இந்த விதிமுறைகளுக்குத் தங்களைத் தாங்களே உட்படுத்திக் கொண்டாலும், அவர்கள் இந்தச் சட்டதிட்ட விதிகளுக்கு மேலே நிற்கிறார்கள். அவர்கள், ஒரே நொடியில், தங்களை குணப்படுத்திக் கொள்ளலாம் அல்லது வினைகளிலிருந்தும் எதிர்வினைகளிலிருந்தும் தங்களை விடுவித்துக் கொள்ளலாம். அப்படியானால், வினை, எதிர்வினை இவற்றின் அர்த்தமும் நோக்கமும் என்னவாக இருக்கமுடியும்?**

**வினை மற்றும் எதிர்வினையின் பிணைப்புகளிலிருந்து மனிதகுலத்தை விடுவிப்பதன் மூலம், மனிதநேயத்தை மாயையிலிருந்து வெளியேற்றி, உலகளாவிய மாயையின் இரட்டை விளைவுகளை, பரிபூரண குருநாதர்கள் தம்முள் ஈர்த்துக் கொள்கிறார்கள். பரிபூரண குருநாதர் அவரது உண்மையான நிலையில் இருமைத்தன்மையை தன்னுள் ஈர்த்து அதைப் புனிதமாக்குகிறார்.**

**ராமகிருஷ்ணாவை புற்றுநோய் தாக்கியது, ஒரு கண நேரத்தில், அவர் தனது எல்லையற்ற சக்திகளால் அதை குணப்படுத்தியிருக்க முடியும். இயேசு சிலுவையில் அறையப்பட்டு மயக்கமானார், அதை அவர் தவிர்த்திருக்க முடியும், ஆனால் அது மனிதகுலத்தின் நன்மைக்குத் தேவையான சான்றாகும்.**

**நான் மீன், முட்டை, மாமிசம் உண்ணுவதிலிருந்து விலகிவிட்டேன்; இது எனது நன்மைக்காக அல்ல, ஆனால் மானிடர் மனங்களில் இதை ஓர் எடுத்துக்காட்டாகப் பதியவைத்து, பின்பு நான் பேசும்போது, ஒரு நிறுவப்பட்ட சட்டமாக மாறும்.**

நான்கு மாதங்களுக்குப் பிறகு நான்னி, எலிஸபெத் இருவரும் இந்தியாவிற்கு வரும் இறுதி அறிவுறுத்தல்களைத் தொடர்ந்து, ஐரீன் பில்லோ, கிப்பி, கானுட் என்ற இரண்டு நாய்களையும் சுவிட்சர்லாந்திற்கு உடன் எடுத்துச் சென்றார். பின்பு, பாபா 1937 நவம்பர் 2 அதிகாலையில் கேன்ஸ் நகரிலிருந்து மார்செல்லஸுக்குப் புறப்பட்டார். மண்டலி மற்றும் கிட்டி. சாஞ்சி, காக்கா, பைதூல், முஹமது மஸ்த் ஆகியோரைத் தொடர்ந்து ரானோ, நோரினா இருவரும் ரயிலில் சென்றனர். மார்ஸெல்லஸில், ஹோட்டல் கான்டினென்டலில் அனைவரும் ஓரிரவு தங்கினர்.

மார்ஸெல்லஸில், மெஹர் பாபா நோரினாவை ஒரு மருந்தகத்திற்கு அனுப்பி, அவருக்கு இயற்கை கனிம நீர் வாங்கிவரக் கூறினார்.

நோரினா அதை வாங்கிவந்த போது, பாட்டிலில் அடையாளக் குறிப்பு ஃபிரெஞ்சு மொழியில் இருந்தது; பாபா, அதை மொழிபெயர்க்குமாறு ரானோவிடம் கேட்டார். இது தவறான வகையைச் சார்ந்த கனிம நீர் என்பதை பாபா சுட்டிக்காட்டி, சரியான ஒன்றை வாங்கி வருமாறு நோரினாவைத் திருப்பி அனுப்பினார். மறுபடியும் அது தவறானதாக இருந்ததை பாபா குறிப்பிட்டு,

தொடர்ந்து ஐந்து அல்லது ஆறு முறை நோரினாவைத் திருப்பி அனுப்பிவைத்தார்.

மருந்தக பொறுப்பாளர் சற்று சீற்றத்துடன் நோரினாவிடம், "உங்கள் குழுவினரிடம் ஏன் ஃபிரெஞ்சு மொழியில் சரியான பெயரை நீங்கள் கேட்கக்கூடாது? நிச்சயமாக, அவர் அடையாளக் குறிப்பைப் படிக்க முடிந்தால், அவர் உங்களுக்கு சரியான பெயரைச் சொல்ல முடிந்திருக்கும்" என்று கேட்டார். நோரினா தனது அமைதியைப் பாதுகாத்தார். நோரினா, அவரின் இறுமாப்பு, கோபம் இரண்டையும் விழுங்கி, தன்னுடைய சுய கட்டுப்பாட்டைப் பேணி, பாதுகாக்க இது ஒரு வாய்ப்பு, படிப்பினை என்று அந்த பொறுப்பாளருக்குத் தெரியாது.

ஹோட்டலுக்குத் திரும்பி வந்த பாபா, ரானோவிடம், "**நான் இதை எனக்காகச் செய்கிறேன் என்று நீங்கள் உண்மையில் நினைக்கவில்லை, அப்படித்தானே?**" என்று கேட்டார்.

1937, நவம்பர் 3 அன்று கேன்ஸ் நகரில் எஞ்சியிருந்த மேற்கத்திய அன்பர்கள், மும்பையை நோக்கிப் பயணிக்கும் 'டி.எம்.எஸ். ஸர்காஸியா' (TMS CIRCASSIA) கப்பலில் பாபாவை வழியனுப்ப வந்திருந்தனர். காலம் இதை இப்படிப் பார்த்தது: "பத்து வாரங்கள் பாபாவுடனான சகவாசத்தைத் தொடர்ந்த இந்தப் பிரிவு, மிகுந்த வேதனையாக இருந்தது. கேன்ஸ் நகரில் பாபாவுடன் நடந்த வித்தியாசமான சம்பவங்களையும், வெவ்வேறு காட்சிகளையும் நினைவுகூரும் வேளையில் அவர்களின் இதயங்கள் வெடித்தன. பாபாவின் நகைச்சுவை உணர்வு, அவரது தீவிர தன்மை, இகழும், புகழும் விதம், அன்பான வழிகள், அவரது வேடிக்கையான வார்த்தைகள், ஆழமான விளக்கங்கள் அனைத்தும் கசப்பும் இனிப்புமாக நினைவில் நின்றன.

"இந்தப் பறவைகள், பாபா அவர்களுடன் பிங்-பாங் மற்றும் பல விளையாட்டுகளை விளையாடியதை நினைவில் வைத்திருந்தன; மேலும் ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் பாபா, மோஸஸை (MOSES) சிறப்பாகச் சித்தரித்த நடிப்புத் திறனைக் கண்டு அனைவரும் ஆச்சரியமடைந்தனர். அழகிய மேற்கத்திய ஆடைகளில், அந்த சமுக மக்களுடன் ஒன்றாகக் கலந்த விதம் அனைத்தையும் நினைவில் கொண்டு, அவர்களின் இதயங்கள் நொறுங்கிய நிலையில், ஏதோ தொலைதூர தேசத்திற்குச் செல்வதைப் போல் உணர்ந்தனர்! பாபாவின் ஒவ்வொரு செயலின் தாக்கமும் அவர்களின் இதயங்களில் ஊடுருவி, அன்பின் மதுவால் நிரம்பச் செய்தது. அவரது கபடமற்ற விளையாட்டுகள், குறு நாடகங்கள், நடிப்பு, வேடிக்கையான துணுக்குகள் இவை அனைத்தும் அவரது பணியின் ஊடகமாகத் திகழ்ந்து, என்றென்றும் அவரது அழகை ஈர்க்கும் சிந்தனைகளாக இருந்தன."

ஸர்காஸியா கப்பலில் பாபாவின் அறை, கழிப்பறை மற்றும் குளியல் அறையுடன் மிகவும் வசதியாக இருந்தது; மேலும், கப்பல் பணியாளர்கள் மிக்க மரியாதையுடன் நடந்து கொண்டனர். பெண் மண்டலியின் அந்தரங்க

விஷயங்களில் இடையூறு விளையாமல் கவனித்துக் கொண்டனர். இது ஸர்க்காஸியா கப்பலின் முதல் பயணம், குழுவினர் குறிப்பாக மரியாதையுடன் நடந்துகொண்டனர்.

பயணத்தின் போது, பாபா தனது பெரும்பாலான நேரத்தை முஹமது மஸ்தை நீராட்டி, உணவூட்டுவதில் செலவிட்டார், மேலும் பெண் மண்டலியுடன் அமர்ந்து உணவை அவர்களுடன் உண்டார்.

நவம்பர் 12 அன்று பாபா, ஒரு கிறிஸ்தவ மதகுருவை, கப்பலில் சந்திக்க அனுமதித்தார். அவர் **ரோம் லாண்டவ்** (ROM LANDAU) எழுதிய 'காட் இஸ் மை அட்வென்ச்சர்' (GOD IS MY ADVENTURE) என்ற புத்தகத்தில் மெஹர் பாபாவைக் குறித்த அத்தியாயம் ஒன்றைச் சுட்டிக்காட்டினார். பின்வரும் உரையாடல் தொடர்ந்தது:

"இயேசு அவரை கடவுளின் குமாரன் என்று குறிப்பிட்டதை முஹமதியர்கள் தவறு எனக் கூறுகிறார்கள்" என்று கூறி மதகுரு தொடங்கினார்.

அதற்கு பாபா, "**முஹமது எப்போதாவது இயேசுவைப் பற்றி அப்படிக் கூற முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?**" என வினவினார்.

"அப்படி அவர்கள் சொல்கிறார்களே!"

**"யார்?"**

"புத்தகங்கள்."

**"ஆஹா, புத்தகங்கள்! முஹமது இவற்றை எழுதினாரா?"**

"எனக்குத் தெரியாது. ஆனால் முஹமதிய இலக்கியங்களில் அது அப்படி எழுதப்பட்டுள்ளது, மேலும் கிறிஸ்தவத்திற்கு எதிராக இன்னும் பல குற்றச்சாட்டுகள் உள்ளன" என்றார் கிறிஸ்தவ மதகுரு.

**"ஆனால் மக்கள் எதையும் சொல்லலாம் அல்லது எழுதலாம். அதற்காக நீங்கள் முஹமதை எவ்வாறு குறை கூற முடியும்?"**

"ஏனெனில் அவர்கள் அவரைப் பின்பற்றுபவர்கள்" என்றார் மதகுரு.

**"நீங்கள் இயேசுவைப் பின்பற்றுபவர்; நீங்கள் ஏதேனும் கடுமையான தவறு செய்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம்** (கடவுள் அதைத் தடுக்கட்டும்)! **நீங்கள் இயேசுவைப் பின்பற்றுபவராகவும், ஊழியம் புரிபவராகவும் இருப்பதால் மக்கள் அந்தத் தவறுக்கு இயேசுவே பொறுப்பு என்று கூறுவார்களா?**

**"ஆகவே, குருநாதர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் போதனைகளை, அதி உற்சாகமாகப் பின்பற்றுபவர்களால் தவறாக சித்தரிப்பதன் மூலம், இறை ஞானிகள் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறார்கள். இயேசு கூறியது தவறு என்று முஹமது ஒருபோதும் கூறியிருக்க முடியாது. அவர் அவ்வாறு செய்திருந்தால், அவர் ஒரு நபி அல்ல! தீர்க்கதரிசி, இம்மண்ணுலகில் அவரது பூத உடலைத் துறந்த பின்பு, சீடர்களும் அவரைப் பின்பற்றுபவர்களும் அவருடைய போதனைகளை, தங்கள் சொந்த அபிப்ராயங்களுக்கும் புரிதலுக்கும் ஏற்ப உலகுக்கு முன்னால் வைக்கிறார்கள்; அவர்களின் இந்த விளக்கங்கள் அதன் உள் அர்த்தத்தில்**

**மாறுபட்டு, சில நேரங்களில் தீர்க்கதரிசியின் போதனைகளுக்கு முற்றிலும் முரண்பாடாக இருக்கும்.**

**"ஒரு விரிவுரையாளர் இன்று 500 பேர் அடங்கிய ஒரு கூட்டத்தில் பேசியதை, அதே 500 பேர் பிறரிடம் திரும்பத் திரும்ப எடுத்துச் சொன்னால், 500 வெவ்வேறு விளக்கங்களாக வெளிவரும் - அவற்றில் சில விளக்கங்கள் அந்த விரிவுரையாளரால் கனவு கண்டிருக்கக் கூட முடியாத அளவிற்கு இருக்கும்! ஆகவே இயேசு போன்ற தீர்க்கதரிசியின் போதனைகளை என்னென்பது? கடந்த காலங்களில் வெவ்வேறு மொழிபெயர்ப்பாளர்கள் மூலம் அவருக்குப் பின்னர் ஆயிரம் முறைகள் மாற்றங்களைக் கண்டிருக்கலாம். முதலும், அசலுமான சிந்தனை, சில சமயங்களில் அதன் தோற்றத்தை இழந்து விடுகிறது - அல்லது ஒவ்வாததாகி விடுகிறது - ஆனால் ஒவ்வொன்றும் முதலும் அசலும் என்ற தனது வேறுபட்ட விளக்கத்துடன் ஒட்டிக்கொண்டிருக்கும்.**

**"அதனால்தான் இன்று பலர் பைபிளையும் பிற புத்தகங்களையும் நம்பத் தயங்குகிறார்கள், அதன் விளக்கங்கள் அவர்களின் இதயங்களைத் தொடுவதில்லை. கிறிஸ்துவை விட பைபிளை எழுதியவர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர்!**

**"இவ்வாறு, தீர்க்கதரிசிகள் ஒருபோதும் சொல்லாத சொற்கள் மற்றும் விளக்கங்கள் தொடர்பாக வெவ்வேறு மதங்களை வெறித்தனமாகப் பின்பற்றுபவர்களிடையே எப்பொழுதும் சண்டை சச்சரவுகள் நிலவும், ஆனால் அவை அதி உற்சாகமான சீடர்கள் மற்றும் பாதிரியார்களால் புனித நூல்களில் எழுதப்படும் போது, அவை இயற்கையாகவே பிறர் மனதில் ஒரு கிளர்ச்சியை உருவாக்குகின்றன."**

அந்தக் கிறிஸ்தவ பாதிரியார் பாபாவிடம், "ஒரு குருநாதராக, மக்கள் தேவாலயம் அல்லது பாதிரியாரிடம் சென்று, கிறிஸ்தவ மதத்தில் பாவமன்னிப்பு கோருவது போல, நீங்கள், ஒருவர் செய்த பாவங்களுக்கான தண்டனையாக, பிராயச்சித்தம் என்ற முறையில் ஏதேனும் விதிக்கிறீர்களா?" எனக் கேட்டார்.

பாபா பதிலளித்தார், **"ஒருவர் செய்த பாவங்களை ஒப்புக்கொள்வதற்கான வெறும் சிந்தனையும் செயலும், உண்மையாகவும், நேர்மையாகவும் இருந்து, மீண்டும் ஒருபோதும் அதைச் செய்ய முயற்சிக்க மாட்டேன் என்ற வாக்குறுதியும் இருந்தால் போதும், வேறு எந்தத் தவம் செய்யப்படாவிட்டாலும் பரவாயில்லை. தவிர, இறைநிலையை அடைந்த குருநாதர்களுக்கு, துல்லியமான முறையில் வலியுறுத்தும் வேறு வழிகளும் முறைகளும் உள்ளன!"**

"ஆனால் கிறிஸ்தவ மதத்தில் கடைப்பிடிக்கும் உண்மையான பாவமன்னிப்பு என்ற செயல்முறை அவசியமா?"

பாபா விளக்கினார், **"இது குருநாதரின் விருப்பத்தையும் அறிவுறுத்தல்களையும் சார்ந்துள்ளது. சில நேரங்களில் அவர் மிகவும் கடுமையான தவத்தை சுமத்துகிறார், அல்லது ஒரு விரதம், பணிவுடன்**

**பிறருக்குச் செய்யும் சேவையைப் பற்றி வலியுறுத்துகிறார், அல்லது அவர் அதை முற்றிலும் 'மன்னித்து', இதயத்தை சுத்தம் செய்யும் விதத்தில் ஒரு நேர்மையான ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டு அனைத்தையும் மறந்துவிடக் கோருகிறார்.**"

மெஹர் பாபா ஸர்க்காஸியா கப்பலில் ஏறிய வேளையில், அவர் இதர பயணிகளைப் பார்த்து நோரினாவிடம், "**கப்பலில் பயணம் செய்யும் பல மக்களிடையே ஒரு நேர்மையான ஆத்மாவைக் கண்டுகொள்ளலாம்**" என்று குறிப்பிட்டார். ஆனால் சக பயணிகள் எவருக்கும் அவரது அடையாளத்தை வெளிப்படுத்த வேண்டாம் என்றும் எச்சரித்தார். இருப்பினும், நவம்பர் 18ஆம் நாள், ஆர்வத்தை அடக்கமுடியாத பயணிகளில் சிலருக்கு, அவரைப் பற்றிய ஒரு நேர்காணலை வழங்க பாபா, நோரினாவிற்கு அனுமதி வழங்கினார் (கேள்விகளுக்கு பதிலளிக்க, சாஞ்சியும் கலந்து கொண்டார்.) ஏறக்குறைய ஒரு டஜன் நபர்கள் கப்பல் தளத்தின் அமைதியான இடத்தில் கூடினர்.

அந்தச் சிறிய கூட்டத்தில் பங்கெடுத்தப் பயணிகளுக்காக, பாபா இந்தச் செய்தியை வழங்கினார் (பாபா, இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே இந்தச் செய்தியை எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைத்தார்):

**உண்மைப்பொருள் எல்லையற்ற அளவிற்கு எளிமையானது. அதுபோலவே உண்மைப்பொருளை உணர்தலும் இயற்கையாகவே எளிமையானது. ஏக இறைவனோடு ஒற்றிணைய சிக்கல்களும், சிரமங்களும் இயல்பானவை அல்ல, ஏனெனில் இருமைத்தன்மை என்பது சிக்கல்களையும், சிரமங்களையும் அடிப்படையாகக் கொண்டது. புத்தகங்கள், தத்துவங்கள் மற்றும்** (வெவ்வேறு) **சொற்றொடர்கள் அனைத்தும் ஒருவரின் ஆன்மீகப் போக்குக்குப் பொருந்தாத தருணத்தில், குழப்பத்திற்கும் முரண்பாட்டிற்கும் வழிவகுக்கும். இறையுணர்வு என்பது ஒவ்வொரு சிந்தனையிலும் செயலிலும், தெய்வீகம் தானாகவே உணர்வுபூர்வமாக, ஒற்றுமையுடன் இறைவனோடு இணைந்து வாழ்வதாகும்.**

**நீங்கள் தூங்கும்போதும், விழித்திருக்கும்போதும், உணர்வு அல்லது உணர்வற்ற நிலையில் உள்ளபோதும், உண்ணும்போதும் அல்லது உண்ணாமல் இருக்கும்போதும், மக்களோடு சேர்ந்தோ அல்லது தனியாகவோ, எந்த நடவடிக்கைகளுக்கும் மத்தியிலோ அல்லது எதுவும் செய்யாமலோ இருக்கும்போது, உங்கள் சுவாசம் தானாகவே உங்களுடன் இருக்கும். அதுபோல், உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் கடவுள், தானாகவே உங்களுடன் இருக்க வேண்டும். இது வாழ்க்கையின் சாதாரண ஓட்டத்தில் எளிமையான, நடைமுறையில் வாழக்கூடியதாக இருக்க வேண்டும்.**

**தனிப்பட்ட அனுபவத்தின் மூலம் திடமான நம்பிக்கையின் அடிப்படையில் இல்லாவிடில், நம்பிக்கை, திட நம்பிக்கை, உறுதியான பற்று இவை அனைத்தும் மாயையின் செயற்பாடுகள் என்று கூறலாம். ஒன்றும்**

**அறியாத அப்பாவி ஆத்மாக்கள், முதலில் தங்கள் சொந்த குறைபாடுகளைக் கண்டுகொள்ளாமல், பிறரின் தவறுகளையும் பலவீனங்களையும் நாடுகின்றன, மேலும் சிலருக்கு அந்த உண்மையான அறிவை அடைய முடியாத நிலையில், கேலியும் கிண்டலும் செய்வதே வாழ்நாள் வேலையாக இருக்கும்.**

**எளிதாகக் காணத்தக்கதும், வெளிப்படையானதும் நிஜத்தில் உண்மையானதல்ல. வாழ்வின் பலதரப்பட்ட பிரச்சினைகளில் சில எளிய உண்மைகள் ஒளிந்திருக்கும்; அவை அறியாமை எனும் முகத்திரையால் மனித பார்வையிலிருந்து மூடி மறைக்கப்படுகின்றன.**

**எனவே அறியாமையை நம்புவதில் உங்களைத் தொந்தரவு செய்யாதீர்கள், என்னை நம்புவதைப் பற்றியும் கவலைப்படாதீர்கள். சத்தியத்திற்கான ஏக்கத்தை அடைய, உங்கள் ஆழ் இதயத்தை உறைவிடமாகக் கொண்ட பரமாத்மாவை நம்புவதற்குத் தயாராக இருங்கள். அப்போது, அதன் தூய்மையான, எல்லையற்ற எளிமையோடு நீங்கள் உண்மைப்பொருளை அறிந்து கொள்வீர்கள்.**

அதன் பின்னர், ஒரு பெண்மணி நோரினாவிடம் வந்து, மெஹர் பாபாவுடன் ஒரு நேரடி பேட்டிக்காக மன்றாடினார், அதை அவர் அதே நாளில் வழங்கினார். தென்னாஃபிரிக்கா (SOUTH AFRICA) நாட்டின் டிரான்ஸ்வால் (TRANSVALL) நகரைச் சேர்ந்த இஸபெல்லா பால் (ISABELLA PAUL) என்ற பெண்மணி, தங்கச்சுரங்க மேற்பார்வையாளரின் மனைவி ஆவார். இங்கிலாந்திலிருந்து வந்து கொண்டிருந்தவர், திபெத் மலையில் கடவுளைக் கண்டுகொள்ளும் நோக்கத்தில் உறுதியாக இருந்தார். பல ஆண்டுகளாக அவர் இந்தியாவிற்கு வர திட்டமிட்டு, இமயமலைக்குச் சென்று கொண்டிருந்தார். நோரினா, மெஹர் பாபாவின் பெயரைக் கூறுவதைக் கேட்டதும், பல ஆண்டுகளாகத் தேடிக்கொண்டிருப்பதைக் கண்டுகொண்டதாக இஸபெல்லாவிற்கு இயல்பாகவே தெரியவந்தது. கப்பலில் ஏறியபோது மெஹர் பாபா குறிப்பிட்டதும் அவரைத்தான் என்பதும் ஊர்ஜிதமானது.

மெஹர் பாபா அவரிடம், "**திபெத்தில் அல்ல, ஆனால் நீங்கள் கடவுளை உங்களில் காண்பீர்கள்**" என்று கூறினார். இஸபெல்லா, எஞ்சியிருந்த பயணத்தில் பாபாவை கிட்டத்தட்ட தினமும் பார்த்தார், மேலும், "அவர் எனது வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் ஒரு நடைமுறை வழியில் என்னிடம் பல விஷயங்களை விளக்கினார். பாபாவைப் போன்ற ஒருவரை சந்தித்ததில், எல்லா தேடல்களும் ஒரு முடிவிற்கு வந்தன" என்று குறிப்பிட்டார்.

அவரை சந்திக்க விருப்பம் தெரிவித்த மேலும் சில பயணிகளையும் பாபா சந்தித்தார்.

மார்ஸெல்லஸிலிருந்து புறப்பட்டு வந்த பின்பு, பாபா தனது அறையின் குளியலறையில் முஹமது மஸ்தை நீராட்டத் தொடங்கினார். இது ஒன்றும் எளிமையான அல்லது எளிதான பணி அல்ல. ஒரு மஸ்தை நீராட்ட

மணிக்கணக்கில் நேரம் பிடிக்கும். வழக்கமாக அவர் அணிந்திருந்த பாதணியைக் கழற்ற ஒரு மணிநேரம் ஆனது: ஒவ்வொரு முறையும் பாபா முயற்சிக்கும் போதும், முஹமது தனது கால்களை உதைத்தார். முழு நேரமும், முடிந்தவரை எதிர்த்து, முஹமது தனது பாதணியை மிக்க தயக்கத்துடன் எடுக்க அனுமதித்தார். அதேபோல், அவரது உடைகளை அவிழ்த்து, நீராட்டிய பின்னர் உடைகளை மாற்றியதும், மீண்டும் அந்தப் பாதணிகளை அணியச் செய்யும்போது - அது எல்லா வழிகளிலும் ஒரு போராட்டமாகவே இருந்தது!

பாபாவின் உடல்நிலை பாதிக்கப்பட்ட போதிலும், அவர் முஹமதின் தற்போக்கான திடீர் ஆர்வங்களையும், சிடுசிடுப்பான மனநிலையையும் தாங்கிக்கொண்டு, அளவிற்கு அதிகமாக அன்பு காட்டி, மணிக்கணக்கில் அவருடன் நேரத்தைச் செலவிட்டார். இதை, பாபா ஒரு முறை இவ்வாறு விளக்கினார்: **அவர் மஸ்துகளின் தாயைப் போன்றவர்; எனவே இந்த வழியில் ஒரு மஸ்திற்கு சேவை புரிவதில் பாபாவிற்கு மட்டற்ற மகிழ்ச்சி. பாபா இறை போதையில் இருக்கும் மஸ்துகளுக்கு மத்தியில் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருந்தார்.**

இயந்திரக் கோளாறு காரணமாக, ஒரு நாள், கப்பல், அதன் வேகத்தை இழந்தது; பாபா, நோரினாவை, கேப்டன் டபிள்யூ. கெமலிடம் (CAPTAIN W GEMMELL) அனுப்பி 'அவர்கள் எப்பொழுது மும்பையைச் சென்றடைவர்' என்று விசாரித்தார். நோரினா முதலில் அவருடன் பொதுவான விஷயங்களைப் பற்றி பேசி, பின்பு சாதாரணமாக வினவினார், "மேலும், நாம் எப்பொழுது மும்பையைச் சென்றடைவோம்?" கேப்டன் கூறிய பதிலை பாபாவிடம் தெரிவிக்க, அவர் மீண்டும் அதே கேள்வியைக் கேட்க நோரினாவைத் திருப்பி அனுப்பி வைத்தார். அவர் திரும்பி வந்ததும் பாபா மறுபடியும் கேப்டனிடம் சென்று விசாரிக்கக் கூறினார். இறுதியில் விரக்தி அடைந்த கேப்டன் எரிச்சலில், "மேடம், உங்களுக்கு என்னவாயிற்று? அதே கேள்வியுடன் நீங்கள் என்னிடம் திரும்பத் திரும்ப வருகிறீர்கள்! நான் சொன்னது உங்களுக்கு நினைவில் இல்லையா?" என்று கேட்டார்.

இதை நோரினா பாபாவிற்குத் தெரிவித்ததும், அவர் மீண்டும் அதே கேள்வியுடன் நோரினாவை அனுப்பி வைத்தார். இந்த முறை கேப்டன் அவரது பொறுமையை முற்றிலும் இழந்து சீற்றமடைந்தார். நோரினாவும் அவமானப்பட்டு, தடுமாற்றத்தில் அமைதியாகப் பின்வாங்கினார். அவர் என்னதான் சொல்ல முடியும்? கேப்டன் நோரினாவை சாபமிட்டுத் திட்டினாலும் குருநாதரின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதன் முக்கியத்துவத்துடன் ஒப்பிடும்போது அது ஒன்றுமில்லை என்று அவருக்குத் தெரியும்.


மீண்டும் பாபா நோரினாவிடம், "**எனது முக்கியமான பணியின் நிமித்தம், நான் விரைவில் மும்பையைச் சென்றடைய வேண்டும். கப்பல் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகச் சென்று சேரும் சாத்தியம் உள்ளதா என்று கேப்டனிடம் கேட்டுவாருங்கள்**" என்றார்.

இந்த இக்கட்டான சூழ்நிலையைத் தவிர்க்கும் நோக்கத்தில் நோரினா, “பாபா, இந்த அப்பாவி கேப்டன் ஏற்கனவே என்னிடம் எரிச்சலாகவும், கோபமாகவும் இருக்கிறார்…” என்றார்.

ஆனால் பாபா பதிலளித்தார், “**உங்களுக்கு எதுவும் தெரியாது**! **எனக்கு மிக முக்கியமான வேலை மெஹராபாத்தில் காத்திருக்கிறது**, **எனவே இதில் எனக்கு உதவ உங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும்**. **கப்பலை விரைவாக ஓட்டிச்சென்றால் நாம் நேரத்திற்கு முன்பே மும்பையைச் சென்றடைவோம்**.”

தயக்கத்துடன், நோரினா கேப்டனின் அறைக்குச் சென்றார். நோரினாவைப் பார்த்த கேப்டன் மேலும் எரிச்சலடைந்தார். நோரினா முற்றிலும் அமைதியாக நின்றார், அவர் இதயம் படபடத்தது, சிறிது நேரம் கழித்து அதே கேள்வியைக் கேட்டார். கேப்டன் சீற்றமடைந்து, ‘வேளைக்கு முன்னதாகச் செல்ல வேண்டுமா? அந்தக் கேள்விக்கு இடமேயில்லை!’ என்றதும், நோரினா கொந்தளிப்பில் திரும்பினார்.

மெஹர் பாபா, நோரினா இருவரிடையே நடந்ததை எல்லாம் கவனித்த சாஞ்சி மிகவும் அனுதாபப்பட்டார்; முந்தைய பயணங்களின் போது, அவர் இதுபோன்ற சோதனைகளை சந்தித்துள்ளார். இப்போது அது நோரினாவின் முறை.



**கேன்ஸ்** (CANNES)**, 1937**



**ஸர்க்காஸியா கப்பலில் பயணம், நவம்பர் 1937**
(ON BOARD THE CIRCASSIA, NOVEMBER 1037)



மெஹர் பாபா, நாக்பூர், டிசம்பர் **1937**
(MEHER BABA, NAGPUR, DECEMBER 1937)

# மெஹராபாத், நவ்ஸாரி & நாக்பூர்

**(Meherabad, Navsari & Nagpur)**

1937 நவம்பர் 20 அதிகாலையில், ஸர்க்காஸியா கப்பல் மும்பையை வந்து சேர்ந்தது.

பாதிரி, துக்காராம், ஆதி சீனியர் மூவரும் பாபாவையும் குழுவையும் மும்பையில் சந்தித்தனர். நோரினா, கிட்டி, ரானோ மூவரையும் காரில் பூனாவிற்கு அழைத்துச் சென்று, முக்கிய இடங்களைப் பார்வையிட்டு, பின்பு மெஹராபாத்திற்கு அழைத்துச் செல்லப் பாதிரிக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆதி ஃபிரான்ஸிலிருந்து கொண்டு வரப்பட்ட எலிஸபெத்தின் காரில் பாபாவை அழைத்துச் சென்றார். பெட்டி படுக்கைகளை எடுத்துச் செல்ல ஒரு சரக்கு வண்டி வாடகைக்கு அமர்த்தப்பட்டது. சாஞ்சி அதனுடன் மெஹராபாத்திற்கு, 75 மூட்டை முடிச்சுகளுடன் சுங்கச்சாவடிகளை மிகவும் சிரமப்பட்டுக் கடந்து சென்றார்.

பூனா நகரில் அமைந்த பாபா இல்லத்தில், நோரினா, கிட்டி, ரானோ மூவரையும் பாதிரி, மெமோவிற்கு மீண்டும் அறிமுகப்படுத்தி வைத்தார். பின்னர் அவர் பாபாவின் குடில் இருந்த ஃபெர்குஸன் சாலை, பாபா தனது ஆரம்பகால சீடர்களுடன் இருந்த கஸ்பாபேட் போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்றார். பின்பு பாபாவுடன் சம்பந்தப்பட்ட இதர குறிப்பிடத்தக்க இடங்களுக்கும் ஒரு சுற்றுப்பயணத்தை வழங்கிய பின்பு, பாதிரி அவர்களை அன்றிரவு மெஹராபாத்திற்கு அழைத்து வந்தார்.

மெஹர் பாபா அவர்களின் வருகைக்காக மேல்மலையில் காத்திருந்தார். அவர்கள் வந்ததும், பாபா அவர்களை, தங்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றார். நீர் தொட்டி கட்டிடத்தின் மேற்கு அறை என்று அழைக்கப்படும் அறையில் மூன்று படுக்கைகள், மூன்று நாற்காலிகள் மற்றும் ஒரு கீறல் விழுந்த கண்ணாடி மட்டுமே இருந்தன. நாசிக் ரிட்ரீட்டில் வாழ்ந்த வாழ்க்கையோடு ஒப்பிடுகையில் மெஹராபாத் ஓர் எளிமையான, ஆடம்பரமற்ற இடமாக இருந்தது. பாபா அவர்களை நாசிக் நகரில் வாழ்ந்தபோது எச்சரித்தார், "**உங்கள் அனைத்து வசதிகளையும் நான் படிப்படியாகப் பறித்துவிடுவேன்**." அவருடைய வார்த்தைகள் இப்போது நிறைவேறி வருகின்றன.

பாபா, கிட்டிக்கு, சமையலறை பணிகளை வழங்கினார். விளக்கப்படங்கள் மற்றும் பத்து வட்டங்கள் அடங்கிய ஓவியம் தயாரிப்பதில் ரானோவிற்கும், நோரினாவிற்கு எழுதுவது போன்ற கடமைகளையும் வழங்கினார். நாஜா, கோர்ஷெத் இருவருக்கும் கிட்டி டேவி ஆங்கிலம் கற்பிக்க இருந்தார்.

ரானோ, தினமும் நேரம் தாழ்த்தி படுக்கைக்குச் சென்று, தாமதமாக எழுந்திருக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். ஆனால் மெஹராபாத்தில், இதர பெண்கள் காலை ஐந்து மணிக்கு விழித்து, முதலில் தேநீர் அருந்துவது வழக்கம். மெஹராபாத் வந்த மறு நாள், பாபா, நாஜாவிடம் ரானோவை சமையலறைக்கு

அழைத்து வருமாறு கூறினார். ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த ரானோவை நாஜா எழுப்பியதும், ரானோ கண்களை வருடிக்கொண்டு, தூக்கக் கலக்கத்தில், அங்கி ஒன்றை அணிந்து, நாஜாவுடன் சமையலறைக்குச் சென்றார். கெட்டிலில் கொதித்துக் கொண்டிருந்த நீரைச் சுட்டிக்காட்டி, பாபா அவரிடம், **"கெட்டிலின் இனிமையான இசையைக் கேட்டீர்களா?"** என்று சைகையால் கேட்டார்.

ரானோ அமைதியாக நின்று, மனதில் நினைத்துக் கொண்டார்: "இது என்ன? நான் ஒரு கெட்டில் கொதிக்கும் சத்தத்தைக் கேட்கவா அழைக்கப்பட்டேன்?"

அவரது எண்ணத்தை அறிந்த பாபா, **"கெட்டிலின் இசை ஒலியில் முக்கியத்துவம் எதுவும் இல்லை, ஆனால் நான் உங்களைப் பற்றியும், உங்களை அழைப்பதைக் குறித்தும் நினைத்தேன்"** என்று உச்சரித்தார்.

நோரினா, கிட்டி, ரானோ மூவரும் மெஹராபாத்தில் வாழ்க்கையைத் தொடங்கிய போது, கிழக்கத்திய பெண் மண்டலியின் முன்னிலையில் எந்த ஆணின் பெயரையும், அதுபோல், ஆண்களுடன் உரையாடும் போது, பெண்களின் பெயர்கள் எதையும் குறிப்பிட வேண்டாம் என்றும் பாபா மீண்டும் அறிவுறுத்தினார். நாசிக் ஆசிரமத்திலிருந்து அவர்கள் மெஹராபாத்திற்கு வந்த வேளையிலும் இந்தக் கட்டுப்பாடு அமலில் இருந்தது. ஒரு நாள், பாபா, ரானோ, விஷ்ணு மூவரும் ஒன்றைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்த போது, ரானோ, மணியின் பெயரைத் தற்செயலாகக் குறிப்பிட்டார். பாபா வருத்தத்தில் அவரைத் திட்டினார்: **"மீண்டும் இதுபோன்ற தவறைச் செய்யாதீர்கள்! நான் உங்களுக்குச் சொன்னது நினைவில் இல்லையா? அல்லது அதை நீங்கள் தீவிரமாக எடுத்துக் கொள்ளவில்லையா?"**

காலம் இதை இப்படிக் குறிப்பிட்டது: "பாபா, பெண் மண்டலியை முற்றிலுமாகத் தனிமைப்படுத்தி வைத்திருந்தார், எல்லாவற்றிற்கும் மேலாக மெஹராவைக் கருத்தில் கொண்டு இந்தக் கட்டுப்பாடு முக்கியமாகக் கருதப்பட்டது. படைப்புடனான பாபாவின் உட்பணிக்காக மெஹராவைத் தனிமைப் படுத்துவது அவசியம். மெஹரா தோட்டத்தின் மஹாராணி, மேலும் பிரியமானவருக்காக அவர் செய்த சேவையின் உதாரணமாக இருந்து தோட்டத்தின் இதர கன்றுகளுக்கு ஊட்டமளிக்கும் விதத்தில் வாழ்ந்தார்.

மெஹர் பாபா ஃபிரான்ஸ் சென்று திரும்பி வந்து, அவர் கீழ் மெஹராபாத்தில் மஸ்த் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களை கவனிக்கும் பணியில் ஈடுபட்டார். 1937, நவம்பர் 29 அன்று, மெஹராபாத்தில் நடந்த அறக்கட்டளை கூட்டத்திற்கு ராம்ஜூ, காக்கா பாரியா ஆகியோரும் வந்தனர், அதில் நோரினாவும் கலந்து கொண்டார்.

கிட்டி, சமையலறை கடமைகளை கவனித்து, நாஜாவிற்கு ஆங்கிலம் கற்பிக்க முயன்றபோது, நாஜா அவருக்கு சமையல் கற்றுத் தந்தார். கிட்டிக்கு இந்த வேலை கடினமாக இருந்தது, ஏனெனில் இந்திய உணவு வகைகள் மேற்கத்திய உணவிலிருந்து பெரிதும் வேறுபட்டிருந்தன, மேலும் அவற்றைத்

தயாரிக்க அதிக ஈடுபாடு தேவைப்பட்டது. சப்பாத்தி தயார் செய்ய, கிட்டி, புகை எழுப்பும் மண்ணெண்ணெய் அடுப்பருகில் மணிக்கணக்கில் அமர வேண்டியிருந்தது. ஒரு நாள் கிட்டி சோகமாக சிந்தனை செய்து கொண்டிருந்தார்: "இந்தியாவிற்கு நான் இதற்காக வரவில்லை! இதுபோன்ற வேலைகளை என்னால் வீட்டிலே செய்ய முடியும். இங்கு நான் பாபாவுடன் இருக்க வந்துள்ளேன், ஆனால் நான் அவரைப் பார்ப்பதே இல்லை."

அன்று மாலை, பெண் மண்டலியுடன் உரையாடிக் கொண்டிருந்த வேளையில், மெஹர் பாபா, கிட்டிக்கு கூறுவது போலக் குறிப்பிட்டார்: **"நான் ஒருவருக்கு வழங்கும் பணி எனது பணி, எனது விருப்பத்திற்கு இணங்க அதைச் செய்கிறவர் மிகப் பெரிய பிராயச்சித்தம் செய்கிறார் என்று அர்த்தம்! அத்துடன் ஒப்பிடுகையில், தியானம், தனிமை, உபவாசம், எளிமையான வாழ்க்கை இவற்றிலெல்லாம் எதுவுமே இல்லை!"**

பாபாவின் வார்த்தைகள் கிட்டியின் இதயத்தில் நிலையாக நின்று அவரது பணிக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. பல ஆண்டுகளாக, பாபாவுடன் இந்தியாவில் தங்கியிருந்தபோதும், பின்னர் அமெரிக்காவில் வாழ்ந்து அவருக்காகச் செய்த கடினமான பணி, சளைக்காத கடமை உணர்வு மற்றும் கீழ்ப்படிதலுக்கு கிட்டி ஓர் எடுத்துக்காட்டு.

இதற்கிடையில், (பாபாவுடன் இந்தியாவிற்குத் திரும்பி வராமல்) ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இருந்த அன்பர்களுடன் பாபா தொடர்ந்து கடிதப் பரிமாற்றத்தை மேற்கொண்டார். பாபாவின் இனிமையான வார்த்தைகள் அவர்களின் உள்ளங்களை நெகிழ வைத்து, தமக்கும் தங்கள் பிரியமானவருக்கும் இடையிலான தூரத்தைக் குறைத்தது. 1937 டிசம்பர் 15 அன்று இங்கிலாந்தில் வாழும் அன்பர்களுக்கு, பாபா கீழ்வரும் கடிதத்தை எழுதினார்:

**கடந்த ஓரிரு நாட்களில், ஐரோப்பாவைப் பற்றி பேசும் வேளையில், நான் விரும்பிய மூன்று விஷயங்களை எடுத்துரைத்தேன் - கிம்கோ, அஸிஸி மூன்றாவதாக, போர்டோஃபினோ; எனவே என் இதயத்தின் விலைமதிப்பற்ற இடத்திலிருந்து கிம்கோ நழுவி விடும் என்று நீங்கள் ஒருபோதும் அஞ்சத் தேவையில்லை.**

டிசம்பர் 8 அன்று டாக்டர் டான்கினுக்கு கிட்டி எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

இந்த சுவாரஸ்யமான உண்மையை பாபா ஒருநாள் எனக்கு எடுத்துக் கூறினார் - கடந்த கால நான்கு பெரிய அவதார புருஷர்களின் நான்கு அம்சங்களும் தற்போதைய அவதார காலத்தில் உள்ளடங்கியுள்ளன. புத்தரின் சீரான நிலை, அமைதி, வெளியளவிலான சாந்தம் நிறைந்த குணம், துறவறம் இவை அனைத்தும், வெளியளவில் தோன்றினாலும், இல்லாவிடிலும் எல்லா அவதார புருஷர்களிடத்திலும் நிலைகொண்டிருக்கும். இருப்பினும், இன்றைய அவதார புருஷரின் பணிகள் சுறுசுறுப்பாகவும், அதிவேகமாகவும் இருக்க வேண்டும். அவர் மண்டலியுடனான கடுமையான ஒழுக்கத்தில் முஹமது

போலவும், பெண் மண்டலியுடன் கிருஷ்ணாவின் களிப்பான வாழ்க்கை வாழ்வதும், மேலும் இயேசுவைப் போல மஸ்துகள் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களை நீராட்டி, சுத்தம் செய்து, உணவூட்டுவதும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

1927ஆம் ஆண்டில், கலிங்கட், மெஹர் ஆஷ்ரமத்தில் தனது உயர்நிலைப் பள்ளி கல்விக்காக, பெர்சியாவிலிருந்து இந்தியாவிற்கு வந்திருந்தார். அவர், பாபா விரும்பிய சிறுவர்களில் ஒருவர், மெஹராபாத்தில் தனது கடமைகளில் மிக்க விழிப்புணர்வுடன் இருந்தார். பாபா அவரை ஆண் மண்டலியுடன் இணைந்திருக்க அனுமதித்தார், கலிங்கட் தனது கடமைகளை அன்புடனும், குருநாதர் மீது முழு நம்பிக்கையுடனும் செய்தார். அவர் பாபாவை விட்டுப் பெர்சியாவிற்குத் திரும்பிச் செல்ல விரும்பவில்லை, ஆனால் ஒரு பாரசீக குடிமகனாக இருந்ததால், அவர் இராணுவத்தின் வரையறுக்கப்பட்ட சட்ட திட்டங்களுக்குப் பணிந்திருந்தார்; தவறினால் ராணுவம் நடவடிக்கை எடுக்கும் வாய்ப்பிருந்தது.

**“நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன்; என்னை எப்பொழுதும் உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள்”** என்று ஆறுதலளித்த பாபாவின் முன், கலிங்கட் கண்ணீர் சிந்தி அழுதார்.

மெஹர் பாபாவுடன் பத்து ஆண்டுகள் இருந்த பின்பு, கலிங்கட் கண்களில் நீர் ததும்ப, பெர்சியாவிற்குப் புறப்பட்டுச் சென்றார். ஆண் மண்டலியும் மிக்க வருத்தத்தில் ஆழ்ந்தனர். சில ஆண்டுகளுக்குப் பிறகு கலிங்கட் பெர்சியாவில் காலமானார்.

டிசம்பர் 19 அன்று, டாக்கே, பாபாவைப் பார்க்க மெஹராபாத் வந்தார். பாபா, மேல் மலையிலிருந்து இறங்கி வந்து, பெண்டு, டாக்கே இருவருடன் சில முக்கிய விஷயங்களைப் பற்றி விவாதித்த பின்னர், அவர் மஸ்த் ஆசிரமத்திற்கு அவசரமாக நடந்து சென்றார். மாஸாஜி ஒரு துடைப்பத்தை பாபாவிடம் கொடுத்ததும், அவர் தனது சட்டை, பைஜாமாவை சுருட்டிக்கொண்டு, நேரடியாக, மஸ்துகளின் கழிவறைகளுக்குச் சென்றார். அவற்றை முற்றிலுமாக சுத்தம் செய்து, கிருமிநாசினி தைலத்தைத் தெளித்தார். அதற்குப் பிறகு, பாபா குளியலறைக்கு விரைந்து, முஹமது மஸ்தை வற்புறுத்தி நீராட்ட முயற்சித்தார்; ஒரு மாதத்தில் ஐரோப்பாவிற்கு மற்றொரு பயணம் செய்வதாக உறுதியளித்த பின்னரே அவர் இணக்கம் தெரிவித்தார்!

இதையெல்லாம் இதர மண்டலியுடன் பார்த்துக் கொண்டு நின்ற டாக்டர் கனி, “பாபா உண்மையிலே மிகவும் ஆற்றல் மிக்கவர் - அவர் செய்வதைப் பார்த்துப் பார்த்து நான் சோர்வடைந்து போகிறேன்!” என்றார்.

அதற்கு பாபா பதிலளித்தார், **“இந்த வழியில் சுறுசுறுப்பாக இருப்பதை நான் மிகவும் விரும்புகிறேன். இறை போதையிலிருக்கும் மஸ்துகளின் கழிவறைகளை சுத்தம் செய்து, அவர்களை நீராட்டி, உணவூட்டுவதில் எனக்கு**

**ஓர் அலாதி ஆசை; இது எனது மண்டலி எனக்கு ஆரத்தி எடுத்து, என்னை வணங்குவதை விட மிகவும் மகத்தான ஒன்றாக நான் கருதுகிறேன்.**

**"இந்த ஆத்மாக்கள் உதவியற்றவர்கள் இல்லையா? அவர்களுக்கு சேவை செய்வது உண்மையான சேவை. அவர்களுக்கு உணவளிப்பது உண்மையான பரோபகாரம். அவர்களை கவனிப்பது உண்மையான மனிதநேயம், அவர்களை மகிழ்விப்பது கடவுளை மகிழச் செய்வதற்கு சமம்!"**

நவ்ஸாரி மற்றும் நாக்பூர் நகர மக்கள் விடுத்த அழைப்பை ஏற்று மெஹர் பாபா, 1937 டிசம்பர் 20ஆம் நாள் மெஹராபாத்திலிருந்து காரில் புறப்பட்டார்; ஆதி சீனியர் காரை ஓட்டிச் சென்றார். நோரினா, குஸ்தாஜி, கஜானந்த் (GAJANAND - அஹமதுநகர் ரயில் நிலையத்தில் ஜால்பாய் கண்டுபிடித்த ஒரு புதிய சிறுவன்) ஆகியோரும் அவர்களுடன் சென்றனர். கேன்ஸ் நகரில் இருந்த வேளையில், பாபா, நோரினாவிடம், "**நாம் இந்தியாவிற்குத் திரும்பிய பின்னர், அங்கே, நீங்கள் சில நகரங்கள் வழியாக என்னுடன் பயணத்தில் இணைய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் இங்கே பணிபுரிவதைப் பார்த்தது போல, நீங்கள் அங்கும் நான் செய்வதைப் பார்க்க வேண்டும்**" என்று கூறினார்.

வழியில் அவர்கள் பூனாவில் பாபாவின் குடும்ப வீட்டிற்கு விஜயம் செய்து, மெமோ, ஆதி ஜூனியர், பெஹ்ராம், அவரது மனைவி பெரின் ஆகியோரை சந்தித்தனர். வீட்டின் மேல் மாடியில் இருந்த அறையைக் காட்டி, பாபா, அங்கே அவர் தனியாக இருந்து, தனது தலையைக் கல்லில் அறைந்த நிகழ்வுகளை எடுத்துரைத்தார். "**ஒரு நாள் உலகின் அனைத்து பாகங்களிலிருந்தும் மக்கள் இந்த இடத்திற்கு, புனித யாத்திரையாக வருவார்கள்**" என்று அவர் குறிப்பிட்டார்.

தலைகாவ்மில் பாபா, ராம்ஜூ, டாக்டர் கனி குடும்பத்தாரையும், அமினா, அப்துல்லா ஜாஃபர் ஆகியோரையும் சந்தித்தார். டாக்டர் கனி உள்ளூர் பாடகர் ஒருவரின் இசை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார், அதில் பலர் கலந்து கொண்டனர்; இரவெல்லாம் நிகழ்ச்சி தொடர்ந்ததால் பாபாவிற்கு அதிக ஓய்வு இல்லை.

அடுத்த நாள் காலையில் புறப்பட்டு, மும்பையில் நௌரோஜி தாதாசாஞ்சி இல்லத்திற்குச் சென்றார்; அங்கு தரிசன நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பாபா தங்கியிருந்த காக்கா பாரியாவின் சகோதரியின் இல்லத்தில், பாபா, பலருக்கு தரிசனம் வழங்கினார். அலமாய் கத்ரக்கின் (அதே கட்டிடத்தில் கீழே வசித்து வந்தவர்) இல்லத்தில் மதிய உணவிற்குப் பிறகு, பாபா நௌரோஜி தாதாசாஞ்சி இல்லத்தில் தனது அன்பில் மிகவும் நெருக்கமான மும்பை அன்பர்களை சந்தித்தார். காலம் இதை இப்படிப் போற்றியது: "ஆரம்ப நாட்களிலிருந்தே, ஆன்மீக மதுபானம் அவர்களின் ஆத்மாவிற்குள் நுழைந்து, இறை கீதத்தை அவர்களின் இதயங்களில் ஒலிக்கச் செய்தது!"



அமினா ஜாஃபர் மெக்காவிற்கு புனித பயணம் மேற்கொண்டபோது கொணர்ந்த அரபு நாட்டு பாரம்பரிய ஆடை மற்றும் தலைப்பாகையை அணியுமாறு அவர் கேட்டுக்கொண்டார்

இந்த நேரத்தில் நவல் தலாட்டி, பாபாவை சந்தித்து, பிளீடர், அவரிடமிருந்து விலகி இருப்பதால் மிகவும் அவதிப்படுவதாக, பாபாவிற்குத் தெரிவித்தார். மும்பையில் வேறொரு பகுதியில் தங்கியிருந்த பிளீடருக்கு பாபா இந்தச் செய்தியை அனுப்பி வைத்தார்: **“எனது வாழ்வின் ஒவ்வொரு நொடியும் சொல்லமுடியாத சித்திரவதைகளை நான் அனுபவிக்கிறேன்; நீங்களும் அதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். இது இப்போது கடைசி கட்டத்தை நெருங்குவதால் நீங்கள் என்னை மீண்டும் பார்க்கும்போது, எனது உண்மையான ரூபத்தைக் காண்பீர்கள்!”** பாபா, பிளீடரிடம், உணவுக்காக யாசிக்கும் நோக்கத்தில் ஒரு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவும், பின்பு பஞ்ச்கணி குகையில் தங்கவும் உத்தரவிட்டார்.

அன்று மதியம் பாபா ஓய்வெடுக்க விரும்பியதால் எவரையும் அனுமதிக்க வேண்டாம் என்று சாஞ்சிக்குத் தெரிவித்தார்.

அன்றைய தினம், ஹோமி மாமா ஸட்டா, அவரது மனைவி பில்லா குழந்தைகளுடன் - அலு, தூன், நவல் & ரோஷன் - பாபாவைப் பார்க்க வந்தனர். பாபாவின் கட்டளைப்படி, சாஞ்சி அவர்களை அனுமதிக்கத் தயங்கினார். இதை, பாபா தனது அறையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தவர் வெளியே வந்து, சாஞ்சியைக் கடுமையாகக் கண்டித்து, **“அவர்கள் உள்ளே வருவதை ஏன் தடுக்கிறீர்கள்? அவர்கள் யார் என்று உங்களுக்குத் தெரியாதா? அவர்கள் அஹமதுநகரில் வாழும் ஸட்டா பரம்பரையின் ஓர் அங்கம். அவர்கள் உள்ளே வரட்டும்”** என்று கூறினார். பாபா அவர்களைத் தனது அறைக்கு அழைத்துச் சென்றார். குழந்தை ரோஷனை பாபா அவரது மடியில் வைத்து விளையாடினார். ஹோமி குழந்தைகளை கவனித்துக் கொள்வார், எனவே குழந்தைகளைப் பற்றி கவலைப்பட வேண்டாம் என்று கூறினார். பாபா, ரோஷனை, ஹோமி மாமாவின் சகோதரி பானுமாசி கேராவாலாவிடம் ஒப்படைத்தார். பாபாவின் இந்த எளிமையான சைகைக்கு பின்னால் உள்ள முக்கியத்துவத்தை எவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் பல ஆண்டுகளுக்குப் பிறகு, ரோஷன், பானுமாசியின் மகன் ஸாம் கேரவாலாவை மணந்தபோது, அவர்கள் இந்த சம்பவத்தை நினைவு கூர்ந்து, அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டனர்.

அலு, தூன், நவல் மூவரும் (தசை) திசு செயலிழப்பால் பாதிக்கப்பட்டனர், ரோஷனும் பாதிக்கப்படலாம் என்று ஹோமி பயந்தார். ஆனால் அவர் இதைக் குறிப்பிடுவதற்கு முன்பு, பாபா அவரை ஆறுதல் படுத்தினார், இது, ரோஷன் காப்பாற்றப்படுவார் என்பதை மறைமுகமாகக் குறித்தது. தூன், நவல் ஒவ்வொருவருக்கும் பாபா ஒரு ரோஜா மலரை வழங்கினார், குடும்பத்தினர் மகிழ்ச்சியுடன் விடைபெற்றுச் சென்றனர்.

1937, டிசம்பர் 21 அன்று மும்பையில் நடந்த தரிசன நிகழ்ச்சியின் போது, நேர்த்தியாக உடையணிந்த இளைஞன் ஒருவன், வரிசையில் நின்று அழுதுகொண்டிருந்தான். அவன் பாபாவை அணுகி, வலுக்கட்டாயமாக அவரைத்

தழுவி, காலில் விழுந்தான். பாபா தரிசனத்தை நிறுத்தி, இளைஞனின் கண்களைப் பார்த்து, "**என் அனைத்து உத்தரவுகளையும் நீங்கள் நிறைவேற்றினீர்களா?**" என்று கேட்டார். அந்த இளைஞனால் ஒரு வார்த்தை கூட கூற முடியவில்லை. பாபா அதிருப்தியில், கேள்வியை மீண்டும் கேட்டார். "**என்னுடைய உத்தரவு, ஆன்மீக ஏக்கம் அல்லது ஆயிரக்கணக்கான ரூபாயைப் பரிசாக அளிப்பதை விட மிகவும் முக்கியமானது**" என்று அவர் எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார். அறையில் இருந்த இரண்டு பெண்களை வெளியேறுமாறு கேட்டு, பாபா அவரிடம் பாலியல் பற்றி விளக்கமளித்தார்:

**மனப்பதிவங்களில் ஏழு வகைகள் மற்றும் ஏழு வண்ணங்கள் உள்ளன. சிவப்பு மிக மோசமானது, ஆழமானது; இது நீண்ட காலம் மனதில் தொற்றிக்கொண்டு இருக்கும்; அதை அழிக்க நெடு நேரம் பிடிக்கும. இந்த சிவப்பு மனப்பதிவங்கள் பாலியல் செயலால் ஏற்படுகின்றன, எனவே அவை ஆன்மீக முன்னேற்றம் அல்லது மேம்பாட்டிற்குத் தடையாக இருக்கும். பாலியல் செயல் ஆன்மீக பாதையில் ஒரு பெரிய பாவமாகக் கருதப்படுவதால், ஆன்மீக ஆர்வலர்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.**

**பாலியல் ஆசைகள் தொடர்பான எண்ணங்கள் வரக்கூடும், மற்றும் அவசர தூண்டுதல்கள் கூட வரலாம், ஆனால் ஒருவர் மற்றொரு நபருடன் எந்த செயலையும் செய்யக்கூடாது. உடல் ரீதியாக மோசமாக இருந்தாலும் சுய மாசுபாடு** (சுய இன்பம்) **அதைவிடச் சிறந்தது.**

**உடலுறவு மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். இது ஒருவரோடு இணைபவரின் கடந்த கால, மிக மோசமான மனப்பதிவங்களை ஈர்க்கும்; எனவே அழிக்க மிகவும் கடினம். இது ஒருவரின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு நம்பமுடியாத சேதத்தை ஏற்படுத்தும்.**

பாபா கூறியதன் பொருள் என்ன என்பதை அந்த இளைஞன் அறிந்து கொண்டான். தரிசனம் பிற்பகல் வரைத் தொடர்ந்தது. மாலையில் பாபா 'டாப்பர்' (TOPPER) எனும் நகைச்சுவை திரைப்படத்தைப் பார்க்க 'பாலஸ்' (PALACE) தியேட்டருக்குச் சென்றார்.

இதற்கிடையில் மெஹர் பாபாவை நவ்ஸாரிக்கு அழைத்துச் செல்ல, மினூ தேசாய் மும்பைக்கு வந்தார். பாபா, டிசம்பர் 22 அன்று மாலை ஆறு மணிக்கு 'ஃபிளையிங் ராணி' (FLYING RANI) ரயிலில், மினூ தேசாய், காக்கா பாரியா, ஹோமி பட்டேனா, ராவ்ஸாஹேப், ஆதி சீனியர், குஸ்தாஜி, சாஞ்சி, கஜானந்த், நோரினா ஆகியோருடன் புறப்பட்டார். ரயிலில், நோரினா பிறருடன் சில ஆன்மீக தலைப்புகளைப் பற்றி விவாதித்தபோது, பாபா குறுக்கிட்டு மனப்பதிவங்களைப் பற்றி விளக்கமளித்தார்:

**இன்று, மனப்பதிவங்களைப் பற்றிய சில புதிய உண்மைகளை நான் உங்களுக்குக் கூறுகிறேன்; உண்மையிலேயே, எந்தத் தத்துவ புத்தகங்களும் இந்த வார்த்தையை சரியாக விளக்கவில்லை. மனப்பதிவங்கள் இருமைத்தன்மையின் பதிவுகள் ஆகும், இது ஆன்மா, கடவுளோடு**

ஒற்றிணைய இருமைத்தன்மையின் செயல்முறை வழியாகப் பயணம் செய்கிறது. இருமைத்தன்மையின் உணர்வுபூர்வமான அனுபவங்களைக் கடந்து செல்லும் வரை, ஆன்மா உணர்வுபூர்வமாக இறைவனோடு ஐக்கியமாக முடியாது, மேலும் இருமைத்தன்மையின் இந்த அனுபவங்கள் அதைச் சார்ந்த மனப்படிவங்கள் வழியாகவே நிகழும்.

பொதுவாக மனப்படிவங்கள் 'பிராரப்த' (PRARABTHA) மனப்படிவங்கள் என்று அழைக்கப்படுகின்றன; பிராரப்த என்பது விதி என்று பொருள். இவை, மிகக் குறுகிய அணுவின் நிலையிலிருந்து இறைநிலையை அடைவது வரை, பரிணாம வளர்ச்சியில் முழுப் பிரபஞ்சத்தையும் உள்ளடக்கும். பிராரப்த மனப்படிவங்கள் என்பவை, ஆரம்பம் முதல் இறுதி வரை - ஆத்மா உணர்வு நிலையை தன்வயப்படுத்தி இறை உணர்வை அடைய உதவும்.

இறைநிலையை அடைந்த ஒருவர், உலக உணர்வு நிலைக்கு திரும்பாத வரை, அவரிடம் மனப்படிவங்கள் இருப்பதில்லை. ஆனால், இறைநிலையை அடைந்த பின்னர், உலக உணர்வைத் திரும்பப் பெறும் ஆத்மா தானாகவே ஓர் உலகளாவிய மனதைப் பெற்று, இருமைத்தன்மையின் மூலம் செயல்பட முடிகிறது; மேலும் அது எந்தவித பிணைப்புகளுக்கும் உட்படுத்தமுடியாத 'யோகயோக' (YOGAYOGA) மனப்படிவங்களைப் பெறுகிறது. 'யோகயோக' என்ற சொல்லின் நேரடி பொருள் 'தானியங்கி'. பரிபூரண ஆத்மாக்களில் ஒரு சிலரே இந்த யோகயோக மனப்படிவங்களைக் கொண்டிருக்கிறார்கள், ஏனெனில் இறைநிலையை எய்தியவர்களில் சிலர் மட்டுமே சாதாரண, உலக உணர்வு நிலைக்குத் திரும்புகிறார்கள்.

இப்போது, ஒருவனே தேவனான அவதார புருஷர், எப்பொழுதும் ஒன்றாக இருக்கும் நிலைப்பாட்டுடன், அவரது வட்டம் எப்பொழுதும், ஒவ்வொரு முறையும் ஒரே மாதிரியாக 120 உறுப்பினர்களை உள்ளடக்கி இருக்கும். இந்த அவதார புருஷர் தனது வட்டத்து உறுப்பினர்களுக்கு வித்யானி (VIDNYANI) மனப்படிவங்களை வழங்குகிறார்.

வித்யானி (VIDNYANI) என்றால் இறைவனோடு ஐக்கியமாகும் நுழைவாயில் என்று அர்த்தம். அவதார புருஷர், அவரும், அவருடைய வட்டத்து உறுப்பினர்களும் மனித வடிவம் எடுக்கும் முன்னரே, (பிறவி எடுப்பதற்கு முன்பே) வித்யானி மனப்படிவங்களை வழங்குகிறார். இது ஒரு முகத்திரை அல்லது முக்காடு இடப்பட்டதைப் போன்றது, மேலும் அவரால் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில், அவதார புருஷர் அவரது அசல் தெய்வீக தன்மையை அனுபவித்து, பின்பு வித்யானி மனப்படிவங்களுடன் இணைந்து செயல்படுகிறார்.

வட்டத்து உறுப்பினர்கள் இறை உணர்வை எய்துவது வரை, இந்த வித்யானி மனப்படிவங்களாலான முகத்திரையின் கீழ் இருப்பர்; சாதாரண உலக மனப்படிவங்களின் இரட்டைத்தன்மையின் அனைத்து அறிகுறிகளும்

இதில் இருக்கும். தக்க தருணம் வரும் தருவாயில், அவதார புருஷர் வட்டத்து உறுப்பினர்களுக்கு இறை உணர்வை வழங்குகிறார். இருப்பினும், அதுவரை வித்யானி மனப்படிவங்கள், அவர்களுடன் இருந்தாலும், அவை அவதார புருஷரின் உலகளாவிய பணிக்கான ஒரு கருவியாக மட்டுமே இருக்கும்.

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் போதனைகளில் பெரும்பாலானவை, சரியாகப் புரிந்து கொள்ளப்பட்டால் அவை அடையாளச் சின்னமாகத் திகழும். கிறிஸ்து வேதாந்தத்தைப் போலவே பரிணாம வளர்ச்சி, மனப்படிவங்கள், மறுபிறவி பற்றி கூறியுள்ளார்.

பேராசையும் அதன் நேர்மாறானதும், கோபமும் அதற்கு நேர் எதிரானதும், அனைத்து தீய மற்றும் நல்ல எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்கள், நல்ல மற்றும் தீய மனப்படிவங்கள் - இத்தகைய இரட்டைத்தன்மையுடன் கூடிய பிராரப்த மனப்படிவங்கள் முழுப் பிரபஞ்சத்தையும் நிர்வகிக்கிறது.

பிராரப்த மனப்படிவங்களிலிருந்து விடுபட, நல்ல, தீய மனப்படிவங்கள் இரண்டும் ஒன்றோடு ஒன்றாக இணைய வேண்டும்; மேலும், ஒவ்வொருவரின் அகந்தையும் தன்னலமற்ற சேவை புரிவதன் மூலம் அழிக்கப்பட வேண்டும், அல்லது வரையறுக்கப்பட்ட சுயமானது அன்பில் ஒன்றிணைய வேண்டும். நல்ல, தீய மனப்படிவங்கள் இரண்டும் பிணைப்பை உருவாக்கும் வல்லமை மிக்கது. பரிணாம வளர்ச்சியின் காரணமாக, ஆத்மா அனைத்து மனப்படிவங்களையும் மனித வடிவம் வரை சேகரிக்கிறது, இவை 'விலங்கு மனப்படிவங்கள்' (ANIMAL SANSKARAS) என்று அழைக்கப்படுகின்றன. ஆகையால், முதல் மனித வடிவில், ஆன்மா முழு உணர்வையும் அடையும் இத்தருணத்தில், தீய மனப்படிவங்கள் ஏற்கனவே நல்ல மனப்படிவங்களோடு ஒன்றுடன் ஒன்றாக இணைகின்றன. இப்போது நல்ல மனப்படிவங்கள் தீய மனப்படிவங்களுடன் ஒன்று சேரும் வேளையில், என்ன நடக்கும் என்றால், இரண்டுமே மறைந்துவிடும்; இல்லாமல் ஆகிவிடும். நான் ஒரு முறை இந்த உணர்வு நிலையை உதாரணத்தோடு விளக்கினேன்.

உதாரணமாக, நீங்கள் உங்களை ஒரு கனவில் மஹாராணியாகப் பார்க்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம், அது நீண்ட காலமாகத் தொடரும் ஒரு நிகழ்ச்சி. திடீரென, ஒரு பாம்பு உங்களைத் தாக்குவது போன்ற கனவை நீங்கள் காண்பதானால், உடனே கண்விழித்து விடுகிறீர்கள் - அவ்வேளையில் நல்ல, தீய கனவுகள் இரண்டும் மறைந்துவிடும். இங்கே முதலில் உங்களை மஹாராணியாகக் கண்டு அனுபவித்த நல்ல கனவு, பின்னர் ஒரு பாம்பு உங்களைத் தாக்கிய கெட்ட கனவு; இது நல்லதான ஒன்றுடன், தீயதான ஒன்று இணைவதாகும். இரண்டும், நீங்கள் விழித்ததும் மறைந்து விடுகின்றன; எனவே, தீயது நல்லதோடும் அல்லது, நல்லது தீயதோடும் ஒன்றுடன் ஒன்றாக

இணைக்கப்பட வேண்டும். ஆனால், ஏற்கனவே ஆத்மா பேராசை, காமம், கோபம் போன்ற மனப்படிவங்களை சேகரித்திருந்தால் - இப்போது அவை அவற்றின் எதிர் பண்பான - தாராள மனப்பான்மை, அன்பு, அமைதி ஆகியவற்றால் ஒன்றுடன் ஒன்று சேர்க்கப்பட வேண்டும்.

இரண்டாவது உதாரணமாக, சேவை: நீங்கள் உங்களைப் பற்றி நினைக்காமல், பிறரைப் பற்றி நினைக்கும் போது, உங்கள் அகந்தையைப் பற்றிய சிந்தனை, பிறரைப் பற்றி சிந்திப்பதன் மூலம் மாற்றீடாக அமைகிறது; இப்படி, படிப்படியாகப் பிறருக்கு சேவை செய்வதில் உங்களை மறந்துவிடுவீர்கள்.

மூன்றாவதாக, அன்பு: காதலன் தன்னையே இழக்கும் அளவிற்கு அன்பிற்குரியவரை நேசிக்கும்போது, அன்பிற்குரியவர் மட்டுமே எஞ்சியிருக்கிறார்.

எனவே, இயற்கையாகவே மனப்படிவங்கள் மறைந்துவிடும்.

தீயதைச் செய்வது மிகவும் எளிதானது, நல்லதைச் செய்வது மிகவும் கடினம். ஏன்? ஏனெனில் தீயது ஏற்கனவே உள்ளது.

இப்போது, முதலில் கூறியதைத் திரும்பிப் பார்க்கையில், நான் உங்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளைத் தருகிறேன்: நல்லது தீயதுடன் ஒன்று சேர்வது, தீயது நல்லதோடு ஒன்று சேர்வது; மேலும் இரண்டும் எவ்வாறு மறைந்துவிடும் என்பது. ஒரு மாசுபடிந்த தட்டு. நீங்கள் சோப்பு, தண்ணீர் இரண்டையும் பயன்படுத்தி, அசுத்தத்தை, சோப்புடன் ஒன்றிணைக்கிறீர்கள்; பின்னர் அதைக் கழுவுவதில் - இரண்டும் மறைந்துவிடும். இங்கு, நீங்களே தண்ணீர். ஒன்றுடன் ஒன்றான செயல்பாட்டில் நீங்கள் எப்பொழுதும் இருக்கிறீர்கள். இந்திய வழக்கப்படி, கிரீஸ் (GREASE) நிறைந்த ஒரு தட்டை சுத்தம் செய்ய, குழைவான ஈர மண் அல்லது சேறு தேவை. சுத்தம் செய்ய தண்ணீர் தேவையில்லை. இதில் கிரீஸ், மண் இரண்டும் மறைந்துவிடும். எதிரெதிரானது ஒன்றுடன் ஒன்றாக இணைவது - மண் என்பது முற்றிலும் க்ரீஸ் இல்லாத ஒன்று, எனவே எதிரானது. எதுவாயினும் சுத்தமான தட்டைப் பெறுவதுதான் குறிக்கோள்.

நல்ல மனப்படிவங்கள் தீயதுடன் ஒன்றோடு ஒன்று இணையும் போதும், தீய மனப்படிவங்கள் நல்லதுடன் ஒன்றிணையும் போதும், இரண்டும் மறைந்துவிடும், உங்கள் மனம் ஒரு சுத்தமான பலகைக்கல்லாக இருக்கும். அனைத்தும் துடைத்து சுத்தமாக்கப்பட்டுள்ளது.

உங்களில் எதுவும் எழுதப்படவில்லை (பதிக்கப்படவில்லை) - ஆனால் உங்கள் மனதில் பதிக்கப்பட்டுள்ளது. நீங்கள், ஆத்மா, அப்பழுக்கற்றவராக இருக்கிறீர்கள். நல்லது, தீயது அனைத்தும் உங்கள் மனதில் பொறிக்கப்பட்டுள்ளது. மனப்படிவங்கள் மறையும்போது, அனைத்தும் அழிக்கப்படும். அவ்வேளையில் மனம் ஆன்மாவைப் பார்க்கிறது - இதைத்தான் ஒளிர்வு (ILLUMINATION) என்பது. நல்லதும் தீயதும் மனதிலிருந்து ஒழிக்கப்பட்டதும், மனம் ஆன்மாவைப் பார்க்கிறது. மனம் பின்னர்

**ஆத்மாவுடன் ஒன்றோடு ஒன்றாக முயற்சிக்கிறது - இதைத்தான் 'உணர்தல்'** (REALIZATION) **என்பது**.

**ஆன்மாவைப் பார்ப்பது என்பது கடவுளைக் காண்பது என்று பொருள். ஆனால் மனம் நீங்களாக மாறவில்லை, நீங்கள் கடவுளாக இருப்பதால், மனம் ஆன்மாவுடன் ஒன்றிணைய வேண்டும். மனம் ஆன்மாவுடன் ஒன்றிணையும் தருணத்தில், நீங்கள் இறை உணர்வை எய்துகிறீர்கள்.**

மெஹர் பாபா பயணம் செய்த ரயில் மிகவும் தாமதமாக நவ்ஸாரியை நெருங்கிக் கொண்டிருந்தது. ரயில் நிலையத்திற்குள் நுழையும் முன்பு, தேசாய் குடும்பத்தின் உறுப்பினர்களின் பெயர்கள் அனைத்தையும் பாபா, திடீரென தனது எழுத்துப்பலகையில் நினைவு கூர்ந்தார். அவர்களின் வாழ்க்கை நிகழ்வுகள் மற்றும் தனிப்பட்ட பிரச்சினைகள் பற்றிய ஆழ்ந்த சிந்தனையின் வெளிப்பாட்டுடன், புரிந்துகொள்ள முடியாத வகையில் அவர்களை வாழ்த்துவது போலத் தோன்றியது.

தேசாய் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சிலர் மெஹர் பாபாவை ரயில் நிலையத்தில் சந்தித்தனர், பாபா ஒவ்வொருவரையும் அன்புடன் தழுவினார். அவரை தேசாய் இல்லத்திற்கு அழைத்துச் சென்ற போது, குடும்பத்தின் பிற அனைவரும் பாபாவை சந்திக்க வரிசையில் நின்றனர். பாபா, ஸொராப்ஜியைப் (பிரபல வயதான எழுத்தாளர் சோமா தேசாய்) பற்றி விசாரித்தார்; அவர் உடல்நலமின்றி படுக்கையில் இருந்ததால், வேறு எதையும் செய்வதற்கு முன்பு, பாபா அவரது அறைக்குச் சென்று அந்த முதியவரை ஆறுதல்படுத்தி அரவணைத்தார். ஸொராப்ஜியின் முன் நின்று, அந்த வாழ்க்கையின் இறுதிச் செயலுக்கு, பாபா ஒரு முகத்திரையைப் பதித்தது போல் இருந்தது.

அதற்குப் பிறகு பாபா எழுத்துப் பலகையில் வேகமாகத் தனது விரல்களை நகர்த்தி, '**செல்ல வேண்டிய நேரம் இது**' என்று சுட்டிக் காட்டினார்.

அடுத்த நாள் தரிசன நிகழ்ச்சி நடத்தப்பட இருந்தது. ஸொராப்ஜி தேசாய், பாபாவின் பாதங்களில் விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வதில் தீவிரமாக இருந்தார். பாபா, அவரை அழைக்கும் போது மட்டுமே வரவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அதற்கு ஒப்புக் கொண்டார்.

1937, டிசம்பர் 23 அன்று அனைவரும் காலை தரிசன நிகழ்ச்சிக்குத் தயாராயினர். பாபா, ஸொராப்ஜியைப் பார்க்கச் சென்று, அவர் எப்படி ஓய்வெடுத்தார் என்று கேட்டார். ஸொராப்ஜியின் மருமகன் மினூ மற்றும் மருமகள் பபாய்க்கும் இடையிலான திருமண நிச்சயதார்த்த நிகழ்ச்சியை, நாசிக் நகரில் பாபா நடத்தி வைத்தார்; திருமணம் இப்போது நடைபெறவிருந்தது. ஆனால் ஸொராப்ஜியின் உடல்நிலை மோசமடைந்து குடும்பத்தில் அனைவரும் கவலையாக இருந்தனர். 300 விருந்தினர்களைக் கொண்ட ஆடம்பரமான திருமண விருந்தை நிறுத்துமாறும், விரைவில் திருமண விழாவை நடத்தும்படியும் பாபா, அவர்களுக்கு உத்தரவிட்டார். மினூவின் தந்தை திருமணத்தை மிக்க ஆடம்பரமாக நடத்த விரும்பினார், இதை ஏற்பாடு

செய்ய பல நாட்கள் தேவைப்பட்டிருக்கும். ஆனால் கூடிய விரைவில் நடைபெறும் இந்த எளிய விழாவிற்கு ஒரு சிலரை மட்டுமே அழைக்குமாறு பாபா அவருக்கு அறிவுறுத்தினார்.

அன்று நவ்ஸாரியில் ஒரு பொது தரிசன நிகழ்ச்சி நடைபெற்றது, பலர் இதில் கலந்து கொண்டனர். ஸொராப்ஜியின் மருமகள் மன்ஸாரி தேசாய் பாபாவின் அன்பால் பெரிதும் ஈர்க்கப்பட்டு, முற்றிலும் அதில் 'மூழ்கிவிட்டார்'. இந்த வருகையின் போது முக்கியமாக பாபா, மன்ஸாரி மீது மிகுந்த அக்கறையுடன் காணப்பட்டார், ஆசிரமத்தில் அவருடன் இணையும் நேரம் வந்துவிட்டது. தரிசனத்தின்போது, பாபாவின் முன்னிலையில் ஸொராப்ஜி அழைத்து வரப்பட்டார்; அவர் பாபாவின் பாதங்களில் விழுந்து வணங்கினார்.

காலம் இதை இப்படிப் பகிர்ந்துகொண்டது: 'இது ஸொராப்ஜியின் இறுதி பிரியாவிடை, அன்பிற்குரியவருக்கு அளித்த கடைசி நமஸ்காரம் என்று யாருக்குத் தெரியும்?' பல வருடங்களுக்கு முன்பு பாபா அளித்த வாக்குறுதியை இன்று நிறைவேற்றினார், ஸொராப்ஜி, பாபாவிடம் தனது இறுதி மூச்சிற்கு சற்று முன்பு தரிசனம் வழங்குமாறு கேட்டுக் கொண்டதற்கு பாபா ஒப்புதல் அளித்தார்.

தரிசனத்திற்குப் பிறகு, பாபா, ஸொராப்ஜியைப் படுக்கையில் ஓய்வெடுக்குமாறு கூறினார். பாபா, மறுநாள் காலை ஏழு மணிக்கு நவ்ஸாரியிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, மன்ஸாரி, நோரினாவிடம், பாபா, அவரை விரைவில் அழைக்கப் போவதாகக் கூறியதைச் சொன்னதும், 'இது நன்மைக்காகவா?' என்று நோரினா கேட்டார்.

மன்ஸாரி, "ஆம், நன்மைக்காக!" என்றார்.

மெஹர் பாபா, ரயிலில் சென்றுகொண்டிருந்த வேளையில், ராவ்ஸாஹேப், கோல்வட் (GHOLVAD) நகரில் இறங்கி, குறிப்பிட்ட தொழுநோயாளிகளின் குடும்பத்தை சந்திக்குமாறு உத்தரவிடப்பட்டார்; அன்று மாலை மும்பையில், குழுவோடு மீண்டும் அவர் வந்திணைய இருந்தார். பாபா ரயிலில் பசியுடன் இருந்த வேளையில், மண்டலி சில தின்பண்டங்களை வாங்கி வந்தனர். அன்று மதியம் பாபா மும்பை வந்து காக்காவின் சகோதரியின் இல்லத்தில் தங்கினார். ஜால்பாய் அஹமதுநகரிலிருந்து கிறிஸ்துமஸ் அஞ்சல் மற்றும் தொலைத்தந்திகளை எடுத்து வந்திருந்தார்.

பாபா, நௌரோஜியின் இல்லத்திற்கு மதிய உணவிற்காகச் செல்லும் வழியில் ஐரோப்பா, அமெரிக்காவிற்குத் தொலைத்தந்திகளை அனுப்ப தந்தி அலுவலகத்திற்குச் சென்றார். பாபா, நௌரோஜியின் இல்லத்தில் இருந்த வேளையில் அவரிடம், "**நான் நீண்ட காலத்திற்கு மும்பை வரமாட்டேன்**" என்று குறிப்பிட்டார்.

ஸாந்தா குரூஸில் வாழும் தீனா தலாட்டியின் சகோதரியைப் பார்க்கச் செல்வதற்கு முன்னர், அன்று மதியம் பாபா, காக்கா பாரியா இல்லத்திற்கு

விஜயம் செய்தார். பின்னர் அவர் குஸ்தாஜியின் உறவினரையும், புதும்ஜியின் (PUDUMJEE) மகள் ஸில்லாவையும் (SILLA) சந்தித்தார்.

ஓய்வுக்காக மெஹர் பாபா, கிறிஸ்துமஸ் அன்று பிற்பகல் மூன்று மணியளவில் பாதே தியேட்டரில் (PATHE) பால் முனி (PAUL MUNI) நடித்த 'தி லைஃப் ஆஃப் எமிலி ஸோலா' (THE LIFE OF EMILE ZOLA) என்ற திரைப்படத்தைப் பார்க்கச் சென்றார்; ஆனால், பாபா அந்த நேரத்தில் முற்றிலும் அங்கு 'இல்லாதவர்' போலத் தோன்றினார். பாபா, பணியில் ஈடுபட்டிருப்பதை கவனித்த நோரினா, இருளில் அவரது கண்கள் ஒளிர்வதைக் கண்டார். அன்று மாலை ரயிலில் மூன்றாம் வகுப்பில் பயணம் செய்த அவர்கள் நாக்பூரை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். ஜால்பாயும் குழுவோடு இணைந்தார்.

1937, டிசம்பர் 26 காலை வேளையில் அனைவரும் நாக்பூரை சென்றடைந்தனர். பப்பா ஜெஸவாலா, அவரது மகன் எரச், ஜால் கேரவாலா, டாக்டர் தேஷ்முக் ஆகியோர் பாபாவை எதிர் நோக்கி நின்றனர். பாபா, ஜெஸவாலாவின் காரில் சில மண்டலியுடன் சென்றார்; இதர மண்டலி வேறொரு காரில் ஜெஸவாலாவின் 'மேரி லாட்ஜ்' என்றழைக்கப்பட்ட பிரமாண்டமான இல்லத்திற்குச் சென்றனர். கெய்மாயும் அவரது இரண்டு மகள்களும் வாசலில் பாபாவுக்காகக் காத்திருந்தனர். பாபா உள்ளே நுழைந்ததும், அவர்கள் பாபாவைத் தழுவி, சாஷ்டாங்க நமஸ்காரமாக தலையால் அவரது பாதங்களைத் தொட்டு, ஆரத்தி எடுத்து, தேங்காய்களை உடைத்து, மலர்களைத் தூவி, வாசனை நீரை எல்லா இடங்களிலும் தெளித்தனர்.

மெஹர் பாபா, பிரதான படுக்கையறையில் சற்று ஓய்வெடுத்தார். விரைவாக, குளியல், காலை உணவு போன்றவற்றை முடித்ததும், நேரடி சந்திப்புகள் தொடங்கின. பாபாவின் மூன்று நாள் பயணத்தின் போது தேஷ்முக், மனைவி இந்துமதி இருவரும் மேரி லாட்ஜில் தங்கியிருந்தனர். தேஷ்முக் அவரது சக பேராசிரியர்களையும் மாணவர்களையும் பாபாவின் தரிசனத்திற்காக அழைத்து வந்திருந்தார். டாக்டர் தேஷ்முக் ஒரு சிறிய உரையை நிகழ்த்தினார், இந்துமதி பாபாவின் ஆரத்தியைப் பாடினார். டாக்டர் தேஷ்முக்கின் இரண்டு மாணவர்களான சுஷிலா (SUSHILA), விமலா (VIMLA) ஆகியோருக்கு, பாபா ஒரு நேர்காணலை வழங்கினார். தினேஷ் நந்தினி சோர்டியா (DINESH NANDHINI CHORDIA) என்ற மற்றுமொரு மாணவர் குறிப்பாக பாபாவால் வெகுவாக ஈர்க்கப்பட்டார்; அவரது தந்தை பேராசிரியர், மிகுந்த கவி நயம் வாய்ந்தவர்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, மனநோயால் பாதிக்கப்பட்ட ஏழை இந்து சிறுவன் ஒருவனை பாபா நீராட்டினார். புதிய ஆடைகளை அணிவித்ததும், சிறுவன் உற்சாகத்தில் குதித்து, பாபாவைக் கைகளால் தழுவினான். பாபா அவனை அன்போடு அரவணைத்து, சிறுவனைத் தனது வருகையின் போது வீட்டிலே வைத்திருக்குமாறு உத்தரவிட்டார். ஏப்ரல் மாதம் சிறுவனை

மெஹராபாத்திற்கு அழைத்து வரும்படி பப்பா ஜெஸவாலாவிற்கு அவர் அறிவுறுத்தினார்.

அதற்குப் பிறகு, தத்துவம் மற்றும் ஒப்பீட்டு மதம் குறித்து கற்றறிந்த பேராசிரியர் ஒருவர் வந்து பல கேள்விகளை எழுப்பினார், அதற்கு பாபா பதிலளித்தார். அவர் வெளியேறிய பிறகு பாபா குறிப்பிட்டார், "**அவரது மனம் எளிய காரியத்தை, அவரது அறியாமையால் கடினமாக்கியுள்ளது - இதுதான் தத்துவம்**!"

அன்று மெஹர் பாபா தனது அறையில் சிறுவன் கஜானந்துடன் மதிய உணவை உண்டார். பிற்பகலில் ஜெஸவாலா குழந்தைகள், அவரை சூழ்ந்துகொண்ட போது, பாபா, ஒரு திசையில் பார்த்துக் கொண்டே இன்னொரு திசையில் அவர்களை நோக்கி இனிப்பு மிட்டாய்களை வீசி, அனைவரையும் மகிழ்வித்தார். அன்று மதிய வேளையில் பாபா, டாக்டர் தேஷ்முக் இல்லத்திற்கு விஜயம் செய்து, அங்கிருந்து, பப்பா ஜெஸவாலா, பாபாவை நாக்பூர் சுற்றுப்பயணத்திற்கு அழைத்துச் சென்று, மாலை நான்கு மணியளவில் வீடு திரும்பினர்; அன்று மாலை ஏழு மணிக்கு மற்றுமொரு தரிசன நிகழ்ச்சி நடைபெற்றது.

டிசம்பர் 27 அன்று, மெஹர் பாபா மீண்டும் மனநிலை பாதிக்கப்பட்ட சிறுவனை நீராட்டிய வேளையில் அவன் மகிழ்ச்சியுடன் ஒத்துழைத்தான். சிறுவனுடன் விளையாடிய பிறகு, பாபா அஞ்சலுக்கு பதிலளித்து நேர்காணல்களை வழங்கினார்.


அன்று மதியம் பாபா, ஜால் கேரவாலா, ஜால்பாய், நோரினா ஆகியோரை பப்பா ஜெஸவாலா, தினேஷ் சோர்டியா இல்லத்தில் தேநீருக்காக அழைத்துச் சென்றார். வழியில், நீச்சல் குளம் ஒன்றைக் கடந்து செல்லும் போது, பாபா நகைச்சுவையாக ஜால் கேரவாலாவிடம், "**உங்களுக்கு நீச்சல் தெரியுமா**?" என்று கேட்டதும், ஜால் உறுதியுடன் பதிலளித்தார். பாபா தொடர்ந்து, "சரி, **நீங்கள் ஒரு நாள் எல்லையற்ற அன்பின் கடலில் நீந்துவீர்கள். நானே அந்த அன்பின் கடல்**." என்றார்.

பின்னர், அவர்கள் ஒரு வெளிநாட்டு செல்வந்தரின் மாளிகையைக் கடந்து செல்லும் போது, பாபா வெளிப்படையான தோற்றத்தைப் பற்றி குறிப்பிட்டார், "**காமம் உடைமைகளை நாடுகிறது, அன்பு உடைமைகளைத் தருகிறது**."

அன்று மாலை ஜெஸவாலா பங்களாவில் ஒரு பெரிய பொது தரிசனம் நடைபெற்றது. எரச், முன்பு நாக்பூர் ராமகிருஷ்ணா ஆசிரமத்துடன் தொடர்பில் இருந்ததால், அதன் தலைமை சுவாமி பாஸ்கரேஷ்வர் ஆனந்தா (BHASKARESHWAR ANANDA), நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். துக்டோஜி மஹாராஜ் (TUKDOJI MAHARAJ) என்ற பிரபலமான துறவியும் நிகழ்ச்சியில் பங்கெடுத்தார். துக்டோஜி, மெஹர் பாபா முன்னிலையில் பக்தி பூர்வமான பஜனைகளைப் பாடினார், மேலும் பாபாவின் தரிசனத்தைப் பெற்றதில் பெரு மகிழ்ச்சி அடைந்தார்.



**நாக்புர்** (NAGPUR)**, 1937**
**மனு** (MANU) **& எரச் ஜெஸவாலா** (ERUCH JESSAWALA)**,**
**தீனா தலாட்டி** (TINA TALATI)**,**
**கெய்மாய்** (GAIMAI)**, பானு** (BANU)**,**
**மெஹரு** (MEHERU) & **பப்பா ஜெஸவாலா** (PAPPA JESSAWALA)



**பிளீடர், டைகர் வேலி குகை, பிப்ரவரி 1938**
(PLEADER AT TIGER VALLEY CAVE, FEBRUARY 1938)

முழுநீள கேள்விகளுடன் வந்திருந்த சுவாமி பாஸ்கரேஷ்வர் ஆனந்தா, மெஹர் பாபாவின் முன்னிலையில் அவர் கேட்க விரும்பியதை முற்றிலும் மறந்துவிட்டார். அவர் அமைதியாக பாபாவின் அருகில் அமர்ந்திருந்த வேளையில், கண்களில் நீர் வழியத் தொடங்கியது. அவர் தனது கேள்விகளுக்கான பதில்களை இதயபூர்வமாக உள்ளளவில் பெற்றுக்கொண்டார்; மேலும் அவரது இதயம் தெய்வீக அன்பால் நிறைந்து வழிந்தது. புறப்படுவதற்கு முன்னர் அவர், "நான் இன்று ராமகிருஷ்ணரின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டேன்!" எனக் குறிப்பிட்டார்.

அன்று மாலை நூற்றுக்கணக்கான மக்கள் மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக வந்தனர், அவர்களில் முக்கியமாக, புகழ்பெற்ற நீதிபதி ஒருவரின் மனைவியும் இருந்தார். அவருடைய குருநாதர் அவரிடம், "நாக்பூருக்குச் சென்று கல்கி அவதாரின் தரிசனத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்!" என்று கூறினார். அந்தப் பெண்மணி மெஹர் பாபாவை அணுகிய வேளையில், "கல்கி அவதார்! கல்கி அவதார்!" என உரத்தக்குரலில் கத்தியதைக் கேட்ட அனைவரும் அதிர்ச்சிக்குள்ளாகி, அவர் ஒரு மஸ்தானி (பெண் மஸ்த்) என்றெண்ணி ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். அந்தப் பெண்மணி பாபாவின் பாதங்களில் தன்னை அர்ப்பணித்து, "எனது வாழ்க்கையின் குறிக்கோள் இன்றுதான் நிறைவேறியது! கல்கி அவதாரத்தின் தரிசனம் எனக்குக் கிடைத்தது!" என்று கூறிக்கொண்டே கண்ணீருடன் திரும்பிச் சென்றார் - ஆனால் அது ஆனந்தத்தில் பெருக்கெடுத்தக் கண்ணீர்.

நாக்பூரில் தங்கியிருந்த வேளையில், மெஹர் பாபா அவ்வப்போது காக்காவை ரயில் நிலையத்திற்கு அனுப்பி, அவர் பெயரில் வந்த தொலைத்தந்திகளை எடுத்து வர அறிவுறுத்தினார் - ஒருவேளை நவ்ஸாரியிலிருந்து ஸொராப்ஜி தேசாய் தொடர்பான செய்தியை, அவர் எதிர்பார்த்தது போலத் தோன்றியது. மரணப் படுக்கையில் இருந்த அந்தப் பிரியமான வயதானவரை பாபா நினைவு கூர்ந்தார், இதன் மூலம் பாபா, தெய்வீக மதுபானத்தை அவர் அருந்த அனுமதித்தார். மினூ, பபாய் இருவரின் திருமணம் டிசம்பர் 27 அன்று நவ்ஸாரியில் நடைபெற்றது. பின்பு திருமண தம்பதியினர் ஸொராப்ஜியின் ஆசீர்வாதங்களுக்காகச் சென்றனர். ஆசீர்வாதத்தை வழங்கிய இருபது நிமிடங்களில் மெஹர் பாபா அவர் முன்னிலையில் நிற்பது போன்ற காட்சியை அவர் காண முடிந்தது; அருள் நிறைந்த அந்தக் காட்சியுடன் ஸொராப்ஜி இணைந்தார்! இந்தத் திருமணத்திற்காகவே பாபா, ஸொராப்ஜியை உயிருடன் வைத்திருந்ததாகத் தோன்றியது; முடிந்தவுடன், அவரைத் தனது அன்பெனும் பெருங்கடலில் மூழ்க வைத்தார்!

அடுத்த நாள் ஸொராப்ஜி தேசாய் காலமான செய்தியை, பாபா பெற்றுக்கொண்டார். தொலைத்தந்தியை வாசித்த போது பாபா மகிழ்ச்சியுடன், "**அது நல்லதல்லவா? நல்லதே நடந்தது**!" என்று அவர் தன்னையே வாழ்த்துவது

போல் எடுத்துரைத்து, ஸொராப்ஜியின் குடும்பத்தினருக்கு இந்தச் செய்தியை அனுப்பினார்: "**ஸொராப்ஜி என்னிடம் வந்து மகிழ்ச்சியாக இருக்கிறார்**."

ஏற்கனவே குறிப்பிட்டபடி, ஸோமா தேசாய் குஜராத்தி இலக்கியத்தில் ஒரு சிறந்த, தனித்துவம் மிக்க நபராக இருந்தார். நூற்றுக்கும் அதிகமான புத்தகங்களுக்கு ஆசிரியர்; மற்றும் செய்தி இதழ்கள், பத்திரிகைகளுக்கு ஆன்மீகம் குறித்த கட்டுரைகள் பல எழுதி, குறிப்பிடத்தக்க பங்களிப்பாளராக இருந்தார்.

அந்த நாளின் பிற்பகுதியில், பாபா, தியோஸோஃபிக்கல் ஸொஸைட்டி (THEOSOPHICAL SOCIETY) மற்றும் பார்வையற்ற சிறுவர்களுக்கான அமைப்பு ஒன்றையும் பார்வையிட்டார். கூடியிருந்த தியோஸோஃபிஸ்டுகளுக்கு, (THEOSOPHISTS) பாபா, "**அனுபவத்தின் மூலம் உண்மைப்பொருளை இறுதியாக உணர, நீங்கள் மேலும் மேலும் வேண்டிய ஏக்கத்தைக் கொண்டிருக்க, நான் உங்களுக்கு என் ஆசீர்வாதங்களை வழங்குகிறேன்**" என்று கூறினார்.

அன்று காலையில் பாபா மேலும் சில நேரடி பேட்டிகளை வழங்கினார், பிற்பகல் மூன்று மணிக்கு செல்வந்தரான வணிகர் ஒருவரின் வீட்டிற்குச் சென்றார். அங்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வழக்கத்திற்கு மாறாக, புனிதமானதாகவும் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் இருந்தது. பாபா ஒரு சில நிமிடங்கள் அந்த வணிகரின் அருகில் அமர்ந்து திரும்பிச் சென்றார். பின்னர், அவர் அங்குச் சென்றதன் காரணம் என்ன என்று நோரினா பாபாவிடம் கேள்வி எழுப்பினார். பாபா தனது இயல்பான போக்கில் இவ்வாறு பதிலளித்தார், "**அந்த நபர் கடுமையாக உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார், அவருக்கு உதவ நான் அங்குச் சென்றேன்**."

ஜால் கேரவாலா (JAL KERAWALLA), எரச் (ERUCH) இருவரும் நாக்பூரில் பாபாவின் தனிப்பட்ட கவனத்தைப் பெற்றனர், இது அவர்களை எப்பொழுதும் பாபாவை நோக்கி ஈர்த்தது. பாபாவின் அன்பின் மதுபானத்தைப் பருகி, ஜால் இறை போதையில் இருந்தார், மேலும் அவர் தன்னை முற்றிலுமாக, குருநாதருக்கு அர்ப்பணித்தார். அன்பின் மதுபானம் அவரை பிரியமானவருக்காகக் கடினமாக உழைக்கச் செய்தது, மேலும் அவர் எதிர் வரும் காலங்களில் பாபாவின் ஆன்மீக பணிக்கு மிகவும் பயனுள்ள கருவியாக இருந்தார்.

எரச்சின் திட்டப்படி அவர் பெனாரஸில் பொறியியல் படிப்பதாக இருந்தாலும், குருநாதர் அவருக்காக, தனது சொந்த திட்டங்களை வகுத்திருந்தார்.

ஜெஸவாலா குடும்பம் முழுவதும் மெஹர் பாபாவின் அன்பு மழையில் நனைந்து, கெய்மாய் அவருடன் நிரந்தரமாக வாழ விரும்பினார். அவர்களுடைய வாழ்வின் 'வஸ்திரங்கள்' பிரியமானவரின் அன்பின் மதுவில் நனைந்து அவர்களை எங்கும் செல்ல அனுமதிக்காமல், குருநாதரின் பாதங்களை நோக்கி வழிநடத்தின.

1937, டிசம்பர் 28 அன்று பாபா நாக்பூரிலிருந்து மெஹராபாத் புறப்பட்டார்; ரயிலில் அவர் இருக்கை ஒன்றில் சாய்ந்து ஓய்வெடுத்து, மாலை முழுவதும்

ஒரு போர்வையால் தன்னை மறைத்துக்கொண்டு, அவரது ஆன்மீக உள் பணியில் தீவிரமாக ஈடுபட்டார். காலை ஐந்து மணிக்கு எழுந்து, ஏழு மணியளவில் மன்மாட் (MANMAD) ரயில் நிலையத்தை வந்தடைந்தனர், அங்கு ஆதி சீனியர் பாபாவை எதிர்நோக்கி நின்றார். சாஞ்சி, ராவ்ஸாஹேப், காக்கா ஆகியோர் மும்பைக்கு ரயிலில் தொடர்ந்தனர், மேலும் பாபா, ஆதி சீனியர், ஜால்பாய், குஸ்தாஜி, கஜானந்த், நோரினா ஆகியோர் மெஹராபாத்திற்குச் சென்றனர்.

காரில் செல்லும் வேளையில், பாபா திடீரென பசி எடுப்பதாகக் கூறி, காரை நிறுத்த உத்தரவிட்டார். நாக்பூரிலிருந்து எடுத்துவந்த உணவு பொட்டலங்களை, சாலை ஓரத்தில் பெரிய ஆலமர நிழலில் அமர்ந்து அனைவரும் உண்டனர். சிறிது நேரம் ஓய்வெடுத்தப் பிறகு, பாபா மண்டலியுடன் பகடை விளையாட்டை ரசித்தார். அவ்வேளையில், ஏழை மனிதர் ஒருவர் சாலையில் நடந்து சென்றதை கவனித்து, விளையாட்டை நிறுத்தி, ஆதி அந்த ஏழை மனிதருக்கு மீதமிருந்த உணவை வழங்கும்படி பாபா கட்டளையிட்டார். **“ஸ்ரீ சத்குரு மெஹர் பாபாவே கொடுப்பவர்”** என்ற வார்த்தைகளைக் கூறி இந்த உணவு வழங்கப்பட்டது.

அந்த மனிதர் தாழ்மையுடன், “அவரால் உணவளிக்கப்படுவது எனது நல்ல அதிர்ஷ்டம்” என்று பதிலளித்தார்.

காரில் தொடர்ந்து செல்லும் வழியில் பாபா ஒரு வீட்டைச் சுட்டிக்காட்டி, **“உபாஸனி மஹாராஜ் தற்போது அங்கு வருகை தருகிறார்”** என்று குறிப்பிட்டார். அதற்குப் பிறகு, நாராயண் மஹாராஜ் வாழ்ந்த கேட்காவ்ம் கிராமத்தை, பாபா, நோரினாவிற்குச் சுட்டிக்காட்டினார். அவர்கள் டிசம்பர் 29 நண்பகலில் மீண்டும் மெஹராபாத் வந்தடைந்தனர்.

மெஹர் பாபா திரும்பி வந்ததும், மெஹராபாத் மேல்மலையில் ஒரு சில புதிய கட்டிடங்களை எழுப்புவதைப் பற்றி, பெண்டுவுடன் கருத்தாய்வு செய்தார் - அவருடைய எதிர்கால சமாதி, தியான மையங்கள், நீர் தொட்டியின் இரண்டாவது மாடி, மகப்பேறு இல்லம், மற்றும் வளாகத்தைச் சுற்றி ஒரு சுவர். பாபாவின் 44ஆவது பிறந்தநாளைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் ஜனவரி 1938இல் தொடங்கியது, மேலும் இந்த நிகழ்விற்கு அழைக்கப்பட்ட நூற்றுக்கணக்கான பக்தர்களுக்கு உறைவிடம் போன்ற ஏற்பாடுகளைச் செய்வதிலும் பெண்டு முழு முனைப்பில் ஈடுபட்டார். இந்த முறை, நகரத்திற்கு வெளியே வாழ்ந்து வந்த பெண்களுக்கு மெஹராபாத் மேல் மலையிலும், கீழ் மெஹராபாத்தில் ஆண்களுக்கும் தனித்தனி தங்குமிடம் வழங்கப்பட இருந்தது.

1938 ஜனவரி 12 புதன்கிழமை, பாபா கிழக்கத்திய பெண்மணிகள் மற்றும் நோரினா, ரானோ, கிட்டி ஆகியோரை ஒரு சுற்றுலா பயணமாக ‘ஹேப்பி வேலி’க்கு அழைத்துச் சென்றார்.

விஷ்ணுவும் உடன் சென்றார். ஜனவரி 13ஆம் தேதி, ஆதியின் சகோதரி பிரோஜா, பாபாவுடன் ஒரு நேர்காணலை நடத்தினார். மெஹர் ஆஷ்ரமத்தின்

முன்னாள் ஆசிரியரான கோமா கணேஷ் பாட்டக் (GOMA GANESH PATHAK) அதே நாளில் காக்கா சிஞ்சோர்கர் (KAKA CHINCHORKAR) எனும் நண்பருடன் பாபாவை சந்தித்தார். மேற்படிப்புக்காக இங்கிலாந்து செல்ல பாட்டக், பாபாவின் நிதி உதவியை நாடினார், ஆனால் அதற்குப் பிறகு பாபா, விஷ்ணுவிடம் தந்திரமாக அதை மறுத்து, சமாளிக்கும்படிக் கூறினார். இரண்டு நாட்களுக்குப் பிறகு, டைபாலி (TYEBALI) எனும் ஆசிரியரும் பாபாவின் நிதி உதவியை நாடினார்; பாபா, ஒரு குறிப்பிட்ட அளவிற்கு உதவ இணக்கம் தெரிவித்தார்.

ராம்ஜூ அப்துல்லா, ஜனவரி 14 அன்று பாபாவை சந்தித்தார்; மறுநாள், வருகை தந்த ஃபிரீனியும், குழந்தைகளும் நாசிக் திரும்பினர். ஃப்ரீனியின் கணவர் ருஸ்தம், ஒரு வாரத்திற்குப் பிறகு பாபாவை, குஷ்ரு குவாட்டர்ஸிலும், ஜனவரி 22 அன்று மெஹராபாத்திலும் சந்தித்துப் பேசினார். ருஸ்தம் திரைப்பட திட்டத்தில் பணிபுரிந்து, மும்பையில் தங்கியிருந்தார். திரைப்படத்தின் வெற்றிகரமான முன்னேற்றம் குறித்து பாபா மிக்க மகிழ்ச்சியடைந்தார்; ராம்ஜூவும் திரைப்படத்தைப் பார்த்து பாபாவிடம் ருஸ்தத்தின் முயற்சியைப் பாராட்டினார். பாபா, மேலும் இரண்டு திரைப்படங்களுக்கு (எலிஸபெத்தின் நிதி உதவியின் மூலம்) உதவுவதாக உறுதியளித்தார்; விநியோகம் தொடர்பான முயற்சிகளில் உதவ, பாபா மும்பை வருவதாகத் தெரிவித்தார்.

1938, ஜனவரி 27 அன்று, காக்கா சிஞ்சோர்கர் மீண்டும் பாபாவின் தரிசனத்தைப் பெற்று அவரது ஆசீர்வாதத்திற்கு நன்றி தெரிவித்தார். முந்தைய நாள் நடைபெற்ற தேர்தலில் சிஞ்சோர்கர் அஹமதுநகர் நகராட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜனவரி 30ஆம் நாள், நோரினா, கிட்டி, ரானோ மற்றும் அன்று வருகை தந்த மெமோ, ஆதி ஜூனியர் ஆகியோருடன் பாபா மேல்மலையிலிருந்து இறங்கி வந்து, அவர்களை மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்றார்.

மெஹர் பாபா, பெண் மண்டலியுடன் தங்குவதற்கு ஏற்றாற்போல், ஒரு பங்களாவைக் குத்தகைக்கு ஏற்பாடு செய்ய, காளேமாமாவைப் பஞ்ச்கணிக்கு அனுப்பி வைத்தார், ஏனெனில் எதிர்வரும் வெப்பமான கோடை மாதங்களில் பாபா, அங்கிருக்க விரும்பினார். (மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் மெஹராபாத்தை விட பஞ்ச்கணியில் குளிரான காலநிலை நிலவும். )

1938 பிப்ரவரி 2 அன்று ஆதி சீனியர், கஜானந்த் ஆகியோருடன் பாபா பூனா வழியாக மதிய வேளையில் பஞ்ச்கணி வந்து சேர்ந்தார். அங்கே, காளேமாமா பார்த்த ஒரு சில பங்களாக்களில் ஒன்றை பாபா தேர்ந்தெடுத்து, மார்ச் மாதத்தில் அங்குச் செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார். பிளீடர் தங்கியிருந்த ‘டைகர் வேலி’யில் (TIGER VALLEY) அமைந்த தனது குகையையும் பாபா பார்வையிட்டார். பெனாரஸ் நகருக்குப் புனித யாத்திரை சென்று, எட்டு மாதங்கள் அங்கேயே இருக்குமாறும், வழியில் உணவுக்காக

யாசித்து, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு உண்ணாவிரதம் இருக்க வேண்டும் என்றும் பாபா கட்டளையிட்டார்.

அதற்குப் பிறகு பாபா இந்து உயர்நிலைப் பள்ளிக்கு (HINDU HIGH SCHOOL) விஜயம் செய்து, பள்ளி சிறுவர்களை சந்தித்து, இரவை அவர்களுடன் கழித்தார்; மறுநாள் மெஹராபாத் திரும்பிச் சென்றார்.

இங்கிலாந்தில் மேபெல் ரியான் (MAYBEL RYAN) காலமான செய்தியை, மார்கரெட் க்ராஸ்கே தொலத்தந்தி மூலமாக பாபாவிற்குத் தெரிவித்தார்; பாபா தொலத்தந்தியைக் கைகளில் பற்றிக்கொண்டு, "**அவர் என்னிடம் வந்துவிட்டார். அவர் இன்னும் இங்கே இருக்கிறார்; வேறு எங்குச் செல்ல முடியும்? அவர் கோட்டும் தொப்பியும் அணிந்த அந்த அடையாளம் இல்லாமல் நீங்கள் அவரைப் பார்க்க முடியாது!**" என்றார்.

மெஹர் பாபா, மேபெலை தனது '**ஆலோசகர்**' என்று அழைப்பதுண்டு, ஏனெனில் பாபா ஐரோப்பாவில் இருந்த வேளையில், அவரது திட்டங்களைப் பற்றி அடிக்கடி ஆலோசனை செய்துவந்தார். "மேபெல் ஓர் அழகான பெண்மணி; மகிழ்ச்சியூட்டத்தக்க வகையில் தனிப்பண்பும், குதூகலமும் நிறைந்தவர்" என்று டிலியா ஒருமுறை கூறினார். மெஹர் பாபா பின்பு மேபெலைக் குறித்து ஆங்கில குழுவிற்கு எழுதினார்:

**மேபெல் மகிழ்ச்சியாக இருக்கிறார் என்ற எண்ணத்தில் நீங்களும் மகிழ்ச்சியாக இருங்கள். அவர் என்னை எப்பொழுதும் பார்க்கிறார், என் அருகில் இருக்கிறார், மிகக் குறுகிய காலத்தில், அவர், உடல் ரீதியாகவும் என் அருகில் இருப்பார். இது இப்படித்தான் இருக்க வேண்டும், ஏனெனில் அவர் எனது வட்டத்தின் உறுப்பினர். எதிர்கால பணிக்காக நான் தேர்ந்தெடுத்தவர்கள் எனக்கு எவ்வளவு முக்கியம் என்பதை எவராலும் உணர முடியாது. நீங்கள் மாயையில் மட்டுமே போராடுகிறீர்கள் என்று உணரலாம், ஆனால் இது உண்மையில் அப்படியா? நீங்கள் எப்போதாவது என்னிடமிருந்து பிரிந்திருக்கிறீர்களா? அன்பு, பிரிவினை அறியாது. நீங்கள் இங்கே இருந்திருந்தால் நான் உங்கள் அருகில் இருப்பதை விட, நான் உங்களை அனுப்பிய இடத்தில் மேலும் உங்களுக்கு அருகில் இருக்கிறேன்; நான் உங்களை இங்கே இருக்கும்படி உங்களிடம் கேட்கவில்லை. ஆனால் போராட்டம் நல்லது. அது இல்லாமல், மாயா, மாயை இரண்டையும் எப்படித் தோற்கடிப்பது?**

ராம்ஜூ, நவல், ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா, மினூ பரூச்சா ஆகியோர் நாசிக்கிலிருந்து 1938, பிப்ரவரி 5 அன்று, பிறந்தநாள் ஏற்பாடுகளில் உதவ வந்தனர். மறுநாள், பாபா குஷ்ரு குவாட்டர்ஸுக்கு விஜயம் செய்து குல்மாய் மற்றும் பிரோஜாவின் மகள் தெஹ்மியை (TEHMI) 'சின்னம்மை' தாக்கியதையும் பார்க்கச் சென்றார்.

அயராது உழைத்து, பெண்டு பிறந்தநாள் விழாவுக்கான அனைத்தையும் மேற்பார்வையிட்டார்; விஷ்ணு, காளேமாமா, பாதிரி ஆகியோர் பெண்டுவிற்கு உதவியாக இருந்தனர். ஸரோஷ், ஆதி சீனியர் இருவரும் சமையலுக்குத் தேவையான பாத்திர பண்டங்களை மெஹராபாத்திற்கு எடுத்து வந்தனர். சகன் சமையல் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்; மாஸாஜி அவரது பிரதான உதவியாளராக இருந்தார். திருவிழாவுக்காக ஒரு கூடாரம் அமைக்கப்பட இருந்தது, ஆனால் அந்த நேரத்தில் பலத்த காற்று வீசியதால், வேலை நிறுத்தப்பட்டது. குளிர்ந்த வானிலை இதமாக இல்லாததால் அனைத்தையும் சரியான நேரத்தில் தயார் செய்ய மண்டலிக்கு, சற்று கடினமாக இருந்தது. எரிச்சலடைந்த பெண்டு, பாபாவிடம் சென்று, “பாபா, காற்று ஆவேசமாக வீசுகிறது, வேலையை நேரப்படி மேற்கொள்ள முடியவில்லை. நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” என வினவினார்.

அதற்கு பாபா, **“ஒரு வழி உள்ளது. நீங்கள் சில நாட்கள் புகைப்பிடிப்பதை நிறுத்தினால், காற்று நின்று குளிர் குறையும்”** என்று பதிலளித்தார். எனவே, புகைப்பிடிப்பதைப் பழக்கமாகக் கொண்ட ஆண்கள், இந்நாட்களில் அதை நிறுத்தினர். ஒரு குறுகிய காலத்திற்குள், எதிர்பார்த்தது போல, காற்றின் வேகம் குறைந்து, வானிலை லேசாக மாறியது. வேலையும் முடிந்தது, எல்லோரும் பாபாவின் நூதனமான அணுகுமுறையைப் பாராட்டினர்.

எலிஸபெத் பாட்டர்சன் பிப்ரவரி 15 அன்று அமெரிக்காவிலிருந்து ‘கான்டே வெர்டி’ (CONTE VERDI) கப்பலில் மும்பை வந்தடைந்தார். எலிஸபெத் இந்தியா வரும் வழியில், சுவிட்சர்லாந்தில் ஐரீன் பில்லோவுடன் இருந்த அவரது நாய் கிப்பியையும் உடன் எடுத்து வந்தார். ஆதி சீனியர், சாஞ்சி, கோஹெர், அர்னவாஸ் ஆகியோர் கப்பல் தளத்தில் அவரை சந்தித்து, அங்கிருந்து ஆதி சீனியர் நேரடியாக மெஹராபாத்திற்கு அழைத்துச் சென்றார். இரண்டு நாட்களுக்குப் பின்னர் எஸ்.எஸ். ரிலையன்ஸில் (SS RELIANCE) இந்தியா வந்த நான்னியை சாஞ்சி பிறந்தநாள் விழாவுக்காக மெஹராபாத்திற்கு அழைத்து வந்தார், இருவரும் இதர பெண் மண்டலியுடன் மேல்மலையில் வாழத் தொடங்கினர்.

மேலை நாட்டினர் தங்கள் குடும்பத்தினரையும், நண்பர்களையும் பிரிந்து இந்தியாவில் பாபாவுடன் வந்திணைவது, குறிப்பாக, அவர்களது குடும்ப உறுப்பினர்கள் அல்லது நண்பர்களில் எவரேனும் பாபாவைப் பின்பற்றாதபோது அது எளிதான காரியம் அல்ல. எலிஸபெத்தின் தாயார் பெஸ் (BESS - 1932இல் பாபாவை சந்தித்தவர்) அவருக்கு அற்புதமான, ஊக்கமளிக்கும் குறிப்பு ஒன்றை எழுதினார்:

உங்கள் மகிழ்ச்சியும், அசைக்கமுடியாத நம்பிக்கையும் உங்களை இதுவரை அழைத்துச் சென்றதற்கு பதிலாக, சில கடுமையான கடமை அல்லது தியாக உணர்வோடு இதைச் செய்வதாக இருந்தால் நான் உண்மையிலேயே துக்கப்பட்டிருப்பேன் - ஆனால் நீங்கள் உங்கள் ஆத்மாவின் ஒளியைப்

பின்பற்றுகிறீர்கள் என்பதால், என் ஆத்மாவும், உங்களை நான் மீண்டும் பார்ப்பது வரை, அதன் சிறிய மெழுகுவர்த்தியை பிரகாசமாக எரிய வைத்திருக்கும். ஆனால், நீங்கள் எங்களுடன் இருந்த மாதங்கள் மகிழ்ச்சியாகவும் ஆறுதலாகவும் இருந்தன என்பதை நீங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறேன். நீங்கள் அதிக சிந்தனையுடனும், கனிவாகவும் இருந்தீர்கள் - மென்மையான மற்றும் இனிமையான பாபாவுடனான உங்கள் தொடர்பின் அழகிய, அற்புத விளைவுகளையும், அன்பின் ஒளிவீசும் அமைப்பையும் தவிர, வேறு எதையும் என்னால் பார்க்க முடியவில்லை!

1938 பிப்ரவரி 19ஆம் நாள், மூன்று நாள் விழாவிற்காக, பிரியமானவர்களும், பக்தர்களும் வரத் தொடங்கியபோது, மெஹராபாத்தின் சுற்றுப்புற சூழ்நிலையை ஊடுருவிய மகிழ்ச்சியான உணர்வை, வானுலகம் வழங்கும் எந்த ஓர் இன்பகரமான சூழலோடும் ஒப்பிட முடியாது! சொர்க்கத்தில் மகிழ்ச்சி மட்டுமே உள்ளது, ஆனால், இங்கு மெஹராபாத்தில், ஆன்மீக பேரின்பம் நிறைந்திருந்தது! தெய்வீக மதுபானம் மீண்டும் சுதந்திரமாக ஓடிக்கொண்டிருந்தது, மும்பை, பூனா, அஹமதுநகர், நாசிக், நவ்ஸாரி, நாக்பூர் மற்றும் பிற நகரங்கள், கிராமங்களைச் சேர்ந்த ஏறக்குறைய 500 அன்பர்கள் தங்கள் தாகத்தைத் தணிக்க வந்தனர்.

நௌரோஜி, மனைவி பச்சாமாய் தாதாசாஞ்சி உட்பட 200க்கும் மேலானோர் மும்பையிலிருந்து வந்தனர்; அவர்களது குழந்தைகள் அர்னவாஸ், நர்கிஸ், ஹோமா, தாரா, ரோடா, மற்றும் கோஹெர் (அவர்களுடன் வசித்து வந்தவர்); அலமாய் கத்ராக், கர்மான்மாசி, பச்சாமாயின் சகோதரி ஸூனாமாசி, அவரது ஆறு வயது மகள் டாலி (தஸ்தூர்); தீனா தலாட்டி அவரது இரண்டு மகள்களான ஜெரூ மற்றும் பெர்விஸ்; அமினா ஜா:ஃபர், கதிஜா அப்துல்லா, மெஹர்பாய் மெர்சன்ட், அலு கம்பட்டா ஆகியோர். மெமோ, அத்தகைய சந்தர்ப்பங்களை ஒருபோதும் தவறவிட்டதில்லை; குல்மாய், விஷ்ணுவின் தாயார் காக்குபாயைப் போலவே பீலாமாயும் அவரது மகள் ஸில்லாவும் வந்தனர்.

நாக்பூரிலிருந்து பப்பா, கெய்மாய், மெஹரு, மனு, மெஹர்வான் மற்றும் எரச் ஜெஸவாலா ஆகியோர் வந்தனர், இந்தக் குடும்பத்தை குறிப்பாக நன்றாக கவனிக்க பாபா, நாஜாவிற்கு அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார், அவர்களுக்கு நல்ல உணவை வழங்குவதோடு, அனைத்து வசதிகளையும் அளித்தார். ஜெஸவாலா குடும்பத்தினர் மெஹர் பாபாவின் நெருங்கிய மண்டலி உறுப்பினர்களாக இணையவிருந்தனர், இந்த சகவாசம் அதற்கு ஒரு முன்னோடியாக இருந்தது.

மெஹர் பாபாவின் பிறந்தநாள் இரண்டு இடங்களில் தனித்தனியாகக் கொண்டாடப்பட்டது - மெஹராபாத் மேல்மலையில் பெண்மணிகள் மற்றும் கீழ் மெஹராபாத்தில் ஆண்கள். மேற்கத்திய பெண்களில் ஒரு சிலருக்கு

மட்டுமே கீழ் மெஹராபாத் நிகழ்ச்சிகளைப் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டது.

1938 பிப்ரவரி 20ஆம் நாள், ஸொராஸ்ட்ரியன் நாள்காட்டி படி, பாபாவின் பாதங்கள், பால் மற்றும் குங்குமப்பூவால் தூய்மைப்படுத்தப்பட்டன. அதற்குப் பிறகு, காலை எட்டு மணிக்குத் தொடங்கிய தரிசன நிகழ்ச்சி மாலை வரை தொடர்ந்தது. இந்த முக்கியமான நாளில் பங்கேற்க அனுமதித்ததற்காக, கடவுளின் அனைத்து கருணையிலும் கடவுளைப் புகழ்ந்து, பஜனைகள் பாடுவதற்கு இடையில், திரள் திரளாக வந்திருந்த மக்களுக்கு, பாபா இரு கைகளாலும் பிரசாதத்தை அள்ளி வழங்கினார்.

காலம் இதைக் கனிவோடு விவரித்தது: “மெஹராபாத்தின் சுற்றுப்புற சூழல்கள் தெய்வீக மதுபானத்தின் நறுமணத்துடன் நிறைந்திருந்தது, மக்கள், போதையில் இருந்ததைப் போலத் தோற்றமளித்தனர். மெஹராபாத்தின் மதுபானம் மிகவும் வித்தியாசமானது; அதை சுவைக்கும் தகுதியை அடையப் பெற்றவர்கள் காலாதி காலத்திற்குப் பின்னர் ஒரே ஒரு கோப்பை மதுவை மட்டுமே அருந்த முடிந்தது! மதுபான சத்திரத்தின் உரிமையாளர் அதன் வாசனையை உலகம் முழுவதும் பரவச்செய்து, உணர்வு நிலையில் பெரிய மாற்றத்தை விளைவிக்கும் இத்தருணத்தில், அவதார யுகம் வேறெந்த காலத்தையும் போலல்லாத சிறப்பான மாற்றத்தைக் கொண்டுவரும்!”

அங்கல் பிளீடர் மற்றும் பலர் உரைகளை நிகழ்த்த, நவ்ஸாரியிலிருந்து வரவழைக்கப்பட்ட கவாலி பாடகர் ஆண்களை பிற்பகல் ஏறக்குறைய இரண்டு மணிநேரம், நான்கு மணி வரை மகிழ்வித்தனர். பூனாவைச் சேர்ந்த பெண் பாடகி ஒருவர் மேல்மலையில் பெண்களுக்காகப் பாடினார். பிறந்தநாள் விழா நள்ளிரவு மூன்று மணி வரைத் தொடர்ந்தது. அன்று இரவு பாபா, தாமதமாக தனது அறைக்குச் சென்றபோது, ஒரு பெண்மணி அவரை அணுகி, “பாபா, எனது குழந்தை பசியாக இருப்பதால் அழுது தொந்தரவு செய்கிறான்; அதற்குப் பால் தேவை” என்று கூறவே, பாபா, களைத்துப் போய் இருந்தாலும், காவலாளி ஜமாதாருடன் கீழ் மெஹராபாத்திற்குச் சென்று, பாலை எடுத்துவந்தார்.

பிப்ரவரி 21 திங்கள் அன்று, சுற்றுப்புற பகுதிகளைச் சேர்ந்த ஏறக்குறைய 5,000 ஏழை கிராம மக்களுக்கு இலவச விருந்து வழங்கப்பட்டது. பாபா தனிப்பட்ட முறையில் ஏராளமான மக்களுக்கு லட்டுக்களைத் தனது கைகளால் வழங்கினார். பங்கெடுத்த அனைவரும் ஏக்கங்கள் நிரம்பிய இதயங்களுடன் மெஹராபாத்தின் பேரின்பத்தை, தத்தமது இல்லத்திற்கு எடுத்துச் சென்றனர்; அந்த மகிழ்ச்சியான உணர்வு நிலை அவர்களுடன் பல நாட்கள் நீடித்திருந்தது.

இந்த சந்தர்ப்பத்தில், பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்ள புவாஸாஹேப், சதாஷிவ் பாட்டீல் இருவரும் பூனாவிலிருந்து வந்திருந்தனர்; மெஹர் பாபா ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையில் சந்தித்தார்.



**மெஹர் பாபாவின் பிறந்தநாள், 1938**
(MEHER BABA'S BIRTHDAY, 1938)

அவர் மீண்டும் புவாஸாஹேபை நினைவுபடுத்தினார், "**என்னுடனான உங்கள் தொடர்பு மிகவும் பழமையானது, நீங்கள் இப்போது நிரந்தரமாக வந்து மெஹராபாத்தில் தங்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள் ஆரம்பத்திலிருந்தே என்னுடன் இருந்தீர்கள்; நீங்கள் இனி பூனாவில் வாழ்வதை நான் விரும்பவில்லை. இந்த வாழ்க்கையில் மீண்டும் இத்தகைய வாய்ப்பு கிடைக்கப் போவதில்லை!**" பாபாவை விட்டு வெளியேறியதிலிருந்து அவர் தொடங்கிய வணிகங்களைக் (கன்றுத் தோட்டங்கள், உணவகம் போன்றவை) கருத்தில்கொண்டு, பாபா அன்புடன் அளித்த வாய்ப்பை புவாஸாஹேப் மறுத்துவிட்டார். சதாஷிவ் பாட்டீலும் மெஹராபாத்தில் பாபாவுடன் வாழ்வதை பாபா விரும்பி, வலியுறுத்தினார், ஆனால் அவரும் சில குடும்ப சிரமங்களைச் சுட்டிக்காட்டிய வேளையில், பாபா மீண்டும் இருவருக்கும் வலியுறுத்தினார், "**நான் உங்களுக்கு வாழ்நாள் வாய்ப்பைத் தருகிறேன்! பூனாவிற்குச் சென்று, அதைப் பற்றி சிந்தித்து, உங்கள் முடிவை எனக்கு எழுதுங்கள்.**" இருவரும் விடைபெற்றுச் சென்றனர், ஆனால் துரதிர்ஷ்டவசமாக இருவரும் பாபாவிற்கு எழுதவுமில்லை, அவர் விரும்பியபடி ஒருபோதும் அவருடன் வந்து வாழவுமில்லை.

மூன்று நாள் நிகழ்ச்சிகள் முடிந்ததும், பாபா ஆண் மண்டலியிடம், "**இந்த ஆண்டு அல்லது கடந்த ஆண்டு, எந்தப் பிறந்தநாளை நீங்கள் அதிகம் விரும்பினீர்கள்?**" என வினவினார். கடந்த ஆண்டு என்று பெரும்பாலான மண்டலி கூறினர், ஏனெனில் ஏராளமான பணம் செலவிட்டு, அதிக ஊழியர்களை பணியில் அமர்த்தி, மிகையான அலங்கார பொருட்கள் வாங்கி, இதுபோன்ற பலவற்றைச் செய்ய முடிந்ததால் அது மிகவும் சிறப்பாக அமைந்தது. ஆனால் பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "**நீங்கள் அனைவரும் தனிப்பட்ட முறையில் கடினமாக உழைத்ததால், இந்த ஆண்டு எனக்கு மிகவும் சிறப்பானதாகக் கருதுகிறேன். இதுதான் முக்கியம் - பந்தலும், அலங்காரங்களும் பெரியதல்ல!**"

பிறந்தநாள் நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, சில நாட்கள் ஜெஸவாலா குடும்பத்தினர் அக்பர் அச்சகத்தில் தங்கினர். குடும்ப நண்பராக இருந்த மைமுனா (MAIMUNA) என்ற பணக்கார முகமதிய பெண்மணியும் அவர்களுடன் நாக்பூரிலிருந்து வந்திருந்தார். பயணத்தைத் தொடங்குவதற்கு முன்னர், எதுவும் உண்ணாமல் "நான் மெஹர் பாபாவை தரிசனம் செய்த பின்னரே உண்ணுவேன்" என்று கூறி உபவாசம் இருந்தார்.

பாபா அவரிடம் மிகவும் கனிவாக நடந்துகொண்டார், ஒரு முறை அவரை அழைத்து வர கெய்மாயை அனுப்பி வைத்தார். கெய்மாய் சென்றபோது, மைமுனா, "இது எனது பிரார்த்தனை நேரம். என்னுடைய நமாஸ் முடிந்ததும் பாபாவிடம் வருகிறேன் என்று சொல்லுங்கள்" என கூறி அனுப்பினார்.

கெய்மாய், பாபாவிடம் இந்தத் தகவலைத் தெரிவித்ததும், பாபா குறிப்பிட்டார், "**என்ன திடமான மன உறுதி பாருங்கள்! அவர் நமாஸ் வழங்கும் 'அந்த ஒருவரிடம்' வந்துவிட்டார், ஆனால் அவரை நான்**

**அழைக்கும் போது, மிகவும் மும்முரமாகப் பிரார்த்தனை செய்கிறார்! அவர் என் அழைப்பை ஏற்று வந்திருந்தால், மிக்க அதிர்ஷ்டசாலியாக இருந்திருப்பார். ஆனால் அவர் தனது கற்பனைகளுக்கு அடிமையாக இருப்பது, எனக்கு அடிமையாக இருப்பதைத் தடுக்கிறது!"** என்றார்.

1938, பிப்ரவரி 23 அன்று, மதுபானம், போதைப்பொருள் மற்றும் பல பழக்கவழக்கங்களைப் பற்றி விளக்கி, பாபா கூறினார்:

**சாதாரண, மிதமான போதை தரும் மதுபானங்கள், தூண்டும் தன்மையுடையதாக இருந்தாலும், பாதிப்பில்லாதவை. அதிக அளவில் அருந்துவது தீங்கு விளைவிக்கும். போதை மருந்துகள், சிறிய அல்லது பெரிய அளவில் இருந்தாலும், தீங்கு விளைவிப்பதோடு அருந்துவோரை அடிமையாக்கும் தன்மை படைத்தவை. ஒரு சிறிய அளவில் தொடங்கி, மிகவும் நுட்பமான முறையில் அருந்தும் ஒருவரை, கண்மூடித்தனமாக அளவை அதிகரிக்கத் தூண்டும்; இறுதியில் அவை இல்லாமல் எதுவும் செய்ய முடியாது என்ற அடிமைத்தனம் வரை கொண்டு செல்லும்.**

**புகைப்பிடிப்பதில் சிறிதளவு மேலோட்டமான இன்பத்தை மட்டுமே பெறமுடியும்; இதுவும் தற்காலிகமானது. ஆனால் இதில் மூன்று தனித்துவமான குறைபாடுகள் உள்ளன: உடல், மனம் மற்றும் பழக்கவழக்கம். உடல் ரீதியாக அது ஒழுங்கு நடைமுறையைக் கெடுக்கும்; மேலும் அது கிடைக்காதபோது மனரீதியாக ஒருவரை, சித்திரவதைச் செய்யும்.**

புகைப்பிடிப்பதை நிறுத்தியபோது இயல்பான நிகழ்வுகளில் தென்பட்ட மாற்றங்களால், சுற்றுப்புற சூழ்நிலை சாதகமாக இருந்தது என்று மண்டலி அண்மையில் அனுபவபூர்வமாகக் கண்டதைப் பற்றி பாபா கூறினார், **"ஏழு நாட்கள் இத்தகைய சிறிய பழக்கவழக்கங்களைத் தவிர்ப்பதன் மூலம் இயற்கையின் கூறுகளை மண்டலியால் கட்டுப்படுத்த முடியுமானால், ஏழு மாதங்களில் முழு பிரபஞ்சத்தையும் அற்புதமான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்!"**

பிப்ரவரி 1938ஆம் ஆண்டு பிற்பகுதியில், பாபா மீண்டும் பெண்டு, நௌரோஜி, காளேமாமா ஆகியோருக்கு, மெஹராபாத் மலையில் சில கட்டுமானங்களை அமைப்பது குறித்து விரிவான அறிவுறுத்தல்களை வழங்கினார். ராஹுரியை விட்டு வந்ததிலிருந்து டாக்டர் நீலு மெஹராபாத்தில் ஒரு இலவச மருந்தகத்தை நடத்தி வந்தார்; பாதிரி நோயாளிகளுக்கு ஹோமியோபதி சிகிச்சை அளித்து வந்தார். பாதிரிக்கு சில அடிப்படை பொறியியல் அனுபவம் இருந்தது, மேலும் மலையின் கட்டுமானப் பணிகளில் உதவியாக இருந்தார். ஆதி சீனியர் கடிதப் பரிமாற்றத்தை கவனித்தார். மனநிலை பாதித்தவர்கள் மற்றும் மஸ்த் ஆசிரமத்தின் பொறுப்பை பைதூல் ஏற்றுக்கொண்டார். பெய்லி (ஜனவரி 16ஆம் தேதி தனது மனைவியுடன் அஹமதுநகரில் தங்க வந்தார்) மேலும், சுவாமிஜி இந்த நேரத்தில்

மெஹராபாத்தில் இருந்த மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் பராமரிப்பில் உதவினார்.

நோரினாவின் பிறந்தநாள் மார்ச் 2 அன்று கொண்டாடப்பட்டது. 4ஆம் தேதி, மெஹர் பாபா, பெண்டு, குஸ்தாஜி, ஆதி சீனியர், பெஹராம் ஆகியோர், அஹமதுநகர் அக்பர் அச்சகத்தில் வாழும் நஸர்வான் ஸட்டாவுடன் இரவு உணவிற்குச் சென்று, பின்பு பெய்லியின் இல்லத்திற்குச் சென்றனர்.


1938, மார்ச் 6 அன்று ருஸ்தத்தின் முயற்சியை ஆதரிக்கும் நோக்கத்தில் பாபா மும்பைக்குச் சென்றார். ஆதி ஜூனியர், சீனியர் இருவரும் உடன் சென்றனர். ராம்ஜூவின் மைத்துனர் நூருவும் (NOORU) பூனா ரயில் நிலையத்தில் குழுவுடன் இணைந்தார். அனைவரும் மாலையில் மும்பை சென்றடைந்து, காக்கா பாரியாவுடன் பானுபாய் இல்லத்தில் தங்கினர். ருஸ்தம், பாபாவுடன் திரைப்படம் குறித்து விவாதித்தார்.

மார்ச் 8ஆம் நாள், ஃபிரீனி (எட்டு மாத குழந்தையை சுமந்த வண்ணம்) காக்கா பாரியா இல்லத்திற்கு வந்து கோபத்தில் கொந்தளிக்கும் காட்சியை ஏற்படுத்தினார். பாபா அவரை அமைதியாக இருக்கச் செய்தார். பாபா மும்பையில் இருந்த இரண்டு நாட்களில், ராவ்ஸாஹேப், ஏழை பட்டான் குடும்பத்தைச் சார்ந்த அமீர் கான் என்ற சிறுவன் ஒருவனை பாபாவிடம் அழைத்து வந்தார். அடுத்த நாள், பாபா அந்த சிறுவனையும் நாசிக் அழைத்துச் சென்று, அங்கு தவ்லத்மாயை சந்தித்தார், உணவு உண்டு ஓர் இரவு அங்கே தங்கினார். மறுநாள் மாலை 8:00 மணிக்கு மெஹராபாத் வந்து சேர்ந்தார்; வழியில், ஸங்கம்னேர் (SANGAMNER) கிராமத்தில், பாபா ஆரம்பகால கஸ்பாபேட் மற்றும் மன்ஸில்-இ-மீம் மண்டலியில் ஒருவரான பாபு சைக்கிள்வாலாவை (BABU CYCLEWALLA) சந்தித்தார்; அவர் திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கை வாழ்ந்து வந்தார்.

மார்ச் 11ஆம் நாள், அமீர் கான், இரவு ரயிலில் மெஹராபாத் வந்தடைந்தார். ஆதி சீனியர் அவருக்கு வேண்டிய துணிமணிகளை வாங்க அழைத்துச் சென்றார்; மேலும் வாகனம் ஓட்டக் கற்றுக்கொடுக்கும் நோக்கத்தில் மோரிஸ் கார் ஒன்றை ஏற்பாடு செய்து அந்தப் பொறுப்பை, பகீரத்திற்கு வழங்கினார்.



**பஞ்ச்கணி** (PANCHGANI)**, 1938**



**பாபா, பஞ்ச்கணி ‘டைகர் வேலி’ 1938**

(BABA, PANCHGANI ‘TIGER VALLEY’ 1938)

# பஞ்ச்கணி 'டைகர் வேலி'

**(Panchgani 'Tiger Valley')**

அனைவருக்கும் அவரவர் பொறுப்புகளை வழங்கிய பின்பு, மெஹர் பாபா 1938 மார்ச் 14ஆம் நாள், மூன்று கார்களில் பஞ்ச்கணிக்குப் புறப்பட்டார். எலிஸபெத்தின் காரில் மெஹெரா, மணி, நாஜா, கோர்ஷெத் ஆகியோருடன் பாபா பயணம் செய்தார். ஸூனாமாசி, வாலு, கிட்டி, ரானோ, எலிஸபெத், நோரினா, நான்னி ஆகியோரை துக்காராம் மற்றொரு காரிலும், குல்மாய், ஷிரீன்மாய், சிறுவன் அமீர்கான் ஆகியோரை ஆதி சீனியரும் அழைத்துச் சென்றனர். வழியில், எலிஸபெத்தின் காரில் ஒரு சக்கரம் பழுதாகி நின்றது. அவர்கள் மதிய உணவுக்காக, பூனாவில் விஷ்ணுவின் உறவினர் வீட்டில் நின்றனர்; ஆதி, காரின் சக்கரத்தைப் பழுது பார்த்து சரி செய்தார்.

பஞ்ச்கணியில் தங்கியிருந்த மண்டலியில் சாஞ்சி, குஸ்தாஜி, விஷ்ணு, சகன், பகீரத் ஆகியோர் அடங்குவர். முஹமது மஸ்தை, பின்னர் அங்கு அழைத்துச் சென்று மாஸாஜியின் கண்காணிப்பில் வைப்பதாகத் திட்டம். ஜால்பாயும் அங்கு வரவிருந்தார்.

பஞ்ச்கணியில் 'டைகர் வேலி'க்கு அருகில், பாபா தங்கியிருந்த பங்களா 'தில்குஷா' (DILKHUSHA) என்று அழைக்கப்பட்டது. பெண்மணிகள் பிரதான வீட்டை ஆக்கிரமித்தனர், அதேநேரத்தில் பாபா சமையலறைக்கு அடுத்த ஒரு சரக்கு அறையில் தங்கி, முஹமது மஸ்துடன் ஒரு சிறிய இணைக்கப்பட்ட பகுதியில் பணிபுரிந்தார். பெண்களின் தனியுரிமையை உறுதி செய்ய காம்பவுண்டில் மூங்கில் பாயால் தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டன. முதன்முதலில் மண்டலி இந்து உயர்நிலைப்பள்ளியின் அறைகளில் வசதியாகத் தங்க வைக்கப்பட்டனர், ஆனால் ஒரு வாரத்தில் தில்குஷா பங்களாவிலிருந்து சிறிது தூரத்தில் அமைந்த சிறிய, நெரிசலான 'பெல்லா விஸ்டா' (BELLA VISTA) குடிலுக்கு மாற்றப்பட்டனர்.

சாஞ்சி, தனது நாட்குறிப்பில் (1938, மார்ச் 16) குறிப்பிட்டது போல, 'பாபாவுடன் எங்குச் சென்றாலும், மண்டலி எப்பொழுதும் அசௌகரியமான, சிரமங்கள் நிறைந்த, விரும்பத்தகாத சூழல்களிலே இருக்க வேண்டிய நிர்பந்தம்.' ஆனால் சாஞ்சி இதையும் சுட்டிக்காட்டினார்: "பாபா தனக்காகத் தேர்ந்தெடுத்த அறையும் 'மிகச்சிறியதும், எளிமையானதும் மட்டுமின்றி, கடைசியாகப் பயன்படுத்தப்பட்ட நபர்களால் அலங்கோலமாக வைக்கப்பட்டிருந்தது; அதற்கு ஜன்னல்களும் இல்லாமல் ஒரே ஒரு கதவு மட்டுமே இருந்த அது, ஒரு சரக்கு அறையாகப் பயன்படுத்தப்பட்டது. மூவுலகங்களின் அதிபதி தனக்கெனத் தேர்ந்தெடுக்கும் இடம்!"

மார்ச் 25 அன்று, மெஹர் பாபா முதன்முறையாக மண்டலியின் குடிசைக்குச் சென்றார், மேலும் அவரை சந்திக்குமாறு பலமுறை கேட்டுக்கொண்டிருந்த ஒரு சில நபர்களையும் சந்தித்தார். ஒவ்வொரு

வியாழக்கிழமை மாலை நான்கு முதல் ஐந்து மணி வரை, பாபா தரிசனம் வழங்கும் நேரம் என்று பிற அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது.

பஞ்ச்கணியில் பெண்மணிகளில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு, தியானம் செய்யுமாறு பாபா அறிவுறுத்தினார். பாபா பல பயணங்களில் பெண்களை மஹாபலேஷ்வருக்கு அழைத்துச் சென்றார், மேலும் அவர் 28ஆம் தேதி, பிரதாப்கரில் (PRATAPGHAR) அமைந்த சிவாஜியின் கோட்டைக்கும் விஜயம் செய்தார். அண்மையில் சீரான, இடியுடன் கூடிய மழை பெய்ததால், வெளியேறுவதற்கு முந்தைய நாள், பாபா மண்டலியுடன் தற்செயல் நடப்பு நிலைக்கு வேண்டிய திட்டங்களை விவாதித்தார். சாஞ்சி அதை விரிவாக விளக்கியது கீழே வருமாறு:

காலநிலை எப்பொழுதுமே மேகமூட்டமாகக் காணப்பட்டாலும், கனமழை பெய்தாலும், பாபா, பிரதாப்கருக்குச் செல்லும் யோசனையைக் கைவிடாமல், மாறாக அதில் உறுதியாக இருந்தார். பிரதாப்கருக்குப் புறப்படுவதற்கு முன்னர் அல்லது அதற்குப் பிறகு கூட, மழை பெய்தால், நாட்களின் திட்டத்தை, புத்திசாலித்தனமாக, வானிலை சூழ்நிலைக்கேற்ப சரிசெய்தார். நாள் முழுவதும் அவரைத் தொல்லைக்குள்ளாக்கிய இந்த ஏற்பாடுகள் பற்றிய நுணுக்கமான விவரங்கள் ஒருவரை, பைத்தியம் பிடிக்கச் செய்யும்!

ஆனால் 28ஆம் தேதி, வானிலை தெளிவாகத் தென்பட்டது, மெஹர் பாபா பெண்மணிகளுடன் காலை ஐந்து மணிக்கு, பிராதாப்கர் கோட்டைக்குச் சென்று, மாலை ஆறு மணிக்குத் திரும்பி வந்தார். காக்கா, பிளீடருடன் பெனாரஸ் நகருக்கு அனுப்பப்பட்டார், ஆனால் அதே நாள் பிற்பகலில் அவர் தனியாக, பஞ்ச்கணிக்குத் திரும்ப அழைக்கப்பட்டார். ஆதி சீனியர் நாசிக் நகரிலிருந்து அன்று வந்தவர், ஃபிரீனியின் பதற்றமான மனநிலையை சமாளிக்க, காக்காவின் உதவியை நாடி அவசரமாக அழைத்துச் சென்றார்.

பயங்கரமான மன மற்றும் உடல் ரீதியான வேதனையை எதிர்கொண்ட போதிலும், பாபாவின் கட்டளைகளில் பிளீடர் சிக்கியிருப்பதாக, காக்கா, பாபாவிற்குத் தெரிவித்த வேளையில், பாபா, "**இன்னும் வரவிருப்பது ஏராளம். அவர் அனுபவிக்க வேண்டியது இது மட்டுமல்ல, நிறைய உள்ளது**" என எடுத்துரைத்தார். மண்டலிக்கு, பிளீடர் தனது திறமையை நிரூபித்தார் என்றுதான் கூறவேண்டும், மேலும் காக்கா விவரித்த அனைத்து இடர்பாடுகளையும் தாங்குவதில் பிளீடர் வெளிப்படுத்திய ஆற்றலையும், தைரியத்தையும் அவர்களால் மட்டுமே பாராட்ட முடிந்தது.

28ஆம் தேதி, பெண்கள் சமையலறைக்கு வெளியே ஐந்து அடி நீள பாம்பு, அதன் வாயில் ஒரு குருவியுடன் இருந்ததைக் கண்டனர். பாபாவை அழைத்தபோது, அவர் ஒரு சில ஆண் மண்டலியுடன் வந்தார். ஒருவர் பாம்பை அதன் முதுகில் தாக்கியபோது, அந்தக் குருவி விடுபட்டுப் பறந்து சென்றது. பாபா அதன் தலையை நசுக்கி, கடைசி அடியைக் கொடுத்தார். அன்று, இரவு உணவிற்குப் பிறகு, பாபா, பாம்புகளைப் பற்றி குறிப்பிட்டார், "**ஒரு பாம்பு, மனிதனால் கொல்லப்படாவிட்டால், அது எப்பொழுதும் பாம்பாகவே**

**இருக்கும். ஒரு பாம்பை எப்பொழுதுமே காயப்படுத்தி விட்டுவிடக் கூடாது, அது உயிரை விட நீண்ட நேரம் எடுக்கும். ஒரு முறை காயமடைந்தால், அது கொல்லப்படுவது வரை உங்கள் அருகாமையிலே இருக்கும்."**

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், கீழ் மெஹராபாத்தில் பாம்பு ஒன்று காயப்பட்டபோது, பாதிரி அதை, பாபாவிடம் கொண்டு வந்து அதன் தலையை நசுக்கினார். அப்போது மெஹர் பாபா இது குறித்து விளக்கமளித்தார்: **"பரிணாம வளர்ச்சியில், பாம்பு வடிவம் சிக்கிப் பிணைக்கப்பட்ட கயிறு போன்றது, அதன் முடிச்சை நீங்கள் சீராக்கவோ, பிரிக்கவோ முடியாது. ஆனால், அது ஒரு மனிதனால் கொல்லப்பட்டால், 'முடிச்சு' தானாகவே பிரிக்கப்பட்டு, சிக்கலிலிருந்து விடுபட்டு, ஆன்மா அதன் வழியில் பரிணாம வளர்ச்சியில் தடையின்றி தொடர முடியும்."**

1938, மார்ச் 29 அன்று, பாபா அவரைச் சுற்றியுள்ள உண்மையான ஊழியர்களின் வட்ட அமைப்பு ஒன்றை உருவாக்கும் பணியைப் பற்றி மேற்கத்தியர்களுக்கு விளக்கினார்: **அவர்கள், உலக உடைமைகளைக் கைவிடுவது மட்டுமின்றி, அவரது நடவடிக்கைகளின் பல்வேறு துறைகளில், நேரடி வழிகாட்டுதலின் கீழ் புரியும் தன்னலமற்ற சேவை, குறிப்பிடத்தக்கதாக இருந்தாலும், அது அமைதியாக, வெளிப்படையான விளம்பரம் எதுவும் இல்லாமல், பிறருக்குத் தெரியாமலே இருக்கும்.**

**பெயர்பெற்ற பொது நபர்கள், 'சேவை' என்ற பெயரில் உரத்த குரல் எழுப்பி, பிரசங்கங்கள் செய்யும் வேளையில் பத்திரிகைகளும், பொதுமக்களும் அவர்களுக்குப் புகழாரம் சூட்டி, பெருமைப்படுத்துவது, அவர்களின் பலவீனங்களையும், தீமைகளையும் மறைத்து பொதுமக்களிடையே பெயரையும், புகழையும் கொண்டுவரும். இந்த ஒலிப்பெருக்கிகளோடு ஒப்பிடும்போது, எனது மண்டலியோ ரத்தின கற்கள், அவர்களில் பலர் உடல் ரீதியாக மட்டுமல்ல, மனரீதியாகவும் பாதிக்கப்படுகிறார்கள்; மன அழுத்தத்தால் படும் அவஸ்தை மிக மோசமானது.**

**எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் மனிதர்கள். மனிதர்களாக, முழு நிறைவில்லாத நிலையில் இருப்பதால், அவர்களுக்கு மனமும் அதனுடன் இணைந்த குறைபாடுகளும் இருக்கும். அவர்களுக்கும் காமம் பற்றிய பல எண்ணங்கள் உள்ளன; இவை, எப்பொழுதும் கட்டுப்படுத்த முயலும் வேளையில், பழிவாங்கும் வேகத்தில் செயல்படும். அவர்கள் விரும்பியபடிச் செயல்பட சுதந்திரம் இல்லாமல், அவற்றை செயல்படுத்தக்கூடாது என்ற கட்டளைகளில் கட்டுண்டிருப்பது இடைவிடா சித்திரவதைக்கு சமம். ஆயினும்கூட அவர்கள் வாழ்க்கையின் உச்ச நிலையில், முழு சக்தியுடன் முன்னோடியாக இருந்து, வாழ்க்கையை உண்மையிலே அனுபவிக்கும் கட்டத்தில், அனைவரும் எனக்குக் கீழ்ப்படிய முழுமனதுடன் முயற்சிக்கிறார்கள்.**

**முந்தைய ஆண்டுகளை, எனது சேவையிலும், சகவாசத்திலும், கடுமையான கட்டுப்பாட்டு நிபந்தனைகளோடு, மிக்க எளிமையான வாழ்க்கை முறையின் கீழ் கழித்திருந்தாலும், அவர்களுடைய எதிர்காலத்தை எதிர்கொள்ள ஒரு வெற்றுச் சுவரைத் தவிர வேறொன்றும் இல்லை; அவை பல ஆண்டுகளாக குருநாதரின் கைகளில் முழுமையாக விட்டுவிடப்பட்ட நிலையில், அவருடைய வார்த்தையும், உறுதிமொழியும் அவர்களின் நன்மைக்காகவே என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். உலகப்பொருள் அல்லது ஆதாயங்களைப் பொறுத்தவரை முழுமையான, தன்னிறைவற்ற, மோசமான ஏமாற்றத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. ஆயினும்கூட, ஆரம்பத்திலிருந்தே, சில பெரிய ஆன்மீக நன்மைக்காக, அவர்களுக்கு இந்த நேரத்தில் அதைப்பற்றிய எந்த சிறிய கருத்தும் இல்லாதபோதும், என்னுடைய கொடுக்கல் வாங்கல் ஒப்பந்தம்** (பேரம்) **மற்றும் வாக்குறுதியை அவர்கள் இன்னும் பற்றிக் கொண்டிருக்கிறார்கள்.**

மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் ஆசிரமத்தின் பொறுப்பில், பைதூல் மெஹராபாத்தில் இருந்ததால், மாஸாஜி பஞ்ச்கணியில் முஹமது மஸ்தின் தனிப்பட்ட பராமரிப்பாளராக நியமிக்கப்பட்டார். இது மாஸாஜியின் பொறுமையைப் பெருமளவில் சோதித்தது. அவருடைய வாக்குவாத குணமும், எரிச்சலடையும் தன்மையும் வயதில் முதியவர் என்பதால், இயல்பான தன்மையுடன், மாஸாஜியின் மனநிலையைக் கட்டுப்படுத்துவது என்பது மிகவும் கடினம். ஆனால், விஷயங்களை இன்னும் மோசமாக்கும் விதத்தில், பாபா நல்ல மனநிலையில் இருக்கும் வேளையில், தனது சொந்த நோக்கங்களுக்காக, மாஸாஜியை, கேலியும் கிண்டலும் செய்வதன் மூலம், முஹமது மஸ்தை மகிழ்விக்கும் விதத்தில் நகைச்சுவையாக எதையேனும் கூறுவது வழக்கம். ஒரு கட்டத்தில், மாஸாஜி மிகவும் கோபமடைந்தார், அவர் பாபாவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல், வருந்தத்தக்க விஷயங்களைக் கூறினார், மேலும் உடனடியாக வெளியேறத் தயாராக இருந்தார். பாபா, பொதுவாக இதுபோன்ற சூழ்நிலைகளில் அலட்சியத்தை வெளிப்படுத்தினார். "**நீங்கள் செல்வதானால் யார் கவலைப்படப் போகிறார்கள்?**" பாபா, சைகையால் தெரிவித்தார். "**யாருக்கு நீங்கள் தேவை? நீங்கள் போனால், உங்கள் தந்தையர்களில் நூறு பேர்** (அதாவது உங்களை விட சிறந்தவர்கள்) **உங்கள் இடத்தில் சிரம் தாழ்த்தி, சேவை செய்யத் தயாராக உள்ளனர்!**"

ஆனால், பின்பு பாபா மாஸாஜியை அன்போடு அரவணைத்து மன்னிப்பது வழக்கம், "**எவரேனும் உங்களைக் கேலி செய்தால், அது உங்களுக்குப் புரியும், ஆனால் முஹமது ஒரு குழந்தையைப் போன்றவர். அவருடைய வார்த்தைகளில் கவனம் செலுத்தி அவற்றை ஏன் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும்? நீங்கள் அதைக் கண்டுகொள்ளாமல் அலட்சியமாக இருங்கள்.** (அவரை கவனிப்பதில்) **அத்தகைய கடமையைச் செய்வதற்கான வாய்ப்பைப் பெற உங்களுக்கு நல்ல அதிர்ஷ்டம் தேவை.**

**ஆனால் நான் உங்களுக்குக் கொடுப்பதை நீங்கள் ஜீரணிக்க முடியாதது துரதிர்ஷ்டவசமானது**." மாஸாஜி அழுதுகொண்டே பாபாவின் பாதங்களில் தலையை வைத்து வணங்கினார்.

சில நேரங்களில், மோசமான மனநிலையில், மாஸாஜி வேண்டுமென்றே முஹமது மஸ்தை அச்சுறுத்தினார், இதைக் கண்டு மஸ்த் அஞ்சுவது உண்டு. இது பாபாவிற்குப் பிடிக்கவில்லை, பாபா பொறுத்துக் கொள்வதும் இல்லை. முஹமதுவுடனான அவரது பணி மிகவும் சிறப்பு வாய்ந்தது, புரிந்துகொள்ள முடியாதது. அவர் எப்பொழுதும் முஹமதை நகைச்சுவை உணர்வுடன் நடத்தி, கற்பனைக்கு எட்டாத பொறுமையுடன் மஸ்தின் சில பிடிவாதங்களைத் தாங்கிக் கொண்டார். மண்டலியும் மஸ்தை அதே வழியில் கையாள வேண்டும் என்று அவர் விரும்பினார், ஆனால் அது மாஸாஜிக்கு மிகவும் கடினமாக இருந்தது.

கடைசியாக, 1938, ஏப்ரல் 1 அன்று, மாஸாஜியின் இடத்தில் முஹமதை கவனித்துக் கொள்ள, பணியாளர் தல்யாவை (TALYA) அனுப்பி வைக்க, பைதூலைக் கேட்டுக்கொள்ளுமாறு விஷ்ணுவிற்கு பாபா அறிவுறுத்தினார்.

முந்தைய நாள் (மார்ச் 31) பஞ்சகணியில், பத்து முதல் பதினொரு மணி வரை, பாபா தனது அறையில் தனிமையில் அமர்ந்திருந்தார். அந்த நாளின் பிற்பகுதியில், நோரினா, எலிஸபெத் இருவரும் பாபாவிற்கு எங்காவது 'உலகளாவிய மையம்' ஒன்றை நிறுவுவதன் மூலம், பாபாவின் செய்திகளை உலகம் முழுவதும் அமைந்த பிற மையங்களுக்குத் தெரிவிக்க முடியும் என்று பரிந்துரைத்தனர். அவர் மக்கள் மத்தியில் பரவலாக அறியப்பட்டிருந்ததால், உற்சாகமான ஊழியர்கள் அவரது செய்திகளை மக்களிடையே தீவிரமான முறையில் பரப்ப ஒரு வாய்ப்பாக அமையும் என்று கூறியதற்கு, பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**இது உண்மையில் ஒரு நல்ல யோசனையாகும், ஆனால் அதற்கு மிகுந்த முக்கியத்துவத்தை இணைப்பதன் மூலம், அது ஒரு வழக்கமான அமைப்பாக உருவெடுக்கும்; இந்த விதத்தில் என்னைக் கட்டுப்படுத்தவோ அல்லது இதுபோன்ற எந்தவொரு விஷயத்துடனும் என்னை பிணைக்கவோ நான் விரும்பவில்லை.**

**நான் ஓர் உறுதியான அஸ்திவாரத்தில் அனைத்தையும் உருவாக்கி, அவற்றைக் கீழே இழுத்து, இல்லாமல் ஆக்குகிறேன். நான் எவ்வளவு மாற்றங்களைச் செய்கிறேனோ, அவ்வளவிற்கு மாறாதவனும் நானே!**

**நான் எந்த ஓர் அமைப்பையும், சமூகத்தையும் விரும்பவில்லை. இறுதியில், அதுதான் நடக்கும் என்று நான் அஞ்சுகிறேன். அத்தகைய மையங்கள் தழைத்தோங்க அனுமதிக்கப்பட்டால், அவை, தங்களை அமைப்புகளாக அல்லது சமூகங்களாக உருவாக்கிவிடும். அந்தக் காரணத்திற்காகத்தான், நான் கட்டமைப்புகளை உருவாக்கி, பின்னர் அவற்றை தகர்த்து விடுகிறேன். நான் எந்த அளவிற்கு அதிகமான மாற்றங்களைச் செய்கிறேனோ, அந்த அளவிற்கு நான் மாறாதவனாக மாறுகிறேன்! நிறுவனங்கள் என்பது தேவையற்ற விஷயங்களை,**

**கடலின் மேற்பரப்பு வரைக் கொண்டு வரும் நுரைப் போன்றவை, உண்மைப்பொருளானது கீழேயே இருந்து, ஆழ்கடலில் மூழ்கிவிடும்.**

விஷ்ணுவின் உறவினர்கள் அன்று மதியம், சத்தாராவிற்குச் (SATARA) செல்லும் வழியில் பாபாவை சந்தித்தனர். பாதிரியும் மெஹராபாத்திலிருந்து வந்து பாபாவுடன் ஒரு தனிப்பட்ட சந்திப்பை நிகழ்த்தினார். பஞ்ச்கணியில் அன்று மதியம் நான்கு முதல் ஐந்து மணி வரை, பாபா முதன்முறையாக ஆண் மண்டலியின் குடிசையில் பொதுமக்களுக்கு தரிசனம் வழங்கினார்.

அடுத்த நாள், ஏப்ரல் 1, ஒரு மையத்திற்கான எதிர்கால திட்டங்கள் குறித்த யோசனைகளைப் பற்றி விவாதிக்கும் போது, பாபா அவரது சொந்த, சில குணாதிசயங்களையும், கடந்த கால அவதார புருஷர்களின் தன்மைகளையும் வெளிப்படுத்தினார்:

**தெளிவற்ற தன்மை, வெற்றிடத்தில் வீடு கட்டுவது போன்ற திட்டங்களை உருவாக்குவது, ஓரிடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்கான வழக்கமான நகர்வுகள், ஒரு திட்டத்திலிருந்து வேறொரு திட்டத்திற்குத் தாவும் மாற்றங்கள் போன்றவை அனைத்தும், அவதார புருஷரின் முக்கிய பண்புகளும் விசேஷ குணங்களும் ஆகும். ராம், கிருஷ்ணா, புத்தர், இயேசு, முஹமது போன்ற அவதார புருஷர்களின் முழு வாழ்நாள் நிகழ்வுகளை ஒருவர் ஆழ்ந்து கவனித்தால், அவர்களின் போதனைகளைப் பரப்புவதற்கும், உலக வாழ்க்கையின் பயனற்ற தன்மையை மனிதகுலத்திற்குத் திடமாக உணரவைக்கவும், அவர்களின் சொந்த, புரிந்துகொள்ள முடியாத, தெளிவற்ற தன்மை மற்றும் நடவடிக்கைகளைத் தவிர, அவர்களுக்கு ஒரு திட்டவட்டமான திட்டமோ, செயல்முறையோ அல்லது அமைப்போ இல்லை என்பதைக் கண்டறிய முடியும்.**

**பலவித நிறுவனங்களில் ஈடுபடும் சாதாரண மக்களுக்கு, நிதி நிலைக்கு ஏற்ப அமைப்புகளைப் பராமரிக்கத் தேவையான திட்டவட்டமான திட்டங்கள் அவசியம். இதற்காக, முன்கூட்டியே திட்டங்களைத் தயாரித்து, தேவையான அமைப்பை நிறுவி, அதை நடத்த வேண்டும்; இல்லையேல், முழுத் திட்டமும் தோல்வியை சந்திக்கும்.**

**ஆனால் அவதார புருஷர் விஷயத்தில், அனைத்தும் இதற்கு மாறாக நிகழும். அவரது வழிகளும் முறைகளும் விசித்திரமானவை, வழக்கத்திற்கு மாறானவை, மற்றும் உலக நடப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை. முதலாவதாக, அவதார புருஷர்கள் எதையும் திட்டமிடுவது போலத் தோன்றுவது ஒரு வெளிப்புற நிகழ்வு, மெய்யல்லாத ஒன்று - அனைத்தும் எந்தவோர் உறுதியான அடிப்படையும், அடித்தளமும் இல்லாமல் (உதாரணமாக, நிதி கொடுக்கல், வாங்கல் மற்றும் இதுபோன்ற பல) எந்நேரத்திலும் வெளிப்படையான தோல்விக்குரிய அபாயத்துடன் அனைத்தும் காற்றில் மிதந்து கொண்டிருக்கும்.**

ஆனாலும், அவர்கள் ஆபத்தை விளைவிக்கும் விளையாட்டில் ஈடுபடும் அதே நேரத்தில், அவர்களின் திட்டங்கள் காற்றில் ஊசலாடிக் கொண்டிருக்கும்! ஒருவேளை, அந்தத் திட்டங்கள் சிறப்பாகச் செயல்பட்டு, திடமான அடிப்படை தன்மையுடன் இருந்தாலும், அவை எந்த நேரத்திலும் தகர்க்கப்படலாம். இத்தகைய திட்டங்களும், ஒழுங்கு முறைகளும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக உருவாக்கப்படுகின்றன. நோக்கம் நிறைவேறிய அடுத்த நிமிடமே, அவதார புருஷர்களும், சத்குருக்களும், அவை எவ்வளவுதான் தழைத்தோங்கி நின்றாலும், தொடர்ந்து இயங்கச் செய்யாமல் கைவிடுகிறார்கள். அவதார புருஷர்களும், சத்குருக்களும் தங்கள் திட்டங்களை பாதுகாப்பான, உறுதியான, நிரந்தர அடிப்படையில் தயாரிப்பதாக இருந்தால், அவர்களுக்கும், சாதாரண மனிதர்களுக்கும் இடையே என்ன வித்தியாசம் இருக்கும்?

கிருஷ்ணா, இயேசு அல்லது முஹமது போன்ற கடந்தகால அவதார புருஷர்களில் ஒருவரும் இதைச் செய்யவில்லை. அவர்களின் வாழ்க்கை மற்றும் வேலை அனைத்தும் பரபரப்பான நகர்வுகள், பயணங்கள், சைகைகள் அல்லது செயற்குறிப்புகள் நிறைந்தவை; அவை முற்றிலும் தெளிவற்றவை, உலகப்பொருள் சார்ந்த அர்த்தத்தில் எந்தவிதமான அடிப்படையும் இல்லாமல், அவதார புருஷரின் ஒரே நோக்கமான - அதாவது, உலகின் அனைத்து பொருட்களும் பொய்யானது, போலியானது என்பதைச் சித்தரித்து நிரூபிப்பதே அவர்களின் தலையாய கடமையும், பிரதானமான பணியும் ஆகும். இதன்மூலம் அவர்கள், தகுதிவாய்ந்தவர்களை ஆன்மீக பாதையில் அடியெடுத்து வைக்கச் செய்து, நித்திய, நிரந்தர ஜீவனுக்கான திடமான, விவேகமுள்ள, கட்டுறுதிமிக்க விளைவுகளை நோக்கிப் பயணம் செய்யத் தூண்டுகிறார்கள். எதிர்பாராத திடீர் மாற்றங்கள் மற்றும் நிலை தடுமாறும் வழிகளையும் முறைகளையும் கையாண்டு, இந்த மாறிவரும் உலகமும் அதில் உள்ள அனைத்தும் மாயை என்பதை குருநாதர்கள் மானிடனுக்கு நிரூபிக்கிறார்கள்! தொடர்ந்து அவர்கள் ஆன்மீக வாழ்க்கையின் நிலையான, நீடித்த உண்மைப்பொருளை நோக்கி அவர்களை வழிநடத்தி, இறையுணர்வை அடையச் செய்கிறார்கள்.

கிருஷ்ணர் ஒருபுறம் கோபிகைகளுடன் விளையாடும் அதே வேளையில், போரைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். இயேசுவும் திட்டவட்டமான திட்டம் எதுவும் இல்லாமல் மலையில் நிகழ்த்திய உரையைத் (THE SERMON ON THE MOUNT) திரும்பத் திரும்ப நடத்தி வந்தார். முஹமது முற்றிலும் தெளிவற்றவராக இருந்து, எப்பொழுதும் ஓடி ஓடி, இங்கே ஒரு திருமணம், அங்கே ஒரு திருமணம் என்ற நிலையில் இருந்தார். அனைத்தும் தெளிவற்ற ஒரு பிரம்மைக்கு உரு கொடுத்தாலும், அதன் பின்னால் ஒரு திட்டவட்டமான துல்லியமான நோக்கம் மறைந்திருந்ததை நினைவில் கொள்ளவேண்டும்.

**நானும் அவர்களைப் போலவே இருக்கிறேன்! நான் மணலில் அல்லது காற்றில் கட்டமைப்புகளை உருவாக்குகிறேன்; சில நேரங்களில் எனது சட்டைப் பையில் காசு எதுவும் இல்லாமல் அல்லது எதிர்கால பராமரிப்புக்கான திட்டவட்டமான ஏற்பாடுகள் எதுவும் செய்யாமல் திட்டங்களை வகுக்கிறேன். ஒன்றை நிறுவினாலும் கூட, அதை நான் தகர்க்கிறேன், அல்லது கைவிடுகிறேன். மெஹராபாத் பள்ளிக்கூடம், ஆசிரமம், மருத்துவமனை, நாசிக் ரிட்ரீட் இவற்றிற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன - அனைத்தும் நன்கு திட்டமிடப்பட்டிருந்தன, ஆனால் எனது நோக்கம் நிறைவேறியதும் அனைத்தும் தகர்க்கப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டது; நோக்கம் என்ன என்பது எனக்கு மட்டுமே தெரியும்.**

**ஆனால் மக்கள் அதைப் புரிந்துகொள்ள முடியாமல் தவறாக எடுத்துக் கொள்கிறார்கள். இப்படித்தான் அவதார புருஷரின் பணி, எப்பொழுதுமே உலகத்தால் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது, தவறாக மதிப்பிடப்படுகிறது. இவ்வாறு, அவதார புருஷரின் பணி அவரது வாழ்நாளில் எப்பொழுதுமே பாராட்டப்படாமல் போகும். என்னுடைய பணியும் அப்படித்தான்.**

**ஒரு நேரு அல்லது நரிமன், ஏழை தீண்டத்தகாதவர் தலைமுடியை வெட்டினால் அல்லது மொட்டையடித்தால், பத்திரிகைகளும் பொதுமக்களும் அவர்களை, மனிதகுலத்தின் இரட்சகர்கள் என்று பாராட்டுகிறார்கள். ஆனால் ஒரு (மெஹர்) பாபா அல்லது உபாஸனி, அதே வேலையை ஒதுங்கிய இடங்களில் அமைதியாகச் செய்வது, கவனிக்கப்படவோ பாராட்டப்படவோ மாட்டாது; மாறாக கேலியும், கிண்டலும் செய்து விமர்சிக்கப்படுகிறார்கள்! இதுபோன்ற உலகம், கவர்ச்சி மற்றும் வெளிப்புற நிகழ்ச்சிகளுக்குப் பின் ஓடுவது, சாதாரண விஷயங்களுக்குத் தேவையற்ற முக்கியத்துவம் கொடுப்பது, ஏனெனில் அவை பொதுமக்களின் பார்வையில் சிறப்பு வாய்ந்தவர்களால் செய்யப்படுகின்றன.**

நோரினா, எலிஸபெத் இருவரும் ஒரு மையத்தை நிறுவுவதற்கான யோசனையைப் பற்றி மேலும் விவாதித்து, பாபாவிடம், “எங்களைப் பொறுத்தவரை, அது தேவையில்லை; ஆனால் வரவிருக்கும் இதர மேற்கத்திய பெண்களுக்கு இது அவசியமாக இருக்கும்” என்று கூறினர்.

பாபா நீண்ட பதிலளித்தார்:

**ஆமாம் எனக்குத் தெரியும். நீங்கள் உங்களைப் பற்றி சிந்திக்கவில்லை. நீங்கள் எப்பொழுதும் போல மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள். கிட்டி உணவு தயார் செய்கிறார், நோரினா தட்டச்சில் பணிபுரிகிறார், ரானோ வண்ணம் வரைந்து பிற வேலைகளையும் செய்கிறார், எலிஸபெத் எழுதுகிறார் மற்றும் பல்வேறு வேலைகளில் ஈடுபடுகிறார். நான் உங்களை இருக்கச் செய்யும் எந்த சூழ்நிலையிலும்,**

நீங்கள் விருப்பத்துடன் இப்படி வாழ்வீர்கள் என்பதையும் நான் அறிவேன். பிற ஆசிரமங்களைப் போலவே, நிகழ்ச்சிகளையும் வழக்கமான விழாக்களையும் நீங்கள் விரும்பவில்லை, என்னருகில் இருப்பதையே விரும்புகிறீர்கள்.

மேற்கத்திய நாட்டின் பல பெண்மணிகள் இங்கே வந்து எனது பணியில் பங்கெடுக்க விரும்புகிறார்கள் என்பதும் உண்மைதான், அவர்களுக்கான பணிக்காகவும், எனது பணிக்கு ஒரு வழியாகவும் ஓர் இடம் தேவைப்படுகிறது. இங்கு வரவிருக்கும் பெண்மணிகள் தங்குவதற்கு வசதியான இடம் எதுவுமில்லை. நம்மிடம் மெஹராபாத் இருந்தாலும், அங்கு அதற்குரிய வசதிகள் எதுவும் இல்லை. இன்னும் பல காரணங்களுக்காக, மெஹராபாத் பொருத்தமற்றது மட்டுமின்றி, சிரமத்திற்குரியதும் ஆகும். மழை இல்லாததால் வறண்டு காணப்படுகிறது. இது பாழடைந்த இடம், மேலும் ஆண்டு முழுவதும் நிலவும் வெப்பமான காலநிலை அங்கு வாழ்வதை இன்னும் கடினமாக்குகிறது. எவரும், குறிப்பாக மேலை நாட்டினர், கோடையில் தங்கியிருந்து பணிபுரிவது முடியாத காரியம். அதிக வெப்பம் ஆற்றலைக் குறைக்கிறது, எனது பழைய மண்டலி கூட இப்போது சோர்வாகவும், மந்தமாகவும், முன்பு போல் உற்சாகமாகவும் இல்லை - மாறாக முற்றிலும் உணர்வற்றவர்களாக மாறிவிட்டார்கள் என்று நான் கருதுகிறேன்! மேலும் தண்ணீர் பற்றாக்குறை என்பது ஒரு நிரந்தர பிரச்சினையாகவும், தீவிர முட்டுக்கட்டையாகவும் உள்ளது. நான் விரும்பினாலும், மெஹராபாத்தின் மேம்பாட்டிற்காக என்னால் செலவிட முடியாது, ஏனெனில் தண்ணீரைக் கண்டுகொள்ள முடியும் என்ற உத்தரவாதமும் இல்லை; தண்ணீர் இல்லாமல் நாம் எதுவும் செய்ய முடியாது.

எனவே சிறந்ததோர் இடத்தைத் தேர்ந்தெடுப்பது அவசியம் என்று தோன்றுகிறது. இட மாற்றம் அனைவரின் உடல் மற்றும் மன நலனுக்கு நல்லது. இத்தனை வருடங்கள் அங்கேயே தங்கிய பிறகு மெஹராபாத்தை விட்டு வெளியேறுவதும் கடினம், ஆனால் ஒரு முறை நாம் புதிய இடத்தில் பழகிவிட்டால், அது எளிதாகவும் சிறப்பாகவும் அமையும். ஆனால் நாம் எங்கு செல்வது? அனைத்துக் கோணங்களிலும் பார்க்கும் போது, மைசூர் சிறந்ததாகத் தெரிகிறது. காலநிலை நன்றாக உள்ளது, தண்ணீருக்குக் குறைபாடில்லை; மேலும் ஒத்திசைவான இடம். என்னைப் பொறுத்தவரை, தூரம் ஒரு பொருட்டல்ல. ஆறு மாதங்களுக்குப் பிறகு நான் திரும்பி வந்து என் அன்பர்களைப் பார்க்க முடியும் என்பதால் அவர்கள் தனிமையை உணர மாட்டார்கள்; பின்பு திரும்பி வரலாம்.

ஆனால் இதையெல்லாம் எப்படி ஏற்பாடு செய்வது? செலவுகளை சமாளிப்பது மற்றும் நிதி ஆகியவற்றின் சிக்கல் கடினமாக இருந்தாலும், ஆறு மாதம் முயற்சிப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. நிதி போன்ற பிற விஷயங்களை முதலில் ஏற்பாடு செய்த பின்பு, பெரிய திட்டங்களைத் தொடங்கி அவற்றை நிறைவேற்றுவது, உலகின் வழி. முதலில், முதல்

**விஷயங்களைப் பார்ப்பது சாதாரண செயல்முறையாக இருக்கும். கையில் நிதி இல்லாமல் அல்லது எந்தவொரு எதிர்பார்ப்பும் இல்லாமல் இதுபோன்ற பெரிய திட்டங்களைத் தொடங்குவது, இதனால் வரும் அபாயங்களை எதிர்கொள்வது - அவதார புருஷனின் வழி! நான் அதை அவ்வாறே செய்ய விரும்புகிறேன்; அப்படியே செய்கிறேன். எனவே (தலைமையகத்தை மாற்றும்) இந்தப் பிரச்சினையை இதே வழியில் சமாளிக்க நாம் முயற்சிக்க வேண்டும். திட்டம் செயல்பட்டு வெற்றியடைந்தால், நல்லது. இல்லையேல், அதில் என்ன தீங்கு இருக்கிறது? பொறுத்திருந்து பார்ப்போம்.**

1936ஆம் ஆண்டில் மெஹர் பாபா மைசூரில் இருந்தபோது, மைசூர் அரசாங்கத்தின் திவான் (CHIEF MINISTER - முதலமைச்சர்) ஸர் மிர்ஸா இஸ்மாயில், (SIR MIRZA ISMAIL) மற்றுமொரு செல்வாக்கு மிக்க நபரான சுப்ரமணிய ஐயர் (SUBRAMANYA IYER) ஆகியோருடன் தொடர்பு கொண்டார். பாபா ஒரு மையம் அல்லது ஆசிரமத்தை நிறுவதற்குப் பொருத்தமான இடத்தைத் தேர்வு செய்ய, அவர்கள் இப்போது கடிதம் மூலம் கேட்கப்பட்டனர். இருவரும் பாபாவுடன் ஒத்துழைப்பதாக உறுதி செய்து எழுதிய பதில் கடிதம், அவர் பஞ்ச்கணியில் இருந்தபோது பெறப்பட்டது, சில வாரங்களுக்குப் பிறகு, சாஞ்சி, பெண்டு இருவரும் பெங்களூருக்குச் சென்று ஸர் மிர்ஸாவை சந்தித்தனர் (1938, ஏப்ரல் 17).

அதற்கான இடம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டதாக, திவானின் கடிதத்தைப் பெற்றதும், பாபா அதைப் பார்வையிட விருப்பம் தெரிவித்தது, நோரினா, எலிஸபெத் இருவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது, ஏனெனில், மெஹராபாத்திற்கு வெளியே ஒரு மையத்தை நிறுவுவார் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. பாபா அடிக்கடி செய்ததைப் போலவே அவரது மனதையும் மாற்றிவிடுவார் என்று அவர்கள் நம்பினார்கள்.

மெஹர் பாபா அவரது இந்தப் பண்பைக் குறிப்பிட்டுக் கூறுகையில், **“வெளிப்படையாக மிகப் பெரிய மாற்றங்களைச் செய்கிறவர்கள், மாற்றமற்ற தன்மை படைத்தவர்கள் அல்லது மாற்ற முடியாதவர்கள் என்பது உலகின் மிகப்பெரிய அதிசயங்களில் ஒன்றாகும்! இது மற்றுமோர் உண்மையையும் நிரூபிக்கிறது, எது வெளிப்படையாகத் தோன்றுகிறதோ அது உண்மையானதல்ல!”** என்றார்.

நோரினா, எலிஸபெத், மண்டலி அனைவரும் இமயமலை, மவுண்ட் அபு (MOUNT ABU), நீலகிரி மலை (NILGIRIS HILLS), மற்றும் பிற அழகிய இடங்கள் ஒரு மையம் அமைப்பதற்கு உகந்ததாக இருக்கும் என பரிந்துரைத்தனர். அதற்கு பதிலளித்த பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**இமயமலையில் இனி ஆன்மீக மகத்துவம் எதுவும் இல்லை. ஆன்மீக ரீதியில் அவை வெறும் கற்களைத் தவிர வேறொன்றும் இல்லை!**

**மனிதகுலத்தின் ஆன்மீக பரிணாம வளர்ச்சியின் சிறந்த உலகளாவிய விளையாட்டில், மேன்மைமிகு ஆன்மீக சத்குருக்கள், அவதார புருஷர்களின் பாரம்பரிய வரிசையில், அவர்களால் தனிப்பட்ட முறையில் பேணி, பாதுகாத்து வளர்ச்சியடைய செய்த இடங்களில் இமயமலை, மவுண்ட் அபு, நீலகிரி ஆகியவை ஒரு காலத்தில் மிகவும் மேன்மையாகப் பேசப்பட்டு, உலகம் அங்கீகரிக்கும் விதத்தில் மதிக்கப்பட்டன; அவை மாபெரும் ரிஷி முனிகள் மற்றும் புனிதர்களின் இருப்பிடமாகத் திகழ்ந்தன. ஆனால், இப்போது, ஆன்மீக ரீதியில் எந்தப் பங்கும் வகிப்பதில்லை என்பதால் பெரிய மலை, பாறைகளைத் தவிர அதிக முக்கியத்துவம் எதுவும் இல்லாமலாயிற்று!**

**மனிதனுக்குக் கடவுள் தேவை, ஆனால் தேவாலயங்கள், கோயில்கள், சிலைகள் மற்றும் உருவங்களின் வடிவத்தில் அவனுக்குக் 'கற்கள்' கொடுக்கப்படுகின்றன! அனைவரும் இப்போது ஊழல்வாதிகளாக மாறிவிட்டனர்! ஒரு முறை வழிபாட்டுத் தலங்களாகக் கருதப்பட்டவை, அவற்றைப் பராமரிக்கும் பணக்கார கும்பல்களால் பரிதாபகரமான வணிக மையங்களாக மாறியுள்ளன. கடவுளின் பிரார்த்தனை, வழிபாடு மற்றும் அன்பின் சின்னமாக விளங்கிய இடங்கள் இன்று வணிக மையங்களாக மாறிவிட்டன!**

**கடவுள் மற்றும் மதத்தின் பெயர்கள் இவ்வாறு அழிக்கப்பட்டு, இறுதியில் இயற்கையின் பேரழிவுகளான கொள்ளைநோய், பஞ்சம் போன்ற பிற சாபங்கள் மனிதகுலத்தின் மீது தாங்கொணா துயரங்களைக் கொண்டுவருகின்றன. ஆகவே, அவதார புருஷர்கள் மற்றும் குருநாதர்களின் போதனைகள், அத்தகைய இடங்களுக்கும், வழிபாட்டு முறைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்று எச்சரிக்கை விடுக்கின்றன. மனிதகுலத்தை நெருங்குவதை விட கடவுளிடமிருந்து விலக்கி வைக்கும் இந்தக் கற்குவியல்கள் அனைத்தையும் அழித்து, சுக்குநூறாக்குவதே அவர்களின் பணி.**

1938, ஏப்ரல் 2 அன்று விட்டல் போக்ரே (VITHAL BHOKRE) பூனாவிலிருந்து பாபாவை சந்திக்க வந்தார். அதே நாளில், பாபா தினமும் காலையில் சில மணி நேரம் ஏகாந்தவாசத்தில் தனியாக அமரப்போவதாக அறிவித்து, அவ்வேளையில் ஆண்கள் எவரும் தடை செய்யப்பட்ட பகுதிக்குள் நுழையக்கூடாது என தெரிவித்தார்.

பஞ்ச்கணியில் இருந்த போது, அருகிலுள்ள நகரங்களில் வாழும் பக்தர்களுக்கு, வியாழக்கிழமைகளில், பாபா வாரத்திற்கு ஒரு முறை தரிசனம் வழங்கி வந்தார். மேலும், சில நேரங்களில் இதர பக்தர்கள் தொலைதூர நகரங்களிலிருந்து வருவதுண்டு. ஏப்ரல் 8ஆம் நாள், நாக்பூர் நகரிலிருந்து ஸுலூ ராம் மெஷ்ரம் (SULOO RAM MESHRAM) என்ற பதினான்கு வயது சிறுவன் ஒருவன் வருகை தந்தான். 1937ஆம் ஆண்டு பாபாவின் நாக்பூர் விஜயத்தின்போது,

செய்தித்தாள்களில் வந்த கட்டுரைகளைப் படித்து, மெஹர் பாபாவைப் பற்றி மேலும் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டது மட்டுமின்றி, ஜெஸவாலா குடும்பத்தினரைத் தொடர்பு கொண்டான். ஸுலூ, 1938 ஜனவரி மாதத்தில் பாபாவிற்கு எழுதிய கடிதத்திற்கு பதிலளித்து, பாபா அவனை ஏப்ரல் மாதம் பஞ்ச்கணிக்கு அழைத்திருந்தார்.

வழியில், சிறுவன் பாபாவுக்காக எடுத்து வந்த இரண்டு கூடை ஆரஞ்சு பழத்தைத் தவிர, அவனது அனைத்து சாமான்களையும் இழந்தான். பேருந்து ஓட்டுநர் அனுதாபத்துடன் சிறுவனை, பஞ்ச்கணிக்கு அழைத்துச் சென்றார். ஸுலூ, பாபாவை சந்தித்து, தன்னுடைய பணம், உடை, உடைமை அனைத்தையும் இழந்துவிட்டதாக அவரிடம் கூறியபோது, பாபா, "**அனைத்தையும் இழந்துவிடு, ஆனால் என்னை இழக்காதே! அனைத்தையும் இழப்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றது, நீங்கள் அனைத்தையும் இழக்கும்போது - என்னைக் கண்டுகொள்வீர்கள்!**" என்றார்.

மறுநாள் காலையில் பாபா அங்கு வந்த வேளையில் ஸுலூ நீராடிக் கொண்டிருந்தான். குஸ்தாஜி, ஸுலூவை அழைத்ததும், உள்ளாடை தவிர நிர்வாணமாக அப்பாவி போல, பாபாவிடம் சென்றான். "**இரவில் நன்றாகத் தூங்கினாயா? மனதில் என்ன எண்ணங்கள் வந்தன?**" என்று கேட்டு, பாபா அவனை உற்று நோக்கி, "**இந்தப் பாதைக்குப் பொருத்தமாக இருக்கிறாய்!**" என்றார். மூன்று நாட்கள் பாபாவின் நெருங்கிய சகவாசத்தை அளித்து, அவனுக்கு சில அறிவுறுத்தல்களை வழங்கி, பின்னர் அவனை நாக்பூருக்குத் திருப்பி அனுப்பி வைத்தார். இளமையாக இருந்தபோதிலும், ஸுலூ, பாபாவை முழு மனதுடன் நேசித்து, முழு வாழ்வையும் அவருக்கு அர்ப்பணித்தான்.

மெஹர் பாபா ஒவ்வொரு காலையிலும், சில மணி நேரம் பஞ்ச்கணியில் ஏகாந்தவாசம் கடைப்பிடித்து ஆன்மீக பணியில் ஈடுபட்டார். டாக்டர் தேஷ்முக் அவரது மனைவியுடன் ஏப்ரல் 8 அன்று பாபாவைப் பார்க்க வந்து, காலைப் பொழுதை அவருடன் கழித்தார். அடுத்த நாள், டாக்டர் தேஷ்முக் பாபாவைத் தனியாக சந்தித்து, இந்துமதிக்கு எதிராக, "எனது மனைவிக்கு உங்கள் மீது அன்பு இல்லை, பாபா. உங்கள் அருளைப் பொழிந்து அவர் உங்களை நேசிக்குமாறு செய்யுங்கள்!" என்று முறையிட்டார். இது பாபா, நான்கு வழிகளில் பணி புரியும் விதத்தைப் பற்றிய விளக்கத்திற்கு வழிவகுத்தது:

**நான்கு விதமான வழிகளில் நான் பணி புரிகிறேன்:**

1. **பிரபஞ்சத்திற்கான என் உலகளாவிய மனதுடன்;**
2. **தனிநபர்களுக்கான எனது தனிப்பட்ட மனதுடன்;**
3. **நேரடி பணி;**
4. **எனது முகவர்களிடமிருந்து செய்திகளைப் பெற்று, அவர்களுக்குச் செய்திகளை அனுப்பும் போதும் நான் புரியும் மறைமுகப்பணி.**

தனிநபர்களுக்காக மறைமுகமாகப் பணி புரிவது என்பது, நான் எப்பொழுதும் எனது சீடர்கள் மற்றும் பக்தர்களுக்கு அருகில் இருக்கும்போது அவர்களுக்கு மறைமுகமாக உதவுகிறேன். ஒரு நபருக்கு நான் திட்டவட்டமான கட்டளைகளை வழங்குவது நேரடி பணியாகும். சீடர்கள் அவற்றைச் செயல்படுத்தும் போது, அவர்களுக்கு நேரடியாக நான் உதவுகிறேன். நான் திட்டவட்டமான உத்தரவுகளை வழங்கும்போது, நிச்சயமாக உதவுகிறேன்.

உதாரணமாக, நான் உங்களிடம் ஒரு குகையில் அமர்ந்து, எனது பெயரைத் தொடர்ந்து உச்சரிக்க உத்தரவிடுகிறேன் என்று வைத்துக்கொள்வோம். எனது உத்தரவைப் பின்பற்றி, நீங்கள் குகையில் அமர்ந்து கொள்கிறீர்கள். இதற்கிடையில் புலி ஒன்று குகைக்கருகில் வருவதை நீங்கள் பார்க்கிறீர்கள், அதுவும் உங்களைப் பார்க்கிறது, ஆனால் அது உங்களை ஒன்றும் செய்யாது. இது நேரடி உதவி, ஏனெனில் நான் உங்களைக் குகைக்குள் சென்று அமரச் சொன்னேன்.

பாபா, இந்துமதியையும் அழைத்து இருவருக்கும் சில அறிவுறுத்தல்களை வழங்கி, இவ்வாறு கூறினார்:

இப்போது நான் உங்களுக்கு, திட்டவட்டமான வழிமுறைகளை வழங்கியுள்ளேன். இந்த உத்தரவுகளை நீங்கள் எப்பாடுபட்டேனும் கடைப்பிடிக்க வேண்டும். அதனால்தான் உங்கள் இருவரிடமும் "நீங்கள் செய்வீர்களா?" என்று கேட்டதற்கு, உங்கள் வாக்குறுதியை அளித்துள்ளீர்கள். நான் உங்களுக்கு உத்தரவுகளை வழங்கினேன், இப்போது நீங்கள் அவற்றைப் பின்பற்ற வேண்டும். என்னுடன் தங்குவதற்கு நீங்கள் இவ்வளவு தூரத்திலிருந்து வந்துள்ளீர்கள், உங்களை நான் திரும்பிச் செல்லச் சொல்கிறேன் என்று நினைக்காதீர்கள். ஏன் அப்படி நினைக்க வேண்டும்? நான் நிச்சயமாக உங்களுடன் செல்கிறேன். இதை உங்கள் மனதில் மிகத் தெளிவாக வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு நேரடியாக உதவ நான் இப்போது உங்களுடன் இருப்பேன். இது உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப இருக்கும் என்றும் நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். ஆனால் உண்மை என்னவெனில், அது எனது விருப்பத்திற்கு ஏற்பவும் இருக்கும்!

(தேஷ்முக்) நீங்கள் மட்டுமல்ல, உங்கள் மனைவியும் எனது எல்லையற்ற, உருவமற்ற நிலையை அனுபவிக்க வேண்டும். அவர் உங்களைப் போலவே தீவிரமான ஏக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என்றாலும், உங்கள் இருவருக்கும் என்னுடன் கடந்தகால தொடர்புகள் உள்ளன. நீங்கள் இருவரும் எனது உண்மையான நிலையை அனுபவிக்க வேண்டும். கடந்த காலத்தில் அவருக்கு இந்த ஏக்கம் இல்லை என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? அவரிடம் அந்த ஏக்கம் இருந்தது; எனக்கு அது தெரியும்! இதையெல்லாம் நான் முன்னேற்பாடாகச்

**செய்திருக்கிறேன். இப்போது நீங்கள் எனது வழிமுறைகளை முற்றிலுமாக நிறைவேற்ற வேண்டும்.**

பாபா இவ்வாறு கூறி முடித்தார், "**தியானிக்க வேண்டாம், ஆனால் 'நான் பாபாவின் எல்லையற்ற வாழ்வில் ஒன்றாக இருக்க விரும்புகிறேன்' என்ற ஏக்கத்தைக் கொண்டிருங்கள்.**"

1938 ஏப்ரல் 10 அன்று டாக்டர் தேஷ்முக் அவரது மனைவியுடன் பஞ்ச்கணியிலிருந்து திரும்பிச் சென்றார். அதே நாளில் பாபாவின் தரிசனத்திற்காக, ஆதி ஜூனியர் உட்பட பலர் வந்து, மண்டலியுடன் சிறிது நேரம் தங்கியிருந்தனர். மெமோ, ஜால்பாய் இருவரும் பாபாவுடன் பஞ்சகணியில் தங்கியிருந்து 11ஆம் தேதி பூனாவிற்குத் திரும்பிச் சென்றனர். காக்கா, ஆதி சீனியர், பாதிரி, ஸரோஷ், ராம்ஜூ, தத்து மெஹன்தர்கே (DATTU MEHENDARGE) ஆகியோர் மெஹர் மண்டலி பராமரிப்பு அறக்கட்டளையின் குழு கூட்டத்தில் கலந்துகொள்ள வந்தனர். தத்து முன்னாள் மெஹர் ஆஷ்ரம மாணவர். பாபா கேட்டதற்கிணங்க 'ஸரோஷ் சினிமா'வில் பணிபுரிந்து வந்தார். தட்டச்சு மற்றும் கடிதப் போக்குவரத்தில் உதவ, தத்து இப்போது, பஞ்ச்கணியில் தங்க வேண்டும் என்று பாபா விரும்பினார். அதற்குப் பிறகு, தத்து குஷ்ரு குவாட்டர்ஸில் ஆதி சீனியரின் எழுத்தராகப் பணியாற்றினார்.

இங்கிலாந்தில், கிட்டி டேவி ஒவ்வோர் ஆண்டும் ஈஸ்டர் தினத்தன்று தேவாலயத்திற்குச் செல்வது வழக்கம். 1938 ஏப்ரல் 17, ஈஸ்டர் தினத்தன்று, கிட்டி பஞ்ச்கணியில் உள்ள ஒரு தேவாலய சேவைகளில் கலந்து கொள்ள விரும்பினார். கிட்டி, ரானோவிடம் கேட்டபோது தேவாலயத்திற்குச் செல்வதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை என்றும், ஆனால் கிட்டி விரும்பினால் உடன் செல்லத் தயார் என்றும் கூறினார். இருவரும் அன்று மாலை தேவாலயத்திற்கு நடந்து சென்றனர், ஆனால் அதைக் கண்டுகொள்வதில் மிகவும் சிரமப்பட்டனர். இறுதியாக, தேவாலயம் வந்ததும், அது காலியாக இருப்பதைக் கண்டனர், அவர்கள் உள்ளே நுழைந்ததும், பலத்த மழை பெய்யத் தொடங்கியது. மழை அடங்கும் வரை அவர்கள் வெறிச்சோடிய தேவாலயத்திற்குள் தனியாகக் காத்திருந்தனர். மழை நின்றதும் ஏமாற்றத்துடன் மீண்டும் தங்கள் பங்களாவிற்கு நடந்து வந்தனர்.

இதற்கிடையில், அவர்கள் வீட்டில் இல்லாததால், பாபா அவர்களைத் தேடுவதற்காக, எலிஸபெத்தை தனது காரில் அனுப்பினார். அந்தக் கார் சேற்றில் சிக்கி, அதை வெளியே கொணர சில ஆண்களின் உதவி தேவைப்பட்டது. கிட்டி, ரானோ இருவரும் திரும்பி வந்தபோது, அவர்கள் எங்கே சென்றனர் என பாபா கேட்க, "தேவாலயத்திற்கு," என்று கிட்டி பதிலளித்தார். ரானோ மேலும் கூறினார், "எனக்குச் செல்ல விருப்பம் இல்லை, ஆனால் நான் கிட்டிக்குத் துணையாகச் சென்றேன்" என்றார். பாபா கிட்டியிடம், "**நீங்கள் தேவாலயத்திற்குச் செல்வதை மிகவும் விரும்புவதால், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் செல்லுங்கள்!**" என்று கூறினார்.

“நான் இன்று எனது பாடத்தைக் கற்றுக்கொண்டேன்,” என்று கூறி “நான் மீண்டும் மற்றொரு தேவாலயத்தில் எனது கால்களை வைக்க மாட்டேன்!” என்று கிட்டி பதிலளித்தார்.

“**இல்லை, இல்லை,**” என்று பாபா அவரிடம் திரும்பத் திரும்ப, “**நீங்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் செல்ல வேண்டும்! உங்களுக்குத் தேவையான அனைத்தும் அங்கே இருக்கிறது! இங்கே தங்கி என்னுடன் இருப்பதன் மூலம் உங்களுக்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை**” என்றார்.

“என்னை மன்னித்து விடுங்கள், பாபா. நான் இதை ஒருபோதும் செய்ய மாட்டேன்.”

“**என் அனுமதியின்றி செல்வது சரியானதா?**” என்று பாபா கேட்டார்.

இப்போது அழுதுகொண்டே கிட்டி, “இது எனது தரப்பில் ஒரு தவறு. மன்னிக்கவும், தயவுசெய்து என்னை மன்னிக்கவும்” என்று கெஞ்சினார். பாபா அவரை மன்னித்து, அன்புடன் தழுவி முத்தம் கொடுத்தது, அவர் கண்டித்ததால் ஏற்பட்ட வலியைப் போக்கிவிட்டது.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், ரானோ, கிட்டி இருவரும் மிகுந்த மனச்சோர்வுடன் காணப்பட்டனர். பாபா பஞ்ச்கணியில் மஸ்த் மற்றும் பிற வேலைகளில் மும்முரமாக இருந்ததால், பாபாவைப் பார்க்கவே முடியாத மன வருத்தத்தில் இருந்தனர். ஒரு நாள் பாபா பெண்மணிகளிடம் வந்து அவர்களின் மனதில் இருப்பதை எடுத்துரைக்குமாறு கேட்டுக்கொண்டார். ரானோ, கிட்டி இருவரும் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினர். அவர்களை ஆறுதல்படுத்த, பாபா, “**நான் அவ்வப்போது உங்களிடமிருந்து உடல் ரீதியாக என்னை விலக்கிக் கொள்ளாவிட்டால், நீங்கள் என்னை இங்கே** (இதயத்தைச் சுட்டிக்காட்டி) **உணர மாட்டீர்கள், நான் இருப்பதை நீங்கள் உணர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்**” என்று கூறினார்.

புதிய ஆசிரமம் அமைக்க சாத்தியமான இடங்களைப் பார்ப்பதற்காக, மெஹர் பாபா ஏப்ரல் 19 அன்று எலிஸபெத்துடன் ஸத்தாரா (SATARA) நகருக்குச் சென்றார். அர்னவாஸ், நர்கிஸ் இருவரும் மும்பையிலிருந்து 21 அன்று வந்து ‘தில்குஷா’வில் (DILKHUSHA) இதர பெண்மணிகளுடன் தங்கத் தொடங்கினர். அர்னவாஸ் உடல்நிலை சரியில்லாமல் ஒரு வாரத்திற்குப் பிறகு மும்பைக்குத் திரும்பிச் சென்றார்.

முன்னதாக, 1930ஆம் ஆண்டில் லாஹூரிலிருந்து அமிர்தஸரஸ் (LAHORE TO AMRITSAR) வரை ரயிலில் பயணித்தபோது, பாபாவும் மண்டலியும் விரக்தியுடன் காணப்பட்ட சக பயணி ஒருவருடன் உரையாடலைத் தொடங்கினர். எவ்வாறாயினும், அவர்களின் உரையாடலுக்குப் பின்னர், அந்த நபர் பாபாவின் அறிவுரைக்கு மனமார நன்றி தெரிவித்தார். அந்த நபர் வேறு எவருமல்ல, பிரபல இந்திய கவிஞரும் தத்துவஞானியுமான முஹமது இக்பால் (MUHAMMAD IQBAL). சுதந்திரத்திற்கு முந்தைய முஸ்லிம்

புத்திஜீவிகளிடையே இக்பால் ஓர் உயர்ந்த மனிதராக இருந்தார், ஆகவே, ராம்ஜூ, டாக்டர் கனி இருவரும் 1938 ஏப்ரல் 21 அன்று தனது 61 வயதில் இக்பால் காலமான செய்தியைக் கேட்டு, மிக்க சோகத்துடன் காணப்பட்டனர்.

அடுத்த நாள், அவர்கள் பஞ்ச்கணியில் பாபாவை சந்திக்க இருந்தனர், ஆனால் அவர்கள் விவாதிக்க இருந்த இதர விஷயங்களில் மிகவும் ஆர்வமாக இருந்ததால், அவர்கள் வந்த வேளையில் இக்பாலின் மறைவை முற்றிலும் மறந்துவிட்டனர். ஆனால், பாபா, அவரது தலையில் ஒரு மயிரிழையைச் சுட்டிக்காட்டி, எழுத்துப்பலகை மூலம் தெரிவித்த முதல் விஷயம், "**மேரா இக் பால் கயா**" (MERA IQ BAL GAYA) என்ற உருது சொற்கள், அதாவது "**நான் எனது தலைமுடியில் ஒன்றை இழந்துவிட்டேன்**" என்று நயம்படக் கூறினார். சில கணங்களுக்கு ராம்ஜூ, டாக்டர் கனி இருவரும் பாபா கூறியதைப் புரிந்துகொள்ள முடியாமல் திண்டாடினர்; பாபா தான் கூறியதை மீண்டும் மீண்டும் எடுத்துரைத்து, "**உங்களுக்குப் புரியவில்லையா?**" என்று கேட்டபோதுதான், '**இக்பால்**', '**இக் பால்**' (ஒரு முடி) என்ற ஒலி இயைபுடைய சொற்களை பாபா பயன்படுத்துவதை அவர்கள் கண்டுகொண்டனர். பாபா அந்த வார்த்தைகளில் அவரது 'இழப்புணர்வை' வெளிப்படுத்தியிருந்தார், ஆனால் ஒரு முடி உதிர்ந்து விட்டதோடு ஒப்பிடுவதன் மூலம் அதன் முக்கியத்துவத்தை இனிமையாக வெளிப்படுத்தினார்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, பெங்களூரில் மையம் ஒன்றை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து திவான், ஸர் மிர்ஸா இஸ்மாயில் என்பவருடன் கலந்துரையாட சாஞ்சி, பெண்டு இருவரையும் ஏப்ரல் 15 அன்று பாபா பெங்களூரு, மைசூர் மற்றும் மதராஸுக்கு அனுப்பி வைத்தார். ஸர் மிர்ஸாவை சந்தித்த பின்னர், இருவரும் 22ஆம் நாள் பஞ்ச்கணிக்குத் திரும்பி வந்தனர். அவர்களின் அறிக்கையைக் கேட்ட பாபா, இஸ்மாயிலுடன் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடவும், சாத்தியமான இடங்களை ஆய்வு செய்யவும் தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார். மெஹர் பாபா, மறுநாள் பிற்பகல் எலிஸபெத்தின் காரில் நோரினா, சாஞ்சி, பெண்டு ஆகியோருடன் பஞ்ச்கணியிலிருந்து புறப்பட்டு, பூனா வழியாக ரயிலில் 1938, ஏப்ரல் 24 அன்று பெங்களூருக்கு வந்தார். அவர்கள் ரயிலிலிருந்து இறங்கும்போது, இயற்கை, கொட்டும் மழையுடன் பாபாவை வரவேற்றது என்பதைக் காலம் கவனித்தது.

மெஹர் பாபாவும் குழுவும் ஷங்கரபுரத்தில் (SHANKARAPURAM) அமைந்த சம்பத் ஐயங்காரின் இல்லத்தில் தங்கியிருந்தனர். மறுநாள் நோரினா, சாஞ்சி இருவரும் ஸர் மிர்ஸாவை சந்திக்கச் சென்ற போது அவர் இருவரையும் அன்புடன் வரவேற்றார். பாபாவுடனான நோரினாவின் அனுபவங்களில் அவர் மிகவும் ஆர்வம் காட்டினார். அவர்கள் திரும்பி வந்த பின்பு, பாபா 'கப்பன்' ஹவுஸுக்கு (CUBBON HOUSE - ஓர் அரண்மனை குடியிருப்பு) ஸர் & லேடி அக்பர்

ஹைதரியைப் பார்க்கச் சென்றார். ஸர் ஹைதரி, காந்தியைப் பற்றி கேட்டபோது, பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**காந்தி, ஜின்னா இருவரும் சிறந்த ஆத்மாக்கள், ஆனால் அவர்கள் முடிவுகளை நோக்கிக் குறியாக இருப்பதால் கவலைப்படுகிறார்கள். ஒருவர் தனது கடமைகளை நேர்மையாகச் செய்ய முயற்சிக்க வேண்டும், ஆனால் முடிவுகளை எப்பொழுதும் கடவுளிடம் விட்டுவிட வேண்டும். முடிவுகளைப் பற்றி கவலைப்படுவது நல்லதல்ல; அதில் எந்த பயனுமில்லை. ஒருவர் பிறருக்காக எதையும் செய்ய விரும்பினால், அதை உண்மையாகச் செய்ய வேண்டும், அதைச் செய்த பின்பு, முடிவுகளைப் பற்றி கவலைப்படக்கூடாது. முடிவுகள் மனிதனின் கைகளில் இல்லை. ஒன்றைச் செய்ய வேண்டியது மனிதர்களின் கடமை, ஆனால் அதன் முடிவை கடவுள் நிர்ணயிக்க வேண்டும்.**

**இது கடினம் அல்ல, ஆனால் மக்கள் முயற்சிப்பது இல்லை. முடிவுகளைப் பற்றி சிந்திப்பது மனித இயல்பு என்பதால், அவற்றைப் பற்றி ஒருவர் கவலைப்பட வேண்டும் என்று அர்த்தமல்ல. ஒருவர் அதைப்பற்றி நினைக்கலாம், ஆனால் கவலைப்படக்கூடாது.**

**உங்கள் எல்லா செயல்களையும் கடவுளுக்கு அர்ப்பணிக்க முயற்சி செய்யுங்கள். முடிவுகள் அவருடையதாக இருக்கட்டும். காந்தி கடவுளுக்காக எல்லாவற்றையும் செய்கிறார் என்று கூறுகிறார், ஆனால் முடிவுகளைக் காண்பதில் அக்கறை இருப்பதால் அவர் கவலைப்படுகிறார்.**

ஏப்ரல் 27 அன்று, சாஞ்சி தெற்கு நோக்கி மதராஸுக்கு அனுப்பப்பட்டார், அதே நேரத்தில் பாபா, நோரினா, பெண்டு மூவரும் பெங்களூரிலிருந்து புறப்பட்டு, மறுநாள் மாலை பஞ்ச்கணிக்கு வந்தனர். ஏப்ரல் 29ஆம் நாள் சாஞ்சி திரும்பி வந்ததும், பாபா உடனடியாக அவரை மைசூர் மற்றும் பெங்களூருக்கு மூன்றாவது முறையாகத் திருப்பி அனுப்பி வைத்தார்! மெஹர் பாபா, அவரது திட்டமிட்ட நடவடிக்கையை அடுத்த ஆண்டு மார்ச் வரை ஒத்திவைக்க முடிவு செய்திருந்தார்; மேலும் இது குறித்து ஸர் மிர்ஸாவிற்கு நேரில் தெரிவிக்க, சாஞ்சியை அனுப்பி வைத்தார்.

பெங்களூரிலிருந்து பாபா நாக்பூருக்குத் தொலைத்தந்தி ஒன்றை அனுப்பி, பஞ்ச்கணியில் சந்திக்குமாறு எரச் ஜெஸவாலாவிற்கு அறிவுறுத்தினார். பாபாவின் தந்தி வந்த வேளையில் எரச்சின் தந்தை பப்பா ஜெஸவாலா அலுவலகம் தொடர்பான பயணத்தில் இருந்ததால், எரச்சின் தாயார் கெய்மாய் அவரை உடனடியாகப் புறப்படுமாறு கூறினார். அந்த நேரத்தில் தோட்ட வேலையில் மும்முரமாக இருந்த எரச், 'மறுநாள் காலையில் செல்கிறேன்' என்று சாதாரணமாக பதிலளித்தார். ஆனால் கெய்மாய், "பாபா உடனடியாக உங்களை எதிர்பார்க்கிறார்! உடனடியாக என்றால் நாளை என்று அர்த்தமா?" இந்த உரையாடல் நிகழும்போது, பாபாவிடமிருந்து இரண்டாவது

தொலைத்தந்தி வந்தது, அதில் பஞ்ச்கணிக்கு உடனடியாகப் புறப்பட்டு வரும்படி அறிவுறுத்தப்பட்டிருந்தது!

கெய்மாய், "நான் உங்களைப் போகச் சொன்னேன், ஆனால் கேட்கவில்லை. இப்போது உடனடியாகச் செல்லுங்கள்!" என்றார்.

எரச் தனது தாயாரை வருத்தப்படுத்த விரும்பவில்லை, எனவே உடனடியாக, ரயில் நிலையத்திற்குப் புறப்பட்டு, மறுநாள், 1938 ஏப்ரல் 29 அன்று ஜால் கேரவாலாவுடன் பஞ்ச்கணிக்கு வந்தார். பாபா, அவர்களை எதிர்நோக்கிக் காத்திருந்தார். அவர் எரச்சைப் பார்த்ததில் மிக்க மகிழ்ச்சியடைந்து, "**நீங்கள் அழைத்ததும் வந்துவிட்டீர்கள்**!" என்றார்.

"உடனடியாக என்னை வரச் சொன்னீர்கள், நானும் அவ்வாறே செய்தேன்" என்றார் எரச்.

பாபா, அவரது குடும்பத்தைப் பற்றி விசாரித்து, பின்பு மண்டலி அனைவரையும் அறையிலிருந்து சற்று நகருமாறு சைகையால் தெரிவித்து, பாபா அவரது எழுத்துப்பலகை மூலமாக எரச்சுடன் தனிப்பட்ட முறையில் உரையாடினார். எரச் எந்த சிரமமுமின்றி எழுத்துப்பலகையைப் படிக்க முடிந்தது, இது பயிற்சி இல்லாத ஒருவருக்கு ஆச்சரியமான விஷயம். பாபா உடனே, "**உலகமும் அதன் விவகாரங்கள் அனைத்தும் மாயை. கடவுள் ஒருவரே உண்மையானவர். கடவுள் மட்டுமே உளதாயிருக்கிறார், இதர அனைத்தும் நிலையற்றவை**!" என எடுத்துரைத்தார்.

மெஹர் பாபா தொடர்ந்து கூறினார், "**உலகில் நிலைமைகள் மோசமான நிலையிலிருந்து இன்னும் மோசமாகி வருகின்றன; போர் வருவது நிச்சயம். எல்லாம் குழப்ப நிலையில் இருக்கும், லட்சக்கணக்கானவர்கள் உயிரை இழந்து விடுவார்கள். இது மனிதகுலத்திற்கு இடையிலான வெறுப்பு மற்றும் விரோதத்தால் ஏற்படுவது அல்ல, ஆனால் மூல காரணமாக இருப்பது 'நான்' எனும் அகந்தை. இதுவெல்லாம் ஒரு தெய்வீக விளையாட்டு**!"

அப்போது பாபா, "**உங்கள் திட்டங்கள் என்ன**?" என்று கேட்டார்.

பொறியியல் படிப்பதற்காக, பெனாரஸ் பல்கலைக்கழகத்திற்குத் தனது விண்ணப்பத்தை அனுப்பியதாக எரச் கூறினார்.

திடீரென, பாபா இந்தக் கேள்வியை எழுப்பினார், "**உங்கள் படிப்பு, உங்கள் நண்பர்கள், உங்கள் சொத்து, உங்கள் குடும்பம் - எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னுடன் வந்து தங்குமாறு, நான் உங்களிடம் கேட்டுக்கொண்டால், உங்கள் பதில் என்னவாக இருக்கும்**?"

"உங்கள் அருளால், எதுவும் சாத்தியமாகும்" என்று எரச் பதிலளித்தார்.

பாபா மகிழ்ச்சி பொங்க புன்னகைத்து, "**நல்லது. ஆகஸ்ட் 1ஆம் நாள் வாருங்கள்**" என்றதும், எரச் '**சரி**' என்று தலையசைத்தார்; பாபா அவரைத் திரும்பிச் செல்லுமாறு கூறினார். பாபாவை அடிபணிந்து, வணங்கி விடைபெற்று புறப்பட்டபோது, பாபா கைகளைத் தட்டி அவரைத் திரும்ப அழைத்து, "**உங்கள்**

**முழுக் குடும்பமும் எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னிடம் வருவது சாத்தியமா?**" என்று பாபா கேட்டார்.

எரச் அதே பதிலைக் கொடுத்தார்: "உங்கள் அருளால், எதுவும் சாத்தியமாகும்."

பாபா உடனே, "**இது சாத்தியமா என்று உங்கள் தந்தையிடம் கேட்டு, எனக்கு ஒரு கடிதம் எழுதுங்கள். அவர் ஒப்புக்கொண்டால், எல்லாவற்றையும் விட்டுவிட்டு, உங்கள் தந்தை, தாயார், சகோதரிகள் மற்றும் சகோதரரை இந்த ஆண்டு ஆகஸ்ட் 1ஆம் தேதி மெஹராபாத்திற்கு அழைத்து வாருங்கள்**" என்றார்.

அந்த நேரத்தில், எரச்சிற்கு அவர் ஏன் இந்த வாக்குறுதியை வழங்கினார், அல்லது அவர் அதை எவ்வாறு நிறைவேற்ற முடியும் மற்றும் குடும்பத்தின் உடைமைகளை இவ்வளவு குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்வது எப்படி என்று தெரியவில்லை. அவர்களது வீடு, அவர்களின் சொத்து, அவரது சகோதரிகளின் திருமணங்கள், தம்பி மெஹர்வானின் பள்ளிப்படிப்பு - மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக, அவரது தந்தையின் அனுமதி பற்றிய கேள்வியும் மனதில் அலையாகப் பாய்ந்தது.

மெஹர் பாபா, "**நான் ஆதிகால புருஷன். உங்கள் முடிவு நீங்கள் அறிந்ததைவிட எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. என்னவானாலும் நீங்கள் உங்கள் முடிவில் உறுதியாக இருக்க வேண்டும்!**" என்றார்.

அப்போது பாபா கேட்டார், "**ஒரு புலியை அதன் காதுகளைப் பற்றிக்கொண்டு வழிநடத்தச் சொன்னால், நீங்கள் பயப்படுவீர்களா?**"

"நீங்கள் கூறுவதானால், நான் ஒரு புலியை சந்திக்க நேர்ந்தால், நிச்சயமாக நீங்கள் சொல்வது போலச் செய்வேன்" என்று எரச் பதிலளித்தார்.

பாபா ஒளிரும் புன்னகையுடன், "**அதற்கு பதிலாக, நீங்கள், உங்கள் இரவு உணவை உண்டு, 'டைகர் வேலி'யில் அமைந்த எனது குகையில் இன்றைய இரவைக் கழிக்கவும். ஏதேனும் புலி, குகைக்கு வந்தால், அஞ்ச வேண்டாம். காலையில், என்னை சந்திக்காமல் நேரடியாக நாக்பூருக்குப் புறப்படுங்கள், ஆகஸ்ட் 1ஆம் நாள் உங்கள் குடும்பத்தினருடன் மெஹராபாத்திற்கு வாருங்கள்.**"

குகையில் இரவைக் கழித்த பின்னர், எரச் நாக்பூருக்குப் புறப்பட்டார். என்ன நடந்தது என்பதை அவர் குடும்பத்தினரிடம் சொன்னபோது, அவர்கள் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். குறிப்பாக, கெய்மாய் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார், ஏனெனில் அவர் பல வருடங்களாக இந்த வாய்ப்பை எதிர்நோக்கி இருந்தார். அவர், "நாம் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள், மெஹர் பாபா, அவதார புருஷர் - அவராகவே நம்மை அழைக்கிறார்!" என்றார்.

பப்பா ஜெஸவாலா பொறிபறக்கும் சினம் படைத்த மனநிலையைக் கொண்டிருந்ததால் (உண்மையில், பாபாவின் கை சைகையில் அவர் ஒரு துப்பாக்கியை கையில் ஏந்தி சுடுவது போலக் காட்டி 'பிஸ்டல்' (PISTOL) என்று

குறிப்பிட்டார்), எரச், தந்தை இணக்கம் தெரிவிப்பதில் சந்தேகம் கொண்டிருந்தார்.

ஆனால் பாபாவின் கட்டளையை, பப்பாவிடம் கூறியபோது, அவர் தனது கைகளை விரித்து, தனது குடும்பத்தினரிடம், "நான் உழைத்து, இந்த சொத்தை உங்களுக்காகக் கட்டியெழுப்பினேன். இவை அனைத்தும் உங்கள் வசதியான வாழ்விற்கும், மகிழ்ச்சிக்கும்தான். பாபாவுடன் இருப்பதில் மகிழ்ச்சி இருந்தால், எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால் இதையெல்லாம் விற்கும் பொறுப்பை என் மீது வீச வேண்டாம். நீங்கள் உண்மையிலேயே செல்ல விரும்பினால் நீங்கள் அனைவரும் அதில் கலந்து கொள்ளுங்கள்." பாபாவின் அறிவுறுத்தல்களின்படி, அடுத்த சில மாதங்கள், எரச்சும் அவரது தாயும் சகோதரிகளும் தங்கள் காரைத் தவிர இதர அனைத்து உடைமைகளையும் விற்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். (அவசரமாக விற்க முயன்றதால் மிகக் குறைவான பணமே வந்தது). சமூகம் அவர்களை ஏளனம் செய்து அவர்களின் முடிவை எதிர்த்தது, ஆனால் ஜெஸவாலா குடும்பத்தினர் தங்கள் தீர்மானத்தில் உறுதியாக இருந்தனர்.

இதற்கிடையில், ஸவக் கொத்வால் அவரது மனைவி நர்கிஸ், குழந்தைகள் நாஜூ (NAJOO), ஆதி (ADI), ஹில்லா (HILLA), தெஹ்மி (TEHMI - ஆதி சீனியரின் சகோதரி பிரோஜாவின் மகள்) ஆகியோருடன், கோடை விடுமுறையை, பாபாவுடன் பஞ்ச்கணியில் கழிக்க அழைக்கப்பட்டனர். அவர்கள் 1938, ஏப்ரல் 28ஆம் நாள் பஞ்ச்கணி வந்தனர். பாபா, எலிஸபெத்துடன் காரில், ஏப்ரல் 30 அன்று மெஹராபாத்திற்கு விரைவு பயணம் ஒன்றை மேற்கொண்டு, ஆதி சீனியர், ராம்ஜூ இருவருடன் பெங்களூரு திட்டங்களைப் பற்றி விவாதித்தப் பின்பு, மே 3ஆம் நாள் பஞ்ச்கணிக்குத் திரும்பி வந்தார். நௌரோஜி தாதாசாஞ்சியும் பாபாவை மெஹராபாத்தில் சந்தித்தார். மே 5ஆம் நாள் சாஞ்சி மும்பையிலிருந்து பஞ்ச்கணிக்கு வந்தார்.

பஞ்ச்கணி 'டைகர் வேலி' குகையில் ஓர் இரவைக் கழித்தவர் எரச் மட்டுமல்ல; சில மாதங்களுக்கு முன்னர், எலிஸபெத், பாபாவிடம் அந்தக் குகையில் ஓர் இரவைக் கழிக்கும் ஆர்வத்தைத் தெரிவித்தபோது, பாபா, **"நீங்கள் அங்கே இருக்கலாம், ஆனால் நான் சொல்லும் வேளையில் மட்டுமே"** என்று பதிலளித்தார். சில வாரங்களுக்குப் பின்னர், எலிஸபெத் பாபாவை நினைவுபடுத்தினார்; பாபா புன்னகைத்து, **"நீங்கள் இப்போது செல்ல விரும்புகிறீர்களா, அல்லது சரியான நேரம் வரும்வரை காத்திருக்கிறீர்களா?"** என்று கேட்டார்.

அடுத்த சில நாட்களில், 1938 மே 6 அன்று பாபாவும் பெண் மண்டலியும் எலிஸபெத்துடன் குகைக்குச் சென்று, அங்கு 12 மணி நேரம் இருக்குமாறு அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. எலிஸபெத்தின் நாட்குறிப்பில் அவர் குறிப்பிட்டிருந்தது பின்வருமாறு:

சரியாக மாலை 6:00 மணிக்கு பாபா, என்னை குகைக்குள்ளே அமரச் செய்து, வெளி வாசலைப் பூட்டி, திறவுகோலை என்னிடம் கொடுத்தார். கடைசியாக எனது நினைவில் பதிந்தது - எல்லோரும் என்னை இரவில் தனியாக விட்டுச் செல்வதற்கு முன்பு, பாபா அவரது கையை இரும்புக் கம்பிகள் வழியாக உள்ளே நீட்டி எனது தலையைத் தொட்டது, என்னை ஆசீர்வதித்தது போலத் தோன்றியது. அனைவரும் பாதையின் வளைவைச் சுற்றி மறைந்துவிட்ட அந்தத் தருணத்தில், ஆழ்ந்த அமைதி நிலவியது. பல எண்ணங்கள் விரைவாக என் மனதைக் கடந்து சென்றன, ஆனால் பாபா அறிவுறுத்தியதற்கு இணங்க நான் இரவு முழுவதும், கவனம் செலுத்தி, மனதைக் கட்டுப்படுத்த வேண்டும்; மேலும் நான் கண்களைத் திறந்து வைத்துக் கொள்ள முடியாதவரைத் தூங்கக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டது.

பாபா கூறியபடி, சரியாக மாலை ஏழு மணிக்குப் பத்து நிமிடத்திற்கு முன்பு, விளக்கு ஒன்றை ஏற்றி, படுக்கையில் சாய்ந்து கொண்டேன்.

ஒருமுறை, நான் வெளிப் பாதையில் 'தொப்' என்ற நடை சத்தம் குகையை நோக்கி நெருங்கி வருவதைக் கேட்டு, எவரேனும் வரக்கூடும் என ஆவலுடன் காத்திருந்தேன். ஆனால், அந்த அரவம் சற்று நேரத்தில் மறைந்தது; நெருங்கியிருந்தாலும், அநேகமாக மாடு அல்லது எருமை, மலைப்பகுதியில் மேய்ந்துகொண்டு இருந்திருக்கும். நான்கு நட்சத்திரங்கள், இதர நட்சத்திரங்களிலிருந்து தனியாக, தெற்கு திசையில் தோன்றும் சிலுவையின் வடிவத்தில் பட்டம் பறக்கவிட்டதைப் போல, வானில் தெளிவாகத் தென்பட்டது. எனது கைக்கடிகாரத்தைப் பார்த்தபோது, நள்ளிரவு வெகு தொலைவில் இல்லை என்பதை உணர்ந்தேன். விழித்திருக்கத் தீர்மானித்த நான், பாபாவைப் பற்றியே தொடர்ந்து சிந்தனை செய்தேன்.

அதிர்ச்சியூட்டும் விதத்தில், சற்றும் எதிர்பாராமல், தலையிலிருந்து பாதம் வரை, முதுகெலும்பு வழியாக மின்சாரம் பாய்வதைத் தெளிவாக உணர்ந்தேன். இது மாறுபட்ட அலைவரிசைகளில் தொடர்ந்தது, மேலும் இரண்டு அல்லது மூன்று மடங்கு வலுவுற்றதாக மாறி, அது என்னைக் காற்றால் அடித்து தூக்குவது போலத் தோன்றியது. விரைவில் நான் விண்வெளியில் படுக்கையின் மேல் அசைவது போல் உணர்ந்தேன்; அது ஒரு மந்திர ஜால கம்பளமாக இருந்திருந்தால் நான் பாதுகாப்பாகக் கொண்டு செல்லப்படுவேன் என்றும் உணர்ந்தேன். ஆனால் அது என்னை மிகவும் உலுக்கி எடுத்தது, உடனடியாக நான் பாபாவின் பெயரை எனது நாவால் உச்சரித்தது என் நினைவில் உள்ளது; மிகவும் பதற்றமான நிலையில் காணப்பட்டேன். அந்தத் திகைப்பூட்டும் அனுபவத்திலிருந்து வெளியே வந்தபோது, எனது கரங்கள் உயிர்துறந்த பலரின் கரங்களோடு இணைந்து என்னைப் பற்றிக்கொண்டிருப்பதைக் கண்டேன். உணர்வற்ற நிலையில் அந்த உடல்கள் இருந்ததால், நகர்த்துவதற்கு சிறிது நேரம் பிடித்தது. நான் கடந்து வந்த நிலை எதுவாக இருந்தாலும், எனக்கு உணர்வு வந்ததும் நான் மயக்கமானேன். . .

மகிழ்ச்சியான குரல்களின் ஒலியால் ஈர்க்கப்பட்டபோது, அதை நான் எனது நண்பர்களின் குரல் என்பதை உணர்ந்தேன்; திடீரென அவர்கள் குகைக்குள் தோன்றி, நேரம் சரியாக காலை ஐந்து மணி, என்னை அழைத்துச் செல்ல வந்ததாகத் தெரிவித்தனர். காலை ஆறு மணி வரை, குகையை விட்டு வெளியேற வேண்டாம் என்று பாபா சொன்னது எனக்கு நினைவிருந்தது. இது ஏதோ முரண்பாடாகத் தெரிந்தது. நான் என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்த வேளையில், பாபா என்னிடம் சொன்னதை அப்படியே செய்வதுதான் முறை என்ற எண்ணம் எனக்குள் வந்தது. அந்த நேரத்தில், பாபா நுழைவாயிலில் ஒளிரும் முகத்துடன் தோன்றியதும், வெளிச்சம் குகையை அசாதாரணமான பிரகாசத்துடன் நிரப்பியது. அவர் புன்னகைத்து எனது கேள்விக்கு பதிலளித்தார், "**நான் சொன்னபடிச் செய்யுங்கள்; ஆறு மணிக்கு வெளியே வாருங்கள்**." சிறிது நேரத்தில், எனது கண்களைத் திறந்து கைக்கடிகாரத்தைப் பார்த்தபோது, அது ஆறு மணியை நெருங்குவதைக் கண்டேன்; குகையை விட்டு வெளியேற எழுந்த நான் புத்துணர்ச்சியுடன் உற்சாகமாக உணர்ந்தேன்; பகல் வெளிச்சம் அதன் கீற்றுகளைக் குகைக்குள் ஊடுருவச் செய்தது.

பங்களாவிற்குத் திரும்பி வந்ததும், பாபாவிடம், "நான் கண்டது கனவா?" என்று கேட்டதற்கு, பாபா பதிலளித்தார், "**இல்லை, இது விழிப்பு, தூக்கம் இரண்டிற்கும் இடையிலான ஒரு திகைப்பூட்டும் மயக்க நிலை. நீங்கள் உண்மையில் இந்த சம்பவங்களை உடல் ரீதியாக அனுபவித்தீர்கள்**." அப்போது, நான் பாபாவிடம் விசாரித்தேன், "இது எதையாவது குறியீட்டுக் காட்டுகிறதா?" "**ஆம்" என்று பதிலளித்தார் பாபா. "எதிர்காலத்தில் அதன் முழு அர்த்தத்தையும் நீங்கள் விரிவாக அறிந்து கொள்வீர்கள்**" என்றார்.

பஞ்ச்கணியில் நாஜாவின் உடல்நிலை சரியாக இல்லாததால், கிட்டி சமையல் செய்து கொண்டிருந்தார். எந்த உணவையும் மிச்சப்படுத்தவோ அல்லது வீணடிக்கவோ கூடாது என்ற பாபாவின் கடுமையான அறிவுறுத்தல்களில் கவனமாக இருந்தார். ஆனால் சில சமயங்களில், ஏதோ ஒன்று மிஞ்சிவிடும், ஏனெனில் கிட்டி, பலருக்கு ஒரே நேரத்தில் சமையல் செய்து பழக்கமில்லை. பருப்பு மீதமிருந்தால் அதை அவரே அருந்திவிடுவதும், காய்கறி அன்றைய தினம் அதிகப்படியாக இருந்தால், தானே உண்டு விடுவதையும் வழக்கமாகக் கொண்டார். ஒரு சிறப்பான ஆங்கில பெண்மணி, குருநாதரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் ஒரே எண்ணத்தில், இத்தகைய சூழ்நிலைகளை சந்திப்பது ஆச்சரியமூட்டுவது மட்டுமல்லாமல், பாபாவின் உத்தரவுகளை நிறைவேற்றும் தீவிர விருப்பத்திற்கான சான்றாகும்.

ஞாயிற்றுக்கிழமைகளில், பெண்கள் மௌனம் காத்து, பிற்பகல் மூன்று மணிக்கு ஒரு வேளை உணவை - ரொட்டி, வெண்ணெய், தேநீர் - மட்டுமே உண்ண வேண்டும் என்ற அறிவுறுத்தல்களை பாபா பெண்களுக்கு வழங்கியிருந்தார். கிட்டி இந்த எளிய உணவை வழங்கினார். ஆசிரமத்திற்கான

இடங்களைப் பார்வையிட பாபா பெங்களூருக்குச் சென்றபோது, குழுவில் சிலர் கிட்டியை அணுகி, ரொட்டிக்கு பதிலாக, சிற்றுண்டியை விரும்ப, கிட்டியும் அதற்கு ஒப்புக்கொண்டார். தொடர்ந்து அடுத்த ஞாயிற்றுக்கிழமை, இன்னும் சிலர் இதை விரும்பி கேட்டனர்.

பாபா மெஹராபாத் திரும்பி வந்தபோது, அவரது உத்தரவை மீறியதைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஒரு மாதத்திற்குப் பிறகுதான் மெஹராபாத்தில், ஒரு நாள் அதிகாலையில் பாபா அனைவரையும் அழைத்து ஆரஞ்சு பழங்களை விநியோகித்த போது, **"கிட்டி என்னை மகிழ்விப்பதை விட பிறரை மகிழ்விப்பதில் ஆர்வமாக இருக்கிறார்!"** என்று கூறி, பஞ்ச்கணியில் நடந்த சம்பவத்தை எடுத்துரைத்தார். மேலும் கிட்டி தன்னைப் பாதுகாத்துக் கொள்ள எடுத்த முயற்சி வீணாயிற்று! இறுதியாக, மிகவும் வருத்தப்பட்டு, அவர் கையிலிருந்த ஆரஞ்சு பழத்தை அறையில் வீசியது, நல்ல வேளை, பாபாவைத் தாக்காமல் அருகில் விழுந்தது. கிட்டி, செய்த தவறை உணர்ந்து, பின்னர் ஒப்புக்கொண்டார்.

மெஹர் பாபா, கிட்டியிடம் சுட்டிக்காட்டினார், **"பிறரை மகிழ்விக்க, நீங்கள் என் உத்தரவை மீறிவிட்டீர்கள்! ஆனால் நீங்கள் பிறரை மகிழ்வித்து, என்னை வருந்த செய்வதன் மூலம், ஒன்றையும் அடையப் பெறமாட்டீர்கள். என்னை மகிழ்விக்க மட்டுமே முயற்சி செய்யுங்கள், அவ்வாறு செய்யும்போது, நீங்கள் உலகம் முழுவதையும் அதிருப்தியடையச் செய்தாலும், அனைத்தையும் அடைவீர்கள்!**

**"நீங்கள் பிறரின் இன்பத்தில் கவனத்துடன் இருக்கும் அதே வேளையில், என் அறிவுறுத்தல்களைப் புறக்கணிக்கிறீர்கள்! என்னை மகிழ்விக்க மட்டுமே முயற்சி செய்யுங்கள், அவ்வாறு செய்வதன் மூலம் பிறர் அதிருப்தி அடைந்தாலும், அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம்."**

'**வாதிட வேண்டாம்**' என்று பாபா அடிக்கடி ரானோவை எச்சரிப்பதுண்டு. அவர் எதையேனும் விளக்க முயன்றாலும், "**வாதிடாதீர்கள்!**" என்று முடிப்பதற்கு முன்னே தடுத்து விடுவதும் உண்டு.

ஒரு நாள், எதிர்பாராமல் நடந்த சம்பவம் ஒன்றில், பாபா, ரானோவை கூர்மையாக உற்றுநோக்கி, "**வாதிடாதீர்கள்!**" என்று அவர் உதடுகளை மூடிவிடுமாறு சைகையால் தெரிவித்தார்.

அதற்கு ரானோ, "ஆனால் நான் வாதிடவில்லை, பாபா. நான் அதை உங்களுக்கு விளக்குகிறேன்" என்றார்.

இது பாபாவை இன்னும் வருத்தமடையச் செய்தது. மனமுடைந்து போன ரானோ, "நீங்கள் எப்பொழுதும் என்னுடன் அதிருப்தி அடைவதால் நான் உங்களுடன் இருப்பதில் எந்த பயனும் இல்லை" என்று கடுமையாக முறையிட்டார்.

அதற்கு, **"நான் உங்களை விடமாட்டேன், உங்களை ஒருபோதும் விடமாட்டேன்!"** என்று கூறிய பாபா, ரானோவை ஒருபோதும் அங்கிருந்து

செல்ல அனுமதிக்கவில்லை. அனைத்து மேற்கத்திய பெண்களிலும், ரானோவை மட்டுமே வாழ்நாள் முழுவதும் பாபா, இந்தியாவில் தங்க அனுமதித்தார் - ஆனால் வாழ்க்கை ஒருபோதும் எளிதானதாக இருந்ததில்லை.

மெஹர் பாபா விரும்பிய வண்ணம் மையத்தை நிறுவுவது குறித்து, பஞ்ச்கணியில் விவாதங்கள் தொடர்ந்தன. மைசூர் மற்றும் பெங்களூருக்குச் சென்ற நோரினா, ஒரு விரிவான 'உலகளாவிய ஆன்மீக மையம்' நிறுவப்பட வேண்டும் என்று விரும்பினார். ஒரு நாள், மைசூர், பெங்களூர், ஹைதராபாத் அல்லது பஞ்ச்கணி போன்ற இடங்களுக்கு இடம்பெயர்வதற்கான சாத்தியம் குறித்து, எலிஸபெத்துடன் பேசிக் கொண்டிருந்தார். நோரினாவின் பிரம்மாண்டமான கற்பனைத்திறன் எலிஸபெத்தின் நடைமுறை இயல்புத்தன்மையோடு இணைந்து போவதாக இல்லை. எலிஸபெத் நோரினாவின் திட்டங்களில் உள்ள சிரமங்களையும் குறைபாடுகளையும் சுட்டிக்காட்ட முயன்றார், ஆனால் நோரினா அதை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை.

ஒருமுறை, அவர்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதித்தபோது, பாபா அவர்களை அழைத்து, அவர் முன்னிலையில் வாதத்தைத் தொடர அனுமதித்தார், பின்னர், **"உங்கள் இருவரின் நிலைப்பாடுகளும் சரியாகவே உள்ளன. ஆனால் நோரினா சற்று மெதுவாகவும், எலிஸபெத் சற்று வேகமாகவும் செல்ல முயற்சிக்க வேண்டும்"** என்று கூறினார். இருவரையும் பார்த்துப் புன்னகைத்து, **"இப்போது நீங்கள் ஒருவரையொருவர் தழுவிக் கொள்ளுங்கள்"** என்று கூறினார். மற்றொரு சந்தர்ப்பத்தில், இரண்டு பெண்மணிகளுக்கிடையே பூசல் ஏற்பட்டபோது, பாபா தலையிட்டு இவ்வாறு விளக்கினார்:

**ஒருவரையொருவர் நேசித்து, நடந்ததை மறந்து விடுங்கள். இது ஒன்றுதான் முக்கியம், இதில் ஆதாயம் உள்ளது. உங்களில் கிட்டத்தட்ட அனைவரும் பலவீனமானவர்கள். நான் பலவீனம் என்று குறிப்பிடுவது ஆசைகள் சம்பந்தப்பட்டது. கோபம் பலவீனம், பெருமை பலவீனம், இதுபோன்ற மற்றும் பல. ஒரு தாய் தனது குழந்தையை பலவீனமாகப் பார்த்தால், அவள் அதை அதிகமாக நேசிப்பாள். எனவே நீங்களும் அதிகமாக நேசியுங்கள்.**

**நாசிக்கில் நான் சொன்னது உங்களுக்கு நினைவில் இல்லையா? 'சரி, போகட்டும்!'** (ஜானே தோ! LET IT GO!) **என்று சொல்லக் கற்றுக்கொள்ளுங்கள். கடைசி வார்த்தையான 'ஆசை'யை விட்டுவிடுங்கள். எல்லா ஆசைகளையும் உதறித்தள்ளி விட்டு மகிழ்ச்சியாக இருங்கள். ஆனால் நீங்கள் இதை முழு உணர்வுடன் முயற்சி செய்ய வேண்டும். இப்போது மகிழ்ச்சியாக இருங்கள். நான் உங்கள் அனைவரையும் மன்னிக்கிறேன், ஆனால் தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்.**

**உணவு எப்பொழுதுமே மனதைக் கிளறும் விவாதமாக உருவெடுத்தது; குறிப்பாக இப்போது கிழக்கு மற்றும் மேற்கத்தியர்கள் ஒன்றாக வாழ்ந்து, ஒரே கட்டணத்தைப் பகிர்ந்து கொண்டனர். இந்திய உணவு மேற்கத்தியர்களுக்கு மிகவும் காரசாரமானதாக இருக்கும் அதே வேளையில் மேற்கத்திய சமையல் இந்திய வாய்க்கு சுவையாக இருக்காது.**

ஆரம்பத்தில் பாபா குறிப்பாக மேற்கத்திய அன்பர்களிடம், காரமான உணவு தொந்தரவு தரக்கூடாது என கவனமாக இருந்தார். ஆனால் படிப்படியாக அவர் இதுபோன்ற விஷயங்களில் ஆர்வம் காட்டுவதை நிறுத்திவிட்டார். பஞ்ச்கணியில் ஒரு நாள், உணவு வகைப் பட்டியலைப் பற்றி விவாதித்த போது, பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**விருப்பு, வெறுப்புகளைப் போலவே 'ஆசை'களும். இரண்டும் அகந்தையால் உருவாகும் ஆசைகள், எனவே விருப்பு, வெறுப்பு இரண்டையும் துறந்தாக வேண்டும். சிலருக்கு ஒன்று பிடிக்கும், மற்றொன்று பிடிக்காது. நீங்கள் ஒரு விஷயத்தை விரும்புகிறீர்கள், ஆனால் மற்றொன்றை வெறுக்கிறீர்கள். இரண்டும் எதிர் எதிர் ஆசைகள் ஆகையால் இரண்டையும் விட்டுவிட வேண்டும்.**

**ஆசைகளைப் பொறுத்தவரை, நீங்கள் ஒரு கல்லைப் போல் இருக்க முயற்சி செய்ய வேண்டும். கல் ஒருபோதும் 'எனக்கு இது வேண்டும், எனக்கு அது வேண்டாம்!' என்று சொல்வதில்லை. விருப்பு, வெறுப்பு இரண்டையும் மறந்துவிடுகிறது. மட்டுப்படுத்தப்பட்ட விருப்பங்களுக்கு அப்பால் - உங்கள் விருப்பு வெறுப்புகள் - கற்களாக மாறும்போது, நீங்கள் எல்லையற்ற உணர்வு நிலையை அனுபவிப்பீர்கள்!**

1938, மே 13 அன்று ருஸ்தத்தின் குழந்தைகள் மெஹரு, நாகு, பெஹராம் ஆகியோர் தெஹ்மியுடன் பஞ்ச்கணிக்கு வந்தனர். சாஞ்சியும் சில வாரங்களுக்கு அர்னாவாஸ், கோஹெர் ஆகியோரை அழைத்து வந்தார்; ஆனால் கோஹெர் உடல்நலம் பாதிக்கப்பட்டு மறுநாள் மும்பைக்குத் திரும்பிச் சென்றார். இந்த நேரத்தில் ஒரு சில நாட்களுக்காக, சாஞ்சி, மன்ஸாரியையும் அழைத்து வந்தார்.

மே 19ஆம் நாள், மெஹர் பாபா, நோரினா, எலிஸபெத் இருவருடன் மெஹராபாத்திற்கு விஜயம் செய்தார்; நாசிக் நகரில் தங்கியிருந்த பெண்களுக்கு, மெஹராபாத் மேல்மலையில் நீர்த்தொட்டியின் மேல் பகுதியில் அறைகள் தயாராகும் வரை, அஹமதுநகரில் பொருத்தமான வாடகை பங்களாவைக் கண்டுபிடிக்குமாறு ஆதி சீனியருக்கு அறிவுறுத்தினார், நஸர்வான் ஸட்டா, மானேக் ரஞ்சி ஆகியோர் உதவியுடன் பி.டபிள்யூ. டி. (P.W.D.- பொதுப்பணித் துறை) பங்களாவை ஜூன் 15 முதல் வாடகைக்கு எடுத்தனர்.

பஞ்ச்கணிக்குத் திரும்பும் வழியில் பாபா, ராம்ஜூ, ஸரோஷ், ருஸ்தம் ஆகியோரை, அவரது குடும்ப இல்லத்தில் சந்தித்தார். ருஸ்தம் தயாரித்த திரைப்படத்தின் தொடக்க நாள் நுழைவுச்சீட்டு விற்பனை ரசீதுகள் ஏமாற்றமளித்தன, ஆனால் பாபா அவருக்கு ஆறுதல் கூறி ஊக்கப்படுத்தினார்.

1938, மே 29 அன்று பப்பா ஜெஸவாலா, எரச் இருவரும் நாக்பூரிலிருந்து வந்து, மெஹர் பாபாவை சந்தித்து, குடும்பத்தார் அனைவரும் பாபாவிடம் வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். தவ்லத்மாயை பெர்சியாவிற்கு அனுப்புவது குறித்து பாபா, ஆதி சீனியருடன் பேசினார், '**இது ஆன்மீக ரீதியில் அவருக்கு நன்மை பயக்கும்**' என்று பாபா கூறினார். அடுத்த நாள், ருஸ்தத்தின் குழந்தைகள் ஆதி சீனியருடன் புறப்பட்டுச் சென்றனர்.

மெஹர் பாபாவின் உத்தரவின்படி, ஐரோப்பாவில் போர் உருவாகும் வரை டிலியா, மார்கரெட் இருவரும் இங்கிலாந்தில் தங்க வேண்டியிருந்ததால், அவர்கள் பாபாவின் சகவாசத்தைத் தவறவிட்டனர், மே 29ஆம் நாள், பாபா, டிலியாவை உற்சாகப்படுத்த, இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்தார்:

**நீங்கள் எதையும் புரிந்து கொள்ளும் தன்மையில் மிகையாக வளர்ந்துள்ளீர்கள், நான் செய்யும் அனைத்தும், நீங்கள் ஒவ்வொருவரும் அனுபவிக்கும் கஷ்டங்களும், என் அன்பில் நீங்கள், உங்களின் பிரியமான பாபாவை மேலும் நெருங்கி வருவதற்காக மட்டுமே என்பதை நன்கு உணர்ந்து கொள்கிறீர்கள். இத்தகைய விலைமதிப்பற்ற முத்துமணியை அடைவதற்காகவே இந்தத் துன்பங்கள் உங்களை வழிநடத்தாவிடில், நீங்கள் கஷ்டப்படுவதை நான் தாங்கிக்கொள்ள முடியுமா? அன்பு, அனைத்தையும் அறியும், புரியும் தன்மையைத் தாண்டிச் செல்லும்!**

**நீங்கள் ஏன் எனது வட்டத்தில் ஒருவராக இருக்கிறீர்கள்? ஏனெனில், இப்போது நீங்கள் மிகவும் ஆவலுடன் விரும்பும் ஒன்றை உங்களிடம் வைத்துள்ளீர்கள் - அதாவது, நேசிக்கும் திறன்; இறுதிவரை நேசிக்கும் திறன். அன்பிற்கான இந்த சக்தி அதன் முழுமையான நிலையை எட்டும்போது - அதாவது, நீங்கள் சுய சிந்தனை இல்லாமல் இருக்கும்போது - நீங்கள் இதுவரை அனுபவித்த அனைத்தையும் தாண்டி ஒரு மகிழ்ச்சியை அனுபவிப்பீர்கள். இதைத்தான் ஐக்கியம் என்பது. சுய உணர்விலிருந்து விடுபட்ட, உங்கள் பிரியமான பாபாவின் மீதான அன்பு. உங்கள் மனநிலையையும் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்தி, இருள் மூடிய காலங்களுக்கு மேலே செல்வதற்காக நீங்கள் எடுக்கும் முயற்சிதான் என்னை உங்களருகில் நெருங்கச் செய்து உணரவைத்தது.**

**நான், உங்களைப் பேய் போலப் பின்தொடர்கிறேன் என்று நீங்கள் சொல்வது சரிதான், அதனால் உங்களுக்கு என் மீதான ஏக்கமும், ஆசையும் மேலும் பெருகி தீவிரமடைந்துள்ளது. ஏன்? இந்த ஏக்கமும் ஆசையும் நான் அல்லவா? நீங்கள் எனக்குச் சொந்தமானவர். நான் உங்களை நேசிக்கிறேன். எனவே, இந்தப் போராட்டம் பயனுள்ளது அல்லவா?**

1938, ஜூன் மாதத்தில், சிது, மெஹராபாத்திலிருந்து பஞ்ச்கணிக்கு, சகனின் மனைவி ஸாந்தாவையும் அழைத்து வந்தார். சிது வந்ததும், பாபா, அவரிடம் பகீரத்தை, சுற்றுலாவுக்காக மஹாபலேஷ்வர் அழைத்துச் செல்லவும், திரும்பி பஞ்ச்கணி வந்து உணவு உண்ணுமாறும் கூறி அனுப்பினார். சிது பகீரத்தை அழைத்துக்கொண்டு சுற்றுலாவை முடித்துவிட்டு திரும்பி வரும் வேளையில், பசியுடன் இருந்ததால் வழியில் உணவகம் ஒன்றில் உண்டனர். பஞ்ச்கணி வந்த பின்னரே பாபாவின் உத்தரவு அவர்கள் நினைவிற்கு வந்தது.

நடுக்கத்துடன் அவர்கள் மண்டலியின் வீட்டில் நுழைந்தபோது, பாபா, அவர்களுக்காகக் காத்திருந்து, இரவு உணவை உண்ணச் சொன்னார். பாபாவிற்குக் கீழ்ப்படியாத பயத்தில், தயக்கத்துடன் ஏற்கனவே உண்டதாக ஒப்புக்கொண்டனர். "**என் உத்தரவு என்ன?**" என்று பாபா கேட்டார்.

இருவரும் தங்கள் தவறை ஒப்புக்கொண்டாலும், அவர்களை வேகமாக அறைந்து, "**என் அறிவுறுத்தல்களை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள்!**" என்றார். அந்த நேரத்தில் அவர்கள் அறிந்ததை விட நடந்த சம்பவத்தில் இன்னும் அதிகமான விஷயங்கள் இருந்தன, ஏனெனில் விரைவில் அவர்கள் பாபாவுக்கான ஒரு பணியில் ஈடுபட்டிருந்தபோது கடுமையான கார் விபத்திலிருந்து காப்பாற்றப்பட்டனர் - இதற்கு பாபா அளித்த அறைதான் காரணம் என இருவரும் உணர்ந்தனர்.

ஒருமுறை பஞ்ச்கணியில், ஷிரீன்மாய் (மெமோ) தனது மனநிலையை இழந்து, பங்களாவிலிருந்து வெளியேறி, சில புதர்களுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டார். பாபாவே அவரைத் தேடிச் சென்றார், பின்பு நானா கோலி (NANA KOLI) என்ற ஊழியரை அனுப்பினார். நானா அவரைக் கண்டதும், வீட்டிற்குத் திரும்பும்படிக் கேட்டுக்கொண்டார். ஆனால் ஷிரீன்மாயின் கோபம் தணிந்தபாடில்லை. பாபா, தகவல் அறிந்து மெமோவிடம் சென்றார். ஷிரீன்மாய் எவருக்கும் செவி சாய்க்காமல் கோபத்தில் இருந்தார். பாபா, உள்ளே சென்று சிறிது நேரத்தில், மீண்டும் நானாவை அனுப்பி வைத்தார். பாபா, மெமோவை நினைத்து எவ்வளவு வருத்தப்பட்டார் என்று நானா, ஷிரீன்மாய்க்கு விளக்கியபோது, அவர் திரும்பிச் சென்றார், சம்பவம் அத்துடன் முடிவடைந்தது.

1938 ஜூன் 2 அன்று விஷ்ணுவின் உறவினர் இந்து, கணவர் விஷ்வநாத் எஸ். ஹல்தங்கருடன் பாபாவின் தரிசனத்திற்காக, பஞ்ச்கணிக்கு வந்தார். விஷ்வநாத் தொழிலால் ஒரு பொற்கொல்லர் மற்றும் மகிழ்ச்சியான மனநிலை படைத்த மனிதர். விஷ்வநாத் அந்த நகரத்தைச் சேர்ந்தவர் என்பதால், பாபா அவரிடம் பெல்காவ்ம் (BELGAUM) பற்றி விசாரித்தார். பாபா அவரது விளக்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த போது, அவர் திட்டமிடும் ஆசிரமத்திற்கு சாத்தியமான இடமாக அந்தப் பகுதியைப் பார்வையிடும் ஆர்வத்தை பாபா வெளிப்படுத்தினார்; மேலும் விஷ்ணுவுடன் ஜூன் 4ஆம் நாள் பெல்காவ்ம் சென்றார். (அர்னவாஸ், நர்கிஸ் இருவரையும் சாஞ்சி பெல்காவ்ம் அழைத்துச் சென்று பாபாவை அங்கு

சந்தித்தார்.) பாபா, பெல்காவ்ம் நகரைப் பெரிதும் விரும்பினார். இடத்தின் மதிப்பும், காலநிலையும் சாதகமாக இருந்ததால் இது மேற்கத்தியர்களுக்கு ஏற்றதாக இருக்கும்; மேலும் பூனா, அஹமதுநகரிலிருந்து வெகு தொலைவிலும் இல்லை; பாபாவிற்குக் காட்டப்பட்ட இடம் நிழல் நிறைந்து மா மரங்கள் சூழ்ந்து காணப்பட்டது.

நவல் தலாட்டி மே 25 அன்று மாரடைப்பு காரணமாக, நாசிக் நகர மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆயினும், ஜூன் 10 அன்று, அவர் தனது 45ஆவது வயதில் திடீரெனக் காலமானார். அவரது எதிர்பாராத மறைவின் செய்தியைக் கேள்விப்பட்டதும், மெஹராபாத்தில் முந்தைய மௌன தினத்தன்று மெஹர் பாபா கூறிய வார்த்தைகளை அனைவரும் நினைவு கூர்ந்தனர்: “**எனது நெருங்கிய மண்டலியில் ஒருவர் இந்த ஆண்டு உயிரைத் துறப்பார்**.”



மெஹர் பாபா, மெஹராபாத், **1938**
(MEHER BABA, MEHERABAD, 1938)

# மெஹராபாத் மேல்மலை - கட்டமைப்புப் பணி

**(Construction on Meherabad Hill)**

1938 ஜூன் 15ஆம் நாள், மெஹர் பாபா, முஹமது மஸ்த், ஆண், பெண், மண்டலியுடன் பஞ்ச்கணியிலிருந்து அஹமதுநகருக்குத் திரும்பி வந்தார். மெஹராபாத் மலையின் கட்டுமானப் பணிகள் இன்னும் நிறைவடையாததால், பாபா மற்றும் பெண் மண்டலியை, ஸரோஷ், பி.டபிள்யூ. டி. (P. W. D.) பங்களாவில் தங்க ஏற்பாடு செய்திருந்தார். முஹமது மஸ்த் மீண்டும் மெஹராபாத்திற்கு அனுப்பப்பட்டார். கட்டிட பணிகளின் முன்னேற்றத்தை ஆய்வு செய்ய பாபா, தினமும் ஆதி சீனியருடன் மெஹராபாத்திற்குச் சென்றார் - அவரது எதிர்கால சமாதி நிலத்தடி மறைவிற்கு மேல் குவிமாடம், நீர் தொட்டியின் மேல் மாடி, மகப்பேறு இல்லம் மற்றும் பல - காளேமாமா, பெண்டு, நௌரோஜி ஆகியோரைத் துரிதப்படுத்தி, பணிகளை முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

ஜூன் 22ஆம் நாள், ருஸ்தம், ஃபிரீனியுடன் பாபாவை சந்திக்க வந்தார். நாசிக் நகரில், ஃபிரீனி எதுவும் உண்ணாமல், அருந்தாமல் விடாப்பிடியாக மறுத்து வந்தார். டாக்டர் நீலு, மாஸாஜி இருவரும், அவரைக் குடும்ப குவாட்டர்ஸில் தங்க வைத்து கவனித்து வந்தனர். பாபா, தனிப்பட்ட முறையில் அடுத்த இரண்டு நாட்கள் சில மணி நேரம் அவருடன் செலவிட்டார்.

ஜூன் 26ஆம் தேதி, ஆதி சீனியர், நாக்பூரைச் சேர்ந்த தினேஷ் சோர்டியா (DINESH CHORDIA), அவரது சகோதரர், டாக்டர் தேஷ்முக் தம்பதியினர் ஆகியோருடன் வந்தார். தினேஷ் மெஹராபாத் சுற்றுப்பயணத்தில் அழைத்துச் செல்லப்பட்டார், ஜூலை 1 அன்று பெண் மண்டலியை சந்திக்க பாபா அவரை அழைத்துச் சென்றார்.

பல ஆண்டுகளாக ஸொராப்ஜி தேசாயின் மருமகள் மணி, மெஹர் பாபாவுடன் நிரந்தரமாக ஆசிரமத்தில் தங்க விரும்பினார். பாபா, சமீபத்தில் பஞ்ச்கணியில் இருந்த வேளையில், அதீத ஆர்வத்துடன் அந்த இளம் பெண் மணி, இரண்டு முறை பாபாவை சந்திக்க வந்திருந்தார். ஒவ்வொரு முறையும் அவரை வீட்டிற்குத் திரும்பிச் சென்று பாபாவின் அழைப்பிற்காகக் காத்திருக்குமாறு அறிவுறுத்தினார். 1938 ஜூன் 15ஆம் நாள், மெஹர் பாபா தனது வாக்குறுதியை நிறைவேற்றினார், அதன்படி, மன்ஸாரி (MANSARI - என்ற பெயரில் பின்னர் அழைக்கப்பட்டார்) பெண் மண்டலியில் நிரந்தர உறுப்பினரானார், அவர்களுடன் ஜூன் 15ஆம் நாள் அஹமதுநகர் பங்களாவில் 28 வயதில் வந்திணைந்தார். மன்ஸாரி அடுத்த இரண்டு மாதங்கள் உணவு தயார் செய்வதில் உதவியாக இருந்தார். நாஜா இன்னும் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால்,

சமையலறையில் அனைத்து பொறுப்புகளையும் கிட்டி டேவி தனியாகக் கையாண்டார்.

மெஹர் பாபாவுடனான மன்ஸாரியின் தொடர்பு மிகவும் ஆழமானது; இத்தனை ஆண்டுகளாக அவரை பாபா புறக்கணிக்கவில்லை. ஐந்து வயதிலிருந்தே, குணப்படுத்த முடியாத தோல் வியாதியால் மன்ஸாரி அவதிப்பட்டார். சிறந்த மருத்துவர்களையும் மும்பையில் மிகச் சிறந்த மருத்துவமனைகளையும் அணுகிய பின்னரும் நோய் சீரான பாடில்லை. அவருடைய பதினெட்டு வயதில், குடும்ப நண்பரான கைக்கோபாத் தஸ்தூர் மெஹராபாத்தில் பாபாவை சந்திக்க அவருடன் அழைத்துச் சென்றார். பாபா மீதான தனது குடும்பத்தினரின் நம்பிக்கை குறித்து அந்த நேரத்தில் சந்தேகம் இருந்தபோதிலும், மன்ஸாரி ஒப்புக் கொண்டார். ஆயினும், பாபாவை சந்தித்த போது அவர் அடைந்த மனமாற்றத்தில், அழுதுகொண்டே அவரை அடிபணிந்து வணங்கினார். கைக்கோபாத், பாபாவிடம் மன்ஸாரியின் துன்பங்களை விவரித்தபோது, "**இதற்காக நீங்கள் இவ்வளவு அழுகிறீர்களா?**" என்று பாபா வினவினார்.

அதற்கு மன்ஸாரி, "இல்லை பாபா, உங்கள் அன்பின் காரணமாக அழுகிறேன்; எனது நோயை நினைத்து அல்ல!" என்றார்.

"**கவலைப்பட வேண்டாம்; நீங்கள் நிரந்தரமாக குணமடைவீர்கள். துனியிலிருந்து சிறிது சாம்பலை எடுத்து, தினமும் காலையில் தேநீருக்கு முன்னர், எனது பெயரை உச்சரித்து, அதில் ஒரு சிட்டிகை சாம்பலை சேர்த்து அருந்துங்கள்**" என்று பாபா, மன்ஸாரிக்கு அறிவுறுத்தினார்.

நவ்ஸாரிக்கு திரும்பிச் சென்ற மன்ஸாரி, பாபாவின் அறிவுறுத்தல்களை முறையாகப் பின்பற்றினார்; ஒரே மாதத்தில் அவர் முழுமையாக குணமடைந்துவிட்டார்.

குணமடைந்த உடனேயே, மன்ஸாரியின் மாமா ஸொராப்ஜி தேசாய் பாபாவைப் பார்க்கச் சென்றார். நவ்ஸாரிக்குத் திரும்பி வந்து அவர் குடும்பத்தினரிடம், "பாபா அவரது அன்பையும் ஆசீர்வாதங்களையும் உங்கள் அனைவருக்கும் வழங்குகிறார்" என்று கூறி, மன்ஸாரி பக்கம் திரும்பிய அவர், "பாபாவின் உடலில் உங்களைப் போலவே ஒரு தோல் வியாதி உருவாகியுள்ளதாகத் தெரிகிறது" என்று குறிப்பிட்டார்.

மன்ஸாரி மனக்கலக்கமடைந்து கவலையுடன் தோன்றினார், பாபா, தனது துன்பத்தை அவர் மீது எடுத்துக் கொண்டு தனது சார்பாகத் துன்பப்படுகிறார் என்று நம்பினார். அதைத் தொடர்ந்து மும்பையில் பாபாவை சந்தித்தபோது, மன்ஸாரி தனது துன்பத்தை பாபா அவர் மீது ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று பிரார்த்தனை செய்தார்.

அதற்கு பதிலளித்த பாபா, "**அது அப்படியே இருக்கட்டும். நீங்களோ நானோ கஷ்டப்பட வேண்டியதில்லை. இது உங்களை என்னிடம் கொண்டு வருவதற்கான எனது விளையாட்டு. இந்தக் 'குணப்படுத்த முடியாத' நோயை நானே உருவாக்கினேன்; இப்போது நீங்கள் என்னுடையவர், நீங்கள் இனி**

**ஒருபோதும் அவதிப்பட மாட்டீர்கள்**" என்று வாக்குறுதியளித்தார்; இந்த நோய் மன்ஸாரியை நிரந்தரமாக விட்டுச்சென்றது.

பெண் மண்டலியுடன் புதிதாக இணைந்தவர் மன்ஸாரி மட்டுமல்ல; ஜூன் 28 அன்று, 'காண்டே வெர்டே' கப்பலில் வந்த நான்கு மேற்கத்திய பெண்மணிகளை (நதீன் டால்ஸ்டாய், ஹெடி மெர்டென்ஸ், ஹெலன் டாம், ஐரீன் பில்லோ ஆகியோர்) எலிஸபெத், நோரினா இருவரும் அஹமதுநகருக்கு அழைத்துச் சென்றனர். ஐரீன் பில்லோ மெஹராபாத் வந்ததும் மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டார், எனவே பாபாவின் அறிவுறுத்தல்படி ரானோ அவரைப் பேணிப் பாதுகாத்தார். பாபா, சிகிச்சையைத் தொடர்ந்து மேற்பார்வையிட, ஐரீன் படிப்படியாகக் குணமடைந்தார்.

மஸ்த் ஆசிரமத்தில் மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவரைத் தாக்கிய நோயிலிருந்து மீள முடியாமல் அவர் ஜூலை 6ஆம் நாள் காலமானார். மறுநாள் பாபா மெஹராபாத் வந்து டாக்டர் கனியை, கடுமையாகத் திட்டினார், இந்த நபரை கவனிப்பதில் அலட்சியம் காட்டியதாக, பாபா குற்றம் சாட்டினார்.

ஜூலை 9 அன்று பெரும்பாலான பெண்கள் (மெஹரா, நாஜா, கோர்ஷெத் தவிர) மெஹராபாத் வந்து ஒரு கண்காட்சியில் கலந்து கொண்டு அரன்காவ்ம் கிராமவாசிகள் நடத்திய ஊர்வலத்தைப் பார்வையிட்டனர். பாபா அங்கிருந்தபோது, சிறிய ஆயுத பள்ளிக்கூடத்தைச் (SMALL ARMS SCHOOL) சேர்ந்த இரண்டு ஆங்கில இராணுவ அதிகாரிகள் வந்தனர். மறுநாள் மெஹராபாத்தில் பாபாவுடன் நடந்த நேர்காணலில் கிட்டி அவர்களுடன் பேசினார்.

1938 ஜூலை 10, பாபாவின் மௌனத்தின் 13ஆவது ஆண்டு விழாவிற்காக, சாஞ்சி மெஹராபாத் வந்தார். டாக்டர் அலு கம்பட்டா (DR. ALU KHAMBATTA) மற்றும் டாக்டர் பரமானந்த் - DR. PARAMANAND (டாக்டர் அலுவின் மும்பை மருத்துவ மனையில் உதவும் சக பெண் மருத்துவர்) சாஞ்சியுடன் வந்தனர். டாக்டர் அலு ஒரு மருத்துவப் படிப்புக்காக அயர்லாந்து (IRELAND) செல்ல விரும்பினார், பாபா அவரிடம், "**அச்சமின்றிச் செல்லுங்கள். அனைத்தையும் என்னிடம் விட்டு விடுங்கள். அனைவரையும் - இங்கேயும் அங்கேயும் - நான் பார்த்துக் கொள்வேன். ஒவ்வொரு 21 நாட்களுக்கும் ஒரு கடிதம் எழுதுங்கள்**" என்று கூறினார்.

அவர் ஒருமுறை வெளிநாட்டுக்குச் சென்றால் தனது மருத்துவ மனையை மறுபடியும் தொடர முடியாது என அலு அஞ்சினார். ஆனால் பாபாவின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, அவர் அயர்லாந்து சென்று ஒன்பது மாதங்களுக்குப் பிறகு இந்தியா திரும்பினார்.

இந்த ஆண்டின் மௌன தினத்தைக் கௌரவிக்கும் வகையில் சிறப்பு செயல்பாடு எதுவும் செய்யப்படவில்லை. முந்தைய ஆண்டு பாபா, '**என்னுடைய பதிமூன்று ஆண்டு நிறைவடையும் தருணத்தில் நான் பேசக்கூடும்**' என்று

குறிப்பிட்டிருந்தார். ஆனால் அவரது உதடுகளிலிருந்து ஒருவார்த்தைக் கூட, தப்பித் தவறியேனும் வெளிவராமல் இன்னுமொரு வருடம் கடந்துவிட்டது.

வரவிருக்கும் சில புதிய மாற்றங்களை பாபா அவ்வப்போது சுட்டிக்காட்டினார். **"அக்டோபர் 18ஆம் தேதிக்குப் பிறகு தோள்களைத் தட்டி செல்லம் கொடுப்பதெல்லாம் இனிமேல் நிறுத்தப்படும்!"**

அதே நாள் பிளீடர், பாபாவுடன் ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டார், அதில் பாபா அவருக்கு வாக்குறுதியளித்த ஆன்மீக விழிப்புணர்வுக்கான 'கால அட்டவணை' குறித்து அவர் கவலை தெரிவித்தார். (பாபாவின் முன்னோடியான சீடராக, பிளீடருக்குப் பூக்களை வழங்கவும், மரியாதைச் செலுத்தவும் சாதாரண மக்களை அவர் அனுமதிப்பதாக மண்டலி கேள்விப்பட்டனர்.)

கீழ் மெஹராபாத்தில் அமைந்த ராஹூரி கேபினில், ஜூலை 11ஆம் நாள் காலை 10 மணிக்கு, ராம்ஜூ, சாஞ்சி, டாக்டர் கனி, நான்னி, சம்பத் ஐயங்கார், ஆதி சீனியர், நோரினா, எலிஸபெத் ஆகியோருடன் நடந்த கூட்டத்தில் 'மெஹர் கெஸட்' (MEHER GEZETTE) இதழை மறுசீரமைத்து புதிய பத்திரிகை ஒன்றைத் தொடங்குவது குறித்து, பாபாவுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. பாபா அதற்கான ஆசிரியர்களை நியமித்தார்: நிர்வாக ஆசிரியர் - எலிஸபெத், இலக்கிய ஆசிரியர் - நோரினா, செய்தி ஆசிரியர் - சாஞ்சி, மற்றும் செயலாளர் - நான்னி. ஆதி சீனியர் அலுவலகத்தில் பணிபுரிந்த தத்து மெஹன்தர்கே அவர்களின் எழுத்தராக பணியாற்ற இருந்தார். டாக்டர் தேஷ்முக், டாக்டர் கனி இருவரும் பிற பங்களிப்பாளர்களாக, வேதாந்தம் மற்றும் சூஃபி தத்துவத்தைப் பற்றி எழுத வேண்டும். புதிய வெளியீட்டிற்கான பெயரைத் தீர்மானிக்க 14ஆம் தேதி மற்றொரு கூட்டம் நடைபெற்றது. சாஞ்சி வெறுமனே மெஹர் பாபா என்ற பெயரைப் பரிந்துரைத்தார், பாபா உட்பட அனைவரும் ஒப்புதல் அளித்தனர். இருப்பினும், பாபா பின்னர் அதை 'மெஹர் பாபா ஜர்னல்' (MEHER BABA JOURNAL) என்று முடிவு செய்தார்.

மெஹர் பாபாவின் தேவைகளுக்காகப் பங்களிக்கும் நோக்கத்தில், கேரெட் ஃபோர்ட் பணம் சம்பாதிக்க மேற்கொண்ட முயற்சியில் இதுவரை அவர் வெற்றி பெறவில்லை. 1938 ஜூலை 14 அன்று, பாபா அவருக்குக் கடிதம் ஒன்றை எழுதினார்:

**அனைத்தும் நான் அறிவேன் - நீங்கள் ஏற்கனவே கடந்து வந்த மற்றும் பிற்காலத்தில் கடந்து செல்ல வேண்டிய ஒவ்வொரு விவரத்தையும், எனது திட்டங்களாகத் தீர்மானித்து, கோடிட்டுக் குறித்துள்ளேன். . . . எனக்குச் சொந்தமான அனைவரின் விதிகளையும் நான் இப்படியே வழிநடத்தி, அந்தக் கடிவாளத்தை எனது கைகளில் வைத்துள்ளேன். நீங்கள் அனைத்தையும் நேரடியாக எதிர்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; எவ்வளவு குழப்பமாகத் திகைத்துப் போயிருந்தாலும், இவை அனைத்தையும் கடந்து**

**சென்று, தவிர்த்துவிட வேண்டும். சத்தியத்தை நோக்கிச் செல்லும் வழியில் உங்களை உயர்த்தும் அந்த அனுபவங்களுக்கு நீங்கள் செலுத்த வேண்டிய விலைதான் இந்தத் துன்பம்.**

**சில நேரங்களில், உள்ளளவிலும், வெளியளவிலும் நான் வழங்கும் அனைத்து உதவிகளும், உங்களையும் பிறரையும் ஆச்சரியப்படுத்தும். இந்த உதவியில் நீங்கள் எப்பொழுதும் உறுதியுடன் இருக்க வேண்டும். என்ன நடந்தாலும், நீங்கள், உங்கள் விரக்தியின் மத்தியில், என்னை விட்டுச் சென்றாலும் அல்லது எனக்கு எதிராகத் திரும்பினாலும் நான் உங்களை ஆன்மீக ரீதியில் ஒருபோதும் வீழ்ச்சியடைய விடமாட்டேன்.** (இதை நான் ஒரு விளக்கத்திற்காக மட்டுமே குறிப்பிடுகிறேன்.) **உங்களிடம் என் அன்பு ஒருபோதும் தோல்வியடையாது.**

ஜூலை 1938 முழுவதும், பாபா தொடர்ந்து மெஹராபாத் சென்று, அங்கு நடக்கும் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றத்தை உறுதி செய்தார், மேலும் பிரதான கட்டிடத்தின் பின்புறம் அமைந்த ஆசிரமத்திற்குச் சென்று மஸ்துகள், மனநிலை பாதிக்கப்பட்டவர்களையும் கண்காணித்து வந்தார்.

ஒருமுறை பாபா, ஆதி சீனியருடன் வந்தபோது பெண்டு, விஷ்ணு, சிது மூவரும் ஒன்றாக அமர்ந்திருந்தனர். பாபா எரிச்சலில், "**நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்? வாழ்க்கையை அனுபவிக்க மட்டுமே நீங்கள் என்னுடன் இணைந்துள்ளீர்களா?**" என்று கேட்டார்.

எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தது போல் ஆதி, "வாழ்க்கையை அனுபவிப்பதற்காக அல்ல, ஆனால் வம்பு பேசி வதந்திகளைப் பரப்புவதற்காக!" என்றார்.

உண்மை என்னவெனில், விஷ்ணு, பெண்டு, சிது மூவரும் அன்றாட தேவைகளைப் பற்றி விவாதித்தனர், வெறுமனே இருக்கவில்லை. ஆதி கூறியதைக் கேட்டு விஷ்ணு உள்ளூர சீற்றமடைந்தார், ஆனால் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொண்டார். பாபா மெஹராபாத் மண்டலி மூவரையும் கண்டித்தார். விஷ்ணு கோபத்தை விழுங்க முயன்றார்.

மெஹர் பாபா தனது அறைக்குச் செல்லவிருந்த வேளையில், ஆதி வேறு ஏதோ கூறியதும், விஷ்ணு அவரை கடுமையாக அறைந்தார். இது, பாபாவை அதிருப்தியடையச் செய்தது; விஷ்ணுவை ஆதியின் பாதங்களைத் தொட்டு வணங்குமாறு கட்டளையிட்டார். விஷ்ணு கீழ்ப்படிந்து, இருவரும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டனர். அன்றைய தினம் விஷ்ணுவை அஹமதுநகர் பஜாருக்குக் காரில் அழைத்துச் செல்லுமாறு பாபா, ஆதிக்கு உத்தரவிட்டார் (பொதுவாக விஷ்ணு சைக்கிளில் செல்வது வழக்கம்). மாலையில் திரும்பிவந்த போது, இருவரும் மீண்டும் நண்பர்களாக இருந்தனர்.

ஜூலை 16ஆம் நாள், அமீனா ஜாஃபர் (AMINA JAFFER), பெண் மண்டலியை சந்திக்க அனுமதிக்கப்பட்டார். 22 அன்று, சாஞ்சி, அமீர் கான் (AMIR KHAN) என்ற

சிறுவனை மன்மாட் ரயில் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, அவனது சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தார்.

பி.டபிள்யூ. டி. பங்களாவில், 'மாயா', 'மனப்படிவங்கள்' மற்றும் 'யோகா' பற்றி பாபா பெண் மண்டலிக்கு விளக்கினார். 1938 ஜூலை 24 ஞாயிற்றுக்கிழமை பாபா, மகிழ்ச்சியாக இருப்பதைப் பற்றி பேசினார்:

**உலகில் மக்கள் ஈடுபடும் அனைத்தும், மகிழ்ச்சியை அடைவதற்காகவே செய்யப்படுகின்றன. அதிகாரத்தைத் தேடுவது மகிழ்ச்சியைப் பெறுவதற்காகும். உடைமைகளின் மூலம் மகிழ்ச்சியை அடைய விரும்பும் மக்கள் பணத்திற்காகப் பாடுபடுகிறார்கள். பணத்தை, சரியான முறையில் பயன்படுத்தினால் நல்லது; ஆனால் மோசமான பயன்பாடு துயரம், மகிழ்ச்சியின்மை இரண்டிற்கும் வழிவகுக்கிறது.**

**விஞ்ஞானமும் மகிழ்ச்சியை ஊக்குவிக்க முயல்கிறது - புதிய கண்டுபிடிப்புகள் மானிடனின் மகிழ்ச்சிக்காகச் செய்யப்படுகின்றன; அதை சரியாகப் பயன்படுத்தினால் அவ்வாறு இருக்க முடியும். ஆனால் தவறான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும்போது, அவை அதிக இடர்பாடுகள், அதீத துயரங்களுக்கு மட்டுமே வழிவகுக்கும். உதாரணமாக விமானங்களை எடுத்துக் கொள்ளுங்கள்: அவை, போருக்குப் பயன்படுத்தப்பட்டால், மரணத்தையும் அழிவையும் கொண்டு வருகின்றன.**

**எனவே எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்க முற்படுவதால், மகிழ்ச்சி மிகவும் முக்கியமானது. நாம் கடவுளை அடையும்போது, நிரந்தர மகிழ்ச்சியை அடைகிறோம். சுய மறதியின் அடிப்படையில் ஏற்படும் மகிழ்ச்சி மட்டுமே நிரந்தர மகிழ்ச்சியை நோக்கி - கடவுளை நோக்கி - அழைத்துச் செல்லும். பிறரை மகிழ்விப்பதில் ஒருவர் சுயத்தை இழக்கும்போது, உண்மையான மகிழ்ச்சியை அடைகிறார், அதுவே கடவுள். மகிழ்ச்சியின் இதர அனைத்து வடிவங்களும் நொடிப்பொழுதில் மறைந்து விடுபவை மட்டுமின்றி மாறக்கூடியவை.**

**ஒருவருக்கு வரும் எல்லா துன்பங்களையும் ஏற்றுக்கொள்ளும் வகையில் இயலக்கூடியதாகச் செய்ய, இந்த உண்மையான மகிழ்ச்சி மிகவும் வலுவாக இருக்க வேண்டும், அல்லது நாம் தாங்கக் கூடியது போன்றதாக இருக்க வேண்டும்!**

அந்த நாளில் 'வால்ட் டிஸ்னி' (WALT DISNEY) தயாரிப்பில் 'ஸ்னோ ஒயிட்' (SNOW WHITE) மற்றும் 'செவன் டுவார்ஃப்' (SEVEN DWARFS) திரைப்படங்களைப் பார்க்க பாபாவும் பெண்மணிகளும் சென்றபோது, விலங்குகளைப் பற்றிய உரையாடல் நடந்தது. குழுவில் ஒருவர் மெஹராபாத்தில் ஒரு 'விலங்குகள் மருத்துவமனை'யை நிறுவுவதைப் பரிந்துரைத்ததும், அது நல்ல யோசனை என்று பாபா சுட்டிக்காட்டினார். அவர்கள் இதைத் திரும்பத் திரும்ப விவாதித்த வேளையில் பாபா கேலி செய்தார், **"நீங்கள் அனைவரும் ஏழைகளுக்காக**

**மருத்துவமனையில் பணிபுரியும் போது, எவ்வளவு வலிமைமிக்கவர்களாக இருக்கிறீர்கள் என்பதை நானும் பார்க்கிறேன் - ஓயாத வாசனைகள், இரத்தம், மோசமான காயங்கள், மயக்கம், இறப்பின் வேதனைகள் போன்றவை...”**

பாபா மேலும் தொடர்ந்து, “**நான் கூறுவதை நீங்கள் அனைவரும் கேட்டுக் கொண்டிருந்த போது, நான் என் உலகளாவிய பணியில் மும்முரமாக இருந்தேன்; அதே வேளையில் உங்களுடனும் இருந்தேன்**” என்று கூறி முடித்தார்.

1938 ஜூலை 25 அன்று, மெஹராபாத்தில் மஸ்துகளுடன் பணிபுரியும் வேளையில், பாபா, “**நான் இங்கிருந்து விரைவில் வெளியேறுவது போலத் தெரியவில்லை, அவர்களுடன் பணியாற்றுவதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்**” என்று குறிப்பிட்டார். நான்கு நாட்களுக்குப் பிறகு, பாபா, கிட்டி, ரானோ, நான்னி ஆகியோரை மெஹராபாத் மஸ்த் ஆசிரமத்தில் அவர் பணிபுரிவதைப் பார்க்க அழைத்து வந்தார். பாபா 40 நிமிடங்களில் 20 உள்வாசிகளை நீராட்டி முடித்து, மிக்க மகிழ்ச்சியான மனநிலையில் காணப்பட்டார்; இது மேற்கத்தியர்கள் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

அதே நாள், மெஹராபாத்தில், போர்கர் (BORKER), பாபாவை சந்திக்க வந்தார்; மேலும் பாபா அவரது ஆன்மீக நடைமுறைகள் குறித்து சில வழிமுறைகளை வழங்கினார்; போர்கர் அதைப் பின்பற்றுவதில் ஆர்வமாக இருந்தார்.

எரச் ஜெஸவாலா, மெஹர் பாபாவிற்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் விதத்தில், தனது குடும்பத்தினரை நாக்பூரிலிருந்து அஹமதுநகருக்கு 1938 ஆகஸ்ட் 1ஆம் நாள், பாபாவின் ஆசிரமத்தில் வந்திணைய அழைத்து வந்தார். தந்தையார், பப்பா ஜெஸவாலாவும் உடன் வந்திருந்தார். பாபாவுடன் அனைத்து ஏற்பாடுகளையும் விவாதித்த பின்பு, பாபா அவரை 5ஆம் தேதி நாக்பூருக்குத் திருப்பி அனுப்பி வைத்தார். அவர் ஓய்வூதியத்துடன் ஓய்வு பெறுவதற்கு இன்னும் ஒரு வருடம் இருந்ததால், அவரது கடமையை முடித்து ஒரு வருடம் கழித்து அவருடன் வந்திணையுமாறு அறிவுறுத்தினார்.

பப்பா ஜெஸவாலா நாக்பூருக்குத் திரும்பிச் செல்வதற்கு முன்பு, பாபா அவருடன் கேலியாக முறையிட்டார்: “**பப்பா, எரச் தனது குழந்தைப் பருவத்திலிருந்தே என்னுடன் இருக்க வேண்டும் என்று நான் விரும்பினேன், ஆனால் உங்களால் அவரைவிட்டுப் பிரிந்திருக்க முடியவில்லை. ஆனால், அந்த நேரத்தில் நீங்கள் அவரை என்னுடன் விட்டுச் சென்றிருந்தால், அவரது படிப்பையும், வளர்ப்பையும் நானே கவனித்துக் கொள்ள வேண்டியதாக இருந்திருக்கும். ஆகவே, அவரை இப்போது என்னிடம் கொடுத்து, எல்லா சிக்கல், சிரமங்களிலிருந்து**

**என்னைக் காப்பாற்றியதற்கு நன்றி. இது எனது சுமையைப் பெரிய அளவில் குறைத்துவிட்டது.**"

மெஹர் பாபாவுடன் வந்திணைந்த பின்பு, கடிதத் தொடர்பு சம்பந்தப்பட்ட பணிகளில் சாஞ்சிக்கு உதவுமாறு அவர் எரச்சிற்கு அறிவுறுத்தினார். பாபா, மெஹராபாத் மலையின் மேலேயும் கீழேயும் நடந்து செல்லும் வேளையில் தலை மேல் குடை பிடிப்பதையும் வழக்கமாகக் கொண்டார். எரச்சின் சகோதரர் மெஹர்வான், அவரது உறவினர் தாதி இருவரும் சிறுவர்களாக இருந்தனர், அவர்கள் ஆண்களுடன் கீழ் மெஹராபாத்தில் தங்கியிருந்தனர். எரச்சின் தாயார் கெய்மாய், இரண்டு மகள்கள் மெஹரு, மனுவுடன் பி.டபிள்யு.டி. பங்களாவில் பெண் மண்டலியோடு தங்கினார். பாபா தனது சகோதரி மணியிடமிருந்து வேறுபடுத்தும் எண்ணத்தில் மணி தேசாய், மணி ஜெஸவாலா ஆகியோருக்கு முறையே மன்ஸாரி (MANSARI - நவ்ஸாரியைச் சேர்ந்தவர்), மன்பூர் (MANPUR - நாக்பூரிலிருந்து வந்ததால்) அல்லது 'மனு' (MANU) என்ற புனைப்பெயர்களை வழங்கினார்.

இந்த முழு விவகாரத்திலும் இருந்த ஒரே ஒரு 'முள்' என்னவெனில், பாபா, அவர்களிடம் இருந்த வாகனத்தையும் வரும்போது உடன் எடுத்து வருமாறு எரச்சிடம் கூறியிருந்தார். நாக்பூரில் பப்பா ஜெஸவாலாவிற்கும் கார் தேவை என்பதால், அதைக் குறைந்தது ஆறு மாதங்களாவது அங்கே வைத்திருக்குமாறு தனது தந்தை வலியுறுத்தியதாக எரச், பாபாவிடம் விளக்கினார்.

இந்த விஷயத்தில் மட்டும் பாபா அவ்வளவு மகிழ்ச்சியடைந்ததாகத் தெரியவில்லை, "**இது எப்பொழுதும் என் இதயத்தில் ஒரு களங்கமாக இருக்கும்**" என்று குறிப்பிட்டார்.

அந்த நேரத்தில், பாபா கூறியதன் உட்கருத்தை எரச் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, 1956ஆம் வருடம் சத்தாராவில் எரச் ஓட்டிய கார் விபத்திற்குள்ளான பின்னர், அவர் பாபாவின் வார்த்தைகளை நினைவு கூர்ந்தார், மேலும் 1938இல் பாபாவிற்கு முழுமையாகக் கீழ்ப்படியாததால் இந்த விபத்து ஏதோவொரு வகையில் தொடர்புடையது என்று நினைத்தார்.

மெஹர் பாபாவுடன் வருவதற்கு முன்னர், எரச் ஜெஸவாலா, இரண்டு குறிப்பிடத்தக்க கனவுகளைக் காண நேர்ந்தது. ஓரிரவு அவர், பாபா தனது வீட்டிற்கு வந்து, சுதந்திரமாக அங்கும் இங்கும் உலாவுவது போலக் கனவு கண்டார். பாபா, 'எல்லாவற்றிற்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு என்னுடன் வாருங்கள்' என்று எரச்சிடம் கூறினார். பப்பா, கெய்மாய் இருவரையும் பாபா அவருக்கு முன்னால் நிற்க வைத்து, இரண்டு குழந்தைகளை அவர்களின் பொறுப்பில் கொடுத்துவிட்டு, வெளியேற ஆயத்தமானார். 'வீட்டில் நிறைய பால் உள்ளது; அது கெட்டுவிடும்' என்று எரச் விரைவாகக் கூறியதும், பாபா கனவில், "அதைச் சாக்கடையில் கொட்டிவிட்டு, பால் பாத்திரத்தை சுத்தம் செய்த பின்னர், என்னிடம் வாருங்கள்!" என்று கூறினார்.



ராஹூரி கேபின், கீழ் மெஹராபாத்
(RAHURI CABIN, LOWER MEHERABAD)



**பெண்மணிகளுடன் சுற்றுலா 1938**
(PICNIC WITH THE WOMEN, 1938)
**மேலே** (TOP): **நோரினா** (NORINA), **நதீன்** (NADINE), **மணி** (MANI), **கோர்ஷெத்** (KHORSHED), **ஐரீன்** (IRENE), **மெஹரா** (MEHERA), **பாபா** (BABA), **வாலு** (VALU), **காக்குபாய்** (KAKUBAI)
**கீழே** (BOTTOM): **பாபா** (BABA), **மெஹரா** (MEHERA), **கோர்ஷெத்** (KHORSHED), **மணி** (MANI), **ரானோ** (RANO)



பாபா, மஸ்துகளுக்கு முடி திருத்தம் செய்தல்… அவர்களை நீராட்டுதல்… அவர்களின் கழிவறைகளை சுத்தம் செய்தல்…
(BABA, DRESSING THE HAIR, BATHING & CLEANING THE TOILET OF MAST)

சிறிது நேரத்தில், எரச் மற்றொரு கனவைக் கண்டார். அதில் அவர், பாபா அருகில் அமர்ந்திருக்க, காரை ஓட்டிச் சென்றார். பாபா, காரை விரைவாக ஓட்டுமாறு வற்புறுத்தினார். வேகத்தை அதிகரித்தபோது, பாபா அவரை இன்னும் விரைவாக ஓட்டுமாறு உரத்த குரலில் கட்டளையிட்டார். அவர்களுக்கு முன்னால் பெரிய கடல், பாபா அவரை அதில் விரைவாக ஓட்டுமாறு வலியுறுத்த அவரும் அவ்வாறே செய்தார். எரச்சின் உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது; சற்று தூரத்தில் ஒரு வெள்ளை மாளிகையைக் கண்டார். பாபா கட்டிடத்தின் ஓரத்தில் காரை நிறுத்துமாறு சைகையால் தெரிவித்ததும், அவர் மிகவும் சிரமத்துடன் அதைச் செய்தார். ஆனால் கார் அப்போது மணலில் சிக்கியது. இங்கே அவரது கனவு முடிவிற்கு வந்தது.

விசித்திரமான கனவுகளின் பதிவங்கள் எரச்சின் மனதில் பல நாட்கள் தங்கியிருந்தன, அவர் வந்ததிலிருந்து, பாபாவுடன் நிரந்தரமாகத் தங்கும் தனது தீர்மானத்தைத் தக்கவைத்துக் கொள்ள இது உதவியது.

1938, ஆகஸ்ட் 3 அன்று, பாபாவைப் பார்க்க, சம்பத் ஐயங்கார் மீண்டும் மதராஸிலிருந்து வந்து, மறுநாள் மாலையில் திரும்பிச் சென்றார். ருஸ்தம், ஃபிரீனியை அழைத்து வந்து குஷ்ரு குவாட்டர்ஸில் அமைந்த உபாஸனி மஹாராஜின் அறையில் தங்க வைத்தார். பி.டபிள்யு.டி. பங்களாவிற்குத் திரும்பும் வழியில் பாபா, ஃபிரீனியைப் பார்த்தார்.

ஆகஸ்ட் 6ஆம் நாள், பாபா பெண்களுடன் சுற்றுலா சென்று அடுத்த நாள் காலையில் ஸரோஷ், 'மேட் எபவுட் மியூசிக்' (MAD ABOUT MUSIC) என்ற ஒளி இசை நகைச்சுவைத் திரைப்படத்திற்கு, பாபாவை அழைத்துச் சென்றார்; பாபா அதைப் பெரிதும் ரசித்தார்.

பலவீனங்களைப் பற்றி, பாபா பெண்களுக்கு விளக்கினார்:

**ஒரேவிதமான பலவீனங்களைக் கொண்ட பக்தர்கள், தன்னலனை நாடும் மனப்பான்மை உள்ளவர்கள், வெளிப்படையாக ஒருவருக்கொருவர் நல்லிணக்கத்துடன் நேசிக்கிறார்கள், ஆனால் பிறரை நேசிப்பதில்லை.**

**ஆனால் இதன் விளைவுகள் மோசமானதாக இருக்கும். அவ்வப்போதைய மனநிலையைச் சார்ந்திருக்கும் அடிமைத்தனமான போக்கு நிலைகொள்ளத் தொடங்கும்.**

**எப்படி? உதாரணமாக, நோரினாவை எடுத்துக் கொள்ளுங்கள்; அன்பிற்குரியவராக அவர் என்னை நேசிக்கிறார், என் அருகில் இருக்கும் நோக்கத்தில் அனைத்தையும் துறந்துவிட்டார். இருப்பினும், ஒரு பேச்சுக்காக, நோரினாவின் மனநிலையும் பலவீனங்களும் ஹெடிக்கு ஒத்தவை, ஆனால் கிட்டியுடன் ஒத்ததாக இல்லை என்று வைத்துக் கொள்வோம். இதன் விளைவு என்ன? நோரினாவும், ஹெடியும் ஒருவருக்கொருவர் முன்னும் பின்னுமாக மனப்பதிவுகளைப் பரிமாறிக் கொள்கிறார்கள். 'பாபா மிகவும் அன்பானவர், மிகவும் அழகானவர்' என்று ஹெடி கூறுகையில், நோரினா அதை ஆமோதித்து அதற்கு இணக்கமாக பதிலளிக்கிறார். ஆனால்,**

**பலவீனங்கள் காரணமாக, ஹெடி ஒரு நாள் என் அன்பின் சோதனையில் தோல்வியடைந்து என்னைக் கைவிடக்கூடும். பாபா 'இப்படி', 'அப்படி' என்று சொல்லிய அதே ஹெடி இப்போது பாபாவைப் 'பிசாசு' என்று சொல்லக்கூடும்!**

**அப்போது நோரினாவிற்கு என்ன நடக்கும்? ஹெடியால் விளைந்த மனப்பதிவுகளின் தாக்கத்தால் இப்போது தனியாகத் தவிக்கிறார். எனவே பக்தர்கள் எப்பொழுதும் ஒருவர் இன்னொருவர் மீது சார்ந்திராமல், பாபாவின் மீது சாய்ந்து கொள்ள வேண்டும். இது நீங்கள், ஒருவருக்கொருவர் பேசக்கூடாது, நேசிக்கக்கூடாது, ஒன்றாக இருந்து அனுபவங்களையும், மனப்பதிவுகளையும் பகிர்ந்து கொள்ளக்கூடாது என்று அர்த்தமாகாது - ஆனால் ஒருவர் இன்னொருவர் மீது சாய்ந்து கொள்ளக்கூடாது (அதாவது சார்ந்திருக்கக் கூடாது). நீங்கள் ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும், சேவை புரிய வேண்டும், ஒருவருக்கொருவர் என்னை அதிகமாக நேசிக்கத் தூண்டுதலாக இருக்க வேண்டும். நேசியுங்கள்; சாய்ந்து விடாதீர்கள்.**

**எல்லோரும் எல்லோரையும் சமமாக நேசிப்பது மிகவும் கடினம், ஆனால் சாயாமல் (சாராமல்) இருப்பது கடினம் அல்ல. இதற்கு ஒரே வழி: அன்பும் நம்பிக்கையும் மிக்க வலுவுடன் இருக்க வேண்டும், அனைவரும் தோல்வியுற்று என்னை விட்டு விலகினாலும், நீங்கள் அவ்வாறு செய்ய மாட்டீர்கள்!**

**ரானோ, கிட்டி இருவரும் ஒரே மாதிரியான அணுகுமுறைகளைக் கொண்டுள்ளனர். எலிஸபெத் நோரினாவைப் போலவே, நோரினாவும் ஹெடியும் ஒரே மாதிரியான அணுகுமுறைகளைக் கொண்டுள்ளனர். எனவே ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துங்கள்; ஆனால் இதை நீங்கள் செய்ய முடியாவிட்டால், குறைந்தபட்சம் ஒருவருக்கொருவரை வெறுக்க வேண்டாம்.**

**நதீன் டால்ஸ்டாயை சுட்டிக்காட்டி, பாபா இவ்வாறு கூறி முடித்தார்:**

**நதீன் மிகவும் அதிர்ஷ்டசாலி - அவர் சாய்ந்து கொள்ள விரும்புகிறார், ஆனால் சாய்வதற்கு எவரும் இல்லை! அவருடைய இயல்பு வேறு எவருடனும் உடன்படவில்லை! மிகவும் அன்பானவர், எனக்காக எல்லாவற்றையும் செய்ய விரும்புபவர். எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியில் கூட, அவர் கூறுவதைக் கேட்க, பனி மூட்டம் மட்டுமே நிரம்பி இருந்தாலும் அவர் என்னைப் பற்றி பேசுவார்!**

நாட்கள் செல்லச் செல்ல, மெஹராபாத் மலையின் கட்டுமானப் பணிகளை, திட்டமிட்டபடி முடிப்பதில் ஏற்பட்ட சிக்கல்கள் பெண்டுவின் தலைக்கு மேல் அச்சுறுத்தும் மேகம் போலத் தோன்றின. பாபா, பெண் மண்டலியுடன் பி.டபிள்யு.டி. பங்களாவை ஆகஸ்ட் மூன்றாவது வாரத்தில் விட்டுவிட வேண்டுமென தெரிவிக்கப்பட்டது. ஸரோஷின் செல்வாக்கைப் பயன்படுத்தி, ஜூன் மாதத்திலிருந்து அவர்கள் அரசாங்க விடுதிகளில் தங்க முடிந்தது; சாதாரணமாக ஒரு சில வாரங்களே அங்கு அனுமதிக்கப்பட்டது.

பருவமழை காரணமாக மெஹராபாத்தில் கட்டமைப்புப் பணியும் தாமதமாக நடைபெற்றது.

காளேமாமா, பெண்டு மற்றும் பாதிரியுடன் பணிபுரிந்தார், ஆனால் அவர் தரமான பணியில் மிகவும் கவனமாக இருந்தார்; அவர் எதிர்பார்த்த தரத்தைப் பூர்த்தி செய்யாவிடில், நாள் முழுவதும் அவர்கள் கட்டியெழுப்பிய சுவரின் ஒரு பகுதியைக் கீழே தள்ளிவிட்டு மறுபடியும் கட்டுவதில் தயக்கம் காட்டாதவர். காளேமாமாவின் இந்தச் செயலால் விரக்தியடைந்த பாதிரி, இறுதியில் வெறுப்படைந்து விலகினார், மேலும் அவர் மிகவும் சோர்வாக இருந்ததால் பணியைத் தொடரவில்லை. நீர்த்தொட்டியின் இரண்டாவது மாடியைக் கட்டி எழுப்ப பெரிய ஸ்டீல் கட்டுமான சட்டங்கள் மும்பையிலிருந்து வரவழைக்க வேண்டி இருந்ததால், இது ஒன்றரை மாத கால தாமதத்தை ஏற்படுத்தியது.

ஆனால், கட்டமைப்புகளை எழுப்புவதில் காலதாமதம் ஆனதற்கு பாபாவும் ஒரு முக்கிய காரணம். பாபா, ஆதி சீனியருடன் தினமும் வருகையில், பணியாளர்கள் அவருக்கு மரியாதை செலுத்துவதற்காக வேலைகளை நிறுத்திவிட்டு வருவதால், கணிசமான அளவில் பணி நேரம் இழக்கப்பட்டது மட்டுமில்லாமல், பாபா, பல புதிய பணிகளையும் பரிந்துரைத்தார். எடுத்துக்காட்டாக, பெண்டுவிடம், "**மருத்துவமனையைச் சுற்றி ஒரு கூட்டுச் சுவர் அமைக்க வேண்டும் என்றும்... இதை இப்படி அல்லது அப்படிச் செய்திருக்கலாம்**" என்ற யோசனைகளைப் போன்ற மற்றும் பல!

ஆகஸ்ட் மாதத் தொடக்கத்தில், பழைய சமாதி அறை மற்றும் சுவர்கள் மீது குவிமாடம் கட்டுவது பெரும்பாலும் நிறைவடைந்தது. பழைய கடினமான கல் சுவர்கள் தகர்க்கப்பட்டு, முன்னாள் தபால் நிலைய கட்டிடத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கற்கள் உபயோகிக்கப்பட்டன. இது கடைசியில் மெஹர் பாபாவின் சமாதியாக மாறியது.

ஐந்து சிறிய, தகரத்தாலான நான்கு அடி உயர தியான அறைகளும் (பழைய 'ஸதக்' - SADHAK ஆசிரமத்தைப் போன்றது) சமாதியின் கிழக்குச் சுவரை ஒட்டிக் கட்டப்பட்டன. ஆனால் கல்லறையின் வடக்குப் பகுதியில் எழுப்ப வேண்டிய மகப்பேறு இல்லம் இன்னும் தயாராகவில்லை, மேலும் நீர் தொட்டியின் மேல் நிலையும் முழுமையாகக் கட்டப்படவில்லை. பாபா தொலைதூரத்திலிருந்து பார்வைக்குத் தென்படும் விதத்தில் தொட்டியின் மேல் கட்டமைப்பில் தனித்துவமான ஒன்றைக் கட்ட விருப்பம் தெரிவித்தபோது, பெண்டு ஒரு கோபுரத்தைப் பரிந்துரைத்தார். ஆனால் இரண்டாவது மாடிக்குச் செல்லும் படிகள் இன்னும் கட்டப்படவில்லை. பெண்டு, பாபாவிடம் அதிக நேரம் கேட்டார், ஆனால் பாபா அதை மறுத்துவிட்டார்.

1938, ஆகஸ்ட் 6 அன்று ஸரோஷ் மற்றும் மூன்று பேர் கொண்ட குழுவுடன் பாபா, மெஹராபாத் வந்தடைந்தார். பெண்டு அவர்களை, புதிய பக்தர்கள் என்று நினைத்தார். உண்மையில், அவர்கள் வேலையை ஆய்வு செய்யவந்த கட்டிட பொறியியலாளர்கள்; பாபாவின் திட்டப்படி அனைத்தையும் முடிக்க இரண்டு வாரங்கள் ஆகும் என்ற மதிப்பீட்டை அளித்தனர்.

பாபா, பெண்டுவிடம் அவரது பணியைத் தொடர அனுமதித்தார். மேலும் அவர் முதலில் கோரிய இரண்டு கூடுதல் வாரங்களை அவருக்குக் கொடுத்து, பணத்தை மிச்சப்படுத்தினார்.

மறுநாள் காலையில், பாபா, பெண்டுவை அழைத்து, தீவிரமான தொனியில், “**வேலையை முடிக்க இன்னும் இரண்டு வாரங்கள் தருகிறேன். ஆகஸ்ட் 25ஆம் தேதிக்குள் அதை முடிக்க வேண்டும். எனக்குத் தங்குவதற்கு வேறு இடமில்லை. பி.டபிள்யூ.டி பங்களாவிலிருந்து நாங்கள் மெஹராபாத்திற்கு வர வேண்டும். நீங்கள் முடித்தாலும் இல்லையென்றாலும் நான் ஆகஸ்ட் 25ஆம் நாள் இங்கு வருகிறேன்!**” என்றார்.

பெண்டு சற்று கவலையுடன் காணப்பட்டார்; பாபா அவரை ஊக்குவிக்கும் விதத்தில், “**தைரியமாக இருங்கள்! சிரமங்கள் மற்றும் அசௌகரியங்களுக்கு ஆளாகி மனம் தளர்ந்து, நம்பிக்கையை இழக்க வேண்டாம். அதையெல்லாம் எதிர்கொள்வதே ஆண்மகனின் இயல்பு, அதுவே வீரம்!**

“**ஒவ்வொரு விஷயமும் சீராக அல்லது எளிதாகச் செல்வதில் அவ்வளவு சுவாரஸ்யம் இராது**” என்று பாபா தொடர்ந்தார், “**ஒன்றை எளிதில் செய்து முடிப்பதில் பெருமை இல்லை. ஒருவர் எதிர்ப்பை சந்திப்பதோடு, சிரமங்களையும், மோசமான சூழ்நிலைகளையும் கடந்து செல்ல வேண்டும். இவை உண்மையான சோதனைகளாக இருந்து, மனிதனின் மிகச் சிறந்த மற்றும் மோசமான அனைத்தையும் வெளியே கொண்டுவரும். மாயாவின் எதிர்ப்பு எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, அவ்வளவு அதிகமாக நீங்கள் எதிர்க்கும் அளவிற்குக் கடுமையான உறுதியுடன் அதை எதிர்கொள்ள வேண்டும். கவலைப்பட வேண்டாம். உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள்.**”

பெண்டு பாபாவின் விதிமுறைகளை ஏற்றுக்கொண்டு, ‘நான் முழு மனதுடன் பணிபுரிந்தால், பாபா நிச்சயமாக எனக்கு உதவுவார்’ என்று நம்பினார். அவரால் இயன்றதைச் செய்வதாக உறுதியளித்தார், “பாபா, நீங்கள் விரும்பும் நாளுக்குள் எல்லாவற்றையும் முடிப்பேன், ஆனால் நீங்களும் ஒரு நிபந்தனைக்கு உடன்பட வேண்டும்; அந்த நாளுக்கு முன்னர் இங்கு வராதீர்கள்! ஒவ்வொரு முறை நீங்கள் இங்கு வரும்போதும் எனது வேலையை அதிகப்படுத்துகிறீர்கள்!” ஆகஸ்ட் 25ஆம் தேதி காலை எட்டு மணிக்கு வருவேன் என்று பாபா புன்னகைத்து வாக்குறுதியுடன் கையை நீட்டினார்.

மெஹராபாத் மலையின் பணிகள் இப்போது ஒரு திட்டவட்டமான காலக்கெடுவில் முடியும் நிலையில் இருந்தன. பெண்டு பகல், இரவெல்லாம் பணி தொடர வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்; மேலும் தொழிலாளர்களை (பெரும்பாலும் அரன்காவ்ம் கிராமத்தில் உள்ளவர்கள்) ஊக்குவிக்க ஒரு தேநீர் சத்திரத்தைத் திறந்தார். பெண்டு அவரது பெட்டி படுக்கைகளை மேல்மலைக்கு எடுத்துவந்து, அடுத்த இரண்டு வாரங்களில் ஒரு முறை கூட கீழே வரவில்லை. அனைத்தும் அதி விரைவில் செய்யப்பட்டது.

ஆகஸ்ட் 10 அன்று காக்கா பாரியா, நௌரோஜி தாதாசாஞ்சி இருவரும் மும்பையிலிருந்து எடுத்து வந்த கதவுகள், ஜன்னல்கள், வேண்டிய மர சாமான்கள் மற்றும் நான்கு காண்கிரீட் படிவத்திலான வடிவங்கள்: கிறிஸ்தவ சிலுவை (A CHRISTIAN CROSS), இந்து கோவில் (A HINDU TEMPLE), முஹமதிய மசூதி (A MOHAMMEDAN MOSQUE), மற்றும் ஸொராஸ்டிரிய தீச்சுடர் (A ZOROASTRIAN FIRE) சமாதியின் நான்கு மேல் மூலைகளிலும் பொருத்தப்பட்டன. பிரதான நுழைவாயிலுக்கு இரும்பால் தயாரிக்கப்பட்ட கதவும் மும்பையிலிருந்து கொண்டு வரப்பட்டது.

ஜால் கேரவாலா, மெஹர் பாபாவைப் பார்க்க மறுநாள் வந்தார். மும்பையில் வாழ்ந்து வந்த ராவ்ஸாஹேபும் சில நாட்களுக்குப் பிறகு பாபாவை சந்தித்தார்.

ஆகஸ்ட் 11ஆம் நாள், தாதா பாட்டீல், ஒரு வயதான கிராமவாசியை மெஹராபாத்திற்கு அழைத்து வந்து, அவரிடம் இருந்த காளை வண்டியை வாடகைக்கு எடுத்தார்; ஆனால் அந்த கிராமத்தார் மேல் மலையில் இருந்த மரப்பலகைகளைத் திருட்டுத்தனமாகத் திருடிச் சென்றதால், அன்று பாபா மெஹராபாத்திற்கு விஜயம் செய்த வேளையில், அந்த நபர் அவருக்கு முன் அழைத்துவரப்பட்டார். பாதிரி அல்லது பெண்டு எந்தத் திருடனையும் கடுமையாகத் தண்டித்திருப்பார்! ஆனால் பாபா அளித்த தண்டனை என்ன? அந்த நபர், திருடிய பலகைகளைத் தலையில் சுமந்து, கிராமத்தின் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று, 'மெஹர் பாபாவிடமிருந்து திருடிய சொத்து' என்று கூற வேண்டும்! தாதா பாட்டீல் அவரைப் பின்தொடர்ந்து, அவர் அதைச் செய்வதை ஊர்ஜிதப்படுத்த வேண்டும். அந்த முதியவர் மன்னிப்புக் கோரி, பாபாவின் கட்டளைப்படியே செய்வதாகக் கூறினார், ஆனால் பலகைகள் பளுவாக இருந்ததால் தலையில் சுமக்க சிரமம் என்று கெஞ்சினார், பாபாவும் அதை ஏற்றுக்கொண்டார்.

எரச்சின் உறவினர்களான ஸட்டா சிறுவர்கள் அன்று வந்திருந்தனர், பாபா அவர்களை சந்தித்து அவர்களின் பள்ளிப் படிப்பைப் பற்றி கேட்டார். சிறுவர்கள் இந்து மதப்பண்டிகை காரணமாக அந்த நாளில் விடுமுறை என்பதைத் தெரிவித்த போது, பாபா, புத்தரை மேற்கோள் காட்டி, **"நான் நித்தியமாக சுதந்திரமாகவும், கட்டுண்டவனாகவும் இருக்கிறேன்"** என்று கூறினார்.

கெய்மாயின் சகோதரர் நஸர்வன் ஸட்டா ஆகஸ்ட் 17 அன்று காக்கா சிஞ்சோர்கருடன் வந்து மஸ்த் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் ஆசிரமத்தையும், மேல் மலையின் புதிய கட்டிடங்களையும் பார்வையிட்டனர். அன்று காலை, ஆதியின் தந்தை கான்ஸாஹேபும் பாபாவுடன் வந்து அனைத்து இடங்களையும் பார்வையிட்டார். மெஹர் பாபா மஸ்துளுக்குச் செய்யும் சேவையால் - தலைமுடியை சீர்த்திருத்துதல், கழிவறைகளை சுத்தம் செய்தல், நீராட்டுதல், உணவூட்டுதல் - கான்ஸாஹேப் வெகுவாக ஈர்க்கப்பட்டார்.

முரளி காளே இந்த நேரத்தில் மும்பையில் ஹோமியோபதி மருத்துவம் படித்துத் கொண்டிருந்தார், ஆகஸ்ட் 19 அன்று பாபா, ஆதி சீனியரை அங்கு அனுப்பி அவரை மெஹராபாத்திற்குத் திரும்ப அழைத்து வருமாறு அறிவுறுத்தினார். ஆதி 22ஆம் தேதி தனியாக வந்தது பாபாவைப் பெரிதும் வருத்தமடையச் செய்தது.

அஹமதுநகரில் அமைந்த பெண்கள் குவாட்டர்ஸ் வளாகத்தில், ஒரு நோய்வாய்பட்ட நாய் அலைந்து திரிந்தது. பாபா, மன்ஸாரியை அழைத்து, அதை கவனித்துக் கொள்ளும்படிக் கேட்டதும், நாய்களைக் கடுமையாக வெறுக்கும் மன்ஸாரி, “ஆனால் நான் இங்கு நாய்க்கு அல்ல, உங்களுக்கு சேவை செய்ய வந்துள்ளேன்!” என்றதும், **“ஓ, உண்மையாகவா? நான் அதை ஒருபோதும் நினைத்துப் பார்த்ததில்லை”** என்று சொல்வது போல, பாபா அவரைப் பார்த்தார்.

அதற்குப் பிறகு பாபா, கெய்மாயை அழைத்து, மன்ஸாரியின் முன்னிலையில் அவரிடம் அதையே கேட்டபோது, “நிச்சயமாக பாபா, நான் அதை மகிழ்ச்சியுடன் கவனிப்பேன்” என்று கெய்மாய் கூறினார்.

**“ஆனால் இது நோய்வாய்பட்ட சொறி நாய்; நீங்கள் அதை நீராட்டி சுத்தம் செய்ய வேண்டும்”** என்று கூறி, **“நீங்கள் உங்கள் இல்லம் மற்றும் இதர அனைத்தையும் விட்டுவிட்டு, இங்கே வந்து ஒரு நாய்க்கு சேவை செய்ய வேண்டுமா?”** என வினவினார்.

“ஆனால், பாபா, அது இப்போது உங்கள் நாய்!” என்று கெய்மாய் சரியாக பதிலளித்தார்.

மன்ஸாரிக்கு சைகை முலம், பாபா தனது காதைச் சுட்டிக்காட்டி, **“அவர் சொன்னதைக் கேட்டீர்களா? இதிலிருந்து கற்றுக்கொள்ளுங்கள்!”** என்றார்.

இந்து பண்டிகை பஞ்சமி தினத்தன்று, பி.டபிள்யூ.டி. (P.W. D.) மாளிகையில் பெண்கள் பாபாவை கிருஷ்ணராகவும், மேற்கத்தியர்கள் உட்பட அனைத்து பெண்மணிகள் கோபிகைகளாகவும் ஆடை அணிந்தனர். விழாவில் பாபா பங்கேற்றார்; அவர்களை நடனமாட வலியுறுத்தி, பாரம்பரிய வண்ண நீரைத் தெளித்தார். பகவான் கிருஷ்ணர் பூமியில் இறங்கி வந்து தனது அன்பான கோபிகைளுடன் மீண்டும் விளையாடுவது போலத் தோன்றியது! மயக்கும் பார்வையில் காலம் வியப்படைந்து இவ்வாறு எடுத்துரைத்தது: “பிரியமானவர் தனது கோபிகைளை மகிழ்விப்பதன் மூலம் உலகின் தாகத்தை, தெய்வீக மதுவால் தணித்தார்!”

1938 ஆகஸ்ட் 19 வெள்ளிக்கிழமை அன்று, பகவான் கிருஷ்ணரின் பிறந்தநாளாகக் கொண்டாடப்பட்டது; அப்போது மெஹர் பாபா, கிருஷ்ணர் மற்றும் பாண்டவர்களின் கதையை மேற்கத்தியர்களுக்கு விவரித்தார். இந்தக் கருத்துக்களுடன் அவர் இவ்வாறு கூறி முடித்தார்: **“வேடிக்கை என்னவெனில், என்னுடன் இருக்கும் நீங்கள், நாள் முழுவதும் என்னுடன் இருப்பதால், நான் உங்களில் ஒருவன் என்று உணர்கிறீர்கள்; எனவே பயபக்தியின்**

**முக்கியத்துவம் இயற்கையாகவே இல்லாமலாகி, அந்த இடத்தில் அன்பு அல்லது வழக்கமான பரிச்சயம் நிலைகொள்ளும். இப்போது, அது அன்பாக இருந்தால், நீங்கள் உங்களை அறியாமலேயே என்னைப் போலாக முயற்சிக்கிறீர்கள், ஆனால் அது பரிச்சயம் மட்டுமே என்றால், என்னை உங்களைப் போல மாற்ற முயற்சிக்கிறீர்கள். எனவே என்னிடம் அன்பு காட்டினால், பின்பு, நீங்கள் என்னைப் போலாகிவிடுவீர்கள்.**"

இக்காலகட்டத்தில், பாதிரி ஒருமுறை பி.டபிள்யு.டி. பங்களாவிற்கு ஒரு கவாலி பாடகரை அழைத்து வந்தார். பாபா, அவரை சந்தித்த வேளையில், அந்த நபர், "இன்று நான் உங்களை சந்திப்பது என்னுடைய மிகப் பெரிய அதிர்ஷ்டம். ஒரு நாள் பாடல்களைத் தொகுத்து, உங்கள் முன் வழங்க விரும்புகிறேன், ஹஸ்ரத்" என்றார்.

அதற்கு பாபா, "**நீங்கள் பாட விரும்பினால், நான் உங்கள் இசையை ரசிக்கும் மனநிலையில் இருப்பதால் இப்போது பாடுங்கள்**" என்று பதிலளித்தார். ஆனால் அந்த நபர், "ஹஸ்ரத், என்னை மன்னித்து விடுங்கள்; இப்போது எனது நமாஸிற்கான நேரம். நான் புறப்பட்டாக வேண்டும் இல்லையேல் காலதாமதமாகி விடும்" என்றார்.

"**அப்படியானால் நீங்கள் போய் உங்கள் பிரார்த்தனையைச் செய்யுங்கள்**" என்று பாபா சைகையால் தெரிவித்தார்.

கவாலி பாடகர் அங்கிருந்து மசூதிக்குப் புறப்பட்டதும், பாபா, "**மக்களுக்கு, கடவுள் வேண்டாம், நமாஸ் தான் வேண்டும்! ஏழை கடவுள் என்ன செய்ய முடியும்? கடவுள் அவரையே கொடுக்க விரும்புகிறார்; ஆனால் அவர்கள் பிரார்த்தனையில் ஆர்வமாக இருக்கிறார்கள்!**" என்றார்.

காலமும் இவ்வாறு முணுமுணுத்தது: "உருவமில்லா கடவுள் மனித உருவில் வருகிறார், ஆனால் கடவுளிடம் பிரார்த்தனை செய்யும் அனைவருமே, அவரை மனித வடிவில் அடையாளம் கண்டுகொள்வதில்லை!"

நாட்கள் விரைந்து சென்றன, மெஹராபாத் மேல்மலையின் பணிகள் கிட்டத்தட்ட நிறைவடைந்தன. கட்டிடத்தின் சில பிரிவுகளில் கூரையாக மங்களூர் ஓடுகளை நிரப்ப வேண்டியிருந்தது. காளேமாமா, ஓடுகள் பல உடைந்துவிட்டதால், போதுமானதாக இல்லை என பெண்டுவிற்குத் தெரிவித்தார். பெண்டு உடனடியாக, ஸெயிலரின் மகன் தீன்ஷாவை அழைத்து, மண்டலி குவாட்டர்ஸின் கூரை ஓடுகளை எடுத்து உபயோகப்படுத்துமாறு கூறினார்.

கடைசியாக இந்த வேலை நிறைவடைந்ததும், பெண்டு புதிய கட்டிடத்தின் திறவுகோலை, பாதிரியிடம் ஒப்படைத்து, பாபா வரும்போது திறவுகோலை அவரிடம் கொடுக்குமாறு கூறினார். பெண்டு பல நாட்களாகத் தூங்காமல், களைத்துப் போயிருந்தார். அவர் தனது அறைக்குச் சென்று தூங்க முயன்றார், ஆனால் முடியாமல் ஒவ்வொரு கட்டிடத்தையும் ஆய்வு செய்யும் எண்ணத்தில் விழித்திருந்தார்.



குல்மாய் (GULMAI), கிட்டி (KITTY), மெஹரு ஸட்டா (MEHERU SATHA), நான்னி (NONNY)



**கிருஷ்ணனின் பிறந்தநாள், ஆகஸ்ட், 1938**

(KRISHNA'S BIRTHDAY, AUGUST 1938)

**குல்மாய்** (GULMAI), **ரானோ** (RANO), **கிட்டி** (KITTY), **நோரினா** (NORINA), **கோர்ஷெத்** (KHORSHED), **மெஹரு** (MEHERU), **ஹெலன்** (HELEN), **ஸூனாமாசி** (SOONAMASI)

1938, ஆகஸ்ட் 25ஆம் நாள், அனைத்து கிழக்கு மற்றும் மேற்கத்திய பெண்களையும், காலை எட்டு மணிக்கு, பாபா மெஹராபாத் மேல் மலைக்கு அழைத்துச் சென்றார். புதிய கட்டிடங்களைப் பார்வையிட்டு, பாபா மிக்க மகிழ்ச்சியடைந்தார். முதன்முதலாக, பெண்டுவைப் பாராட்டும் எண்ணத்தில் பாபா, கீழ் மெஹராபாத்திற்கு வந்து, பெண்டுவின் அறைக்கு வெளியே வராந்தாவில் நின்று, பாதிரியுடன் உரையாடினார். பாதிரியின் குரலைக் கேட்டு, பெண்டு படுக்கையிலிருந்து எழுந்து வெளியே வந்தார். புன்னகைத்து, பாபா அவரைத் தழுவி முத்தமிட்டார்; இது, பெண்டுவின் அயராத உழைப்பில் பாபா எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தார் என்பதை வெளிப்படையாகக் காட்டியது. **"நான், குறிப்பாக உங்களைப் பார்க்க வந்தேன். மேலை நாட்டினருக்கு அவரவர் அறைகளை ஒதுக்குவதற்கு முன்பு, முதலில் உங்களைப் பார்க்கும் எண்ணத்தில் இங்கே வந்தேன்"** என்றார்.

காளேமாமா, நௌரோஜி இருவரையும் சரியான நேரத்தில் பணியை முடிக்க உதவியதற்காகப் பாராட்டி. ஆகஸ்ட் 28 அன்று சமாதிக்கு வெளியே அனைவரையும் அழைத்து, மெஹர் பாபா, விழா ஒன்றை நடத்தினார். மூன்று முக்கிய தொழிலாளர்களுக்கு, பாபா மாலை அணிவித்தார். அரன்காவ்ம் கிராமத்தில் ஒரு சிறப்பு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது, மற்றும் பாபா ஒரு பெரிய ஊர்வலத்தில் அங்கு அழைத்துச் செல்லப்பட்டார். அரன்காவ்ம் கிராமவாசிகள் பாபாவை தரிசனம் செய்தனர்; பாபா அனைவருக்கும் பிரசாதத்தை வழங்கினார். பெண்டுவை வாழ்த்தி, ஸரோஷ் அந்த நேரத்தில் அனைவரின் உணர்வுகளையும் வெளிப்படுத்தினார், "பிரியமான பெண்டு, உங்களுக்கு நாங்கள் தலை வணங்குகிறோம். நீங்கள் அனைத்தையும் அற்புதமாகச் செய்தீர்கள்!"

பெண்டு கடின உழைப்பாளியாக இருந்தபோதிலும், அவரை சமாளிப்பது என்பது கடினமான காரியமாக இருந்தது. ஆதி சீனியர் இந்தப் பிரச்சினையை 27ஆம் தேதி பாபாவின் முன்னிலையில் எழுப்பினார்; பெண்டு ஒருதலைபட்சமாக இருந்த அதே வேளையில், விஷ்ணு, பாதிரி இருவருடன் ஒன்றிணைந்து ஆதியை வெவ்வேறு முடிவுகளிலிருந்து விலக்கி வைத்தனர். அனைத்து மனக்கசப்புகளையும் வெளிவரச் செய்து, பாபா, அவர்களிடையே இருந்த பிரச்சினையைத் தீர்த்து வைத்தார். ஆதி கூறியதில் பாபா ஓரளவிற்கு உடன்பட்டார், மேலும் அங்கிருந்து பிரிந்து சென்றவர்களில் இருவர் (ராவ்ஸாஹேப் மற்றும் கரீம்) பாபாவின் காரணமாக அவ்வாறு செய்யவில்லை, ஆனால் இதர மண்டலியுடனான வேறுபாடுகள் காரணமாக விட்டுச்சென்றதாகக் கருத்துத் தெரிவித்தார்.

மெஹராபாத் மேல் மலையில் ஒரு மகப்பேறு இல்லத்தை நிறுவுவது மற்றும் அவருக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பத்திரிகையைப் புதுப்பிப்பது குறித்தும் பாபா பெண் மண்டலியுடன் கலந்துரையாடினார். 1938, ஆகஸ்ட் 29

அன்று, பாபா பெண் மண்டலியை அழைத்து, அனைவருக்கும் அவரவர் கடமைகளை வழங்கினார்:

**பெண்மணிகளின் மேற்பார்வையில் நடத்த, நம்மிடையே நான்கு துறைகள் உள்ளன: சமையல், ஊழியம், மருத்துவமனை மற்றும் பத்திரிகை.**

**சமையல்: இதை கெய்மாய் நிர்வகிக்க வேண்டும். அவர் விஷ்ணு மூலம் பஜாரிலிருந்து தேவையான அனைத்து பொருட்களுக்கும் ஏற்பாடு செய்து, மனுவின் உதவியுடன் எல்லா பெண்களுக்கும் உணவு தயார் செய்ய வேண்டும். ஒவ்வொரு நாளும், கிட்டி மேற்கத்திய பெண்மணிகளுக்கு என்ன உணவு வேண்டும் என்பதை கெய்மாய்க்குத் தெரியப்படுத்துவார். இரண்டு பணிப்பெண்களான தனி, பாமி (DANI & BHAMI) இருவரும் சமையலறையில் மட்டுமே பணி புரிய வேண்டும், மற்றொரு பணிப்பெண் ஸேவ் (SEV), பாபாவின் சமையலறையில் (மெஹரா சமையல் செய்யும் இடத்தில்) அவருக்கு உதவ வேண்டும்.**

**ஊழியம்: கிட்டி ஏழு ஊழியர்களையும், (கழிப்பறை) துப்புரவாளர் ஸோரா (ZOHRA) என்ற பெண்மணியையும் கண்காணிக்க வேண்டும். பணிப்பெண்கள் சரியான நேரத்தில் வந்து செல்வது, ஒவ்வோர் அறையையும் தினமும் சுத்தம் செய்வது, ஒவ்வொருவரும் பாபாவின் அறிவுறுத்தலின் படி, தத்தமது கடமையை நிறைவேற்றுவது. ராஹியும் (RAHI) புதிய ஊழியரும் குளியலறையை சுத்தமாக வைத்து, தோட்டத்தில் பணி புரிய வேண்டும். வீட்டு வேலை, சலவை மற்றும் சோளம் போன்ற தானியங்களை சுத்தம் செய்வதற்கு, இதர ஊழியர்கள் - சந்தர் (CHANDER), லக்ஷி (LAHSHI), ஸோனி (SONY), ஷாந்தா (SHANTA), சுந்தர் (SUNDER) - வேலையைத் தங்களுக்குள் பகிர்ந்துகொள்ள வேண்டும்.**

**மருத்துவமனை:** இங்கு (மேல்மலையின் சமாதி மற்றும் அறைக்கு பின்னால் அமைந்துள்ளது), **பத்து** (பெண்) **நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வசதிகள் உள்ளன. நதீன் தலைமை செவிலியராக இருப்பார். ஒவ்வொரு நோயாளியும் வந்து செல்லும் விபரங்கள் பதிவு செய்யப்பட வேண்டியது அவசியம், மேலும் ஒவ்வொரு நோயாளிக்கும் ஒரு விரிவான 'அறிக்கை அட்டை' வைக்கப்பட வேண்டும். ஐரீன், மன்ஸாரி மற்றும் மெஹரு (ஜெஸவாலா) நோயாளிகளை நீராட்டி, உடை உடுத்தி, உணவளிப்பதை கவனித்துக்கொள்ள வேண்டும். நோயாளிகளின் சமையலை மேற்பார்வையிடுவது மன்ஸாரி. ஒரு பெண் மருத்துவர் தினமும் ஒரு முறை வந்து செல்வார், தகுதி வாய்ந்த, அனுபவம் மிக்க ஒரு செவிலியர் கடமையில் இருப்பார். ஆறு தனி பெண் ஊழியர்கள் மருத்துவமனையில் பணியமர்த்தப்படுவார்கள்.**

**பத்திரிகை மற்றும் பிற கடமைகள்: 'மெஹர் பாபா ஜர்னல்' (MEHER BABA JOURNAL) என்று அழைக்கப்படும் இந்தப் பத்திரிகை எலிஸபெத், நோரினா, நான்னி இவர்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு மருத்துவமனை குவாட்டர்ஸில் அலுவலகம் வழங்கப்படும்.**

ஸூனாமாசி பிரதான வாயிலைக் கண்காணிப்பார். அவரை 'சொர்க்கத்தின் நுழைவாயில்' என்று அழைக்கலாம்! அவர் லக்ஷியை காலை ஐந்து மணிக்கு எழுப்பி, ஸோரா கழிப்பறைகளை சுத்தம் செய்வதை ஊர்ஜிதம் செய்ய வேண்டும். ஸோரா, மேற்கத்திய பெண்களின் கழிப்பறைகளை சுத்தம் செய்வதைக் கண்காணிப்பது கிட்டியின் பொறுப்பு. பஜாரிலிருந்து பொருட்கள் வந்ததும், ஸூனாமாசி, கெய்மாய்க்குத் தெரிவிக்க வேண்டும், மேலும் கெய்மாய், பாமியை அந்தப் பொருட்களை உள்ளே எடுத்துவர அனுப்ப வேண்டும். நிலக்கரி அல்லது தானியம் போன்ற கனரக மூட்டைகளை எடுத்துவர ஸூனாமாசி, கிட்டியிடம் ஊழியர்களின் உதவியை நாடலாம்.

குழுவில் நோய்வாய்ப்பட்ட அனைவரையும் கவனிப்பது ரானோவின் பொறுப்பு; அனைத்து மருந்துகளும் சரியான நேரத்தில் விநியோகிக்கப்பட வேண்டும். ஒரு கிழக்கத்திய பெண்மணி உடல் நலமின்றி இருந்தால், கெய்மாய் அவரது உணவை கவனிக்க வேண்டும்; அதுபோல மேற்கத்தியராக இருந்தால், ஐரீன். ரானோ வீட்டுத் தச்சு வேலைகளையும் கவனித்துக் கொள்வார்.

இந்த நேரத்தில் பின்வரும் விதிகள் வகுக்கப்பட்டன:

இங்குள்ள நீர் குறித்து: மழை பற்றாக்குறை எப்பொழுதும் இருக்கும். ஒவ்வோர் ஆண்டும் கிணறுகளில் நீர் குறைந்துவிடும். மஸ்த் ஆசிரமம் மற்றும் மருத்துவமனைக்கு ஒரே ஒரு கிணறு மட்டுமே உள்ளது, எனவே நீரை வீணடிக்கக்கூடாது; பாபாவின் உத்தரவுபடி தண்ணீரைப் பயன்படுத்துங்கள்:

கழுவும் போது, குழாயைத் திறக்கவும், தண்ணீரை எடுத்ததும் மூடிவிட வேண்டும்; குழாய் திறந்திருக்கக் கூடாது.

ஒவ்வொருவரும் இரண்டு நாளுக்கு ஒருமுறை நீராட வேண்டும்; ஆனால் கெய்மாய் தினமும். ஒவ்வொருவருக்கும் அரை வாளி மிகவும் சூடான நீர் அனுமதிக்கப்படுகிறது. தலை முடியை சுத்தம் செய்ய, ஒன்றரை வாளி நன்கு சூடான நீர் எடுத்துக்கொள்ளலாம்.

பாபா அவரது அறையில் இல்லாத வேளையில் அல்லது அவரது அனுமதியின்றி எவரும் பாபாவின் வளாகத்திற்குள் நுழையக்கூடாது. வாலு மட்டுமே மேல் மலையில் பாபாவின் அறையை சுத்தம் செய்ய வேண்டும்.

மெஹர் பாபாவின் எதிர்கால சமாதியின் உட்புறத்தில் சித்திரம் வரைவது ஹெலன் டாம், ஆனால் அவர் மாலை ஏழு மணிக்கு மேல் அதைத் தொடரக்கூடாது.

பாபா இல்லாமல் எவரும் நீர்த்தொட்டிக் கோபுரத்தில் ஏறக்கூடாது.

பாபாவின் அனுமதியின்றி அல்லது அவருடன் வராமல் எவரும் வளாகத்து மதிலுக்கு வெளியே வரக்கூடாது. மருத்துவமனை மற்றும் 'மெஹர் பாபா ஜர்னல்' அலுவலகத்தில் பணிபுரிபவர்களுக்கு இதிலிருந்து விதி விலக்கு அளிக்கப்படுகிறது.

அனைவரும் கொசு வலை உபயோகிக்க வேண்டும்.

**கிட்டியைக் கேளாமல் எவரும் எந்த ஊழியரையும் அழைக்கக்கூடாது.**

**எந்த நேரத்திலும் மருந்து, டானிக்** (TONIC), **பால், ஆரஞ்சு ரசம், மற்றும் பலவற்றை எடுத்துக் கொள்ளும் ஒவ்வொருவரும், தத்தமது சொந்த கோப்பை அல்லது கரண்டியைக் கழுவி அதற்குரிய இடத்தில் வைக்க வேண்டும்.**

**ஏதேனும் பொருட்களை வாங்குவதற்கான பட்டியலில் 'பணம் செலுத்தி வாங்கவும்' அல்லது 'செலுத்த வேண்டாம்' என்று குறிப்பிட்டு கெய்மாய்க்கு அனுப்பி வைக்கவும். வேண்டிய கடிதங்கள், தொலைத்தந்திகள் - ஒரு நாளைக்கு ஒரு முறை, பாபா காலையில் கீழ்மலைக்குச் செல்லும் வேளையில் - பாபாவிடம் மட்டுமே வழங்கப்பட வேண்டும்.**

**பிங்-பாங் மேசையில் எவரும் எதையும் வைக்கக்கூடாது.**

**உணவு நேரம்:**

**காலை உணவு - 6:45 காலை மதிய உணவு - 11:30 காலை**

**தேநீர் - 2:30 பிற்பகல் இரவு உணவு - 6:00 மாலை.**

அன்று பிற்பகலில், ஆதி சீனியர், இராணுவ மேஜர் குல்ஷர் (GULSHAR) மற்றும் அவரது மனைவியை பாபாவின் தரிசனத்திற்காக மெஹராபாத்திற்கு அழைத்து வந்தார். மனைவி ஒரு மகனுக்காக வேண்டி, அவரை ஆசீர்வதிக்குமாறு பாபாவிடம் வெளிப்படையாக வேண்டியபோது, பாபா ஒரு மலர் இதழைக் கொடுத்து, அதைச் சாப்பிடச் சொன்னதும், அவரும் அவ்வாறே செய்தார். ஆனால் பாபா அந்தப் பெண்மணியிடம், **"உங்கள் மனதில் எல்லா வகையான ஆசைகளும் இருப்பதால், நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை; என்னைப் பாருங்கள், எனக்கு எந்த ஆசைகளும் இல்லை, நான் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கிறேன், ஒருபோதும் வருந்துவதில்லை. நான் உங்களிடமும் அனைத்திலும் பாபாவை அனுபவிக்கிறேன். எனக்கு எல்லாம் தெரியும் என்று நீங்கள் நினைத்தால், எந்தவொரு விருப்பத்தையும் வெளிப்படுத்த வேண்டிய தேவையில்லை. எனக்கு எதுவும் தெரியாது என்று நீங்கள் நினைத்தால், உங்களின் எந்தவோர் ஆசைக்காகவும் வேண்டுவதில் பயனில்லை"** என்று கூறினார்.

1938 ஆகஸ்ட் 30 அன்று ஆதி சீனியர், குல்மாய் ஆகியோருடன் மெஹர் பாபா, அக்பர் அச்சகத்தில் இரவு உணவிற்காகச் சென்றார். மெஹராபாத் மேல் மலையில் கட்டமைப்புகளை மேற்பார்வையிட்ட டாக்டர் கனி, பன்னிரண்டு நாட்கள் விடுமுறை முடிந்ததும் பூனாவிலிருந்து வந்தார். அவர், டாக்கேஃபால்கர், சாஞ்சி, ஆதி சீனியர் ஆகியோருடன் இணைந்து, மேல்மலை அலுவலகத்தில் 'மெஹர் பாபா ஜர்னலை'த் (MEHER BABA JOURNAL) தயாரிக்கும் பணியில் ஈடுபட்டார். ஜர்னல் அஹமதுநகரில் (நஸர்வான் ஸட்டா மற்றும் ஆர்.பி. ஹிரே - R.P. HIRAY ஆகியோரால் நடத்தப்படும்) மோகன் அச்சகத்தில் அச்சிடப்பட இருந்தது; ஆதி,

டாக்டர் கனி இருவரும் செப்டம்பர் 13 அன்று பத்திரிகைகளின் வடிவமைப்பை சரிபார்க்க அங்குச் சென்றனர். ஆதி திரும்பி வருவதில் காலதாமதமானதால், பாபாவை, அன்றைய தினம் இரவு உணவிற்கு அக்பர் அச்சகம் அழைத்துச் செல்லவிருந்ததை ஆதி மறந்துவிட்டார். பாபா கோபமடைந்து இருவரையும் வெகுவாகக் கண்டித்தார். 'அவர் டாக்டர் கனியை, கிட்டத்தட்ட அறைந்தது போலத்தான்!' என்று ஆதி தனது நாட்குறிப்பில் எழுதியிருந்தார்.

ஆனால், மெஹர் பாபா, டாக்டர் கனி, ஆதி இருவருடன் நெருங்கியவர்களைக் கேலி செய்து ரசிப்பது வழக்கம். ஸூனாமாசியை முடித்திருத்தம் செய்யும் 'நாவிதர்' என்று பாபா அழைப்பதுண்டு. ஒரு நாள் ஸூனாமாசி சிரிப்பூட்டும் விதத்தில் எதிர்வாதம் செய்தார், "நான் ஒரு நாவிதராக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்! குறைந்தபட்சம் ஒரு முறையாவது உங்கள் முகத்தை எனது கைகளால் தொட்டிருக்க முடியும்!"

மெமோ ஒவ்வொரு மாதமும் சில நாட்கள் பாபாவையும், மெஹராபாத்தில் வாழும் பெண்மணிகளையும் சந்தித்து, பூனாவிற்குத் திரும்புவது வழக்கம். மெமோ செப்டம்பர் 5ஆம் தேதி ஜால்பாயுடன் வந்து அக்டோபர் 11 அன்று பெஹராம் மற்றும் பெரினுடன் திரும்பிச் சென்றார்.

ஒருமுறை மெமோ பெண்மணிகளிடம், "மெரோகை கடவுள் என்று அழைக்காதீர்கள், சொர்க்கத்தின் மீது ஆணையாகச் சொல்கிறேன், அவனுக்கு மாலைகள் அணிவிக்காதீர்கள்! அகங்காரம் பெருகி ஆணவத்தின் குழிக்குள் விழுந்து விடுவான்!" என்றார்.

அந்த ஆலோசனையைக் கேட்டு, பாபா, "**ஆனால் நான் உண்மையில் கடவுள்**!" என்றார்.

"நீ கடவுளாக இருக்கலாம், ஆனால் நீ இன்னும் எனது குழந்தை! எல்லாவற்றிற்கும் மேலாக, நான் உன்னை ஈன்றெடுத்தேன்!" என்றார் மெமோ.

"**நீங்கள் என்னை ஈன்றெடுத்தீர்களா?**" பாபா சொற்செறிவுடன் முறையிட்டார், "**நான்தான் முதலில் உங்களுக்குப் பிறப்பை வழங்கினேன், பின்பு நீங்கள் என்னை ஈன்றெடுத்தீர்கள்! படைப்பின் ஆரம்பத்தில் நான் உங்கள் தாயாக இருந்தேன், இப்போது நீங்கள் எனக்குத் தாய்!**"

"நீ என்னை இவ்வளவு துன்புறுத்தும் போது எனது தாயாக எப்போதாவது இருந்திருக்க முடியுமா?" மெமோ புலம்பினார். "பூனாவில் எங்குமே எனது முகத்தைக் காட்ட முடியாததற்கு நீதான் காரணம்; சமூகம் என்னைக் கேலி செய்கிறது, நான் அப்படியே அமர்ந்து அதையெல்லாம் சகித்துக் கொள்ள வேண்டும்!"

அதற்கு பாபா, "**ஆனால் இதை எல்லாம் தாங்கிக் கொள்வது உங்களுக்கு மிகவும் நல்லது**!" என்றார்.

மெமோ ஆவேசமாக உற்றுநோக்கி, பின்பு, ஜெஸவாலா குடும்பத்தைப் பற்றி குறிப்பிடுகையில், "மெரோக், உனக்கு ஏதாவது புத்தி இருக்கிறதா? அத்தகைய மகிழ்ச்சியான குடும்பத்தை, அனைத்தையும் விட்டுவிட்டு இங்கே

ஏன் அழைத்தாய்? அவர்கள் செல்வந்தர்களாக வாழ்ந்தவர்கள். இந்த ஏழை அன்பர்களின் நிலைமை இப்போது என்னவாகும்?" என வினவினார்.

**"இங்கே அவர்கள் மகிழ்ச்சி, துக்கம் இரண்டும் என்ன என்பதைக் கற்றுக்கொள்வார்கள்!"** என்று பாபா பதிலளித்தார்.

இந்தக் காலகட்டத்தில், இரவு ஓய்வு பெறுவதற்கு முன்னர், ஒன்பது மணியளவில் பாபா ஒவ்வொரு பெண் மண்டலியையும் தழுவி விடைபெறுவது வழக்கம். பாபா இவ்வாறு விடைபெற்றுச் செல்லும் வேளையில், மெமோ வேகமாக நடந்து தனது அறைக்குச் சென்று விடுவார். பாபா, மெமோவை அரவணைக்க அவரது அறைக்குச் செல்ல வேண்டியிருக்கும். அப்போது, பாபா இவ்வாறு வினவினார், **"நீங்கள் ஏன் சென்று விடுகிறீர்கள்? உங்களுக்கு 'இரவு வணக்கம்' கூறி விடைபெற நான் இங்கு வர வேண்டும்!"**

மெமோ பதிலளித்தார், "நீ பிறரைத் தழுவி இரவு வணக்கம் சொல்வது எதுவும் உனக்குப் பிரச்சினையாகத் தெரியவில்லை, என்னை அரவணைக்க வருவதைப் பற்றி மட்டுமே புகார் செய்கிறாய்."

மெமோவைத் தழுவி விடைபெறும் வேளையில் ஏதேனும் ஒரு சாக்குப்போக்கில் திரும்ப அழைப்பதுண்டு. இப்படி நான்கு அல்லது ஐந்து முறை நடந்தது. கடைசியாக, வெளியேறி, பாபா பிறரிடம், **"பாருங்கள், நான் கடவுளாக இருந்தாலும், எனது தாயாருக்கு எப்படி சேவை செய்கிறேன்!"** என்றார்.

மெமோ, பாபாவை ஆழ் இதயத்திலிருந்து நேசித்தார், பூனாவில் எவரேனும் பாபாவிற்கு எதிராக, அவதூறாகப் பேசினால் மெமோ தைரியமாக அவர்களைக் கண்டித்தார். பெரும்பாலான பார்சிகளும், ஈரானியர்களும் மெஹர் பாபாவைக் கடுமையாக எதிர்த்தனர்; ஆனால் மெமோ அவர்களிடம், "மெரோக் எனது கடவுள்! நீங்கள் அவனுக்கு எதிராகப் பேசினால் அனைவரும் அழிந்து தொலைந்து போவீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்களுக்கு ஏதேனும் புத்தி இருந்தால் அவனது பாதங்களில் பணிந்து வணங்குங்கள். அவன் ஸொராஸ்டர்!" என்று கூறினார்.

இந்த நேரத்தில், குல்மாய் மெஹராபாத் மேல் மலையில் தங்கியிருந்தார்; மெமோ அங்குச் செல்லும் போது, இருவருக்குமிடையே தவிர்க்க முடியாத சச்சரவுகள் ஏற்படும் - ஷிரீன்மாய் உலகத் தாய், குல்மாய் ஆன்மீகத் தாய். ஒரு சந்தர்ப்பத்தில் (1938, அக்டோபர் 19), ஆதி சீனியர் தனது நாட்குறிப்பில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: "ஷிரீன்மாய் வழக்கம் போல, குல்மாயைப் பார்த்துப் பொறாமைப்படுகிறார், மேலும் பாபா இந்த சூழ்நிலையால் மிகவும் பாதிக்கப்படுகிறார்."

ஆனால் அவ்வப்போது, ஆண் மற்றும் பெண் மண்டலியிடையே, பாபா போட்டிகளை உருவாக்குவதுண்டு; இதனால் அவர்களின் மனதில் தேங்கியுள்ள 'குப்பைக்கூளங்கள்' திறந்த வெளியில் அடித்துச் செல்லப்படும். இத்தகைய மோதல்கள் அகந்தையை அகற்றுவதற்கும், அவரைப் பின்பற்றுபவர்களை,

சத்தியத்தை நோக்கி வழிநடத்துவதற்கும் அவருடைய பணியின் ஓர் அங்கமாகத் திகழ்கிறது.

1938, செப்டம்பர் மாதத்தில், ஒரு சந்தர்ப்பத்தில், பாபா 'பற்றின்மை' (DETACHMENT) குறித்து பெண்மணிகளுக்கு விளக்கினார்:

**நான், பெரியது, சிறியது அனைத்திலும் உள்ளேன். எல்லாமே பூஜ்ஜியம், எனவே எதற்கும் ஏன் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்? மனநிலை பாதிக்கப்பட்டவர்களைப் பார்த்துக் கொள்வதில் நான் அடையும் மகிழ்ச்சியைப் போல, மண்டலியுடன் இருப்பது, எனது முகவர்களுக்கு உத்தரவுகளை வழங்குவது, சிறப்பான உலகளாவிய பணிபுரிவது, ஹெடிக்கு முட்டைகள், உங்கள் அனைவருடைய அஞ்சல்களையும் எடுத்து வருவது - இவை அனைத்தையும் நான் மிகவும் ரசித்து மகிழ்கிறேன். நீங்கள் சிறிய சிறிய விஷயங்களிலிருந்து தப்ப முடியாது, ஏனெனில் கடவுளைத் தவிர பிற அனைத்தும் சிறிய விஷயம்தான். நீங்கள் என்ன செய்ய முடியும் என்பதில் பற்றற்றவர்களாக இருக்க வேண்டும். சிறிய விஷயங்களைப் பயன்படுத்துங்கள், ஆனால் அவை சிறியது என்பதை அறிந்து அவற்றுடன் பற்றிக் கொள்ளாமலும், ஒட்டிக் கொள்ளாமலும் இருங்கள்.**

**உதாரணமாக, செயற்கை பற்கள் உண்பதற்காக உங்கள் வாயில் பொருத்தப்பட்டுள்ளன. அவை பொய்யானவை, போலியானவை என்பதை நீங்கள் அறிவீர்கள், எனவே அவற்றை நீங்கள் வெளியே எடுக்கலாம்; பொருத்தி, பிரித்து நீங்கள் அவற்றைப் பயன்படுத்துகிறீர்கள்.**

**நான் 'உலாவும் கழிவறை'** (WALKING LATRINE) **என்றழைக்கும் இந்த அசுத்தமான உடல், ஆன்மா தன்னைத் தானே உணர பயன்படுத்தப்படுகிறது. நீங்கள் அதிலிருந்து தப்பிக்க முடியுமா? நீங்கள் அதன் வியர்வையைத் தவிர்க்க முடியுமா? எனவே நீங்கள் என்ன செய்கிறீர்கள்? வியர்வையைக் கழுவி உடலை சுத்தம் செய்கிறீர்கள். ஆனால் நாள் முழுவதும் நீங்கள் 'எனக்கு ஏன் வியர்வை வருகிறது? எனக்கு வியர்வை வரக்கூடாது' எனக் கூச்சலிடுவதில் எந்த பயனுமில்லை. நீங்கள் அதிலிருந்து தப்பிக்க முடியாது, ஆனால் அதைப் பொருட்படுத்தாமல் பற்றற்ற தன்மையுடன் இருக்கலாம்.**

செப்டம்பர் 2ஆம் நாள், பெண் மண்டலிக்கு 'அன்பு', 'நேசம்' குறித்து விளக்கும் போது, மெஹர் பாபா பண்டைய பாரசீக மன்னர் கஸ்னவியைப் (GAZNAVI) பற்றிய இந்தக் கதையை விவரித்தார்:

**முஹமது கஸ்னவிக்கு ஆயாஸ் என்ற அடிமை இருந்தார், அவர் மன்னரை மிகவும் நேசித்தார். அவர் ஒவ்வொரு விஷயத்திலும் மன்னனுக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய எல்லா கட்டளைகளையும் நிறைவேற்றினார். ஆயாஸுக்கு, தனது சொந்த வாழ்க்கையில் அக்கறை**

**இல்லை, ஆனால் மன்னன் கஸ்னவியை மகிழ்விக்க எதையும் செய்யத் தயாராக இருந்தார்.**

**மன்னன், ஆயாஸை அதிகம் நேசித்ததால், அவையின் இதர உறுப்பினர்கள் பொறாமையுற்றனர்; மேலும் மன்னன் தனது அடிமை மீது அன்பு செலுத்துவதை அவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை.**

**மன்னனுக்கு இது குறித்து அனைத்தும் தெரியும். ஒருமுறை அவர் தன்னைச் சுற்றியுள்ள அரசவை உறுப்பினர்களை வரவழைத்து, ஒரு விலை உயர்ந்த முத்துமணியை அவர்கள் முன் வைத்து, அதைக் கல்லால் துண்டு துண்டாக உடைக்கும்படிக் கட்டளையிட்டார்! அனைவரும் திகைத்துப்போய், அத்தகைய மதிப்புமிக்க ரத்தினத்தை உடைக்க உத்தரவிட மன்னருக்குப் பைத்தியம் பிடித்ததாக நினைத்தார்கள்! அவர்களில் ஒருவர் கூட மன்னனுக்குக் கீழ்ப்படியத் தயாராக இல்லை.**

**மன்னன் கஸ்னவி, பின்னர் ஆயாஸை அழைத்து முத்துமணியை உடைக்க உத்தரவிட்டார். ஆயாஸ் உடனடியாக அந்த உத்தரவை நிறைவேற்றி, அந்த முத்தை உடைத்து சிதறடித்தார்! மன்னர் கஸ்னவி உடனே, "ஆயாஸ் எனது வார்த்தையை, முத்துமணியை விட அதிகமாக மதிக்கிறார்! எனது வார்த்தைகளுக்கு முன் ஒரு மாணிக்கத்தில் என்ன இருக்கிறது? நான் அவரிடம் சொல்லும் எதையும் அவர் செய்கிறார், எனது கட்டளைகளை, புதையல்களுக்கும் மேலாக மதிக்கிறார். எனது கட்டளைகளை நிறைவேற்றுவதும், என் இன்பத்தை நிலைநிறுத்துவதும் தவிர அவருக்கு வேறு எதுவும் தெரியாது. அவர் என்னை மிகவும் நேசிக்கிறார், நானும் அவரை மிகவும் நேசிக்கிறேன்! உங்கள் பார்வையில், முத்து மதிப்புமிக்கது, ஆனால் ஆயாஸின் பார்வையில், எனது வார்த்தைகளின் மதிப்பு மற்றும் என் இன்பம் அதைவிட விலைமதிப்பு மிக்கது!"**

கதைக்குப் பிறகு, பாபா இந்தக் கருத்துடன் நிறைவு செய்தார்:

**நீங்கள் என் அன்பிற்கும், நேசத்திற்கும் தகுதி வாய்ந்தவர்களாக இருக்க விரும்பினால், ஆயாஸைப் போல் இருங்கள்! ஆனால், இந்த நேரத்தில், நீங்கள் ஆயாஸைப் போலல்லாமல், பியாஸைப்** (வெங்காயத்தைப்) **போல் இருக்கிறீர்கள்! ஒவ்வொரு முறை உங்களைக் 'கையாளும்' போதும், நான் அழுகிறேன்!**

1938 ஆகஸ்ட் மாதத்திலிருந்து சுவிஸ் கலைஞரான ஹெலன் டாம் (HELEN DAHM), மெஹர் பாபாவின் சமாதியின் உட்சுவர்களில் வண்ணமயமான ஓவியங்களை வரையத் தொடங்கினார். அவர் காலை முதல் மாலை வரை தனது பணியில் முழு வீச்சில் ஈடுபட்டார். ஹெலனுக்கு அப்போது வயது அறுபது; குவிமாடத்தின் உச்சவரம்பை வரைவதற்கு, தற்காலிக சாரக்கட்டுக்கு மேல் ஏறி, முதுகை சாய்த்து தாங்கி பணிபுரிந்தார். ஹெடி மெர்டென்ஸ், ஓவியக்கலையில் மிக்க திறன் படைத்தவர், ஹெலனுக்கு அவரது

வண்ணப்பூச்சுகளின் சரியான கலவையைத் தயாரிப்பதில் உதவியாக இருந்தாலும் ஹெலன் மட்டுமே ஓவியத்தை வரைந்தார்.

சமாதிக்கு மேல் ஒரு குவிமாடம் கட்டுமாறு பாபா, பெண்டுவிற்கு அறிவுறுத்தியபோது தான், இது அவரது எதிர்கால சமாதியின் தளம் என்பது அனைவருக்கும் தெரிய வந்தது. 1927ஆம் ஆண்டில், பாபா ஏகாந்தவாசம் மேற்கொண்டு, பிரேம் ஆஷ்ரம சிறுவர்களைத் தனது இறையன்பின் கோப்பையிலிருந்து அருந்த வைத்த இடம் இது. 1935ஆம் ஆண்டு மேல் மலையில் டின் கேபின் கட்டப்படும் வரை, அவர் இரவை இங்குதான் கழித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. 'சமாதியின் நிலத்தடி அறை' அவரது பௌதீக உடலைப் பாதுகாக்கும் இடம் என்பதை அனைவரும் அறிந்தனர், மேலும் அவர்கள் இந்தத் தனிச் சிறப்புமிக்க கட்டமைப்பை, புனிதமான இடமாகப் பாதுகாத்தனர்.

ஹெடி தனது குழந்தைகளை, சுவிட்சர்லாந்தில் கணவர் வால்டரின் பராமரிப்பில் விட்டு வந்தார். அவரது உறவினர்கள், ஒருவேளை, அவரை வீட்டிற்குத் திரும்பி வர வைக்கும் முயற்சியில், ஹெடியின் இரண்டு இளம் குழந்தைகளுக்கு நிமோனியா பாதிப்பு ஏற்பட்டதாகக் கடிதம் எழுதியிருந்தனர். ஹெடி அந்தக் கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்த வேளையில், நோரினா அறைக்குள் வந்து, நிலைமையை பாபாவிற்குத் தெரியப்படுத்த ஹெடியை அழைத்துச் சென்றார். 'பாபா, தனது குடும்பத்திற்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டதால், தான் கவலைப்படவில்லை' என்று ஹெடி, பாபாவிடம் கூறினார்.

பாபா, ஹெடியின் அணுகுமுறையைப் பார்த்து மிக்க மகிழ்ச்சி அடைந்தார். பாபா, சிரித்துக்கொண்டே, "**நான் இப்போது உங்கள் குழந்தைகளைப் பார்க்கிறேன். அவர்கள் சூரியக்குடையின் கீழ் புல்வெளிகளில் அமர்ந்திருக்கிறார்கள். அவர்களின் பாட்டியும் உடன் இருக்கிறார், வால்டர் அவர்களின் புகைப்படத்தை எடுக்கிறார். இளைய குழந்தை மூக்கில் விரல் வைத்த வண்ணம் அமர்ந்திருக்கிறது**" என்று விவரித்தார்.

மூன்று வாரங்களுக்குப் பிறகு, ஹெடிக்கு வந்த இன்னொரு கடிதத்துடன் ஒரு புகைப்படமும் இருந்தது; சரியாக, அப்படியே பாபா விவரித்தபடி - சூரியக்குடையின் கீழ் குழந்தைகள் மற்றும் இளைய குழந்தையின் விரல் மூக்கைத் தொட்டாற் போல் - இருந்தது.

இக்காலகட்டத்தில், மெஹர் பாபா, ஹோமி மாமா ஸட்டா, மனைவி பில்லா (PILLA), அவர்களது இரண்டு மகள்களான அலு (ALU), தூன் (DHUN) ஆகியோரை மெஹராபாத்திற்கு வரவழைத்தார். அவர்களுக்கு ஒரு வயதில் ரோஷன் என்ற மற்றுமொரு மகள், அக்பர் அச்சகத்தில் வாழ்ந்து வந்தார்.

பில்லா, அலு, தூன் மூவரையும் ஒவ்வொரு நாளும் ஒருவரை மெஹராபாத் மேல் மலையில் தங்க அனுமதிப்பதாகத் தெரிவித்தார். தூன்,

பதினொரு வயது சிறுமி தைரியமாக, பாபாவிடம் “கெய்மாய் மாமியை உங்களுடன் இங்கே தங்க அனுமதித்தீர்கள். ஏன் நான் இல்லை?” கெய்மாய் அமைதியாக இருக்குமாறு அவரைக் கிள்ளினார். அவரை ஆறுதல்படுத்த, பாபா தூனை எட்டு நாட்கள் தங்க அனுமதித்தார்.

தூன் சற்று முடமாக இருந்தார். அவரை பரிசோதித்த டாக்டர் நீலு, காலில் குருதி கட்டியாகக் கொப்புளம் இருப்பதாகவும், அதை அறுவை சிகிச்சை செய்தால் சரியாகிவிடும் என்றும் தெரிவித்தார். அறுவை சிகிச்சை என்பதைக் கேட்ட தூன் அச்சத்தில் பாபாவிடம் அவர் இல்லத்திற்குச் செல்ல விரும்புவதாகக் கூறினார்; பாபாவும் அதற்கு இணக்கம் தெரிவிக்க, ஒரு நாள் மட்டுமே தங்கிய பின்பு தூன் திரும்பிச் சென்றார்.

1938, செப்டம்பர் 19 அன்று, மேற்கத்திய பெண்மணிகளில் ஒருவர், “நாம் ஏன் துன்பப்படுகிறோம்?” என்று கேட்டதற்கு, பாபா இந்த பதிலை எடுத்துரைத்தார்:

**நாம் ஏன் பிறக்க வேண்டும்? பிறப்பின் அர்த்தமே துன்பப்படுவது. துன்பம், உண்மையான நித்திய மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும் போது, இந்தத் துன்பத்திற்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. துன்பத்தைப் போக்குவதற்குத் துன்பம் தேவைப்படுகிறது. இந்தத் துன்பங்களில் பெரும்பாலானவை தேவையற்றவை, சுயமாக உருவாக்கப்படுபவை. உலகின் துன்பங்களில் தொண்ணூற்றொன்பது சதவீதம் சுயமாகவே உருவாக்கப்படுகிறது. இருந்தும், அவர்கள் கேட்பது: “நாம் ஏன் துன்பப்படுகிறோம்?” பெரும் துன்பம் என்றாலே பெரிய விடுதலை.**

**துன்பம் இல்லாவிடில், அறியாமை என்பது என்ன? போர் என்பதும் தனிப்பட்ட, விசேஷமான துன்பம் அல்ல. மக்கள் எப்பொழுதுமே கஷ்டப்படுவதில்லையா? உலகளாவிய ஒட்டுமொத்த துன்பம், இறுதியில் போருக்கு வழிவகுக்கிறது. மக்கள் எதிலுமே திருப்தி அடையாததால் அவதிப்படுகிறார்கள்; அவர்கள் மேலும் மேலும் அடைய விரும்புகிறார்கள். அறியாமை ஒன்றுதான் பேராசை மற்றும் மாயைக்கு வழிவகுக்கிறது. நீங்கள் எதையும் விரும்பவில்லை என்றால், துன்பப்படுவீர்களா? ஆனால் நீங்கள் விரும்புகிறீர்கள். நீங்கள் எதையும் விரும்பவில்லை என்றால், சிங்கத்தின் வாயில் கூட நீங்கள் துன்பப்படமாட்டீர்கள்! போர் இல்லாத நிலையிலும் அனைவரும் உடல் ரீதியாக பாதிக்கப்படுகிறார்கள்.**

**உடல் ரீதியான துன்பங்களை விட, மனக்கவலைகள் மிகவும் மோசமானது. மட்டுப்படுத்தப்பட்ட கண்ணோட்டம் உடைய உலக மக்கள் உடல் ரீதியான துன்பத்தைப் பற்றி மட்டுமே நினைக்கிறார்கள். அவர்கள் குண்டுகள் தாக்கிய நபரின் படங்களைச் சித்தரிக்கிறார்கள், மூக்கு, கை கால்கள் உடைந்த புகைப்படங்களைக் காட்டுகிறார்கள். சில நேரங்களில் உடல் ரீதியான துன்பங்கள் மன உளைச்சலைக் குறைக்கும். துன்பம் மற்றும் மகிழ்ச்சி பற்றிய உலகின் கருத்து முற்றிலும் வரையறுக்கப்பட்டுள்ளது.**

மகிழ்ச்சி - உண்மையான மகிழ்ச்சியைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது - இந்த மகிழ்ச்சிக்காக, பிரபஞ்சத்தின் அனைத்து உடல் மற்றும் மன ரீதியான துன்பங்களைத் தாங்கிக்கொண்டாலும் தகும்; அத்தனை மதிப்புமிக்கது! பின்னர் எல்லா துன்பங்களும் இல்லாதது போலாகிவிடுகிறது. இது அறியாமை காரணமாக விளைந்தது. அறியாமை, உங்களை ஒரு கரப்பான் பூச்சியைப் பார்த்தாலே பயத்தில் நடுங்கச் செய்கிறது; உண்மையான மகிழ்ச்சி உங்கள் உடலில் ஒரு புலியின் பற்களைக்கூட உணரவைக்காது!

இறை உணர்வையும், ஞானத்தையும் அடையாதவர்கள் கூட, தங்கள் மனதைக் கட்டுப்படுத்த முடியுமானால், உயிரோடு புதைத்தாலும் கூட, அது அவர்களை எந்த வேதனையையும் துன்பத்தையும் உணரச் செய்யாது. இறை ஞானத்தின் ஒரு சிறிய வாசனையைக் கூட நுகராத ஒரு யோகி, கொதிக்கும் எண்ணெய் தொட்டியில் (அவரது யோக சக்தியின் மூலம்) தன்னைத் தூக்கி எறிந்தும், அவர் வலியை உணராதது மட்டுமல்லாமல், அவரது தோல் கொஞ்சம் கூட எரிந்து காயப்படவில்லை. இது பொருட்கள் மீதான மனதின் கட்டுப்பாடு அல்ல, சொல்லப்போனால் அதை விடவும் குறைந்த நிலையில் இருக்கும் சுவாசக் கட்டுப்பாடு.

நான் இறை ஞானத்தைப் பற்றி பேசும்போது, அது சாதாரண ஞானமல்ல: அது கடவுளின் அனுபவம். கடவுளைப் பற்றிய அறிவு என்பது கடவுளாக மாறுவது - இதர அனைத்தும் பூஜ்ஜியம். குருநாதர் கடவுள் நிலையிருந்து சாதாரண உணர்வு நிலைக்கு வரும்போது, அவர் கடவுளை உலகில் கொண்டு வருகிறார். அவர் ஒரு நொடிப்பொழுது கூட கடவுளிடமிருந்து பிரிந்திருப்பதில்லை; ஆனால் அவர் அனைவருடனும் ஒரே நிலையில் இருக்கவேண்டும் என்ற இரக்க குணத்துடன் இருப்பதால் - அவர் சாதாரண மனிதனைப் போல் உண்ணுகிறார், அருந்துகிறார், அவதிப்படுகிறார். இவை அனைத்தும் அவரைத் தனிப்பட்ட முறையில் பாதிக்காது ஆனால் உலகளவில் பாதிக்கும்.

மேலை நாட்டினர் பெரும்பாலும் கிறிஸ்தவ பின்னணியைச் சார்ந்தவர்கள் என்பதால், இயேசுவைப் பற்றிய கேள்விகள் எழும். **'இயேசு சிலுவையில் உயிர் துறக்கவில்லை'** என்று பாபா ஏற்கனவே விளக்கியுள்ளார்; அவர்களில் ஒருவர், "கிறிஸ்து சிலுவையில் உடல் ரீதியாகத் துன்பப்பட்டாரா?" என வினவினார்.

பாபா பதிலளித்தார்:

இல்லையென்றால், உடல் எதற்காக? இயேசு, இவ்வாறு பாதிக்கப்படவில்லை என்றால், சிலுவையில் அறைவதன் தேவைதான் என்ன? கிறிஸ்து துன்பங்களைத் தாங்கிக்கொண்டார். இல்லையென்றால், அவர் எடுத்த மனித வடிவத்தின் அர்த்தம்தான் என்ன? இறையறிவை, தொடர்ந்து உள்ளடக்கிய தனது உலகளாவிய மனதின் மூலம் - இவை அனைத்திலும் ஒன்றுமே இல்லை என்ற அறிவின் அடிப்படையில் இயேசு

அனுபவித்ததை, இறை இன்பம் நலிவுறாமல் நலமுடன் இருக்கச் செய்தது. இயேசு துன்பப்பட்டார், ஆனால் துன்பத்தால் அவர் பாதிக்கப்படவில்லை. இறை ஞானம் என்பது இறைவனோடு முழுமையாக ஐக்கியமாவது! குருநாதரின் துன்பம் உலகளாவிய துன்பம். ஆனால் அவரது உலகளாவிய துன்பம் குருநாதரின் இறைத்தன்மையில் எந்த விளைவையும் ஏற்படுத்தாது.

நீங்கள் கடவுள் நிலையை அடைந்ததும் என்ன நடக்கும் என்பதை விளக்குவது எப்படி? உடல், மனம், அகந்தை எதுவும் இல்லை; பிரபஞ்சமும் இல்லை, கடவுளாக நீங்கள் எல்லையில்லா ஆனந்தத்தை அனுபவிக்கிறீர்கள். அப்போது நீங்கள் எல்லையில்லா அறிவையும், சக்தியையும் அனுபவிக்கிறீர்கள்; சக்தியை அனுபவித்தாலும் நீங்கள் அதைப் பயன்படுத்துவதில்லை; இந்த சக்தி, இந்த அறிவு, இந்தப் பேரின்பத்துடன் ஒன்றிணைந்து இருக்கிறீர்கள்.

நீங்கள் உலகத்திற்காக கீழே இறங்கி வரும்போது, ஓர் உலகளாவிய மனதோடு வருகிறீர்கள். இப்போது, கடவுளாகிய நீங்கள் எல்லா ஆத்மாக்களையும் உங்களுக்குச் சொந்தமாகக் காண்கிறீர்கள்; நீங்கள் எல்லாவற்றிலும் உங்களைப் பார்க்கிறீர்கள், உங்கள் உலகளாவிய மனதில் எல்லா மனங்களும் உள்ளன - ஒரே மனமாக. ஒவ்வொரு தனிப்பட்ட மனமும் அடையும் துன்பமும் உங்கள் உலகளாவிய மனதிற்கு வருகிறது. உங்கள் உலகளாவிய மனம் எல்லா மனங்களின் துன்பத்தையும் அனுபவிக்கிறது; அதேபோல், எல்லா மனங்களின் மகிழ்ச்சியையும் அனுபவிக்கிறது.

ஆனால் எல்லா மனங்களிலும் அறியாமை இருப்பதால், உலகளாவிய மனம் அனுபவிக்கும் துன்பம், அந்த மனங்களின் ஒட்டுமொத்த மகிழ்ச்சியை விட மிகையானது; எனவே, நீங்கள் எல்லையற்ற துன்பத்தை அனுபவிக்கிறீர்கள். இருப்பினும், உங்கள் ஆத்மா - முழு உணர்வை அடைந்த நிலையில், தொடர்ந்து கடவுளின் எல்லையற்ற ஆனந்தத்தை அனுபவித்து வருவதால், அந்தத் துன்பத்தால் பாதிக்கப்படுவதில்லை. இப்போது நீங்கள், ஆத்மாவாக (உங்கள் தற்போதைய தனிப்பட்ட நிலையில்), கடவுளைப் பற்றியும், கடவுளின் ஆனந்தத்தைப் பற்றியும் உணர்வற்றவர்களாக இருக்கிறீர்கள். உங்கள் தனிப்பட்ட மனம் அனுபவிக்கும் துன்பம் அல்லது மகிழ்ச்சி உங்களின் தனிப்பட்ட மனப்படிவங்களைப் பொறுத்தது. ஆத்மா, இருந்தபடியே பாதிக்கப்படாமல் இருக்கும், ஏனெனில் அறியாமையின் மூலம் உங்கள் ஆன்மா உங்கள் மனதுடன் அடையாளப்படுத்திக் கொள்கிறது.

இறை ஞானத்தை அடைந்த பின்னர், உங்கள் ஆன்மா முழு உணர்வுடன் பேரானந்தத்தை அனுபவிக்கிறது. (அப்போது நீங்கள் கீழே இப்பூவுலகில் வருவதானால்) உங்கள் மனம் துன்பம் அல்லது மகிழ்ச்சியை அனுபவிக்கும்; ஆனால், ஆத்மா எந்நிலையிலும் பாதிக்கப்படுவதில்லை. நீங்கள்தான் ஆத்மா. உங்கள் பணி முடிந்ததும் உலகளாவிய மனமும், அதனுடனான உலகளாவிய துன்பமும் மறைந்துவிடும்; ஆத்மா இறை இன்பத்தை நித்தியமாக அனுபவிக்கும். இறை ஞானம் என்று நான்

**கூறுவதன் அர்த்தம், அந்த ஞானத்தை அனுபவபூர்வமாக அறிந்து கொள்வதாகும்.**

**இந்த யுத்தமும் அதனால் விளையும் துன்பமும் மிகவும் தேவையான ஒன்று. ஆனால் உலகின் பெரும்பாலான துன்பங்கள் தேவையற்றவை, சுயமாக உருவாக்கப்பட்டவை.**

இப்படித் ‘தேவையின்றி’ துன்பப்பட்டவர்களில் ஒருவர் ராவ்ஸாஹேப். மெஹர் பாபாவின் கடுமையான அலட்சிய மனப்பான்மை குறித்து, அவர் சமீபத்தில் புகார் கடிதம் ஒன்று எழுதியிருந்தார். செப்டம்பர் 16 அன்று பாபா அவருக்குக் கீழ்வரும் பதிலை அனுப்பினார்:

**உங்களில் சில பலவீனங்கள் இருந்தும், ‘லில்லி’** (பாபாவிற்கு ராவ்ஸாஹேப் வைத்த புனைப்பெயர்) **உங்களை நேசிப்பதால் அவர் உங்களிடம் கருணை காட்டட்டும்.**

**உங்களின் கற்பனை நயமிக்க எனது ‘கொடூர’ தன்மையும் மாயையின் கைவண்ணமுமான எனது ‘அநீதி’ குறித்தும், நீங்கள் மனம் வருந்தி வரைந்த புகார் கவிதைகளை, முதன்மை கவிஞராகிய ஃபிர்தாஸி** (FIRDAUSI) **கூட எழுதியிருக்க முடியாது. நீங்கள் ‘கொடுங்கோன்மை’ என்று அழைப்பது எனது அன்பின் வெளிப்பாட்டைத் தவிர வேறொன்றுமில்லை. நான் உங்களிடம் ஆர்வம் காட்டி, பலவீனமான செயல்களை நீங்கள் செய்யாமல் இருக்குமாறு எச்சரிக்க வேண்டாமா? நான் எச்சரிப்பதை நீங்கள் துன்புறுத்தல் என்று நினைக்கிறீர்கள்.**

**நீங்கள் அனுபவித்த இடர்பாடுகள், உங்கள் உள் வாழ்வின் முன்னேற்றத்திற்காகவே. உங்களின் உள்நோக்குப் பார்வை குறைவாக இருக்கும் இந்நேரத்தில், இதர விஷயங்கள் மீதான எனது கட்டுப்பாடு வரம்பற்றதாக உள்ளது. எனக்காக நீங்கள் செய்த தியாகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்; ஆனால் எனக்காக நீங்கள் செய்யாத தியாகத்தை நான் கேட்கிறேன்!**

**நீங்கள் விலைமதிப்பற்ற ஒன்றிற்கு ஒரு விலையை நிர்ணயிக்க விரும்புகிறீர்கள், நானோ, அடைய முடியாததை உங்களிடம் கொண்டு வருகிறேன். நீங்கள் இயல்பாகவே, உங்கள் சாதாரண மனித நிலையிலிருந்து, சிறிய சிறிய குறைபாடுகளைப் பெரிது படுத்துகிறீர்கள், அதே நேரத்தில் உண்மையான துன்பங்களை ஏற்றுக்கொள்ளும் தயார் நிலைக்கு நீங்கள் வருவதை நான் எதிர்நோக்கி இருக்கிறேன். உலக வாழ்வைப் பற்றிய உங்கள் கண்ணோட்டம், வளமற்ற தரிசு நிலமாக உள்ளது - ஆனால் என்னுடையது வளமானது. எனவே, எனதன்பு மகனே, நான் உங்களை நேசிப்பதால், நான் செய்வது உங்கள் நன்மைக்காகவே, என்பதை அறிந்து கொள்ளுங்கள்.**

**அதிலடங்கிய உண்மையை நீங்கள் பார்க்காமல் இருக்க மாட்டீர்கள். கவலைப்படாதீர்கள். நான் உங்களை ஒருபோதும் அவ்வாறு**

**தண்டிக்க மாட்டேன்; உண்மையில், நான் எப்பொழுதும் எவரையும் தண்டிப்பதில்லை.**

**நீங்கள் கடைசியாக அனுபவித்த துன்பத்தைப் போல, மீண்டும் அந்த வழியில் கஷ்டப்பட வேண்டியதில்லை. நான் உங்களுக்கு அந்த உத்தரவாதத்தைத் தருகிறேன்.**

**எனவே, உற்சாகமாகவும், தைரியமாகவும் இருங்கள், உடனடியாக எனக்கு ஒரு நல்ல சிறுவனைக் கண்டுபிடித்து அனுப்புங்கள்!**

1938, செப்டம்பர் 22 அன்று, ஒரு வாரத்திற்குப் பிறகு, பாபா மேலும் ராவ்ஸாஹேபிற்கு எழுதினார்:

**நான் வலிமையான மனிதர்களை நேசிக்கிறேன். மனதில் வலிமை, உள்ளத்தில் வலிமை, உற்சாகத்தில் வலிமை (உடல் ஒரு பொருட்டல்ல.) எனவே நான் நேசிப்பவர்கள், பலமாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் உங்களை நேசிக்கிறேன், எனவே நீங்கள் பலசாலியாக வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால் பலவீனங்களிலிருந்து விலகியிருக்க நான் எப்பொழுதும் உங்களை எச்சரிக்கிறேன், அச்சுறுத்துகிறேன்.**

**நான் உங்களிடம் ஆர்வம் காட்டுவதை நீங்கள் ஏன் விரும்பவில்லை? உடல் ரீதியாக விலகி இருப்பதால், நீங்கள் இனி என்னுடையவர் அல்ல என்று அர்த்தமாகுமா?**

**'பாபா அனைத்தும் அறிந்தவர், எல்லாம் வல்லவர், நாம் செய்வது - நல்லது, தீயது - எல்லாமே அவருடைய விருப்பத்தினால்தான்' என்று நீங்கள் எப்பொழுதும் குழந்தைத்தனமாகச் சொல்கிறீர்கள்... சரி, அப்படியானால், எல்லா இன்ப துன்பங்களும் பாபாவின் விருப்பத்தினால் தானே! அப்படியானால் நீங்கள் ஏன் உங்களில் திருப்தியாக இல்லை? நான் உங்களை நேசிக்கிறேன் என்று உறுதியாகக் கூறுகிறேன், நான் என்ன செய்கிறேனோ அது உங்களுடைய அறுதியும், உறுதியுமான ஆன்மீக நன்மைக்கே என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**

**எனது கடைசி கடிதத்தில் கூறியது போல, நீங்கள் உடல் ரீதியாக பாதிக்கப்பட மாட்டீர்கள் என்று நான் நிச்சயமாக உத்தரவாதம் தருகிறேன். மேலும், நீங்கள் கண்மூடித்தனமாக இருக்க மாட்டீர்கள்! ஆனால் நீங்கள் என் உத்தரவுகளை மீறினால் துன்பம் என் மீது வரும்! எனவே தைரியமாக இருங்கள், அறிவுறுத்தல்களை மீறாமலிருக்க முயற்சி செய்யுங்கள். 24, 25 தேதிகளில் இல்லையெனில், 25ஆம் நாளிலாவது இங்கே இருக்க முயற்சி செய்யுங்கள்.**

**ஒரு சிறந்த (இலட்சிய) சிறுவனை உங்களோடு அழைத்து வாருங்கள். அந்த சிறுவன் விழிப்புணர்வோடும், தெளிவாகவும், புத்திசாலித்தனமாகவும், துடிப்புடனும் எல்லாவற்றிற்கும் மேலாக, தோற்றத்தில் மகிழ்ச்சியாகவும்**

**இருக்க வேண்டும். ஆனால் இதற்கு முந்திய முறை கொண்டுவந்த சீன அல்லது ஜப்பானிய சிறுவனைக் கொண்டு வர வேண்டாம்.**

ராவ்ஸாஹேப் பின்பு மெஹர் பாபாவிற்குக் கடிதம் எழுதினார், அவர் மிகவும் மனச்சோர்வு அடைந்துள்ளதாகவும், பாபா மீதான குருட்டு நம்பிக்கையை இழந்துவிட்டதாகவும் கூறியிருந்தார். உடனடியாக, பாபா அவருக்கு இந்த சுருக்கமான செய்தியை அனுப்பினார்:

**உங்கள் குருட்டு நம்பிக்கை சிதைந்துவிட்டதில் நான் மகிழ்ச்சியடைகிறேன், ஏனெனில் இப்போது ஒரு 'முழுக்கண்' நம்பிக்கை அந்த இடத்தைப் பிடித்துக் கொள்ளும்!**

இந்த நேரத்தில் முப்பத்தாறு மஸ்துகளும், மனநிலை பாதிக்கப்பட்டவர்களும் கீழ் மெஹராபாத்தில் தங்கியிருந்தனர், அவர்களுக்கு சேவை செய்வதில் பாபா முழு வீச்சில் ஈடுபட்டார். மே மாதத்தின் பிற்பகுதியில், பெனாரஸிலிருந்து வரவழைக்கப்பட்ட பிளீடரும், பைதூலும் மஸ்த் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் ஆசிரமத்தின் மேற்பார்வையாளர்களாக இருந்து, பாபாவின் அறிவுறுத்தல்களின்படி, தங்கள் கடமைகளைச் செய்து வந்தனர். மஸ்த் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் தலைமுடியை, பாபா, வெட்டி சீர்செய்தார்; மேலும் அவர்களை நீராட்டி, சவரம் செய்து, உணவூட்டவும் செய்தார்.

பெண்டு, பாதிரி, சிது, விஷ்ணு போன்ற பெரும்பாலான மண்டலி மஸ்த் ஆசிரமம் தொடர்பான வேலைகளில் ஈடுபட்டனர். டாக்டர் நீலு மருத்துவமனை, மருந்தகத்தை கவனித்து, ஏழைகளுக்கு இலவசமாக சிகிச்சை அளித்து வந்தார்; சகன், பாபாவின் இரவு கண்காணிப்பாளராகவும், மாஸாஜி சமையல் மற்றும் காளேமாமா கட்டுமானப் பணிகளுக்கான பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டனர். குறிப்பிட்ட எந்த கடமைகளும் இல்லாமல், குஸ்தாஜி தனது மௌனத்தில் மகிழ்ச்சியாகவும், மனநிறைவுடனும் இருந்தார்.

ஆகஸ்ட் மாதத்தில், மெஹர் பாபா, ராஜா கோபிசந்தைப் (RAJA GOPICHAND) பற்றிய ஒரு நாடகத்தை நடத்த, மஸ்துகளை ஒத்திகை பார்க்கும்படி பிளீடருக்கு அறிவுறுத்தினார். பாபா அவர்களுக்கு ஒரு மாதம் அவகாசம் கொடுத்திருந்தார். இது ஒரு விசித்திரமான, செயல்படுத்த மிகவும் கடினமான உத்தரவாக இருந்தது. ஒரு நாடகத்தில் மஸ்துகளையும், மனநிலை பாதிக்கப்பட்டவர்களையும் எப்படி நடிக்க வைக்க முடியும்? ஆனால் பாபாவின் விருப்பத்திற்கிணங்க, பிளீடர் முழு மனதுடன் ஈடுபட்டு, இந்த வழக்கத்திற்கு மாறான நடிகர்களை ஒத்திகை பார்க்கத் தொடங்கினார், அவர்களுடைய உரையாடலின் வரிகளை சிரமமின்றி கற்பித்தார். எரச், ஹோமி இருவரும் நாடகத்தைத் தயாரிக்க உதவியாக இருந்தனர். பிளீடர் பூனாவிலிருந்து ஒப்பனை, நடிப்புக்குத் தேவையான ஆடைகளை வாடகைக்கு எடுத்து வந்தார், மேலும்

நாடகத்தை நடத்த கீழ் மெஹராபாத்தில் ஒளிவிளக்குகள் மற்றும் பின்னணியுடன் ஒரு மேடை அமைக்கப்பட்டது.

1938, செப்டம்பர் 25 அன்று 'ராஜா கோபிசந்த்' நாடகம் அரங்கேற்றப்பட்டது; மும்பை, பூனா, நாசிக், அஹமதுநகர் மற்றும் பல இடங்களிலிருந்து அன்பர்கள், ருஸ்தம், கோஹெர், தாதாசாஞ்சி சகோதரிகள் உள்ளிட்ட பலர், இந்தத் தனித்துவமான நாடகத்தைப் பார்க்க வந்தனர். மேல் மெஹராபாத் பெண்களும், மண்டலியும் கலந்து கொண்டனர். இதுபோன்ற ஒரு நிகழ்ச்சியை இதுவரை எவரும் கண்டதில்லை. மஸ்துகளும், மனநிலை பாதிக்கப்பட்டவர்களும் அவரவர் பங்கை மிகவும் சிறப்பாகச் செய்தனர். அவர்களின் அற்புதமான நடிப்பு, பார்வையாளர்களை வியப்புக்குள்ளாக்கியது. 'இறை-பைத்திய ஆசிரம சிறப்பு நிகழ்ச்சிநிரல்' கீழே வருமாறு:

பாபாவின் ஆரத்தியைத் தொடர்ந்து, இறை-பைத்தியங்கள் பாடிய 'கிரேஸ்ஃபுல் நஸர்' (GRACEFUL NAZAR - கனிவான பார்வை) பாடல்.

ஹனுமான் (பெண்கள்) சங்கீத குழுவினரின் இசை நிகழ்ச்சி.

சிறப்பு பாடல் 'திஸ் இஸ் தி டிவைன் கோர்ட் ஆஃப் ஸ்ரீ மெஹர் பாபா' (THIS IS THE DIVINE COURT OF SHRI MEHER BABA - ஸ்ரீ மெஹர் பாபாவின் தெய்வீக நீதிமன்றம்) - பாடியவர் பாபு.

கடவுள் பைத்தியங்களால் நிகழ்த்தப்பட்ட நாடகம் 'ராஜா கோபிசந்த்.'

'ஷாம்லு தி ஷேயர்' (SHAMLU THE SHAYAR) கவிதைகள் - மஸ்த் ஆசிரமத்தின் கைவந்த கவிஞர்.

ஆசிரமத்தின் தலைவரான லால் ஸாஹேப், ஷாம்லு தி ஷேயர் இருவரின் பாபாவுடனான உரையாடல்.

பஜனை நிகழ்ச்சிகள்.

பாடல்: 'பாபாவின் பாதங்களில் நான் என் இதயத்தை அர்ப்பணித்தேன்.'

நாடகத்தின் முழு நிகழ்ச்சியை மஸ்த் ஆசிரமத்தின் உள்வாசிகள் தனியாக நிகழ்த்தினர். இந்த அவதார காலகட்டத்தின் அற்புதமான ஒரு நிகழ்வு, மீண்டும் இதை ஒருபோதும் பார்க்க முடியாது. பௌதீக உடல்களைப் பற்றிய எந்த உணர்வும் இல்லாத நிலையில், மஸ்துகள் எவ்வாறு செயல்பட முடியும்? ஒரு நாடகத்தில் பங்கேற்க மனநிலை பாதிக்கப்பட்டவர்களை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும்? ஆயினும்கூட, இந்த விசித்திரமான உள்வாசிகள், உயர் பயிற்சித் திறன் வாய்ந்த நடிகர்களைப் போலவே முழுநிறைவோடு செயல்பட முடிந்தது! இது ஈடுஇணையற்ற ஒரு காட்சியாக அமைந்தது - குருநாதரின் லீலையைத் தவிர வேறொன்றும் இதை விளைவிக்க முடியாது! இதை அவரது தெய்வீக நாடகம் என்றுதான் கூறவேண்டும்!

பாபா மிக்க மகிழ்ச்சியடைந்து, "**இன்று எனது பணி நிறைவுற்றது. பிரபஞ்சம் எனும் நாடக மேடையில் நான் உங்களுக்கு என் அரவணைப்பைத் தருகிறேன்**" என்று கூறி பிளீடரைத் தழுவினார்.

மேடை நாடகம் முடிந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு, செப்டம்பர் 27 அன்று, 36 உள்வாசிகளில் பதினெட்டு பேர் அவரவர் நகரங்கள் அல்லது

கிராமங்களுக்கு அனுப்பப்பட்டனர். உள்வாசிகள் அனைவரிலும் முஹமது மஸ்த் பிரதானமாக இருந்தார், மேலும் அவர் பாபாவின் கவனத்தை அதிகம் பெற்றார். முஹமது மஸ்த் அவர் செய்த ஒவ்வொன்றிலும் பல மணிநேரம் எடுத்தார் - உண்ண, நீராட, உடை உடுத்த - ஒவ்வோர் உடல் ரீதியான செயல்பாடும் அவரை கவனித்துக் கொள்ளும் ஒருவருக்கு, சித்திரவதை என்றே சொல்லலாம் - மேலும் பராமரிப்பாளர்கள் அனைவரும் அவருடைய மனம்போன போக்கிற்கு இணங்க வேண்டுமென உத்தரவிடப்பட்டனர்.

**'ஒவ்வோர் அவதார செயற்பாட்டிலும் இருப்பது போலவே - இந்த நாடக அரங்கேற்றம் மற்றும் உள்வாசிகளை அவரவர் இடங்களுக்கு அனுப்பி வைத்தது - இவை அனைத்தும் உலக நிலைமைகளுடன் சம்பந்தப்பட்டது'** என்று மெஹர் பாபா விளக்கினார். **'இப்போது, ஐரோப்பாவில் போர் தவிர்க்க முடியாததாகத் தோன்றியது. மஸ்துகளின் மேடை நாடகத்திற்குப் பின்னர், அது குறித்து ஒரு திட்டவட்டமான முடிவை எடுக்கப்போவதாக,'** பாபா கூறியிருந்தார். சில நாட்களுக்கு முன்பு, **'ஹிட்லர் ஒரு கோழை'** என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஆசிரம உள்வாசிகளை அவரவர் இடங்களுக்கு அனுப்பிய அந்த நாள், பாபா, பெண் மண்டலியிடம், **"முழு ஐரோப்பாவும் போருக்குத் தயாராகி வருகின்றன, ஆனால் நாங்கள், அவதார புருஷரும், சத்குருக்களும் என்ன முடிவு செய்தோம் என்பது அவர்களுக்குத் தெரியாது. இதன் பொருள் என்னவெனில் போர் நடப்பது உறுதி; ரஷ்யா, ஃபிரான்ஸ், இங்கிலாந்து மூன்றும் இணைந்து ஜெர்மனி, இத்தாலி மற்றும் பிற நாடுகளுக்கு எதிராகப் போர் புரியும்."**

அடுத்த நாள் பிற்பகல், மெஹர் பாபா மீண்டும் போரைப் பற்றி குறிப்பிட்டார்:

**இந்தியாவும், இதர நாடுகளும் ஜெர்மனி, இத்தாலி, ஃபிரான்ஸ், ரஷ்யா போன்ற நாடுகளுக்கு உதவும்; இன்னும் பலர் இதில் இணைவார்கள். எங்கும் மக்கள் கவலையுடன் காணப்படுகிறார்கள். வானிலிருந்து குண்டுகள் விழும்போது அது எப்படி இருக்கும் என்று அனைவரும் கற்பனை செய்கிறார்கள். எனது முகவர்கள் இப்போது மிகவும் தீவிரமாகச் செயல்படுகின்றனர். சீனா, ஜப்பான் இரண்டு நாடுகளும் போர்க்களத்தில் இறங்கிவிட்டன. அனைவரும் என்னவாகுமோ என யூகிக்கத் தொடங்கிவிட்டனர். அபிஸீனியாவின் பேரரசர் நீகஸ் ஹைலி ஸெலாஸி** (THE NEGUS HAILE SELASSIE, THE EMPEROR ABYSSINIA), **இப்போது தனது நாட்டை** (இத்தாலியிடமிருந்து) **திரும்பப் பெறத் திட்டமிட்டுள்ளார்.**

**நேரம் நெருங்கிவிட்டது - உலகம் இப்போது குழப்பத்தில் உள்ளது. அதனால்தான் 'நான் அவதார புருஷர்' என்று பத்திரிகை கட்டுரையில் பகிரங்கமாக அறிவித்தேன். இது ஒரு சிறப்பான கட்டுரை; அந்தக் கட்டுரையில் நான் சொன்னதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். இறை உணர்வை அடைந்த ஆத்மாக்கள் மொத்தத்தில் எப்பொழுதும் 56 பேர்**

**உள்ளனர். இந்த 56 பேரில் 5 சத்குருக்கள் பூமியில் வாழ்கின்றனர். ஆனால் ஒவ்வோர் அவதார காலகட்டத்திலும், இந்த ஐந்து சத்குருக்களும் (கடவுள் மனித உருவில் அவதார புருஷராக வருங்காலையில்) ஒன்றிணைந்து, காலச்சுழற்சியின் செயல்பாடுகளை விளக்கிக் காட்டுகிறார்கள்.**

**எனவே அவதார புருஷர் இந்த ஐந்து சத்குருக்களின் இதயங்களில் ஒன்றாக இருக்கிறார். இந்த ஐந்து சத்குருக்களும் அவதார புருஷரைப் போலவே இறை உணர்வை அடைந்தவர்கள். அனைவரும் ஒன்றே; ஆனால், சுருக்கமாகச் சொன்னால், அவதார காலகட்டத்தில், அவதார புருஷர் ஐந்து சத்குருக்களுக்கும் சமம். இவ்வாறு, ஐந்து சத்குருக்கள் அவதார புருஷரை உருவாக்குகிறார்கள் - இதுவே இந்த நிகழ்வின் சாராம்சம்! எனவே சத்குருக்கள் தங்கள் இதயங்களைக் காட்டினால், நீங்கள் என்னைக் காண்பீர்கள்.**

**ஐந்து சத்குருக்கள் எப்பொழுதும் உலகில் வாழ்கிறார்கள். பாபாஜான் அவருடைய பௌதீக உடலைத் துறந்ததும், அந்த இடத்தில் வருபவர் பூனாவில் இருக்க வேண்டிய அவசியமில்லை, ஆனால் உலகில் ஐந்து பேர் இருக்க வேண்டும். எனவே பூனா, மதராஸுக்கு இடம் கொடுக்கக்கூடும்.**

**நாம் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்யும் வேளையில் பல சாதுக்களையும், ஐந்து சத்குருக்களையும் காண்பீர்கள். ஒவ்வோர் இடத்திலும் பெரும்பாலும் வெவ்வேறு வகையான துறவிகளும் சாதுக்களும் வருவார்கள். நாம் பெனாரஸ் நகரில் நான்கு நாட்கள் தங்கியிருப்போம்; அவ்வேளையில் பல புனிதர்கள் என்னிடம் வருவார்கள். நான் எனது மௌனத்தைக் கலைப்பதற்கு முன்னர் இது ஒரு பொது வரவேற்பாக இருக்கும், மேலும் போர் முழு வீச்சில் இருக்கும்போது இது நிகழும்.**

“**இப்போது, எதிர்வரும் அக்டோபர் 7ஆம் நாளன்று, ஒரு பெரிய ஆச்சரியத்திற்குத் தயாராக இருங்கள்**” என்று பாபா புதிராகக் கூறி முடித்தார்.

அடுத்த நாள் அவர் மேலும் கூறுகையில், “**இந்த ஆச்சரியத்திற்கு, நேரடியாகப் போர் அல்லது அமைதியோடு எந்தத் தொடர்பும் இல்லை. இதை ஆச்சரியம் என்று கூறுவதற்குமில்லை. போர் நிச்சயமாக நிகழும்; இதில் ஐயத்திற்கு இடமில்லை.**”

1938, செப்டம்பர் 29 அன்று, பிரிட்டிஷ் பிரதம மந்திரி நெவில் சேம்பர்லெய்ன் (NEVILLE CHAMBERLAIN), அடோல்ஃப் ஹிட்லர் (ADOLF HITLER) மற்றும் பெனிட்டோ முஸோலினியுடன் (BENITO MUSSOLINI), ‘மியூனிக்’ (MUNICH) ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்; போரைத் தவிர்ப்பதற்காக ஜெர்மனி, இத்தாலி இரண்டு நாடுகளுடன் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில், செக்கோஸ்லோவாக்கியா (CZECHOSLOVAKIA) நாட்டை ஜெர்மனியை நோக்கித் திசை திருப்பினார். சேம்பர்லினின் நடவடிக்கை குறித்து, பாபா கருத்து தெரிவிக்கையில், “**இதனால் எந்த பயனும் இல்லை, நிச்சயமாகப் போர் உருவாகும்**” என்றார்.



மெஹராபாத் (MEHERABAD), **1938**

**முன் வரிசை** (FRONT) : மனு (MANU) & மெஹரு ஜெஸவாலா (MEHERU JESSAWALA) ,
கோர்ஷெத் (KHORSHED), மன்ஸாரி (MANSARI),
**இடை வரிசை** (SEATED MIDDLE): கிட்டி (KITTY), கெய்மாய் (GAIMAI), ஷிரீன்மாய் (SHIREENMAI),
பாபா (BABA), குல்மாய் (GULMAI), ஸூனாமாசி (SOONAMASI), வாலு (VALU)
**நிற்போர்** (STANDING): ரானோ (RANO), மணி (MANI), மெஹரா (MEHERA), நோரினா (NORINA),
நதீன் (NADINE), ஹெலன் (HELEN), ஐரீன் (IRENE), ஹெடி (HEDI), பணிப்பெண் (MAID)



குல்மாய் (GULMAI) & ஷிரீன்மாய் (SHIREENMAI) -
பாபா, ஸொராஸ்டரைப் போல் ஆடை அணிந்துள்ளார்
(BABA DRESSED AS ZOROASTER)

முதல் உலகப் போரின்போது பிரிட்டிஷ் இராணுவம் அரன்காவ்ம் கிராமத்திற்கு வந்து, அதை ஓர் இராணுவ முகாமாக மாற்றி, அது பின்பு மெஹராபாத் ஆனது. செப்டம்பர் 30 காலையில் நடந்த உரையாடலின் போது, பெண்டு, பாபாவிடம், "வரவிருக்கும் போரின் வதந்திகள் பரவலாக உள்ளன. போர் உருவானால், நாம் 24 மணி நேர அறிவிப்பில் மெஹராபாத்தை விட்டு வெளியேற வேண்டும், மேலும் இந்தப் புதிய கட்டமைப்புகள் அனைத்தையும் இராணுவத்திடம் ஒப்படைக்க வேண்டியது வரும்" என்று கூறினார்.

பாபா சிரித்துக்கொண்டே அமைதியாக பதிலளித்தார், "**பார்க்கலாம். இப்போது எவரும் அதை ஆக்கிரமிக்கப் போவதில்லை.**"

"நீங்கள் கூறுவது, போர் வராது என்று அர்த்தமாகுமா?" என பெண்டு கேட்டார்.

**"நான் சொல்வதை நீங்கள் எவ்வாறு முழுவதுமாகப் புரிந்து கொள்ள முடியும்? இங்குள்ள கட்டமைப்புகளுடன் போருக்கு என்ன தொடர்பு உள்ளது?"**

"ஒரு தொடர்பு உள்ளது, ஏனெனில் இறுதியில் போர் வருவதாக இருந்தால், 24 மணி நேர அறிவிப்பில் நாம் அனைத்தையும் ஒப்படைக்க வேண்டியிருந்தால், உங்கள் உத்தரவுப்படி எல்லா நேரத்திலும் கடுமையான 'தனிமை' வாழ்க்கை வாழும் பெண்மணிகளை எங்கே அழைத்துச் செல்வது?" என பெண்டு வாதாடினார்.

பாபா மீண்டும் புன்னகைத்து, "**நீங்கள் அதி புத்திசாலி என்று தோன்றுகிறது. இப்போதைக்கு இந்த விஷயத்தை கைவிடுவோம்; நான் உங்களுக்கு வழங்கிய பணியில் கவனம் செலுத்துங்கள்**" என்றார்.

இருப்பினும், அதே நாளில், பாபா, பெண் மண்டலிக்கு இவ்வாறு எடுத்துரைத்தார்:

**போர் நிச்சயமாக உருவாகும்; அது எதிர்வரும் பிப்ரவரி, நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்திலா என்பதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டிய தேவையில்லை. ஏதோ ஒன்று நடக்கும், இது அவர்களின் வாக்குறுதிகள் அனைத்தையும் மறக்கச் செய்யும், அதுவும் ஒரு புதிய கட்டத்திலிருந்து - போலந்து - ரஷ்யா என்னவாகும் என்று பார்க்கலாம்! எனவே இந்தப் போருக்கும் எனது வெளிப்பாட்டிற்கும் ஐந்து மாத முன்னேற்பாடு மேற்கொள்ளப்படும். போர் முழு வீச்சில் முன்னேறி அதன் உச்சக்கட்டத்தை எட்டும்போது நான் பேசுவேன். இது ஒரு வருடத்திற்கு மேல் நீடிக்காது, எனவே, போர் பிப்ரவரி மாதத்தில் தொடங்கினால், ஜூலை மாதத்திற்குள், நான் பேசும் வாய்ப்புள்ளது.**

**இப்போது உலக அமைதி பற்றிய பேச்சு எழும். ஆன்மீக ரீதியில், கடவுளைத் தவிர இதர அனைத்தும் பூஜ்ஜியமாகும். எனவே, ஆன்மீக அடிப்படையில் பார்க்கும்போது போர், அமைதி இரண்டிலும் ஒன்றுமில்லை. ஆனால் வெளியளவில் போர் என்பது மிகவும் பயங்கரமான விஷயம். ஆன்மீக எழுச்சிக்குப் போர் முற்றிலும் அவசியமில்லை என்றால், நான்**

**ஒருபோதும் அதை அனுமதிக்க மாட்டேன் - ஒருபோதும்! ஆனால் ஆன்மீக காரணங்களுக்காக அது முற்றிலும் அவசியம்.**

**எனவே அக்டோபர் முதல் பிப்ரவரி வரை, எந்த நாளிலும் போர் தொடங்கும். ஒப்பந்தம் கையெழுத்தானாலும், சமாதானத்தை ஏற்றுக்கொள்ளும் வகையில் உத்தரவாதம் அளிக்கப்பட்டாலும் கூட, பிப்ரவரி இன்னும் போரின் தொடக்கத்திற்கான சமீபத்திய தேதியாக இருக்கும். ஆகவே, போர் தொடங்கும் வரை, அடுத்த நான்கு மாதங்களுக்கு நாம் இதைக் குறித்து பேச வேண்டாம்.**

**அதே நேரத்தில், அக்டோபர் தொடக்கத்தில் (என்னிடம்) போரை விட மிக முக்கியமான திட்டம் ஒன்று உள்ளது. இந்தத் திட்டம் மறைமுகமாகப் போருடனும், நேரடியாக உங்களுடனும் என்னுடனும் தொடர்புடையது. இந்த 'வியப்பூட்டும் திட்டம்' என்னவென்று யூகியுங்கள் பார்க்கலாம்!**

அவர்கள் அனைவரும் யூகிக்க வேண்டியிருந்தாலும், அது என்னவென்று அவர்களுக்கு ஒரு வாரத்திற்குப் பிறகுதான் தெரியவந்தது.

அக்டோபர் 3ஆம் தேதி மெஹராபாத் மலையில் இந்து பண்டிகை 'தஸரா' கொண்டாடப்பட்டது. அன்றைய வழக்கப்படி, பெண்கள் 'சம்', 'கிப்பி' என்ற நாய்க்குட்டிகளுக்கு ஆடை மற்றும் பூக்கள் அணிவித்து அலங்காரம் செய்தனர். பாபாவை மகிழ்விக்க, மலையில் வாழ்ந்த ஒரு 'செல்ல' முயலுக்கும் அலங்கார ஆடை அணியப்பட்டது. ஹெலன் தன்னை ஒரு முயல் போல் அலங்கரித்தார். பெண்கள் அனைவரும் பாபாவின் முன்னிலையில் தங்கள் வளாகத்தில் அணிவகுத்துச் சென்றனர்; வாலு ஒரு வெற்று தகர கொள்கலனை மத்தளம் போல் இசையெழுப்பி அனைவரையும் மகிழ்வித்தார். பாபா, எல்லோருடனும் இணைந்து மகிழ்ச்சியான மனநிலையில் வேடிக்கை, வினோதங்களைப் பார்த்து ரசித்தார்.

1938, அக்டோபர் 7 அன்று, இந்தியா முழுவதும் பேருந்தில் பயணம் செய்வது குறித்து பாபா, ஆண், பெண் மண்டலியுடன் தனித்தனியாகப் பேசியபோது இந்த 'வியப்பூட்டும் திட்டம்' என்னவென்று வெளிப்பட்டது. பாபாவின் இந்தத் திட்டத்திற்குப் பின்னால், ஈடு இணையற்ற முக்கியத்துவம் ஒன்று இருந்தது; ஏனெனில், மெஹர் பாபா, இந்தப் பேருந்தில் தனது கிழக்கு மற்றும் மேற்கத்திய பெண்மணிகளுடன் இந்திய நாட்டின் அனைத்து பாகங்களிலும் பயணம் செய்து, பல மஸ்துகளைத் தொடர்புகொள்ள இருந்தார்.

அடுத்த நாள் மெஹர் பாபாவின் மண்டலிக்கு சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த நாளாகக் கருதப்பட்டது. பாபா, சற்று முன்பு, பிளீடருக்கு அளித்த விளக்கங்களின்படி, **"எனது வட்ட உறுப்பினர்களின் மனப்படிவங்கள் அனைத்தும் அந்த நாளிலிருந்து அழிக்கப்படும் - 1938, அக்டோபர் 8ஆம் நாள் அனைத்து மண்டலியும் மனப்படிவங்களிலிருந்து விடுபடுவார்கள்."** பாபா இப்படிக் கூறியதன் பொருள் என்ன என்பது அவருக்கு மட்டுமே தெரியும்.

மண்டலி தத்தமது கடமைகள் மற்றும் பணிகளில் கண்ணும் கருத்துமாய் இருக்கும் அதே வேளையில், குருநாதரின் அசாதாரண கருத்து மனதில் அலைபோலப் பாய்ந்து செல்லும் சிந்தனையாக இருந்தது.

இக்காலகட்டத்தில், சுற்றுப்புற கிராமங்களுக்குச் சென்று கர்ப்பவதியாக இருந்த பெண்மணிகளை மெஹராபாத் மேல்மலையில் அமைந்த மகப்பேறு மருத்துவமனைக்கு அழைத்து வர, ஜால்பாய்க்கு உத்தரவிடப்பட்டது. அக்டோபர் 12 அதிகாலை நான்கு மணிக்கு, மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு பெண்மணி, அங்கு முதல் பெண் குழந்தையை ஈன்றெடுத்தார். அந்தக் குழந்தையின் அழுகையை முதலில் கேட்ட பாபா, அவர் பிற அனைவரையும் வரவழைத்தார். தாய், இயல்பாக இல்லாததால் குழந்தைக்கு சிறப்பு கவனம் செலுத்த உத்தரவிட்டார்.

டாக்டர் கலாவ்கர் (DR. KALAVKER) என்ற தடித்த பெண் மருத்துவர் மூன்று மாதங்களுக்காகப் பணியில் நியமிக்கப்பட்டார், ஆனால் அவர் இரவில் பணிபுரிவதில்லை. ஒருமுறை அதிகாலை மூன்று மணிக்கு, மகப்பேறுக்காக வந்த கிராமத்துப் பெண்மணி ஒருவரை கவனிக்க, பாபா, மன்ஸாரியை அனுப்பி வைத்தார். ஆனால் அவருக்கு எந்த அனுபவமும் இல்லாததால், அதிர்ஷ்டவசமாக, அந்த நேரத்தில் அங்கிருந்த மெமோ, மன்ஸாரியுடன் மருத்துவமனைக்கு வந்தார். பாபாவே அடுத்த அறையில் சூடான நீரைக் கொதிக்க வைத்து, விளக்குகளை ஏற்றி, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். மெமோ, மன்ஸாரியின் துணையோடு குழந்தையை ஈன்றெடுக்க உதவி, அதை சுத்தம் செய்யும் வேளையில் பாபா, பச்சிளம் குழந்தையைப் பார்க்கப் பல முறை உள்ளே சென்று, கையிலேந்தி முத்தமிட்டார்.

மன்ஸாரி மிகவும் குள்ளமாக இருந்தார்; வெயிலில் நடக்கும் போது அணிய ஒரு பெரிய நெகிழ் தொப்பியை (FLOPPY HAT) பாபா அவருக்குக் கொடுத்திருந்தார். அவர் அதை மருத்துவமனை வளாகத்திற்கும் சமையலறைக்கும் இடையே செல்லும் வேளையில் அணிவது வழக்கம். மருத்துவமனை நோயாளிகளுக்கு, தட்டில் தேநீர் எடுத்துச் செல்லும் போது, தொப்பி சற்று பெரியதாக இருந்ததால், கண்களுக்கு மேலே விழுந்தது. பாபா அதை இதர பெண்மணிகளுக்குச் சுட்டிக்காட்ட, அனைவரும் வேடிக்கையாக சிரித்து மகிழ்ந்தனர்.

நதீன் டால்ஸ்டாய் மகப்பேறு இல்லத்தின் தலைமைச் செவிலியராக இருந்தார். ஒரு சந்தர்ப்பத்தில், மெஹர் பாபா அவருக்கு விளக்கினார், "**உலகில் ஆயிரக்கணக்கான மருத்துவமனைகள் உள்ளன. இங்கு ஆயிரக்கணக்கான செவிலியர்கள் பணியாற்ற முடியும். மருத்துவமனையில் இந்த வேலையை நான் உங்களுக்கு வழங்கியிருந்தால், அதன் காரணத்தை நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். சேவை செய்யும் உண்மையான மனப்பான்மை - தன்னலமற்ற தன்மை.**"

ஒரு கட்டத்தில், நதீன் இவ்வாறு எழுதினார்:

மருத்துவமனைக்குப் பெரும்பாலும் கிராமத்து ஏழை எளிய மக்களே வந்தனர்; அவர்கள் - தேய்ந்துபோன ஆடையால் தேகத்தை மூடிக்கொண்டு, கந்தல் புடவைகளை அணிந்து - உண்மையிலே ஆதரவற்றவர்கள். கைதேர்ந்த மருத்துவர்கள் வழங்கும் சிகிச்சை மற்றும் ஊசி மருந்துகள் அதன் சரியான நிவாரணத்தை அளிக்கத் தவறும்போது, பாபாவின் தோற்றமும் அன்பான அரவணைப்பும் 'புனித மதுவாகச் செயல்பட்டு', அவர்களின் நம்பிக்கையைப் புதுப்பித்து, நீடித்த நிவாரணத்திற்குத் தூண்டுதலாக இருந்தது. பாபாவைப் பார்த்த மகிழ்ச்சியும், அவர் மட்டுமே உதவ முடியும் என்ற நம்பிக்கையும் அவர்களின் இதயங்களுக்குள் ஓர் உறுதியான தீர்வாகச் செயல்பட உதவுகின்றன.

இதற்கிடையில், இங்கிலாந்தில், வில், மேரி பேக்கெட் இருவரும் மெஹர் பாபாவின் பெயரைப் பரப்பி, அவதார புருஷரின் சிறப்பு பணி பற்றி பலரிடம் கூறினர்.

1938, அக்டோபர் 13 அன்று, மெஹர் பாபா, வில் பேக்கெட்டுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததாவது :

**நீங்கள் உதவி புரியும் வெவ்வேறு நபர்களைப் பற்றி உங்கள் கடிதங்களில் குறிப்பிடுவதையும், எப்படி, என் மீதான உங்கள் அன்பின் மூலம், அவர்களும் என்னுடன் நெருங்கி வருகிறார்கள் என்பதையும் நான் கவனிக்கிறேன்; மேலும் அவர்கள் என்னைச் சார்ந்து, என் உதவியை உணர முடியும் என்பதைக் கண்டறிந்தாலும், மனித ரூபத்தில் அவர்கள் என்னைப் பார்த்ததில்லை. சிலர், எனது சீடர்கள் மூலம் என்னை அறிந்து கொள்வது பேருதவியாக இருக்கிறது. கடவுளின் மனித பக்கத்தை எல்லோராலும் புரிந்து கொள்ள முடியாது. கடவுளைப் பற்றிய முன்கூட்டிய கருத்துக்கள் காரணமாக, மனித வடிவத்தில் கடவுளைப் பின்பற்றுவதும் கீழ்ப்படிவதும் சிலருக்கு மிகவும் கடினம்.**

டாக்டர் கனியின் சகோதரர் அப்துர் ரஹ்மான் அக்டோபர் 13 அன்று பாபாவை சந்தித்து, நீதிமன்ற வழக்கில் பாபாவின் உதவியைக் கோரினார். லோனவாலாவில் அவரது நில உரிமையாளரும், மனைவியும் கொலைச் செய்யப்பட்டனர், மேலும் நில உரிமையாளருக்கும் கனியின் குடும்பத்தினருக்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக, அவரிடமும், அவரது தந்தையிடமும் காவல்துறையினர் விசாரித்தனர். காக் ஸாஹேபும் அன்று பாபாவைப் பார்த்தார்.

அக்டோபர் 15 முதல், மெஹர் பாபா டின் கேபினிலும், கீழ் மெஹராபாத்தில் அமைந்த குடிலிலும் மாறிமாறி இரவுகளைக் கழித்தார். ஒவ்வொரு மாலையும் ஏகாந்தவாசத்தைத் தொடங்கி, காலை ஏழு மணியளவில் அதை நிறைவு செய்தார்.

1938, அக்டோபர் 2ஆம் நாள், மெஹர் பாபா இங்கிலாந்தில் டிலியாவிற்கு எழுதிய கடிதம்:

**உலகம் அச்சுறுத்தலால் பயத்திலும், குழப்பமான நிலையிலும் உள்ளது. என்ன நடக்கப் போகிறது என்பது எவருக்கும் தெரியாது. ஆனால் பொறுத்திருந்து பாருங்கள். நிகழ்காலம், எதிர்காலம் அனைத்தையும் நான் அறிவேன்; நான் இங்குச் செய்யவிருக்கும் பணியை எதுவும் தடுக்க முடியாது. நான் அவதார புருஷன் அல்லவா? உலகம் அதை விரைவில் அறிந்து என்னை அப்படியே ஏற்றுக் கொள்ளும். பொறுமை காத்து அமைதியாக இருங்கள். நீங்கள் என்மீதான அன்பிலும், நம்பிக்கையிலும் ஒரு பாறைபோலத் திடமாகவும், உறுதியாகவும் இருங்கள். மனித குலத்தின் மேம்பாட்டிற்காக, உங்களை தெய்வீக அன்பின் பணிக்கான கருவியாகப் பயன்படுத்த முடியும்.**

**நான், எனது விருப்பத்திற்கிணங்க, சுயமாகப் பணிபுரிய முடியும், உங்களில் எவரும் தேவையில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால், எனது சொந்த காரணங்களுக்காக, அந்தப் பணியில் எனக்கு உதவ உங்களில் சிலரை நான் தேர்ந்தெடுத்துள்ளேன்.**

**ஆனால் இந்த சிலருக்கு, அஸிஸியின் ஃபிரான்சிஸ், கிறிஸ்துவிடம் கொண்ட அரிதான அன்பும் நம்பிக்கையும் தேவை; அதே அன்பு உங்கள் இலக்காக இருக்கட்டும், அவர் தனது குருநாதரை நேசித்தபடியே என்னை நேசிக்கவும்.**

இந்தக் கடிதத்தைக் குறித்து, டிலியா பல கேள்விகளை எழுப்பினார்; மேலும், 1938 நவம்பர் 5 அன்று, பாபா எழுதிய மற்றொரு கடிதத்தில் இவ்வாறு பதிலளித்தார்:

**எனது வார்த்தைகளை நீங்கள் தவறாகப் புரிந்து கொள்ளவில்லையா? எனக்கு இங்கு அல்லது வேறு எங்கும் எந்த சீடர்களும் தேவையில்லை என்பது உண்மைதான். குறிப்பிட்ட சில சீடர்களைத் தேர்ந்தெடுக்காமல், எனது பணியை, மனிதனின் இதயத்தின் மூலம் தனியாகச் செய்ய முடியும். ஆனால் இந்த அவதார காலகட்டத்தில், இயேசுவின் காலத்தைப் போலவே, நானும், என்னுடன் நெருங்கிய தொடர்பில் வாழ்வதற்காக சிலரைத் தேர்ந்தெடுத்தேன் - இங்கு அல்லது வேறு இடங்களில், அது ஒரு பொருட்டல்ல - கடந்த காலங்களிலிருந்து என்னுடன் இருந்தவர்கள், என்னை ஆழமாக நேசிப்பவர்கள், காலாதி காலமாக நானும் அவர்களை நேசித்து வருகிறேன்.**

**இருந்தும், நீங்கள் இல்லாமல் எனது பணியை என்னால் தொடர முடியும் என்று சொல்வதிலிருந்து இது என்னைத் தடுக்காது. நீங்கள் அனைவரும் என்னை விட்டுச் சென்றாலும், எனது பணி தொடரும். ஆனால், இது எனக்குக் கடினமாக இருக்கும், சிலுவையில் அறையப்படுவது போல நான் உணர்ந்தாலும், என் அன்பின் பணி எவ்வகையிலும் பாதிக்காது. கடவுளின் பணியை எதுவும் தடுக்க முடியாது. எனது சொந்தம் என்னை மறுத்துவிட்டால் அல்லது**

ஏமாற்றமடையச் செய்தால், வேறு ஊடகம் மூலம் நான் பணியைச் செய்ய வேண்டும்.

உங்கள் கடிதத்தில் நீங்கள் என்ன கூறியிருந்தாலும், உங்களையோ அல்லது வேறு எவரையுமோ என்னிடமிருந்து பிரிக்க முடியாது என்று உங்களுக்குத் தெரியும், ஏனெனில் நான் எல்லாவற்றிலும் இருக்கிறேன். கடவுளைக் கடவுளிடமிருந்து பிரிக்க முடியாது; அவரால் முடியுமா? ஆனால், நான் அவ்வப்போது விளக்கியது போல, வாசனையை நுகரும் அல்லது தொடுதலின் உணர்வைக் காட்டிலும், கண் அல்லது காது மனிதனுக்கு மிகவும் பயனுள்ளதாகவும் அவசியமாகவும் இருப்பதைப் போல, பிறரை விட எனது தற்போதைய பணிக்கு, உங்களில் சிலர் எனக்கு மிகவும் அவசியம். நான், எப்பொழுதும் போல் இப்போதும் சொல்கிறேன், கிம்கோ என் இதயம், அவர்கள் எங்கிருந்தாலும் எப்பொழுதும் என் இதயமாகவே இருப்பார்கள்; உடலில் இதயத்தின் மதிப்பு உங்களுக்குத் தெரியும்!

நீங்கள் மூன்றாவது கூறியது: நான் உங்களை உருவாக்கினேனா? உங்களின் மனப்படிவங்கள், என்னுடைய பணிக்காக நான் உங்களுக்குக் கொடுத்ததால், நான் உங்களை உருவாக்கினேன் என்று சொல்வது உண்மைதான். ஆனால் உங்கள் அனைவரின் இறுதி இலக்கை, இன்னும், இருமைத்தன்மை மூலமாகவே அடைய வேண்டும். இதை நினைவில் கொள்ளுங்கள். மாயா எனது நிழல், எனவே மறைமுகமாக அது நானும் கூட. ஆத்மா, தெய்வீகமானது, ஆனால், அதன் தெய்வீகத்தன்மையை இன்னும் உணர்வுபூர்வமாக அறியாவிடிலும், கடவுளோடு ஐக்கியமாகி அந்த உணர்வு நிலையை அடைய வேண்டும்.

இங்கேதான் பிரபஞ்சத்தின் புதிரும், என்னுடைய திருவிளையாடலும் அடங்கி உள்ளன. என்னுடைய இந்தத் திருவிளையாட்டில் நீங்கள் எவ்வாறு உதவ முடியும்? அன்பு, சேவை இவற்றால் உதவ முடியும்; உங்கள் மனதையும், மனநிலையையும் கட்டுப்படுத்துவதன் மூலமும் உதவ முடியும்; ஆம், பலவீனங்கள், அவற்றின் மீது கட்டுப்பாட்டைக் கொணரும் நோக்கத்திற்காகவே உள்ளன.

பெரும்பாலும், ஒருவரின் அன்பு அதிகமாக இருந்தால், மன உணர்வின் போக்கும் வேறுவிதமாக இருக்கும், ஏனெனில் பிரிவால் வரும் வலி மிகவும் கொடியது. ஆனால் மன உணர்வின் போக்குகளை நான் விரும்புவதில்லை; எனவே என்னைப் பிரியப்படுத்தும் நோக்கத்தில், இது என் மீது உங்கள் அன்பைக் காண்பிப்பதற்கான சிறந்த வழிகளில் ஒன்றாகும், அவற்றைக் கடக்க உங்களால் இயன்றவரை முயற்சிக்கவும்.

கோஹெர் ஈரானி இப்போது மும்பையில் மருத்துவம் படித்து, தாதாசாஞ்சி குடும்பத்துடன் தங்கியிருந்தார். பள்ளி விடுமுறையின் போது, கோஹெர், பாபாவைப் பார்க்க மெஹராபாத்திற்கு வருவதுண்டு, மேலும், கேட்டி தனது குடும்பத்தினருடன் அஹமதுநகரில் வாழ்ந்து வந்ததால், அவரும்

அவ்வப்போது மெஹராபாத்திற்கு வர அனுமதிக்கப்பட்டார். இரு சகோதரிகளும் 1938 தீபாவளி விடுமுறை நாட்களில் அர்னவாஸ், நர்கிஸ் தாதாசாஞ்சி ஆகியோருடன் ஒரு வாரம் பாபாவுடன் மெஹராபாத்தில் தங்க வந்தனர்.

ஒரு நாள் கோஹெரின் தாயார் கோர்ஷெத் தனது சகோதரி ஸூனாவுடன் மெஹராபாத்திற்கு வந்தார். அவர்களின் சந்திப்பிற்குப் பின்னர், அனைத்து பெண் மண்டலியையும் அரவணைக்குமாறு பாபா இருவருக்கும் அறிவுறுத்தினார். ஆனால், கெய்மாயும், மனு ஜெஸவாலாவும் சமையலறையிலிருந்து வியர்வையால் முழுவதுமாக நனைந்து வருவதைக் கண்டதும், அவர்களைத் தழுவுவதற்கு பதிலாக, தூரத்திலிருந்து கைகளைக் கூப்பி வாழ்த்துத் தெரிவித்துச் சென்றனர்.

ஆனால் பாபாவிடமிருந்து எதுவும் மறைக்கப்படுவதில்லை. அவர்கள் திரும்பி வந்தபோது, ”நீங்கள் அனைவரையும் அரவணைத்தீர்களா?” என பாபா வினவினார்.

இல்லை என்று அவர்கள் உண்மையை ஒப்புக்கொண்டனர் - கெய்மாயும் மனுவும் வியர்வையால் நனைந்திருந்ததால், அவர்கள் அணிந்திருந்த நல்ல புடவைகளை வியர்வையால் கறைப்படுத்த விரும்பவில்லை. இதன் விளைவாக, கோர்ஷெத், ஸூனா இருவரையும் பாபா, கெய்மாய் முன் அழைத்துச் சென்று, **“அவர்கள் எனக்காகப் பணிபுரிவதால் அந்த வியர்வையால் உங்கள் அதிர்ஷ்டம் செழிக்கும்! அவர்களை மனப்பூர்வமாகத் தழுவுங்கள்!”** என்றார். இருவரும் பாபாவைப் பார்த்து சிரித்தபடியே கெய்மாயையும் மனுவையும் தழுவினர்.

கோர்ஷெத், கணவர் ரூஸி பாப் இருவரும் சொத்துக்கள் அனைத்தையும் பாபாவிற்கு அர்ப்பணம் செய்வதைப் பற்றி விவாதித்தனர். பாபா, ஆதி சீனியர் மற்றும் ஸரோஷின் விரிவான குடும்பத்தின் வெவ்வேறு உறுப்பினர்களுடன் இது குறித்து பல சந்திப்புகள் நிகழ்ந்தன.

இறுதியில், இருவரும் அனைத்தையும் மெஹர் பாபாவிற்கு அர்ப்பணிக்க முடிவு செய்தனர், மேலும் குடும்பத்தின் பராமரிப்பு மற்றும் கோஹெரின் கல்விக்கான பொறுப்பை, பாபா ஏற்றுக்கொண்டார்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, மெஹர் பாபா, இந்தியா முழுவதும் பயணம் செய்ய, ஒரு பேருந்து தயார் செய்யும் விருப்பத்தைத் தெரிவித்தார். பாபா, அக்டோபர் 14 அன்று, ஆதி சீனியருக்கு அனைத்து விவரங்களையும் விளக்கினார். பேருந்தின் உதிரிப் பாகங்களைக் கொண்டு மும்பையில் அதைக் கட்டமைக்கத் தேவையான ரூபாய் 1800 மற்றும் விபரங்கள், அக்டோபர் 21ஆம் நாள் தொலைத்தந்தி மூலம் ஸரோஷுக்கு அனுப்பப்பட்டன.

பப்பா ஜெஸவாலா 1938, அக்டோபர் 21ஆம் நாள் மெஹர் பாபாவுடன் நிகழ்த்திய மூன்று மணி நேர சந்திப்பில், பப்பா தனது குடும்பம் மெஹராபாத்தில் தங்கவும், பாபாவின் கண்காணிப்பில் முழுப் பொறுப்பை விட்டுவிடவும் ஒப்புக்கொண்டார்.

அக்டோபர் 23 அன்று டாக்டர் தேஷ்முக், மனைவியுடன் மெஹராபாத் வந்து இரண்டு நாட்கள் தங்கினார். விரைவில் வெளிவரவிருக்கும் 'மெஹர் பாபா ஜர்னல்' (MEHER BABA JOURNAL) கட்டுரைக்கு, மனப்படிவங்களைப் பற்றி, பாபா அவருக்கும் ஆதி சீனியருக்கும் விளக்கமாக எடுத்துரைத்தார்.

1938 அக்டோபர், முதல் வாரத்திலிருந்து பாபாவின் பணியின் நிமித்தம், சாஞ்சி மும்பை, தென்னிந்தியா மற்றும் மெஹராபாத்திற்கு இடையே முன்னும் பின்னுமாகப் பயணம் செய்து வந்தார். ஸர் ஹைதரியை சந்தித்து, வாடகைக்கு சாத்தியமான பங்களாக்களைப் பற்றி விசாரிக்க அக்டோபர், நவம்பர் மாதங்களில் இரண்டு முறை சாஞ்சி ஹைதராபாத்திற்கு அனுப்பப்பட்டார்.

இதற்கிடையில் மெர்சிடிஸ் டி அகோஸ்டா, கான்ஸுலோ ஸைட்ஸ் இருவரும் நவம்பர் மாதத்தில் இதர ஆன்மீக ஞானிகளையும், யோகிகளையும் சந்திக்கும் நோக்கத்துடன் இந்தியா வந்திருந்தனர். அவர்கள் (முக்கியமாக பால் பிரண்டனை சந்தித்ததால்) பாபாவிடமிருந்து 'விலகிச் சென்றதாகத்' தோன்றியது. ஆயினும்கூட, சாஞ்சி, நோரினா இருவரும் மும்பையில் அவர்களை சந்தித்து 1938 நவம்பர் 17 அன்று மெஹராபாத்தில் பாபாவைப் பார்க்க அழைத்து வந்தனர். அவர்கள் இதர புனிதர்களையும், குருநாதர்களையும் சந்திப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்று பாபா கூறினார், ஆனால் **"நீங்கள் உண்மைப்பொருளைத் தேடி அடைய விரும்பினால், அதற்கான வழி இது அல்ல"** என்றார்.

அவர்களின் சந்திப்பின் போது, பாபா அவர்களுக்கு இவ்வாறு வலியுறுத்தினார்:

**நான் என்னைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன், உங்களிடமிருந்து எதையும் நான் விரும்புவதால் அல்ல, ஆனால் நான் உங்களுக்காக இதயபூர்வமாக உணர்கிறேன் என்பதாலும், ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு நீங்கள் வந்ததாலும் இதைக் கூறுகிறேன். இந்தியாவில் மூன்று வகையான ஆன்மீக மனிதர்கள் உள்ளனர்: முதல் வகை, பரபரப்பூட்டி ஆர்வத்தைத் தூண்டும்; இரண்டாவது, தன்னடக்கமுள்ள, ஆழ்ந்த, அமைதியான வகை; மூன்றாவது, இறை-மனிதன் (அவதார புருஷர்), மனித-கடவுள் (சத்குருக்கள்).**

**பரபரப்பான முதல் வகை, வேதாந்தத்தைப் பற்றிய தங்கள் அறிவை வெளிப்படுத்தி, வாழ்க்கை மற்றும் ஆன்மீகத்தின் மேன்மையான கொள்கைகளைப் பற்றிய உயர்தர பேச்சுக்களை வழங்கக்கூடியவர்கள். இது அனைத்தும் மேற்பரப்பிலே இருப்பதால் வெளிப்புற காட்சியாகவே இருக்கும்.**

**அவர்கள் உண்மையின் தோற்றத்தை உருவாக்க முற்படுகிறார்கள், அவர்களிடம் செல்லும் மக்கள் அற்புதங்களால் ஈர்க்கப்படுகிறார்கள், அவை உண்மையில் மந்திர தந்திரங்களைத் தவிர வேறொன்றுமில்லை. இது ஒரு**

**வித பேரம் பேசும் விதமாக இருப்பதால் விரும்பத்தகாதது. இந்த வகையான நம்பிக்கையை நான் விரும்புவதில்லை.**

**இதர வகை, தன்னடக்கத்துடன் அமைதியான, அறிவு மற்றும் அனுபவத்தில் ஆழமானது, ஏனெனில் அவை மேல்நிலையை அடைந்த ஆத்மாக்கள் மற்றும் ஒரு சிலர் இறைநிலையை எய்திய நபர்கள். அவர்கள் அமைதியான வாழ்க்கையை விரும்புகிறார்கள், தங்கள் வேலையை மௌனமாகச் செய்கிறார்கள் - எனவே, அதிகம் அறியப்படுவதில்லை.**

**குதுப் அல்லது சத்குருக்கள் கடவுள் மற்றும் மனித நிலை இரண்டையும் அனுபவிக்கிறார்கள். அவர்கள் ஆன்மீக உச்சத்தை அடைந்தவர்கள், மேலும் மனிதகுலத்திற்கு உதவ, மனித நிலைக்கு வந்தவர்கள். அவர்களின் வழிகளும் முறைகளும் விசித்திரமானவை, எனவே, பெரும்பாலான மக்கள் புரிந்து கொள்வதில்லை.**

அடுத்த நாள், மெஹர் பாபா, சாஞ்சியிடம், மெர்சிடிஸ், கான்ஸூலோ இருவரையும் கேட்காவ்மிற்கு அழைத்துச் சென்று நாராயண் மஹாராஜின் தரிசனத்தைப் பெறுமாறு கூறி அனுப்பினார். அவர்கள் நாராயண் மஹாராஜின் ஆசிரமத்திற்கு வந்தபோது, மஹாராஜ் ஐந்து நிமிடங்களுக்கு முன்னர் ஓய்வெடுக்கச் சென்றதாகத் தகவல் கிடைத்தது. ஆனால் மெஹர் பாபா அனுப்பிய மூன்று நபர்கள் வந்ததாக நாராயணனுக்குத் தகவல் தெரிவித்ததும், அவர் திரும்பி வந்து, மெஹர் பாபாவைப் பற்றி அன்புடன் விசாரித்தார். வந்தவர்களைப் பற்றிய செய்திகள் பரிமாறப்பட்டதும், அவருடைய ஆசீர்வாதங்களுடன் மெர்சிடிஸ், கான்ஸூலோ, சாஞ்சி மூவரும் விடைபெற்றுச் சென்றனர். சாஞ்சி அவர்களை, பூனாவில் பாபாஜானின் சமாதிக்கு அழைத்துச் சென்று, மெஹராபாத் திரும்பி வந்தனர். பின்னர் அவர்கள் தென்னிந்தியாவை நோக்கி ரமண மகரிஷியின் தரிசனத்திற்காகச் சென்றனர்.

மெஹர் பாபா ஜர்னலின் (MEHER BABA JOURNAL) முதல் பதிவு 1938 நவம்பரில் வெளியிடப்பட்டது. ஒவ்வொரு மாத இதழிலும் ஒரு புதிய சொற்பொழிவை வழங்குமாறு நோரினா விடுத்த வேண்டுகோளுக்கு, பாபா இணக்கம் தெரிவித்தார். முதல் இதழின் தலைப்பு ‘அவதார்’ (AVATAR). பாபா எடுத்துரைத்த கருத்துகளிலிருந்து ‘சுயநலம்’ மற்றும் பல சொற்பொழிவுகளுக்கு விரிவுரை எழுதியதை ஆதி சீனியர் நினைவு கூர்ந்தார். ஆனால் அதைத் தொடர்ந்து, நாக்பூரில் வாழும் டாக்டர் தேஷ்முக் (தத்துவ பேராசிரியர்) இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆதி சீனியர் பரிந்துரைத்தார். மேலை நாட்டினருக்குத் தெரியாத முறையில், மெஹர் பாபாவின் சொற்பொழிவுகளின் தற்காலிக பிரதிகளை மறுபடியும் எழுதுமாறு டாக்டர் தேஷ்முக்கை கேட்டுக்கொள்ளுமாறு பாபா, சாஞ்சிக்கு அறிவுறுத்தினார். அதற்குப் பிறகு, வெளியீட்டிற்கு முன்பு, பாபா, ஒவ்வொரு வரியையும் கவனமாக ஆராய்ந்து திருத்தங்களைச் செய்து, கூடுதலான பதிவுகளையும்

இணைத்தார். இவ்வாறு பிரதானமாக, டாக்டர் தேஷ்முக் தனிப்பட்ட முறையிலும், சில வேளைகளில், ஆதி சீனியர், டாக்டர் கனி, ராம்ஜூ மற்றும் பலர் குருநாதரின் துணை எழுத்தாளர்களாகவும் பணியாற்றினர்; மேலும் பாபாவின் கட்டளைப்படி, சொற்பொழிவுகளின் முதல் பிரதியை எழுதினர்.

மெஹர் பாபா ஜர்னலின் முதல் இதழ் அச்சிடப்பட்டபோது, பாபா, அதன் ஒரு நகலை நாராயண் மஹாராஜுக்கு அனுப்பி வைத்தார். நாராயண் அதைத் தனது சீடர்களில் ஒருவரிடம் கொடுத்து, அவர் எழுதிய கட்டுரைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கக் கூறினார்.

இரண்டு நாட்களுக்குப் பின்னர், அவர் அதை முடித்துவிட்டதாக நாராயண் மஹாராஜிடம் தெரிவித்த போது, நாராயண், பாபாவின் 'அவதார்' என்ற சொற்பொழிவை அவரிடம் சத்தமாக வாசிக்குமாறு கூறினார். அந்த மனிதர் அதை வாசிக்கும் வேளையில், நாராயண் மஹாராஜ் ஒரு குழந்தையின் இயல்பான முறையில், "ஓ, அற்புதம்! அற்புதம்!" என்று பறைசாற்றினார்.

**1938**, நவம்பர் **19** அன்று, ஆதி சீனியர், பாபா, நோரினா, எலிஸபெத், நான்னி மற்றும் ஒரு சில மண்டலியை, அஹமதுநகரில், டாக்டர் கங்காதர் சாஸ்திரி குணேயின் (DR. GANGADHAR SHASTRI GUNE) ஆயுர்வேத மருத்துவமனையைத் திறந்து வைக்க அழைத்துச் சென்றார். டாக்டர் குணே நவம்பர் **30**ஆம் நாள் மீண்டும் பாபாவை மெஹராபாத்தில் சந்தித்து, தனது ஆயுர்வேத பணிகளை விரிவுபடுத்த உதவுமாறு கேட்டுக்கொண்டார். பாபா, அவரிடம் ஒரு திட்டத்தை வரையறுக்கும்படிக் கூறி, அவர் தனது சுற்றுப்பயணத்திலிருந்து திரும்பி வந்ததும், அதை மறுபரிசீலனை செய்வதாகத் தெரிவித்தார்.

**1920**ஆம் ஆண்டிலிருந்து, மெஹராபாத் நிறுவப்பட்ட ஆரம்ப நாட்களில், அரன்காவ்ம் கிராமவாசிகள் தங்களுக்குள் ஏற்படும் தகராறுகளுக்கு மெஹர் பாபாவை அணுகி, அதற்கான தீர்ப்பைக் கோருவதை வழக்கமாகக் கொண்டனர். ஒருமுறை, பாபா சர்ச்சையில் பங்கெடுத்த அனைத்து தரப்பினரையும் மெஹராபாத்திற்கு வெளியே அழைத்து, 'நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு' சாட்சியாக, மேற்கத்திய பெண்மணிகளை அழைத்தார். தகராறில் ஈடுபட்ட இரு கட்சிகளும் வந்து மிகவும் கோஷம் எழுப்பி, வாதிட ஆரம்பித்தன; ஒரு கட்டத்தில், பாபா வெளியேற எழுந்து, முழு விவகாரத்திலும் சோர்வடைந்தது போலிருந்த வேளையில், அவர்கள் பாபாவின் முடிவை ஏற்றுக்கொள்ள முன்வந்தனர்.

நன்றியுடன், சில நாட்களுக்குப் பின்னர், **1938**, நவம்பர் **26** அன்று, அரன்காவ்ம் கிராமவாசிகள் மலையிலிருந்து பாபாவின் சமாதிக்கு ஊர்வலம் ஒன்றை வழிநடத்திச் சென்றனர், அங்கு பாபா அவர்களுக்காகக் காத்திருந்தார்; பஜனைகள் பாடி அவரை மகிழ்விக்க நடனமாடி இன்புற்றிருந்தனர்.

அதே நாளில், வால்டர் மெர்டென்ஸ், சாஞ்சியுடன் மெஹராபாத் வந்தார். அவர் மெஹராபாத் மேல் மலைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது அவரது

மனைவி ஹெடியைப் பார்க்க அனுமதிக்கப்பட்டார். அவர் பாபாவின் ராஹூரி கேபினில் தங்கி இருந்தார்.

அடுத்த நாள், பாபாவுடனான ஒரு சந்திப்பின் போது, வால்டர் தனது உணர்வுகளை வெளிப்படையாகத் தெரிவித்தார், "நான் கிழக்கத்திய முறைப்படி ஒரு புனித மனிதனாகவோ அல்லது துறவியாகவோ மாற விரும்பவில்லை. நான் ஓர் ஐரோப்பியன், எங்கும் எந்தச் செயலிலும் தன்னை வெளிப்படுத்தக்கூடிய ஆன்மீகத்தை நம்புகிறேன்."

அதற்கு பதிலளித்த பாபா, "**நான் கிழக்கு, மேற்கு இரண்டிற்கும் மேலாக நிற்கிறேன்; நான் யோகி அல்ல, துறவியும் அல்ல, ஆனால் கிறிஸ்துவைப் போலவே ஓர் இறை-மனிதன். நீங்களும், ஹெடியும் நானும் ஒன்று. உங்கள் இருவருக்கும் முன்னால் பெரிய பணிகள் காத்திருக்கின்றன. நீங்கள் எப்பொழுதும் என்னுடன் இருந்து வருகிறீர்கள்**."


பாபா, வால்டர், ஹெடி இருவரையும் ஐந்து நாட்களுக்கு, பஞ்ச்கணிக்கு அனுப்பி வைத்தார்; பிளீடர் அவர்களின் வழிகாட்டியாக இருந்தார். அவர்கள் டிசம்பர் 5ஆம் நாள் திரும்பி வந்தனர். ஒவ்வொரு நபரும் பாபாவின் அறிவுறுத்தல்களின்படி, 'டைகர் வேலி'யில் (TIGER VALLEY) அமைந்த பாபாவின் குகையில் தனியாக ஓர் இரவைக் கழித்தனர்.

டிசம்பர் 5 அன்று மெஹர் பாபாவைப் பார்க்க ராவ்ஸாஹேப், மானேக் ரஞ்சி மற்றும் காக்கா பாரியா வந்தனர்.


1938, டிசம்பர் 7ஆம் நாள், மெஹராபாத்தை விட்டு வெளியேறுவதற்கு ஒரு நாள் முன்பு, பாபா, சாய் பாபாவின் வாழ்க்கையின் ஒரு பாகத்தைச் சுட்டிக்காட்டி, மெஹர் பாபா ஜர்னலில் ஒரு கட்டுரையை எழுதுமாறு டாக்டர் கனிக்கு அறிவுறுத்தினார். மெஹர் பாபாவின் எதிர்கால சமாதியில் ஹெலன் டாம் வரைந்த ஓவியங்களைக் காண்பிப்பதற்காக, அனைத்து மண்டலியையும் பாபா மேல்மலைக்கு அழைத்துச் சென்றார்.



மஸ்துகளால் அரங்கேற்றப்பட்ட 'ராஜா கோபிசந்த்' மேடை நாடகம்
(‘RAJA GOPICHAND’ DRAMA STAGED BY MASTS)



நாராயண் மஹாராஜ்
(NARAYAN MAHARAJ)



ஜபல்பூர் (JABALPUR)**, 1939**




நீலப்பேருந்து (BLUE BUS)**, 1938 -39**



நீலப்பேருந்து, மெஹராபாத் மேல்மலையில், **1938**

(BLUE BUS, MEHERABAD HILL 1938 )



நீலப்பேருந்து பயணப் பாதையில்...

(A HALT DURING THE BLUE BUS TOURS)

# நீலப்பேருந்து பயணம்

## ஜபல்பூர், பெனாரஸ், ஆக்ரா, டெல்லி, அஜ்மீர் & ஜெய்பூர்

**(Blue Bus Tour)**

பேருந்தில் பயணம் செய்வதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் 1938, நவம்பர் மாதம் நடந்து கொண்டிருந்தன. மெஹர் பாபாவின் துல்லியமான விவரக்குறிப்புகளின்படி, மும்பையில் ஸரோஷ், பேருந்தின் முக்கிய கட்டமைப்பை கவனித்து வந்தார். இது நீல வண்ணத்தால் பூசப்பட்டதால், நீலப்பேருந்து (BLUE BUS - ப்ளூ பஸ்) என்று அழைக்கப்பட்டது.

இறுதியில் 1938, டிசம்பர் 8 பயணம் தொடங்கும் நாளாக நிர்ணயிக்கப்பட்டது. நவம்பர் 19 அன்று, சில உலர்ந்த புற்களுக்கு நெருப்பு வைக்கும் வேளையில், வாலுவின் புடவையில் தீப்பற்றிக் கொண்டதில், அவரது கால்களில் கடுமையான காயம் ஏற்பட்டது. தீக்காயங்களுக்கு சிகிச்சை செய்த பாதிரி, டாக்டர் கலாவ்கர் (DR. KALAVKER) இருவரும் வாலுவை இந்த நிலையில் பயணத்தில் அழைத்துச் செல்வது நல்லதல்ல என்று பாபாவிடம் பரிந்துரைத்தனர். ஆனால் பாபா உறுதியாக பதிலளித்தார், "**இல்லை, நாம் அனைவரும் இந்தப் பயணத்தை ஒன்றிணைந்து தொடங்க வேண்டும். எனது வழியில் மாயா முட்டுக் கட்டையாக இருக்க அனுமதிக்கக்கூடாது!**"

சுற்றுப்பயணம் குறித்து, பாபா பெண்மணிகளுக்கு விரிவாக அறிவுறுத்தினார். பேருந்து நிறுத்தப்படும் ஒவ்வொரு வேளையிலும், உணவுப் பொட்டலங்களைக் கையாளும் பொறுப்பு ரானோவிற்கு வழங்கப்பட்டது; கிட்டி உணவைத் தயார் செய்தார். இப்படி, ஒவ்வொருவரும் தத்தமது குறிப்பிட்ட கடமைகளைச் செய்ய வேண்டியிருந்தது.

டிசம்பர் 7ஆம் நாள், பாபா, எரச்சிடம் "**நீங்கள் எங்களுடன் வருகிறீர்களா?**" என்று கேட்டதற்கு, எப்படியாயினும் எனக்கு ஒன்றுதான் என்று எரச் பதிலளித்தார். பாபா உடனே, "**அலட்சியமாக இருப்பது கூட உள்ளொன்று வைத்து புறமொன்றை காட்டுவது போலத்தான்; இதுவும் அந்த 'ஏதோ ஒன்றிலிருந்து' விடுபட வேண்டும். என்னுடன் வாருங்கள்!**" என்றார்.

அன்று காலை, ஸரோஷ் பேருந்துடன் வந்தபோது, பாதிரி, அதை மெஹராபாத் மேல் மலைக்கு ஓட்டிச் சென்றார்; எரச், காக்கா இருவரும் அதன் மேல் அனைத்து சாமான்களையும் ஏற்றினர். உணவுப் பொருட்கள், சமையல் பாத்திரங்கள், பெட்டி படுக்கைகள், மற்றும் பல பொட்டலங்கள் இருந்தன. ஒரு கட்டத்தில் காக்கா, சோர்வடைந்து மயங்கி, கீழே விழுந்த நிலையில், இளமையும் வலிமையும் மிக்க எரச், எஞ்சிய பணியை செய்து முடித்தார். அவர்கள் பேருந்தில் அனைத்து பொருட்களையும் குவித்து முடித்ததும், பேருந்து மிகவும் வித்தியாசமான - 'நாடோடிகளின் கவிகை வாகனம்' (GYPSY CARAVAN) போன்ற தோற்றத்தைக் கொண்டிருந்தது.

மஹாராஜா ஸர் கிஸான் பிரசாத் (MAHARAJA SIR KISAN PRASAD), மௌலா அலி (MAULA ALI) ஆகியோரின் உதவியுடன் ஹைதராபாத் நகரில் சில பங்களாக்களை ஏற்பாடு செய்ய, சாஞ்சி ஏற்கனவே அங்குச் சென்றிருந்தார். ஹைதராபாத்தின் ஷட்நகர் (SHADNAGAR) பகுதியில் மஹாராஜாவிற்கு ஓர் அரண்மனை இருந்தது, ஆனால் அப்பகுதியில் தொற்றுநோய் பரவும் சம்பவங்களால், பாபா குழுவுடன் அங்கே இருப்பதை அவர் விரும்பவில்லை. மிக்க சிரமத்துடன், மஹாராஜா, மௌலா அலி ஆகியோரின் செல்வாக்கைப் பயன்படுத்தி, சாஞ்சி லிகம்பள்ளியில் (LIGAMPALLI) அமைந்த அரண்மனை அந்தபுரத்தை ஏற்பாடு செய்தார். ஆனால், பாபா ஷட்நகரில் தங்க விரும்புவதாக சாஞ்சிக்கு அனுப்பிய தொலைத்தந்தி டிசம்பர் 8ஆம் தேதி அவரை வந்தடைந்தது; எனவே இதை ஏற்பாடு செய்ய சற்று காலதாமதமானது.

மெஹராபாத்திலிருந்து புறப்படுவதற்கு முன்பு, பாபா, மெஹர்வான் ஜெஸவாலா போன்ற சிறுவர்களை, தாதி கேரவாலாவுடன் தங்குவதற்காக அக்பர் அச்சகத்திற்கு அனுப்பி வைத்து, "**நான் உங்களைப் பின்னர் அழைக்கிறேன்**" என்று கூறினார். லக்ஷி, பாமி (பணிப்பெண்கள்), முஹமது மஸ்த் ஆகியோரை அழைத்துச் செல்லவிருந்த வால்டர் மெர்டென்ஸ் மற்றும் பிளீட்ருடன் ரயிலில் கேட்டியும் ஹைதராபாத்திற்குச் செல்ல பாபா அனுமதித்தார்.

1938 டிசம்பர் 8 அதிகாலை நான்கு மணியளவில், பாபா மெஹராபாத் மேல் மலையிலிருந்து நீலப்பேருந்தில் வேறுவேறு வயது பெண்மணிகளுடன் புறப்பட்டார்:

| | |
|---|---|
| மெஹரா, 31 | மணி, 20 |
| நாஜா, 30 | கோர்ஷெத், 28 |
| ஸூனாமாசி, 54 | வாலு, 38 |
| மன்ஸாரி, 28 | கெய்மாய், 38 |
| மனு, 19 | மெஹரு (ஜெஸவாலா), 17 |
| காக்குபாய், 52 | எலிஸபெத், 42 |
| ஹெடி மெர்டென்ஸ், 45 | ஹெலன் டாம், 60 |
| ஐரீன், 22 | கிட்டி டேவி, 47 |
| நதீன் டால்ஸ்டாய், 54 | நான்னி, 63 |
| நோரினா, 58 | ரானோ, 36 |

எலிஸபெத் பிரதான ஓட்டுநராக இருந்தார்; எரச், காக்கா இருவரும் முன் இருக்கையில் எலிஸபெத்துடன் அமர்ந்திருந்தனர். பெண்மணிகளுடன் பாபா அமர்ந்திருந்த பின்பாகம், ஒரு மரப்பலகையால் ஓட்டுநரின் அறையிலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பாபா, எலிஸபெத்தின் பின்னால் நேரடியாக அமர்ந்திருந்தார், இடையே ஒரு சிறிய நகரும் ஜன்னல் வழியாக, அவரது எழுத்துப்பலகை மூலம் தொடர்பு கொள்ள வசதியாக அமைக்கப்பட்டிருந்தது.

எண்ணற்ற சிறிய பைகள் மற்றும் மூட்டை முடிச்சுகளுக்கு இடை வழியாகப் பெண்மணிகள் பின் அறைக்குள் நுழைந்தனர். அமருவதற்கென சிறிய இருக்கைகள் பாதையில் வைக்க வேண்டியிருந்தது. இவ்வாறு, பதினொரு கிழக்கத்திய மற்றும் ஒன்பது மேற்கத்திய பெண்மணிகள், இரண்டு ஆண்களுடன் பாபாவையும் சேர்த்து - மொத்தத்தில் 23 நபர்கள் - பேருந்தில் சவாரி செய்தனர்.

பாபாவின் அறிவுறுத்தலின் படி, வாலுவின் தீக்காயங்களுக்குக் கட்டு போடுவதற்கான மருந்தும், இதர பொருட்களும் ரானோவின் கண்காணிப்பில் இருந்தன. இதற்கு முன்னர், இரத்தம் என்றாலே அவருக்கு, மனதிற்கு ஒவ்வாத காட்சியாக இருந்தது. ஆனால் பாபாவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து, மனக் கட்டுப்பாட்டை இழக்காமல், ஒவ்வொரு நாளும் வாலுவின் தீக்காயத்தை சுத்தம் செய்யும் பணியை ஏற்றுக்கொண்டார்.

இந்தக் குழு, மாலையில் ஷோலாபூர் (SHOLAPUR) நகரை வந்தடைந்த வேளையில், பாபா இவ்வாறு அறிவித்தார், "**நாம் நாளை அதிகாலை நான்கு மணிக்கு இங்கிருந்து புறப்பட வேண்டும். பேருந்திலிருந்து மூட்டை முடிச்சுகளை இறக்க வேண்டிய தேவையில்லை, ஏனெனில் அதை மீண்டும் சீரமைப்பது தலைவலியாகி, நிறைய நேரம் தேவைப்படும்.**" எனவே, அறிவுறுத்தப்பட்டபடி, அனைவரும் அன்று இரவில் ஷோலாபூர் பயணிகள் ஓய்வு இல்லத்தில் தங்கினர்; மேலும் அனைவரும் நாற்காலிகள், மேசைகள் அல்லது வராந்தாவின் தரையில் ஓய்வெடுக்க, எரச், காக்கா இருவரும் பேருந்தில் தூங்கினர்.

ஷோலாபூரைச் சென்றடைந்ததும், உண்ண ஏதாவது உள்ளதா என்று பாபா, கிட்டியிடம் கேட்க, அவர் ரொட்டியும், ஒரு சிறிய துண்டு பாலாடைக் கட்டி தவிர வேறு எதுவும் இல்லை என்று பதிலளித்தார், ஏனெனில் அவர்கள் எடுத்துச் சென்ற உணவு பாழாய்ப்போனது.

குழுவிற்கு தேநீருடன் ரொட்டியும், ஓட்டுநர்களான எலிஸபெத், எரச் இருவருக்கும் பாலாடைக்கட்டியும் அனுப்பும்படி பாபா, கிட்டிக்கு அறிவுறுத்தினார்.

ரானோவிற்கு, பாபாவின் இந்த அறிவுறுத்தல்கள் தெரியாத பட்சத்தில், அவர் கிட்டியிடம், "எலிஸபெத், எரச் போலவே நானும் கடினமாக உழைத்தேன், அதிகாலை மூன்று மணிக்கு எழுந்திருக்கிறேன்! எனக்குப் பாலாடைக்கட்டி எதுவும் இல்லையா? நானும் பசியுடன் இருக்கிறேன்!" என்றார்.

பாபாவின் பார்வையிலிருந்து எதுவும் தப்புவதில்லை. அவர் கிட்டி, ரானோ இருவரும் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று கேட்டு, இறுதியில் இந்த சம்பவத்தை வெளிப்படையாக அனைவர் முன்னிலையிலும் கொண்டு வந்தார். ரானோ வெட்கத்துடன் மனம் வருந்தினார்.

அவர்கள் டிசம்பர் 9ஆம் தேதி ஹைதராபாத்திற்குப் பயணத்தைத் தொடர்ந்தனர். வழியில் பாபா, அவருக்குப் பசி எடுப்பதாகக் கூறி, மிகவும் விசித்திரமான சில உணவுகளைக் கோரினார்: "**நோரினாவின் மூக்கு, ஜஃப்ராபாடி எருமை மாடு, மன்ஸாரியின் தலை முடி கொத்துக் கலவை,**

**ஒரு தவளையின் வால் கறி, மற்றும் கெய்மாயின் கையின் சூப்!"** இத்தகைய நகைச்சுவையான, மகிழ்ச்சிகரமான இடைவேளைகள் வரவேற்கப்பட்டன, மேலும் பாபா, அரிசி மற்றும் வேர்க்கடலை உருண்டை, பொங்கல் அல்லது இனிப்புகளை அனைவருக்கும் வழங்கி மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்தார்.

பயண வேளையில், மதிய உணவிற்காக அனைவரும் சாலையோர மர நிழலில் அமர்ந்து உண்டனர்; மேலும் ரானோ, வாலுவின் தீக்காயங்களை சுத்தம் செய்து, மறைப்பு கட்டுப் போட்டுவிடுவது வழக்கம். வாலுவால் நடக்க முடியாததால் பேருந்திற்கு உள்ளேயும் வெளியேயும் தூக்கிச் செல்ல வேண்டியிருந்தது.

மாலை 7:30 மணிக்கு, அவர்கள் ஹைதராபாத்தை வந்தடைந்தனர், அங்கு, நகரிலிருந்து 20 மைல் தொலைவில் சாஞ்சி அவர்களுக்காகக் காத்திருந்தார். அவர் தங்கியிருந்த விடுதியைப் பற்றி, பாபாவிடம் தெரிவித்து, அனைவரும் அரண்மனையின் அந்தபுரத்தில் படுக்கைகளைத் தரையில் விரித்து, இரவைக் கழித்தனர்; அன்றிரவு முஹமது மஸ்த், கேட்டி, லக்ஷி, பாமி ஆகியோருடன் பிளீடர், வால்டர் மெர்டென்ஸ் இருவரும் வந்து, அங்கேயே தங்கினர்.

அடுத்த நாள், மெஹர் பாபா, சாஞ்சி இருவரும் ஹைதராபாத்தைச் சேர்ந்த சில உள்ளூர் நபர்களுடன், மிகவும் பொருத்தமான பங்களாவைத் தேடி, பேகம்பேட்டை (BEGUMPET) பகுதியில் ஜாகிர்தார் (JAGIRDAR) கல்லூரிக்கு எதிரே, நிஜாமின் சகோதரர் மெஹரலியின் (MEHERALI) அரண்மனையை வாடகைக்கு எடுத்தனர். அன்று இரவு பத்து மணிக்கு அவர்கள் அங்குச் சென்றனர். தூங்குவதற்கு முன்பு, பாபா எதிர்வரும் சுற்றுப்பயணத்தைக் குறித்து ஒரு கலந்துரையாடலை நிகழ்த்தி, பேருந்து பயணத்தின் நான்கு முக்கிய நோக்கங்களை எடுத்துரைத்தார்:

- **முதலாவதாக: மஸ்துகளைத் தொடர்பு கொள்வது.**
- **இரண்டாவது: புதிய ஆசிரமம் அல்லது மையத்தை நிறுவ பொருத்தமான இடத்தைக் கண்டுபிடிப்பது.**
- **மூன்றாவது: பெண்மணிகள் நாட்டைச் சுற்றிப் பார்க்கவும், அவர்கள் இதுவரை வழிநடத்தியதை விட வித்தியாசமான வாழ்க்கை முறையை அனுபவிக்கவும் வாய்ப்பு அளித்தல்.**
- **நான்காவது: புனிதர்கள், குருநாதர்கள் அல்லது சத்குருக்களின் ஆலயங்கள் மற்றும் சமாதிகளுக்கு விஜயம் செய்தல்.**

மெஹர் பாபா நகரின் பல்வேறு நபர்களுடன் ஆசிரமம் அமைப்பது குறித்த சாத்தியக்கூறுகளை விவாதித்தார்; தொடர்ந்து ஹைதராபாத்தில் வெவ்வேறு இடங்களைப் பார்வையிட்டார்.

நகருக்கு வெளியே பதினொரு மைல் தொலைவில் அமைந்த ஏரி அருகில் ஓர் இடத்தை அவர் விரும்பினார். அதற்கான முதன்மை திட்டத்தைத் தயாரிக்க வால்டரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஒரு தோராயமான திட்டம் வரையப்பட்டு, விவாதித்து பல மாற்றங்கள் செய்யப்பட்டன. மஹாராஜா

கிஸான் பிரசாத் (MAHARAJA KISAN PRASAD), மௌலா அலி (MAULA ALI) மற்றும் பிற செல்வாக்கு மிக்க நபர்கள் இந்த அனைத்து திட்டங்களிலும் நம்பிக்கைத் தெரிவித்ததால், மெஹர் பாபா ஹைதராபாத்திற்குச் செல்வது குறித்து தீவிரமாகப் பரிசீலித்து வந்தார்.

பல சந்தர்ப்பங்களில், ஹைதராபாத்தில் கோல்கொண்டா கோட்டை (GOLCONDA FORT) மற்றும் பிற பிரசித்தி வாய்ந்த இடங்களைப் பார்வையிட பாபா பெண்களை அழைத்துச் சென்றார்.

ஹைதராபாத்தில் புதிய மையத்தைத் தொடங்குவது குறித்து மேலும் சில நாட்கள் நடத்திய கலந்துரையாடலுக்குப் பிறகு, திட்டம் இறுதி செய்யப்பட்டு, நடைமுறைக்கு வரவிருந்தபோது, திடீரென, டிசம்பர் 15 அன்று, சம்பந்தப்பட்டவர்களுக்கு, பாபா இவ்வாறு அறிவித்தார், "**நான் என்னுடைய முக்கியமான பணிக்காக, ஜபல்பூருக்கு உடனடியாகச் செல்கிறேன். நான் திரும்பி வரும் வேளையில் ஏனைய விஷயங்களைப் பற்றி மேலும் விவாதிப்போம்.**"

ஹைதராபாத்தில் பாபா இருந்த இந்தக் குறுகிய காலத்தில், மஸ்தானி மாய் (MASTANI MAI) என்று அழைக்கப்படும் ஆறாவது ஆன்மீக தளத்தில் நிலைகொண்ட அவரைத் தொடர்பு கொள்ள, பாபா, பிளீடரை அனுப்பி வைத்தார்: "**முழு ஹைதராபாத் நகரப்பகுதிகளின் திறவுகோலையும் அவர் கையில் வைத்திருக்கிறார்**" என்று பாபா கருத்துத் தெரிவித்தார். அவர், 60 வயதான மஸ்தானியை நேரடியாகத் தொடர்பு கொள்ளவில்லை என்றாலும், பாபா, தான் நகரத்தில் இருப்பதாகக் கூறுமாறு பிளீடருக்கு அறிவுறுத்தினார். ஹெடி, வால்டர் மெர்டென்ஸ் இருவரும் பிளீடருடன் தங்கள் புகைப்படத்தை எடுக்க மஸ்தானி வாழ்ந்த தெருவிற்குச் சென்றனர். எல்லா நேரத்திலும் ஏறக்குறைய நிர்வாணமாக இருந்த அந்த மஸ்தானி, பாபாஜானின் தோற்றத்தைக் கொண்டிருந்தார்.

1938, டிசம்பர் 17 காலை, பாபா, பெண்மணிகளுடன் ஹைதராபாத்திலிருந்து நாக்பூருக்குப் (NAGPUR) புறப்பட்டார். வழியில், நாந்தேட் (NANDED) நகரை நெருங்கியதும் பாபா, எலிஸபெத்திடம் பேருந்தை வேகமாக ஓட்டுமாறு கூறினார்! பேருந்தை இவ்வளவு அதிகமான சுமையோடு, வேகமாக ஓட்டுவது ஆபத்தானது, இருந்தும் எலிஸபெத் பாபாவிற்குக் கீழ்ப்படிந்தார். திடீரென, பாபா பேருந்தை நிறுத்தும்படிக் கட்டளையிட்டு, கீழே இறங்கினார். சாலையோரம் நடந்து சென்று கொண்டிருந்த மஸ்த் ஒருவரைத் தொடர்பு கொள்ளும் நோக்கத்தில், பாபா அவசரப்பட்டதாகத் தெரியவந்தது. மெஹர் பாபா அங்கேயே ஒரு மரத்தின் கீழ் அவருடன் அமர்ந்து தொடர்பு கொண்டார்.

மாலைப் பொழுது சாய்ந்து விட்டதால், அவர்கள் நாந்தேட் பயணிகள் பங்களாவில் அன்றிரவு தங்கினர். படுக்கை சுருள்களை இதர பொருட்களின் குவியலிலிருந்து பிரிக்க முடியாததால், மீண்டும் அனைவரும் நாற்காலிகள், மேசைகள் அல்லது தரையில் தூங்கி திருப்தியடைய வேண்டியதாயிற்று.

இவ்வாறு, பெண்மணிகள் ஓரிரவு அரண்மனையிலும் அடுத்த இரவு பயணிகள் விடுதியில், தரையிலும் தூங்கும் மாறுபட்ட அனுபவங்களைக் கொண்டிருந்தனர். காக்கா பாரியா, எரச் இருவரும் வழக்கம் போல பேருந்தில் தூங்கினர்.

பிளீடர் ஏற்கனவே இரண்டு நாட்களுக்கு முன்னர் ஹைதராபாத்திலிருந்து ஜபல்பூருக்கு ரயிலில் புறப்பட்டுச் சென்றார்.

டிசம்பர் 18ஆம் நாள் காலை ஆறு மணிக்கு, பாபாவும் குழுவும் நாந்தேட் நகரிலிருந்து நாக்பூருக்குப் புறப்பட்டு, மாலை ஏழு மணியளவில் அங்குச் சென்றடைந்தனர். பப்பா ஜெஸவாலா தங்கியிருந்த ஒரு சிறிய வாடகை வீட்டில் அனைவரும் சிரமப்பட்டுத் தங்கினர். பப்பாவின் குடும்பத்தினர் பாபாவுடன் இருந்ததால், அவர் தனிமையில் சோகமாக உணர்ந்தார். அவரது மனநிலையை சீராக்கும் நோக்கத்தில், நகைச்சுவை துணுக்குகளால் பாபா அவரை வரவேற்றதும், பப்பாவின் மனவருத்தம் எங்கோ பறந்து சென்றது. கெய்மாய், பாபாவுடன் வந்திருந்ததால், அன்றைய தினம் அவரது பிறந்தநாளை, சொந்த ஊரில் கொண்டாட முடிந்தது. மனைவி மற்றும் குழந்தைகளைப் பார்த்து பப்பா ஜெஸவாலா மகிழ்ச்சியாக இருந்தார்.

சாஞ்சி ஒரு சில முக்கிய பணிகள் நிமித்தம், ஹைதராபாத்தில் தங்கியிருந்து, பின்பு ஜபல்பூருக்குச் செல்லும் வழியில், நாக்பூரில் பாபாவை சந்தித்தார். டாக்டர் தேஷ்முக், அவரது மனைவி இருவரும் வந்தனர்; மேலும் பாபா ஒரு மருத்துவமனைக்கு விஜயம் செய்தார். நாக்பூரிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, மாண்ட்லா (MANDLA) குறுநகரத்தைச் சேர்ந்த செல்வந்தரும், நில உரிமையாளருமான மகேந்திர லால் சௌத்ரி (MAHENDRA LAL CHOWDHARY), பாபாவைப் பார்க்க வந்தார். பல ஆண்டுகளாக நீடித்த ஒரு கொலை வழக்கில் அவர் ஈடுபட்டதால் மிகுந்த கவலையுடன் காணப்பட்டார். அவரைக் கைது செய்யவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**“எனது கட்டளைகளை நீங்கள் பின்பற்றினால், நான் உங்களைக் காப்பாற்றுவேன்”** என்று பாபா அவரிடம் கூறினார். **“உடனடியாக, காவல்துறை அதிகாரியிடம் சரணடையுங்கள்.”**

அந்த மனிதர், அதை ஏற்றுக்கொள்ளாமல் திரும்பிச் சென்றார்; ஆனால் விரைவில் அவர் ஓர் உயர் அதிகாரியின் கீழ் சரணடைந்தார்!

மெஹர் பாபா டிசம்பர் 19ஆம் நாள், ஜபல்பூருக்குப் (JABALPUR) புறப்பட்டார். மாவட்ட நீதிபதியாகவும் ஜபல்பூரின் உதவி ஆணையராகவும் (DISTRICT MAGISTRATE AND THE EXTRA-ASSISTANT COMMISSIONER OF JABALPUR) பணி புரிந்த ஜால் கேரவலா (JAL KERAWALA), ஒரு பெரிய அரசாங்க பங்களாவில் வாழ்ந்து வந்தார். ஜால் 65, மார்பிள் ராக்ஸ் (MARBLE ROCKS) சாலையில் அமைந்த தனது பங்களாவில், பாபா மற்றும் பெண்மணிகள் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, அவர் அருகிலமைந்த ஒரு வாடகை வீட்டில் மண்டலியுடன் தங்கச் சென்றார். அனைத்து ஏற்பாடுகளும் அற்புதமாகச் செய்யப்பட்டன; அனைவரும்

தங்கள் இல்லத்தில் வாழ்வதைப் போல் உணர்ந்தனர். பாபா மீது ஜால் கொண்டிருந்த அன்பு மிகவும் பாராட்டத்தக்கது; அவர் எப்பொழுதுமே பாபாவின் கட்டளைகள்படி வாழ்ந்து வந்தார். பாபா ஜபல்பூரில் 22 நாட்கள் தங்குவதாகத் திட்டம். இடையே மூன்று நாட்கள் மாண்ட்லாவிற்குச் சென்று வந்தார். அவர் வந்த முதல் பத்து நாட்கள், அவரது வருகை, பணியின் நிமித்தம் ரகசியமாக வைக்கப்பட்டிருந்ததால், அவர் எவரையும் சந்திக்க அல்லது அவரை தொந்தரவு செய்வதை விரும்பவில்லை.

இதற்கிடையில், ஜெஸவாலாவின் இரண்டாவது மகன் மெஹர்வான் (MEHERWAN), அக்பர் அச்சகத்தில் வாழ்ந்த அவரது உறவினர்களுக்கு ஒரு சுமையாகக் கருதப்பட்டார்; சுற்றுப்பயணத்திற்கு முன்பாக, பாபா அவரை அங்குத் தங்கவைத்தார். கெய்மாயின் சகோதரி ஷிரினின் கணவர் ஜஹாங்கிர் தமானியா, மெஹர்வானை கவனிப்பதில் சிரமம் இருப்பதாகத் தெரிவித்து, அவனைத் திரும்ப அழைத்துச் செல்லுமாறு கெய்மாய்க்குத் தொடர்ந்து கடிதம் எழுதினார்; இதனால், கெய்மாய் ஒரு நாள் கவலையுடன் இருப்பதைக் கண்டு, பாபா அவரிடம் காரணத்தை வினவினார்.

கெய்மாய், “எங்களைப் பொறுத்தவரை, நாங்கள் உங்களைச் சிக்கல்களுக்கு உள்ளாக்கியுள்ளோம். இப்போது கவலைப்பட மெஹர்வான் இருக்கிறான். நாங்கள் உங்களுக்கு சிரமங்களைத் தர மட்டுமே வந்திருக்கிறோம்” என்று கூறினார்

“**நீங்கள் யாரை நேசிக்கிறீர்கள், மெஹர்வானையா அல்லது என்னையா?**” என்று பாபா கேட்டார்.


கெய்மாய் உடனே, “எனது ஒரு மெஹர்வானை உங்கள் பாதங்களில் அர்ப்பணிப்பது போதாது; நான் ஓராயிரம் மகன்களை சரணடையச் செய்தாலும் அது ஒன்றும் இல்லை” என்று பதிலளித்தார்.

கெய்மாயின் பதில் பாபாவை மகிழ்ச்சியடையச் செய்து, “**எல்லாவற்றையும் துறந்து நீங்கள் என்னிடம் வந்ததால், எனக்கு என்ன கஷ்டம்?**” மேலும் தொடர்ந்து அவர், “**நீங்கள் எரச்சின் தாயாக அல்ல, ஆனால் எனது தாயாக இருக்கத் தகுதியானவர்கள்!**” என்று ஆறுதல்படுத்தினார்.

டிசம்பர் 22ஆம் நாள், பாபா, மெஹர்வானை ஜபல்பூருக்கு அழைத்து வருமாறு மாஸாஜிக்குக் கடிதம் எழுதினார். மேலும் மெஹர்வான் வரும்போது, அவர் பெண் மண்டலியுடன் தங்க வேண்டும் என்று கெய்மாய்க்குத் தெரிவித்தார். அந்த நேரத்தில் மெஹர்வானின் வயது சுமார் எட்டு; பெண்மணிகளுடன் தங்கிய முதல் சிறுவன். பப்பா டிசம்பர் 23 அன்று ஜபல்பூருக்கு வந்து பாபாவுடன் நீண்ட நேரம் உரையாடினார்.




துவாந்தர் நீர்வீழ்ச்சி – DHUANDHAR FALLS



**மார்பிள் ராக்ஸ், 25 டிசம்பர் 1938**

(MARBLE ROCKS, 25 DECEMBER 1938)



**ஜபல்பூர், 6 ஜனவரி 1939**
(JABALPUR, 6 JANUARY 1939)



மெஹர்வான் ஜெஸவாலாவுடன் கோலி விளையாட்டு
(PLAYING MARBLES WITH MEHERWAN JESSAWALA)
**ஜபல்பூர்** (JABALPUR)**, 1939**

பாபாவின் பணிக்காக ஒரு சிறந்த சிறுவனைத் தேடும் பணி இன்னும் தொடர்ந்து கொண்டிருந்தது. ராவ்ஸாஹேப் டிசம்பர் 22 அன்று மும்பையிலிருந்து ஷெரியார் மெஹ்ராபன்பூர் (SHERIAR MEHRABANPUR) என்ற சிறுவனை அனுப்பி வைத்தார். சிறுவன் மிகவும் பணிவானவன், ஆனால் பலவீனமும், மந்தமுமானவன், எனவே பொருத்தமற்றவனாக இருந்தான். ஜால் கேரவாலாவும், இன்னும் பலரும், சகனைப் போலவே ஒரு சிறுவனைத் தேடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

1938, டிசம்பர் 24, 25 இரண்டு நாட்களுக்காக, ஜபல்பூரிலிருந்து பதின்மூன்று மைல் தொலைவில் அமைந்த பிரபலமான பேடகாட் - BHEDAGHAT (MARBLE ROCKS - மார்பிள் ராக்ஸ்) என்ற மலைகள் நிறைந்த இடத்திற்குச் சென்றனர். பாபா பயணிகள் பங்களாவில் தங்கினார். 24 மாலையில் துவாந்தர் நீர்வீழ்ச்சிக்குச் (DHUANDHAR FALLS) சென்று, 64 தெய்வங்களின் சிலைகளை உள்ளடக்கிய இந்து கோவிலுக்கு விஜயம் செய்தார்.

கிறிஸ்துமஸ் தினத்தன்று அனைவரும் நர்மதா (NARMADA) நதியில் படகு சவாரி செய்தனர். பாபா தனது கைகளைத் தண்ணீரில் நனைத்த காட்சியை, ரானோ புகைப்படம் எடுத்தார். "நர்மதா உங்களுக்காக எவ்வளவு காலமாகக் காத்திருக்கிறாள், பாபா!" என்று கெய்மாய் கூறியதும் பாபா மகிழ்ச்சியில் சிரித்தார்.

அவர்கள் திரும்பி வந்த வேளையில், பாபா, "**நாம் படகில் இருந்தபோது, ஒரு சத்குருவைப் பற்றிய கதை எனது நினைவிற்கு வந்தது**" என்றதும், அதைக் கூறும்படி பெண்கள் ஆவலுடன் கேட்டுக்கொண்டனர்; பாபா கதையை இவ்வாறு தொடங்கினார்:

**ஒரு முறை, சத்குரு ஒருவர் தனது சீடர்கள் சிலருடன் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தங்கியிருந்தார். ஓர் இரவு அவரது சீடர்கள் தங்களுக்குள் உரையாடிக் கொண்டிருந்த வேளையில், கடந்த பல ஆண்டுகளாக குருநாதருடன் இருந்தும், அவர்கள் எதையும் அடையப்பெறவில்லை என்று விவாதித்தனர். அனைத்தும் அறிந்த சத்குருவிற்கு, சீடர்கள் எதைப் பற்றி பேசுகிறார்கள் என்பது நன்றாகத் தெரியும்.**

**ஆனால் அவர் எதுவும் பேசாமல், அப்பாவித்தனமாக அதைப் பொருட்படுத்தாதவர் போலத் தோன்றினார்.**

**அடுத்த நாள், அனைவரும் குருநாதர் முன் அவரவர் இடங்களில் அமர்ந்தனர். அவர்கள் சோகமான மனநிலையில் இருப்பதை கவனித்த குருநாதர், அதற்கான காரணத்தை வினவியபோது, அவர்கள் மனதில் இருந்ததை எடுத்துரைத்தனர். குருநாதர் சிரித்தபடியே பொறுமையாக இருக்கக் கூறி, குறுகிய காலத்தில், அவர்களின் வருத்தத்தை முற்றிலுமாகப் போக்கியதும் அனைவரும் தங்கள் வெறுப்பை மறந்துவிட்டனர்.**

**சில நாட்களுக்குப் பிறகு சத்குரு தனது சீடர்களிடம், "இன்று நீங்கள் எந்தப் பணியிலும் ஈடுபடாமல், ஒரு மாற்றத்திற்காக, நன்றாக உண்டு,**

அருந்தி, மனமார அனுபவித்து மகிழுங்கள். நாள் முழுதும் உங்களிடம் உள்ளது" என்றதும் அனைவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினர். அவர்கள் சீட்டு விளையாடி, இசையை ரசிப்பதிலும், ஒருவருக்கொருவர் கேலி கிண்டல் செய்வதிலும் முழு நாளைக் கழித்தனர்.

அன்று மாலையில் சத்குரு, "நாம் இன்றிரவு படகில் வெளியே செல்வோம்" என்றதும், இது அவருடைய சீடர்களை மேலும் மகிழ்ச்சியடையச் செய்து, "குருநாதரே, இன்று மாலை நீங்கள் எங்களை சிறிது மதுவருந்த அனுமதித்தால் அது மிகவும் நன்றாக இருக்கும்" என்று கூறினர். குருநாதர் உடனடியாக அதற்கு ஒப்புக் கொண்டார்; அனைவரும் திருப்திகரமாக உண்டு, அருந்தி பின்பு படகில் அவரவர் இடத்தில் அமர்ந்து கொண்டனர். மேலும் தொடர்ந்து சீட்டு விளையாடி, இசையைக் கேட்டு, மெய்மறந்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். படகில் இருவர், மாறிமாறி, துடுப்புகளை ஏந்தி, படகை ஓட்டிச் செல்லுமாறு குருநாதர் கட்டளையிட்டார். அதுவும் அசைந்து அசைந்து சென்றது.

இவ்வளவு சுதந்திரத்தை குருநாதர் வழங்கியதில், சீடர்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர், சில மணிநேரங்களுக்குப் பிறகு சத்குரு, "நாம் வெகு தூரம் வந்துவிட்டோம், பொழுது விடியும் முன்பு திரும்பி வர முடியாது" என்பதை கவனித்தார்.

சீடர்கள் இப்போது மதுபோதையில் தள்ளாடிய வண்ணம், வீறாப்புடன், "நாம் எவ்வளவு தூரம் சென்றாலும், நிச்சயமாக பொழுது விடியும் முன்பு வீடு திரும்புவோம்; படகை இன்னும் விரைவாக ஓட்டுவோம்!" என்றதற்கு, குருநாதர் ஒரு வார்த்தையும் கூறவில்லை.

அன்று பௌர்ணமி இரவு, அனைவரும் நிறைந்த மதுபோதையில் இருந்தனர். அடிவானத்தில் சூரியனின் கதிர்கள் உதயமாகும் அறிகுறி தென்பட்டது. குருநாதர், "ஓ, இப்போது, பொழுது விடிந்து விட்டது, இன்னும் நாம் வீடு திரும்பவில்லை!" மதுபோதையின் தாக்கம் சற்று தளரத் தொடங்கியது. அப்போதுதான் அவர்கள் நீண்ட நெடிய தூரம் வந்துவிட்டதாக நினைத்தனர். ஆனால், பின்பு, சுற்றுப்புறங்களை உன்னிப்பாக கவனித்தபோது, அவர்கள் முந்தைய நாள் இரவு படகில் ஏறிய அதே இடத்தில் இன்னும் இருப்பதைத் தெரிந்து ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்! அவர்களின் போதை மயக்கத்தில், படகை ஓட்டுவதற்கு பதிலாக, அவர்கள் பயணம் ஆரம்பித்த இடத்தில் அப்படியே நகராமல் நின்று கொண்டிருந்தனர்!

அப்போது சத்குரு, கருத்துத் தெரிவிக்கையில், "இரவெல்லாம் நீங்கள் துடுப்பை வேகமாக நகர்த்திக் கொண்டிருந்தீர்கள்! நானும் உங்களுடன் அமர்ந்திருந்தேன். ஆனால் படகு சிறிதும் நகரவில்லை; நீங்கள் இருந்த இடத்திலேயே இருக்கிறீர்கள், மேலும் ஒரு படி மேலே செல்லவில்லை. இதற்கு என்ன காரணம்?" என வினவினார்.

சீடர்களில் ஒருவர் இவ்வாறு பதிலளித்தார், "நாங்கள் மது போதையில் இருந்தோம், படகை ஓட்டிச்செல்கிறோம் என்று நினைத்தோம்; உண்மையில், அது முழு நேரமும் அசையாமல் இங்கேயே கட்டப்பட்டிருந்தது!"

குருநாதர் விளக்கமளித்தார், "நீங்கள் உலக இன்பத்தில் மூழ்கி இருப்பதால், இருந்த இடத்திலேயே இருக்கிறீர்கள். நான் உங்களுடன் இருந்தபோதிலும், நீங்கள் பொருளுலக இன்பங்களில் இணைந்திருப்பதால் நான் என்ன செய்ய முடியும்? அதுபோல, நீங்கள் என்னுடன் பல்லாண்டுகள் இருந்தபோதிலும், என்னுடன் நெருங்கி வருவதற்கு பதிலாக, தற்காலிக இன்பங்களில் மூழ்கி இருப்பதால், நீங்கள் எதைப் பெறமுடியும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? என்னுடைய சகவாசத்தால் நீங்கள் எவ்வாறு பயனடைவீர்கள்? நீங்கள் இருந்ததைப் போலவே இருக்கிறீர்கள்! "ஆகையால், பொருளுலக போதைக்கு அடிமையாக இருக்காதீர்கள்; எனக்கு அடிபணிந்து இருங்கள், நீங்கள் கேட்காமலேயே எதை அடையப் பெறுகிறீர்கள் என்று பாருங்கள்!"

இது அனைவருக்கும் அவர்களின் மனச்சோர்வான நிலையை நினைவூட்டியது; மேலும் அவர்கள் தங்கள் குருநாதர் கூறுவது உண்மை என நம்பினர்.

மெஹர் பாபா பின்பு, பெண்மணிகளுக்கு விளக்கினார், "நான் உங்களுக்கு அருமையான காட்சிகளைக் காட்டுகிறேன், உங்களுடன் பயணம் செய்கிறேன், உங்களை இங்கேயும் அங்கேயும் அழைத்துச் செல்கிறேன். இதெல்லாம் உங்களை, பொருளுலக பிணைப்பிலிருந்து விடுவிப்பதாகும். இதையெல்லாம் செய்து, யாருடைய மனம் எதை நாடுகிறது என்பதை நான் கவனிக்கிறேன்; உங்களை விடுவிக்கும் நோக்கில் உங்கள் ஈடுபாடுகளில் நான் குறுக்கிடும்போது, நீங்கள் அதைத் தவறாக எடுத்துக்கொண்டு, வருந்துகிறீர்கள்.

"நான் இப்படி நடந்து கொள்ளாவிடில், பல ஆண்டுகளாக நீங்கள் என்னுடன் இருப்பதால் என்ன பயன் இருக்கிறது? மனம் ஒன்றை விரும்பி அனுபவிக்கும் போதும், உங்கள் கவனத்தை எப்பொழுதும் என் மீது செலுத்துவதை நினைவில் கொள்ளுங்கள். பொருளுலக இன்பங்களில் மூழ்கி விடாதீர்கள். உங்கள் ஆசைகளுக்கு அடிபணியாதீர்கள்!

"என்னை மட்டுமே நேசிக்கவும்! நீங்கள் என்னை நேசிக்கும்போது, அந்த அன்பின் போதையில், எல்லா உடல் இன்பங்களையும் உயிரற்றதாகக் காண்பீர்கள்."

அதற்குப் பிறகு பாபா அவர்களைக் கிண்டல் செய்தார், "அந்த சீடர்கள் குருநாதரின் வார்த்தையை உண்மையென நம்பினர்; ஆனால் நீங்களோ இப்படிப்பட்டவர்கள் - நான் இந்தக் கதையைச் சொல்லிக்கொண்டு இருந்தபோது, இதை எப்பொழுது முடிப்பேன், முடிந்ததும் சாப்பிடலாம் என்று நீங்கள் ஆவலுடன் காத்திருக்கிறீர்கள்!" என்றதும், அனைவரும் மனமார சிரித்து மகிழ்ந்தனர்.

**1938**, டிசம்பர் **27** அன்று மாஸாஜி, சிறுவன் மெஹர்வான் ஜெஸவாலாவை அழைத்துக்கொண்டு ரயிலில் ஜபல்பூருக்கு வந்தார். மாஸாஜி, பாபாவைப் பார்த்ததும், அவர் காலில் விழுந்து அழத் தொடங்கினார். அதன் காரணத்தை வினவியபோது, மாஸாஜி, "பாபா, நீங்கள் என்னைக் காப்பாற்றினீர்கள்; இல்லையென்றால், நான் உங்களை மீண்டும் ஒருபோதும் எதிர்கொள்ள முடியாமல் இருந்திருக்கும்! சாலிஸ்காவ்ம் (CHALISGAON) ரயில் நிலையத்தில், சாமான்களை சரிபார்க்க நான் ரயிலிலிருந்து இறங்கியபோது, ரயில் புறப்பட்டுச் சென்றுவிட்டது! நான் ரயில் மேடையில் நின்று கொண்டிருந்தேன், என்ன செய்வது என்று தெரியவில்லை.

"உங்கள் பெயரை என் உதடுகளால் மொழிந்து அழ ஆரம்பித்தேன், எப்படியோ ரயில் நிலைய அதிகாரி என்னிடம் வந்து அவரது உதவியை வழங்கினார். அவர் அடுத்த நிலையத்திற்குத் தொலைத்தந்தி அனுப்பி என்னை வேறு ரயிலில் அனுப்பி வைத்தார். நான் வந்ததும், மெஹர்வான் பத்திரமாக இருப்பதைக் கண்டேன்" என்று நடந்ததை எடுத்துரைத்தார். பாபா, மாஸாஜியை அரவணைத்து, அவர் எப்பொழுதும் உடன் இருப்பதை உறுதிப்படுத்தினார். மாஸாஜி பின்பு மெஹராபாத் திரும்பிச் சென்றார்.

பொதுவாக, மெஹர் பாபா பயணத்தைத் தொடங்கிய நாளிலிருந்து, அவர் எவரையும் அரவணைக்கவோ, எவரும் அவரை வணங்கி, பாதங்களைத் தொடவோ அனுமதிக்கவில்லை. இந்த நாள் வரை, ஒருவரின் பிறந்தநாளில், சம்பந்தப்பட்ட அந்த நபரை மட்டுமே தழுவி வந்தார்.

டிசம்பர் **27**ஆம் நாள் காலையில், ஹெடி, வால்டர் மெர்டென்ஸ் இருவருடன், பாபா காரில், ஜபல்பூருக்கு அருகில் ஒரு மலையின் மேல் கட்டப்பட்ட மதன் மஹால் (MADAN MAHAL) என்ற பழைய அரண்மனைக்குச் சென்றார்.

மறுநாள் காலை எட்டு மணியளவில், பாபா பெண்களுடன் மாண்ட்லா (MANDLA) குறுநகருக்குச் சென்று அனைவரும் 'ஸர்க்யூட்' ஹவுஸில் (CIRCUIT HOUSE) தங்கியிருந்தனர்; மண்டலி (பப்பா, எரச், காக்கா, சாஞ்சி, ஜால் கேரவாலா) அருகில் அமைந்த மகேந்திர லால் சௌத்ரிக்குச் சொந்தமான தனியார் பங்களாவில் தங்கினர். மாண்ட்லாவைப் பற்றி குறிப்பிடுகையில், பாபா, "**மாண்ட்லாவில் பண்டைய காலங்களில் பெரிய சாதுக்கள், யோகிகள், சன்னியாசிகள் மாபெரும் தவங்களில் ஈடுபட்டனர். அந்த பூமி இன்றும் ஆன்மீகத்தால் நனைந்துள்ளது**" என்றார்.

அதற்குப் பிறகு பாபா, பிரபலமான புண்ணிய ஸ்தலமான நர்மதா நதியில் அமைந்த 'ஸஹஸ்ரதாரா' கோயிலுக்கு (SAHASTRADHARA TEMPLE) விஜயம் செய்தார். மெஹர் பாபா அவரது கால்களைத் தண்ணீரில் வைத்து, "**அவதார புருஷர் நதிகளில் தனது கால்களை நனைக்கும் வேளையில், நதி நீர் புனிதப்படுத்தப்படுகிறது**" என்று குறிப்பிட்டார்.

மாண்ட்லாவில் சிலர் பாபாவைப் பற்றி அறிந்து அவரது தரிசனத்திற்காக வந்தனர். பாபா, எவரையும் சந்திக்கவும் அல்லது எவருக்கும் தரிசனம் வழங்கவும் விருப்பம் தெரிவிக்கவில்லை. குழு திரும்பி வருகையில், ஒரு வழக்கறிஞர் பாபாவை நோக்கி சாபமழை பொழிந்து, அவருக்கு எதிராக கடுமையான எதிர்ப்பை உருவாக்கினார். பின்னர் அந்த நபரைப் பற்றிய தகவல்படி அவர் புற்றுநோயால் அவதிப்பட்டு வந்ததாகவும், சில நாட்களில் உயிர் துறந்ததாகவும் தெரிய வந்தது.

1938, டிசம்பர் 29 அன்று (ஸொராஸ்ட்ரியன் நாள்காட்டிப்படி) மெஹராவின் பிறந்தநாளாகக் கொண்டாடப்பட்டது. அன்று காலை தனது அன்பிற்குரியவரிடமிருந்து ஒரு சிறப்பு அரவணைப்பைப் பெற்றார், பின்பு பாபா, மெஹரா மற்றும் பெண்மணிகளைப் படகு சவாரிக்கு அழைத்துச் சென்றார். மாலையில் பாபா மண்டலியின் இல்லத்தில் மிகவும் மகிழ்ச்சியான மனநிலையில் இருந்தார்; பல ஆண்டுகளுக்குப் பின்னர், அவர்களுடன் டிக்-டாக்-டோ (TIC-TAC-TOE) போன்ற சில விளையாட்டுகளை விளையாடினார். அவ்வேளையில் பாபா இந்தக் கருத்துக்களையும் எடுத்துரைத்தார்:

**இறைநிலையை அடைவதற்கு முன் மூன்று விஷயங்கள் அகற்றப்பட வேண்டும்: பேராசை, காமம், புறம்கூறுதல். இவற்றில் புறம்கூறுதல் மிகவும் மோசமானது மட்டுமின்றி பேரிடரை விளைவிப்பது. பேராசை, காமம் இரண்டையும் சமாளிப்பது மிகவும் கடினமாக இருந்தாலும், ஒருவரால் அதை வென்றுவிட முடியும்; ஆனால், புறங்கூறுதல், பிறரை மோசமாகப் பேசுவது, பிறரின் தவறுகளைக் கண்டறிவது அதீத தீமையை விளைவிக்கும், ஏனெனில் இது பிறரின் மனப்படிவங்களை தன் மீது ஈர்த்துக் கொள்கிறது; ஆன்மீக ரீதியில் பேரழிவைத் தருகிறது.**

முரளீதர் டி. பதக் (MURLIDHAR D. PATHAK) என்ற வழக்கறிஞர், ஜால் கேரவாலாவின் நண்பர், டிசம்பர் 30ஆம் நாள், மெஹர் பாபாவை அணுகி, “ஆசிரமம் அமைப்பதற்கு இங்கு மிகச் சிறந்த இடம் உள்ளது. அதைப் பார்க்க என்னுடன் வாருங்கள்” என்று அழைத்தார். பாபா, அந்த அழைப்பை ஏற்று, அவரை மறுநாள் காலை 8:30 மணிக்குத் திரும்பி வருமாறு கூறியும், கால தாமதமாகிவிட்டதால், பாபா, அந்தத் திட்டத்தை ரத்து செய்து, சர்க்யூட் ஹவுஸை விட்டு வெளியேறும் வேளையில், வழக்கறிஞர் வந்ததைக் கண்டு மற்றொரு சந்திப்பிற்கான நேரம் வழங்கப்பட்டது. இந்த நேரத்தில் பாபா அவருடன் சென்று அந்த இடத்தைப் பார்வையிட்டார். பாபா அதை விரும்பி, விலை நியாயமாக இருந்தால் 100 ஏக்கர் நிலத்தை வாங்க ஜால் கேரவாலாவிற்கு அறிவுறுத்தினார். அதற்குப் பிறகு பாபாவும் குழுவும் ஜபல்பூருக்குப் புறப்பட்டு, பிற்பகல் வந்து சேர்ந்தனர்.

அந்த ஆண்டு, ‘டைம்ஸ்’ (TIMES) பத்திரிகை 1938ஆம் ஆண்டு திரைப்படத் துறையில் முன்னணி நபராக கேப்ரியல் பாஸ்கலை (GABRIEL PASCAL)

தேர்ந்தெடுத்தது. பாஸ்கல் இதைப் பற்றி ஒரு தொலைத்தந்தி வழியாக, பாபாவிற்குத் தெரிவித்தார்: "நான் உங்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கை மற்றும் உங்கள் தீர்க்கதரிசனத்தில் தோல்வியுறவில்லை என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன், இது ஆரம்பம்தான். நான் உங்களுக்கு உறுதியளித்தபடி, கலை மூலம் அற்புதங்களை உருவாக்குவேன்."

1939, ஜனவரி 1ஆம் நாள், ஜால் கேரவாலா, பப்பா ஜெஸவாலாவைக் குறித்து கேலி செய்தார்; பப்பா, அதைக் கேட்டு நொந்துபோய் வருத்தத்தில், நேரடியாக, பாபாவின் பங்களாவிற்குச் சென்று கடுமையாகப் புகார் கூறினார். ஜால், சாஞ்சி இருவரும் அவரைப் பின்தொடர்ந்த போது, பாபா அவர்களை அழைத்து, சலசலப்புக்கான காரணத்தை வினவினார். "என்னை மன்னித்துவிடுங்கள், பாபா, நான் இதை நகைச்சுவையாக மட்டுமே கூறினேன்" என்று ஜால் பதிலளித்தார்.

"அவரை ஒரு நீதிபதியாக நியமித்தவர் யார்? அவருக்கு எந்த உணர்ச்சியும் இல்லை! அவரை மன்னிக்கக்கூடாது!" என்று பப்பா கோஷமிட்டார்.

சிரித்துக்கொண்டே பாபா, "**நான் ஜாலை மன்னித்திருக்க மாட்டேன், ஆனால் மன்னிப்பது என் இயல்பு. நான் அவரை மன்னிக்கவில்லை என்றால், உலகம் வீழ்ந்துவிடும்! நான் மன்னிப்பதால் மட்டுமே இந்த உலகம், உலகமாகத் தொடர்கிறது, இல்லையேல் இல்லை!**" என்று எழுத்துப்பலகை வழியாகத் தெரிவித்தார்.

"நீங்கள் தொடர்ந்து உலகை மன்னிக்க வேண்டும் - ஆனால் ஜால் கேரவாலாவை அல்ல! அவர் என்னை பெரிதும் துன்புறுத்தினார்!" என்றார் பப்பா.

"**சரி,**" என்று பாபா தலையை அசைத்து, "**நான் ஜாலை மன்னிக்க மாட்டேன், ஆனால் நீங்கள் அவரை மன்னிக்க வேண்டும்!**" என்றார்.

ஜால், பப்பாவின் மன்னிப்பைக் கோரினார், இறுதியாக, பல மணி நேரங்களுக்குப் பின்னர், அவர் மன்னித்தார். ஆயினும், பப்பா, "நீங்கள் கூறியதால் நான் மன்னித்தேன், ஆனால் அவர் ஒரு பிசாசு என்று நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்!" என்றார்.

மெஹர் பாபா, பப்பாவிற்கு விளக்கிக் கூறினார், "**இது மன்னிப்பு அல்ல! மன்னிப்பின் பொருள் அவமானத்தை மறந்துவிடுவது. அதை நினைவில் வைத்துக் கொள்ளும்போது, அதை எப்படி மன்னித்திருக்க முடியும்? மன்னித்தப் பிறகு, நீங்கள் நடந்த சம்பவத்தை நினைவில் வைத்துக் கொள்ளக்கூடாது அல்லது அவருக்கு எதிராக எதையும் மனதில் வைத்திருக்கக்கூடாது.**

"**இன்று புத்தாண்டு, நீங்கள் மன்னிக்கவும் மறக்கவும் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். மறப்பதன் மூலம் மட்டுமே நீங்கள் உண்மையிலேயே மன்னிக்க முடியும். இல்லையெனில், 'நான் உன்னை மன்னிக்கிறேன்' என்ற சொற்களை வெறுமனே சொல்வதன் பயன் என்ன? அது இதயத்திலிருந்து வர வேண்டும்.**"

பப்பா மறுநாள் நாக்பூருக்குப் புறப்பட்டார்.

டாக்டர் தேஷ்முக் ஜனவரி 1 அன்று நாக்பூரிலிருந்து பாபாவைப் பார்க்க வந்தார். சமீபத்தில், மராட்டி மொழியில் மெஹர் பாபாவின் வாழ்க்கை குறித்து டாக்டர் தேஷ்முக் ஒரு புத்தகத்தை வெளியிட்டார். 'மெஹர் பாபா, தன்னைக் கடவுள் என்று ஏன் அழைக்கிறார்' என்று மக்கள் அவரிடம் கேட்பதாக தேஷ்முக், பாபாவிடம் கூறினார். "இது மெஹர் பாபாவின் அகந்தையின் வெளிப்பாடு இல்லையா? அவர் உயர்ந்ததோர் அகங்காரவாதி அல்லவா?" என்று கேட்கும் அவர்களுக்கு எப்படி பதில் சொல்வது என்று தெரியவில்லை என்றார். பாபா கீழ்வரும் விளக்கத்தை அளித்தார்:

**இறைநிலையை அடைந்த ஆத்மா அல்லது ஒரு சாதாரண மனிதன் சொல்லும் அல்லது செய்யும் அனைத்திலும், 'நான்' என்பது உறுதிப்படுத்தப் படுகிறது. இருவரிலும் உள்ள வேறுபாடு என்னவெனில், சாதாரண மனிதனில் 'நான்' எனும் அகந்தை மட்டுப்படுத்தப் பட்டுள்ள அதே வேளையில், இறை உணர்வை அடைந்த ஒருவரில் அது வரம்பற்றது. "நான் புத்தகத்தை எழுதியுள்ளேன்" என்று தேஷ்முக் சொன்னால், தேஷ்முக்கில் 'நான்' செய்த ஒரு குறிப்பிட்ட வேலையை அவர் உறுதிப்படுத்தியுள்ளார். ஆனால், "நான் கடவுள்" என்று கூறும்போது, அதன் உலகளாவிய அம்சத்தை நான் உறுதியாகக் கூறுகிறேன்.**

**மட்டுப்படுத்தப்பட்ட 'நான்' எனும் இடத்திலிருந்து தனிமனிதன், அளவிறுதியற்ற 'நான்' எனும் இறைவனின் இடத்தைச் சென்றடைய வேண்டும். வரையறுக்கப்பட்ட 'நான்' ஏழு தலை படைத்த சைத்தானைப் போன்றவன். காமம் (LUST), கோபம் (ANGER), பேராசை (GREED) , பிணைப்பு (ATTACHMENT), பெருமை (PRIDE), பொறாமை (JEALOUSY), வெறுப்பு (HATRED) என்ற ஏழு தலைகள், எந்த ஒரு தடயமும் விட்டுச் செல்லாத அளவிற்கு முழுமையாகக் கொல்லப்பட வேண்டும். இந்தப் போலியான 'நான்' முற்றிலுமாக அழிக்கப்படும் போது, உண்மையான, உறுதியான, வரம்பற்ற மற்றொரு 'நான்' அதன் இடத்தைப் பற்றிக்கொள்கிறது."**

1939, ஜனவரி 2 அன்று, மெஹர் பாபா இந்தக் குறுகிய ஆனால், அன்பின் வரிகளை மெஹராபாத்தில் வாழ்ந்த பைதூலுக்கு எழுதினார்:

**அன்புள்ள பைதூல்,**

**எப்படி இருக்கிறீர்கள்?**

**பிரியமான சுவாமி (சுவாமிஜி) எப்படி இருக்கிறார்?**

**பெரிய தலையன் டாக்டர் (கனி) நன்றாக இருக்கிறாரா?**

**பன்றி தலையன் பெய்லி?**

**என் அன்பான பைத்தியக்கார குழந்தைகள் எப்படி உள்ளனர்? குஜராத்தியில் பெய்லி மூலம் எனக்கு ஒரு கடிதம் எழுதுங்கள். நல்ல**

**மனநிலையுடன் மற்றும் மனநிலை குன்றிய ஆசிரம உள்வாசிகளுக்கு என் அன்பைத் தெரியப்படுத்துகிறேன்**.

ஜனவரி 3ஆம் நாள், மெஹர் பாபா பெண் மண்டலியுடன் மதன் மஹால் கோட்டை (MADAN MAHAL FORT) மற்றும் குவாரிகாட் (GWARIGHAT) போன்ற இடங்களைப் பார்வையிட்டார். வால்டர் மெர்டென்ஸ், பாபாவின் குழுவுடன் பயணம் செய்து கொண்டிருந்தார், ஆனால் இதர சில மண்டலியுடன் ரயிலில் தனித்தனியாகவும் பயணம் செய்தார். அன்று ஜபல்பூரில் இருந்த வேளையில், பாபா, வால்டர் மெர்டென்ஸிடம் ஸூரிக் நகருக்குப் புறப்படுமாறு அறிவுறுத்தினார். அவர் மிகவும் நேசித்த மெஹர் பாபாவையும், ஹெடியையும் விட்டு வெளியேறும் எண்ணத்தில் அவர் கண்கலங்கினார். பாபா அவரை ஆறுதல்படுத்தினார், "**நான் உங்களுடன் வருகிறேன், ஸூரிக் நகரில் நீங்கள் எனக்காகச் செய்யும் பணியில் உங்களுடன் இருப்பேன்**." பாபாவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து, இதய பாரத்துடன் வால்டர் மும்பை சென்று அங்கிருந்து சுவிட்சர்லாந்திற்குப் பயணம் செய்தார்.

ஜனவரி 3ஆம் நாள், மகேந்திர லால் சௌத்ரி, பதக் இருவரும் எதிர்பாராமல் பாபாவை சந்திக்க வந்தனர். பதக், ஓர் ஆசிரமத்தை அமைப்பதற்காக, மாண்ட்லாவில் ஒரு நிலத்தைப் பார்வையிட பாபாவை அழைத்துச் சென்றார், ஆனால் அந்த நேரத்தில் பாபா எந்தவொரு திட்டவட்டமான முடிவையும் எடுக்கவில்லை. அவர் மீதான கொலைக் குற்றச்சாட்டுக்கள் கைவிடப்பட்டதால், அவரிடமிருந்து ஒரு சிறிய பரிசை ஏற்றுக்கொள்ளுமாறு சௌத்ரி, பாபாவிடம் பிரார்த்தனை செய்தார். அது என்ன என்று பாபா கேட்க, சௌத்ரி சர்க்யூட் ஹவுஸுக்குப் பின்னால் அமைந்த நிலம் என்று பதிலளித்தார் - 300 மாமரங்கள் நிரம்பிய 37 ஏக்கர் நிலம்!

பாபா, அதை ஏற்றுக்கொள்ளாமல், "**எனக்கு உங்கள் அன்பு மட்டுமே வேண்டும், தட்சிணை** (பிரசாதம்) **அல்ல**. **தூய அன்பின் தட்சிணை என்பது ஒருவர் செய்யக்கூடிய மிக உயர்ந்த நன்கொடை**" என்று பதிலளித்தார்.

ஆனால் சௌத்ரி, பதக் இருவரும் அந்தப் பரிசை ஏற்றுக்கொள்ளும்படி பாபாவிடம் மனதார வேண்டினர். இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக நடந்த விவாதத்திற்குப் பிறகு, பாபா இறுதியாக அதை ஏற்றுக்கொண்டார். சௌத்ரி, "நீங்கள் எனது தட்சிணையை ஏற்றுக்கொண்டதால் நான் இன்று ஆசீர்வதிக்கப்பட்டேன்" என்றார். பின்னர் அவர் சாஞ்சியிடம், "பாபா, எங்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குவதும், மேலும் அவருடைய காரணத்திற்காக அதை ஏற்றுக்கொள்வதும் எங்களின் மிகப்பெரிய அதிர்ஷ்டம்" என்றார்.

உபாஸனி மஹாராஜின் பார்சி பக்தரான கேக்கி பஜன் (KEKI BAJAN), ஜனவரி 3ஆம் நாள் கட்னி (KATNI) நகரிலிருந்து தனது குடும்பத்தினருடன் பாபாவைப் பார்க்க வந்தார்; மறுநாள் காலையில், பாபாவின் தரிசனத்திற்காக

வந்தவர்கள் சில கணங்கள் அவருடன் மௌனமாக அமர்ந்த பின்பு, பாபா கூறினார்:

**நான் ஒரு குழந்தையைப் போலவும், வளர்ந்த மனிதனைப் போலவும் - ஒரே நேரத்தில் மிகச் சிறியவனாகவும் மிகச் சிறந்தவனாகவும் இருக்கிறேன். இறுதியில், ஒரு நபர் சிறிய மற்றும் பெரிய, ஒரு குழந்தை மற்றும் வயது வந்தவர் என்ற அனுபவத்தை ஒரே நேரத்தில் கொண்டிருக்க வேண்டும்; இதன் மூலம் அவர் அனைவராகவும் இருப்பதை உணர்வுபூர்வமாக அனுபவிக்கிறார். அது நடக்க வேண்டுமாயின், 'நான்' எனும் அகந்தை மறைந்துவிட வேண்டும். இந்த 'நான்' எனும் பொய்யும் போலியுமான அகந்தை மறைந்து போவது மிகவும் கடினம். அந்தத் தவறான, வரையறுக்கப்பட்ட 'நான்' சென்றால், எல்லையற்ற 'நான்' (கடவுளாக) வருவேன்.**

**'பாபா' வரவேண்டுமாயின் 'கேக்கி' போயாக வேண்டும்! இது படிப்பு அல்லது பேச்சின் மூலம் பெறப்பட்டதல்ல, ஆனால் என் உண்மையான அனுபவம். பண்டிதர்கள் பலர் இருந்தாலும் உண்மையான அனுபவம் இருக்க வேண்டும்."**

"உங்கள் அருள் எனக்குத் தேவை, பாபா" என்று கேக்கி கூறினார்.

**"ஆமாம், அருள் இல்லாமல் எதுவும் சாத்தியமில்லை. ஆனால் அருள் கிடைக்கும். மஹாராஜிடம் கடைசிவரை ஒட்டிக்கொள்ளுங்கள். அவரது பாதங்களைக் கெட்டியாகப் பற்றிக்கொள்ளுங்கள். குருநாதருக்கு மட்டுமே தெரியும். அவர்கள் ஒருவரை நீந்த அல்லது மூழ்கச் செய்யலாம்!"** என்றார்.

கேக்கி, உபாஸனி மஹாராஜின் சமீபத்திய நடவடிக்கைகள் மற்றும் சுற்றுப்பயணத்தைப் பற்றி விவரித்தார், "பதினான்கு நாட்கள் மஹாராஜ் பெனாரஸிலும், இரண்டு நாட்கள் கட்னி, ஒரு நாள் சத்னாவிலும் (SATNA) இருந்தார். அவர் இங்கிருந்து (ஜபல்பூர்) நேற்று புறப்பட்டார்! இரண்டு நாட்கள் நாக்பூரில் தங்கிய பிறகு, ஸாக்கோரிக்குத் திரும்புகிறார்."

"**நானும் பெனாரஸ் செல்ல விரும்புகிறேன்**" என்று பாபா கூறினார்.

கேக்கி அவரை கட்னியில் உள்ள தனது இல்லத்திற்கு வருமாறு அழைத்தார் (இது ஜபல்பூரிலிருந்து பெனாரஸுக்குச் செல்லும் வழியில் உள்ளது), இரண்டு வாரங்களுக்குப் பின்னர், அங்கு செல்வதற்கான அழைப்பை பாபா ஏற்றுக்கொண்டார். பாபா அவருக்கு விளக்கினார், "**குருநாதர்களின்** (மஹாராஜ் மற்றும் பாபா இது போன்ற இடங்களுக்குச் செல்கிறார்கள், ஆனால் ஒருவரையொருவர் பாராமல் இருப்பது) **இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டு குறிப்பிடத்தக்கதாகும், விரைவில் முடிவடையும்.**" அவர் மேலும் கூறுகையில், "**உபாஸனி மஹாராஜ் விரைவில் அவரது பௌதீக உடலை கைவிடப் போகிறார்**" என்று தெரிவித்தார். கேக்கியும் அவரது குடும்பத்தினரும் விடைபெற்றுச் சென்ற பிறகு, பாபா மீண்டும் ஆண் மண்டலிக்கு "**ஆறு மாதங்களில் மஹாராஜ் தனது உடலைக் கைவிடுவார்**" என்று குறிப்பிட்டார்.

டாக்டர் தேஷ்முக் நாக்பூரில் உபாஸனி மஹாராஜை சந்தித்து, பாபாவின் வாழ்க்கை வரலாற்றுத் தொகுப்பின் புதிய மராட்டி புத்தகத்தின் நகலை அவருக்கு வழங்கினார். மஹாராஜ் புத்தகத்தின் அட்டைப்படத்தில் மெஹர் பாபாவின் புகைப்படத்திற்கு மலர் மாலையை வைத்து, அதைத் தனது பிரசாதமாக தேஷ்முக்கிடம் கொடுத்தார். இந்த சம்பவத்தைப் பற்றி, டாக்டர் தேஷ்முக் எழுதிய கடிதத்தைப் பார்த்ததும் பாபா, "**முதியவர் மீண்டும் என்னை நேசிக்கிறார்**" என்றார்.

1939, ஜனவரி 5ஆம் நாள், கேக்கி மறுபடியும் தனது குடும்பத்தினருடன் பாபாவைப் பார்க்க வந்தார். குருநாதரிடம் 'சரணடைதல்' மற்றும் அவரின் 'கருணை' குறித்து அவர்களுக்கு விளக்கிய பாபா இவ்வாறு கூறினார்:

**சரணடைவது என்பது மக்கள் நினைப்பது போலக் கடினம் அல்ல. இது புறத்தில் அல்லாமல் அகத்தில் இருக்க வேண்டும். உங்கள் அன்பானவர்களுக்கு - உங்கள் மனைவி, குழந்தைகள் மற்றும் உங்களைச் சார்ந்திருக்கும் பிறருக்கு நீங்கள் உங்கள் கடமையைச் செவ்வனே செய்ய வேண்டும். நீங்கள் உங்கள் பொறுப்புகளைத் தவிர்க்கவோ, தட்டிக்கழிக்கவோ கூடாது. ஆனால் இந்தக் கடமைகளில் ஈடுபடும்போது, ஒருவர் மாயாவுடன் இணையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.**

**இதன் விளைவு எதுவாக இருந்தாலும் ஒருவர் அதனுடன் பிணைப்பில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். உங்கள் அன்பானவர்களில் ஒருவர் உயிரைத் துறந்தாலும், நீங்கள் அதைப் பற்றி சிந்திக்கக்கூடாது, அதைப் பற்றி சிறிதளவும் கவலைப்படக்கூடாது, ஆனால் அனைத்தையும் குருநாதருக்கு அர்ப்பணிக்கவும். ஒவ்வொரு சிந்தனையையும் ஒவ்வொரு செயலையும், நல்லது தீயது அனைத்தையும் அவருடைய பாதங்களில் அர்ப்பணிக்க வேண்டும். இது மிகவும் எளிதானது, ஆனால் மிகவும் எளிதானது என்பதால், அது கடினமானது. அர்ப்பணித்த அடுத்த கணமே, நீங்கள் அனைத்தையும் மறந்துவிட வேண்டும், அவற்றை (எண்ணங்களையும் செயல்களையும்) மறக்க முடியாவிட்டால், நீங்கள் சரணடைந்து விட்டீர்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்?**

**மழை, மலைப்பாறையிலும் மண்ணிலும் பெய்யும். ஆனால் நீர், பாறையின் கீழ் பாய்ந்து ஓடுகிறது, பூமி அதை உறிஞ்சுகிறது. பாறைக்கு மழையினால் எந்த நன்மையையும் இல்லை, அதே நேரத்தில் மண் பயனடைகிறது. மழை இரண்டிலும் சமமாகப் பெய்தாலும், மண் மட்டுமே அதைப் பயன்படுத்திக் கொள்கிறது.**

**இதேபோல், எனது கருணையும் இரக்கமும் அனைவருக்கும் சமமாக இருக்கும். ஆனால் சமவெளியில் இருப்பவர்கள் மட்டுமே அதற்குத் தகுதியானவர்கள், அதே வேளையில் உயரமான மலை உச்சியில் இருப்பவர் பயனடைவதில்லை!**

இதற்கிடையில், பாபா, ஜால் கேரவாலாவிற்கு வெவ்வேறு கடமைகளை வழங்கியிருந்தார், அவற்றில் ஒன்று, ஒரு சிறப்பான சிறுவனைக் கண்டுபிடித்து பாபாவிடம் அழைத்து வருவது; ஜால் தினமும் ஒரு சிறுவனை அழைத்து வந்தார்; அனைவருக்கும் பாபா உணவளித்து, புத்தாடை உடுத்தி, பின்பு ஜாலிடம் திரும்ப அனுப்பி வைத்தார். இதனால், பாபாவின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தோல்வியுற்றதாக நினைத்த ஜால் வருத்தமடைந்தார். பாபாவின் பணி முற்றிலும் வித்தியாசமானது, விசித்திரமானது, சிறுவர்களுக்கு உணவளித்து உடை அணிவிக்கும் போதே அவர் அதைச் செய்து முடிக்கிறார் என்பது அவருக்குத் தெரியாது. ஒருமுறை, தன்னிடம் வந்த வெவ்வேறு சிறுவர்களுடன் செய்யப்பட்ட பணிகள் குறித்து கேள்வி எழுப்பியபோது, **"அவர்கள் மூலமாக நான் எதிர்கால இளைஞர்களுடன் இணைந்து பணியாற்றுகிறேன்"** என்று பாபா குறிப்பிட்டார்.

ஜனவரி 5ஆம் தேதி, பாபா, முன்பு கேக்கியிடம் கூறியதையே ஜாலிடமும் கூறினார்:

**முடிவுகளை எப்பொழுதும் எதிர்நோக்கி இருக்காதீர்கள்; விளைவு நல்லது அல்லது தீயது, எதுவாக இருந்தாலும் இரண்டிலிருந்தும் விலகியிருக்கவேண்டும். ராமகிருஷ்ணாவைப் போலவே, எல்லாவற்றையும் உங்கள் குருநாதருக்கு அர்ப்பணிக்கவும்.**

**ஒவ்வொரு எண்ணத்தையும் குருநாதரின் காலடியில் அர்ப்பணம் செய்வதன் மூலம், உங்கள் எண்ணங்கள் மற்றும் செயல்களின் மனப்படிவங்களின் மாசு, உங்களைத் தீண்டாமல் பார்த்துக்கொள்ளலாம். ஒரு சலவைத் தொழிலாளி, துணிகளைத் துவைத்து, சுத்தப்படுத்துவது போல், உங்கள் எண்ணங்கள் மற்றும் செயல்களின் மூலம் உங்களைப் பற்றிக்கொண்டிருக்கும் அனைத்து அசுத்தங்களையும் நான் அகற்றுவேன்.**

**நான் சொல்வதையே தொடர்ந்து செய்யுங்கள். உங்கள் முயற்சிகளில் நீங்கள் முழுமூச்சாக ஈடுபட்டால், கவலைப்பட எக்காரணமும் இல்லை. எனது வேலை எனக்குத் தெரியும்! நான் உங்களுடன் பேசிக்கொண்டிருக்கும் இந்நேரத்தில், முழுப் பிரபஞ்சத்திலும் நான் செய்து வரும் பணியை நீங்கள் காணமுடிவதில்லை!**

நேர்த்தியாக உடையணிந்த ஒருவர் பாபாவைப் பார்க்க வந்து, ஆன்மீகப் பாதையில் வழிநடத்துமாறு அவரிடம் பிரார்த்தனை செய்தார். பாபா அவரிடம், **"இதை நீங்கள் எதற்காக விரும்புகிறீர்கள்?"** என வினவினார்.

அந்த நபர் உண்மையை ஒப்புக்கொண்டு, "எனது குடும்பத்தை வசதியுடன் பராமரிக்க நான் பல கடன்களுக்கு ஆளாகியுள்ளேன்; இப்போது இந்தக் கடன்கள் ஒரு பெரிய மலையைப் போல் என் மீது குவிந்துள்ளன. அவை என்னை அம்புகளைப் போலத் துளைக்கின்றன, நான் மிகவும் துன்பப்படுகிறேன். உலகில் எவருமே என்னைப் போலப் பரிதாபமாக இல்லை!" என்று முறையிட்டார்.

பாபா அவரை தைரியமாக இருக்கக்கூறி, "**உங்கள் கடன்களைத் தீர்க்க முயற்சி செய்யுங்கள், நான் உங்களுக்கு உள்ளளவில் உதவுவேன்**" என்று அறிவுறுத்தினார்.

ஆறுதலடைந்த அந்த மனிதருக்கு, பாபா மேலும் விளக்கினார், "**தியாகம் ஒரு நல்ல காரணத்திற்காக இருக்கும்போது இனிமையாக இருக்கும். துன்பம் பயனுள்ள ஒன்றுக்காக இருக்க வேண்டும், சுயநலம் அல்லது பலவீனத்திற்காக அல்ல**.

"**வீரர்களைப் போலவே கோழைகளும் பாதிக்கப்படுகிறார்கள், ஆனால் இருவரின் துன்பத்திலும் பெரிய வேறுபாடு உள்ளது. துணிச்சலான ஒருவர் தாங்கிக்கொள்ளும் அம்புகளின் காயங்களும், உங்களைத் துளைக்கும் உலக அம்புகளும், பூமியையும் வானத்தையும் போலவே வேறுபட்டவை. கோழைகள் மாயையின் அம்புகளால் பரிதாபத்திற்குள்ளாகிறார்கள், வீரர்கள் கடவுளை நேசிப்பதற்காக அதைத் தாங்கிக் கொள்கிறார்கள்**."

ஒரு நாள் கிறிஸ்தவ இளைஞர் ஒருவர், ஜால் கேரவாலாவை அணுகி அவரிடம், "நான் அரபு நாட்டு உடையில் மெஹர் பாபாவைக் கனவில் கண்டேன், அவர் உங்களை சந்திக்குமாறு என்னிடம் கூறினார்!" என்றதும், ஜால் அந்த இளைஞரை ஜனவரி 6 அன்று பாபாவிடம் அழைத்துச் சென்று, இந்த விசித்திரமான கதையை எடுத்துரைத்தார்.

பாபா அதைக் கேட்டு, பின்னர் அந்த இளைஞனிடம், "**வாழ்க்கையை இப்படி வீணடிக்கக்கூடாது! வேலை கிடைக்காததால் நீங்கள் மனச்சோர்வடைகிறீர்கள். நீங்கள் என்னிடம் வந்திருப்பது நல்லது. கவலைப்பட வேண்டாம், நான் உங்களுக்கு உதவுவேன், மேலும் நீங்கள் என் உதவியை உணர்வீர்கள்.**" பாபா அந்த இளைஞனின் மனதிலுள்ள அனைத்தையும் அறிந்திருப்பதாக அவனுக்குப் புரிந்தது.

அந்த நாளில், மெஹர் பாபா இந்தியாவில் இதுபோன்ற முதன்மையான நிறுவனங்களில் ஒன்றான 'லியோனார்ட் இறையியல் கல்லூரி'யைப் (LEONARD THEOLOGICAL COLLEGE) பார்வையிட ஒப்புக்கொண்டார். பாபா கல்லூரியைச் சுற்றி வந்து, பின்பு பிரார்த்தனை நடந்துகொண்டிருந்த தேவாலயத்திற்குள் சென்றார். பாபா தேவாலயத்தில் சுமார் அரை மணி நேரம் அமர்ந்திருந்தது மிகவும் அசாதாரணமான சம்பவம் - அங்கிருந்த மக்கள் இயேசுவின் வடிவத்தில் அவரிடம் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்கள்! புறப்படுவதற்கு முன்பு, பாபாவை, பேராசிரியர்களில் ஒருவர் சபைக்கு அறிமுகப்படுத்தினார்.

அவரது ஆன்மீக உட்பணிக்காக, பாபா, ஜபல்பூரில் தங்குவதை ரகசியமாக வைத்திருக்க விரும்பினார். ஆனால் படிப்படியாக அவரது வருகையைப் பற்றிய செய்தி மக்களிடையே கசிந்து, அனைவரும் பாபாவின் தரிசனத்தை நாடினர். இரண்டு நாட்களில் பொது தரிசனம் அளிக்க பாபா

ஒப்புக்கொண்டார்: ஜனவரி 8, 10 ஆகிய இரண்டு நாட்கள் முறையே ஆண்களுக்கும், பெண்களுக்கும் தரிசன நிகழ்ச்சிக்காக அறிவிக்கப்பட்டது. இரண்டு தனி தரிசனங்களுக்கான காரணம், ஜபல்பூரில் ஏராளமான முஸ்லிம்கள் இருந்தனர், மற்றும் முஸ்லிம் பெண்கள் ஆண்களுடன் சுதந்திரமாகக் கலக்க அனுமதிக்கப்படவில்லை; மேலும் பொதுவாக முக்காடு அணிய வேண்டியதாக இருந்தது.

1939 ஜனவரி 8ஆம் நாள், 'அனைத்து நம்பிக்கை'யைச் சார்ந்த மக்களும் ஒரு நாள் தரிசனத்திற்காக பாபாவின் பங்களாவில் வந்து குவிந்தனர். ஜபல்பூரிலிருந்து சிறிது தொலைவில் அமைந்த ஓர் ஆசிரமத்திலிருந்து வந்த சாது ஒருவர் பாபாவைப் பார்த்து, "கடந்த டிசம்பர் மாதத்தில் ஹரிதுவாரில் நான் உங்களைப் பார்த்தேன்!" என்றார்.

"டிசம்பர் மாதத்தில் பாபா மெஹராபாத்தில் இருந்தார்!" என்று சாஞ்சி குறுக்கிட்டார்.

**"பாபா இப்போது உங்களுடன் இங்கே இருக்கிறார், அதே நேரத்தில் வேறு பல இடங்களிலும் இருக்கிறார்"** என்று பாபா பதிலளித்தார்.

அந்த சாது இறை உணர்வை அடையும் தனது விருப்பத்தை வெளிப்படுத்தியபோது, பாபா, அவரது நோக்கத்தைப் பாராட்டினார்.

"நான் கடவுளைக் கண்டுகொள்ள முடியுமா?" சாது வினவினார்.

**"ஏன் இல்லை? அனைவரும் இதைக் கண்டுகொள்ள வேண்டும்"** என்று பாபா பதிலளித்தார்.

"எப்படி?"

**"உங்கள் சுயத்தை இழப்பதன் மூலம்."**

"சன்யாசம் (உலகைக் கைவிடுவதன் மூலம்)?"

**"இல்லை, உலகைக் கைவிடுவதன் மூலம் அல்ல, ஆனால் உங்கள் உலக ஆசைகளைக் கைவிடுவதன் மூலம். கடவுள் எப்பொழுதும் உங்களுள் இருக்கிறார், நீங்கள் அவரை அங்கேயே கண்டுகொள்ள வேண்டும் - வெளியே அல்ல"** என்றார் பாபா.

"நான் கடவுளைக் கண்டுகொள்வது எப்படி?" அவர் கேட்டார்.

**"தவறாமல் தியானம் செய்து, உங்கள் உயர்ந்த இலட்சியத்தில் கவனம் செலுத்துங்கள். நான் உங்களுக்கு உதவுவேன்"** என்று பாபா உறுதியளித்தார்.


சிலருக்கு, சிறப்பு நேரடி பேட்டிகள் வழங்கப்பட்ட நிலையில், தரிசனம் பிற்பகல் வரை நீடித்தது. அடுத்த நாள் நடந்த கவாலி நிகழ்ச்சியை பாபா பெரிதும் ரசித்தார். பாடகருக்கு ஒரு தனிச்சிறப்புமிக்க குரல் இருந்தது, மேலும் பாபா அவருக்கும், அவருடன் வந்த இசைக்கலைஞர்களுக்கும் அவருடைய சித்திரம் பதித்த பேழைகளை வழங்கினார்.



கங்கை நதியில் படகு சவாரி, பெனாரஸ்
(RAFTING ON THE GANGES RIVER, BENARES)



ஆக்ரா, **27** ஜனவரி **1939** (AGRA, 27 JANUARY 1939)



பாபா (BABA), மன்ஸாரி (MANSARI), ஜரீன் (IRENE), மெஹரா (MEHERA) - டெல்லி கோட்டை (DELHI FORT), **3 பிப்ரவரி 1939** (3 FEBRUARY 1939)



ஆல்வார் (ALWAR), **1939**

‘அஸோஸியேட்டட் பிரஸ்’ஸின் (ASSOCIATED PRESS) நிருபர் அதே நாளில் பாபாவுடன் ஒரு நேரடி பேட்டிக்காக வந்திருந்தார். நிருபர் மிகவும் மரியாதைக்குரியவராக இருந்து பாபாவை, ‘புனிதமானவரே’ என்று அழைத்தார். அவர்களிடையே நடந்த உரையாடல் பின்வருமாறு:

நிருபர், “உலகில் தற்போதைய குழப்பமான நிலை எவ்வளவு காலம் நீடிக்கும்?” எனக் கேட்டார்.

அதற்கு பதிலளித்த பாபா, **“சுயநலம் இருக்கும் வரை, அதுவே மூல காரணம். இந்த ஒழுங்கின்மை மற்றும் குழப்பங்கள் அனைத்திலும் எனது பணி தொடர்கிறது. இது ஒரு சுத்திகரிக்கும் செயல்”** என்றார்.

“நீங்கள் குறிப்பாக ஜபல்பூரில் எவ்வளவு காலம் இருப்பீர்கள், இங்கிருந்து நீங்கள் எங்குச் செல்கிறீர்கள்?” என வந்தவர் கேட்டார்.

**“நான் ஜனவரி 15ஆம் தேதி ஜபல்பூரிலிருந்து புறப்பட்டு பெனாரஸ், ஆக்ரா, அஜ்மீர், காஷ்மீர் மற்றும் பிற இடங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்வேன். ஏப்ரல் மாதத்தில், ஜபல்பூருக்குத் திரும்பி வந்து ஆன்மீக மையம் ஒன்றை இங்கே அல்லது மாண்ட்லாவில் நிறுவ விரும்புகிறேன்.”**

“மஹாத்மா காந்தி பற்றி, புனிதமான உங்களின் கருத்து என்ன?”

**“அவர் ஒரு சிறந்த, உன்னதமான ஆத்மா, முழு மனதுடன் மனிதகுலத்திற்கு சேவை செய்ய முயற்சிக்கிறார்.”**

“இந்தியாவிற்கு அதன் சுதந்திரம் எப்பொழுது வழங்கப்படும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?”

**“இந்துக்களும் முஸ்லிம்களும் மோதிக்கொள்வதை நிறுத்தும்போது.”**

“இன்று உலகில் மிகவும் ஒடுக்கப்பட்ட யூதர்கள் வாழும் தேசம், ஹிட்லரும் முஸோலினியும் நிகழ்த்தும் தாக்குதலைத் தாங்கிக் கொள்ள முடியுமா?”

**“யூதர்கள் அல்லது யூதரல்லாதவர்கள், எவரொருவர் சத்தியத்தைச் சார்ந்திருக்கிறாரோ, அல்லது சத்தியத்தின் அருகாமையில் இருக்கிறாரோ, அவர் எந்தவொரு தாக்குதலையும் தாங்க முடியும்!”**

“நான் உலகிற்கு ஒலிபரப்பக் கூடிய ஒரு செய்தியை, புனிதமான நீங்கள் தயவுசெய்து எனக்குத் தருவீர்களா?”

மெஹர் பாபா சில மாதங்களுக்கு முன்பு மேற்கத்தியர்களுக்கு அளித்த ஒரு சில கருத்துக்களை மீண்டும் கூறினார்:

**துன்பம், உண்மையான, நித்திய மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும் போது, இந்தத் துன்பத்திற்கு நாம் எந்த முக்கியத்துவத்தையும் இணைக்கக்கூடாது. துன்பத்தை நீக்குவதற்கு, துன்பம் இருந்தாக வேண்டும். மக்கள் திருப்தி அடையாததால் துன்பப்படுகிறார்கள். அவர்கள் மேலும் மேலும் ஆசைப்படுகிறார்கள். அறியாமை, பேராசைக்கும் தற்பெருமைக்கும் வழிவகுக்கிறது. நீங்கள் எதையுமே விரும்பவில்லை என்றால், துன்பப்படுவீர்களா? ஆனால் நீங்கள் விரும்புகிறீர்கள். நீங்கள் எதையும் விரும்பவில்லையென்றால், சிங்கத்தின் வாயில் கூட துன்பப்படமாட்டீர்கள்.**

நவீன வாழ்க்கையின் பரவலான அதிருப்திக்கு, தத்துவம், நடைமுறை இரண்டிற்கும் மற்றும் இலட்சியத்திற்கும், பூமியில் அதை அடைவதற்கும் இடையேயான இடைவெளியே காரணமாகும். வாழ்க்கையில் ஆன்மீக மற்றும் பொருளுலக அம்சங்கள் நெருக்கமாக ஒன்றிணைவதற்கு பதிலாக, பரவலாகப் பிரிக்கப்படுகின்றன. ஆத்மாவிற்கும் பொருளுலகிற்கும் இடையில் எந்த அடிப்படை எதிர்ப்பும் இல்லை அல்லது நீங்கள் விரும்பினால், வாழ்க்கைக்கும் வடிவத்திற்கும் இடையிலும் இல்லை. வெளிப்படையான எதிர்ப்புக்கு அறியாமையால் விளையும் தவறான சிந்தனையே காரணம்.

மனிதனின் அகந்தையைக் கடந்து, இறை உணர்வை அடைவதற்கான சிறந்த, எளிதான வழி, அன்பை வளர்த்துக் கொள்வதும், எந்த சூழ்நிலையிலும் நாம் மனிதர்கள் அனைவருக்கும் தன்னலமற்ற சேவையை வழங்குவதும் ஆகும். அனைத்து நெறிமுறைகளும் மத நடைமுறைகளும் இதற்கு வழிவகுக்கும். பிறருக்காக நாம் எவ்வளவு அதிகமாக வாழ்கிறோமோ, அவ்வளவு குறைவாக நமக்காக வாழ்கிறோம், மேலும் தரக்குறைவான ஆசைகள் நம்மைவிட்டு அகலும். இது அகந்தை மீது வினைபுரிந்து, அதை சரி விகிதத்தில் மாற்றும்.

நம்முடைய தனிப்பட்ட மற்றும் சமூக சிரமங்களுக்கும் சீர்குலைவிற்கும் மூல காரணம் சுயநலம். சுயநலத்தை நீக்கினால், உங்கள் தனிப்பட்ட மற்றும் சமூக பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்துவிடும்.

ஒருபுறம் வழிபாட்டு முறைகள், மதங்கள், கோட்பாடுகள், சடங்கு சம்பிரதாயங்கள், சொற்பொழிவுகள், மறுபுறம் பொருள் அல்லது உடல் சார்ந்த இன்பங்களைத் தீவிரமாக நாடுவது, இவை அனைத்தும் உண்மையான மகிழ்ச்சியைக் கொண்டுவர முடியாது என்பதை உலகம் விரைவில் உணரும். தன்னலமற்ற அன்பும், உலகளாவிய சகோதரத்துவமும் மட்டுமே மகிழ்ச்சியைத் தரும்.

1939 ஜனவரி 10 அன்று, மெஹர் பாபா காலை ஏழு மணி முதல் மாலை வரை உணவு எதுவும் உண்ணாமல் தொடர்ந்து தரிசனம் வழங்கினார்.

ஒருவர் பின் ஒருவராக இடைவிடாமல் பாபாவைக் கடந்து சென்றனர். இடையே, சாஞ்சி அவருக்கு ஒரு செய்தியை அனுப்பினார்: "பாபா, என்ன அவசரம்? உணவுக்காக சிறிது நேரம் கூட ஒதுக்க முடியவில்லையா?"

பாபா பதிலளித்தார், "**இந்த அவசர சூழ்நிலையில் மட்டுமே எனது பணி, குறிப்பாக (மனப்படிவங்களை) 'சுத்திகரித்தல்' மற்றும் 'நிர்மூலமாக்குதல்' முழுவீச்சில் செய்யப்படுகிறது.**"

பெண்மணிகளுக்குத் தனிப்பட்ட முறையில் தரிசனம் பிற்பகல் மூன்று மணி முதல் ஆறு வரை வழங்கப்பட்டது. ஆண்கள் அனுமதிக்கப்படாததால், மணி, சாஞ்சியின் இடத்தில் எழுத்துப் பலகையை வாசித்தார்.

ஒரு கட்டத்தில், ஜபல்பூரின் மேயர் டி'ஸில்வா (D'SILVA) அங்கு வந்தார். அவர், தான் ஒரு நாத்திகர் என்று கூறி, இந்துக்களுக்கும் முகமதியர்களுக்கும் இடையிலான தற்போதைய பிரச்சினைகளுக்கு மூல காரணம் குறித்து, தனது கருத்தைத் தெரிவித்தார்; இரு குழுக்களுக்கிடையில் பகைமையை ஏற்படுத்தியதற்காக ஆங்கிலேயர் மீது குற்றம் சுமத்தினார். "எங்கள் அரசியல் தலைவர்கள் கூறியபடி தேசத்திற்குரிய உண்மையான சேவை மனப்பான்மை, உணர்வு எதுவுமே இல்லை" என்று அவர் கூறினார். "இவையெல்லாம் சேவையின் பெயரில் அதிகார மோகத்திற்கான ஒரு போர்வையாகும்."

மெஹர் பாபா, அதை ஒப்புக் கொண்டு, "**இதற்கெல்லாம் தன்னலமற்ற தன்மையை விடவும் சுயநல மனப்பான்மையே காரணமாகும்**" என்று கூறினார்.

மேயர் தொடர்ந்து, "சாதி, சமய வேறுபாடின்றி மனிதகுலத்திற்கான சேவையே எனது கொள்கையும் நம்பிக்கையும்" என்றார்.

"**அதுவே கடவுளுக்கான சேவை**" என்று பாபா அவரைப் பாராட்டினார்.

"எனக்கு அதைப் பற்றி கவலையில்லை. அதற்கு நான் ஒரு பெயரையோ அடையாளக்குறிப்பையோ வழங்க விரும்பவில்லை" என்றார் மேயர்.

"**அது மேலும் சிறந்தது. தனக்காக எதுவும் கூறாமல், செய்யாமல் மனிதகுலத்திற்கு சேவை செய்வதே உண்மையான இலட்சியமாகும்; நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.**"

ஒரு மையத்தை நிறுவ பாபாவின் விருப்பம் குறித்து மேயருக்கு அறிவிக்கப்பட்ட போது, அவர் ஜபல்பூரைப் பரிந்துரைத்து, பாபாவைப் பரிசீலனை செய்ய வலியுறுத்தினார்.

துணை காவல்துறை கண்காணிப்பாளர் அலி அக்பரும் (ALI AKBAR) தரிசனத்திற்காக வந்து, ஆர்வத்துடன் பாபாவிடம், "எனது மகன் மருத்துவமனையில் மோசமான உடல்நிலையில் இருக்கிறார். தயவுசெய்து உங்கள் பார்வையை அவர் மீது வைத்துக் கொள்ளுங்கள்" என்று தெரிவித்தார்.

பாபா அவரை ஆறுதல்படுத்தி, "**கவலைப்படாதீர்கள். அவர் சரியாகிவிடுவார். எனது பார்வை அவர் மீது இருக்கும்!**" என்றார்.

இறுதியாக, சாஞ்சியின் வேண்டுகோளுக்கு இணங்க, பாபா சிறிது நேரத்திற்காக, தரிசனத்தை நிறுத்தி, உணவுக்காகச் செல்லவிருந்த வேளையில், சௌத்ரியும், மாண்ட்லாவின் பதக்கும் வந்தனர். பாபாவிற்கு அவர் வழங்கிய நிலத்தைப் பார்வையிட, சௌத்ரி, பாபாவை மாண்ட்லாவிற்கு அழைத்தார், மறுநாள் பாபா அங்குச் சென்றார். பாபா அழகான அந்த இடத்தை மிகவும் விரும்பி ஒரு மரத்தின் கீழ் அரை மணி நேரம் அமர்ந்திருந்தார்.

அவர், "**நான் ஆதிகாலத்தவன் ஆயினும், நித்தியத்தில் இளமையாக இருக்கிறேன். . . இது எனது பழைய, பழமையான இடம்**" என்று குறிப்பிட்டார், மேலும் சௌத்ரி, பதக் இருவரையும் பார்த்து, "**இங்கே எனது பழைய,**

**பழமையான நண்பர்கள் உள்ளனர்"** என்று கூறினார். அவர்களின் கடந்தகால தொடர்பை, பாபா விளக்கவில்லை.

அதே நாளில் பாபா ஜபல்பூருக்குத் திரும்பி வந்து, அந்த நிலத்தை, சட்டப்பூர்வமாக அவரது பெயருக்கு மாற்றும் பணியை ஜால் கேரவாலாவிற்கு வழங்கினார்.

பாபா ஜபல்பூரில் தங்கியிருந்த வேளையில், நேரடி சந்திப்பு வழங்கப்பட்ட மற்றொரு முக்கிய நபர் எச்.வி. காமத் (H.V. KAMATH) ஆவார். அவரை அறிமுகப்படுத்திய ஜால் கேரவாலா, காமத் இந்திய நகர சேவையில் உயர் பதவியை வகித்ததாக, பாபாவிடம் தெரிவித்தார், ஆனால் காங்கிரஸ் கட்சி மூலம் நாட்டிற்காகப் பணியாற்றும் நோக்கத்தில் அனைத்தையும் விட்டுவிட்டார். **"தியாகம் ஒரு நல்ல காரணத்திற்காக இருக்கும்போது இனிமையானது"** என்று பாபா குறிப்பிட்டார்.

காமத் பாபாவிடம், "படைப்பின் குறிக்கோள் என்ன?" என வினவினார்.

பாபா பதிலளித்தார், **"எல்லையற்ற நித்திய வாழ்வே இறைவன் என அறிந்துகொள்வதற்கும், பிறருக்கும் அதே இறையுணர்வை அடைய உதவுவதற்கும்."**

"நல்லொழுக்க சக்திகளை விட தீய சக்திகள் ஏன் ஆதிக்கம் செலுத்துகின்றன?"

**"இது எல்லாம் பிரபஞ்சத்தின் சட்டத்தின் நோக்கத்தில் உள்ளடங்கியது. சுதந்திரத்தை அனுபவிக்க, பிணைப்பு அவசியம் என்பது போல, மிகவும் கடுமையானதாகத் தோன்றும் துன்பங்கள் மகிழ்ச்சிக்கு அவசியம். தீமை, தற்காலிகமாக வெற்றிபெறாவிடில், துன்பத்தை அனுபவிக்க முடியாது. இந்தப் பிரபஞ்சம் இருமைத்தன்மையை அடிப்படையாகக் கொண்டது. பிணைப்பு - சுதந்திரம், நல்லது - கெட்டது, தீமை - நல்லொழுக்கம் ஆகியவை ஒன்றையொன்று சார்ந்திருப்பவை. இதில், ஒரே அம்சம் மட்டுமே இருந்திருந்தால், வாழ்க்கையில் ஆர்வமோ அர்த்தமோ இருக்காது. இறுதி சுதந்திரம் மற்றும் மகிழ்ச்சியை அடைவதற்கு, நல்லொழுக்கத்தின் மீது தீமையின் தற்காலிக வெற்றி அவசியம்."**

"இவ்வளவு இரக்கமும் கருணையும் உள்ள இறைவன் ஏன் பலருக்குத் துன்பத்தையும் வேதனையையும் தருகிறார்?"

**"இறைவனுக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. எல்லாமே இறைவன்; ஒன்றோடு ஒன்றாக இருப்பவனும் அவனே! அவன் ஒன்றிலும் ஈடுபாடு இல்லாத நிலையில் இருந்தாலும், அனைத்தும் அவனது 'அன்பு', 'விருப்பம்' எனும் சட்டத்தை உள்ளடக்கியே செயல்படுகிறது. நீங்கள் 'விழிப்படைந்த நிலை'யில் இறைவன் உங்கள் மீது இரக்கமுள்ளவர் அல்லது கொடூரமானவர் அல்ல!"**

"பண்டைய காலத்தைப் போலவே உலகத்தை வழிநடத்த இந்தியாவும் முன்னணியில் வருமா?" என்று காமத் வினவினார்.

**"உலகை ஆன்மீக ரீதியில் வழிநடத்துவது இந்தியாவின் கடமை"** என்றார் பாபா.

பாபா மேலும் வலியுறுத்திக் கூறினார், **"இந்தியாவை உண்மையிலேயே சுதந்திரம் அடையச்செய்யும் ஒரே நோக்கத்துடன் உங்கள் முழு இருதயத்தோடு செயல்படுங்கள்; ஆனால், உங்கள் செயலின் விளைவுகளைப் பற்றி சிந்திக்க வேண்டாம். உங்களைப் போன்ற ஒரு சில ஆண்மகன்கள் லட்சக்கணக்கானவர்களால் செய்ய முடியாததைச் செய்ய முடியும்; உங்களுக்கு இதயம், அறிவுத்திறன் மற்றும் நேர்மை உள்ளன. இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் பாடுபடுவதில் உங்களது இந்தத் தன்னலமற்ற சேவை, உங்களை இறுதியில் கடவுளிடம் கொண்டு செல்லும்."**

1939, ஜனவரி 11 அன்று, வில்-மேரி பேக்கெட்டுக்கு எழுதிய கடிதத்தில், பாபா இளைஞர்களைப் பற்றி பேசி, பின்பு மையம் அமைப்பதற்கான இடம் மற்றும் அதன் நன்கொடையாளரைப் பற்றியும் விவரித்தார்:

**நான் எல்லா குழந்தைகளையும் எல்லா இளைஞர்களையும் அவர்களின் ஒளிமயமான நோக்கு, உற்சாகம் மற்றும் ஆற்றலுடன் நேசிக்கிறேன். எனது வருங்கால ஆன்மீகப் பணிகளுக்காக, எனது சொந்த வழியில் அவர்களுக்குப் பயிற்சியளிக்க நான் அவர்களில் பலரை என்னிடம் கொண்டுவரும் அளவிற்குப் பெரிய மையம் அமைப்பேன். . .**

**நான் மெஹராபாத்தை விட்டு வெளியேறிய நாளிலிருந்து பல பகுதிகளில் - ஹைதராபாத்தில் 600 ஏக்கர் மற்றும் இங்கிருந்து 60 மைல் தொலைவில் அமைந்த மாண்ட்லாவில் 100 ஏக்கர் நிலங்களை நான் அடையப்பெற்றேன்; அவற்றில் இரண்டாவது குறிப்பிட்டது மிகச் சிறந்தது.**

**இந்த முக்கியமான நகரத்திலிருந்து 70 மைல் தொலைவில் இந்தியாவின் மையத்தில் ஓர் அருமையான சூழலில், இரண்டு முக்கியமான நதிகள் மாண்ட்லாவில் சந்திக்கின்றன; நான் குறிப்பிடும் இந்த இடம் நதியிலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ளது, மேலும் எண்ணிலடங்கா மரங்களில் சிலவற்றை வெட்டி வீழ்த்த வேண்டியிருக்கும். இறுதி ஏற்பாடுகளைச் செய்வதற்கும், பத்திரத்தில் கையொப்பம் இடுவதற்கும் நான் நேற்று மீண்டும் அங்குச் சென்றேன்.**

**காலநிலை மிகவும் அற்புதமானது; மேலும் கிழக்கு மற்றும் மேற்கத்தியர்களுக்கு ஏற்றதான இடம். இந்த சுற்றுப்புறத்தில் நன்கொடையாளருக்கு, பல சொத்துக்கள் உள்ளன - 117 கிராமங்கள். அவர் ஆன்மீகத்தில் மிக்க ஆர்வமுள்ளவர். என்னுடைய ஒவ்வொரு செயலையும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் மிகவும் ஆர்வமாக உள்ளார். இது இந்தியாவின் மிகச்சிறந்த ஆன்மீகப் பகுதியாகும், மேலும் எனது தேவைகளுக்கு ஒவ்வொரு வகையிலும் பொருத்தமானதாகும்.**

அதே நாளில் டிலியாவிற்கு எழுதிய கடிதத்தில், பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**உங்கள் தாயிடம் பணத்தைப் பற்றியோ அல்லது போர் குறித்த அச்சத்தால் கவலைப்படவோ வேண்டாம் என்று கூறுங்கள். என்னுடையவர்கள் எங்கிருந்தாலும் அவர்களை நான் பாதுகாப்பேன். உண்மைப்பொருளுக்கான ஏக்கத்தைக் கொண்டிருங்கள். அப்போது உங்களுக்கு, ஒருபோதும் நடக்க வாய்ப்பில்லாததைப் பற்றி கவலைப்பட நேரமிராது. உண்மைப்பொருளும், அன்பும் ஒன்று; நீங்கள் அதைக் கண்டுகொள்ளும் வேளையில், அவை நிரந்தர மகிழ்ச்சியைத் தரும். இரண்டுமே எல்லாவற்றிலும் இருக்கும் ஒரே ஏக இறைவனின் வெளிப்பாடுகள் - உங்கள் அன்பான பாபா.**

**குழுவில் இணைந்திருக்கும் மேற்கத்திய அன்பர்களுக்கு வாழ்க்கை எளிதானது அல்ல. அவர்கள் என்னைப் பார்ப்பதே மிகக் குறைவு. இது அவர்களுக்கு விடுமுறைப் பயணமும் அல்ல. நான் மிகப்பெரிய பணியைச் செய்ய வேண்டியுள்ளது; அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியதும் ஏராளம். நீங்கள் எங்கிருந்தாலும் வாழ்க்கை ஒரு பள்ளிக்கூடம். நான் தேர்ந்தெடுத்த அனைவருக்கும் பாடம் கற்பிக்கிறேன்... இதையும் நீங்கள் கண்டுகொள்கிறீர்கள். உங்களுக்குத் தேவையான அனுபவங்களை நீங்கள் பெறுவதை நான் பார்த்துக்கொள்வேன். நீங்கள் எதிர்கொள்ளும் அனைத்திலும் உண்மை எது, பொய் எது என்பதைக் கண்டுகொள்வது பாதிப் போர் வென்றதற்கு சமம். உள்ளேயுள்ள உண்மைப்பொருளை உண்மையற்ற அகந்தை மூடி மறைக்கிறது. எல்லா உள்ளங்களின் தெய்வீக சிற்பியான நான், உங்கள் அனைவரிலும் நேசிக்கும் ஒருவரைப் 'பரிபூரணமாக' வடிவமைப்பேன்.**

முஹமது மஸ்த் டிசம்பர் நடுப்பகுதியில் ஜபல்பூருக்கு அழைத்து வரப்பட்டார். பாபா தினமும் மண்டலியின் இல்லத்தில் அவரை நீராட்டி, உணவூட்டினார். அவர் தனது பணிக்காக முஹமதுடன் தனிமையில் அமர்ந்திருந்தார், அருகில் எவரும் அனுமதிக்கப்படவில்லை. பிளீடர் மும்பைக்குச் சென்றதால், எரச், மஸ்தின் தனிப்பட்ட உதவியாளராக இருந்தார். முஹமது விரும்பிய ஒரு குறிப்பிட்ட காய்கறியை எரச் பஜாரிலிருந்து வாங்கி வருவது வழக்கம். ஒருமுறை, முஹமது பட்டாணியை விரும்பியபோது, கெய்மாய் வேறு சில காய்கறிகளைத் தயார் செய்தார், ஏனெனில் பட்டாணி அப்போது கிடைக்கவில்லை. ஆனால் பாபா அவருக்கு மதிய வேளையில் உணவை எடுத்துச் சென்றபோது, முஹமது, "எனது பட்டாணி எங்கே? கெய்மாய் ஏன் அதைத் தயாரிக்கவில்லை? அவரை இங்கே அழைக்கவும்!" என்று கத்தினார்.

பாபா கூறியதும் எரச், கெய்மாயை அழைத்து வந்தார்; உடனே பாபா, முஹமதிற்கு சைகையால், **"அவர் இன்று உங்களுக்காகப் பட்டாணி**

**சமைக்கவில்லை, அதனால் நான் அவரைத் தண்டிக்கப் போகிறேன்**" என்று தெரிவித்து, அவரைத் தாக்குவது போல, பாபா கையை உயர்த்தினார்.

ஆனால் முஹமது, "இல்லை, இல்லை! அவரை அறையாதீர்கள்; அவரை மன்னித்துவிடுங்கள். இன்று நான் வேறு ஏதாவது சாப்பிடுவேன்" என்று கத்தினார். அத்துடன் பிரச்சினை முடிந்து முஹமது மகிழ்ச்சியடைந்தார்; பாபாவின் தந்திரமும் பலித்தது.

ஜபல்பூர் அருகில் வாழ்ந்த சில மஸ்துகளை, பாபாவிடம் அழைத்து வர எவ்வளவோ முயன்றும், அவர்கள் அதற்கிணங்காததால், அவர்களைத் தொடர்பு கொள்ள பாபா அங்குச் சென்றார். ஒரு நாள் சகன், சியோனி (SEONI) குறுநகரில் மஸ்தாக இருந்த ஒரு சிறுவனை அழைத்து வந்தார். பாபா, அந்த சிறுவனைத் தொடர்பு கொண்ட பின்பு, சகனுடன் திருப்பி அனுப்பி வைத்தார். சியோனியில் பலர் அந்த சிறுவனை, ஒரு சாது என்று நம்பினர். திரும்பிச் சென்ற இளம் மஸ்த், "**மெஹர் பாபாவை அனைத்திலும், அனைத்து உயிரினத்திலும் நான் பார்க்கிறேன்**!" என்று பறைசாற்றினான்.

'பரோஸா' பாபா (BHAROSA BABA) என்ற மஸ்தை ஜபல்பூருக்கு அழைத்து வர கேக்கி பஜனுக்குத் தகவல் தரப்பட்டது. அந்த மஸ்த் வயதானவர், இடுப்பில் ஒரு லங்கோட்டியைத் தவிர வேறு எதுவும் அணியாமல், எப்பொழுதும் அழுக்கு துணி, குச்சி போன்றவைகளை சுமந்து செல்வதைக் காண முடிந்தது. ஜபல்பூரில், பாபா அவரை நீராட்டி, உணவூட்டி புதிய உடையை அணிய வைத்தார்; ஆனால் பின்னர் அவர் மிகவும் கோபமாகவும் அமைதியற்றவராகவும் காணப்பட்டார். ஓரிரு நாட்களுக்குப் பின்னர் அவரை மீண்டும் கட்னிக்கு அனுப்பி வைத்தார்.

மெஹர் பாபா அளித்த வாக்குறுதியின்படி, ஒரு நாள் அவர் வடகிழக்கை நோக்கி 90 கி.மீ. தொலைவில் அமைந்த கட்னி நகருக்கு ஜால் கேரவாலா, குஸ்தாஜி மற்றும் ஒரு சில ஆண் மண்டலியுடன் கேக்கி பஜன் இல்லத்திற்குக் காரில் சென்றார். பாபா, தம்பதியினருடன் மதிய உணவை உண்டு, தன்னுடைய புகைப்படம் ஒன்றை வழங்கி, "**என்னோடு உங்களுக்கு, பல வாழ்நாள் காலத் தொடர்பு உள்ளது**" என்று பாபா அவர்களுக்குத் தெரிவித்தார்.

கேக்கி, அவரது சில நிதி சிக்கல்களைப் பற்றி குறிப்பிட்டார், ஆனால் பாபா சிரித்தபடியே, "**எல்லாம் அதன் நேரத்தில் சரியாகிவிடும். அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். அந்தக் கடனைப் பற்றி நினைக்காதீர்கள், ஆனால்** (கடவுளைக் குறித்து மேல்நோக்கிச் சுட்டிக்காட்டி) **இந்தக் கடனைப் பற்றி கவலைப்படுங்கள்**" என்று கூறினார்.

தனது நாற்காலியின் மேலே சுவரில் தொங்கவிடப்பட்ட ஸொராஸ்டர் ஓவியத்தை நோக்கி சைகை காட்டிய பாபா, "**நீங்கள் அவரை நினைப்பது போல் என்னை நினைத்துப் பாருங்கள்**" என்று தம்பதியருக்கு வற்புறுத்தினார்.

இந்தக் காலகட்டத்தில், குல்மாய், ஆதி சீனியர் இருவரும் ஜனவரி 12 அன்று வந்தனர்; மேலும் குஸ்தாஜியும் பாபாவுடன் தங்க வந்தார். மண்டலியில்

சாஞ்சி, காக்கா, சகன் மூவரும் ஏற்கனவே வேறொரு பங்களாவில் தங்கியிருந்தனர். அதே நாளில், பாபா, ஜெஸவாலா குடும்பத்தை, எரச்சைத் தவிர, பப்பாவுடன் நாக்பூருக்குத் திருப்பி அனுப்பி வைத்தார். பாபா மற்றும் பெண்மணிகளுக்கும் வீட்டுவசதிகளை ஏற்பாடு செய்ய சகன் பெனாரஸுக்கு அனுப்பப்பட்டார்; சாஞ்சியும் முக்கிய பணி நிமித்தம் ஜனவரி 10ஆம் நாள் பெனாரஸுக்குப் புறப்பட்டார்.

1939, ஜனவரி 15ஆம் நாள், குல்மாய், குஸ்தாஜி, முஹமது மஸ்த், ருஸ்தத்தின் மூத்த மகன் மெஹலு மற்றும் ஊழியர்கள் ரயிலில் ஆதி சீனியருடன் பெனாரஸுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

ஜெனு (GENU) எனும் கனிவான குணமுள்ள வேலைக்காரர் முஹமதுவை கவனிக்கும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக மெஹராபாத்திலிருந்து அழைக்கப்பட்டார். பயணம் முழுவதும் முஹமது அருகில் இருக்க வேண்டும் என்று பாபா விரும்பினார். முகல் ஸெராயில் (MUGHAL SERAI) சாஞ்சி அவர்களுடன் இணைந்தார்.

அதே நாளில் மெஹர் பாபா ஜபல்பூரிலிருந்து நீலப்பேருந்தில் பெண் மண்டலியுடன் புறப்பட்டார்; காக்கா, எரச், எலிஸபெத் மூவரும் முன்னால் அமர்ந்து சவாரி செய்தனர், எரச்சும் பேருந்தை அவ்வப்போது ஓட்டினார். மாலையில் கட்னியைச் சென்றடைந்து, அவர்கள் கேக்கி பஜன் இல்லத்தில் தங்கினர். அனைவரும் மறுநாள் காலை ஆறு மணிக்கு, பெனாரஸ் நகரை நோக்கிப் புறப்பட்டு, மாலை ஐந்து மணிக்கு அங்கு வந்து சேர்ந்தனர். சகன், கன்டோன்மென்ட் பகுதியில் (சிவில் ஹோட்டலுக்கு அருகில்) பங்களாக்களை வாடகைக்கு எடுத்திருந்தார், அங்கு ஆதி சீனியர் அவரது குழுவுடன் காத்திருந்தார்.

ஜனவரி 18ஆம் நாள் காலையில், பாபா பெண்மணிகளை, புனித கங்கை நதியில் படகு சவாரிக்காக அழைத்துச் சென்றார். பெனாரஸ், கங்கை இவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றி பாபா விளக்கினார், மேலும், “**ஒவ்வோர் அவதார புருஷரும் இந்நகரத்திற்கு வந்து, இந்த நதியின் நீரில் அவர்களது கால்களை வைத்துள்ளார்**” என்று குறிப்பிட்டார்.

பெனாரஸில் 1,500க்கும் மேற்பட்ட கோயில்கள் உள்ளன. பாபா அவர்களுக்கு விஷேஸ்வர் (சர்வ வல்லவர்) கோவிலைக் காட்டி, புன்னகையுடன், “**விஷேஷ்வரின் முன்னிலையில் விஷேஷ்வர் கோயிலை நீங்கள் பார்க்கிறீர்கள்**!” என்று குறிப்பிட்டார்.

ஆண்களைப் பற்றி அவர் கருத்துத் தெரிவிக்கையில், “**பழங்காலத்திலிருந்தே, புனித நகரமான பெனாரஸ், ரிஷி, முனிகள் மற்றும் மேம்பட்ட ஆத்மாக்களின் உறைவிடமாக இருந்து வருகிறது. எனவே, இது ஆன்மீக சூழ்நிலைக்கு இணக்கமாக இருப்பதோடு, ஆன்மீகத்தில் நாட்டம் உள்ளவர்களுக்கு ஊக்கமளித்து உதவியாக இருக்கும். இங்கு நிறைந்திருக்கும் சிவாலயங்கள் மற்றும் கோயில்களைப் பொறுத்தவரை,**

**இது வெறும் கற்களாலான சுவர்கள் அல்ல, ஆனால் இங்குள்ள சூழலும், சூழ்நிலையும்** (மேம்பட்ட ஆத்மாக்கள் இருப்பதால்) **ஆன்மீகத்தை சுவாசிக்கின்றன"** என்றார்.

பாபா மேலும் விளக்கினார், **மக்கள், பாவங்களை 'சுத்திகரிக்க' அத்தகைய இடங்களுக்கு யாத்திரை மேற்கொண்டாலும், குருநாதர்கள் தங்கள் பணிக்காக அங்குச் செல்லும் வேளையில், அந்த இடங்கள் புனிதப்படுத்தப்படுகின்றன**.

ஜனவரி 18 அன்று பிற்பகலில் பாபா, பண்டைய நகரத்தின் தெருக்களில் சாஞ்சி, ஆதி சீனியர் ஆகியோருடன், குதிரை வண்டியில், பாபாவின் திட்டப்படி ஒரு சிறந்த சிறுவனைக் கண்டுகொள்ளச் சென்றாலும், உண்மையில், பாபா மஸ்துகளையும் சாதுக்களையும் தொடர்பு கொள்ளச் சென்றார். செல்லும் வழியில், பாபா பெரும்பாலும் குதிரை வண்டியை நிறுத்தி, குறிப்பிட்ட நபரைத் தொடர்புகொள்ளும் எண்ணத்தில் இறங்கி, சில சமயங்களில் அவர்களுக்குப் பணம் கொடுத்து அல்லது அவரை அப்படியே உற்று நோக்கி அவரது பணி முடிந்ததாகக் கூறி திரும்பிச் சென்றார். காலம் இதை இப்படிப் பார்த்து: "அவரது தொடர்பு, மிகக் குறுகிய காலத்திற்கே இருந்தாலும், காலாதி காலத்திற்காகப் பரந்து நின்றது." பல வருடங்களாக, பாபா, பணத்தைத் தனது கைகளால் தொட்டதில்லை, இருந்தாலும், அதை மஸ்துகள், சாதுக்கள் அல்லது ஏழைகளுக்குக் கொடுக்கும்போது, அவர் தனது கைகளால் கொடுத்தார்.

ஏதேனும் தந்திகள் அல்லது தபால்கள் வந்துள்ளனவா என்று விசாரிக்க, தபால் நிலையத்தில் நிறுத்திய பின்பு, மெஹர் பாபா குதிரை வண்டி ஓட்டுநரிடம் (அவரே ஓர் அரை-மஸ்த் என்று, சாஞ்சி நினைவு கூர்ந்தார்) நகரத்தின் மிகவும் நெரிசலான பகுதி வழியாகச் செல்ல உத்தரவிட்டார். அப்போது, வீதியில் இருந்த ஒரு குறிப்பிட்ட மனிதரை பாபா, சுட்டிக்காட்டினார், அவர் பிச்சைக்காரரைப் போலத் தோற்றமளித்து, ஆதி, சாஞ்சி இருவரையும் உற்று நோக்கிய வண்ணம் நின்று கொண்டிருந்தார்; மேலும் கீழும் பார்வையைச் சுழற்றி, சுற்றுப்புறங்களைப் பற்றிய உணர்வற்ற நிலையில் இருப்பவர் போலத் தோன்றினார். இந்த சந்தர்ப்பத்தில் ஆதியிடம் பாபா, அவருக்கு ஒரு நாணயத்தைக் கொடுக்கும்படி கட்டளையிட்டார். சாஞ்சி இந்தத் தொடர்பை இவ்வாறு விவரித்தார்:

இந்த நேரத்தில், பாபா எந்த விளக்கமும் வழங்கவில்லை; பாபா மனதளவில், வேறு எங்கோ 'மும்முரமாக' இருப்பது போலத் தோன்றியதால், நாங்களும் வேறு எந்தக் கேள்வியும் எழுப்பவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு, பல வீதிகளில் குதிரை வண்டியை ஓட்டிச் சென்ற பின்பு, திடீரென அவர்கள் தங்கியிருந்த பங்களாவிற்குச் செல்லுமாறு கூறினார். அதேவேளையில், பாபா, அவருக்கே உரித்தான ஒரு 'ரீங்கார' ஒலியை எழுப்பியது ஆன்மீக உயர் (ஆழ்மன) உணர்வு நிலையிலிருந்து கீழே சாதாரண உணர்வு நிலைக்கு வருவதைப் போலத் தோன்றியது. குதிரை வண்டி, வீட்டை நோக்கிச் செல்வதைக்

கண்ட பாபா, வெளிப்படையான ஆர்வத்துடன், மீண்டும் வீதிகளைச் சுற்றி வருமாறு சைகையால் தெரிவித்தார். அவருடைய குறிப்பிடத்தக்க சில சைகைகளைப் பற்றிய விளக்கத்தைக் கேட்க இந்த வாய்ப்பை நாங்கள் பயன்படுத்தினோம்; பாபாவும் உடனடியாக அதற்கு இணக்கம் தெரிவித்து விளக்கமளித்தார். அப்போது அவர், அந்த மனிதர் ஆன்மீக பாதையில், திகைத்துப்போய், ஒரு குறிப்பிட்ட இடத்தில் மாட்டிக்கொண்டதால் (மெஹராபாத் மஸ்த் ஆசிரமத்தில் வாழும் உள்வாசிகளைப் போல்) அந்த மனிதனுக்கு (இரண்டாவது ஆன்மீகத் தளத்திலிருந்து மூன்றாவது ஆன்மீக தளத்திற்கு) ஓர் உந்துதல் தேவைப்பட்டது. இரண்டு அணா நாணயம் இந்தத் தொடர்புக்கு ஊடகமாக இருந்து அந்த மனிதனைக் கடக்கச் செய்தது குறிப்பிடத்தக்க சம்பவமாக இருந்தது.

1939 ஜனவரி 19ஆம் நாள் பாபா, பெண்மணிகளை, ஸாரநாத் (SARNATH) நகரத்திற்கு அழைத்துச் சென்றார், அங்கு அவர் கௌதம புத்தரைப் பற்றி விளக்கமளித்தார். புத்தர் இறையுணர்வைப் பெற்ற பிறகு முதன்முதலில் அவரது போதனையை வழங்கிய இடம் ஸாரநாத். மெஹர் பாபா புத்தராக தனது அவதார புருஷரின் நிலையை நினைவு கூர்ந்தார், பின்பு “**புத்தர் இப்போது மௌனமாக இருக்கிறார்**” என்று குறிப்பிட்டார்.

அன்றைய தினம் பருப்பு ஒரு மண் பானையில் சமைக்கப்பட்டது, ஆனால் அது சிறிது சிறிதாகக் கசிந்து வெளியேறத் தொடங்கியது; எனவே அது காலியாகிவிடும் நிலையில் வேறொரு பாத்திரத்தில் மாற்றிப் பரிமாறப்பட்டது. பாபா, உடனே அவர்களைக் கேலி செய்தார், “**உங்கள் பானைகளை கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள்** (அவர்களின் இதயங்களை அர்த்தப்படுத்தி), **அவற்றில் துளைகள் விழுந்தால் உங்கள் அன்பும் கசிந்துவிடும்**!”

இந்தக் குழு மாலையில் பெனாரஸ் நகருக்குத் திரும்பி வந்து, மேலும் மூன்று நாட்கள் அங்கேயே தங்கி இருந்தது. பாபா மஸ்துகளைத் தொடர்பு கொள்வதிலும், அவரது இலட்சியத்திற்கு ஏற்ற சிறுவர்களைத் தேடுவதிலும் முழுவீச்சாக ஈடுபட்டிருந்தார். ஜனவரி 21ஆம் தேதி, பாபா, நோரினா மற்றும் இரண்டு ஆண் மண்டலியுடன் குதிரை வண்டியில் வெளியே சென்றார். கீழே இறங்கி சிறிது தூரம் நடந்து சென்றதும், வீதியில் ஒரு மனிதன், இடுப்பில் மட்டுமே உடையணிந்து இருப்பதைக் கண்டனர். பாபா வெகு தொலைவில் நின்று அவருக்கு இரண்டு நயா பைசா நாணயம் கொடுக்குமாறு சைகையால் தெரிவித்ததும், மண்டலியும் அவ்வாறு செய்தனர். அந்த மனிதன் மேலே பார்த்தபோது, அவர் ஒளிர்விடும் முகத்துடன் மயக்கத்தில் இருப்பதைப் போலத் தோற்றமளித்தார். முதல் ஆன்மீக தளத்தில் இருந்த அவரை இரண்டாவது ஆன்மீக தளத்திற்கு எடுத்துச் சென்றதாக, பாபா பின்பு விளக்கினார்.

இதுபோலவே இன்னுமொரு சம்பவம் நடந்தது. வேகமாக நடந்து சென்ற பாபா, திடீரென நின்று, தனது சீடர்களால் சூழப்பட்ட படகில் அமர்ந்திருந்த ஒரு

மரியாதைக்குரிய நபரைச் சுட்டிக்காட்டினார். மண்டலி அவரை அணுகி, "நாங்கள் மெஹர் பாபாவிடமிருந்து வருகிறோம்" என்றதும், அந்த நபர் "மெஹர்... மெஹர்... மெஹர்..." என்று மூன்று முறை திரும்பத் திரும்பக் கூறினார். பாபா இவரைப் பற்றி கருத்து தெரிவிக்கையில்: **"ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் இருந்த அவருக்கு நான் ஆறாவது ஆன்மீகத் தளத்திற்கான உந்துதலை அளித்தேன்"** என்றார்.

சகன் 'சிறப்பான' சிறுவர்களைத் தேடி, பாபாவிடம் அழைத்து வருவது வழக்கம், ஆனால் பாபா எப்பொழுதும் அவர்களைத் திருப்பி அனுப்பி நீண்ட நேரம் சகனை விமர்சித்தார், **"உங்கள் நன்மையின் பொருட்டு கேட்கிறேன், நீங்கள் என்ன மாதிரியான சிறுவர்களை அழைத்து வருகிறீர்கள்? உங்களுக்கு என்ன கண் பார்வை சரியில்லையா? எனது விருப்பத்திற்கிணங்க ஒருவரைக் கூடவா கண்டுபிடிக்க முடியவில்லை?"**

அதற்கு பதிலளித்த சகன், "அத்தகைய பையனைக் கண்டுபிடிக்க, நான் கடவுள் நிலையை அடைந்திருக்க வேண்டும்! இது ஒரு சாதாரண மனிதனுக்கான வேலை அல்ல!" என்றார்.

இந்தியாவில், ஒரு சாது அல்லது சன்னியாசியின் 'வாழ்க்கைத் தொழில்' என்பது மேற்கத்திய நாடுகளில் ஒரு பாதிரியார் அல்லது போதகரின் தொழிலைப் போலவே பொதுவானது. ஒரு நாள், சாதுக்கள் மற்றும் சன்னியாசிகளின் கூட்டத்தில், பாபா பெண்மணிகளிடம், **"இந்த 7,000 பேரில், ஏழு பேர் மட்டுமே உண்மையானவர்கள்**!" என்றார்.

1939, ஜனவரி 23 அதிகாலையில் பெனாரஸ் நகரை விட்டு வெளியேறி, பாபாவின் பரிவாரங்கள், பிற்பகல் நான்கு மணிக்கு கான்பூருக்கு வந்து சேர்ந்து, இந்துக்களால் நிர்வகிக்கப்படும் 'காஷ்மீர்' ஹோட்டலில் தங்கினர். கான்பூர் நகர வீதிகளில் வாழும் ஒரு சில ஏழை எளியவர்களையும், சிறுவர்களையும் தொடர்பு கொண்ட பிறகு, பாபா ஜனவரி 24ஆம் நாள் ஆக்ரா (AGRA) வந்து சேர்ந்தார்.

அங்கு, தங்குமிட வசதிகளை ஏற்பாடு செய்வதற்காக, பல நாட்களுக்கு முன்பு சாஞ்சி ஆக்ராவிற்குச் சென்று, அதற்குப் பொருத்தமான ஒரு தனியார் வீட்டைக் கண்டுபிடித்தார். வீடு இதுவரை எவராலும் ஆக்கிரமிக்கப்படாமல் புத்தம் புதியதாக இருந்தது. மெஹர் பாபாவும் அவரது குழுவும் தங்கயிருப்பதை அறிந்த உரிமையாளர், அதை பதினைந்து நாட்களுக்கு இலவசமாக வழங்கினார்; மேலும் இதுபோன்ற சிறந்த ஆளுமை மிக்க ஒருவருக்கு வழங்குவதில் தனது நன்றியையும் நல்லதிர்ஷ்டத்தையும் தெரிவித்தார். மின்சார விளக்குகள் இருந்தன, ஆனால் துரதிர்ஷ்டவசமாக கிணற்று நீர் குடிக்க இயலாத நிலையில், வேறு நீர் வசதி இல்லாததால் சிக்கல் ஏற்பட்டது. கிட்டி, அண்டை வீட்டில் வாழும் ஒரு மேற்கத்திய பெண்மணி திருமதி பிரவுனைத் (MRS. BROWN) தொடர்பு கொண்ட போது, அவர் தனது குழாயிலிருந்து தண்ணீரைப் பயன்படுத்த அனுமதித்தார்.

ஜனவரி 26 அன்று தாஜ்மஹால் (TAJ MAHAL), ஜும்மா மஸ்ஜித் (JUMMA MASJID), கோட்டை (THE FORT), ஷீஷ் மஹால் (SHISH MAHAL) மற்றும் மோதி மஸ்ஜித் – MOTI MASJID (திருமதி பிரவுன் வழிகாட்டியாக இருந்தார்) பார்க்க பாபா, பெண்மணிகளை அழைத்துச் சென்றார். ஒவ்வொரு முறையும் அவர்கள் ஒரு மஸ்ஜித்திற்குள் நுழையும்போதும், காலணிகளை அகற்ற வேண்டியிருந்தது, மேலும் பாபா கூட அவரது காலணிகளைக் கழற்றினார். இந்தப் புகழ்பெற்ற சுற்றுலா இடங்களைப் பற்றி பாபா குறிப்பிடுகையில், "**இது ஒரு பெரிய பூஜ்ஜியம் - ஒரு கனவு! நான் மட்டுமே உண்மையானவன். எனவே, இந்த அற்புதமான இடங்களையெல்லாம் பார்க்கும்போது, இந்தப் பூஜ்ஜியத்தில் என்னைப் பார்க்க மறந்துவிடாதீர்கள்!**" என்றார்.

ஆனால், மாலையில், பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார், "**நான் தாஜை விட தனிப்பட்ட முறையில் இந்தக் கோட்டையை விரும்பினேன். இது அதன் வகைகளில் சிறப்பாகவும், அனைத்தும் இணக்கமாகவும் இருக்கிறது.**"

ஆயினும்கூட, அனைத்து காட்சிப்பொருட்களிலும் பெண்மணிகள் சிறிதும் அக்கறை காட்டவில்லை, ஏனெனில் பாபாவின் கேலி, கிண்டல், எரிச்சலூட்டும் தன்மை, அவர்களிடையே பதட்டங்களையும் சண்டைகளையும் உருவாக்கும் சம்பவங்கள், இதனால் அவர்கள் உல்லாசப் பயணங்களில் எந்த மகிழ்ச்சியையும் காணவில்லை. நகரத்தின் வெவ்வேறு அழகான இடங்கள் வழியாக, பாபா பெண்மணிகளை வழிநடத்தியபோது, ஆண்களைத் தனித்தனியாக அவரவர் பணியில் மும்முரமாக இருக்கச் செய்தார் - 'சிறந்த' சிறுவர்களைத் தேடுவதில் சகன், எரச், காக்கா மற்றும் ஆதி சீனியர்; ஒவ்வோர் இடத்திலும் சாஞ்சி வீட்டுவசதி மற்றும் உணவு சம்பந்தப்பட்ட விஷயங்களை முன்கூட்டியே ஏற்பாடு செய்தார், மேலும் குஸ்தாஜி இரவு கண்காணிப்பாளராக இருந்தார்.

ஜனவரி 26ஆம் நாள் மாலை, மெஹர் பாபா, பெண்மணிகள் அனைவரையும் அழைத்து, செய்தித்தாளை வாசிக்கக் கூறினார். தற்போதைய உலக நிகழ்வுகளைக் குறித்து, பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: "**இங்கிலாந்து, ஃபிரான்ஸ் இரண்டு நாடுகளும் பலவீனமாக உள்ளன, எதிலும் போதுமான அளவில் திடமாக இல்லை. அமெரிக்கா இப்போது வலுவாக உள்ளது. பிரதமர்** (இங்கிலாந்தின்) **ஒளிபரப்பு ஒன்றைச் செய்துள்ளார். அவர் ஒரு சிறந்த, பண்புள்ள, உன்னதமான மனிதர்; இந்த** (ஹிட்லர், முஸோலினி போன்ற) **மூர்க்கத்தனமானவர்களோடு சற்றும் பொருத்தமற்றவர். ஜெர்மன் தலைவரோ சுத்த பைத்தியம்! ஒரு பைத்தியக்காரனைத் தவிர வேறு எவரும் யூதர்களுக்கு விளைவித்த அராஜகம் போல செய்திருக்க முடியாது. ஆனால் அது அனைத்தும் அவ்வாறு நடக்க வேண்டியதாக இருந்தது. இதில் யாருடைய தவறும் இல்லை. நடந்ததெல்லாம் சரியாகத்தான் நடந்துள்ளது.**

"**இது ஒரு சதுரங்க விளையாட்டு போன்றது; அவர்கள் சதுரங்க காய்கள்; நான் காய்களை நகர்த்தி விளையாடுகிறேன்.**"

ஜனவரி 27 அன்று, பாபா காலையில் பெண்மணிகளுடன் ஃபத்தேபூர் ஸிக்ரிக்கு (FATEHPUR SIKRI) விஜயம் செய்து, ஷேக் சலீம் கிஸ்தியின் (SHAIKH SALIM CHISTI) கல்லறை, பஞ்ச் மஹால் (PANCH MAHAL), பீர்பலின் அரண்மனை (BIRBAL'S PALACE), ருக்யா பேகம் (RUKYA BEGUM) வசிக்கும் இடம், ஜோத்பாயின் அரண்மனை, கோயில் (PALACE AND TEMPLE OF JODHBAI) மற்றும் பிற காட்சிகளைப் பார்வையிட்டார்.

பிற்பகலில் பாபா, திருமதி பிரவுன், நோரினா இருவருடன் காரில் பொருத்தமான சிறுவனைத் தேடி ஒரு சிறுவர் பள்ளிக்குச் சென்றார். ஆதி சீனியர், சாஞ்சி இருவரும் பாபாவிற்கும் பெண்மணிகளுக்கும் ஒரு பங்களாவை ஏற்பாடு செய்ய டெல்லிக்குப் புறப்பட்டனர், சில நாட்களுக்குப் பின்னர் அதே நோக்கத்திற்காக எரச் அஜ்மீருக்குச் (AJMER) சென்றார்.

மறுநாள் பாபா, பெண்மணிகளை, கிருஷ்ணா பிறந்த இடமான மதுராவிற்கு (MATHURA) அழைத்துச் சென்று, தனது குழந்தைப் பருவத்தைக் கழித்த கோகுலத்திற்கும் (GOKUL), கோபிகையருடன் வாழ்ந்த பிருந்தாவனத்திற்கும் (VRINDAVAN) விஜயம் செய்தார். பிருந்தாவனத்தில் அமைந்த கோவிலுக்கருகில், புல்லாங்குழல் இசைத்துக் கொண்டிருந்த ஓர் இளம் மஸ்த், பாபாவைப் பார்த்து, "இதோ எனது முரளீதரன் வருகிறார்! நான் உங்களுக்காகவே காத்திருக்கிறேன்!" என்று கூறி, பரவசமடைந்தார். பாபா, மஸ்தின் கன்னங்களைத் தட்டிக் கொடுக்க, அவருக்கு ஒரு சில நாணயங்கள் கொடுக்கப்பட்டன. அதற்குப் பிறகு, பாபா பெண்மணிகளிடம், "**அவர் நமது முஹமதுவை விட மிகவும் முன்னேறியவர்**" என்று தெரிவித்தார்.

கிருஷ்ணாவுடன் தொடர்புடைய இடங்களுக்குச் சென்ற வேளையில், பாபா, "**இந்த இடங்களைப் பார்க்கும்போது, எனது பழைய பழக்கவழக்கங்கள் நினைவிற்கு வருகின்றன; அவை ஓயாது என்னைத் துரத்திவரும் பேய்களைப் போன்றவை. இங்கே நான் கோபிகைகளுடன் விளையாடினேன், பால் மற்றும் தயிரைத் திருடினேன்; இங்கே, நான் எனது புல்லாங்குழலை வாசித்த வேளையில்; என் ராதா என்னிடம் விரைந்தோடி வந்தாள்! இப்போது, நான் என் இன்றைய கோபிகைகளுடன் இங்கு வந்துள்ளேன்; இப்போது, மெஹரா என் ராதா**" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினார்.

அன்று பிற்பகல் பாபா, "**கிருஷ்ணா தனது கடைசி உணவை உண்ட இடத்தை இப்போது சென்று பார்ப்போம்**" என்று கூறினார். கிருஷ்ணருடன் தொடர்புடைய அனைத்தையும் ஏற்கனவே பார்த்து விட்டதாக நினைத்து அனைவரும் குழப்பமடைந்தனர். இறுதியில் அவர்கள் பாபாவுடன் அன்று மதிய உணவு உண்ட பயணிகள் தங்குமிடமே அது, எனத் தெரியவந்தது! மறுபடியும் தேநீருக்காக அனைவரும் அங்குச் சென்றனர்.

பாபா ஒவ்வொரு நாளும் பெண்மணிகளை, சுற்றுப்புற இடங்களுக்கு அழைத்துச் சென்று, பின்னர் ஆக்ராவிற்குத் திரும்பினார்; அங்கு அவர் தனது மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். ஆனால் மஸ்த் வேட்டையில்

இறங்குவதற்கு முன்பு, பாபா முதலில் முஹமது மஸ்தை நீராட்டி தனது கைகளால் உணவூட்டுவது அவரது முதன்மையான கடமையாக இருந்தது; மேலும் அவர் ஒவ்வொரு நாளும் சுமார் இரண்டு மணி நேரம் முஹமதுடன் செலவிட்டார்.

ஜனவரி 28 அன்று அவர்களின் பங்களாவில் ஒரு விசித்திரமான சம்பவம் நிகழ்ந்தது. இரண்டு நாட்களுக்கு முன்பு, பாபா இளைஞன் ஒருவனின் கவட்டையால் படுகாயமடைந்த மரங்கொத்திப்பறவை ஒன்றை வீட்டிற்கு எடுத்து வந்திருந்தார். பெண்மணிகள் அதை உள்ளே எடுத்து வந்து, காயத்திற்கு மருந்திட்டு, கட்டுபோட்டுப் பாதுகாத்தனர். பாபா அதைத் தனது மடியில் வைத்து, உணவளித்தார். எவ்வளவோ முயற்சித்தும், பறவை நீண்ட காலம் உயிர்வாழவில்லை; இரண்டே நாட்களில் அது கூண்டிலிருந்து சிரமப்பட்டு வெளியே வந்து, பாபா அமர்ந்திருந்த இடத்தை நோக்கிச் சென்று அவரது காலடியில் உயிரைத் துறந்தது.

பாபா அதைக் கையில் எடுத்து, “**இந்தப் பறவை எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்று உங்களுக்குத் தெரியாது. அதன் அடுத்த பிறப்பில் இது ஒரு மனிதனாகப் பிறவி எடுக்கும், ஆனால் ஒரு சாதாரண மனிதனாக அல்ல (மாறாக ஆன்மீக பாதையில் நாட்டம் உள்ளதாகவும், ஒருவேளை சில ஆன்மீக சக்திகளையும் கொண்டிருக்கலாம்**)” எனத் தெரிவித்தார்.

1939,பிப்ரவரி 1ஆம் நாள், பாபா மண்டலியுடன் ஆக்ராவிலிருந்து மதியம் டெல்லிக்குப் புறப்பட்டு, மாலையில் வந்து சேர்ந்து ‘ரீகல்’ ஹோட்டலில் (REGAL HOTEL) தங்கினர். அங்கிருந்த ஒரு வார காலத்தில் ஜமா மஸ்ஜித் (JAMA MASJID), பழைய கோட்டை (THE OLD FORT), பேரரசர் ஹுமாயூன் சமாதி (THE SHRINE OF EMPEROR HUMAYUN), லக்ஷ்மி நாராயண் கோயில் (LAXMI NARAYAN TEMPLE) மற்றும் ஹஸ்ரத் நிஜாமுதீனின் சமாதி (HAZRAT NIZAMUDDIN’S SHRINE) ஆகியவற்றைக் காண பாபா பெண்மணிகளை அழைத்துச் சென்றார்.

238 அடி உயரத்தில் அமைந்த ஒரு கல் கோபுரம் (அந்த நேரத்தில் இந்தியாவின் மிக உயர்ந்த கட்டமைப்பு) - குதுப் மினாரைக் (KUTUB MINAR) காண பாபா பெண்மணிகளை அழைத்துச் சென்றபோது, அவர் பாதையின் ஒரு பகுதிக்கு மட்டும் சென்று, பின்பு கீழே இறங்கினார். பாபா தொடர்ந்து வருவதாக நினைத்து, மன்ஸாரி மேலே ஏறினார். அனைவரும் வெளியேறவிருந்த அந்நேரத்தில், திடீரென மன்ஸாரி குழுவில் இல்லாததை, பாபா கவனித்து, கோபுரத்தின் மேலே பார்த்தபோது அவர் அங்கே நின்றுகொண்டு கையசைப்பதைக் கண்டார். பாபா அவரை உடனடியாகக் கீழே வரும்படி சைகையால் தெரிவித்தார்.

அவர் வந்ததும், “நீங்கள் என்ன பைத்தியமா? ஏன் எங்களைக் கீழே பின்தொடரவில்லை?” என பாபா வினவினார்.

பாபா மேலே சென்றதாக தான் நினைத்ததாகவும், அவருடன் இருக்க விரும்பி பின்தொடர்ந்ததாகவும் மன்ஸாரி விளக்கினார். சீற்றமடைந்த பாபா,

**“நீங்கள் என்னுடன் இருக்க விரும்புவதாகவும், நீங்கள் என்னை நேசிப்பதாகவும் சொல்கிறீர்கள்! என்னுடன் இருப்பது மிகவும் கடினம்! என்னை நேசிப்பதும் மிகவும் கடினம்! குதுப் மினார் உங்களை என்னிடமிருந்து பிரித்து விட்டது”** என்று பாபா திட்டினார்.

பிப்ரவரி 4ஆம் நாள், பிற்பகலில் பெண் மண்டலியுடன், பாபா ஒரு மாநாட்டை நடத்தினார், வீட்டு விவகாரங்கள் மற்றும் அவரது முக்கிய பணிகளைக் கையாளும் பிற விஷயங்களைப் பற்றி விவாதித்தார்: **“இப்போது இன்றைய மாநாடு முக்கியமானது. கவனமாகக் கேளுங்கள்; தீவிரமாக இருந்து, விருப்பத்துடன் கீழ்ப்படியுங்கள். எனக்கு இந்த நகரத்தில் செய்ய வேண்டிய, மிகவும் நடைமுறைக்கு உகந்த மற்றும் விசித்திரமான வேலை ஒன்று உள்ளது. இங்கே, அந்த வேலைக்கு ஏற்ற சூழ்நிலைகளை நான் காணமுடியவில்லை. ஆனால், அஜ்மீர் நிச்சயமாகப் பொருத்தமாக இருக்கும், அதற்கு, கீழ் குறிப்பிடும் விஷயங்கள் எனக்கு உதவியாக இருக்கும்.”**

பின்னர் அவர் சில வீட்டு ஏற்பாடுகளைக் கோடிட்டுக் காட்டினார்: **“அஜ்மீரில் பத்து நாட்கள், நான் இறைவனாக, பணியாளனாக, பக்தனாக, குருநாதராக - ஒன்றில் பலராக இருக்கப் போகிறேன். மிகவும் விசித்திரமான ஆனால் குறிப்பிடத்தக்க வேலை - வழிபடுபவர், வழிபடக்கூடியவர் மற்றும் எல்லாமே! இது மிகவும் முக்கியமானது, குறிப்பாக பிறந்தநாளுக்கு ஏழு நாட்களுக்கு முன்பு, பிப்ரவரி 11 முதல் 18 வரை. இதற்கு முந்தைய இரண்டு பிறந்தநாட்களில், நான் ஏழைகளின் பாதங்களைத் தொட்டு வணங்கினேன். இந்தப் பிறந்தநாள் மிகவும் வித்தியாசமாக இருக்கும். நான் தலைவணங்குவேன், அதேவேளையில் வெவ்வேறு மனிதர்களால் வணங்கப்படுவேன்; எனவே, நான் வெண்ணெய், ரொட்டி மற்றும் காலணிகளிலிருந்து விடுபட வேண்டும்!”**

அன்று இரவு பாபா பெண்மணிகளை பழைய மற்றும் புது டெல்லியின் விளக்குகளைக் காண அழைத்துச் சென்றார். கராச்சியிலிருந்து வந்த பீலாமாய் பிப்ரவரி 5 அன்று குழுவில் இணைந்தார். அதே நாளில், காக்காவும் ஆதி சீனியரும் அழைத்து வந்த மஸ்த் ஒருவரின் தலைமுடியை வெட்டி, நீராட்டி, புத்தாடை அணிவித்து, உணவளித்த பின்பு, பாபா அவரைத் திருப்பி அனுப்பினார். சகன் அழைத்து வந்த ஒரு சில சிறுவர்களுக்கு ஆடைகளும் பணமும் கொடுத்து அனுப்பினார்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, மெஹர் பாபாவுடன் நீலப்பேருந்தில் பயணம் செய்யும் வேளையில், மஸ்துகளையும், ‘சிறந்த’ சிறுவர்களையும் தேடுவதே ஆண் மண்டலியின் பிரதான கடமையாக இருந்தது. அவர்கள் ஓரிடத்திற்கு வந்ததும், எரச், காக்கா, சகன் மூவரும் இந்தப் பணியில் தங்களை அர்ப்பணிக்கும்படி, பாபா கட்டளையிட்டிருந்தார்.

பிப்ரவரி 6ஆம் நாள், நிஜாமுதீனின் (NIZAMUDDIN) தர்கா அருகே, கமல் போஷ் (KAMAL POSH) என்ற மேல்நிலை மஸ்தை பாபா தொடர்பு கொண்டார்.

பாபா, பெண் மண்டலிக்கு இவ்வாறு விளக்கினார், “**கமல் போஷ் ஐந்தாவது ஆன்மீக தளத்தில் நிலைகொண்டவர், என் உண்மையான அன்பர். அவரது உடல் அசுத்தத்தை சூழ்ந்திருக்கும் அற்புதத்தை, என்னால் மட்டுமே பார்க்க முடியும். உலகம் அவரைப் பைத்தியம் என்று நினைக்கிறது, ஆனால் உலகம்தான் பைத்தியம், அவர் விவேகமுள்ளவர்! இந்த உண்மையான வீரர்களைப் பார்க்கும் போது நான் அடையும் மகிழ்ச்சி வேறு எதிலும் கிடைப்பதில்லை!**”

ஒரு கட்டத்தில், பாபா ‘ஹஃபீஸ்ஜி நபீனா’வைத் (HAFIZJI NABEENA) தொடர்பு கொண்டார், ‘**அவர் டில்லியின் பொறுப்பாளராக**’ இருப்பதாக, பாபா கூறினார். மக்களால் வழிபடப்பட்ட ஹஃபீஸ்ஜி, கண்பார்வையற்ற முற்றிலும் நிர்வாண நிலையில் இருந்த ஒரு முஸ்லிம் துறவி; பார்வை இல்லாத போதிலும் அவரால் நகரெங்கும் சுற்றிவர இயலும். அருமையான கதைகளும் அற்புதங்களும் அவரைச் சுற்றி இருந்ததாகத் தெரியவந்தது.

1939, பிப்ரவரி 7ஆம் நாள் காலையில் மெஹர் பாபா அவரது குழுவுடன் அஜ்மீர் நகருக்குப் புறப்பட்டார். அன்று பிற்பகல் அல்வார் (ALWAR) கிராமத்தை வந்தடைந்து, அரசாங்க விடுதி ஒன்றில் தங்கினர். அங்குப் புதிதாகப் பிறந்த ஆடு ஒன்று துள்ளித் துள்ளி ஓடிக்கொண்டிருந்தது; பெண்மணிகளில், குறிப்பாக எலிஸபெத், அதனுடன் விளையாடினர், பாபா அதை அன்போடு கைகளால் அணைத்தார்.

மறுநாள் காலை ஆறு மணிக்குப் புறப்பட்டு, மூன்றரை மணி நேரத்தில் ஜெய்ப்பூர் (JAIPUR) வந்தடைந்தனர். ஜெய்ப்பூர், அம்பர் அரண்மனைக்கு (AMBER PALACE) அருகில், பாபா திடீரெனப் பேருந்தை நிறுத்தி, சாலையின் மறுபுறம் அமைந்த திடலிலிருந்து அரண்மனையைப் பார்க்கப் பெண்மணிகளை அழைத்துச் சென்றார். எதிர் திசையைப் பார்த்தபடி நின்ற பாபாவின் மனநிலை ஒரு விசித்திரமான மாற்றத்திற்குள்ளானது. விரைவில், அந்த திசையிலிருந்து, நிர்வாணமாக மஸ்த் ஒருவர் வெளிப்பட்டார். பாபாவும் மஸ்தும் சிறிது நேரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பெண்மணிகளை அழைத்து பாபா, அந்த மனிதனைச் சுட்டிக்காட்டி, அவர் ‘**ஜெய்ப்பூரின் ஆன்மீகப் பொறுப்பாளர்**’ **என்**பதைத் தெரிவித்தார்.

பயணத்தின்போது, பாபா கடலைப் பருப்புகளைக் கொறிப்பதும், திராட்சை, ஆப்பிள், ஆரஞ்சு அல்லது வெள்ளரி காய்களை ஒரு வாய் கடிப்பதையும் வழக்கமாகக் கொண்டார்; அவ்வப்போது சிலவற்றைக் குழுவில் சிலருக்கு வழங்கினார். ஒருமுறை, பெண் மண்டலியுடன் கேலி செய்து உரையாடும் போது, அவர் குறிப்பிட்டார், “**முந்தைய அவதார காலத்தில் நோரினா, ஒரு** (மேல்நிலை) **பாதிரியார்**. . . **ரானோ, கிட்டி இருவரும் போட்டிப் பாதிரியார்கள்**. . . **ஐரீன், குதிரைக் கொட்டில் சிறுவன்** (குதிரை என்றால் அவருக்கு அலாதி ஆசை). . . **குல்மாய், மாசியின் கணவர்**. . . **எலிஸபெத்,**

**நோரினாவின் மனைவி…”** என்று கூறி, நாள் முழுவதும் அனைவரையும் திணறடித்தார்.”

இந்தக் குழு பிப்ரவரி 8ஆம் நாள் பிற்பகலில் அஜ்மீரை வந்தடைந்தது. எரச் உள்ளூர் வங்கியாளர் ஒருவருக்குச் சொந்தமான பங்களாவை வாடகைக்கு எடுத்திருந்தார், அங்கு, பாபாவும் பெண்மணிகளும் வசதியாகத் தங்க முடிந்தது. மண்டலி தங்குவதற்கான விடுதிகள் கால் மைல் தொலைவில் ஏற்பாடு செய்யப்பட்டன. அவர்கள் வந்த சில நாட்களில், பாபா அவரது மஸ்த் பணியில் தீவிரமாக ஈடுபட்டார்.

காக்கா, எரச் இருவரும் மஸ்துகளைத் தேடுவதில் மட்டுமே முழு முனைப்புடன் ஈடுபட்டனர். மஸ்துகளை நீராட்டத் தேவையான சுடுநீரைத் தயார் செய்ய ரானோவிற்கு அறிவுறுத்தப்பட்டது. குளியலறையில் வைக்கப்பட்ட வாளிகளை நிரப்ப ரானோ மீண்டும் மீண்டும் விரைந்து சென்றார். பாபா, பின்பு மஸ்தை நீராட்டி புதிய உடைகள் அல்லது மேலங்கியை அணியச் செய்தார். பாபா பெண்மணிகளின் போர்வைகள் மற்றும் துண்டுகளை எடுத்து தனது பிரியமான மஸ்துகளுக்கு அனுப்பி வைத்தார்; இந்தச் செயல்பாட்டின் மூலம், அவர் படிப்படியாகப் பெண் மண்டலியின் உடைமைகளின் சுமையைக் குறைத்துக் கொண்டிருந்தார்!

பிப்ரவரி 12 அன்று பரிச்சயமான குதிரை வண்டிக்காரர் ஒருவர் ‘பிரம்மானந்தா ஸிங்’ (BRAHMANANDA SINGH) என்ற மஸ்தை பங்களாவிற்கு அழைத்து வந்தார். இந்த மஸ்த் பல ஆண்டுகளாக அசுத்தமான சூழ்நிலையில் வாழ்ந்து, சாக்கடை நீரை அருந்தி வந்தார். பாபா அவரைத் தனது அறையில் வைத்து, பின்பு நீராட்டி, உடை உடுத்தி, உணவூட்டினார். 1922ஆம் ஆண்டில் மன்ஸில்-எ-மீமிலிருந்து அஜ்மீருக்கு வந்தபோது, பதினேழு ஆண்டுகளுக்கு முன்னர் அவர்கள் சந்தித்த அதே மஸ்த் என்பதை ஆதி நினைவு கூர்ந்தார். காக்கா, எரச் இருவரும் நாள் முழுவதும் மஸ்தை கவனித்துக் கொண்டனர்; காக்கா அவருக்கு அருகிலேயே தூங்கினார். அந்த மஸ்த் ஆறாவது ஆன்மீகத் தளத்தில் இருப்பதாகக் குறிப்பிட்டு, அவரை மெஹராபாத்திற்கு அழைத்துச் செல்ல விரும்புவதாக, பாபா கூறினார்.

1939, பிப்ரவரி 13 அன்று, அஜ்மீரில் ஆன்மீகத் தளங்களில் முன்னேறிய ஆறு ஆத்மாக்கள் இருப்பதாக பாபா விளக்கினார்: **ஆறாவது ஆன்மீகத் தளத்தில் இரண்டு, ஐந்தில் இரண்டு, மூன்றாவது மற்றும் நான்காவது அல்லது ஐந்தாவது மற்றும் ஆறாவது தளங்களுக்கிடையே இரண்டு. “ஒருவர் உயிரைத் துறக்கும் போது, மற்றொருவர் அவருடைய இடத்தை ஆக்ரமிப்பதன் மூலம் அதே எண்ணிக்கை (ஆறு) பராமரிக்கப்படுகிறது”** என்று பாபா விளக்கினார்.

இறைநிலையை அடைந்த மஜ்ஜூப்கள் (MAJZOOBS) பற்றியும், உலகில் அவர்கள் எவ்வளவு அரிதானவர்கள் என்பதைக் குறித்தும் மெஹர் பாபா விளக்கினார்; மேலும் மஜ்ஜூப்கள் இப்போது அருகிலேயே இருப்பதாகவும்

கூறினார். அந்த நாளில், பாபா, காக்கா, ஆதி சீனியர் இருவரையும், ஏழாவது ஆன்மீகத் தளத்தில் இருக்கும், உலகின் மிகப் பெரிய மஸ்த் ஒருவரை, பங்களாவிற்கு அழைத்துவர அனுப்பி வைத்தார். முதலில் அவர் இருந்த இடத்திலிருந்து அவர்களுடன் செல்ல மறுத்துவிட்டார் - குவாஜா மொய்னுதீன் கிஷ்தியின் (KHWAJA MU'INUDDIN CHISHTI) கல்லறைக்கு அருகில் நம்பமுடியாத அளவிற்கு அசுத்தமான, சிறிய, இரண்டு அறைகள் கொண்ட குடிலில் அமர்ந்திருந்தார். அந்த மஸ்தை 'சாச்சா' (CHACHA) என்று அனைவரும் அழைத்தனர்.

'சாச்சா' தனது பட்டான் வம்சாவளியைப் போலல்லாமல் குறுகிய தோற்றத்தில் வலிமை மிக்கவராகக் காணப்பட்டார்; மேலும், நாள் முழுவதும் நூற்றுக்கணக்கான கப் தேநீர் (சா -TEA) அருந்துவதில் ஒருதலை விருப்பத்தைக் கொண்டிருந்ததால் அவர் அவ்வாறு அழைக்கப்பட்டார்.

வெவ்வேறு சந்தர்ப்பங்களில், மஜ்ஜூப்பின் பக்தர்கள் ஆதி, காக்கா இருவருக்கும் தேநீர் பரிமாறிக் கொண்டிருந்த அதே நேரத்தில் சாச்சா "சா... சா...!" என்று குரல் கொடுத்து, பின்பு, கட்டளையிடும் தொனியில், "சென்று விடுங்கள்!" என்று கூற, இருவரும் எழுந்ததும், "அமருங்கள்... அமருங்கள்...!" என்றார்.

அவர்களின் ஆரம்பத் தொடர்பில், தேநீர் பரிமாறப்பட்டபோது, காக்கா தனது வயிறு நிரம்பும் வரை அதைப் பருகினார். ஆதி, காக்காவிடம் தேநீர் அருந்துவதை நிறுத்தக் கூறி, "பாபா, நம்மிடம் இந்தத் தேநீர் அனைத்தையும் அருந்தச் சொல்லவில்லை, மாறாக மஸ்தை அழைத்துவர மட்டுமே கூறினார்" என்று நியாயப்படுத்தினார். அங்கு நடந்ததை அவர்கள் பாபாவிடம் தெரிவித்தபோது, அவர் மறுநாள் அவர்களைத் திருப்பி அனுப்பினார். மீண்டும், அதே காட்சி அரங்கேறியது. இப்படி சில நாட்கள் கடந்தன; இறுதியாக, பாபா "சரி, நீங்கள் செல்வதை நிறுத்துங்கள்" என்று கூறினார்.

ஆனால், திருப்தியடையாமல் பாபா, சில நாட்களுக்குப் பிறகு மீண்டும் ஆதியிடம், "எப்படியாவது சாச்சாவை அழைத்து வர முடியுமா?" என்று கேட்டார்.

"பாபா, அதில் எந்த பயனும் இல்லை" என்று கூறி, "அவர் சற்றும் இணங்க மாட்டார்!" என ஆதி பதிலளித்தார்.

ஆயினும்கூட பாபா, ஆதியையும் காக்காவையும் திருப்பி அனுப்பினார். அவர்கள் சென்றபோது, பிப்ரவரி 17 அன்று, ஆதி மெதுவாக சாச்சாவை அணுகி, மூன்று முறை அவருடைய கையைப் பற்றிக்கொண்டு, "இன்று நீங்கள் எங்களுடன் வரவில்லையா?" என்றதும், ஆச்சரியமளிக்கும் விதத்தில், மூன்றாவது முயற்சியில் மஸ்த் அவரது இடத்திலிருந்து எழுந்து, எந்த வாதமும் இல்லாமல் அவர்களுடன் சென்றார். அருகிலிருந்த குதிரை வண்டியில் ஏறி - பின்புறத்தில் ஆதி, முன்னால் சாச்சா மற்றும் காக்கா - புறப்பட்டுச் சென்றனர். இதை கவனித்துக் கொண்டிருந்த சாச்சாவின் முஸ்லிம் கண்காணிப்பாளர்கள் சந்தேகப் பார்வையில் அவரை எங்கே அழைத்துச் செல்கிறார்கள் என வினவினர்.

"எங்கள் பெரிய சகோதரரிடம்," என்று ஆதி பதிலளித்தார்.

அவர்கள் வருவது நிச்சயமாக பாபாவிற்குத் தெரியும்; ரானோ சாச்சாவை நீராட்ட சுடுநீரைத் தயாராக வைத்திருந்தார். இருப்பினும், அவர்கள் வந்தபோது, மஜ்ஜூப் (சாச்சா) குதிரை வண்டியிலிருந்து கீழே இறங்க மறுத்துவிட்டார். பாபா வெளியே வந்து சாச்சாவின் கையைப் பற்றியதும், இறுதியில் அவர் கீழே வந்தார். சாச்சா கடந்த பல ஆண்டுகளில் தனது இடத்திலிருந்து நகர்ந்ததே இல்லை, இதன் விளைவாக அவரால் சரியாக நடக்க முடியவில்லை; தடுமாறியதும் காக்கா, ஆதி இருவரும் அவருடைய கைகளைப் பிடித்து உதவினர்.

கிட்டத்தட்ட கடந்த முப்பது ஆண்டுகளில் சாச்சா நீராடவில்லை என்பதை வெளிப்படுத்திய பாபாவிற்கு உதவுமாறு ஆதிக்கு அறிவுறுத்தப்பட்டது! பாபா அவரை நீராட்டுவதற்கு முன்பாக பல வாளிகளில் வெதுவெதுப்பான நீர் தயாராக வைக்கப்பட்டிருந்தது. நீராட்டும் வேளையில் சாச்சாவின் உடலை மெதுவாகவும், மென்மையாகவும் தொட வேண்டும் என்று பாபா எச்சரித்தார். இத்தனை ஆண்டுகளாக, தேநீர் உடலில் கொட்டி, அவரது சட்டை மார்போடு ஒட்டிக்கொண்டிருந்ததால், சட்டையைக் கழற்றுவது பாபாவிற்கு மிகவும் சிரமமாக இருந்தது. அவரை ஒரிரு மணி நேரம் நீரில் ஊறவைத்து, இறுதியில் பாபா, கத்தரிக்கோலால் சட்டையைத் துண்டு துண்டாக வெட்ட வேண்டியிருந்தது. அதன் பின்னரே பாபா அவரை நீராட்டினார்.

காலம் இதைக் கண்டு வியப்படைந்தது. “சாச்சா உண்மையிலேயே பாழான பொருட்களுக்கிடையில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புதையல்! அவரைப் போன்ற இறை உணர்வை அடைந்த ஆத்மாக்கள் பூமியில் மிக மிகக் குறைவு. சாச்சாவின் ஆடைகளை வெட்டி, பின்பு நீராட்டும்போது, சாச்சாவிற்கு அவரது உடலைப் பற்றிய எந்த உணர்வும் இல்லை - இறை உணர்வு மட்டுமே இருந்தது. மஜ்ஜூப், பாபாவைக் கடவுளாகவே கண்டார்; அவர் மெஹர் பாபாவைக் கடவுள் என அறிந்திருந்தார்.”

ஆதி, சாச்சாவின் தலைப்பாகையின் கீழிருந்த பழைய சிவப்பு ஃபெஸ் தொப்பியை (FEZ CAP) எடுக்க முயற்சித்தார்; அது முப்பது ஆண்டுகளுக்கு முன்னதாக அவர் தலையில் அணிந்தது, இப்போது அவரது தோலின் ஓர் அங்கமாக இருந்தது! மிகவும் மெதுவாக, அவரைக் காயப்படுத்தாமல், வெதுவெதுப்பான நீரை ஊற்றி, ஆதி மெதுவாக எடுக்க முயற்சித்தபோது, “**மெதுவாக, மெதுவாக... அவரைக் காயப்படுத்தாதீர்கள்**” என்று பாபா திரும்பத் திரும்பக் கூறினார். இறுதியாக, ஆதி தொப்பியை வெளியே எடுத்து, காயத்தைத் துணியால் துடைத்து அதை உலர வைத்தார்.

பல மணிநேர முயற்சிக்குப் பிறகு பாபா, சாச்சாவை நீராட்டி, புதிய மேலங்கியை அவருக்கு அணிவித்து அலங்கரித்தார். ஆதி முற்றிலும் சோர்வடைந்து போனார்; ஆனால் பாபா, மகிழ்ச்சி பொங்க, அற்புதமான மனநிலையில் இருந்தார்; ஆதி, காக்கா இருவரின் மகத்தான சாதனையை, பாபா பெரிதும் பாராட்டினார்.

அடுத்து நடந்தது என்ன? மஜ்ஜூப் (சாச்சா) உடனடியாகத் தேநீர் வேண்டுமெனக் கேட்க, அதைப் பரிமாறியபோது சாச்சா, தேநீரை தன் மீது ஊற்றத் தொடங்கினார்! ‘**அவர் நீண்ட காலம் அங்கு தங்குவாரா**’ என்று பாபா கேட்டதற்கு, ”நீங்கள் எனக்கு உதவினால் நான் தங்குவேன்” என்று சாச்சா மென்மையான குரலில் கூறினார். பாபா, அவருக்கு தனது கையால் சிறிது உணவை ஊட்டினார், பின்பு குதிரை வண்டியில் அவரது இருப்பிடத்திற்கு அனுப்பிவைத்தார்.

1939 பிப்ரவரி 15ஆம் நாள் மெஹர் பாபாவின் 45ஆவது பிறந்தநாள் அஜ்மீரில் அனுஷ்டிக்கப்பட்டது, ஆனால் வேறு எந்த ஆண்டையும் விட வித்தியாசமான ஒன்றாக இருந்தது. பாபா, அதிகாலை இரண்டு மணிக்கு, காக்காவுடன், மஸ்துகளைத் தொடர்புகொள்ள நகருக்கு வெளியே சென்று ஐந்து மணிக்குத் திரும்பி வந்தார். இவ்வேளையில் உபவாசம் இருந்து நீர் கூட அருந்தவில்லை. மெஹராபாத்தில் அப்போது தங்கி இருந்தவர்களுக்கு பாபா இவ்வாறு தெரிவித்தார்: “**பொதுவான அல்லது தனிப்பட்ட நிகழ்ச்சி எதுவும் இல்லை, நான் புதிய ஆடைகளையும் அணிய மாட்டேன். விழா இல்லை, இசை இல்லை, பாட்டும் இல்லை**.”

அன்றைய தினம் இருபது ஆண்கள் பங்களாவிற்கு அழைத்து வரப்பட்டனர்: ஒரு சிலர் மஸ்துகள்; பலர் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள்; சிலர் வீதிகளில் வாழும் ஆதரவற்றவர்கள்.

பாபா, எரச் மற்றும் குஸ்தாஜியின் உதவியுடன், அன்போடு அவர்களை நீராட்டி, ஒவ்வொருவருக்கும் ஆடை அணிவித்து, பின்னர் உணவளித்து, பிற்பகல் இரண்டு மணிக்கு திருப்பி அனுப்பி வைத்தார். அனைவரும் சென்ற பின்பு பாபா அவரது மதிய உணவை உண்டு, “**எனது பிறந்தநாளின் இன்றைய நிகழ்ச்சி மிகச் சிறப்பாக இருந்தது. ஒவ்வொரு நாளும் இவ்வண்ணம் கொண்டாடுவதை நான் விரும்புகிறேன்! இந்தப் பிரியமான மஸ்துகளுக்கு சேவை செய்வதால் நான் அடையும் மகிழ்ச்சி வேறு எதிலும் இல்லை!**”

மெஹர் பாபா அஜ்மீரில் இருந்த ஒவ்வோர் இரவும் சாச்சாவை அவரது இருப்பிடத்தில் சந்திக்கத் தொடங்கினார். அவர், மக்கள் கூட்டத்தைத் தவிர்க்கும் நோக்கத்தில், ஆதி சீனியர், காக்கா இருவருடன் அதிகாலை 3:30 மணிக்குச் சென்று, அரை மணி நேரம் சாச்சாவை தனிமையில் தொடர்பு கொண்டார்.

அஜ்மீரில் பாபா, இதற்கு முன்னர் எப்பொழுதும் செய்யாத, அசாதாரணமான ஒன்றைச் செய்தார். அவர் தன்னுடன் பங்களாவில் தனது அறையில் இரண்டு மஸ்துகளை வைத்திருந்தார் - ஆறாவது ஆன்மீக தளத்தில் நிலைகொண்டிருந்த லக்கன் ஷா (LAKHAN SHAH) மற்றும் ஐந்தாவது ஆன்மீக தளத்தில் இருந்த கப்ரிஸ்தான்வாலா (QABRISTANWALA - சாக்ரடீஸ் -SOCRATES என்ற புனைப்பெயர்). சாதாரணமாக, பாபா, மஸ்துகளுடன் ஒரு தனி அறையில் பணிபுரிவது வழக்கம், ஆனால், லக்கன் ஷா, சாக்ரடீஸ் இருவரையும் அவரது அறையில் தங்க வைத்தார். பாபா அவர்களின் கால்களை மஸாஜ் செய்வதும்,

அவர்களுக்கு முத்தமளிப்பதும், அடிக்கடி அவர்களை அணைப்பதும் கண்கொள்ளா காட்சி. மேலும் அவர்களின் மலக்கழிவை சுத்தம் செய்து, அவர்களை எல்லாவகையிலும் மகிழ்ச்சியாகவும் உள்ளடக்கமாகவும் வைத்திருக்க அனைத்து முயற்சிகளையும் செய்தார். (பின்னர், அவர்களை மண்டலியின் இருப்பிடத்திற்கு மாற்றி, அங்கு பாபா அவர்களுடன் தொடர்ந்து பணியாற்றினார்.)

லக்கன் ஷா யார் என்று சாக்ரடீஸிடம் கேட்கப்பட்டபோது, சாக்ரடீஸ், ‘ஜகந்நாத்’ (JAGANNATH - விஷ்ணு) என்றும் பாபாவைப் பற்றி கேட்டபோது, ’சிவநாத்’ (SHIVANATH - சிவன்) என்றும் கூறி அவர் பாபாவின் பாதங்களை அழுத்தத் தொடங்கினார்.

லக்கன் ஷா யாரிடம் வந்துள்ளார் என வினவியபோது, அவர் உடனே, “நான் இறைவனிடம் வந்தேன்!” என்று பதிலளித்தார். பாபா, லக்கன் ஷாவின் கால்களை மிகவும் மென்மையாக வருட முயன்றபோது, அந்த மஸ்த் மெதுவாக முணுமுணுத்தார், “குருநாதரே, இதைச் செய்யாதீர்கள் என்று பிரார்த்தனை செய்கிறேன்” என்றார்.

முஹமது மஸ்த் அதே வீட்டில் ஒரு தனி அறையில் தங்கியிருந்தார். புதிதாக வந்த மஸ்துகளைப் பார்க்க முஹமது மஸ்தை அழைத்து வந்ததும், ”இதைச் செய்யுங்கள்!... தாதா (பாபா) நீங்கள் இதைச் செய்வதை விரும்புகிறார்” என்று அவர்களிடம் கூறினார்.

மெஹர் பாபா ஒருமுறை மஸ்துகளுடனான அவரது பணிகளைக் குறித்து விளக்கினார்:

**எனக்கே உரித்தான வழியில், கடவுளை நேசிக்கும் இவர்களை நான் நேசிக்கிறேன்! அவர்களுக்கு உலக உணர்வு இல்லை; ஆனந்தமான நிலையில் இருப்பவர்கள். உலக உணர்வு இல்லாததால் அவர்கள் உடல் ரீதியான ஆசைகளில் அலட்சியமாக இருக்கிறார்கள். அவர்களிடம் இறை அன்பு ஒன்றுதான் உள்ளது!**

**உலகைப் பாருங்கள், இது மாயாவை நேசிக்கிறது, மாயாவுக்காகக் கண்ணீர் சிந்துகிறது மேலும் மாயாவிடம் கெஞ்சுகிறது! உலகம், காமம், கோபம், பேராசை ஆகியவற்றில் ஒன்றோடு ஒன்றாகப் பிணைந்துள்ளது. ஆனால் இவர்கள் துணிச்சலான வீரர்கள், மாயாவை உதைத்துத் தள்ளி, அன்பின் இறைவனுக்காக மட்டுமே வாழ்கிறார்கள்.**

பாபாவுடன் இருந்த பெண்மணிகளை, தாரகார் மலைக்கு (TARAGARH HILL) அழைத்துச் செல்வதாகக் குறிப்பிட்டிருந்தார்; ஆனால் பின்னர், “**அங்குச் செல்வது ஒரு தலைவலி. நான்னிக்கு** (குழுவில் மிக்க வயதானவர்) **ஒரு பல்லக்கு தேவைப்படும், ஏனெனில் அவரால் செங்குத்தான மலையில் ஏற முடியாது. செலவு தவிர, அனைவருக்கும் கடினமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்**” என்று கூறினார்.

இதற்கிடையில், ரானோ, கிட்டி இருவரும் தங்களிடையே இதைப்பற்றிப் பேசி, பின்பு பாபாவை அணுகினர்; தாரகாருக்குச் செல்வதற்கான யோசனையைக் கைவிடுமாறு பரிந்துரைத்தனர். பாபா, அவர்களுக்காக இவ்வளவு சிரமங்களையும் தாங்கி, செலவுகளையும் செய்ய வேண்டிய தேவையில்லை என்றும், அவர்கள் கோட்டைக்குச் செல்வதைத் தவறவிட்டால் பரவாயில்லை என்றும் விளக்கினர். பாபா உடனடியாக அவர்களைக் கண்டித்தார், "**நான் உங்களுக்காக இதைச் செய்கிறேன் என்று நீங்கள் நினைத்தால், அது தவறு. எனது பணிக்கு முதலிடம்; அதற்குப் பிறகுதான் நீங்கள். எனது பணி சம்பந்தப்பட்ட செலவுகளைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை! எனது பணியைப் பொறுத்தவரை பணம், நீங்கள், இதர அனைத்தும் இரண்டாம் பட்சம்தான்.**" ரானோவும் கிட்டியும் இதை நன்றாகப் புரிந்திருந்தாலும், வெட்கத்தில் பின்வாங்கி பாபாவின் வார்த்தைகளின் உண்மையை உணர்ந்து கொண்டனர்.

1939 பிப்ரவரி 16 அன்று, குஸ்தாஜி, சாஞ்சி, காக்கா, ஆதி சீனியர், எரச் ஆகியோருடன் மெஹர் பாபா, தாரகார் மலைக்குச் சென்றார், மேலும் 'இரண்டரை நாள் குடிசை' என்றழைக்கப்படும் புகழ்பெற்ற மசூதியையும் பார்வையிட்டார். அன்று பொழுது சாயும் வேளையில், அவர்களின் பங்களாவில் ஒரு மணி நேரம் கவாலி இசை நிகழ்ச்சி நடைபெற்றது. பாபா, பாடகர் அஸீம் கவாலைப் (AZEEM QAWAAL) பெரிதும் விரும்பினார். பாபா, இரண்டு நாட்களுக்குப் பிறகு பெண்மணிகளை தாரகாருக்கு அழைத்துச் சென்றார், அங்கு அவர் பல விரும்பத்தக்க காட்சிகளை அவர்களுக்குக் காண்பித்தார்; ஒரிரவு அங்கே தங்கினார். (பாபா ஆண் மண்டலியுடனும், பெண்கள் அருகிலுள்ள பயணிகள் விடுதியிலும் தங்கினர்.)

அனா ஸாகர் ஏரி (ANA SAGAR LAKE), புஷ்கர் ஏரி (PUSHKAR LAKE), லக்ஷ்மியின் இந்து கோயில் (THE HINDU TEMPLE OF LAXMI), ஒரு சமண கோயில் (A JAIN TEMPLE), ஹஸ்ரத் மீரான் ஸையத் ஹுஸைனின் கல்லறை (THE TOMB OF HAZRAT MIRAN SYED HUSSAIN), கிஸ்தியின் கல்லறை (CHISHTI'S TOMB) உள்ளிட்ட பல இடங்களுக்கு பாபா, பெண்மணிகளுடன் விஜயம் செய்தார். கிஸ்தியின் கல்லறையின் பராமரிப்பாளர் மேற்கத்திய பெண்கள், சன்னதிக்குள் நுழைவதை ஆட்சேபித்து அவர்களைத் தடுத்தார். இருப்பினும், அவர் பாபாவால் வெகுவாக ஈர்க்கப்பட்டு, "கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக" என்று கூறி, பாபாவிடம் அவரது பெயரைக் கேட்டார், பாபா தனது விரலால் தூசியில் எழுதினார்: "**மேர்வான்.**"

புறப்படுவதற்கு முன்பு, பாபா சன்னதிக்கு அருகில் இருந்த ஒரு மஸ்தைத் தொடர்பு கொண்டு, ஒரு ரூபாய் நாணயத்தைக் கொடுத்த போது, பாபாவைப் பார்த்த மஸ்த், "ஓ இங்கே பாருங்கள், சங்கரா (சிவன்) இங்கே இருக்கிறார்! சீக்கிரம் வாருங்கள், பகவானின் தரிசனத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்!" என்றார்.

அருகிலேயே இந்து துறவி ஒருவரின் கல்லறையும் இருந்தது; எலிஸபெத், பாபாவிடம் இரண்டு பெரிய புனிதர்களின் கல்லறைகள் ஏன் ஒன்றுக்கொன்று நெருக்கமாக இருந்தன என வினவினார். பாபா இவ்வாறு

விளக்கினார், "பல வருடங்களுக்கு முன்பு, பெரும்பாலும் ஒரு முஹமதிய **துறவி வாழும் இடத்தில் ஓர் இந்து துறவியும் அமர்ந்து கொள்வது வழக்கமாக இருந்தது; அல்லது நேர்மாறாக, ஏனெனில் இது அனைத்து முஹமதியர்களையும் இந்துக்களையும் ஒன்றாக இணைக்கும் - அவர்கள் அனைவரும் ஒன்றே என்பதைக் காட்டும் ஒரு வழி.**"

பிப்ரவரி 18ஆம் நாள், தாரகாரில் இருந்தபோது, வெவ்வேறு ஆலயங்கள், கல்லறைகள் அல்லது புனிதர்கள் மற்றும் சத்குருக்களின் தர்காக்களுக்கு அவர் விஜயம் செய்ததன் நோக்கத்தைப் பற்றி குறிப்பிடுகையில், பாபா இவ்வாறு கூறினார்:

**இப்போது நான் இங்கு இருப்பதன் மூலம், உயிரைத் துறந்த சாதுக்கள் மற்றும் சத்குருக்களின் ஆலயங்களின் சிக்கலான சூழ்நிலையை நான் தூய்மைப்படுத்துகிறேன். இந்த இக்கட்டான சூழ்நிலை, சிந்தனை உலகைச் சார்ந்துள்ளது.**

**சிந்தனை சக்தி உண்மையில் மிக்க வலுவானதும், சக்தி வாய்ந்ததும் ஆகும். 'சைத்தன்ய பிரபு', புனித யாத்திரையின் நிமித்தம் யாத்திரை செல்வதில்லை, ஆனால் உலக மக்களின் ஆழ்மனப்படிவங்கள் நிறைந்த சூழ்நிலையை சுத்திகரிப்பதன் மூலம் மக்கள் நற்பயனை அடைவார்கள்.**

**எனது பணிக்கு, இறைநிலையை அடைந்து, ஏழாவது ஆன்மீக தளத்தில் உயிரைத் துறந்த ஒரு சாதுவின் சமாதியை விட மூன்றாவது ஆன்மீக தளத்தில் வாழும் ஒரு யாத்ரீகர் மிக்க உதவியாக இருக்கிறார்; ஆனால் ஒரு பிரபலமான சாது அல்லது சத்குருவின் சமாதிக்குப் பெருந்திரளாக மக்கள் வருவதால், அது நல்ல விளைபயனைக் கொண்டிருக்கலாம். அதனால்தான் நான் இதுபோன்ற இடங்களுக்குச் செல்வதன் மூலம் இந்த சிக்கலான சிந்தனை மனப்படிவங்களின் வலுவை இழக்கச் செய்கிறேன்.**

பாபா குழுவுடன் கிஸ்தியின் சமாதியை விட்டு வெளியேறும் வேளையில், அவர் மன்ஸாரி பக்கம் திரும்பிக் குறிப்பிட்டார்: "**ஒரு துறவி ஒருமுறை கூறினார், 'தெய்வீக அழகின் உணர்வை, தெய்வீக ஒளிரும் பார்வையை என் இதயத்தில் பார்த்தபோது, நான் எங்கும் எதிலும் அளவிறுதியற்ற இறைவனைப்** (PARVARDIGAR - **பர்வர்திகார்) பார்த்தேன்.**'"

'பாபாவே அந்தத் துறவியா' என்று மன்ஸாரி கேட்டதற்கு, பாபா "**ஆம்**" எனத் தலையசைத்தார்; "**ஆமாம் அவரேதான், ஏனெனில் அவர் அந்தக் கவிநயமிக்க வரிகளைத் தன்னிச்சையாக எடுத்துரைத்தார், ஏனெனில் அவரே அவரது காலகட்டத்தின் அவதார புருஷர், ஐந்து சத்குருக்களின் தலைவர் (குதுப்-இ-இர்ஷாத்).**"

பாபா இதற்கு முன்னர் இரண்டு முறை (1922 மற்றும் 1935இல்) கிஸ்தியின் சமாதிக்கு விஜயம் செய்தார், மேலும் அவர் இப்போது அஜ்மீரில் இருந்தபோது பலமுறை அங்குச் சென்றார். எரச் விவரித்தபடி, ஒரு நாள் இரவு

பாபா, கிஸ்தியின் சமாதிக்குச் சென்றபோது, தனியாக நின்று, ஆயிரம் முறை சத்குருவின் சமாதியில் தலை குனிந்து வணங்கினார்.


பிப்ரவரி **19** அன்று கராச்சியிலிருந்து வந்த மினூ கராஸ், பாபாவுடனான நீண்ட கலந்துரையாடலுக்குப் பின்பு திரும்பிச் சென்றார். அந்த நாளில், பாபா மூன்று மஸ்துகளையும் (சாக்ரடீஸ், லக்கன் ஷா, முஹமது) மண்டலியின் பங்களாவில் நீராட்டினார், மேலும் காக்கா, ஆதி சீனியர் இருவரும் சாச்சாவையும் அங்கே அழைத்து வர முடிந்தது. பாபா, சாச்சாவின் பாதங்களைக் கழுவி அவருக்கு உணவளித்தார். ஆனால் அடுத்த நாள், சாச்சா மண்டலியின் பங்களாவிற்கு வந்தபோது குதிரை வண்டியிலிருந்து வெளியே வர மறுத்துவிட்டார்; அன்று பாபா அவரது தலைமுடியை சீர்செய்து நீராட்ட விருப்பம் தெரிவித்தார். அதற்கு பதிலாக, பாபா அவரை, பெண்மணிகள் பங்களாவிற்கு அழைத்துச் சென்று அங்கு அவருக்கு உணவூட்டினார். **23**ஆம் நாள், சாச்சாவை அழைத்து வந்தபோது, எவ்வளவோ முயன்றும் குதிரை வண்டியிலிருந்து அவரை கீழே இறங்க வைக்க முடியாமலாயிற்று!

பிப்ரவரி **21** அன்று, ஆதி சீனியர், குஸ்தாஜி ஆகியோருடன் பாபா, உள்ளூர் மதுபான தொழிற்சாலையில் பணிபுரிந்த சாச்சாவின் ஒன்றுவிட்ட சகோதரரின் வீட்டிற்குச் சென்றார். அந்த மனிதனுக்கு, பத்து குழந்தைகள், மிகக் குறைந்த சம்பளம் - பாபா அவரது சிரமங்களுக்கு அனுதாபம் தெரிவித்து அவரை ஆசீர்வதித்தார்.

அடுத்த பயணமாக போபால் (BOPAL) நகரில் குழு தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய, பிப்ரவரி **23**ஆம் நாள் மாலையில் எரச் போபால் நகருக்குப் புறப்பட்டார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, மெஹர் பாபா, லக்கன் ஷா, சாக்ரடீஸ் இருவரையும் காக்காவுடன் அஜ்மீரில் தத்தமது இடங்களுக்குத் திருப்பி அனுப்பினார்; இருவரும் பாபாவை விட்டுச்செல்ல விரும்பவில்லை என்று காக்கா தெரிவித்தார்.

**1939**, பிப்ரவரி **27**ஆம் நாள் காலையில் பாபா, பெண்மணிகளுடன், கொட்டும் மழையில், அஜ்மீரிலிருந்து நீலப்பேருந்தில் ஜெய்ப்பூருக்குப் புறப்பட்டு, மூன்று மணி நேரத்தில் சென்று சேர்ந்தனர். ஜெய்ப்பூரில், ஆதி சீனியர் முன்கூட்டியே ஏற்பாடு செய்த புதிய ஹோட்டலில் அவர்கள் தங்கினர். பாபா, பெண்களை ஹவா மஹால் (HAWA MAHAL), அம்பர் மஹால் (AMBER MAHAL), ஜெய் மந்திர் (JAI MANDIR), திலாராம் கார்டன் (DILARAM GARDEN), மோகன் கார்டன் (MOHAN GARDEN), மற்றும் பிரதான அரண்மனை சந்திர மஹால் (CHANDRA MAHAL) என அழைக்கப்படும் சுல்தான் மஹால்கள் (அரண்மனைகள்), அதற்குப் பிறகு பொது தோட்டங்களில் உள்ள மிருகக்காட்சிசாலையையும் பார்வையிட அழைத்துச் சென்றார்.



மேலே:தாரகார் மலை
(TOP: TARAGARH HILL)
நடுவே: புஷ்கர் ஏரி
(MIDDLE: PUSHKAR LAKE)
கீழே: அஜ்மீர்
(BOTTOM: AJMER)



எலிஸபெத்தின்
கோட்டுடன் - பூந்தி
ஏரி **- 1** மார்ச் **1939**
(WEARING ELEZABET’S
COAT, BUNDI LAKE, 1
MARCH 1939)

மெஹர் பாபாவும் அவரது குழுவும் நகரத்தில் தங்கியிருந்தபோது இந்தியாவின் பிரிட்டிஷ் வைஸ்ராய் ஜெய்ப்பூருக்கு அதிகாரபூர்வமான விஜயம் மேற்கொண்டார். காலம் இதை முரண்பாட்டு சிந்தனையில் முறையிட்டது, “பிரிட்டிஷ் வைஸ்ராயை முழு நகரமும் மிகப்பெரிய விழாக்கோலத்துடன் வரவேற்றது - உண்மையான சக்கரவர்த்தி ஒரு தனிச்சிறப்பற்ற, சாதாரண ஹோட்டலில் தங்கியிருந்தது, அவரது மஸ்துகளுக்கு மட்டுமே தெரியும்! இறை சக்கரவர்த்தியான அவர் தன்னை மறைத்து வைத்து, அவரைக் கண்டுகொள்வதைக் கடினமாக்கும் என்ன ஒரு திருவிளையாடலை அரங்கேற்றுகிறார் பாருங்கள்! தூய அன்பினால் மட்டுமே அவரை வரவேற்க முடியும்; அதை அடையப்பெற்றவர்கள் மட்டுமே தன்னை அணுக அவர் அனுமதிக்கிறார். மஸ்தாகிய வீரர்களும், மேம்பட்ட ஆத்மாக்களும், அவர்களின் அன்பின் வழியாக, சக்கரவர்த்தியை சூழ்ந்து கொள்கிறார்கள்!

1939, மார்ச் 1ஆம் நாள் காலையில், மெஹர் பாபா ஜெய்ப்பூரிலிருந்து புறப்பட்டு, உஜ்ஜைன் (UJJAIN) நகருக்கு அடுத்த நாள் மதிய வேளையில் வந்து சேர்ந்த போது, ஆதி சீனியர், குல்மாய், சாஞ்சி, ஜெனு ஆகியோர் அவர்களை சந்தித்தனர் (வழக்கம் போல முன்னதாகவே ரயிலில் பயணம் செய்தனர்). பாபாவின் அறிவுறுத்தலின்படி, காக்கா அங்கேயே நீராடி, அனைவரும் தேநீர் அருந்திய பிறகு, பாபா குழுவை ‘மஹா காளி’ கோவிலுக்கு அழைத்துச் சென்றார். உஜ்ஜைனில் ஒரு குறிப்பிட்ட மஸ்தைத் தொடர்பு கொள்ள பாபா விரும்பினார். நெரிசலான பஜாரின் குறுகிய பாதைகள் வழியாக அவர்கள் மெதுவாக ஓட்டிச் சென்றபோது, பாபா ஆர்வத்துடன் வெளியே உற்றுநோக்கிக் கொண்டிருந்தார்.

அத்தகைய மனிதர் கண்களில் தென்படவில்லை, எனவே பாபா ஜன்னலைத் திறந்து (பேருந்துடன் நடந்து சென்று கொண்டிருந்த) காக்காவிடம் சைகையால் தெரிவித்தார், **‘அவர்கள் தேடும் நபர் தனது கைகளால் எதையோ செய்கிறார்’** என்று கூறியதும் திடீரென, கந்தல் துணிளைத் தாறுமாறாகக் கிழித்துக் கொண்டிருந்த பிச்சைக்காரத் தோற்றத்தில் இருந்த ஒருவனின் அருகே பேருந்தை நிறுத்துமாறு பாபா கூறினார். அந்த மனிதனுக்கு ஒரு ரூபாய் நாணயத்தைக் கொடுக்க பாபா, காக்காவிடம் சைகையால் தெரிவித்தார், சிறிது நேரம் அந்த மஸ்த் பாபாவையே நேரடியாக உற்று நோக்கிக் கொண்டிருந்தார். பாபாவும் மகிழ்ச்சியாக, திருப்தியடைந்தவர் போலத் தோன்றினார்; காக்காவை பேருந்தில் ஏறச் சொல்லி, அனைவரும் உடனடியாக உஜ்ஜைனை விட்டு வெளியேறினர்.

அன்று மாலை ஐந்து மணியளவில் தேவாஸ் (DEWAS) வந்தடைந்து, பயணிகள் விடுதியில் தங்கினர். 1939, மார்ச் 3ஆம் நாள், அடுத்த பத்து நாட்களுக்கு, அவர்கள் தங்கயிருந்த ரூபி ஹோட்டலுக்கு (RUBY HOTEL) வந்தனர். மெஹர் பாபாவின் பயணம் குறித்த சரியான தகவல்கள் மெஹராபாத் மண்டலியில் எவருக்கும் தெரியாது. அஞ்சல் மற்றும் தொலைத்தந்திகளை எங்கு அனுப்புவது

என்பதைத் தெரிவிக்க, பெண்டுவிற்கு அவ்வப்போது தொலைத்தந்தி அனுப்பப்படும். போபாலுக்கு அவர்கள் வந்ததும், சகன் தினமும் 'இடர்ஸி' (ITARSI) என்ற இடத்திற்குப் (தெற்கு நோக்கி 77 கி. மீ) பயணம் செய்து, பெறப்பட்ட கடிதங்களையும் தொலைத்தந்திகளையும் சேகரித்து, அனுப்ப வேண்டியதை அனுப்பினார் (ஒருவேளை, குழப்பம் விளைவிக்கும் விதத்தில், பாபா இருக்கும் சரியான இடத்தைக் குறித்து அறியாமலிருக்க), மற்றும் பாபா, மெஹராபாத்தில் வாழும் எவரையேனும் சந்திக்க விரும்பும் போதெல்லாம், சம்பந்தப்பட்ட அந்த நபருக்குத் தொலைதந்தி அல்லது கடிதங்கள் மூலமாகத் தெரியப்படுத்தி இடர்ஸி நகருக்கு அழைக்கப்பட்டார்.

போபால் நகரில் பல மஸ்துகள் மற்றும் சிறுவர்களை, பாபா தொடர்பு கொண்டார். மார்ச் 4 அன்று, நான்கு மஸ்துகள் அவரிடம் கொண்டு வரப்பட்டனர். பாபா அளவிலா மகிழ்ச்சியில் அவர்களை நீராட்டி, உணவூட்டினார். பப்பா ஜெஸவாலா 5ஆம் நாள் திடீரென வந்து, பாபாவுடன் அவரது குடும்ப வாழ்க்கை ஏற்பாடுகள் குறித்து விவாதித்தார்.

போபால் நகரில், மெஹர் பாபா அதன் அழகிய ஏரியான மோதி மஸ்ஜித் (MOTI MASJID), ஜும்மா மஸ்ஜித் (JUMMA MASJID), நவாபின் அரண்மனை (THE PALACE OF THE NAWAB) போன்றவற்றைப் பார்க்கப் பெண்மணிகளை அழைத்துச் சென்றார். மார்ச் 6ஆம் நாள் அனைவரும் 'ஸாஞ்சி' (SANCHI) நகருக்கு விஜயம் செய்தனர்; பாபா பெண் மண்டலிக்கு, பெரிய ஸ்தூபியைக் காட்டி விளக்கினார்: "**புத்தர் இங்கு ஒருபோதும் வாழ்ந்ததில்லை. அவருடைய அஸ்தி ஆயிரக்கணக்கான இடங்களில் வைக்கப்பட்டுள்ளது, இது அவற்றில் ஒன்று. பின்னர் அவருடைய சீடர்கள் இங்கு வாழ்ந்து, தியானம் செய்து, உயிர் துறந்தவர்கள் இங்கு அடக்கம் செய்யப்பட்டனர். ஆனால் புத்தரின் உண்மையான இடம் 'ஸாரநாத்'.** "

அதே நாளில் பெஷவார் (PESHAWAR) நகரிலிருந்து பட்டான் (PATHAN) பிரதிநிதிகள் பாபாவை சந்தித்ததில் மகிழ்ச்சி அடைந்தனர். மார்ச் 6ஆம் நாள், இந்தியாவின் அரசியல் நிலைமையைக் குறிப்பிட்டு, மெஹர் பாபா "**துஷ்டர்கள் அனைவரும் அழிக்கப்படுவார்கள், நிலைமை எல்லாம் சீராகிவிடும்**" என்றார்.

போபாலில் இருந்த வேளையில் ஹெலன் டாம் (HELEN DAHM) பெருங்குடல் பாதிப்பால் அவதிப்பட்டு மார்ச் 8 அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு உதவியாக இருக்குமாறு ஐரீனுக்கு அறிவுறுத்தப்பட்டது. பாபா அவர்களை கவனித்துக் கொண்டாலும் அவரது உடல்நிலையும் சீராக இல்லை; வயிற்றுக் கோளாறால் அவதிப்பட்டு அடிக்கடி கழிவறை செல்லவேண்டிய நிலை; உடல் ஜுரமும் அவரைத் தாக்கியது.

மணியும் உடல் நலம் குன்றி இருந்ததால், பாபா, கேட்டியிடம் தினமும் பிற்பகல் மூன்று மணிக்கு ஆரஞ்சு பழரசம் வழங்குமாறு அறிவுறுத்தினார்.

ஒருமுறை கேட்டி 3:05 மணிக்கு, பழரசத்தை எடுத்துச் சென்றார், நிச்சயமாக, பாபா அவரது மெத்தனத்தை கவனித்து, "**நீங்கள் ஏன் ஐந்து நிமிடங்கள் தாமதமாக வருகிறீர்கள்?**" ஆரஞ்சு ரசம் தயார் செய்ய அதிக நேரம் பிடித்தது என்று கேட்டி பதிலளித்தார். பாபா, கேட்டியைக் கண்டித்து, "**எனது கட்டளையைப் பின்பற்றுவதில் தாமதம் ஏற்பட்டதால், மணியுடனான எனது பணியும், நான் செய்ய முயற்சித்த அனைத்தும் வீணாகிவிட்டன. வேறு விஷயங்களில் தாமதத்திற்கு உரிய காரணங்கள் இருக்கலாம், ஆனால் கீழ்ப்படிதலில் இது ஒரு துரதிர்ஷ்டவசமான சோக நாடகம்!**" என்றார்.

அந்த நேரத்தில் போர் உருவாகிவிட்டதாக வதந்திகள் பரப்பப்பட்டன. தற்போதைய உலக நிலைமையைப் பற்றி சில நபர்கள் விவாதிப்பதைக் கேட்டு, போபால் நகரில் மஸ்த் ஒருவர், பாபா வீதியில் நடந்து சென்ற போது அவரைச் சுட்டிக்காட்டி, "அவர் இந்தப் பொய்ப்பிரச்சாரம் செய்பவர்களை வேரோடு அகற்றி, அனைத்தையும் சரி செய்வார்" என்று மீண்டும் மீண்டும் கூறினார்.

இந்திய குழுவோடு இருக்க விரும்பிய இங்கிலாந்தில் வாழும் டிலியாவின் கடிதத்திற்கு பதிலளிக்கும் விதத்தில், பாபா இந்த வரிகளை மார்ச் 5ஆம் நாள் எழுதினார்:

**. . . நீங்கள் என்னுடன் இங்கே இருப்பதை நான் விரும்புகிறேன், ஆனால் நீங்கள் உண்மையில் கூறுவது போல, குருநாதரின் சகவாசத்தில் இல்லாமல் வாழ்ந்து, கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் பல உள்ளன. நீங்கள் எங்கிருந்தாலும் நான் உங்களுக்கு வேண்டிய பாடங்களைக் கற்றுத்தருகிறேன்.**

**எனது பரிபூரண உணர்வு நிலையில் நானே என்னைக் கட்டுப்படுத்துகிறேன். அதுபோல் எனது வட்டத்து உறுப்பினர்களின் உணர்வு நிலையிலும், நான் வரம்புகளை நிர்ணயிக்கிறேன். எனக்கே உரித்தான நேரத்தில் நான் அவர்களை அந்த வரம்புகளிலிருந்து விடுவிக்கிறேன். அதுவரை மகிழ்ச்சியாகவும், மனநிறைவுடனும் இருங்கள், இது அனைத்தும் எனது செயலாகும். நான் முகத்திரையை விலக்கும்போது, நீங்கள் அனைத்தையும் புரிந்துகொண்டு எனது திருவிளையாடலைப் பார்த்து சிரிப்பீர்கள். இது அனைத்தும் மாயை - நேற்றைய வலி இன்று இல்லை, ஒரு வாரத்திற்கு முன்னர் இருந்த மகிழ்ச்சியும் இன்று இல்லை; நிகழ்காலம் மட்டுமே உள்ளது, உங்கள் அன்பிற்குரியவருக்கான உங்களின் அன்பின் உணர்வும் உள்ளது.**

**தனிமனிதன் தான் கடவுளெனும் உணர்வற்ற நிலையிலிருந்து, கடவுள் உணர்வை அடைவதற்கும், கடவுளோடு ஐக்கியமாவதற்கும், அன்பரையும் அன்பிற்குரியவரையும் ஒன்றிணையச் செய்வதற்கும் இந்த வெளிப்படையான எதிரெதிர் இரட்டைத்தன்மையின் செயல்முறை வழியாகச் செல்ல வேண்டியது அவசியம்.**

**நீங்கள் முயற்சியை மேற்கொள்ளுங்கள், நான் உங்களுக்கு வெற்றியை வழங்குவேன். இது ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடனான தெய்வீக போராட்டம்; அதற்கு எதிராகப் போராட வேண்டாம்.**

1939, மார்ச் 7 அன்று மெஹர் பாபா தனது பயணத்தின் நோக்கம் குறித்து வில், மேரி பேக்கெட்டிற்கு எழுதினார்:

**இது சுற்றுலா பயணமாக மட்டுமல்லாமல், ஆன்மீகப் பணியை முக்கிய நோக்கமாகக் கொண்டது. நான் பேசுவதற்கும், எனது வெளிப்பாட்டிற்கும் முன்பு, தனிப்பட்ட முறையில் சில சாதுக்கள் மற்றும் முகவர்களைத் தொடர்புகொள்ள வேண்டியது அவசியம். ஒவ்வொரு நாளும் மிகப் பெரிய ஆன்மீக எழுச்சி நெருங்கி அருகில் வருவதோடு 'ஆத்மாவின் விழிப்புணர்விற்கு' முன்னதாக கொடூரமான இடர்பாடுகளும் ஏற்படுவது திண்ணம். இது நிகழும் முன்னர், என்னைப் பார்த்து, அறிந்த நீங்கள், எஞ்சிய மனிதகுலத்திலிருந்து வேறு வழியில் பாதிக்கப்படுவீர்கள்.**

**உங்கள் துன்பம் உங்கள் அன்பிற்குரியவருடன் சேர்ந்தே இருக்கும் - இது இப்படித்தான் இருக்க வேண்டும் என்று புரிந்து, அறிந்து கொள்ளும் தன்மையிலிருந்து அமைதியும், மகிழ்ச்சியும் பிறக்கும்; மேலும் இப்போதைய உலகத்துடன் ஒருபோதும் இருக்க முடியாது என்பதும் தெளிவாகும். இது, எனது செய்தியைப் பரப்புவதற்கான உங்களின் ஆசீர்வதிக்கப்பட்ட வாய்ப்பாகும்.**

**பிரிவினையின் இந்தத் தாங்கொணா கொலை வலிதான், அதன் தீவிர உச்சத்தில் காதலாக உருவெடுத்து, நீண்ட நெடிய காலமாக அனுபவிக்க ஏங்கும் உணர்வுபூர்வமான ஐக்கியத்தைத் தருகிறது. எனவே இது எல்லாமே பயனுள்ளது மட்டுமின்றி, ஒரு குறிக்கோளைக் கருத்தில் கொண்டது. அனுபவம், அனைவருக்கும் வேண்டும் - கொலை செய்யப்படும் மற்றும் கொலை செய்யும் அனுபவம் - துறவி மற்றும் பாவி என்ற அனுபவம், இதில் பாவம் என்பது நல்லது எனும் அளவுகோலில் கீழ்நிலையில் இருப்பதாகும்! பிறருக்கு உதவ நீங்கள் பிறரில் என்னைக் காண வேண்டும். இதை ஒருபோதும் மறவாமல் இருப்பீர்களேயானால் புரிந்துகொள்ளும் தன்மையிலும், உதவும் நோக்கத்திலும் நீங்கள் ஒருபோதும் தோல்வியை சந்திக்க மாட்டீர்கள்.**

ஆதி சீனியர், தாயார் குல்மாய் இருவரும் மார்ச் 10ஆம் நாள் ஃபிரீனியின் தொடர்ச்சியான நிலையற்ற மன ஆரோக்கியத்தில் ருஸ்தத்திற்கு உதவ நாசிக் நகருக்கு அனுப்பப்பட்டனர்.

பீலாமாய் மறுநாள் கராச்சிக்குப் புறப்பட்டார். 1939, மார்ச் 12 மாலையில் பாபா, போபாலிலிருந்து ஸாகர் (SAGAR) நகருக்குப் பேருந்தில் பயணித்தார். ஹெலனின் உடல்நிலை இன்னும் சீராகாத நிலையில், அவரை கவனிக்க ஐரீன் சிவில் மருத்துவமனையிலே இருந்தார்.

ஸாகர் நகரில், பயணிகள் விடுதியில் அனைவரும் தங்கினர். ‘சக்ரா’ ஏரி (CHAKRA LAKE), ‘அஸ்பாதல்’ மலைப்பகுதி (ASPATAL GHAT) போன்ற இடங்களுக்கு பாபா, பெண்மணிகளை அழைத்துச் சென்றார். அடுத்த நாள், பாபா மஸ்துகளைத் தேடிச் சென்று, ஒருவரைக் குதிரை வண்டியில் பங்களாவிற்கு அழைத்து வந்தார். மஸ்தின் உடல் முதலையின் தோல் போன்ற செதில்களைக் கொண்டிருந்தது; பாபா அவரை நீராட்டி, உடலைத் துடைத்து, எண்ணெயால் மஸாஜ் செய்தார். பின்னர் அவருக்கு உணவூட்டி, திருப்பி அனுப்பி வைத்தார். பாபா அவரை மகர் ஷா (MAGAR SHAH - முதலை மன்னர்) என்று அழைத்தார். பாபா, அவரை நீராட்டிய ஏழு நாட்களுக்குப் பிறகு மகர் ஷாவின் உடலில் செதில்களைப் போன்ற தோல் சீராகிவிட்டதாக மண்டலி குறிப்பிட்டனர்.

அதே நாள், மார்ச் 13, பிற்பகல் இரண்டு மணிக்கு, மெஹர் பாபா அனைவருடனும் ஸாகரிலிருந்து ஜபல்பூர் வந்தடைந்து, ஜால் கேரவாலா ஏற்பாடு செய்திருந்த பங்களா ஒன்றில் பாபாவும் பெண்களும் தங்கினர், ஆண் மண்டலி அருகிலமைந்த மற்றொரு வீட்டிற்குச் சென்றனர். மெஹர் பாபா மீண்டும் ஜபல்பூர் நகரில் கால் பதித்ததும் முதல் வேலையாக, அவர் தன்னை மஸ்தைத் தேடுவதில் ஈடுபடுத்திக் கொண்டார்; அவர்களைத் தொடர்புகொள்ள நகரத்திற்குள் நுழைந்தார். வழக்கம் போல, மண்டலியின் பங்களாவிற்கு அழைத்து வரப்பட்டவர்களை நீராட்டி, அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் பாபாவின் பெரும்பாலான நேரத்தை மஸ்துகளுடன் செலவிட்டார்.

பாபா, ஜபல்பூருக்குத் திரும்பி வந்ததும், நாக்பூரிலிருந்து ஜெஸவாலா குடும்பத்தினரை (கெய்மாய், மனு, மெஹரு, மெஹர்வான் ஆகியோரை) அழைத்து வர எரச் புறப்பட்டுச் சென்றார்.

அவர்கள் மார்ச் 19ஆம் நாள் பாபாவுடன் வந்திணைந்தனர்; அனைவருக்கும் சமையல் செய்யும் கடமை கேட்டி, மனு இருவருக்கும் வழங்கப்பட்டது.

இதர பெண்மணிகளுடன் சுற்றுப்பயணத்தில் பாபா, ருஸ்தத்தின் மனைவியையும் அழைத்துச் செல்லாத வருத்தத்தில், ஃபிரீனி உண்ணாவிரதம் இருந்ததாக இந்த நேரத்தில் நாசிக்கிலிருந்து தகவல் வந்தது. ஃபிரீனி உண்ணவும், அருந்தவும் செய்யாமல், பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்படும் வரை உண்ணாவிரதம் இருந்து உயிரைத் துறக்கப்போவதாகத் தெரிவித்தார். ஆகவே, பாபா தனது முக்கியமான மஸ்த் பணியை விட்டுவிட்டு, வெப்பமான கோடை காலநிலையில் ஜபல்பூரிலிருந்து நாசிக் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இது பாபாவை மிகவும் வருந்தச் செய்தது. மார்ச் 15 அன்று, “**இயேசு ஒரு முறை சிலுவையில் அறையப்பட்டார், ஆனால் நான் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரமும் சிலுவையில் அறையப்படுகிறேன்!**” என்றார்.

ஒரு வாரம் மும்பைக்குப் போவதாக மெஹர் பாபா சொன்னபோது முஹமது மஸ்த் உண்மையில் அழுதார். அவரது கன்னங்களில் கண்ணீர்

வழிய, மஸ்த், "தாதா, நீங்கள் இல்லாமல் இவ்வளவு நாட்கள் நான் எப்படி வாழ்வேன்?" இது மிகவும் மனதை நெகிழவைக்கும் காட்சியாக இருந்தது, பாபாவும் மிகவும் சோகமாக உணர்ந்தார், முஹமதுக்கு ஓர் இதமான, நீண்ட அரவணைப்பை அளித்தார், இது முஹமதுக்கு, தனது பிரியமானவரின் பிரிவை சகித்துக்கொள்ளும் வலிமையை அளித்தது என்பதில் சந்தேகமில்லை.

1939, மார்ச் 19 அன்று மெஹர் பாபா, குஸ்தாஜி, காக்கா, சாஞ்சி மற்றும் இரண்டு சிறுவர்களுடன் ஜபல்பூரிலிருந்து ரயிலில் புறப்பட்டார். மறுநாள் அதிகாலை நாசிக் வந்து ருஸ்தத்தை சந்தித்தார். ஃபிரீனி தனது பதினெட்டு நாள் உண்ணாவிரதத்தால் (தண்ணீர் இல்லாமல் பத்து நாட்கள்) மோசமடைந்த நிலையில் இருப்பதைக் கண்ட பாபா, அவரை சமாதானப்படுத்தி, நிலைமையை அன்பாக விளக்கினார். அவரது மனக் கொந்தளிப்பு காரணமாக, ஜங்கூ (JANGOO) என்ற ஆண் குழந்தையை சரியாக கவனிக்கவில்லை. பாபா குழந்தையை சிறிது பால் அருந்தச் செய்தார், அதை, பாபா தனது கைகளால் கொடுத்ததைக் கண்ட ஃபிரீனியின் மனம் அமைதியடைந்து, நிலைமை தற்காலிகமாக சீரானது. குணமடைந்ததும் அவரை மீண்டும் அழைப்பதாக பாபா உறுதியளித்தார். அப்போது, பாபாவிற்கு மட்டுமே தெரிந்த ஓர் இடத்திற்கு ருஸ்தத்தை அனுப்பிவைக்கத் தீர்மானிக்கப்பட்டது. ராம்ஜூ குடும்பத்தினரையும் சந்தித்தப் பிறகு, பாபா நாசிக் நகரிலிருந்து ஆதி சீனியருடன் எலிஸபெத்தின் காரில் மெஹராபாத்திற்குப் புறப்பட்டார்; அங்கு பைதூல், காளேமாமா, டாக்டர் நீலு, பாதிரி, பெண்டு, சிது, விஷ்ணு ஆகியோரை சந்தித்து, தனது சமீபத்திய சுற்றுப்பயணத்தைப் பற்றி அவர்களிடம் கூறினார், மேலும் மூன்று நாட்கள் தங்கிய பின்பு, பூனா சென்று மெமோ, பெஹராம், பெரின் மற்றும் குழந்தைகளைப் பார்த்தார்.

பாபா, மெமோவின் சகோதரி டவ்லா மாசியை வீட்டிற்கு அழைக்குமாறு தாயாரிடம் கூறியிருந்தார். அவர் வந்ததும் பாபாவை மீண்டும் மீண்டும் தழுவி முத்தமிட்டார்.

பாபா அவரை ஆசீர்வதித்தது பிரியமான டவ்லா மாசிக்கு ஒரு பிரியாவிடையாக இருந்தது; அவர் பாபாவைப் பார்த்தது இதுவே கடைசி முறை; ஒரே வருடத்தில் அவர் காலமானார்.

அதற்குப் பிறகு, பாபா ஆதியுடன் மும்பைக்குப் பயணத்தைத் தொடர்ந்தார், தாதரில் அமைந்த நௌரோஜி தாதாசாஞ்சியின் புதிய இல்லத்தில் இரண்டு நாட்கள் தங்கியிருந்தார். அங்கு பாபா பிளீடரையும் சந்தித்தார்; பாபாவால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் கீழ், பிளீடர் மிகவும் பாதிக்கப்பட்டார். இறுதியில், அவர் மனமுடைந்து அழுதார். பாபா மகிழ்ச்சியில் அவரது உணர்ச்சியின் வெளிப்பாட்டைப் பாராட்டி, புன்னகையுடன் பிளீடர் அவருக்கு எவ்வளவு சிறப்பு மிக்கவர், முக்கியமானவர் என்பதை மீண்டும் வலியுறுத்தினார்.

அடுத்த நாள், தனது கணவர் நவலின் மரணம் குறித்து, அதீத வருத்தத்தில் ஆழ்ந்திருந்த தீனா தலாட்டியின் இல்லத்திற்கு வந்து, மெஹர்

பாபா ஆறுதல் கூறினார். இது மிகவும் இதயத்தைத் தொடும் காட்சியாக இருந்தது. அவர் நேசித்த கணவரை இழந்ததால் உலகில் அனைத்தையும் இழந்து தவிக்கும் உணர்வில், அவர் கூறியது போல வாழ்க்கை ஒரு சுமையாகிவிட்டது. அவர், தனது அன்பான கணவரிடம் அழைத்துச் செல்வதானால், வாழ்க்கையை மனப்பூர்வமாக முடிக்க விரும்பினார். ஆனால் ஒரு குருநாதரின் வழிகளும் முறைகளும் வேறு; ஒருவரை அகந்தையின் கடுமையான பிடியிலிருந்து விடுவிக்க அவரை, துன்பம் மற்றும் துயரங்கள் மூலமாக சுத்திகரிக்கிறார்.

இது தீனாவிற்கு ஒரு சுத்திகரிப்பின் செயல்முறையாக இருந்தது, வருங்கால வாழ்க்கைக்காக அவரைத் தயார் படுத்தும் ஒரு திடமான வடிவமைப்பாகத் திகழ்ந்தது. இதன் விளைவாக, இதயத்தை நெகிழச் செய்யும் எந்த அழுகையும், புலம்பலும் குருநாதரை பாதிக்கவில்லை; மாறாக, பாபா, அவர் உணர்ச்சி பொங்கி, அனுபவித்த துன்பங்கள் அனைத்திற்கும் வழி கொடுக்க, கதறி அழுமாறு தீனாவைத் தூண்டினார். ஒரு குறுகிய நேரத்திற்கு அங்கு நிலவிய சூழ்நிலையில் “பாபா!... பாபா...!” என்ற குரல் அனைவரின் இதயங்களையும் தொட்டு, கண்களைக் கண்ணீரால் நிரப்பியது.

அந்தக் காட்சியை, சாஞ்சி இவ்வாறு விவரித்தார்: “பாபா தனது முகத்தின் புன்னகை ஒளியுடன், முற்றிலும் பாதிப்பற்ற முறையில் - மாறாக, மிகவும் திறம்படச் செய்யப்படும் சிறப்பான பணியில் மகிழ்ச்சியையும், களிப்பையும் உணர்கிறார்.”

மெஹர் பாபா மார்ச் 25ஆம் தேதி மும்பையிலிருந்து ஜபல்பூருக்குத் திரும்பிச் சென்றார். அஞ்சல்களின் பெரிய குவியல் ஒன்று அவருக்காகக் காத்திருந்தது. அனைத்திலும், அலெக்ஸாண்டர் மார்க்கி (ALEXANDER MARKEY) எழுதிய கடிதத்தில், உண்மையான ஆன்மீகத்தைக் குறித்த ஒரு திரைப்படம் தயாரிக்க இந்தியாவிற்கு வருகை தருவதற்கான தனது யோசனையைத் தெரிவித்திருந்தார். பாபா இந்தத் தொலைத்தந்தியை மார்க்கிக்கு அனுப்பினார்: **“உங்கள் திட்டத்தை அங்கீகரிப்பதோடு, எனது தார்மீக ஆதரவும் ஆன்மீக உதவியையும் வழங்குகிறேன்.”** ஆனால், இதுபோன்ற பல திட்டங்களைப் போலவே, இதுவரை எந்தத் திரைப்படமும் தயாரிக்கப்படவில்லை.

1939, மார்ச் 29 அன்று குல்மாய், மாஸாஜி இருவரும் திரும்பி வந்தனர். மெமோ, ஜால்பாயுடன் மறுநாள் ஜபல்பூருக்கு வரவிருந்ததால், ஷிரீன்மாய் வருவதற்கு முன்பு, **‘மெமோவின் பொறாமை மிகுந்த தாய்வழி குணம் குறித்து, பாபா, குல்மாய்க்கு முன்னறிவிப்பாக எடுத்துரைத்து, அவரது ஆன்மீக மற்றும் உலக தாய்க்கு இடையிலான வழக்கமான மோதலைத் தவிர்க்க, தன்னால் இயன்றதைச் செய்யுமாறு’** வலியுறுத்தினார். அவர்களுடைய சண்டை சச்சரவுகள் பாபாவின் சொந்த நோக்கங்களுக்காக சிறப்பாக செயல்பட்டாலும், இந்த நேரத்தில், அவர் தனது மஸ்த் பணியில் மிகவும் ஆர்வமாக இருந்ததால், பாபா தனது அன்பர்களிடையே முழுமையான

நல்லிணக்கத்தை விரும்பினார், மேலும் சிறிய, சிரத்தையற்ற சண்டை சச்சரவுகளைக் கூட பொறுத்துக்கொள்ள மாட்டார்.

மார்ச் 30ஆம் நாள், பாதிரி, மூன்று ஊழியர்கள், துக்காராம் ஆகியோருடன் எலிஸபெத்தின் காரில் வந்தார். பாபா அனுப்பிய 'மெஹராபாத் மிருகக்காட்சிசாலை'யிலிருந்து பறவைகள் மற்றும் விலங்குகளின் கூண்டுகள் அடங்கிய இணைப்பு வண்டி ஒன்றும் காருடன் வந்தது. பாதிரி மறுநாள் ரயிலில் மெஹராபாத் திரும்பிச் சென்றார்.

1939, ஏப்ரல் 1ஆம் நாள், ஜால் கேரவாலாவின் பெரிய சகோதரர் மாரடைப்பால் காலமானதாகத் தொலைத்தந்தி வந்தது. அதை அவர் அமைதியான அணுகுமுறையுடன் தெரியப்படுத்தியதும், பாபா, அதைப் பாராட்டினார். '**இது அனைத்தும் மாயை என்றும், இதைப் பற்றி தீவிரமாக சிந்திப்பதற்கு எதுவுமில்லை என்றும்**' பாபா அவரிடம் கூறினார். பின்பு, ஜபல்பூரில் சாஞ்சிக்காக ஜால் செய்த பணியை பாபா பாராட்டினார், "**ஜால் நேர்மையும், சிறந்த, தரமான இதயமும் படைத்தவர்; இது அவரை எனக்கு மிகவும் பிரியமானவராக ஆக்குகிறது. இந்த வாழ்க்கையில் அவர் என்னை உணர்ந்து, என் உண்மையான ரூபத்தைக் காணக்கூடும்**."

மெமோவின் வருகையின் போது, பாபா, தாயாரை கவனிக்கும் கடமையை, கெய்மாய்க்குக் கொடுத்தார், "**ஷிரீன்மாயை மகிழ்ச்சியாக வைத்திருக்க உங்களால் முடிந்தவரை முயற்சி செய்யுங்கள், எப்பொழுதும் அவர் விருப்பப்படியே செய்யுங்கள்**" என்று அறிவுறுத்தினார். கெய்மாய் அவருக்கு, சிறப்பான சேவைகளைச் செய்வதில் உறுதியாக இருந்தார்.

இதற்கிடையில் மும்பையில் வாழ்ந்த கெய்மாயின் சகோதரி பானுமாசி, இரண்டு மகன்களான தாதி, ஸாம் ஆகியோருடன் பாபாவுடன் வந்து இணையவிருந்தார். மெமோ ஒரு நாள் கெய்மாயிடம், "பானு வரும்போது மும்பையிலிருந்து, எனக்காக மீன் வாங்கி வரும்படி எழுதுங்கள்" என கேட்டுக்கொண்டார்.

"ஆனால் தாயே," கெய்மாய் பதிலளித்தார், "ஆசிரமத்தில் மீன் சாப்பிடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது; இது பாபாவின் கட்டளைக்குப் புறம்பானது. மேற்கத்தியர்கள் கூட, சைவ உணவில்தான் வாழ வேண்டும்."

"இந்தக் கட்டுப்பாடு உங்களுக்கானது," மெமோ பதிலளித்தார், "எனக்காக அல்ல! பானுவிற்கு ஒரு கடிதம் எழுதுங்கள். நீங்கள் எதற்காகப் பயப்படுகிறீர்கள்? நான் உங்கள் கடவுளின் தாய் அல்லவா?"

கெய்மாய் இவ்வாறு நினைத்தார்: "ஷிரீன்மாய் சொல்வது போல, நான் செய்வதை, பாபா விரும்புகிறார், எனவே நான் அவருடைய கோரிக்கையை நிறைவேற்றுவேன்." அதற்குப் பிறகு, கெய்மாய் சகோதரிக்குக் கடிதம் எழுதினார்.

ஸவக் கொத்வால், பானுமாசி, கெய்மாயின் மற்றுமொரு சகோதரி குலாமாசி ஸட்டா ஆகியோருடன் ஏப்ரல் 6ஆம் நாள் பெண்டு

மெஹராபாத்திலிருந்து வந்தார். பானுமாசி பனிக்கட்டிகளால் குளிர் பதனப்படுத்தப்பட்ட மீன் பொட்டலத்தைக் கொண்டு வந்திருந்தார். பாபா அப்போது மஸ்துகளுடன் மும்முரமாக இருந்தார்.

பாபா இல்லாத நேரத்தில், 'எவரும் பங்களாவிற்குள் நுழையக்கூடாது என்றும், எவரும் எந்தப் பொட்டலத்தையும் திறக்கக்கூடாது' என்றும் பாபாவின் உத்தரவு அமலில் இருந்தது. எனவே பானுமாசி, குலாமாசி இருவரும் வராந்தாவில் அமர்ந்து பாபாவுக்காகக் காத்திருந்தனர். அவ்வேளையில் மெமோ வெளியே வந்து, பானுமாசியைப் பார்த்து, "நீங்கள் எனக்காக மீன் வாங்கி வந்தீர்களா?" என்றதும் பானுமாசி 'ஆமாம்' என உறுதியுடன் பதிலளித்து, பொட்டலத்தை மெமோவிடம் கொடுத்தார்.

மெமோ அதை உள்ளே எடுத்துச் சென்று, கெய்மாயிடம் தனது மதிய உணவிற்காக அதை சமைக்கக் கூறினார். கெய்மாயும் மெமோ கூறியபடியே அதைத் தயார் செய்தார்; ஆனால் ஷிரீன்மாய் அதைச் சாப்பிடுவதற்கு முன்பு, பாபா உள்ளே நுழைந்து, "**எனக்கு மீன் வாசனை வருகிறது, அது எங்கிருந்து வருகிறது?**" என்று கேட்டதும், கெய்மாய் அவரிடம் நடந்த அனைத்தையும் எடுத்துரைத்தார்; பாபா அதைக் கேட்டு மிக்க வருத்தமடைந்தார்.

மெமோ தலையிட்டு, "நான்தான் மீனை எடுத்து வரச் சொன்னேன்! நீ ஏன் அவருடன் இப்படி நடந்துகொள்கிறாய்?" என்று முறையிட்டார்.

பாபா உடனே, "**அம்மா, நீங்கள் பூனாவில் மீன் சாப்பிடலாம், இங்கே இல்லை! என் ஆசிரமத்தில் எவரும் மீன், மாமிசம் எதுவும் சாப்பிட முடியாது!**" என்றார்.

"என்னைத் தடுக்க நீ யார்?"

"**நான் கடவுள்!**"

"நீ அனைவருக்கும் கடவுளாக இருக்கலாம், ஆனால் எனக்கு நீ எனது மெரோக். எனது நீரிழிவு நோய்க்கு மீன் சாப்பிடுமாறு மருத்துவர் என்னிடம் கூறியுள்ளார், அதைச் சாப்பிடுவதை நீ தடுக்க முடியாது."

தாய்க்கும் மகனுக்கும் இடையில் இந்த சூடான வாக்குவாதம் நடந்து கொண்டிருந்த வேளையில், இரண்டு அலைந்து திரியும் பூனைகள் சமையலறையில் நுழைந்து முழு மீன்களையும் எடுத்துச் சென்றன! மெமோ இதைப் பார்த்ததும், "மெரோக்! நீ ஏன் என்னை இப்படித் துன்புறுத்துகிறாய்? நான் அதைச் சாப்பிடுவதை நீ விரும்பாததால் இது நடந்தது, அப்படித்தானே?" என்றார்.

"**இப்போது நான் கடவுள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?**" என்று பாபா கேட்டார்.

"பிறருக்காக," என்பதை ஒப்புக்கொண்டு, "ஆனால் என்னைப் பொறுத்தவரை நீ எப்பொழுதும் எனது குறும்புக்கார மெரோக்!" என்றார் மெமோ.

பாபாவின் மனம் நிறைந்த சிரிப்புடன், அங்கு இருந்தவர்கள் அனைவரும் முழு நிகழ்ச்சியின் நகைச்சுவையையும் ரசித்தனர்.



முஹமது மஸ்துடன்
பாபா
(BABA WITH MOHAMMED MAST)



ஷிரீன்மாயுடன் பாபா - நீலப்பேருந்து பயணம்
(WITH SHIREENMAI DURING BLUE BUS TOURS)

**1939**, ஏப்ரல் **7** காலை எட்டு மணியளவில், பாபா, எலிஸபெத்தின் காரில் மாண்ட்லாவிற்கு சாஞ்சி, ஜால் கேரவாலா, ஜபல்பூரைச் சேர்ந்த துபே ஆகியோருடன் சென்றார். ஒரு மணி நேரம் பயணம் சீராகச் சென்றது, ஆனால் மாண்ட்லாவிற்கு ஐந்து மைல் தூரம் இருந்தபோது ரேடியேட்டரிலிருந்து நீர் கொப்புளங்கள் வெளியேறத் தொடங்கியதும், அவர்கள் காரைக் குளிரவைக்க நிறுத்தினர். ரேடியேட்டரிலிருந்து நீர் கசிந்து கொண்டிருந்ததால் தொடர்ந்து காரை ஓட்ட முடியாத நிலை. பாபா அவர்களின் பிரச்சினைக்கு அசாதாரண தீர்வு ஒன்றைப் பரிந்துரைத்தார். அனைவரும் ஆச்சரியப்படும் விதத்தில், ஒவ்வொரு முறையும் காரை நிறுத்தி, மீண்டும் தொடரும் முன்னர் பகவத் கீதையிலிருந்து ஒரு பத்தியை சத்தமாகப் படிக்கும்படி அவர் அவர்களுக்கு அறிவுறுத்தினார்! இவ்வாறு அவர்கள் மாண்ட்லா சென்றடைந்தனர் (அங்கு பாபா, ஒரு சில சமூகத் தலைவர்களைத் சந்தித்து மஸ்துகளைத் தொடர்பு கொண்டார்), அதே விசித்திரமான சடங்கை, ஜபல்பூருக்குத் திரும்பி வரும் வழியிலும் தொடர்ந்தனர். **“இந்த கீதையை யாருக்கும் கொடுக்காதீர்கள், அதை இழந்துவிடாதீர்கள். இது எனது பிரசாதம்”** என்ற வார்த்தைகளால் பாபா புத்தகத்தை, துபேயிடம் கொடுத்தார்.

ஏப்ரல் **9** அன்று, மெஹர்வான், ஸாம் இருவரின் ஸொராஸ்ட்ரிய புனித நூல் விழாவை நடத்த பாபா அனுமதித்தார். பப்பா ஜெஸவாலா இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். உள்ளூர் அக்யாரியில் அதன் குடியாள் பூசாரி அந்தச் சடங்கை நடத்தி வைத்தார். அதில் கலந்து கொண்ட **200** பேருக்கு மாஸாஜி ஒரு விருந்து தயார் செய்தார். இரண்டு சிறுவர்களும் விழாவிற்குப் பிறகு பாபாவை சந்திக்க அழைத்துச் செல்லப்பட்டனர். பாதிரியாரும் பாபாவை தனிப்பட்ட முறையில் சந்திக்க விரும்பினார், ஆனால் பாபா தனது சொந்த காரணங்களுக்காக அவரைப் பார்க்க மறுத்துவிட்டார். (மறுநாள் பாபா சில நேர்மையான உள்ளூர் வாசிகளுக்கு தரிசனத்தை வழங்கினார். )

ஒருவரின் குடும்பம் மற்றும் குழந்தைகளைப் பற்றி, பாபா ஏப்ரல் **8**ஆம் நாள் பப்பாவிற்கு விளக்கினார்:

**உங்கள் மனைவி, மக்கள், உறவினர்கள் மற்றும் பலரோடு உங்களுக்கான பிணைப்பு அனைத்தும் மாயை. உண்மையில் அவர்கள் உங்களுக்கோ அல்லது, நீங்கள் அவர்களுக்கோ சொந்தம் அல்ல. நீங்கள் அனைவரும் உணரும் பந்தமும் பாசமும் இந்த வாழ்க்கைக்கு மட்டுமே. நீங்கள் உங்கள் உடலை விட்டுச் செல்லும் வேளையில் எவரும் உங்களுடன் வரப்போவதில்லை; உயிரைத் துறந்த பின்னர் அவர்கள் உங்களுக்காக அழுதாலும், அது ஒரு குறுகிய காலத்திற்கும், சில நாட்களுக்கும் மட்டுமே. மரணத்திற்குப் பிறகு, நீங்கள் புதிய பிணைப்புகளை உருவாக்கி, அடுத்த பிறவியில் பழையனவற்றைப் புதுப்பிக்கிறீர்கள்; பின்னர் அது துண்டிக்கப்பட்டு, புதிய வாழ்க்கையில் மீண்டும் புதுப்பிக்கப்படுகிறது, இப்படி வாழ்க்கைக்குப் பின் வாழ்க்கையாக முடிவில்லாமல் தொடர்ந்து செல்கிறது.**

உங்கள் கடந்தகால வாழ்க்கையில் ஆயிரக்கணக்கான மனைவிகளையும் குழந்தைகளையும் நீங்கள் பெற்றிருந்தீர்கள், ஆனால் அவர்களில் எவரையேனும் இப்போது நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்களா? அல்லது அவர்களில் எவரேனும் உங்களை இப்போது நினைவில் வைத்துள்ளார்களா? இது உண்மையானதாகவும், அவர்களோடு உருவான தொடர்பு மிகவும் குறுகியதாகவும், எப்பொழுதும் மாறக்கூடியதாகவும் இருந்தால், அதைப் பற்றி ஏன் கவலைப்பட்டுக் கண்கலங்க வேண்டும்? இது அனைத்தும் குறுகிய காலத்திற்கே! மேலும் நாம் இவ்வுலகை விட்டுச் செல்ல வேண்டும் என்பதை நாம் நிச்சயமாக அறிந்தவுடன், இதுபோன்ற விஷயங்களை ஏன் நம்ப வேண்டும் அல்லது அத்துடன் இணைந்திருக்க வேண்டும்?

இது நாக்பூரிலிருந்து ஜபல்பூருக்கு செல்லும் வழியில் அமைந்த 150 கிராமங்களைப் போன்றது, அங்கு நீங்கள், ஓய்வெடுப்பதற்காக நின்று, உண்டு, ஓர் இரவைக் கழிப்பதைப் போன்றது! ஒவ்வோர் இடத்தில் நிற்கும் போதும் நீங்கள் பலரை சந்திக்கிறீர்கள், ஆனால் அடுத்த இடத்திற்குச் சென்றதும் அவர்களை மறந்து விடுகிறீர்கள். வாழ்க்கையும் அப்படித்தான்.

உண்மையில் எதுவுமே உங்களுடையது அல்ல. அனைத்தும் தற்காலிகமாக இருந்து இயற்கையில் எப்பொழுதும் மாறக்கூடியது. இன்று உங்களுக்குச் சொந்தமானது நாளை வேறு ஒருவருக்குச் சொந்தமாகி, மறுநாள் மூன்றாவது நபருக்கு சொந்தமாகும். உங்களுக்கு ஒருபோதும் சொந்தமில்லாத விஷயங்களைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? உங்களின் உடைமையைப் பற்றி எதுவும் தெரியாவிட்டால் நீங்கள் ஒருபோதும் பாதிக்கப்பட மாட்டீர்கள். எனவே எதையும் தனக்கென 'வைத்துக்கொள்ள' முயற்சிக்காதீர்கள்... இது கவலை அல்லது ஏமாற்றத்திற்கான எந்தவொரு காரணத்திலிருந்தும் உங்களை விடுவிக்கும்.

'குருநாதரின் அருளால்' பொருள் வளம் மற்றும் உடைமைகளைப் பெறுவது பற்றி நினைக்க வேண்டாம். ஏனெனில், வாழ்க்கையில் மாயை மற்றும் மாயாவினோத உடைமைகளிலிருந்து படிப்படியாக மீட்டெடுத்து, அதனுள் மீண்டும் ஆழமாகப் போகவிடாமல் தடுப்பதே ஓர் உண்மையான சத்குருவின் நோக்கம். இதன் அர்த்தம் என்னவெனில், ஏதோ ஒரு வழியில் துன்பத்தை அனுபவிப்பது. ஆனால், ஆன்மீகப் பாதையில் நாட்டம் மிக்க ஒருவரின் முன்னேற்றத்திற்கு அது அவசியம் - மாறாக அது ஆன்மீகத்தில் ஆர்வம் உள்ளவர்களின் உண்மையான வாழ்க்கை; துன்பமும் தியாகமும் இணைந்த வாழ்க்கை; அதை அகமகிழ்வோடு, துன்பத்தில் மகிமையைக் காணும் உணர்வுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1939, ஏப்ரல் 10 அன்று, ஆண் மண்டலி, ஜபல்பூரில் பதினைந்து பிச்சைக்காரர்களை ஒன்றாகத் திரட்டி, பங்களாவிற்கு அழைத்து வந்தனர். அங்கு, பாபா இந்த ஏழை எளியவர்கள் ஒவ்வொருவரையும் பிற்பகல் மூன்று

மணியிலிருந்து ஐந்து வரை சவரம் செய்து, நீராட்டி, புதிய உடை அணிவித்து, உணவளித்து அனுப்பிவைத்தார்.

பெண்டு, சாஞ்சி இருவரும் ஏப்ரல் 11ஆம் நாள் ஜபல்பூரிலிருந்து புறப்பட்டனர்; பெண்டு மும்பை சென்று பின்பு மெஹராபாத்திற்கும், சாஞ்சி இடர்சிக்கும் அனுப்பப்பட்டனர். சாஞ்சி மறுநாள் திரும்பி வந்த அதே ரயிலில் பைதூலும் மெஹராபாத்திலிருந்து பயணம் செய்தார். ஆசிரமத்தில் வாழ்வதற்காக, பெர்சியா சென்று தனது குடும்பத்தை இந்தியா அழைத்து வருமாறு அவருக்கு உத்தரவிடப்பட்டது. மெஹர் பாபாவின் உத்தரவின் பேரில், மெஹராவின் தாயார் தவ்லத்மாய், ஒரு வருடம் பெர்சியாவில் தங்கியிருந்தார்; பைதூலின் குடும்பத்தினர் மார்ச் மாத தொடக்கத்தில் அவருடன் திரும்பிவர இருந்தனர். ஆனால் பைதூலின் மூத்த மகள், பதினெட்டு வயதில், மிகவும் நோய்வாய்ப்பட்டு மார்ச் 18 அன்று காலமானதால், பைதூல் மிக்க மன உளைச்சலுக்கு ஆளாகியிருந்தார். அவ்வப்போது தனியாக அமர்ந்து மௌனமாக கண்ணீர் சிந்தினார். பைதூலைப் போன்ற உறுதியான மனம் படைத்தவர்கள் குருநாதரிடம் சரணடைந்திருந்தாலும், அவர்களும் அத்தகைய மனித துயரங்களுக்கு ஆளாகாமலில்லை.

ஏப்ரல் 12 அன்று மெஹர் பாபா, பைதூலை சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்:

**உயிரைத் துறக்கும் வேளையில் என்னை நினைப்பவர்கள் என்னிடம் வருகிறார்கள். அவர்கள் பிறப்பு-இறப்பு எனும் சக்கரத்திலிருந்து விடுவிக்கப்பட்டு என்னை நிரந்தரமாகப் பார்க்கிறார்கள். நீங்கள் அதைப் பார்க்க முடியாததால் பிரிவினையை உணர்கிறீர்கள். நீங்கள் வருந்துவதானால், உயிரைத் துறந்தவர்களுக்காக அல்ல, ஏனெனில் அவர்கள் என்னிடம் வந்திருக்கிறார்கள், ஆனால் உயிரோடு இருந்தும் அபத்தமான நிலையில் இருப்பவர்களுக்காக வருந்துங்கள்.**

**மூன்று மாதங்களுக்குள் குடும்பத்தை மீண்டும் அழைத்து வாருங்கள். எதிர்காலத்தில் எனக்காக நீங்கள் செய்ய வேண்டிய பணிகள் ஏராளம் உள்ளன. எனவே உங்கள் மனைவி மக்களை எனது கண்காணிப்பில் விட்டுவிட்டு, நான் உங்களிடம் ஒப்படைக்கும் பணியில் மட்டுமே கவனம் செலுத்துங்கள்.**

1939, ஏப்ரல் 13 அன்று, பத்திரிகையாளர் ஒருவருக்கு மெஹர் பாபாவுடன் ஓர் அரிய நேரடிப்பேட்டி வழங்கப்பட்டது. ‘பரிபூரண நிலை’யைக் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. பாபாவின் விளக்கம்:

**இருமைத்தன்மையின் எல்லைக்குள் அடங்கும் அனைத்தும், விகிதத்தின் பாகையை அடிப்படையாகக் கொண்டு இயங்குவது போலவே, பரிபூரணமும் இருமைத்தன்மையின் வரம்பிற்குள் வரும்போது, அடிப்படை படிநிலைகளைக் கொண்டதாக இருக்கும். நல்லது-தீயது, நல்லொழுக்கம்-தீயொழுக்கம், வலிமை-பலவீனம் இதுபோன்ற அனைத்தும்**

இருமைத்தன்மையுடன் தொடர்புடையதாகக் கருதப்படும்போது, அது பல்வேறு படிநிலைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும். ஆனால், உண்மைப்பொருளைப் (இறைவன்) பொறுத்தவரையில், இருமைத்தன்மையுள்ள இவ்வுலகில், எல்லாமே ஒருமையின் பாகைகளாக இருக்கும். ‘தீயது’, தீயது அல்ல, ஆனால் நல்லதன் மிகக் குறைந்த அளவிலானது. இதைப்போல, ‘பலவீனம்’, பலவீனம் அல்ல, ஆனால் வலிமையின் மிகக் குறைந்த அளவிலானது.

முழுமையற்ற ஒருவருடன் (அபூரணத்துடன்) ஒப்பிடுகையில், முழுமையும் பல்வேறு படிநிலைகளை அல்லது பாகையைக் கொண்டுள்ளது. எனவே, இருமைத்தன்மையில் முழுமைநிலையை அடைந்த ஒருவர் அனைத்து துறைகளிலும் முழுமைநிலையை அடைந்தவராக இருப்பதில்லை என்பதை நீங்கள் காண முடியும். அறிவியல் துறையில் முழுமையடைந்தவர் (பூரணமானவர்) இசையில் அவ்வாறு இருப்பதில்லை. மேலும் இசையில் முழுமையடைந்தவர் ஓவியத்தில் அவ்வாறு இருக்க மாட்டார். எனவே இந்தப் ‘பூரண நிலைகள்’ அனைத்தும் இரட்டைத்தன்மையுடைய உலகில் உள்ளடங்குபவை. துல்லியமான, சட்டத்திற்குப் புறம்பான குற்றங்களைப் பற்றி நீங்கள் எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஒரு தடயத்தைக் கூட விட்டுச் செல்லாமல் மிகவும் புத்திசாலித்தனமாக கொலைக் குற்றத்தில் ஈடுபடும்போது, அது ஒரு துல்லியமான குற்றம் என்று அழைக்கப்படுகிறது. எனவே குற்றங்கள் மற்றும் பாவங்கள் என்று அழைக்கப்படும் செயல்களில் கூட முழுமையான (பூரணமான) நிலை உள்ளது.

ஆனால் ஆன்மீக பரிபூரணம் இருமைத்தன்மையின் வரம்பிற்குள் இல்லை. மேலே விளக்கப்பட்ட இந்த ஒப்பீட்டு முழுமை நிலைகள் அனைத்தும் அறிவுத்திறனின் எல்லைக்குள் வருகின்றன, ஆனால் ஆன்மீக ரீதியில், பரிபூரண ஆத்மாக்களின் பரிபூரணம் அறிவுத்திறனுக்கு (புத்திக்கு) அப்பாற்பட்டது. ஒருவர் ஆன்மீக ரீதியில் பரிபூரணமாக இருக்கும்போது, கடவுளைத் தவிர வேறு எதையும் அனுபவிப்பதில்லை. ஒரு பரிபூரண மனிதனுக்கு, அறிவுத்திறன் மற்றும் இரட்டைத்தன்மையின் கீழ் உள்ள அனைத்தும் மாயை. ஆகவே, பரிபூரண மனிதனைப் பொறுத்தவரை, கடவுளைத் தவிர வேறு எதுவும் இல்லை - அறிவியல், கலை, இசை, பலவீனம், கொலைகள் அனைத்தும் அவருக்குக் கனவுகள். அவரது அளவிறுதியற்ற அறிவு, அவரது பரிபூரண தன்மை, ஒரு பிரிக்க முடியாத இறை வாழ்வாக இருக்கும்.

இந்தப் பரிபூரண ஆத்மா, ஆன்மீகக் காரணங்களுக்காக, தன்னுடைய எல்லா சக்தியையும் அறிவையும் பயன்படுத்த விரும்பும்போது, அவர் அதைப் பிறரின் ஆன்மீக நன்மைக்காக மட்டுமே செய்கிறார். அப்போது அவர் தனது உலகளாவிய மனதை பயன்படுத்தி அது சம்பந்தமான அனைத்தையும் அறிந்து கொள்கிறார். அனைத்தையும் வெளிப்படையாக வெளிப்படுத்துவது அவசியமில்லாத ஒன்று, ஆனால் அவர் எல்லாம் அறிந்தவர்.

**எப்படி? எல்லா மொழிகளும் ஆழ்மன உலகில், சிந்தனைகளாக வேரூன்றி உள்ளன, பின்னர் அவை வார்த்தைகளாக வெளிப்படுத்தப்படுகின்றன. ஆனால், ஆன்மீக ரீதியில் பரிபூரணமான ஒருவர், அனைவரின் மனதையும் அறிவார்! ஒவ்வொரு சிந்தனையின் உட்கருத்து, உள்நோக்கம் அனைத்தையும் அது வெளிவருவதற்கு முன்பே அவர் அறிவார்! இப்படி, இது எல்லா துறைகளிலும் இடம்பெற்றிருக்கும் - அறிவியல், கலை, மற்றும் பல - அவர் விரும்பினால், அது உண்மையில் வெளிப்படுவதற்கு முன்பே அதை அறிந்து கொள்ள முடியும். ஆனால் அவர் அதை அவசியம் என்று நினைக்கும் போது மட்டுமே செய்கிறார்.**

அதற்குப் பிறகு தொடர்ச்சியான கேள்விகள் மற்றும் பதில்கள்:

பத்திரிகையாளர் சாஞ்சியிடம், "பகவத் கீதையில் குறிப்பிட்டுள்ளபடி, 'முந்தைய பிறப்புகள்' எனும் கோட்பாட்டை மெஹர் பாபா நம்புகிறாரா?"

"**ஆம்,**" பாபா எழுத்துப்பலகை வழியாக உச்சரித்தார், "**முழு வாழ்வும் 'மறுபிறவி' எனும் சட்டத்தைச் சார்ந்துள்ளது.**"

"கிருஷ்ணர், பொருள் ரீதியாகவும் பரிபூரணமாக இருந்தார். எனவே நீங்களும் அதுபோல பொருள் ரீதியில் பரிபூரணமாக உள்ளீர்களா?"

"**பரிபூரணம் என்பது எல்லா விதமான பூரணத்துவங்களையும் உள்ளடக்கியது, ஆனால் அவற்றை வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லை. கிருஷ்ணர் ஆன்மீக ரீதியில் பரிபூரணமாக இருந்தார். அதாவது அவர் எல்லாவற்றிலும் பரிபூரணமாக இருந்தார், ஆனால் அவர் ஒருபோதும் தனது பரிபூரணத்தை பொருள் ரீதியாகக் காட்டவில்லை, ஏனெனில் அது எந்த அர்த்தமும் இல்லாதது, மாயையின் வரம்பிற்கு உட்பட்டது. மேலும் அவர் தன்னை ஒரு முழுமையான குடிகாரன், ஒரு முழுமையான பாவி, ஒரு முழுமையான முரடனாகக் கூட காட்டியிருக்க முடியும்.**

**ஆனால் அது உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கும். எனவே, அவர் அதை வெளிப்படுத்தவில்லை. அவர் ஒரு முழுநிறை குடிகாரன், முழுநிறை பாவி, முழுநிறை முரடன் - எல்லாவற்றிலும் முழுநிறையானவர், பரிபூரணமானவர். அவர் எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு பரிபூரண கடவுள் என்பதால் அவர் அப்படியே இருந்திருக்க வேண்டும்!**"

"ஆனால் கிருஷ்ணர் தன்னை ஒரு முழுநிறை கொலைகாரன் என்று காட்ட வேண்டியது அவசியமா?"

"**தேவைப்படும்போது, இந்தப் பரிபூரண ஆத்மாக்கள் எல்லாவற்றிலும் தங்கள் பரிபூரணத்தை வெளிப்படுத்துகின்றன என்று நான் கூறியுள்ளேன். உலகின் ஆன்மீக நலனுக்காக, நான் கடைப்பிடிக்க வேண்டிய எந்தவொரு வாழ்க்கை முறையிலும், நான் பரிபூரணமாக இருக்க முடியும், வெறுமனே பரிபூரண நிலையைக் காண்பிப்பதற்காக அல்ல** (ஆனால் எனது பணிக்காக). **வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சமும் மிக உயர்ந்த பரிபூரண நிலையில்**

**அடங்கியுள்ளது - உலகளவில் பரிபூரணம் என்பது, யோகாவில் பரிபூரணம், பிணைப்பில் பரிபூரணம், பற்றின்மையில் பரிபூரணம், இப்படிப் பல!"**

அப்போது பாபா அவரிடம், **"நீங்கள் உண்மையில் என்ன விரும்புகிறீர்கள்? உங்களுக்கு உண்மையில் தேவைப்படுவது என்ன?"** என வினவினார்.

அந்த நபர், "எனக்கு இறைநிலையை அளித்து திருப்தியடையச் செய்யும் ஒரு பரிபூரணமான ஆசிரியரை நான் தேடுகிறேன்" என்றார்.

பாபா, **"நானும் என்னைத் திருப்திப்படுத்தக்கூடிய அளவிற்கு ஒரு முழுமையான சீடனைத் தேடுகிறேன்! ஆனால் நான் அப்படி ஒருவரைக் கண்டுகொள்ள முடியவில்லை! உண்மையைச் சொல்லுங்கள், உங்களுக்கு என்ன வேண்டும்?"**

சற்றே குழப்பமடைந்த அந்த மனிதன், "நான் பொருள் சார்ந்த முழுமையை அடைய விரும்புகிறேன். ஆன்மீகப் பிரச்சாரத்தைத் தொடங்குவதற்கு முன்பு பட்டினியால் வாடும் எனது நாட்டு மக்களின் வயிற்றை நிரப்புவதற்கான வழிகளையும் முறைகளையும் நான் முதலில் கண்டுபிடிக்க வேண்டும்" என்று பதிலளித்தார்.

**"ஆம், நீங்கள் சொல்வது சரிதான்"** என்று பாபா பதிலளித்து **"மக்கள் பட்டினியால் தவிக்கும்போது, நீங்கள் ஆன்மீகத்தை போதிக்க முடியாது. அதை அவர்கள் செவி கொடுத்துக் கேட்க மாட்டார்கள். பதினைந்து நாட்களுக்குப் பிறகு வாருங்கள். பின்னர் உங்களுக்கு நான் ஒன்றை வெளிப்படுத்துவேன் - மிகவும் எளிமையான ஒன்று."**

ஹெலன் டாம் தனது வயிற்று நோயிலிருந்து மீண்டு மார்ச் 23 அன்று ஐரீனுடன் போபாலிலிருந்து ஜபல்பூருக்கு வந்தார். மேலும் மூன்று வாரங்களுக்குப் பின்னர், ஏப்ரல் 17 அன்று, ஹெலன் டாம், ஹெடி மெர்டென்ஸ் இருவரையும் ஸுவிட்சர்லாந்திற்கு பாபா திருப்பி அனுப்பினார். குல்மாய், பெஹராம் இருவருடன், சாஞ்சி அவர்களை மும்பைக்கு அழைத்துச் சென்றார்; அவர்கள் மூன்று நாட்களுக்குப் பிறகு பயணம் செய்தனர். புறப்படுவதற்கு முன்னர், ஹெடி சாஞ்சியிடம், "நான் உடல் நலக்குறைவால் இங்கிருந்து போகிறேன் என்று பாபாவிடம் கூறுங்கள், ஆனால் என் ஆழ்மன இணைப்பில் நான் எப்பொழுதும் அவருடன் இருப்பேன். உலகில் பாபாவைப் போல வேறு எவரும் இல்லை!" என்று கூறினார்.

காலம் இதை இப்படி வர்ணித்தது: "அன்பிற்குரியவரிடமிருந்து பிரிந்து செல்வது உண்மையில் துன்பமாகும், அத்தகைய தாங்கொணா ஆன்மீக துயரத்தின் வலி அவரிடமிருந்து பிரிந்த இதயத்திற்கு மட்டுமே தெரியும். அத்தகைய துன்பத்தின் ஆழத்தை வெளிப்படுத்த, கண்ணீர் சக்தியற்றது. ஆனால் கண்ணீரால் கொழுந்துவிட்டு எரியச்செய்த நெருப்புக்கு அந்த சக்தி இருக்கிறது, அது அன்பிற்குரியவரின் அன்பான இதயத்தைத் தொடும். அவரைப் பற்றிய சிந்தனையின் நெருப்பு ஒருமுறை எரியத் தொடங்கியதும், அது ஒருபோதும்

எரிவதைத் தடுக்காது. காதலன் சாம்பலாக எரிக்கப்படும்போது மட்டுமே அணைக்கப்படும்.

இவ்வாறு கொழுந்துவிட்டு எரியும் நெருப்பில், வேதனை, மகிழ்ச்சி இரண்டும் இருக்கும். இது காதலனைத் துன்புறுத்தி, பரிதாபகரமான நிலைக்குத் தள்ளுகிறது; இருந்தும், இது இல்லாமல் காதலன் வாழ முடியாது என்ற நிலையில், அவன் மோசமான பாதிப்புக்குள்ளாகிறான்! இந்த அற்புதமான வலியை எப்படி, எப்போதாவது உலகுக்கு விளக்க முடியுமா?"

1939, ஏப்ரல் 21ஆம் நாள் தொடங்கி மெஹர் பாபா, அடுத்த பதினொரு நாட்கள் உபவாசத்தைக் கடைபிடித்தார்; காலையில் ஒரு டம்ளர் பால் இல்லாத தேநீரும் மாலையில் சிறிது ஆரஞ்சு ரசமும் மட்டுமே அருந்தினார். ஒரு முறை உபவாசம் தொடங்கியதும், **'உலகம் முழுவதும் மாபெரும் நிகழ்வுகள் நடக்கும்'** என்று அவர் பெண் மண்டலியிடம் கூறியிருந்தார்.

இந்த உபவாசத்தின் போது, பாபா, மஸ்த் பணியில் முழு வீச்சாக ஈடுபட்டார். ஏற்கனவே காக்கா, ஜால்பாய் இருவரும் எலிச்பூரிலிருந்து (ELLICHPUR) குலாப்ஷா (GULABSHA) என்ற உயர் நிலை மஸ்தை அழைத்து வந்திருந்தனர். முதன்முதலில் குலாப்ஷாவை சந்தித்து, காக்கா, ஜால்பாய் இருவரும் மெஹர் பாபாவைப் பார்க்க அவர்களுடன் வருமாறு அவரை வற்புறுத்த முயன்றபோது, அந்த மஸ்த் அக்கம் பக்கம் உள்ளவர்களிடம், "ஒருவர் (பாபா) தெய்வீக நிறங்களால் என்னை வண்ணம் தீட்ட விரும்புகிறார்; ஆனால் அதை நான் விரும்பவில்லை. . . , அவர் என்னைப் பற்றிப்பிடித்துக் கொண்டார்; ஆனால் நான் செல்ல விரும்பவில்லை... அவர் என்னை மகத்தான இறைவனின் தாயகத்திற்கு அனுப்ப விரும்புகிறார், ஆனால் நான் அங்குச் செல்ல விரும்பவில்லை..." என்றார்.

குலாப்ஷா முதன்முதலில் மெஹர் பாபாவை சந்தித்தபோது, "அவர் கடவுள் தானே!" என்று கூறி, காக்காவைச் சுட்டிக்காட்டி, "நீங்கள் என்னை ஏமாற்றிவிட்டீர்கள்!" என்றார். பாபா தரையில் ஒரு மெத்தையில் அமர்ந்து குலாப்ஷாவிடம் அருகில் அமருமாறு சைகையால் தெரிவித்தார். குலாப்ஷா, காக்காவிடம், "நான் அவருக்கு அருகில் அமர தகுதியற்றவன். நான் எப்படி மாமன்னரின் முன்னால் அமர முடியும்?" என்று கேட்டார்.

மார்ச் 31 அன்று ஸியோனி (SEONI) எனும் குறு நகரிலிருந்து சகன் ஒரு மேல்நிலை மஸ்தானி கலாமாசியை (KHALA MASI) அழைத்து வந்தபோது, அந்த வயதான பெண்மணி உடனடியாக, பாபாவின் மகத்துவத்தை உணர்ந்து, "தெய்வீக பெருங்கடலிலிருந்து ஒரு சில துளிகளை மட்டும் நான் அருந்த நீங்கள் அனுமதிக்க மாட்டீர்களா?" என வினவினார்.

பாபா மீண்டும் ஜபல்பூரில் வாழ்ந்த மஸ்த் மகர் ஷா மற்றும் பத்து மைல் தொலைவில் அமைந்த கிராமத்தில், தாதா தந்தன் பால் (DADA THANTHAN PAL) என்ற மஸ்தையும் சந்தித்தார். இதற்குப் பின்னர், அவர் மாண்ட்லாவில் தாணிராம்

மஹாராஜ் (DHANIRAM MAHARAJ - லோஹேவாலா பாபா - LOHEWALA BABA என்றும் அழைக்கப்பட்டார்) என்ற மிகவும் உயர்ந்த நிலையில் இருந்த மஸ்தைத் தொடர்பு கொண்டார். பாபா, இதற்கிடையில் ஒரு நாள் அலஹாபாத்திற்குச் சென்று பல மஸ்துகளைக் கண்டுபிடித்து தொடர்பு கொண்டார். காலம் இதை இப்படிப் பிரதிபலித்தது: “பெருங்கடல், இறை கீதத்தைப் மீட்டும் அதன் கடற்துளிகளைத் தேடி அலைந்தது! அவற்றின் வலி மிகுந்த மெல்லிசை, இசையமைப்பாளர், அவர்களைத் தேடி, கண்டுகொள்ளக் கட்டாயப்படுத்தியது.”

மஸ்துகளைப் பற்றி, மெஹர் பாபா ஒருமுறை மண்டலிக்கு இவ்வாறு விளக்கினார்:

**என்னோடு அவர்கள் மட்டற்ற மகிழ்ச்சியை உணர்கிறார்கள், ஏனெனில் அவர்கள் பாபாவைப் பார்ப்பதோடு, பாபா உண்மையிலேயே யார் என்பதை அறிவர் - உங்களின் பௌதீக கண்களால் நீங்கள் பார்க்க முடியாத ஒரு விஷயம். அவர்கள் என்னை மிகவும் வித்தியாசமான கண்ணால் பார்க்கிறார்கள்; இந்த சிறப்பு அகக்கண் எனது தெய்வீக வடிவத்தைக் காண்கிறது.**

**உங்கள் பௌதீக கண்களால், நீங்கள் மாயாவின் விளையாட்டுகளை மட்டுமே காண முடியும் - இந்த மேசை, நாற்காலி மற்றும் பல. ஆனால் மஸ்துகளின் அகக்கண்கள் இந்த அனைத்து பொருட்களிலும், அவற்றின் மூலமாகக் கடவுளை மட்டுமே காண்கின்றன.**

**கடவுளை நேசிக்கும் இவர்களை நான் நேசிக்கிறேன். அவர்கள் உலகில் எதையும் கண்டுகொள்வதில்லை. அவர்களின் உடல் தேவைகளையும் பொருட்படுத்தாமல், ஆனந்தம் மிகுந்த அலட்சியத்தில் இருக்கிறார்கள் - எதற்காக? இவை அனைத்துமே கடவுளை நேசிப்பதற்காக, அதேநேரத்தில் முழு உலகமும் மாயையின் லீலைகளுக்காக மட்டுமே ஏங்குகிறது, அழுகிறது; அதன் திருப்திக்காக ஒவ்வொருவரின் குரல்வளையை நோக்கி விரைகிறது! இந்த மஸ்துக்கள் கடவுளின் உண்மையான வீரர்கள்!**

அலு கம்பட்டா (ALU KHAMBATTA) மற்றும் அவரது அலுவலக பங்குதாரர் டாக்டர் பரமானந்த் (DR. PARAMANAND) ஆகியோர் ஐரோப்பாவிலிருந்து திரும்பி வந்து 1939, ஏப்ரல் 22 அன்று பாபாவுடன் தனிப்பட்ட சந்திப்பை நடத்தினர்.

அந்த நாளில் சாஞ்சி, ருஸ்தத்தின் மகள்கள் மெஹரு (MEHERU), நாகு (NAGGU) இருவரையும் அழைத்து வந்தவர், அதே நாளில் மீண்டும் மும்பைக்கு அனுப்பப்பட்டார்; மேலும் அவர் மே 2 அன்று தனது உறவினர்களுடன், அவரது மருமகள்கள் அர்னவாஸ், நர்கிஸ் தாதாசாஞ்சி மற்றும் அந்தக் குடும்பத்துடன் வாழ்ந்து வந்த கோஹெர் ஆகியோருடன் திரும்பி வந்தார். மெஹரு, நாகு இருவரும் பள்ளியில் பயின்று வந்தனர், ஆனால் அர்னவாஸ், நர்கிஸ் ஆகியோர் கிறிஸ்துமஸ் மற்றும் கோடை விடுமுறை நாட்களில் தவறாமல் பாபாவிடம் வருவது வழக்கம்.

சாஞ்சி, நாசிக் நகரிலிருந்து ருஸ்தத்தின் ஒரு வயது மகன் ஜங்கூவையும் அழைத்து வந்தார். ஏற்கனவே குறிப்பிட்டது போல, ருஸ்தத்தின் மனைவி ஃபிரீனி மனநல பாதிப்பால் அவதிப்பட்டதால், குழந்தைகளை கவனித்துக் கொள்ள முடியாத சூழ்நிலை, எனவே பாபா ஒரு வயது குழந்தையை கோர்ஷெத்தின் பொறுப்பில் ஆசிரமத்தில் தங்க வைத்தார். ஜபல்பூரில் தங்கியிருந்த வேளையில், ஜங்கூ கடுமையான நோயால் தாக்கப்பட்டு கடைசியில் பாபாவின் அருளால் காப்பாற்றப்பட்டார்.

மே 3ஆம் நாள் மனு ஜெஸவாலாவின் பிறந்தநாள்; விழாவை சிறப்பிக்க பாபா, பெண்மணிகளிடம் ஒரு குறு நாடகத்தை அரங்கேற்றக் கூறினார். இத்தகைய இயக்கங்களில் மிகவும் திறமையானவராக இருந்த மணி, தற்போதைய உலகத் தலைவர்களைக் கேலியும் கிண்டலும் செய்யும் நகைச்சுவையான திரைக்கதையை எழுதினார். மணி, ஹிட்லரின் (HITLER) பங்கையும், கேட்டி, முஸோலினியாகவும் (MUSSOLINI), ரானோ, பிரதமர் சேம்பர்லினையும் (CHAMBERLAIN), மெஹரு, நாகு போன்றவர்கள் இதர வேடங்களிலும் நடித்தனர். நாடகம் பாபா மற்றும் மண்டலி முன்னிலையில் அன்று மாலை ஏழு மணிக்கு அரங்கேற்றப்பட்டது; அனைவரும் நாடகத்தை மிகவும் ரசித்தனர். சரியாக நான்கு மாதங்களுக்குப் பின்னர், இரண்டாம் உலகப் போர் உருவானது. ஒரு சில பெண்மணிகளைப் பாத்திரமாக வைத்து நடத்தப்பட்ட இந்த அப்பாவித்தனமான நாடகத்தின் மூலம், பாபா, ஆன்மீக ரீதியில் அவருக்கே உரித்தான முறையில் பணி புரிந்தார் என்பதில் சந்தேகமில்லை.

பாபா இத்தகைய குறுநாடகங்களை அவ்வப்போது பார்த்து மகிழ்வதுண்டு. ஒருமுறை ரானோ ஒரு பார்சி பாதிரியார் வேடத்தில் நடித்து குஜராத்தி மொழியில் தனது வரிகளைப் பேச வேண்டியிருந்தது. அவர் அந்தப் பகுதியைச் சிறப்பாக மனப்பாடம் செய்தும், மேடையில் வந்தபோது பதற்றமடைந்து தடுமாறினார். பாபா, ரானோவின் தவறுகளை நாடகத்தின் வேறு எந்தப் பகுதியையும் விட அதிகமாக அனுபவித்ததாகக் கருத்துத் தெரிவித்தார்.

இந்தக் காலகட்டத்தில், மெஹர் பாபா, பெண்களை மீண்டும் 'மார்பிள் ராக்ஸுக்கு' அழைத்துச் சென்றார்.

**உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள் என்று உங்களுக்கு ஏதாவது தெரியுமா? நான் உங்களுடன் இங்கே அமர்ந்திருக்கிறேன், உங்களுடன் விளையாடுகிறேன், உங்களுடன் பேசுகிறேன், எனது சகவாசத்தை உங்களுக்குத் தருகிறேன், பல இடங்களில் என்னுடைய தரிசனத்திற்காக, என்னைக் காணும் ஏக்கத்தில் பலர் உயிரையும் துறக்காமல் இருக்கிறார்கள், ஆனால் இன்னும் நான் அவர்களை சந்திக்கவில்லை.**

**மலைகளில் தனிமையில் வாழும் ஒரு துறவியின் கண்ணிமை மயிர், தரையைத் தொடும் அளவிற்கு வளர்ந்துள்ளது. அவர் எனது தரிசனத்திற்காக இன்றும் வாழ்கிறார், ஆனால் நான் அங்குச் சென்று அவரைப் பார்ப்பதில்லை. 700 வயதான மற்றொருவரின் தலைமுடி நீளமாக வளர்ந்து தரையில் வேரூன்றியது போல் உள்ளது. அவர் உண்பதில்லை, எதுவும் அருந்துவதில்லை, ஆனால் எனக்காக மட்டுமே ஏங்குகிறார். இருந்தும் நான் அவரைப் பார்ப்பதில்லை.**

**நான் ஏன் உங்கள் அனைவரையும் என்னிடம் அழைத்து எனது சகவாசத்தை அனுமதிக்கிறேன்? ஏனெனில், கடந்த பல பிறவிகளில் கடுமையான தவங்களைச் செய்து, மிகையான துன்பங்களை அனுபவித்துள்ளீர்கள் என்பது உங்களுக்குத் தெரியாது. அதனால்தான் நீங்கள் இப்போது என்னுடன் இங்கே இருக்கிறீர்கள்.**

ஒரு நாள் அர்னவாஸ் இங்கிலாந்தில் படித்துக்கொண்டிருந்த தனது உறவினர் நரிமனின் கடிதத்தை வாசித்துக் கொண்டிருந்த அந்த நேரத்தில், பாபா, அவரைக் கடந்து சென்று, நரிமன் என்ன எழுதியுள்ளார் என்று கேட்டார். இரண்டு வருட படிப்புக்காக நரிமன் இங்கிலாந்திலிருந்து ஜெர்மனிக்குச் செல்கிறார் என்று அர்னவாஸ் பதிலளித்தார். “**உடனடியாக இந்தியாவிற்குத் திரும்பும்படி அவருக்கு எழுதுங்கள்!**” அர்னவாஸ் அறிவுறுத்தப்பட்டபடி எழுதினார் மற்றும் அவரது கடிதம் நரிமனின் மனதை உற்சாகப்படுத்தியது. அவர் இரண்டு ஆண்டுகளாக ஜெர்மனியில் வேதியியல் படிக்க உதவித்தொகைப் பெற்றிருந்தும், ஆரம்பத்தில் பாபா ஏன் இவ்வளவு சீக்கிரம் இந்தியாவிற்கு வர வேண்டும் என்று விரும்பினார் என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் போர் முரசு ஒலிக்கத் தொடங்கியபோது, அவர் அதைப் புரிந்துகொண்டு பாபா கூறியதற்கிணங்க திரும்பி வந்தார்.

கடந்த ஆண்டு பஞ்ச்கணியில், கோஹெர் உடல்நலமின்றி இருந்த வேளையில், மெஹர் பாபாவின் தயவு, கோஹெர் மீதான அவரின் அக்கறை அர்னவாஸை வெகுவாக ஈர்த்தது. ஆனால் அடுத்த நாள் முற்றிலும் மாறுபட்ட ஒரு சூழ்நிலையாக அமைந்தது. நாஜாவும் மிகவும் உடல்நிலை சரியில்லாமல் இருந்த அந்த நேரத்தில், பாபா முன்னறிவிப்பாக இவ்வாறு எடுத்துரைத்தார்: “**நீங்கள் உயிரைத் துறந்து விடுவீர்கள். அதற்குப் பிறகு, நான் உங்களை ஒரு நீண்ட கயிற்றில் கட்டி, ஒரு பள்ளத்தில் தாழ்த்தி, ஒரு புலிக்கு இரையாகச் செய்வேன்! அப்போதுதான் எனது பிரச்சினை தீரும், ஏனெனில் இப்போது நீங்கள் எனக்கு சுமையே தவிர வேறொன்றுமில்லை!**”

மெஹர் பாபாவுடைய இயல்புநிலையின் இந்தக் ‘கொடூரமான’ பக்கத்தைப் பார்த்து அர்னவாஸ் அதிர்ச்சியடைந்தார்; அவர் இது போன்ற சூழ்நிலையை இதற்கு முன்பு சந்தித்ததில்லை. அவர் தனக்குள்ளே நினைத்துக்கொண்டார்: “சாதாரணமாக, நோய்வாய்ப்பட்ட ஒருவருக்கு

ஆறுதலளித்து, அவர் விரைவில் குணமடைய வாழ்த்துவது வழக்கம். ஆனால், இங்கே பாபாவுடன், அது நேர்மாறாக உள்ளது!"

பாபா, அர்னவாஸிடம் எதுவும் சொல்லவில்லை; அப்போது அவரும் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். அர்னவாஸைப் படுக்கைக்கு அழைத்துச் சென்று, பாபா, "**நன்றாக ஓய்வெடுங்கள், எதைப் பற்றியும் சிந்திக்க வேண்டாம்**" என்று அறிவுறுத்தினார். அர்னவாஸை கவனமாகப் பார்த்துக்கொள்ள பாபா ரானோவிடம் கூறியது, அவரை ஆழமாகத் தொட்டது. அவர் தன்னைத்தானே முட்டாள் என்று கடிந்து கொண்டார்: "இவ்வளவு சிறிய காரியத்தை மனதில் கொண்டு, நான் பாபாவை சந்தேகக் கண்களால் பார்த்தேனே, நான் எவ்வளவு பெரிய முட்டாள்! பாபா கடவுள், அவர் என்ன செய்தாலும் பிறரின் நன்மைக்காகவே செய்கிறார்."

பாபா, பஞ்ச்கணியில் இருந்தபோது, இந்த சம்பவத்தைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை, ஆனால் அர்னவாஸ் ஜபல்பூருக்கு வந்த வேளையில் , ஒரு நாள் பாபா, இவ்வாறு விளக்கினார், "**நான் புலி; நோயாளிகள் எனக்கு இரை. நீங்கள் இப்போது ஒரு நோயாளியானதால் நான் இப்படிச் செய்ய வேண்டியிருக்கும்....**"

"ஆனால், நான் இப்போது குணமடைந்து நன்றாக இருக்கிறேன்," என்று அவர் குறுக்கிட்டார்.

"**....உங்களை நான் விழுங்கப் போகிறேன்!**" என்று சைகையால் தெரிவித்தார். அர்னவாஸ் அடக்க முடியாமல் மனம் விட்டு சிரித்தபோது, பாபா தொடர்ந்தார், "**நானே அந்தப் புலி, அதன் இரையை அடித்து நொறுக்குவதன் மூலம் உயிர்ப்பிக்க வைக்கிறேன்; இப்படி ஒருவர் உயிரோடு இருக்கும்போது, ஒருபோதும் அவர் இறக்க மாட்டார்!**"

முதன்முதலில் நர்கிஸ், பாபாவை சந்தித்தபோது, அவர் மிகவும் நலிந்து மெலிந்து காணப்பட்டார்; 1938ஆம் ஆண்டில் அவர் பஞ்ச்கணிக்குச் சென்றபோது, பாபா, மறைமுகமான அர்த்தத்துடன் சுட்டிக்காட்டினார், "**நீங்கள் மிகப் பெரியதாக வளர வேண்டும்! சாதம் சாப்பிட்டு, நிறைய தண்ணீர் அருந்தி ஓய்வெடுங்கள்!**" அந்த நேரத்தில், பாபா கூறியதன் அர்த்தத்தை நர்கிஸால் புரிந்துகொள்ள முடியாமல், தீவிரமான தொனியில் கூறியதாக நினைத்தார். நர்கிஸ் மும்பைக்குத் திரும்பி வந்தபோது, பிரிவின் வேதனையை ஆழமாக உணர்ந்தார், மேலும் மேலும் பாபாவையே நினைவில் கொள்ளத் தொடங்கினார்.

ஜபல்பூரில் இருந்த வேளையில், ஒரு நாள் பாபா அவரிடம், "**நீங்கள் இப்போது பெரிதாக வளர்ந்து வருவதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்!**" நர்கிஸ் குழப்பமடைந்து, அவரும் அவ்வாறே மகிழ்ச்சியடைவதாகக் கூறி, "ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டதற்கு பாபா, "**எனக்கான உங்கள் அன்பு பெரிய அளவில் வளரவில்லையா?**" என வினவினார்.

"அதைப் பற்றி எனக்குத் தெரியாது, ஆனால் பஞ்ச்கணியை விட்டுச் சென்ற பின்னர், உங்களிடமிருந்து விலகி இருப்பது எனக்கு மிகவும் சிரமமாகவும், வேதனையாகவும் இருந்தது" என்று அவர் கூறினார்.

**"இதைத்தான் 'வளர்ந்து வருவது' மற்றும் 'பெரிதாக வளர்வது' என்று அழைக்கப்படுகிறது! நீங்கள் என் அன்பில் பலசாலியாகிறீர்கள், நான் உங்களை இன்னும் வளரவைப்பேன்!"**

எலிஸபெத்தின் பாஸ்டன் வேட்டை நாய் 'கிப்பி' நீலப்பேருந்து பயணத்தின் தொடக்கத்திலிருந்து குழுவுடன் பயணம் செய்து கொண்டிருந்தது. கிப்பியின் பிறந்தநாள் கூட மே 5 அன்று ஜபல்பூரில் ஒரு சிறிய விழாவாக அனுசரிக்கப்பட்டது, மேலும் அந்தச் சிறிய நாய்க்குட்டிக்கு, புதிய உடையில் அலங்காரம் செய்து அனைவரும் இனிய பிறந்தநாள் வாழ்த்துக்களைப் பாடிய பின்னர், இரவில், பாபா பெண்மணிகளை நர்மதா நதியில் நிலவொளியில் படகு சவாரிக்கு அழைத்துச் சென்றார்.

மே 10 அன்று, பாபா 'பிங்கோ' (BINGO) மற்றும் 'ஜிங்கோ' (JINGO) என்ற இரண்டு நாய்க்குட்டிகளைக் கொண்டுவந்தார். எலிஸபெத்திடம் அவற்றை கவனித்துக்கொள்ளுமாறு கூறினார். எலிஸபெத் நாய்களைப் பெரிதும் நேசித்தார், பாபா அவருடைய விருப்பத்தை நிறைவு செய்தார்.

இந்தக் காலகட்டத்தில் ஓர் ஆசிரமத்தை நிறுவுவது குறித்து மேலும் விவாதிக்கப்பட்டது. மாண்ட்லாவில் சௌத்ரியின் நிலத்தை ஏற்றுக்கொண்ட பின்னர், ஒரு திட்டமும் வகுக்கப்பட்டது. மாண்ட்லாவில் வாழ்ந்த சிலர் மெஹர் பாபாவைப் பற்றி அறிந்திருந்தனர், ஆனால் அவர் யார் என்பதை பொது மக்களுக்கு மேலும் தெரியப்படுத்த, மே 12ஆம் நாள், ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது; அதில் தேஷ்முக், நோரினா, நதீன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். புதிய ஆசிரமத்தை அமைப்பதில் நோரினா மிகவும் ஆர்வமாக இருந்தார், மேலும் தகவல்களை சேகரித்து, செல்வாக்கு மிக்க குடிமக்களைத் தொடர்புகொள்வதன் மூலம் ஆதரவைப் பெற்று வந்தார். எவ்வாறாயினும், பாபா இதில் தீவிரமாகப் பங்கேற்கவில்லை, ஏனெனில் அவர் தனது மஸ்த் தொடர்பான பணிகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் இருந்தார்; இது இதர எல்லா விஷயங்களுக்கும் மேலாக முக்கியத்துவமானது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

டாக்டர் கனி, மெஹர் பாபாவைப் பற்றிய பொது சொற்பொழிவுகளை, குறிப்பாக அவரது சக முஸ்லிம் அன்பர்களுக்கு, வழங்குவதில் ஆர்வமாக இருந்தார், இது குறித்து, பாபா, 1939, மே 3ஆம் நாள் எழுதிய கடிதம் கீழ் வருமாறு:

**அஹமதுநகரில் 4, 5ஆம் தேதிகளில் நீங்கள் வழங்கவிருக்கும் சொற்பொழிவு குறித்து, நான் மகிழ்ச்சியடைகிறேன்; உங்கள் பாபாவைப் பற்றி நீங்கள் குறிப்பிடுவீர்கள் என்பதில் நான் உறுதியாக உள்ளேன்; அது சரியான நேரமும் சந்தர்ப்பமும் அல்ல என்பதற்கான காரணங்களை என்**

**முன் வைக்காதீர்கள். முஹமதியர்கள் அதை விரும்ப மாட்டார்கள் என்று நீங்கள் கூறலாம்; அப்படியானால், உங்கள் குருநாதர் 'இக்கால நபி' என்பதை ஏற்றுக்கொள்ளாத நபர்களின் கூட்டங்களில் ஏன் கலந்து கொள்ளவேண்டும்?**

**நீங்கள் தைரியமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன்; உங்கள் வழி வந்த இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, நீங்கள் என் அன்பிற்குத் தகுதியானவர் என்பதை நிரூபிக்க வேண்டும். நீங்கள் என்னை ஏமாற்றினால், உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்வதாகும்.**

ஜபல்பூரில் அல்லது மாண்ட்லாவில் ஒரு ஆசிரமத்தைத் திறப்பதா வேண்டாமா என்ற முடிவு கேள்விக்குறியாகவே இருந்தது. பாபா இந்தப் பிரச்சினையைத் தற்காலிகமாக நிறுத்திவைத்து, 1939, மே 15 அன்று ஜபல்பூரை விட்டு மெஹராபாத் செல்ல முடிவு செய்தார். மெஹர் பாபா, எலிஸபெத்தின் காரில் மெஹரா, மணி, மெமோ மூவருடன் சவாரி செய்தார்; இதர பெண்மணிகள் காரைப் பின்தொடர்ந்து நீலப்பேருந்தில் (எரச், காக்கா இருவரும் முன்னால் அமர்ந்திருந்தனர்) சவாரி செய்தனர்.

முஹமது மஸ்த், மற்றுமொரு மஸ்த், குஸ்தாஜி, ஆண் மண்டலி, மற்றும் மூன்று பெண் ஊழியர்கள் ரயிலில் பயணம் செய்தனர். இதர மஸ்துகள் தத்தமது நகரங்கள் அல்லது கிராமங்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். இந்த நேரத்தில் கெய்மாய், பானுமாசி இருவரும் அவர்களது குழந்தைகளோடு ஜபல்பூரில் தங்கியிருந்தனர்.

மே மாதம் இந்தியாவில் கோடைகாலத்தின் இடைப்பகுதி. கடுமையான வெப்பம் காரணமாக, பாபாவுடன் குழு விடியற்காலையில் இரண்டு மணிக்கு நீண்ட பயணத்தைத் தொடங்கினர். அவர்கள் காலையில் 11:00 மணியளவில் நாக்பூரை வந்தடைந்து 'கோரேவாலா' (GOREWALLA) பயணிகள் விடுதியில் தங்கினர். டாக்டர் தேஷ்முக், இந்துமதி இருவரும் மாலையில் தரிசனத்திற்காக வந்தனர். நாக்பூரில், வெப்பம் தாங்கமுடியாமல் பெண்கள் ஈரமான ஆடைகளை அணிவது வழக்கம்; ஆனால் ஆடைகள் ஐந்தே நிமிடங்களுக்குள் உலர்ந்து போகும்! பாபாவும் குழுவும் மே 17ஆம் நாள் பத்னேரா (BADNERA) மற்றும் காம்காவ்ம் (KHAMGAON) வழியாக குல்தாபாத் (KHULDABAD) வந்தடைந்து பயணிகள் விடுதியில் தங்கினர். மெஹர் பாபா அங்கு ஒரு மலையைச் சுட்டிக்காட்டி, **'சாய் பாபா தனது இளமைப் பருவத்தில் இங்கே வாழ்ந்ததாகவும், அருகிலுள்ள குகையில் இறை உணர்வை அடைந்ததாகவும்'** குறிப்பிட்டார். அடுத்த நாள் காலையில் அவர்கள் பண்டைய (இந்து மற்றும் புத்த) எல்லோரா குகைகளுக்கு (ELLORA CAVES) விஜயம் செய்து மதிய உணவு வேளையில் திரும்பி வந்தனர்; பின்பு பிற்பகல் 5:00 மணி வரை, ஒரு வழிகாட்டியின் உதவியுடன் குகைகளை மீண்டும் பார்வையிட்டனர். உடன் சென்ற வழிகாட்டியை, பாபா மிகவும் விரும்பினார்.

மே 19ஆம் நாள் காலை 7:00 மணிக்கு, எரச், காக்கா பாரியாவுடன் மெஹர் பாபா ஔரங்காபாத் சென்று, மாபூத் (MABOOD) என்றழைக்கப்பட்ட உயர் நிலை மஸ்த் ஒருவரை, குல்தாபாத் அழைத்து வந்தார். பாபா அவரை நீராட்டி, தலைமுடியை வெட்டி சீர் செய்து, உணவூட்டினார். பாபா அன்பாக அந்த மனிதனின் மேல் கையை வைத்து முதுகில் தட்டிய போது, அவர் "அதோ அங்கே தீவிரமாக ஒளிர்விட்டு எரிகிறது!... நீங்கள் என்னை நெருப்பில் தள்ளிவிட்டீர்கள்!.. நான் நெருப்பில் எரிகிறேன்!" என்றதும், பாபா அவரை அமைதிப்படுத்தினார்; பின்னர் அவரை மறுபடியும் நீராட்டி உணவளித்தார். அதே மாலையில், எலிஸபெத்தின் காரில் மஸ்தை ஔரங்காபாத்திற்கு அனுப்பும் முன்பு, காக்கா 'அவர் எங்கே வந்துள்ளார்' எனக் கேட்டதற்கு அந்த மஸ்த், "நான் அல்லாவின் தர்பாருக்கு (கடவுளின் பேரவை) வந்து என் அரண்மனையில் உணவை உண்டேன்" என்று பதிலளித்தார்.

பாபா, பெண்மணிகளுடன் 1939 மே 20 அதிகாலையில் குல்தாபாத்திலிருந்து புறப்பட்டு, 1928ஆம் ஆண்டில் பாபா தங்கியிருந்த டோக்கா ஆசிரமத்தை மேற்கத்திய பெண்களுக்குக் காட்டினார். நீலப்பேருந்து சேற்றில் சிக்கிக்கொண்ட போது, அனைவரும் டோக்கா நதியில் உல்லாசமாக கைகளைக் கோர்த்து நடந்து சென்றனர். பேருந்தைச் சேற்றிலிருந்து வெளியேற்ற, பல காளைகளைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. அவர்கள் அன்று மதியம் கோட்நதி (GHODNADI) பயணிகள் விடுதியில் மதிய உணவுக்காக நின்று, அன்று இரவு எட்டு மணிக்கு லோனவாலா வந்தடைந்தனர், அங்கு அனைவரும் டாக்டர் கனி ஏற்பாடு செய்த வால்வன் (WALVAN) கிராமத்தில் அமைந்த நூர் முஹமதின் பங்களாவில் தங்கினர்.

பாபா லோனவாலாவைச் சுற்றியுள்ள இடங்களுக்குப் பெண்மணிகளை அழைத்துச் சென்று, இந்திராவன் ஏரி (INDRAVAN LAKE), எல்பின்ஸ்டோன் சந்திப்பு (ELPHINSTONE POINT) ஆகியவற்றைக் காட்டினார். வால்வன் ஏரிக்கு அருகில், பாபா தனது சிறுவயது நண்பர்களுடன் பூனாவிலிருந்து வந்து கோலி விளையாடி, பட்டம் பறக்கவிட்ட இடத்தையும் சுட்டிக்காட்டினார்.

ஆதி சீனியர் மே 22ஆம் நாள் பாபாவைப் பார்க்க வந்தார். அறுவைச்சிகிச்சை செய்த குல்மாயுடன் அவர் ஒரு மாதம் மும்பையில் இருந்தார். பெண்டு, விஷ்ணு, ஆதி ஜூனியர் மூவரும் அன்று பெல்காவ்மிலிருந்து வந்து பாபாவை சந்தித்தனர்.

1939, மே 23 அன்று பாபா, சாஞ்சியை உடன் அழைத்துக்கொண்டு அருகிலிருந்து தலைகாவ்ம் (TALEGAON) கிராமத்திற்குப் புறப்பட்டார்; அவர்கள் ராம்ஜூவின் சகோதரி, அமீனா (AMINA) மற்றும் அவரது கணவர், அப்துல்லா ஜாஃபர் (ABDULLA JAFFER) ஆகியோரை சந்தித்தனர்; அவர்கள் அங்கிருந்த இதர அன்பர்களுடன் பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக் கொண்டனர். பாபாவைத் தொந்தரவு செய்யும் அளவிற்கு அங்கு ஏதோ நடந்தது, பாபா உடனே, அமீனா தனது வாழ்நாள் வரை, பாபாவை ஒருபோதும் அவரது பாதங்களை வணங்கி தரிசனத்தைப் பெறக்கூடாது எனக் கட்டளையிட்டார்! அவரும், பிற

உறவினர்களும் வழங்கிய மதிய உணவை உண்ட பின்பு, பாபாவும் சாஞ்சியும் அந்திப்பொழுதில் லோனவாலாவிற்குத் திரும்பி வந்தனர்.

பூனா, மும்பை, பெல்காவ்மிலிருந்து ஒரு சில பக்தர்களும், மெஹராபாத்திலிருந்து சில மண்டலியும் பாபாவை சந்திக்க **1939**, மே **24**ஆம் நாள் லோனவாலாவிற்கு வந்தனர். குறிப்பாக, பூனாவில் வாழும் சதாஷிவ் பாட்டீல், புவாஸாஹேப் இருவரையும் லோனவாலாவிற்கு வருமாறு பாபா ஒரு செய்தியை அனுப்பியிருந்தார்.

மெஹர் பாபா மீண்டும் இந்த இரண்டு ஆரம்பகால சீடர்கள் மண்டலியுடன் வந்து தங்குவதில், குறிப்பாக புவாஸாஹேப், மிக்க ஆர்வமாக இருந்தார். எவ்வாறாயினும், புவாஸாஹேப் வணிக பொறுப்புகளைக் காரணம் காட்டி மன்றாடினார்; அதற்குப் பிறகு பாபா, முழு நிதிச் சுமையையும் தன் மீது ஏற்றுக்கொள்வதாகவும், அனைத்து பணப் பொறுப்பிலிருந்தும் புவாஸாஹேபை விடுவிக்கவும் முன்வந்தார். இதற்காக ஓர் ஒப்பந்தமும் தயார் செய்யப்பட்டது; ஆனால் புவாஸாஹேப் பின்னர் அதிலிருந்து பின் வாங்கியதால் அந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரவில்லை. அடுத்தடுத்த நிகழ்வுகளை வெளிச்சமிட்டுப் பார்க்கும் வேளையில், இது புவாஸாஹேபைக் காப்பாற்ற பாபாவின் முயற்சியாகும் என்பது புலப்பட்டது.





லில்லியுடன் மெஹர் பாபா

(MEHER BABA WITH LILY)

# மெஹராபாத் வருகை

**(Return to Meherabad)**

**1939,** மே **25**ஆம் நாள் மெஹர் பாபா, பெண் மண்டலியுடன் மெஹராபாத் வந்த பின்பு, மாண்ட்லா (MANDLA) அல்லது ஜபல்பூரில் (JABALPUR) மையம் நிறுவுவது குறித்த விவாதம் மீண்டும் தொடங்கியது. மேற்கத்திய பெண்மணிகள் மாண்ட்லாவை விரும்பினர், பாபாவும் அதை விரும்புவதாகக் குறிப்பிட்டார். நோரினா, அதற்குப் பிறகு, மையத்தைத் தொடங்கும் திட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டார்.

பாபா, மேல்மலையில் இரவில் தூங்குவது வழக்கம், ஆனால் அவர் மே **27** இரவில், கீழ் மெஹராபாத்திற்கு வந்து, நீண்ட நாட்களுக்குப் பிறகு, மண்டலியுடன் சீட்டு விளையாடினார். (தோல்வியுற்றவர்களுக்குத் தண்டனையாக, பாபா, கழியால் ஓர் அறை கொடுத்தார். ) இப்படி, இரவு நேரத்தில் சீட்டு விளையாடும் வழக்கத்தை அவர் சில நாட்கள் தொடர்ந்தார்.

'மெஹர் பாபா ஜர்னல்' (MEHER BABA JOURNAL) போலவே, குஜராத்தி மொழியிலும் பத்திரிகை ஒன்றைத் தொடங்குவதற்கான திட்டம் குறித்து மே **29**ஆம் நாள் காலை, பெய்லி, டாக்டர் கனி, சாஞ்சி ஆகியோருடன் பாபா கலந்துரையாடினார். அன்று மாலை, மேல்மலையிலிருந்து வந்து, மஸ்த் ஆசிரமத்தின் உள்வாசிகளால் நடத்தப்பட்ட பஜனை (மற்றும் நடன) நிகழ்ச்சியைப் பார்த்து பாபா பெரிதும் மகிழ்ச்சியடைந்தார்.

**1939** ஜூன் மாதம், டாக்டர் தேஷ்முக், நோரினா, நதீன் ஆகியோரை பாபா, மும்பை, பூனா மற்றும் நாசிக் நகருக்கு, விரிவுரைகளை வழங்க அனுப்பிவைத்தார். அவர்கள் பொதுமக்கள் முன்னிலையில் ('தற்போதைய ஆன்மீக நெருக்கடி' - 'THE PRESENT SPIRITUAL CRISIS' என்ற தலைப்பில்) திறம்பட பேசினர்; மேலும், கர்னல் ஈரானி மற்றும் அவரது சக நண்பர்கள், பாபாவைப் பற்றி இன்றும் பரப்பி வரும் சில அவதூறான வதந்திகளையும், கருத்துகளையும் நேரடியாக எதிர்கொண்டனர். உலகளாவிய மையம் ஒன்றை நிறுவும் திட்டத்தை அவர்கள் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தினர்.

ஆறு மாத காலத்திற்குப் பிறகு, பாபா மீண்டும் மெஹராபாத்தில் வசித்து வந்ததால், **1939** ஜூன் **4**ஆம் நாள், ஞாயிற்றுக்கிழமை, மெஹர் பாபாவை சந்திக்க, பலர் - ஸட்டா (SATHA) குடும்பத்தினர், ஸரோஷ் மற்றும் விலூ, இந்து தேஷ்முக், மானேக் ரஞ்சி, மினூ போஹோவாலா, ராமச்சந்திர காடேக்கர் மற்றும் டாக்கே:பால்கர் குடும்பத்தினர் - வந்தனர்.

ஆதி சீனியர், நஸர்வான் ஸட்டா, காக்கா சிஞ்சோர்கர் ஆகியோரும் மெஹராபாத்திற்கு வந்தனர். இரண்டு நாட்களுக்குப் பிறகு, மெஹர் பாபா குல்மாயை, குஷ்ரு குவாட்டர்ஸில் சந்தித்து, பின்பு ஸரோஷ் சினிமாவில் திரைப்படம் பார்க்கச் சென்றார். நாசிக் நகரிலிருந்து வந்த ருஸ்தம் ஜூன் **28**

அன்று பாபாவை மெஹராபாத்தில் சந்தித்து, இரண்டு நாட்கள் தங்கியிருந்து, பின்பு நாசிக் திரும்பிச் சென்றார்.

பாபா, மெஹராபாத் திரும்பி வந்த பின்னர், அங்கு வாழ்ந்த மக்களின் எண்ணிக்கைப் பெரிதும் அதிகரித்ததால், விஷ்ணு தனியாக, தினமும் பஜார் சென்று அனைத்து ஏற்பாடுகளையும் கவனிப்பது, கடினமாக இருந்தது; ஏனெனில் அவருக்கு இதர பொறுப்புகளும் இருந்தன. எனவே பஜாரிலிருந்து பொருட்களை வாங்க முழுநேர பொறுப்பாளராக ஒருவரை நியமிக்க, செய்தித்தாள்களில் விளம்பரம் வெளியிடப்பட்டது. பணிக்காக விண்ணப்பித்து, 28 வயதான லக்ஷ்மண் கங்காதர் ஜங்க்ளே (LAXMAN GANGADHAR JANGLE) என்பவர் மெஹராபாத் வந்தபோது, பாபா அவரிடம், "**இந்த நாட்களில் நீங்கள் என்ன செய்கிறீர்கள்?**" என வினவினார்.

"நான் மெட்ரிக் தேர்வில் தோல்வியடைந்ததால், அதை மீண்டும் எழுத திட்டமிட்டுள்ளேன்" என்று ஜங்க்ளே கூறினார்.

"**நீங்கள் இங்கு வேலை செய்ய விரும்பினால், மேலும் படிக்க உங்களுக்கு வாய்ப்பு இருக்காது**."

"நீங்கள் எனக்கு வாய்ப்பளித்தால் நான் தங்குவேன்" என்றார் ஜங்க்ளே.

பாபா அந்த இளைஞனைப் பணியில் நியமனம் செய்ததும், அவர் குடும்பத்துடன் மெஹராபாத்திற்குக் குடிபெயர்ந்தார். வேலை தேடி வந்த ஜங்க்ளே, குருநாதரால் வெகுவாக ஈர்க்கப்பட்டு, பின்னர் அங்கேயே தங்கியிருந்தார்; விஷ்ணு, சிது இருவரும் செய்து வந்த அனைத்து பணிகளிலும் பேருதவியாக இருந்தார்.

1939, ஜூன் மாதத்தில், பாபாவின் அறிவுறுத்தலின் பேரில், ஸரோஷ் இரண்டு ஆங்கில வெள்ளை பன்றிகளை மெஹராபாத்திற்கு கொண்டு வந்தார். பாபா அவற்றிற்கு 'நட்டி' (NUTTY) மற்றும் 'கட்டி' (GUTTY) என்று பெயரிட்டார். ஜூன் 11ஆம் நாள் டாக்டர் நீலு மெஹராபாத்திற்கு வந்த வேளையில், அழகிய மான்குட்டி ஒன்றை ஒரு பெரிய மரப்பெட்டகத்தில் அடைத்து எடுத்து வந்தார். பாபா அதற்கு 'லில்லி' (LILY) என்று பெயரிட்டார்; மேலும் அதில் 'மெஹர்' (MEHER) என்ற ஆட்டுக்குட்டி, 'லக்கி' (LUCKY) என்றழைக்கப்பட்ட குரங்கு இரண்டிற்கும் இடமளிக்கப்பட்டன. இவற்றுடன் பச்சைக்கிளிகள், கருப்புப்பறவைகள், பாம்புகள், முயல்கள், நாய்கள், கோழிகள், வாத்துகள் மற்றும் இரண்டு மாடுகளும் இருந்தன! பெண் மண்டலி கண்காணிப்பாளர்களாக இருந்து, காலை முதல் இரவு வரை விலங்குகளைப் பேணி பாதுகாக்க வேண்டியிருந்தது.

'லக்கி' ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்த கதை மிகவும் சுவாரஸ்யமானது. ஆங்காங்கே வாழ்ந்து வந்த சில மண்டலிக்கு பாபா ஒரு தகவல் அனுப்பியிருந்தார், 'பாபாவுடன் இணக்கமாக இருக்கும்' செல்லக்குரங்கு ஒன்றை அவருடன் வைத்திருக்க விரும்பினார். தனி சிறப்புமிக்க ஒரு சிம்பன்சி (CHIMPANZEE) உட்பட பல குரங்கினங்கள் அனுப்பி வைக்கப்பட்டன, ஆனால் அவற்றில் ஒன்று கூட, பாபாவுடன் இணக்கமாக ஈர்க்கப்படவில்லை.

மும்பையிலிருந்து ஒரு நாள் ஸவக் தமானியா, ஒரு மரப்பெட்டகத்தை, கீழ் மெஹராபாத்திற்கு அனுப்பி வைத்தார். அதில் ஒரு குழந்தை அணிலின் அளவைவிட சிறிய குரங்கு ஒன்று இருந்தது. அப்போது, அதைப் பார்க்க பாபா, அங்கே அழைக்கப்பட்டார்; வழக்கமான நடைமுறையைப் போலவே, கூண்டைத் திறக்கும்போது என்ன நடக்கும் என்பதைப் பார்க்க, அனைவரையும் கூண்டைச் சுற்றி ஒரு வட்டத்தில் அமர்ந்து கொள்ளுமாறு பாபா அறிவுறுத்தினார். குரங்கு முதலில் பாபாவை நோக்கிப் பாய்ந்து அவர் மடியில் குதித்தால், அது பாபாவிற்குப் பிரியமான, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றாக இருக்கும்.

கூண்டு திறக்கப்பட்டதும், அந்தச் சிறிய செல்லக்குரங்கு பாபாவை நோக்கி வந்து, அவர் கைகளில் குதித்தது! பாபா உடனடியாக அதற்கு பொருத்தமான **'லக்கி'** (அதிர்ஷ்டம்) என்ற பெயரைச் சூட்டினார்.

மெஹராபாத் திரும்பிய பின்பு, பாபா, முஹமது மற்றும் ராஹூரியிலிருந்து அழைத்து வரப்பட்ட பிற மஸ்துகளுடன் கீழ் மெஹராபாத்தில் தனது ஆன்மீக உட்பணியைத் தொடர்ந்தார். மண்டலியில் ஒரு சிலர் மஸ்துகளை கவனித்துக் கொண்டாலும், பாபா மட்டுமே தலைமுடியை சீர்செய்து, சவரம் செய்து, நீராட்டி, உணவூட்டினார். அடைக்கப்பட்ட அறையில் அவர் ஒவ்வொரு மஸ்துடனும் தனித்தனியாக நேரத்தை செலவிட்டார், மேலும் அவர் இந்தப் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில், அறையருகில் எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

1939 மே இறுதியில், ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருந்த மஸ்த் லக்கன் ஷாவை அஜ்மீரிலிருந்து அழைத்து வர பாபா, காக்கா பாரியா மற்றும் ஸவக்கின் சகோதரர் ஸொலி கொத்வாலை (SOLI KOTWAL) அனுப்பினார். பாபாவிடம் மஸ்துகளை அழைத்து வருவது மிகவும் கடினமானதாக இருந்தது, ஏனெனில் அவர்கள் ஒருபோதும் இருக்குமிடத்தை விட்டு வெளியேற விரும்பியதில்லை; மேலும், அக்கம் பக்கம் வாழும் பக்தர்களும் அவர்களைக் பின்பற்றுபவர்களும் தங்கள் தனிப்பட்ட தேவதேவர்களை (தெய்வங்களை) கூட்டிச் செல்வதை விரும்புவதில்லை. ஆனால் குருநாதரின் கருணைமிக்க பார்வையின் கீழ் காக்கா, ஸொலி இருவரும் ஜூன் 2ஆம் நாள், லக்கன் ஷாவை மெஹராபாத்திற்குக் கொண்டுவருவதில் வெற்றி கண்டனர். லக்கன் ஷா வந்ததும், பாபா அவரை அன்பாகத் தழுவினார். பாபா உடனடியாக அவரை நீராட்டி, புதிய மேலங்கியை அணியவைத்து, அவரது கையால் உணவூட்டிய பின்னர், அவரை ஒரு தனி அறையில் இருக்கச் செய்தார். அடுத்த பதினைந்து நாட்களுக்கு, பாபா ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு, தனிமையில் லக்கன் ஷாவுடன் அமர்ந்து, தீவிர ஆன்மீக உட்பணியில் ஈடுபட்டார். இந்தப் பணி முடிந்ததும், அவரை, காக்காவுடன் அஜ்மீருக்கு அனுப்பி வைத்தார்.

ஒரு முறை, பாபா எதிர்பாராத விதமாக ஆண் மண்டலியுடன் மஸ்த் ஆசிரமத்திற்குச் சென்றார். மஸ்துகளைக் கண்காணிப்பவர்கள் அவரது திடீர்

வருகையைக் கண்டு ஆச்சரியமடைந்தனர்; ஆனால் மஸ்துகளும், மனநிலை பாதிக்கப்பட்டவர்களும் அவருக்காகக் காத்திருந்தனர். அவர்கள் இசைக் கருவிகளைப் போல் உலோகத் தகடுகள், தகர கொள்கலன்களைத் தயாராக வைத்து, மர்மமான தாளத்தை எழுப்பிக் கொண்டிருந்தார்கள், “ஜெய், ஜெய் குருராயா, மெஹர் பாபா (வணக்கம், அன்பான இறைவனே, மெஹர் பாபா)!”

கடவுளின் இந்தக் காதலர்கள் தங்கள் இறைவனைப் பிரிந்த ஏக்கத்தில் சிக்கித் தவித்ததை காலம் கண்டுகளித்தது: “இறை-போதையில் இருக்கும் இந்த ஆத்மாக்கள், தங்கள் உடல்களுக்கு அப்பாற் சென்ற நிலையில், உண்ணவும், அருந்தவும், உடை அணியவும், அல்லது மனித உடலுடன் வேறு எதையும் செய்ய வேண்டும் என்ற குறைந்தபட்ச உணர்வும் இல்லாமல் இருக்கும் கடவுளின் உண்மையான மனிதர்கள். அவர்கள் உலகத்துடனான தொடர்பை இழந்திருந்தாலும், அன்பான பாபாவின் முன்னிலையில் அனுபவித்த பேரின்ப மோகத்திற்கு அவர்களின் உடல்கள் பதிலளித்தன, மேலும் அவர்கள் தங்கள் அன்பான நண்பருக்காக தங்கள் பாடலில் உணர்ச்சிவயப்பட்டுப் பரவசத்தில் ஆழ்ந்தனர்!”

1939, ஜூன் 8 அன்று, டாக்டர் தேஷ்முக் மெஹராபாத்திற்கு வந்தார். சாஞ்சி அதே நாளில் மும்பை மற்றும் நவ்ஸாரிக்கு தனது மருமகள்கள் அர்னவாஸ், நர்கிஸ் இருவருடன், கோடை விடுமுறை முடிந்ததும், அனுப்பப்பட்டார். ஜூன் 23ஆம் நாள் மாலை, மஹாத்மா காந்தியை சந்திக்க மீண்டும் சாஞ்சியை மும்பைக்கு அனுப்பி, பாபா, காந்தியிடம் தனது சில கட்டுரைகளை, குஜராத்தியில் மொழிபெயர்க்குமாறு கேட்டுக் கொண்டார். பாபாவின் கட்டுரை ‘அவதார்’ (AVATAR) வெளிவந்த ‘மெஹர் பாபா’ ஜர்னலின் (MEHER BABA JOURNAL) முதல் இதழை, சாஞ்சி, காந்திக்கு வழங்கியதைத் தொடர்ந்து, காந்தி பின்வரும் கடிதத்தை எழுதினார்:

பிர்லா ஹவுஸ்
மவுண்ட் ப்ளெசண்ட் ரோடு
மும்பை, 24 ஜூன், 1939

சகோதரர் தாதாசாஞ்சி,

இன்று காலை, நீங்கள் நேற்று என்னிடம் விட்டுச் சென்ற மாதாந்திர இதழைப் பார்த்தேன். பாபாவின் கட்டுரையைப் படித்தேன்; இதர கட்டுரைகளையும் பார்த்தேன். நான் புரிந்து கொண்டபடி, பாபாவின் விருப்பம் என்னவெனில், அவர் தனது கட்டுரையில் கூறுவதை நான் ஒப்புக் கொண்டால், அதை நானே மொழிபெயர்க்க வேண்டும். ஆனால் என்னை விட பல திறமையான குஜராத்தி மொழிபெயர்ப்பாளர்கள் உள்ளனர்.

‘நான் அதை ஒப்புக்கொள்கிறேன்’ என்று என்னால் கூற முடியாது, ‘நான் இல்லை’ என்றும் சொல்லமாட்டேன், இரு வழிகளிலும் அது யூகமாகத்தான் இருக்கும். எனவே, வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ‘இது என்ன என்று

நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.’ இதர இதழ்களையும் எனக்கு அனுப்புங்கள். பாபாவையும் அவரது படைப்புகளையும் புரிந்து கொள்ள என் ஆர்வம் அதிகரித்துள்ளது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

பாபா ஒப்புக் கொண்டால், எனது சக தோழர்களில் ஒருவரை மெஹராபாத்திற்கு அனுப்ப விரும்புகிறேன். ஆகவே, அவரை எனது சொந்த வழியில் அறிந்து கொண்ட பின்னர், அவருடைய கட்டுரைகள் என்னைக் கவர்ந்தால், நான் நிச்சயமாக அவற்றை மொழிபெயர்ப்பேன். இதில் நான் கடவுளால் வழிநடத்தப்படுவேன். நீங்கள் பாபாவை சந்தித்த பின்னர், எனது சக ஊழியர்களில் ஒருவரை மெஹராபாத்திற்கு அனுப்ப வேண்டுமா என்பதை ஒரு அஞ்சலட்டை மூலம் எனக்குத் தெரியப்படுத்துங்கள்.

மஹாத்மா காந்தியின் ஆச்சாரமான மரபுவழி பழக்க வழக்கங்களைச் சார்ந்த மனநிலையை அறிந்த பாபா, காந்திக்கு ‘அவதார்’ என்ற கட்டுரையை, சாஞ்சி அவருக்கு வழங்குவதை ஒருபோதும் விரும்பவில்லை. நிலைமைக்குத் தீர்வு காணும் நோக்கத்தில், காந்தி, சாஞ்சிக்கு எழுதிய அதே நாளில், மெஹர் பாபா சார்பாக, டாக்டர் கனி, சாஞ்சிக்கு இவ்வாறு எழுதினார்:

மெஹராபாத்
**24 ஜூன், 1939**

அன்புள்ள சாஞ்சி,

ஸ்ரீ பாபா உங்கள் கடிதத்தையும், தொலைத்தந்தியையும் பெற்றுக் கொண்டார். உங்களுக்கு இதைத் தெரிவிக்குமாறு அவர் என்னைக் கேட்டுள்ளார்:

“திரு. காந்திக்கு ‘அவதார்’ எனும் முதல் கட்டுரையை மொழிபெயர்ப்பதற்காக ஏன் வழங்கினீர்கள்? இது என்னைக் குறித்த தனிப்பட்ட கட்டுரை; திரு. காந்தி அந்தக் கட்டுரையை மொழிபெயர்ப்பதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வாய்ப்பில்லை. ‘சுயநலம்’ என்ற கட்டுரையை முதலில் அவருக்கு வழங்குமாறு, நான் உங்களிடம் திட்டவட்டமாகக் கூறியிருந்தேன். இப்போது அனைத்தும் குளறுபடியான நிலையில், திரு. காந்தி இதர கட்டுரைகளில் கூட ஆர்வம் காட்டுவார் என்று நான் நினைக்கவில்லை; அனைத்தும் ஒரே தனிப்பட்ட தொனியும், திறமையும் கொண்டவை என்று அவர் நினைத்துக்கொள்வார்.

எப்படியாயினும், மீண்டும் ஒரு முறை முயற்சி செய்து, ‘சுயநலம்’ என்ற கட்டுரையை அவருக்கு வழங்குங்கள்.”

ஸ்ரீ பாபாவுடன் கலந்து ஆலோசனை செய்த பின்பு, ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ (TIMES OF INDIA) பத்திரிகைக்குக் கட்டுரை எழுதுவேன்.

தங்கள் உண்மையுள்ள,
அப்துல் கனி முன்சிஃப்.

(குறிப்பு) அவர் (காந்தி) இதர கட்டுரைகளை மறுத்திருக்க மாட்டார், ஆனால் மறுக்க அவருக்கு எந்தவிதமான காரணமும் இல்லை; முதல் கட்டுரை, 'அவதார்' அதன் வாய்ப்பை இழந்தாலும் சூழ்நிலையை சீரமைக்க வாய்ப்புள்ளது.
-எம். எஸ். ஈரானி
(மேற்குறிப்பு) பாபா இதற்காகப் பரிந்துரைத்த தீர்வு:

"ஸ்ரீ பாபாவின் அனைத்து கட்டுரைகளையும் திரு. காந்தியிடம் எடுத்துச் சென்று, 'அவதார்' கட்டுரை ஸ்ரீ பாபாவின் ஒரே தனிப்பட்ட கட்டுரை என்றும் மீதமுள்ள அனைத்தும் பொதுவான, ஆன்மீகம் மற்றும் தத்துவ ரீதியில் அமைந்தது என்பதையும் எடுத்துக் கூறுங்கள். திரு. காந்தி அவர் விரும்பியதைத் தேர்ந்தெடுக்கட்டும்."

1939, ஜூன் 25ஆம் நாள், பாபா, மும்பையில் இருந்த சாஞ்சிக்கு மற்றுமொரு கடிதத்தை அனுப்பினார்:

அன்புள்ள சாஞ்சி,

**காந்தி, இன்று முதல் மும்பையில் இருக்கிறார். உடனடியாக அவரைப் பார்த்து, கடைசியாக நான் உங்களிடம் கூறியதை அவரிடம் எடுத்துச் சொல்லுங்கள், பின்னர் இங்கு வந்து நடந்ததை எனக்குத் தெரியப்படுத்தவும்.**

பாபா கூறியபடி, சாஞ்சி மும்பையில் மஹாத்மா காந்தியைப் பார்க்கச் சென்று, பாபாவிடமிருந்து வந்த செய்தியை அவருக்கு வழங்கினார்:

**நீங்கள் சொல்வது சரிதான். 'அவதார்' கட்டுரையை நீங்கள் மொழிபெயர்ப்பது, என்னை நீங்கள் அறியாமலேயே அதற்கு உடன்படுவதாகப் பொருள் கொள்ளப்படும். பாபாவை, அவதார புருஷராக உணர்வுபூர்வமாக நீங்கள் அனுபவிக்கும் வரை, அந்தக் கட்டுரை அப்படியே இருக்கட்டும். ஆனால் இப்போது என்னுடைய இதர கட்டுரைகள் உங்களுக்கு இணக்கமாக, நீங்கள் ஒப்புக்கொள்ளும் வகையில் இருந்தால் மட்டுமே அவற்றை நீங்கள் மொழிபெயர்க்கலாம்.**

**உங்களுக்கு இணக்கமாக இல்லையென்றால், குஜராத்தியில் என் எழுத்துக்களை மொழிபெயர்ப்பதாக நீங்கள் அளித்த வாக்குறுதியிலிருந்து நான் உங்களை விடுவிக்கிறேன்.**

**மெஹராபாத்தில் என்னையும் எனது பணியையும் பார்க்க நீங்கள் எவரையேனும் அனுப்பலாம். ஆனால் நீங்களாக இங்கு வருவதற்கு உங்களுக்கு 100 சதவிகிதம் விருப்பம் இருந்தாலன்றி, என்னைப் பார்க்க நீங்கள் வருவதை நான் விரும்பவில்லை.**

**எனது கட்டுரைகள் அனைத்தையும் நீங்கள் படிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**

அப்போது சாஞ்சி, காந்தியிடம், "அந்தக் கட்டுரைகளின் மொழிபெயர்ப்பாளராக உங்கள் பெயரைக் கொண்டிருப்பது பிரச்சாரத்திற்காக

என்று நினைக்கும் அளவிற்கு நீங்கள் ஒன்றும் அறியாதவர் அல்ல என்று பாபாவிற்குத் தெரியும். நீங்கள் அவ்வாறு நினைப்பதாக இருந்தால், அதை வெளிப்படையாக எடுத்துரைப்பதன் மூலம் ஸ்ரீ பாபா உங்களை, உங்கள் வாக்குறுதியிலிருந்து விடுபடச்செய்வார்.

“பாபா கூறுவது போல், **‘எனது பிரச்சாரம் என்னுடைய சொந்த, சுயமான இறைநிலையாகும்**!’”

காந்தி கட்டுரைகளைப் படிக்க எடுத்துக்கொண்டு, அவருடைய கருத்தை பாபாவிற்குத் தெரியப்படுத்துவதாகக் கூறினார்.

உண்மை என்னவெனில், மஹாத்மா காந்தி, மெஹர் பாபாவின் கட்டுரைகளை, குஜராத்தியில் மொழிபெயர்க்க, பாபா ஆர்வம் காட்டவில்லை.

பாபா, அவ்வாறு விரும்பியிருந்தால் அவர் தனது நெருங்கிய சீடர்கள் மூலமாக அதைச் செய்திருக்கலாம். இந்த நிகழ்வுகள் பல ஆண்டுகளாக, காந்தியை தனது தொடர்பில் வைத்திருந்து அவரது பணியைச் செவ்வனே செய்து முடிக்க ஒரு மறைமுக பாசாங்காகத்தான் இருந்தது.

மஹாத்மா காந்தியுடனான சாஞ்சியின் சந்திப்பின் விளைவாக, காந்தி தனது சக நண்பரான டி.பி. ‘காக்கா ஸாஹேப்’ காலேல்கர் (D. B. ‘KAKA SAHEB’ KALELKAR) என்பவரை மெஹராபாத் ஆசிரமத்திற்கு அனுப்பி வைத்தார். காலேல்கர், மற்றும் அவரது செயலாளர் தர்மாதிகாரி (DHARMADHIKARI) இருவரும், 1939 ஜூலை 22 அன்று மாலை பூனாவிலிருந்து ஆதி சீனியர், நஸர்வான் ஸட்டா, சாஞ்சி ஆகியோரால் அழைத்து வரப்பட்டனர். அவர்கள் வரும்வேளையில் பாபா ஏற்கனவே மேல்மலைக்குச் சென்றுவிட்டார், ஆனால் காந்தியின் பிரதிநிதி அவரது கருத்துக்களில் பழங்கால பாரம்பரிய சிந்தனை உடையவராக இருப்பதை உணர்ந்து, பாபா நான்கு அல்லது ஐந்து ஆண் மண்டலியை, தத்தமது அறைகளில் தங்கி, தியானம் செய்யுமாறு அறிவுறுத்தி இருந்தார். இரண்டு பார்வையாளர்களுக்கும் அன்றிரவு ராஹூரி கேபினில் தூங்கும் பாக்கியம் வழங்கப்பட்டது.

மறுநாள் காலை ஏழு மணிக்கு முன்னதாக, மெஹர் பாபா மேல்மலையிலிருந்து இறங்கி வந்தார். காந்தியின் பிரதிநிதிக்கு பாபா, தனது அறையில் சுமார் பதினைந்து நிமிடங்கள் நேரடிப்பேட்டியை வழங்கினார்.

அவர்களின் சந்திப்பின் போது, மெஹர் பாபா காலேல்கருக்கு இவ்வாறு எடுத்துரைத்தார்:

**அறிவுபூர்வமான மல்யுத்தம் மற்றும் உரைகளைப் படிப்பது அல்லது கேட்பதன் மூலம் ஆன்மீக உண்மைகளைப் புரிந்து கொள்ள முடியாது. அதிகபட்சமாக, இவை ஒருவருக்கு அறிவுசார்ந்த புரிதலைக் கொடுக்க முடியும், இது ஆன்மீகப் பாதையில் நுழைவதற்கான முதல் ஆயத்தக் கட்டமாகும்.**

**உண்மையான உள்ளுணர்வும், சத்தியத்தின் உண்மையான அனுபவமும் இன்றியமையாதது - அது மெய்யானதும், நிலையானதும், ஐயத்திற்கிடமில்லாததும் ஆகும். ஒருவர் கடவுளோடு ஐக்கியமாவதை**

அனுபவிக்கும் போது, அவர் அனைவருடனும் அனைத்துடனும் நல்லிணக்கமாக இருப்பதை உண்மையான அனுபவத்தால் அறிவார் - எல்லையற்ற, பிரிக்க முடியாத வாழ்வு ஒன்றைத் தவிர வேறொன்றும் இல்லை; இதர அனைத்தும் நொடிப்பொழுதில் மறைந்துவிடும் நிழல்களைப் போலாகும்.

ஒரு மனிதன் அவனுடைய உண்மையான அனுபவத்தால், தான் ஒரு மனிதன் எனவும் , விலங்கு, நாய் அல்லது குதிரை அல்ல என்பதை அறிவது போலாகும். அவர், ஒரு மனிதனாக இருப்பதால் அதைப் பற்றி சிந்திக்க வேண்டியதில்லை, ஏனெனில் அவர் அவரேதான். எனவே, அனைத்திலும், அனைவரிடத்திலும் ஏக இறைவன் இருப்பதை உண்மையான அனுபவத்தால் ஒருவர் அறிந்து கொள்ள வேண்டாமா? பிறரிடமிருந்து விலகியிருக்கும் ஒரு தனிப்பட்ட மனிதன் அல்ல என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? பக்தி, அன்பு இவை அனைத்தும் தெய்வீகம், தெய்வீக ஞானிகள், இறைநிலையை அடைந்த குருநாதர்கள் மீது நம்பிக்கையை உருவாக்குகின்றன, ஆனால் இறை அனுபவம் ஒன்றுதான் எப்பொழுதும் முக்கியமானது.

என் ஆர்வமிக்க பக்தர்களிடமிருந்து நீங்கள் என்னைப் பற்றி நிறைய கேட்கலாம், ஆனால் பிறர் கூறுவதைக் கேட்டு, நம்பி அப்படியே இருந்துவிடாமல், நீங்களும் அந்த அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும், அவர்கள் உணர்வது போல் உணர வேண்டும்; அது மட்டுமே உண்மையானது, நீடித்தது மற்றும் உறுதியானது.

சன்யாசம் (துறவு) புறத்தைவிட அகத்தைச் சார்ந்திருப்பதாகும். ஒருவரின் ஆதரவில் வாழ்பவர்களைக் கைவிடுவது அல்லது கடமைகளிலிருந்து பின்வாங்குவது சன்யாசம் அல்ல. ஆனால் இந்தக் கடமைகள் அனைத்தையும் மனசாட்சியுடன் செய்வதிலும், வாழ்வதிலும், மேலும் அவர்களின் மகிழ்ச்சியையும் துன்பங்களையும் பகிர்ந்து கொள்வதிலும்தான் உள்ளது. அதுவே உண்மையான சன்யாசம், அதுவே உண்மையான யோகா. உலகில் வாழ்வது, அதே வேளையில் உலகிலிருந்து விலகியிருப்பது.

காளேமாமா, தியானம் செய்பவர்களின் அறைகளுக்கு காலேல்கரை அழைத்துச் சென்றார். தியானத்தில் இருந்தவர்கள் தங்கள் பங்கை சிறப்பாகச் செய்தனர், மேலும் அவர்கள் தியானத்தில் கடவுளின் பெயரை உச்சரித்து அதில் தீவிரமாக மூழ்கியிருந்தது போலத் தென்பட்டனர். பாதிரி பின்னர் அவருக்கு எளிய, பழமையான மஸ்த் ஆசிரமத்தைக் காட்டி, மஸ்துகளைப் பற்றி விளக்கினார். அவர் மீண்டும் பாபாவிடம் அழைத்துச் செல்லப்பட்டபோது, பாபா, அவருடன் பல ஆன்மீக கருப்பொருட்களைப் பற்றி விவாதித்தார்; மஸ்துகள் மற்றும் ஆன்மீக உள்தளங்களைப் பற்றி மேலும் விளக்கினார்.

அஹமதுநகரின் நஸர்வான் ஸட்டா, காக்கா சிஞ்சோர்கர் இருவரும் மஹாத்மா காந்திக்கு அறிமுகமானவர்கள், மெஹராபாத் சுற்றுப்பயணத்தில்

வந்தவர்களை வழிநடத்த பாபாவால் அழைக்கப்பட்டனர். 1920ஆம் வருடத்திலிருந்தே இருவரும் பாபாவின் பழைய பக்தர்களாக இருந்ததால், ஆண் மண்டலியால் நிகழ்த்தப்பட்ட இந்தத் 'தியான நிகழ்ச்சி' அவர்களை ஆச்சரியத்திற்குள்ளாக்கியது, ஏனெனில் மண்டலி இப்படி தியானத்தில் அமர்வதை அவர்கள் அறிந்ததில்லை.

இருவரையும் மேல்மலைக்கு அழைத்துச் சென்று, வழக்கமாக, வரம்பிற்கு அப்பாற்பட்ட இடங்களாகிய மருத்துவமனை, கேபின், பாபாவின் எதிர்கால சமாதி மற்றும் தியான அறைகள் போன்றவற்றைப் பார்வையிட அழைத்துச் சென்றனர் - மேலும் அவர்கள் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நோரினா, நதீன் ஆகியோருடன் உரையாடினர்.

காலேல்கர் அன்று மாலை மெஹராபாத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற பின்பு, மெஹர் பாபா, நஸர்வான் ஸட்டா, காக்கா சிஞ்சோர்கர் இருவருக்கும் விளக்கினார்:

**காலேல்கரின் ஆச்சாரமான மனநிலைப்படி, அவருக்கு முதலில் இந்த தியானப் பயிற்சி, கடவுளின் நாமத்தை உச்சரிப்பது போன்றவை காட்டப்பட்டது. அவர் முதலில் மஸ்த் ஆசிரமத்தைப் பார்வையிட்டிருந்தால் அவரது மனதின் போக்கு மகிழ்ச்சியடைந்திருக்காது; மேலும் அவர் மஸ்துகளைப் பற்றிய எனது விளக்கங்களுக்கு சரியாக செவி சாய்த்திருக்க மாட்டார். ஆகையால், அவரது மனப்போக்கிற்கு இணங்கி, திருப்தி அடையும் வேளையில், நான் அவரிடம் என்ன சொல்கிறேன் என்பதில் அவர் கவனம் செலுத்த முடியும்!**

**ஒருவரின் நிலையான, ஆழ்மன கருத்துக்களைப் பூர்த்தி செய்ய நான் அத்தகைய முறையைக் கையாள வேண்டும். மெதுவாக நான் அவர்களை, சத்தியத்தின் பாதையில் கொண்டு செல்கிறேன். ஆரம்பத்தில் அவர்களின் மனம், அதிர்ச்சியை சந்தித்தால், ஆர்வத்தை இழந்துவிடுவார்கள்.**

மெஹர் பாபா தனது நெருங்கிய அன்பர்களிடமிருந்து, அவர்களால் இயன்ற போதெல்லாம் பணத்தை நன்கொடையாக ஏற்றுக்கொண்டார். மேலும் ஜூலை மாதத் தொடக்கத்தில் ராவ்ஸாஹேப் பாபாவிற்கு ரூபாய் 100க்கான காசோலையை அனுப்பியிருந்தார். ஜூலை 5ஆம் நாள் பாபா இந்த நகைச்சுவையான 'நன்றி' குறிப்பை அவருக்கு அனுப்பினார்:

**உங்கள் கடிதம் எனக்கு ஆச்சரியமாக இல்லை**
**ஆனால் இது ஓர் அருமையான முயற்சி!**
**அதனுடன் வந்த நூறு ரூபாய் காசோலை,**
**நிறைவான பரிசாக இருந்ததில் மிக்க மகிழ்ச்சி!**
**அத்துடன் எனக்கு வந்ததோ நீங்கள்**
**மீண்டும் செய்வீர்கள் என்ற நம்பிக்கை!**
**அவ்வப்போது எனக்குத் தாராளமாக அனுப்புவதைத்**
**தொடரட்டும் உங்கள் அன்பான கை!**

**நான் கவனித்துக் கொள்வேன் உங்கள் ஆரோக்கியத்தை!**
**நீங்கள் கவனித்துக் கொள்ள வேண்டியதோ என் அந்தஸ்தை!**

1939, ஜூலை 2ஆம் நாள், ஸவக் கொத்வால் மெஹராபாத் வந்து, பாபாவை சந்தித்தார். ராம்ஜூவின் மகன் தாதுவும் அதே நாளில் நேரடிப் பேட்டி ஒன்றில் கலந்துகொண்டார். பாபா அவ்வப்போது குஷ்ரு குவாட்டர்ஸ் சென்று குல்மாயை சந்தித்து, ஸரோஷ் சினிமாவில் திரைப்படத்தைத் தவற விடுவதில்லை. ஜூலை 4ஆம் நாள், குல்மாய், பாபாவின் முன்னிலையில் கண்கலங்கி அழுதார், ஷிரீன்மாய் காரணமாக, அவரும் மெஹராபாத் மேல்மலையில் வாழ முடியவில்லை எனக் கடுமையாகப் புகார் கூறினார். ஒரு வாரத்திற்குப் பிறகு, ஜூலை 12ஆம் நாள், பாபா அவரைப் பார்க்கச் சென்றபோது, மெஹராபாத்திலிருந்து நீலப்பேருந்தில் செல்லவிருக்கும் குழுவுடன் அவர் வரமாட்டார் என்ற தகவலை அவருக்குத் தெரிவித்தபோது, குல்மாய் இன்னும் ஏமாற்றமடைந்து உயிரை விட்டுவிட விரும்புவதாகக் கூறினார். பாபா அவரை ஆறுதல்படுத்தி, அவருடனான ஆன்மீகத் தொடர்பை வலியுறுத்தி, "**நீங்கள் இந்த ஆன்மீகப் பாதையில் இருக்கும்போது துன்பம் அவசியம்**" என்று கருத்துத் தெரிவித்தார்.

1939, ஜூலை 5 அன்று பூனாவிலிருந்து இரண்டு பன்றிகளுடன் டாக்டர் நீலுவும், மறுநாள் ஜால்பாயும் வந்தனர். 7ஆம் தேதி, பாபா பலருடன் ராஹூரிக்கு விஜயம் செய்து டாக்கேஃபால்கர் இல்லத்தில் இரவு உணவை உண்டார். அடுத்த இரண்டு நாட்களில் ஆதி ஜூனியர் மெஹராபாத் வந்தபோது அவர் பூனாவில் தங்கும் முடிவெடுக்கப்பட்டது.

ஆதி சீனியரின் கல்லூரி நண்பர் ஜாம்ஷெட் அர்தேஷீர் ஈரானி (JAMSHED ARDESHIR IRANI) ஜூலை 13 அன்று மெஹராபாத்தில் பாபாவை சந்தித்தார். மூன்று நாட்களுக்குப் பிறகு மானேக் ரஞ்சி (MANECK RANJI) வந்த வேளையில், பாபாவின் 'உலகளாவிய' மையத்திற்கான (UNIVERSAL CENTER - யுனிவர்சல் சென்டர்) திட்டத்திற்குப் பங்களிக்கும்படி பாபா கேட்டுக்கொண்டார்.

ஒரு நாள் பாபா பெண் மண்டலியிடம் போரைப் பற்றி மேலும் விளக்கமளித்தார்:

**கிருஷ்ணராக, நான், அர்ஜுனனிடம் கொல்லும்படிக் கட்டளையிட்டேன். கிறிஸ்துவாக, நான் பீட்டரிடம் அவரது மறு கன்னத்தையும் அறையக் கொடுக்கும்படிக் கூறினேன், ஆனால் இரண்டிற்கும் அடிப்படையான உண்மை ஒன்றே. அதற்குப் பிறகு மக்கள் மாறவில்லையா? மக்கள் முன்னேறவில்லை, ஆனால் மாறிவிட்டார்கள்.**

**உலகம் இப்போது அதன் காட்டுமிராண்டித்தனமான அணுகுமுறைக்குத் திரும்பிச் செல்கிறது, எனவே, மீண்டும் மீண்டும், அது வாழ்க்கையின் மாற்றங்களை சந்திக்கிறது. ஆனால் கீதையில் கிருஷ்ணர் கற்பிப்பது தெய்வீகம்; அது ஆழ் இதயத்தை ஊடுருவிச் செல்கிறது. நீங்கள்**

என்னை நேசித்து, என்னைப் பின்பற்றினால், என்னிடம் சரணடைந்தால் நீங்கள் கடவுளாக முடியும் என்று அது கூறுகிறது. வேறு எந்த மார்க்கமுமில்லை. குருநாதர் கட்டளைப்படி சீடர்கள் செய்ய வேண்டும் - அவர் செய்வதைச் செய்யக்கூடாது. அர்ஜுனன் தனது வில்லை விருப்பத்தோடு கையிலேந்தி கீழ்ப்படிந்தான், அவன் கொல்லவில்லை என்ற பூரண அறிவோடு அதைச் செய்தான்.

முற்றிலும் பற்றில்லாமல், அவர்களின் ஆன்மீக நன்மைக்காக இதை அவன் செய்ய வேண்டியிருந்தது - கொலை செய்வதற்கான வெறி அல்லது கடமை எதுவுமின்றி, முழுமையான பற்றற்ற தன்மையுடன் கிருஷ்ணரின் பணியைச் செய்ய வேண்டியதாயிற்று.

நீங்கள் அஹிம்சையை முழுமையாகப் பின்பற்றுபவராக இருந்தால், எந்த உயிரினத்தையும் காயப்படுத்த மாட்டீர்கள் என்று சபதம் செய்கிறீர்கள். இருப்பினும், ஒரு நாய் மூன்று பூனைகளைக் கொல்வதைக் கண்டால், நீங்கள் என்ன செய்வீர்கள் - நாயைக் கொல்வீர்களா? நீங்கள் ஒதுங்கி நின்றால், மூன்று பூனைகளைக் கொல்ல அனுமதிக்கிறீர்கள் என்று அர்த்தம். எலிஸபெத், நீங்கள் என்ன செய்வீர்கள்? நீங்கள் அமைதியாக இருந்தால், மூன்று பூனைகளைக் கொல்ல உதவுகிறீர்கள். நீங்கள் நாயைக் கொன்றால், வன்முறையாளர் என்று அழைக்கப்படுகிறீர்கள்.

ஆட்டு மந்தைகளுக்கு மத்தியில், ஒரு புலி இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள்; நீங்கள் அஹிம்சையைப் பின்பற்றுவதாக சபதம் எடுத்துக் கொண்டதால், உங்கள் வீட்டிலிருக்கும் துப்பாக்கியைத் தொடமாட்டீர்கள்; நீங்கள் புலியைக் கொன்று, ஆட்டு மந்தையைக் காப்பாற்ற முடியும் என்பது உங்களுக்குத் தெரியும். அவ்வேளையில் நீங்கள் என்ன செய்வீர்கள்? புலியைக் கொல்லுங்கள், ஆனால் அதில் ஈடுபாடற்ற முறையில் இருங்கள் - இதைத்தான் கிருஷ்ணர் கற்பிக்கிறார். வன்முறை அல்லது அஹிம்சையைப் பின்பற்ற வேண்டாம், பற்றற்றவராக இருங்கள். மந்தையின் நன்மைக்காக நீங்கள் கொல்ல வேண்டும். அர்ஜுனனைப் பொறுத்தவரை, அவர்கள் காமம், பேராசை போன்ற புலிகள் எனக் கருதப்பட்டதால், அது பிறரின் ஆன்மீக நன்மைக்காகவே செய்யப்பட்டது.

போருக்குச் செல்வது சரியா? அழைக்கப்பட்டால் போருக்குச் செல்லுங்கள், அதைத் தவிர்க்க முடியாது, ஆனால் உயிர்களைக் கொல்வதற்காகப் போராட வேண்டாம். நீங்கள் உதவி செய்து கொல்லப்பட வேண்டியவர்களைக் கொன்று, அதிலிருந்து முற்றிலும் விலகியிருங்கள் அல்லது கொலையாளிக்குப் பயப்படாமல், கோபமும் கொள்ளாமல் உயிரைத் துறக்கத் தயாராக இருங்கள். இதை ஒரு சிலரே அவ்வாறு செய்ய முடியும். நான் ஏன் போரை விரும்புகிறேன்? ஆன்மீக முன்னேற்றத்தையும் மேம்பாட்டையும் கருத்தில் கொண்டே நான் இதைச் செய்கிறேன்.

இந்த நேரத்தில் ஈரானிலிருந்து குடிபெயர்ந்து பைதூல் அவரது மனைவி ஸொல்டூன் (SOLTOON), இரண்டு மகள்கள் டவ்லா (DOWLA), ஸர்வர் (SARWAR) மற்றும் மகன் ஃபாரடூன் (FAREDOON), மெஹராபாத்தில் வாழ வந்தனர். அவர்கள் அரன்காவ்ம் குடும்ப குவாட்டர்ஸில் குடியமர்த்தப்பட்டனர். ஸொல்டூன் மற்றும் குழந்தைகளுக்கு, பாரசீக மொழியைத் தவிர வேறு எந்த மொழியும் தெரியாததால் டவ்லாவும் ஸர்வரும் விரைவில் குஜராத்தி மொழியைப் பெண் மண்டலியிடமிருந்து கற்றுக்கொண்டனர்.

ஒரு மாதத்திற்கு இரவு கண்காணிப்பாளராக பைதூலுக்குக் கடமையை வழங்கி, தனது அருகில் அமரச் செய்து பாபா, தன்னுடைய தட்டிலிருந்து உணவை அவருக்கும் அளித்தார். இரவில் பாபா அவருடன் மஸ்துகளைப் பற்றி விவாதித்து, எதிர்காலத்தில் பைதூலுக்கு இந்தப் பணியில் மிகையான பங்கு இருக்கும் என்றும் மறைமுகமாகக் குறிப்பிட்டார். ஒரு மாதத்திற்குப் பிறகு, பாபா அவரைப் புகழ்ந்து, “**நீங்கள் மஸ்துகளின் சர்தார்** (தலைவர்) **ஆகிவிட்டீர்கள், இப்போது நீங்கள் அவர்களை அடையாளம் கண்டுகொள்ள முடியும்**!” என்றார்.

சாதாரண மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மேல்நிலை மஸ்துகளை வேறுபடுத்துவது கடினம், ஏனெனில் வெளியளவிலான கூறுகள் இருவருக்கும் ஒத்ததாகவே இருக்கின்றன. ஆனால் உள்ளளவில், அவர்களின் நிலைகளில் உலகளவு வேறுபாடு உள்ளது. பைதூல் இப்போது தனக்கு அந்த சக்தி இருப்பதாக நம்பினார்; ஆச்சரியப்படும் விதத்தில் பாபாவின் கருணையால் உண்மையான மஸ்த் ஒருவரை முதல் பார்வையிலேயே அடையாளம் காண முடிந்தது. ஆன்மீக முன்னேற்றத்தின் நிலை பற்றி, அவருக்கு நிச்சயமாக எதுவும் தெரியாது, ஆனால் இருவரையும் வேறுபடுத்திப் பார்ப்பதில் கெட்டிக்காரர்.

மெஹர் பாபா ஒருமுறை இந்த விதிமுறைகளை வழங்கினார்:

**ஒரு பரிபூரண குருநாதரின் தெய்வீக அதிகாரம் இல்லாமல், ஒருவரை மஸ்த் என்றும் இன்னொருவரை மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றும் எந்த ஒரு சாதாரண மனிதரும் சொல்ல முடியாது. இருப்பினும், மஸ்துகள் அவர்களின் உடைமையாக அடைந்திருக்கும் தெள்ளத்தெளிவான தரம் மிக்க குணாதிசயங்கள், தங்கள் சகவாசத்தில் ஒருவரை மகிழ்விக்கும் திறன் படைத்தது; அதேசமயம், ஒரு மனநிலை பாதிக்கப்பட்டவரின் சகவாசத்தில் ஒருவர் மனச்சோர்வையும் சோகத்தையும் உணர்கிறார்.**

ஒரு சந்தர்ப்பத்தில், இறைநிலையை அடைந்த ஸலிக் மற்றும் மஜ்ஜூப் இடையேயான வித்தியாசத்தை, பாபா விளக்கிக் கூறினார்:

**இறைநிலையை அடைந்த பின்னர், இறை உணர்வின் மிக உன்னதமான நிலையிலிருந்து சாதாரண மனித உணர்விற்கு வராதவர்களை மஜ்ஜூப்கள் என்றழைக்கிறோம். அவர்கள் நித்திய, நிரந்தர ஆனந்தத்தை அனுபவிக்கிறார்கள்; ஆனால் உலகிற்கான எந்தக் கடமையும் இல்லாதவர்கள். ஒரு மஜ்ஜூப்பிற்கு இறையுணர்வைத் தவிர வேறு எந்த உணர்வும் இல்லை, மேலும் அவரது உடலையும் அதன் தேவைகளையும்**

**முற்றிலும் மறந்துவிடுகிறார். ஒரு மஜ்ஜூப்பிற்கு, எல்லாம் பூஜ்ஜியமாகிவிடுகிறது. அவர் கடவுளாக மட்டுமே இருக்கிறார்!**

**அதே வேளையில் மறுபுறம், ஸலிக் என்பவர் இறை உணர்வை அடைந்த பிறகு, சாதாரண உலக உணர்வைத் தக்கவைத்து, மனிதகுலத்தின் மேம்பாட்டிற்காக உழைப்பவர். தெய்வீக ஆனந்தத்தை தொடர்ந்து அனுபவிப்பவர், ஆனால் ஒரே நேரத்தில் உலகின் துன்பங்களையும் அனுபவிப்பவர் ஸலிக். வெளித்தோற்றத்தில், அவர் ஒரு சாதாரண மனிதனைப் போல் இருக்கிறார்; ஆனால் உள்ளளவில், அவரைப் புரிந்து கொள்ள முடியாது. அவரே சத்குரு என்றழைக்கப்படுகிறார்; உலகின் முன்னேற்றத்திற்காக உழைப்பது ஒன்றே அவரது கடமை.**

**அவதார புருஷர் என்பவர் அவரது உயர்ந்த தெய்வீக உணர்வு நிலையிலிருந்து சாதாரண மனித உணர்வு நிலைக்கு இறங்கி வருகிறார். அவர் பரிணாமம், மறுபிறவி, இறை உணர்வு போன்ற கட்டங்களை கடந்து செல்ல வேண்டியதில்லை. அவர் எப்பொழுதும் கடவுள், அவரது கடவுள் உணர்வு நிலையிலிருந்து நேரடியாக மனித உணர்வு நிலைக்கு வந்து, படைப்பைப் பற்றிய முழு உணர்வு நிலையில் இருப்பவர். அவரது நற்பண்பு உலகளாவியது, மேலும் அவர் படைப்பில் உள்ள அனைத்து பொருட்களுக்கும் - செயலற்ற, உயிர்வாழும், உயிரியக்கமுள்ள மற்றும் உயிரற்ற அனைத்திற்கும் - ஆன்மீக உந்துதலை அளிக்கிறார்.**

இந்தக் காலகட்டத்தில், மெஹராவின் சகோதரி ஃப்ரீனி நாசிக் நகரிலிருந்து மெஹராபாத்திற்கு வந்தார், பாபாவிடமிருந்து தொடர்ந்து தொலைதூரத்தில் பிரிந்து, தனிமைப்படுத்தப்பட்டதாக நினைத்து வருந்தினார். ஃப்ரீனி, பாபா மீது ஆழ்ந்த அன்பு கொண்டிருந்தார், இதர பெண் மண்டலியுடன் இருக்க விரும்பினார், ஆனால், ஒருவேளை, அவர் தனது கணவர் ருஸ்தம் மற்றும் அவர்களது குழந்தைகளின் குடும்பப் பொறுப்புகளை கவனிக்க வேண்டியிருந்ததால், பாபா அவர் ஆசிரமத்தில் இருப்பதை விரும்பவில்லை; ருஸ்தமும் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளானார்; எவரிடமும் சொல்லாமல் அவ்வப்போது மறைந்து விடுவது வழக்கம். ஆனால் இந்த நேரத்தில் அவர் நிரந்தரமாகக் காணாமல் போய், அவரது குடும்பத்தினர் அல்லது மண்டலியுடன் தொடர்பில் இல்லாமல் (பாபாவிற்கு சில முறை எழுதியிருந்தாலும்) இருந்தார். அவரது திருமணமும் உணர்ச்சி வயப்படும் மனநிலையும் குடும்பத்துடன் வாழ்வது மிகவும் கடினம் என நிரூபிக்கப்பட்டது.

ஃப்ரீனி தொடர்ந்து கவலையுடன் இருந்தது, அவரது மனநிலையைப் பெரிதும் பாதித்தது. பாபா அவரை ஆறுதல்படுத்தி, விரைவில் அழைப்பதாக உறுதியளித்த பின்னர், அவர் நாசிக் திரும்பிச் சென்றார்.

இந்த இக்கட்டான நிலையைப் பற்றி விவாதித்து, பாபா, கருத்துத் தெரிவிக்கையில்:

**மனிதகுலத்தின் ஆன்மீக மேம்பாட்டிற்காக உலகில் உழைக்கும் அதே வேளையில், அவதார புருஷர் உலகின் முழுத் துன்பத்தையும் சுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அறியாமையின் இருளில் மூழ்கியிருக்கும் இந்த மானிடனின் துன்பம், அவதார புருஷரின் துன்பமாக மாறுகிறது. இது அவரை சிலுவையில் அறையப்படுவதற்கு நிகரானது. அவதார புருஷர் பூமியில் அவரது வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் சிலுவையில் அறையப்படுகிறார்.**

**ஆனால், இந்த எல்லையற்ற துன்பத்தை அவர் தன் மீது எடுத்துக் கொள்ளும் அதே வேளையில், இறைநிலையின் நித்தியமான எல்லையற்ற பேரின்பத்தையும் அனுபவிக்கிறார். இல்லையெனில், அது முற்றிலும் சாத்தியமற்றது மட்டுமின்றி, அவர் எல்லா தரப்பிலிருந்தும் இதுபோன்ற துன்பங்களின் சுமையால் உண்மையில் உடைந்துபோவார். ஒரு சாதாரண மனிதன், எவ்வளவுதான் பெரியவனாக இருந்தாலும், அவதார புருஷனின் துன்பத்தின் ஆயிரத்தில் ஒரு பகுதியைக் கூட உணர்வதாக இருந்தால், அவன் பைத்தியமாகிவிடுவான்! உலக துன்பங்களின் சுமையைக் குறைக்க, அவதார புருஷர் இந்த பாரத்தை சுமந்தாக வேண்டும்.**

ஃபிரீனியைப் போன்றவர்களைப் பற்றி பாபா விளக்கமளித்தார்:

**இது போன்ற பல நிகழ்வுகளின் பாரத்தை நான் சுமக்க வேண்டும். ஆனால், இத்தகைய சூழ்நிலைகளைக் கையாளுவதில், மக்களுக்குப் புரியாத, விசித்திரமான முறைகளை நான் பின்பற்ற வேண்டும். மாறாக, அவர்கள் நான் பணிபுரியும் பாதைகளில் தடைகளை வைத்து, தங்களுக்கும் அதிக துன்பங்களை உருவாக்குவதோடு, எனது துன்பத்தையும் அதிகரிக்கிறார்கள். நான் துன்பப்படுவதன் மூலம், அவர்களைக் கண்காணித்து, காப்பாற்றி, துன்பத்திலிருந்து மீட்கிறேன்.**

**ஃபிரீனிக்கு என் மீது அதீத அன்பு உள்ளது, ஆனால் அவர் எனக்குக் கீழ்ப்படியவில்லை. அவருடைய சொந்த நலனுக்காக நான் அவரை தூரத்தில் வைத்திருக்கிறேன், ஆனால் அவர் உருவாக்கும் குழப்பம் எனது துன்பமாக மாறுகிறது! அவர் எதுவும் உண்ணாமல், அருந்தாமல் இருந்த வேளையில், நான் அதைக் கைவிடுமாறு கட்டளையிட்டேன், ஆனால் கீழ்ப்படியவில்லை. அவரை சமாதானப்படுத்த ஜபல்பூரிலிருந்து நாசிக் செல்ல வேண்டியிருந்தது; இதையெல்லாம் நான் தாங்கிக் கொள்கிறேன், இந்த அளவிலா துன்பங்கள் அனைத்தும், என் இறை இன்பப் பெருங்கடலில் ஒரு துளி கூட இல்லை!**

மெஹர் பாபா எதைக் குறிப்பிட்டு விளக்குகிறார் என்பதற்கு உதாரணம் ஒன்றை மேற்கோள் காட்டி, மேலும் கூறினார்:

**ஒருவரை, பெரிய தேள் ஒன்று கடித்து விட்டதாக வைத்துக்கொள்வோம். இது பயங்கரமான வலியை ஏற்படுத்துகிறது. அந்த நபர் கஷ்டப்படுகிறார், வலி தாங்க முடியாமல் அழுகிறார். இதற்கிடையில், ஒரு சிறிய எறும்பும் அவரை வேறொரு இடத்தில் கடித்தால், தேள் கடித்த**

**வேதனையில், எறும்பு கடித்த எந்த வலியும் தெரியாது; இதைப் பற்றிய சிந்தனைக்கும் எந்தவித வாய்ப்பும் இருக்காது.**

**எனவே, எனக்கு வந்த இந்தத் தனிப்பட்ட சிக்கல்களைச் சமாளிப்பது - அவை எவ்வளவுதான் கடினமாகவும், நுண்மையாகவும், தீர்வுகாண முடியாததாகவும் இருந்தாலும் - என்னைப் பொறுத்தவரை, அவை முக்கியமற்றவை மட்டுமின்றி மிகச் சிறியவை. தேள் கொட்டுவதோடு ஒப்பிடும்போது, எறும்பு கடித்தது அரிதாகவே கவனிக்கப்படுவதால், முழு மனிதகுலத்தின் ஒட்டுமொத்த துன்பத்தின் சுமைகளுடன் ஒப்பிடும்போது, இந்த தனிப்பட்ட சிக்கலான பிரச்சினைகள் ஒன்றும் இல்லை!**

**மனிதகுலத்தின் துன்பத்தின் சுமையை அகற்றுவது எனது வாழ்வின் நோக்கம். இதற்காகவே நான் வந்துள்ளேன். ஆனால் உண்மையாகச் சொல்லப்போனால், என்னுடைய பணி அல்ல, மக்களின் அறியாமை மற்றும் ஆன்மீக விஷயங்களைப் பற்றிய அவர்களின் அடிப்படை அலட்சியமே என்னைத் துன்பப்படுத்துகின்றன.**

மெஹராபாத்தில், பெண்கள் மத்தியில் உறவுகள் எப்பொழுதும் இணக்கமாக இருந்ததில்லை. மெஹர் பாபா மற்றுமொரு சுற்றுப்பயணத்தைத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார், எனவே அவர் அப்போதைய நிலைமையை சீர்படுத்த அனைத்து பெண்மணிகளையும் அழைத்துப் பேசினார்.

**உங்கள் வழிகளை சரிசெய்யுங்கள் அல்லது சென்றுவிடுங்கள். அனைத்தையும் என்னிடம் அர்ப்பணிக்க உங்கள் இல்லத்தையும், குடும்பத்தையும் விட்டுவிட்டு இங்கே வந்துள்ளீர்கள், இருந்தும் கட்டுப்பாடுடன் வாழ்கிறீர்கள். சினிமா, திரையரங்குகளுக்கு வெளியே செல்ல உங்களுக்கு சுதந்திரம் இல்லை. ஒவ்வொரு வகையிலும், நீங்கள் அன்பிற்காகத் தியாகம் செய்கிறீர்கள். நீங்கள் அனைவரும் என்னை நேசிக்கிறீர்கள், என்னைக் கடவுளாகப் பார்க்கிறீர்கள் - நான் உண்மையில் கடவுள்தான் - ஆனால் உங்கள் அனைவரிடமும் உள்ள குறைபாடு என்னவெனில், இந்த முழுமையான கட்டுப்பாடு இல்லாததுதான்! உங்களுக்குக் கட்டுப்பாடு மட்டும் இருந்திருந்தால், நீங்கள் மணிக்கற்களைப் போன்ற சீடர்களாக இருந்திருப்பீர்கள்! ஆனால் உங்கள் அனைவரிடமும், கட்டுப்பாடு என்பது மிகுந்த அவல நிலையில் இருப்பதால், உங்களின் இதர நற்குணங்களை மாற்றியமைத்து சீர்படுத்த எனக்கு மிகவும் சிரமமாக உள்ளது. இந்த ஒரு பற்றாக்குறை முழு விஷயத்தையும் ஒரு கேலிக்கூத்தாக மாற்றுகிறது!**

**இங்கே, உங்களில் பன்னிரண்டு பேர் மட்டுமே இருந்தும் உங்களிடையே இணக்கம் இல்லை. நீங்கள் ஒருவரையொருவர் நேசிப்பதுமில்லை, பொறுத்துக் கொள்வதுமில்லை. சிறிதளவு கோபமூட்டினாலும் உங்கள் பலவீனங்கள் மிகப் பெரியதாக நிரூபிக்கப்படுகிறது. நோரினா, நதீன் இருவரும் உலகிற்குப்**

பறைசாற்றுகிறார்கள், “நாங்கள் யுகத்தின் மிகப் பெரிய குருநாதருடன் வாழ்கிறோம்!” ஆனால், “நாங்கள் அவருடன் தங்கியிருந்து நாய்கள் மற்றும் பூனைகளைப் போலப் போராடுகிறோம்!” என்று நீங்கள் கூறுவதில்லை. கிழக்கு மற்றும் மேற்கிலிருந்து வந்த உங்கள் அனைவரையும் மிகத் தீவிரமாக எச்சரிக்கிறேன், “உங்களை நீங்கள் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்!”

நீலப்பேருந்து பயணத் தொடக்கத்தில், ஷோலாபூரில் கிட்டி, ரானோ இருவரிடம் பாபா கூறியதை மீண்டும் மீண்டும் நினைவூட்டுகிறார்:

**நீங்கள் தீவிர உற்சாகத்தில், துள்ளிக்குதிக்கும் போதெல்லாம், அல்லது பிறர் நியாயமற்ற முறையில் இருப்பதாக உணரும்போது, அல்லது அவர்கள் உங்களை விமர்சிப்பதாக நினைக்கும் போது, அல்லது ஏதாவது ஒன்றில் நீங்கள் சரியாகவும், அவர்கள் தவறாக இருப்பதாகவும் - இதையெல்லாம் நீங்கள் உணரும் தருணத்தில், என்னை நினைவில் கொண்டு கட்டுப்பாட்டை நிலைநாட்டுங்கள். உங்களையே நீங்கள் கிள்ளிவிட்டு, ஒதுங்கிச் செல்லுங்கள். நடைமுறைக்குரிய நடவடிக்கைகளை நாடுங்கள். நீங்கள் உற்சாகமாக உணரும் தருணத்தில், ஒரு வம்பு செய்யுங்கள், என்னை நினைவில் கொண்டு ஆடிப்பாடுங்கள் - இதுவே நடைமுறை தீர்வு.**

**நீங்கள் அந்த சூழ்நிலையை ஒரே நேரத்தில் குதூகலத்துடன் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து மாற்றிவிடுவீர்கள். நீங்கள் கட்டுப்பாட்டைப் பெற தருணத்தில், இந்த நடைமுறை நடவடிக்கையை எடுக்க வேண்டும்; இல்லையென்றால், நீங்கள் தொலைந்து போவீர்கள். அகந்தைக்கு அளிக்கப்பட்ட சிறிதளவு நன்மை, உணர்ச்சிவசப்பட்ட மனதின் தூண்டுதலால், ஆத்திரத்தில் தீப்பொறியாக வெடிக்கும்.**

**ஆன்மீக ரீதியில், விட்டுக் கொடுப்பது அல்லது தோல்வியை ஏற்றுக்கொள்வது கோழைத்தனம் அல்ல. உங்களால் நேசிக்க முடியாவிடில் குறைந்தபட்சம், விட்டுக் கொடுக்கும் தைரியம் வேண்டும். இதையெல்லாம் நான் ஆயிரம் முறை கூறியிருக்கிறேன், ஆனால், அது ஒரு காதில் நுழைந்து மறு காது வழியாக வெளியே செல்கிறது. கடைசி முறையாகக் கூறுகிறேன். அது அப்படியே வெளியே போவதானால், அனைவரும் போகவேண்டியதுதான். நீங்கள் எந்தக் காரணமும், கட்டுப்பாடும் இல்லாமல் சண்டை சச்சரவுகளில் ஈடுபடுகிறீர்கள்; இது யோகா அல்ல, ‘போகா’. போகம் என்றால் பெற்றுக்கொள்வது, அதாவது சுயநலம். யோகா, கொடுப்பதைக் குறிக்கிறது, அதாவது, தன்னலமற்ற தன்மை.**

**ரானோ, நோரினாவை வெறிபிடிக்கச் செய்கிறார், கிட்டி தினமும் எரிச்சலான மனநிலையில் இருக்கிறார். சுருக்கமாகச் சொல்வதானால், நீங்கள் பன்னிரண்டு பேர் ஒவ்வொரு நாளும் சல்லிக்காசு பெறாத விஷயங்களுக்காக அமர்க்களம் செய்கிறீர்கள். நான் உங்கள் அனைவரையும்**

**மௌனமாக இருக்கச் செய்திருக்கலாம், அப்படியானால் நீங்கள் ஒருவரையொருவர் உண்டு இல்லை என்றாக்கியிருப்பீர்கள்!**

**"சுற்றுப்பயணத்தில், ஏதேனும் சண்டை சச்சரவுகளுக்கு இடமிருக்குமா?"** என்ற கேள்வியுடன் பாபா முடித்தார்.

வேறொரு சந்தர்ப்பத்தில், பாபா பெண்மணிகளிடம், **"எந்தவிதமான தவம், துறவறம், தியானங்களுக்கும் எனது முன்னிலையில் இடமில்லை. நான் உங்கள் கைகளைப் பற்றிக்கொண்டு இறுதி இலக்கை நோக்கி அழைத்துச் செல்வேன். ஆனால் நீங்கள் எனது கையை உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டியது அவசியம்.**

**"எண்ணத்திலும், பேச்சிலும் எப்பொழுதும் என்னையே நினைவிற் கொள்ளுங்கள். என்னைப் பற்றிப் பேசுவது மட்டுமே நிரந்தரமானது! என்னை நினைவிற் கொள்வதென்பது, இந்த நிலையற்ற உலகில் உண்ணுவது, அருந்துவது, உறங்குவது மற்றும் அனைத்தையும் மறந்து விடச் செய்யும்!"**

1939, ஜூலை 18ஆம் நாள், மெஹர் பாபா, ஆண் மண்டலியிடம் '**துறவறம்**' பற்றி பேசினார், "**துறவு என்பது நீங்கள் மிகவும் விரும்பும் விஷயங்களை விட்டுவிடுவது.**"

மாஸாஜி பக்கம் திரும்பி, "**மாஸாஜி, திரைப்படங்களுக்குச் செல்ல வேண்டும், ஆனால் திரைப்படத்தைப் பார்க்காமல் திரும்பி வர வேண்டும்! அது உண்மையான துறவு. திரை அரங்கத்திற்குச் செல்லுங்கள், ஆனால் திரைப்படங்களைப் பார்க்காமல் திரும்பி வாருங்கள்**" என்று எழுத்துப் பலகையில் உச்சரித்தார்.

காலம் இதை ஒரு சில வார்த்தைகளில் பார்த்தது: "சுருக்கமாகச் சொன்னால், குருநாதர், மண்டலியைப் பயிற்றுவிப்பதற்கான தனித்துவமான வழி என்னவெனில், அவர்கள் தீவிரமாக விரும்பும் ஒன்றை அவர்களால் இழக்கச் செய்வதில் அல்ல, மாறாக அவர்களுக்கு அதைக் கொடுப்பதில் உள்ளது - ஆனால் பின்னர் அதைப் பயன்படுத்தவோ அல்லது ரசிக்கவோ கூடாது என்று கட்டளையிடுகிறார்!"

இறைநிலையை அடையும் நோக்கத்தில் முதலில் மெஹர் பாபாவுடன் வந்திணைந்த பிளீடர், சமீபத்தில் மும்பையிலிருந்து திரும்பி வந்து, பல நாட்கள் பாபாவை எதிர்கொண்டார், "உங்கள் உத்தரவின்படி, நான் மூன்று ஆண்டுகள் உபவாசம் மேற்கொண்டேன்; மௌனம் மற்றும் ஏகாந்தவாசத்தையும் கடைப்பிடித்தேன்; ஆனால், நீங்கள் எனக்கு இறைக்காட்சியை இதுவரை அளிக்கவில்லை!" இவ்விதமான அசாதாரண நடைமுறைகளைத் தொடருமாறு பாபா அவரை வலியுறுத்தினார். இதர ஆண்கள் அத்தகைய வெளியளவிலான பிராயச்சித்த நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்கவில்லை. அவர்களுக்கு, பாபா, கீழ்ப்படிதல் ஒன்றை மட்டுமே வலியுறுத்தினார்.

ஆனால், இக்காலகட்டத்தில் ஒரு நாள், பிளீடர், தனது வெறுப்பையும் விரக்தியையும் மறைக்க முடியாமல் போயிற்று. அவ்வேளையில், அதற்கு பதிலளிக்கும் விதத்தில் பெண்டுவை அழைத்து பாபா, **“நீங்கள் என்னுடன் எவ்வளவு காலம் இருக்கிறீர்கள்?”** என்று பிளீடரின் முன்னிலையில் வினவினார்.

“1922 முதல்,” பெண்டு பதிலளித்தார்.

**“என்னிடமிருந்து உங்களுக்கு என்ன வேண்டும்?”**

“ஒன்றுமில்லை!”

**“அப்படியானால் நீங்கள் ஏன் என்னுடன் இருக்கிறீர்கள்?”**

“உங்களுக்கு சேவை செய்யவும், உங்கள் மகிழ்ச்சியைக் காணவும், உங்கள் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவும்” என்றார் பெண்டு.

பெண்டுவை அங்கிருந்து அனுப்பிவிட்டு, பாபா, பிளீடரைக் கண்டித்தார், **“பெண்டு என்னுடன் பல ஆண்டுகளாக இருந்து வருகிறார், அவர் எனக்காக எவ்வளவு கடினமாக உழைக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனாலும், அதற்கு பதிலாக அவர் எதையும் விரும்பவில்லை! நீங்களும் அந்த மனநிலையை உருவாக்கும் சமயத்தில், நீங்கள் விரும்புவது கேட்காமலேயே உங்களை வந்து சேரும்.”** பின்னர் பாபா, பிளீடருக்கு சில அறிவுறுத்தல்களை வழங்கி மும்பைக்குத் திருப்பி அனுப்பி வைத்தார்.

1939, ஜூலை 20 அன்று ஸரோஷ் மும்பையிலிருந்து எலிஸபெத்துக்காகக் ஒரு புதிய பியூக் (BUICK) காரைக் கொண்டுவந்தார். ஜூலை 26ஆம் நாள் எலிஸபெத்தின் பிறந்தநாளன்று அவர் பாபாவுடன் அந்தப் புதிய காரில் பயணம் செய்தார். அடுத்த நாள் ஸரோஷ், பாபாவைப் பார்க்க மனைவி விலூவுடன் மெஹராபாத் வந்தார். 1920ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே ஸரோஷ் பாபாவிடம் மிகுந்த அர்ப்பணிப்புடன் இருந்தபோதிலும், அவரது மனைவி விலூ இன்னும் பாபாவைப் பற்றிய சந்தேகங்களுக்கு மனதில் புகலிடம் வழங்கியது மட்டுமன்றி, வெளிப்படையாகக் குறைகூறும் பழக்கத்தையும் கொண்டிருந்தார். அவர்களின் சந்திப்பின் போது, பாபா இவ்வாறு குறிப்பிட்டார், **“நான் என்ன சொன்னாலும், என் அளவிறுதியற்ற நிலையிலிருந்து சொல்கிறேன். ஆனால் உங்களிடம் இருப்பது வரையறுக்கப்பட்ட ‘நான்’ எனும் தன்மை. நீங்கள் இப்போது என்ன நினைக்கிறீர்கள், மேலும் நாளை என்ன நினைப்பீர்கள் என்பதையும் நான் அறிவேன். ஒரு நாள், நான் அதை உங்களுக்கு நிரூபிப்பேன்!”**

இந்தத் தருணங்களில் வெளிவந்த பாபாவின் ‘நிரூபணங்கள்’ விலூவின் கேள்விகளுக்கு மிகச் சிறந்த பதிலாக அமைந்தது! அவர் அமைதியாக இருந்த அவ்வேளையில், ஸரோஷ், விலூவின் சார்பாகக் குரல் கொடுத்தார்: “பாபா, விலூ, பெண் மண்டலியை மாயாவிலிருந்து விடுவிப்பதற்கு பதிலாக, நீங்கள் அவர்களை மாயையில் ஆழமாக மூழ்கடிக்கிறீர்கள் என்று கூறுகிறார்! நான் கொண்டு வந்த ஆங்கில நாட்டுப் பன்றிகள், கன்றுகள் இவை எல்லாமே பெண்களை மேலும்

மாயையில் பிணைப்பதாக அவர் கருதுகிறார். நீங்கள் அவர்களை இங்கேயும் அங்கேயும், பயணங்களில் மற்றும் திரைப்படங்களுக்கு அழைத்துச் செல்கிறீர்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார், மேலும் இதுபோன்ற நடவடிக்கைகள் பெண் மண்டலியை கடவுளிடம் கொண்டு சேர்க்குமா என்று அவர் சந்தேகிக்கிறார்."

பாபா, விலூவின் கூற்றை சரிசெய்யும் விதத்தில் இவ்வாறு எடுத்துரைத்தார், **"நான் அவர்களை மாயாவிலிருந்து வெளியே கொண்டுவர மாயாவைப் பயன்படுத்துகிறேன், ஆனால் அவர்களைத் தொடாத வகையில் அதை நான் கையாளுகிறேன்!"**

தனது கருத்தைத் தெளிவுபடுத்துவதற்காக, ஸரோஷ், விலூ ஆகியோருக்கு பாபா, ராமரின் காலத்தில் நடந்த, மன்னர் ஜனக்கின் வாழ்க்கை குறித்து ஒரு சம்பவத்தை விவரித்தார்:

**ஜனக மன்னர் ஒரு 'விதே முக்தா'** (VIDEH MUKTA - சத்குரு) **உடல் ரீதியாக உணர்ச்சியோ உணர்வோ இல்லாமல், மாயாவிற்கு அப்பாற்பட்டு இருந்தார். ஆனால், அவர் ஒரு ராஜாவாக இருந்ததால், ராஜ பாணியில் ராஜாவைப் போலவே வாழ்ந்தார், அவருடைய அரண்மனையில் ஒரு ராஜாவிற்குப் பொருத்தமான அனைத்து வசதிகளும் செல்வங்களும் இருந்தன.**

**ஆன்மீகப் பாதையில் ஆர்வம் மிக்க ஒருவரை அவருடைய குருநாதர் ஜனக மன்னரிடம் அனுப்பிவைத்தார். இந்த யாத்ரீகர் கடுமையான தவமிருந்து, எளிமையான வாழ்க்கை வாழ்ந்து வந்தார்; பல ஆண்டுகளாக அலைந்து திரிந்து, உணவு உண்ணாமல், தண்ணீர் கூட அருந்தாமல் நெடுநாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்.**

**அவர் அரண்மனைக்கு வந்ததும், அதன் ஆடம்பரத்தையும் கம்பீரத்தையும் கண்டு அவர் நினைத்தார்: "ஒரு ராஜாவிற்குரிய வாழ்க்கையை வாழும் ஒருவர், எனக்கு எப்படி இறை ஞானத்தை வழங்க முடியும்? ராஜாவே மாயையில் மூழ்கியிருக்கும்போது, அவர் எப்போதாவது பிறரை அதிலிருந்து விடுவிக்க முடியுமா?"**

**ஜனக மன்னர் அந்த யாத்ரீகரிடம் இரவு ஓய்வெடுக்கக் கூறி, சில நாட்களுக்குப் பின்னர் அவருடன் பேசுவதாகக் கூறினார். அவருக்கு அரண்மனையில் அனைத்து ஆடம்பரங்களும் நிறைந்த ஓர் அருமையான அறை வழங்கப்பட்டது. ஒரு சேவகனும் அவர் வசம் இருந்தார்; அவருக்கு மிகச் சிறந்த உணவு வழங்கப்பட்டது. ஆனால் இரவில் அவர் தூங்கச் சென்ற போது, அவர் படுக்கைக்கு மேல் ஒரு பெரிய கற்பாறைத் தொங்கிக்கொண்டு இருப்பதைக் கண்டார், அது அவரை நோக்கி மெதுவாக இறங்குவது போலத் தோன்றியது. அவர் அச்சத்தில், இரவெல்லாம் விழித்திருந்து கல்லையே பார்த்துக்கொண்டிருந்தார், அது தலை மீது விழுந்து, நசுக்கிக் கொன்றுவிடுமோ என்று அஞ்சினார். இரண்டு நாட்களாக அவருக்குத் தூக்கம் வராமல் உடல்நலம் குன்றி காணப்பட்டார்.**

**மூன்றாம் நாள், ஜனக மன்னர் அவரை அழைத்துவரக் கூறி, அவரைப் பற்றி விசாரித்தார். வந்தவர் தனது தூக்கமில்லாத இரவுகளை நினைவுகூர்ந்தார். மன்னர் உடனே, "எல்லா வசதிகளும் சௌகரியங்களும் இருந்தபோதிலும், நீங்கள் தூங்க முடியாமல், அமைதியற்றவராக இருந்தீர்கள். உங்கள் கடந்தகால தவத்தில் நீங்கள் அனுபவித்த கஷ்டங்களுடன் ஒப்பிடும்போது, உங்கள் மனம் எப்பொழுதுமே கற்பாறையில் கவனம் செலுத்தியதால், இந்த அனுபவம் மிகவும் வேதனையளித்ததாகத் தெரிகிறது. வெளியளவில், நீங்கள் எல்லா சிறப்பையும் மகிமையையும் கண்டாலும், உங்கள் வாழ்க்கை, நீங்கள் பல ஆண்டுகளாக வழிநடத்தியதைப் போலவே இருக்கிறது!"**

**அரண்மனையின் சுகபோகங்கள் என்னை சூழ்ந்திருப்பதை நீங்கள் கண்டாலும், அகத்தில், நான் எப்பொழுதும் கடவுளில் வேரூன்றி இருக்கிறேன். நான் இவற்றையெல்லாம் கடந்து வாழ்கிறேன், அதே வேளையில் நான் பிறரை அவற்றையெல்லாம் தாண்டி அழைத்துச் செல்கிறேன்!**

**அப்போது அந்த யாத்ரீகர் ஜனக மன்னரின் உண்மை நிலையைப் புரிந்துகொண்டு அவரிடம் சரணடைந்தார்.**

பாபா தொடர்ந்து எழுத்துப்பலகை மூலமாக, குறிப்பாக விலூவிற்கு விளக்கமளித்தார்.

**இங்கே, மெஹராபாத்தில், பெண் மற்றும் ஆண் மண்டலி அதே சூழ்நிலையில் இருக்கிறார்கள். வெளியே இருப்பவர்கள் இதைப் பார்க்க முடியாது, ஆனால் எனது மண்டலி இந்த நிலையை அனுபவிக்கிறார்கள். தைரியமான ஆண்களும் பெண்களும் மட்டுமே என்னுடன் இருக்க முடியும், ஏனெனில் இந்த வாழ்க்கை மிகவும் வித்தியாசமானது, மேலும் ஒவ்வோர் அடியிலும் முட்கள் கால்களைத் துளைக்கின்றன.**

**நான் மனிதகுலத்திற்கு ஒரு குருநாதர் என்பதை விட ஒரு சேவகன் என்று கூறலாம்; அதற்கு நான் சேவை செய்ய மனித உருவில் இறங்கி வந்துள்ளேன்! உலக மக்கள் அதிகப்பிரசிங்கிகளாக இருந்து, பிறருக்கு அறிவுரை வழங்குகிறார்கள், ஆனால் அவர்களின் செயல்முறை முற்றிலும் முரணானது.**

**மனிதகுலத்தின் அறியாமை மற்றும் வாழ்க்கையின் உயர்ந்த மதிப்புகளை மக்கள் அலட்சியப்படுத்திப் புறக்கணிப்பதால், நான் எல்லையற்ற துன்பங்களை அனுபவிக்கிறேன். மாயாவின் பிணைப்பிலிருந்து மக்களை விடுவிக்க நான் விரும்புகிறேன், ஆனால் அவர்கள் அதில் சிக்கி இருப்பதையே விரும்புகிறார்கள்!**

மெஹர் பாபாவின் இந்த உருக்கமான சொற்பொழிவில் ஸரோஷ் மிக்க மகிழ்ச்சி அடைந்தார், மேலும் இது விலூவின் மனதிலும் அதீத தாக்கத்தை ஏற்படுத்தியது. இருவரும் மெஹர் பாபாவை வணங்கி, விடைபெற்றனர்.



**வாழ்க்கையின்**

**நோக்கம்:**

**சத்தியத்தை**

**அடைவதற்கும்**

**அகத்தை**

**அறிவதற்கும்**



-அவதார் மெஹர் பாபா